Q26:38-2(1195) F
N24
224191

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

# நூலாசிரியர் வரலாறு.

இந்நூலாசிரியர் திருவாவினன்குடி எனப் பெயர்பெற்ற பழநித் தெய்வத்தலத்திலே இற்றைக்குச் சுமார் முந்நூறு வருடங்களுக்கு முன்னர்ச், சைவ சித்தாந்த மெய்ந்நெறி கடைப்பிடித்து அதன்வழி யொழுகிய துளுவவேளாளர் குலத்திலே பிறந்தார். சிலர், "நல்லன புரிவைகாவூர்நாடு சீர்நாளும் வாழ்க" என இப்புராணத்திறுதிச் செய்யுளிற்றெரித்தமை கொண்டும் பிற ஏதுக்களானும் சோழநாட்டிலே யுள்ள "திருவைகாவூரிற் பிறந்தவர்" என்றுங் கூறுப. அது அத்துணைத் தெளிவின்றென்க.

இவரது தந்தையார் பெரிய கவிராயர் எனப் பெயர்பெறுவார். அவர், பழநித்தலத் திருக்கோயிலிலே அகம்படித் தொழிலினும், தேவார திருவாசகங்கள் ஆகிய திருவருணெறித் தமிழ்வேதத்தை நியமப்படி யோதுதற் றொழிலினும் அமர்ந்திருந்தார். அவ்வாறு இருக்குங் காலத்தே, தமக்குப் புத்திரப் பேறின்மைகுறித்து மிக்க வருத்தமுடையராய், பழநிக் கடவுளை யுபாசித்துவந்தார். சத்திதீர்த்தம், சண்முகதீர்த்தம், தேனுதீர்த்தம் முதலிய தீர்த்தங்களில் மூழ்கி, சந்தியாவந்தனமுடித்து, குமாரக்கடவுட்குச் செங்கழுநீர்மலர், கடப்பமலர், வெட்சிப்பூ என்னும் இம்மலர்கள் மிக்கவிருப்பின என்றுன்னி, அவற்றைத்தேடி, அவைகளால், இண்டை, கண்ணி, தொடை முதலிய பலவகைப் பட்டமாலைகளைச் சமைத்து மெய்யன்புடன் சாத்துவித்தும், அபிடேகத்திற்குப் பால் தேடிச் செய்வித்தும் தொழுது வந்தார். சின்னாட் சென்றபின் அந்த

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008
நூலகம்

நாதன்றன் றிருவருளினாலே பாற்கடலிடை மதியந் தோன்றினாற் போலவும், சலஞ்சலத்தினின்று வண்டாளம் உதித்தாற் போலவும், சுபவேளையில் ஒரு புத்திரர் பிறந்தனர்.

தாய்தந்தையர் அகமகிழ்பூத்து, பழநிக்குழந்தைவேற் பெருமானது திருவருளினாலே யுதித்த இவர்க்குப் "பாலசுப்பிரமணியன்" என நாமகரணஞ்செய்தனர். அன்புடனே வளர்த்துவருங்காலத்திலே கண்கள் ஒளிமழுங்கக் காதுஞ்செவிடாயின. அதுகண்ட தந்தை தாயார் வருந்தி அந்தோ! "கொச்சை மக்களைப்பெறுதலினக்குடி-யெச்சமற்றேமாந் திருத்தலன்றே" என்றபடிகுழந்தையில்லாத துயரத்தைப் பார்க்கினும் இத்துயர் சகித்தற்கு முடியாதே? ஓ! பரம கருணாநிதி! பழநிக் குருவே! நின்னருள் இருந்தவாறு இஃதேயோ என்று முறையிட்டு, அகத்திய முனிவர்க்குக் கந்தக் கடவுள் ஞானாசாரிய வடிவங்கொண்டு ஞானோபதேசஞ் செய்தருளிய பழநியம்பதிச் சிவகிரிச்சாரற்கோயிலிலே கொண்டு வந்து வைத்து நோன்பு கொண்டார்.

பழநிப்பெருமான் சங்கமவடிவங் கொண்டு தோன்றி, விபூதியினாலே அக்குழந்தையின் சரீரத்தைத் தடவிக் கடப்பமலரொன்றைக் கொடுத்து, இதனைக் கண்களில் ஒற்றிக் காதினிடத்தே வைக்க என்று மறைந்தருளினர். அங்ஙனே தாய் தந்தையர் கனவினும் வழங்கியருளினர். மூவருங் கனவினின்றும் விழித்துப்பார்க்க மூவர்தங் கைகளினுங் கடப்பமலர் இருக்கவே அதிசயங் கொண்டு, தாய் தந்தையர்கள் இருவரும் மைந்தர் கையிற் கொடுத்து அவ்வாறே செய்விக்க, உடனே கண்களுங் காதுஞ் சிறந்த ஒளியும் கூர்ந்த அறிவுமுற்றன. பகலினும் விண்மீன்கள் பாலசுப்பிரமணியர்க்குக் காணப்பட்டன.



அது தொடங்கிப் பாலசுப்பிரமணியர் வடமொழி தென்மொழிகள் பயில்வாராய், தந்தையாரிடத்துப் பயில்வனவாகிய வெவையோ அவற்றை யெல்லாங் கற்று, ஆங்காங்குள்ள கல்விசைப் புலவருழையுஞ்சென்று பல கலைகளெல்லாவற்றையும் பயின்று, இலக்கிய, இலக்கண தருக்க வேதாந்தங்களை யினிதுணர்ந்து முற்றுவினை வயத்தானே ஏகான்ம வாதம் என்னும் மாயாவாத மதத்தைக் கைக்கொண்டு, எல்லாம் பிரமமே, நித்தியப்பொருள் பரப்பிரம மொன்றே; சக சிவபரம் என்னும் இவைகானல் நீர், கிளிஞ்சில் வெள்ளி, கட்டையிற் கள்வன், கயிற்றிற்பாம்பு, முயலின் கொம்புபோல் மித்தையாகத் தோன்றுகின்றன. உலகெது! நாம் யார் என்று ஆராயுங்கால் பூதமுதலாக ஒவ்வோர் தத்துவங்களையும் நானல்ல நானல்ல என்று நேதிகளைந்து சென்ற காலத்து அறிவே யெஞ்சும். அதுவேநான்; அதுவே பிரமம்; அச்சுத்த சைதன்னியமாக் கண்டு நிற்கு நிலையே அத்துவிதமுத்தியென்று, சங்கராசாரியர் செய்த மாயாவாத பாஷியத்தைக் கைக்கொண்டு, சைவ சித்தாந்தத்தை யுணராமையால் அதனைத் துவைதம் என்றும் பிபீலிகா மார்க்கம் என்றும் நிந்தித்துத் திரிந்தார்.

முருகக் கடவுளுடைய திருவருளினாலே திருவாவடுதுறைச் சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் பழநித் தலதரிசனஞ் செய்வான் சென்று தரிசித்த காலை, பாலசுப்பிரமணியக் கவிராயர் ஆங்குச் சென்று அவருடன் வாதிக்கத் தொடங்கினர். வாதித்தகாலத்துச் சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் விடைவிடுத்து மாயாவாதமதத்தைக் கண்டித்து இவர்வாயை யடக்கினின்றார். பின்னர் நூலாசிரியர் அவர்கள் சங்கராசாரி மதம் மாயாவாத மதமென்றும், அவர் கொள்கைகள் யாவும் வேதாகம விரோதமானவையென்றும், அத்துவித மல்லவென்றும் இனிதுணர்ந்து,

சுவாமிகள் இடத்தே சிவஞானபோத முதலிய மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கையும், சிவாகமங்களையும் நன்கு உணர்ந்து, வேதாந்தத் தெளிவான அத்துவித மதம் சைவசித்தாந்தமேயென்று தெளிந்தொழுகுவாராயினர்.

இங்ஙனம் ஒழுகிவருநாளிலே அக்கதீபிகை, சைவசித்தாந்ததரிசனம், பாஞ்சராத்திர மதசபேடிகை, வேதாந்த சித்தாந்தசமரசதீபம், மாயாவாத சகசிரதூஷணி, குகோத்கர்ஷம், கூவிளதீப மாகாத்மியம் என்னும் நூல்களைச் செய்தார். தஞ்சாவூரிலே அரசசமஸ்தானத்துச் சென்று, நவராத்திரிகாலத்திலே அரசன் கொலுவீற்றிருக்கும்போது சபையிலே பல்யானைக் கூட்டங்களூடே செல்லும் சிங்கேறுபோற் புகுந்து, ஆங்கிருந்த கவிகளையெல்லாம் வெறுங்கவிகளாக்கி, இராசனாலே "கவிராசன்" என்னும் பட்டமும் விருதும் அளிக்கப் பெற்று வந்தார். பின்னர்ச்சேர சமஸ்தானத்திலே அவர்களால் நன்குமதிக்கப்பெற்று, சம்ஸ்கிருதத்தில் வல்ல பிள்ளை லோகாசிரியர் வந்து சிவாகமசிவசின்ன சிவதாசாதி தூஷணங்கள் செய்வதுகேட்டு அவருடன் வாதித்துத் தோற்கடித்து; தேவார திருவாசகங்களே தமிழ் வேதம் ஆகும், பிரபந்தம் வேதம் என்பதற்கு ஓரிலே சந்தானும் ஒவ்வாது என்று "திராவிடவேதநிர்ணயம்" என்னும் கிரந்த மொன்றியற்றி னிறுவினர்.

இங்ஙனம் இருக்குநாளிலே சேர சமஸ்தானத்தாரும் பழநித்தலத்துள்ள பெரியோர்களும் பிற குகனடியார்களும் பழநிமான்மியங்களை விரித்து ஒருபுராணம் பாடுக என்று வேண்ட; சுப்பிரமணியப் பெருமானது திருப்புகழ்களை யெல்லாம் விரித்தும் அவாவுமூந்து, புலவர்பெருமான் கந்தபுராணத்திலே கிரிப்பிரகாச காண்டத்திலே இருபத்து நான்



காம் அத்தியாயத்தின் மேற்கூறிய வராககிரி மான்மியத்தை யறிந்து சுபமுகூர்த்த வேளையிலே தொடங்கி மூன்று தினத்துட் பாடிமுடித்தனர் என்றுதெரிகின்றது.

கொங்கார் பழநிக் குடியார் முதுக் குறைவோ
ரெங்கார் மயிற்கடவு ளின்பழநி - மங்காத
நற்புகழைச் செய்யெனமூன் றுநாளி லிட்டான்
சிற்புகழான் மெய்ப்புலவன் றேர்.

என்றும் வெண்பாவினுந் தோன்றுகின்றது. இவர் நூல்செய்தகாலத்தை யிந்நூலிற்றாமே யுரைத்த பாயிரச் செய்யுளான் உணர்க.

மலர்தலை யுரகந் தாங்கு மணிமுடிச் சகமே தென்று
நிலைபெற நிறுத்த மூவைஞ் ஞாற்றின்மேற் றிகழுமைம்பான்
றலைசெறி பருவத் தன்னிற் றனிநெடுங் கதிர்வே லண்ணல்
னலனுறு பழநி மூதூர்ப் பெருமையை நவில லுற்றேன்.

இச்செய்யுளானே யிந்நூல் செய்த காலம் சாலிவாகன சகவருடம் ஆயிரத் தைந்நூற் றைம்பதாம் வருடத்திற் செய்துமுடித்தனர் என்று தெரிகின்றது. இப்போது சாலிவாகன சகவருடம் ஆயிரத்தெண்ணூற்றுப் பதினைந்தாம் வருடம் ஆகலால் இற்றைக்கு இருநூற்றறுபத்தைந்து வருடங்கட்கு முன்னர்ச் செய்யப்பட்டதாகும். அக்காலத்தில் துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள் இருந்ததாகவுங் காலத்தா லுணரப்படுகின்றது. இந்நூல் சொற்சுவை, பொருட்சுவைமுதலிய எச்சுவைகளானும் மிக்கு விளங்குவது. எமக்குத் தெரிந்தவரையில் இதனை எழுதினோம்.

இங்ஙனம்:

நா-க.

சிவமயம்.

புதுச்சந்நிதிக் கந்தநாதன் றுணை.

# உரை வரலாறு.

ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நாற்கவிகளிலும் வல்லவராய்,

கவியே கமகன் வாதி வாக்கியெனப்
புவிமேற் சொல்லும் புலவர் நால்வர்.

என இலக்கண விளக்கங் கூறியவாறு, கவி, கமகன், வாதி, வாக்கி என்னும் நாற்பெரும் புலமை படைத்தவராய், சுப்பிரமணிய சுவாமித் தொண்டராய், வடமொழி தென்மொழி யென்னும் இருமொழிப் பெருங்கடல்களி னிலைகண்டு நன்குணர்ந்த கவிமேகமாய் விளங்கிய பாலசுப்பிரமணியக் கவிராயர் அவர்கள் பாடியது பழநித் தலபுராணமே. அதனைக் காண்டொறும் செய்யுள்வனப்பு முப்பானான்குட் பற்பல செறீஇ, தண்டியலங்காரத்திலே "பெருங்காப்பிய நிலை பேசுங்காலை" எனக் கூறப்பட்ட காப்பிய விலக்கணங்கள் நிரம்பப்பெற்று, சொன்னோக்கு, பொருணோக்கு, தொடைநோக்கு, நடைநோக்கு முதலிய வந்நோக்கமும் இனிது வாய்ந்து காணப்படும். குமாரக்கடவுளின் பெரும்புகழ் மலிந்து தேங்கும். பழநித் தலத்தின் மான்மியங்களெல்லாம் பல்கி விளங்கும்.

இத்தகைய புராண நூலை யுரை செய்விக்க விரும்பிய. சென்னை வித்தியா ரத்நாகர அச்சியந்திர சாலைச் சொந்தக்காரராகிய ம-ா-ா-ஸ்ரீ, பி-நா-சிதம்பர முதலியார் அவர்கள் உரையாசிரியரென்று இச் சென்னை



யின்க ணிருப்பாருழைச் சென்று உரைசெய்து தருக என்று கேட்க, அவர் இந் நூலின்பா மாட்சி நோக்கி திரிசொல்லுடைமையாற் குறித்த காலத்துள் அளிக்க, எம்மாலியலாதென்றார். அது நோக்கி முதலியார் அவர்கள் பெரிதும் இன்னலுற்று உறுங் காலத்து, சென்னையம்பதிக்கண் மாட்சிமையுற்று விளங்குவோரும், வித்தியா விநோதச் செல்வரும், கல்விசைப் புலவரிடத்தே போதா முடையவரும் ஆகிய ம-ா-ா-ஸ்ரீ, செஞ்சையநாயுடு அவர்களுடன்யாம் அளவளாவி யிருக்குங் காலத்து, முதலியார் அவர்களும் வர, இருவருக்குந் தொன்மை நண்புற்றது. அது நோக்கிய நாயுடு அவர்கள் எவருமுன்னுத நண்பு இப்போது இயைந்தமையாற் பழநிப்பெருமானே யிப்புலவர் சிகாமணியின் நட்பைத் தந்நூற்கு உரை செவிப்பான் தந்தார் ஆகலால் பங்குனி உத்திரத்திற்குப் பழநிக்குப் போவதாக இருத்தலின் அதற்குள் இவ்வுரை முடித்தல் வேண்டு மென்று வேண்டியபடி யாமும் ஒப்புக்கொண்டு உரை செய்வான் புக்கேம்.

புகுந்த யாம், அச்சிட்ட மூலப் பிரதியையும் எமக்குக் கிடைத்த சில ஏட்டுப் பிரதிகளையும் வைத்து நோக்குழிப் பற்பல பேதங்களும் திருத்தங்களுங் காணப்பட்டன. அவைகளை யெல்லாம் ஒருவாறு திருத்தி யுள்ளேம். இதற்குப் பதவுரை செய்யவும், வேண்டிய விசேடவுரை யாங்காங்கு எழுதவும், எம்மனம் பிடர்பிடித் துந்தியும் அதற்குக் காலமின்மையால் விட்டுப் பொழிப்புரையும், ஆங்காங்கு வேண்டு மிடங்களில் விசேடமும் எழுதியுள்ளாம். பதினைந்து தினத்துள் உரையும் எழுதி, பிரதிகளையும் ஒத்துநோக்கித் திருத்தமுஞ்செய்து, அச்சினும் பதிப்பித்து முடிக்கப் பட்டது. அதனை யறிந்த பற்பலரும் நூலாசிரியர் மூன்று திங்களிற் புராணம் பாடிய உண்மை, இவ்வுரை பதினைந்து

காட்குள் முற்றியதனால் நன்கு புலப்படுமென்று கொண்டாடி, எல்லாம் பழநிப் பெருமானது திருவருளே என்று வியப்புற்றார். ஆகவே யிதனைப் படித்தோர், கேட்டோர், முதலிய யாவரும் குகப்பெருமானது திருவருளை யடைவர் என்பதற்குச் சந்தேகமின்று. எமக்கு உள்ளுணர்வினின்று அரும்பொருள்களை யினிது விளக்கிய, எமது யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி யென்னும் மூதூர்க்கண்உள்ள புநுக்சந்நிதி யென்னும் பெயருடைய உபயகதிர்காமத் திருக்கோயில் வீற்றிருந்தருளும் சிவகுருநாதன் அருட்டுணையால ஈது பதினைந்துதினத்தின் முற்றிடக்கண்டேம். ஆகலால் பெரியோர் செவ்வே கொள்வர் என்பது திண்ணம். இவ்வாறு காந்தியென்னும் உரிமை பற்றி யாமே யுரைத்தேம்.

நாலுரை போதகா சிரியர் மூவரு
முக்குண வசத்தான் முறைமறந் தறைவரே.
இம்முறை யெல்லா மெவர்பகுத் தறியினு
மவத்தை வசத்தா லலைகுவர் திடனே.
அதிமதி நுட்பமோ டநிகலை கற்பினும்
விதியது வசத்தால் விதிவிலக் கயர்ப்பார்.
இவ்வழக் கறிந்தோ ரிகழுதல் வழக்கே
யிவ்வழக் கறியா ரிகழுதல் வழக்கே.

ஆரணிநகரசமஸ்தானம்
பலவங்க௵ தைமீ
1908.

இங்ஙனம்:
நா. கதிரைவேற்பிள்ளை,
யாழ்ப்பாணம்.

சிவமயம்.
வேலுமயிலுந்துணை.

# நூற்சிறப்புப் பாயிரம்.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

புலமையிற்சிறந்த துளுவர்தங்குலத்தான்
புகழ்பெரியவண்கவிராயன்
சொலவருமதலைசங்கமன்பாலசு
சுப்பிரமணியனுங்கவிஞன்
புலவருந்துதிக்கவருணிலைப்பெரியோர்
புகல்பழநிப்புராணத்தைச்
சிலமொழியறிந்துகுமரவேலருளாற்
செழுந்தமிழுரைபகர்ந்தனனே.

(இதன்பொருள்.)

புலமை வகையில் உயர்ந்து விளங்கிய துளுவவேளாள குலத்தவன் யாவராலும் புகழப்படுகின்ற வளமுடைய பெரிய கவிராயர் அவர்களது பெயர்சொல்லவந்த புத்திரன், சங்கமத்தை மேன்மையாகக் கொண்டவன் ஆகிய, பாலசுப்பிரமணியக் கவிராயன், புலவர்களா யுள்ளாரும் போற்றிக் கொள்ளுமாறு, திருவருள் நிலையினின்ற பெரியோர்களாற் சொல்லப்பட்ட பழநித்தலத்தின் ஞான்மியங்களுட் சிலசொற்களை யறிந்து குமாரக்கடவுளின் திருவருளினாலே, பழநிப் புராணத்தைச் செந்தமிழ்ப் பாவிற் செய்தான் என்க.

புலமைவகை கவி, கமகன், வாதி, வாக்கி, சாத்துக்கவி, வெள்ளைக் கவி, பிள்ளைக்கவி என அறுவகைப்படு மென இலக்கண விளக்கத்தார்.

கூறலின் அவைக்களுட் சிறந்தோன் என்பார் "புலமையிற் சிறந்த" என்றார்.

இளந்திரையன் எனப்பெயரிய ஆதொண்டைச் சக்கிரவர்த்தியாற் குடியேற்றப்பட்ட வேளாளர், கொண்டை கட்டிகள் (கொண்டல்கட்டிகள், அல்லது கொண்டுகட்டிகள்) சோழிய வேளாளர், துளுவவேளாளர் என மூவகைப்படுவர். அவருள் இந்நூலார் குலம் துளுவவேளாளகுலம் என்பதாம். துளுவவேளாளர் ஆவார்—கன்னட தேசத்தின்கணுள்ள துளுவ நாட்டிலிருந்து வந்து குடியேறினோராம். மிகுதியாக மானியம் பெற்று வசிப்போர் தொண்டை நாட்டுத் துளுவவேளாளரே. சங்கமன் என்றது, முத்தியுபாய மெனப்படூஉம் குரு, இலிங்கம், சங்கமம் என்னு மூன்றனுள் சங்கமத்தை யுடையானை. சங்கம் என்பது அடியார் கூட்டத்தைச் சிவமெனக்கொண்டு ஒழுகலாம், இக்காலத்துள்ள ஓர் வகைச் சங்கமம் என எண்ணற்க. பெரியவன் கவிராயன் எனவும்பாடம். இது நூலாசிரியர் தம்மைப் பிறன்போலக் கூறிய சந்திச் செய்யுள். இங்ஙனம் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் முதலிய பரமாசாரிய சுவாமிகளும் சந்தான நாயன்மாரும், பதினெண்கீழ்க் கணக்குக் காரரும், பிறதொல் லாசிரியர் பலரும் உரைத்துளார். வடமொழியாரும் தாமே நூலும்பாயிர முங் கூறுவர். "பெரும்புங் கவர்புகழ் போதாயனி சுப்பிரமணிய னரும் புங் குருகையிற் கோதில் குலோத்துங்கனிடமாய் - விரும்பும்பொருளைத் தரும்பிர யோகவிவேகந் தன்னைக் - கரும்புங் கனியு மெனப்பாடி னன் றமிழ்கற்பவர்க்கே" எனப் பிரயோக விவேகந்நூலு முரைத்ததுணர்க. இஃதறியாதார் "தான்றற்புகழ்த லகுதியன்றே" என்று மயங்காநிற்பர். இவ்வுண்மையினைக் கண்டே யாமும் உரைவரலாறு கூறினம். ஏனையவற்றை நூலாசிரியர் வரலாற்றிற் காண்க.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

# பழநித் தலபுராணம்

## மூலமும் - உரையும்.

பழநி என்பது முருகக் கடவுளின் படை வீட்டுத் தலம் ஆறனு ளொன்று. இதனை முற்காலத்தார் திருவாவினன்குடியென்ப. திரு—இலக்குமியும், ஆ—பசுவும், இனன்—சூரியனும் பூசித்த தலமாகலின் அப்பெயர் பெற்றது. குடி என்பதற்குத் தலம் என்று பொருள் கூறுவதன்றி, கு—பூமியும், டி—அக்கினியும் பூசித்த தென்று உரைப்பாரு முளர். இதற்குச் சித்தன்வாழ்வு என்றும் பண்டையாசிரியர் கூறினர். அதனை,

நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ்
வில்லந் தொறுமூன் றெரியுடைத்து—நல்லரவப்
பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின்
னாட்டுடைத்து நல்ல தமிழ்.

எனத் தெய்வப் புலமை ஒளவையார் உரைத்ததனாலு முணர்க. சித்தன் என்பது முருகக்கடவுளின் ஆயிர நாமத்து ளொன்று என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். பழம்—நீ என்னுஞ் சொற்றொடர், "அல்வழி யெல்லா மெல்லெழுத்தாகும்" என்னுந் தொல்காப்பியப் புள்ளி

மயங்கியற் சூத்திர விதியால் மகரங் கெட்டு, பழநீ எனப் புணர்ந்து, "ஈ நீயே யொருபெயர் நெடுமுதல் குறுகும்" என்ற உருபியற் சூத்திரப்படி பழநி என முடிந்தது.

பிரம புத்திரராகிய நாரதமுனிவர் சிவபெருமானிடங் கொடுத்த மாதுளங்கனியைப் பெறும்படி, உலகை வலம் வரவேண்டுமென்று சிவசுப்பிரமணியக் கடவுள் மயிலேறி வந்தாராக, அதற்குள் விநாயகப் பெருமானார் தமது தந்தையாரை வலம்வந்து பெற்றனர். அதுகண்ட முருகவேள் சினமுற்றுத் திருக்கயிலையினின்றும் வெளிப்போந்து, இத் தலத்தி னிருந்தார். உமாபிராட்டியார் தஞ்செல்வப் புதல்வரான குமாரக் கடவுளின் பிரிவுக் காற்றாதவராய், தம் நாயகரான சிவபெருமானுடன் இங்குவந்து அவரை யெடுத்தணைத்து, "பழம் நீயே" உனக்கு வேறு பழமும் வேண்டுமோ" என உரைத்துப் பிணக்கினைத் தீர்த்தமையால் பழநி எனப் பெயராயிற் றென்க. இதன் விரிவெல்லாம் இப்புராணத் துப் பதின்மூன்றாவது திருவாவினன்குடிச் சருக்கத்திற் கண்டுகொள்க. இச்சரிதம் புராணங்களில் வேறு விதமாகவுஞ் சொல்லப்பட்டுளது.

## காப்பு.

### கலித்துறை.

வீதிவேழமா வுலாவுமா வினன்குடிவேத
மோதிவேழமா மூலமென் றுரைத்தவன்போற்று
மாதிவேழமா தொருபிடி யாகவந் துதித்த
சோதிவேழமா முகவனைத் துதித்திடல்செய்வாம்.

(இதன்பொருள்.)

வேதங்களை அத்தியயனஞ் செய்கின்ற பிரமனும், கயேந்திரன் என்னும் யானை ஆதிமூலமே யென்று போற்றிய விட்டுணுவும் துதிக் கின்ற முதற்பொருளாகிய சிவபெருமான் ஆண்யானையாகவும், உமா தேவியார் ஒரு பெண்யானையாகவுஞ் சேர, வந்து திருவவதாரஞ் செய் தருளிய, தெருக்கடோறும் யானைகளுங் குதிரைகளும் உலாவாநிற்கும் பழநித்தலத்தின்கண் எழுந்தருளியிருக்கும் ஒளிவடிவாகிய யானைமுக விநாயகக்கடவுளைத் துதிப்பாம்.

இந்திரத் தியும்நன் என்னும் அரசன் அகத்தியரது சாபத்தினாலே யானையாகிக் காட்டிற்றிரிந்து நின்றான். தேவல முனிவர் சாபத்தினாலே ஆகா என்னுங் கந்தருவன் முதலையாகித் தடாகத்தில் இருந்தான். அப் போது கயேந்திரன் என்னும் யானை தன் பிடிகளோடுந் தடாகத்திற் சென்று நீராடி நின்றது. முதலை வந்து கௌவ, உய்யும் வழி தெரி யாது வருந்திய யானை, இனிப் பரம்பொருளே யெனக்குத் துணையென் னும் நல்லுணர்வு தோன்ற, ஆதிமூலமே! ஆதிமூலமே! என்று கூப் பிட்டது. அப்போது அநாதி மூலமாகிய சிவபெருமானது ஆஞ்ஞை யானே காத்தற்றொழில் செய்யும் திருமால் வந்து சக்கரத்தால் முதலை வாயைப் பிளந்து யானையைக்காத்தனர் என்பது புராணசரிதம். ஆத லால் "வேழமா மூலமென் றுரைத்தவன்" என்றார்.

வேதமோதி - பிரமன். பிறைசூடி, வீணை தடவி என்றாற்போல நின்றது. வேழம்—ஆண் யானை. பிடி—பெண் யானை. அது "வேழக் குரித்தே விதந்துகளி றென்றல்" எனவும், "பிடியென் பெண்பெயர் யானை மேற்றே" எனவும் வரூஉந் தொல்காப்பிய விதியானுணர்க. ஆதி—சிவன்.

சிவபெருமான் பரப்பிரணவம் ஆகவும், உமாதேவியார் அபரப் பிரணவமாகவும் இருக்கின்றார் என்னும் வேதத்துணிபுபற்றி, அப்பிரணவங்களாகிய யானைகளை ஆதியாகவும் உமையாகவுங் கூறினர். பிள்ளையாரது திருவவதாரங்களையும் பேதங்களையும் கந்தபுராணம், பார்க்கவ புராணம் என்பவற்றிற் பரக்கக்காண்க. 1.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மந்தரகிரியைச்சற்றுமனிதராலசைக்கொணாது
சுந்தரமாருதத்தைத்துரும்புகளணுகொணாது
செந்தீயுறன்னையீக்கள்சேர்ந்தினிமொய்க்கொணாது
கந்தனைப்போற்றுவார்மேற்காலனுமணுகொணாதே.

இ-ள். மந்தரமலையை மனுடராற் சிறிதும் அசைத்தலியலாது, அழகிய வாயுவைத் துரும்புகள் சேராவாம், சிவந்த நெருப்பை ஈக்கள் அடைந்து மொய்த்தல் ஒருக்காலுமில்லை அதுபோல, கந்தக் கடவுளைத் துதிக்கும் அடியவரிடத்து யமனும் அடைதலில்லையாம்.

சற்று என்னுந் திரிபினிடைச்சொல் சிறிதென்னும்பொருட்டு. "பல்லூழிகாலம் பரனை யர்ச்சித்தால் - நல்லறிவு சற்றே நகும்" எனத் தாயுமானார் பாட்டினும் பயிறல் காண்க. ஒன்றாது என்னுஞ் சொல் ஒணாது என மரூஉவிற்று. வாயுக்கள் பலவகைப்பட்ட பெரும்பயனுடைமையால் "சுந்தரமாருதம்" என்றார். "சுரும்புகளணுகொணாது" என்ற பாடம் தவறு. கந்தன்—சேர்க்கப்பட்டவன். அதாவது உமாதேவியா



ரால் ஆறுருவும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டவன். சத்துருக்களாகிய கடலை வற்றச் செய்பவன், மூவுலகினும் பராக்கிரமத்துடன் தடையின்றிச் சஞ்சரிப்பவன் எனவும் பொருள் உரைத்தலுமாம். 2

ஒருவானமுதலாயபூதமுடனிரவி
மதியான்மாவே
திருவானவட்டமதாமூர்த்தமெனச்சிவகா
ருணியம்பற்றிக்
கருவினர்கொள்சமயங்காதுகின்றமதநொடியிற்
கண்டித்தாளுந்
திருஞானசம்மந்தத்தேசிகனார்திருவடியே
சிந்தைசேர்ப்பாம்.

இ-ள். ஒப்பற்ற ஆகாய முதலாகிய ஐம்பூதங்களுடன் சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் இவைகளே அழகிய அட்டமூர்த்தமென் றுணரும்படி, உயிர்கள்மீது வைக்கும் கருணையினாலே, கருப்பத்திற் பிறந்துழலும் பயனிலிகளாகிய சமணர் புத்தர் என்பவர்களின் கோட்பாடுகளாயுள்ள வருத்துகின்ற சமயங்களை ஒருமாத்திரைப் பொழுதினுட் கண்டித்து அடக்கியாண்டருளிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரது திருவடிகளையே (எமது) மனத்தின்கண் வைப்பாம்.

ஐம்பூதங்களாவன—ஆகாயம், வாயு, தீ, நீர், மண். ஆகாயத்திலிருந்து இடியிடித்துப் புத்தநந்தி தலையை விடச்செய்தும், தம் நாவால் ஓடமேறச்செய்தும், அக்கினியிற் பதிகமிட்டு வேவாமல் எடுத்தும், வைகை நீரில் ஏட்டை யெதிரேறவியற்றியும், மண்ணைத் தம்வழிப் படுத்தியும் ஐம்பூதங்களும் தம்முருவெனக்காட்டி நின்றாராகலின் "ஒருவானமுதலாய பூதமுடன்" எனக்கூறினார். ஏனையவற்றிற்கு மிவ்வாறே யுரைத்துக்கொள்க. இவ்விரண்டு பாட்டானும் அடியார்பெருமை கூறப்பட்டது. 3

## பிதா வணக்கம்.

வீரமுடன்கொலையுடனேவிளங்குகின்றசைவமுதன்
மதங்களெல்லாஞ்
சாரவொழித்தேயுயிர்பாற்சாந்தகுணமாதியடைத்
தரமேசெய்வோர்
காரணராங்குருவாகிக்காசினியிற்பெறலடைந்து
கடையிற்றிவ்ய
வாரணஞ்சொலுருமேவவனுக்ரகிக்குமெமதுகுரு
வடிகள்போற்றி.

இ-ள். வைரத்துடன் கொலைத்தொழிலுங் கொண்டு விளங்குஞ் சைவ முதலிய சமயங்களை யெல்லாஞ் சாருதலைச் செய்யாது, உயிர்களிடத்துச் சாந்தகுண முதலியவற்றைக்கொண்டு தருமத்தை யியற்றுவோர், (முத்திக்குக்) காரணமாகிய குருவாகிப் பூமியினிடத்துப் பெறு பொருளை யடைந்து, முடிவில் தேவத்தன்மைவாய்ந்த வேதங்களாற் சொல்லப்படுகின்ற சிவவுருவாகிய அத்துவித முத்தியைப் பொருந்தும்படி திருவருள்செய்த எமது ஆசாரியமூர்த்திகளாந் தந்தையாரது திருப்பாதங்கள் எம்மாற் றுதிக்கப்படுவன.

வீரமாவது தம்மதத்தை வெல்லுந் தன்மை மற்றைய மதத்தார்க்கில்லை யென்னும் வீரமொழி. கொலை விளங்குஞ் சமயம் புத்தம், சமணம், உலோகாயதம் முதலியன. சைவம் என்றது அகப்புறச் சமயமாகிய சைவம். அகச்சமயமாகிய சைவங்களையும் அடக்கிக்கொள்க. இதனை யுணரார் சைவம் என்றதனைச் சைவ சித்தாந்தமென மயங்குவார்.

## மாதா வணக்கம்.

கருவினுருத்தரித்தபினேகருணையுடன்றானுண்ட
விரதம்பார்த்துத்
தருவதுடன்றலைமைபெறுஞ்சிசுவாகியுற்பவிக்கத்
தவமேயாற்றி



யொருப்துதிங்களிற்பிறக்கவொருபோதிலொருவடிவாய்
வளர்த்தித்தீமை
மருவாதுவாழவெனையருள்புரிந்தவனைதுதி
மகிழ்ந்துகொள்வாம்.

இ-ள். கருப்பத்தில் (யான்) வடிவுகொண்ட பின்னர், அருளுடன் தான் புசித்த உணவுச் சுவையைப் பகுத்து அளித்ததன்றி, முதன்மை பெற்ற பிள்ளையாகித்தோன்றவும் தவத்தைச்செய்து, பத்துமாதத்திற் பிறக்கும்படி ஒருபொழுதில் ஒருவடிவாகி, (என்னையும் அவ்வாறு) வளர்த்து, பாவம் பொருந்தாமல் வாழும்படி யென்னையீன்றருளிய தாயாரது தோத்திரத்தை விரும்பிச்செய்வாம்.

---

# கடவுள் வணக்கம்.

## சபா நாதர்.

### கொச்சகக்கலிப்பா.

பூமேவுதுளபனுளம்புரிந்துகாண்பரியபவன்
கர்மேவுபுலிமுனியும்பதஞ்சலியுங்கண்டுவப்ப
மாமேவுமறைதொடராப்பரஞ்சுடராமன்றினடி
தேமேவுகளினமலர்ச்சேவடிகளிறைஞ்சுவமால்.

இ-ள். பொலிவு பொருந்திய துழாய் மாலையினராய் திருமாலும் மனம்விரும்பிக் காண்டற்கு மரிய பவன் என்னும் திருப்பெயருடையராய், சோலைக்கண்பொருந்தும் வியாக்கிரபாத முனிவரும் பதஞ்சலி முனிவரும் கண்டுமகிழும்படி அழகுகொண்ட வேதங்களும் அறிதற்கரிய பரஞ்சோதிவடிவாகிய கனகசபையின்கண் நடனஞ் செய்தருளுஞ் சபாநாதப்பெருமானது, தெய்வத்தன்மை பொருந்திய தாமரைப் பூப்போலுஞ் செவ்விய திருவடிகளை வணங்குவாம்.

## பிரகதீச்சுரர்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மூண்டெழுங் காண்பரியபெருமூதண்டமுகடுதிரு
முடியாய்ச்சோதி
தோண்டசுடரொருமூன் றும்விழிகளாய்த்திசைமுழுதும்
துலவுந்தோளா
யெண்டருமேழ்தலங்கழிந்தகழிவுசெழுமலரடியா
யெங்குமோங்கு
மண்டர்பிரானெனும்பெரியவுடையநாயகன்மலர்த்தா
ளகத்துள்வைப்பாம்.

இ-ள். பிரமதேவனாலும் அறிதற் கரிய பெரிய பழமையாகிய அண்டத்தின் உச்சியே திருமுடியாகவும், ஒளியையுடைய சூரியன் சந்திரன் அக்கினி யென்னும் மூன்று சுடர்களும் மூன்று கண்களாகவும், (கிழக்கு முதலிய) திசைகள் யாவும் விளங்காநின்ற தோள்களாகவும், எண்ணப்படுகின்ற (பாதலமுதலிய) ஏழுலகமும் கடந்த கீழிடமே செழுமையாகிய தாமரை மலர்போலுஞ் சிவந்த பாதங்களாகவுங்கொண்டு வியாபித்து விளங்கும் தேவர்க்கு அதிபனாகிய பெரிய வுடையநாயகனது மலர்போன்ற திருவடிகளை மனத்துள் வைத்துத் தியானிப்பாம். 2.

## கைலாச நாதர்.

மன்னிநுவலருமங்கமிருமூன் றுமருவுமொரு
நான்குமறைவேதச்
சென்னிதருமாயத்தனிநெறியபொருளாகித்
திகழ்ந்துபின்னை



முன்னியகிலாண்டமுதலெவ்வுயிருமெப்பொருளு
முழுதுமீன்ற
கன்னியுடனிருந்ததிருக்கைலைநாயகன்மலர்த்தாள்
கருத்துள்வைப்பாம்.

இ-ள். நிலைபெற்றுச் சொல்லுதற் கரியதான வேதாங்கம் ஆறும், அவற்றை யுறுப்பாகக் கொண்ட நான்குவேதங்களும், அவற்றின் சிரமென்று சொல்லப்படும் உபநிடதமுமாகி, ஒப்பற்ற முத்திப் பொருளாகவும் விளங்கி, பின்னர் அருள் முகிழ்ப்பினாலே பூமியண்டங்கள் முதலிய எவ்வகைப்பட்ட உயிர்களையும் எவ்வகைப்பொருள்களையும் பரமிலாது பெற்ற கன்னியாகிய சிவசத்தியுடன் அபேதமுற்று விளங்கிய அழகிய கைலாயநாதரது தாமரைப் பூவைப்போலுந் திருவடிகளை மனத்தில் வைத்துத் தியானிப்பாம். 3

## சிவலோக நாயகர்.

ஒளிவந்துதிகழுமனத்தறிசிறுவியுணர்வுகயி
றொருங்கவீக்கிக்
களிவந்துகடையவெழுந்தெள்ளமுதையளியில்விளை
கனியையுள்ளே
யளிவந்துவந்தனையானந்தபரவசராகி
யருந்துஞானத்
தெளிவந்தசெழுந்தேனைச்சிவலோகநாயகனைச்
சிந்தைசெய்வாம்.

இ-ள். அறிவு பொருந்தி விளங்கும் மனம் ஆகிய தாழியை (அசையாது) நிறுத்தி, அறிவாகிய கயிற்றை யொன்று சேர்க்கட்டி, ஆனந்த முதக் கடையைத் தோன்றுந்தெளிவாகிய அமிர்தமும், அன்பில்விளை

கின்ற பழமும் மனத்தின் இடத்து அன்புற்று வணங்குகின்ற அடியவர்கள் முடிவில்லாத பரவசத்தை யுடையவராய் உண்ணுகின்ற செழுமையாகிய ஞானத்தேனும், ஆகிய சிவலோகநாயகரை மனத்தினினைப்பாம்.

## பிரகன்னாயகி.

அருவுருவந் தணிந்தசச்சிதானந் தநிமலனருட்
சத்திமுத்திக்
கொருமுதல்விதொழிலைந் துமியற்றிநால்வகைத்திறனு
முயிர்க்குநல்கி
யிருவினையொத்தவரேத்தமனத்தவிசிலினிதுவீற்
றிருந்தெஞ்ஞான்றுங்
கருணைபொழிபெரியநாயகிமலர்ச்சீறடியெமது
கருத்துள்வைப்பாம்.

இ-ள். அருவ வடிவமும் உருவமும் இல்லாத, சத்துச் சித்து ஆனந்த மென்னும் உண்மை யறிவு இன்ப மாகிய மூன்றனை யுமுடைய நிருமலரான சிவபெருமானது திருவருட்சத்தியும், முத்திக்கு ஒருதலைவியும், படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செய்து, ஆன்மாக்களுக்கு அவற்றுள் தனுகரண புவன போகங்களாகிய நால்வகைப் பொருளையுங்கொடுத்து, நல்வினை தீவினை என்னும் இருவினைகளுஞ் சமமான அதிதீவிர பக்குவமுடைய அடியவர் துதிக்க, அவரது மனமாகிய கமல ஆசனத்தின்கண் இனிமையுடன் வீற்றிருந்து, எஞ்ஞான்றும் திருவருளைப்பொழிகின்ற பெரியநாயகி யம்மையாரது தாமரை மலர்போலுஞ் சிறிய திருவடிகளை எமது மனக்கண் வைத்துத் தியானிப்பாம்.





## சுப்பிரமணிய கணபதி.

அணிமுனிவருருகியிடுந்தளைநெகிழ்க்கமாட்டாதிவ்
வகிலம்போற்றுங்
கனிவிரவுசிவசயிலமதலையுடனுலவுமழ
களிற்றைநறைவேணிப்
பணிமணிகள்வெயில்விரிப்பச்சிறுமதிவெண்ணிலவுகா
பரப்பத்தான
மணியருவிகொழித்தசுப்ரமணியவிநாயகவரையை
வழுத்தலுற்றாம்.

இ-ள். அழகிய முனிவர் உருக்கமுற்று இடுகின்ற பந்தத்தை யசைக்கமுடியாமல் இவ்வுலகத்தார் யாவராலும் துதிக்கப் படுகின்ற (பிறையாகிய) கன்னி கலக்கப்பெற்ற சிவகிரியமரும் பழநிமலைப் பிள்ளையாருடன் சேர்ந்து விளையாடுகின்ற இளயானையும், சடாமுடியினுள்ள சர்ப்பங்களின் இரத்தினங்கள் வெயிலைப் பரப்பவும், பால சந்திரன் வெள்ளிய சந்திரிகையைக் கான்றுவிருப்பவும், மதம், இரத்தினங்களை வாரிச் செல்லும் அருவிபோலக் கொழித்தோடவும் நின்ற சுப்பிரமணிய விநாயகரும் ஆகிய மலையைத் துதிப்பாம்.

தளை யென்பது அன்பாற் பிணிக்குந் தியானத்தை யென்க. "பத்தி வலையிற் படுவோன் காண்க" என்றுந் திருவாசக முடையாரும். எவ்வகைத் தலையையு மறுத்து நீக்க வல்ல பெருமான் முனிவரா லிடப்பட்ட தளையை நீக்க வல்லமையில்லா னென்றபடி, சுப்ரமணிய விநாயர் என்பது அத்தல விநாயகர்க்குரிய திருநாமம். இஃதறியார் சுப்ரமணியரும் விநாயகரும் என உம்மைத் தொகையாக்கியிடர்ப்படுவா ரென்க. சுப்பிரமண்ணியனோடு விளையாடுகின்ற கணபதியாகலின், "சிவ சயிலமதலை (புத்திரன்ஆன) சுப்பிரமணியனுடன் விளையாடும் மழக

ளிற்றை'' யெனக் கூறினர் சிவமலையாகிய தனுடன் சேர்ந்துவிளங்கும் மழகளிறு என விநாயகருக்கே யாக்கலுமாம் வரை-ஆகுபெயர். 6

## தண்டபாணிச் சுவாமிகள்.

ஆரநூப்ரவடியுமுடிமிசையொண்மீக்குடுமி
யழகுமந்தண்
சேரலவோர்கரனுமொக்கல்சேர்த்தியதோர்கரனுமெழில்
சிறக்கமென்றூர்ப்
பாரணுதிபர்விபுதர்பரவுசிவகிரிவருபச்
சிமத்துவாரச்
சேரர்கோனுய்யத்தினின்றிலகுபரஞ்சுடரைச்
சிந்தைசெய்வாம்.

இ-ள். சதங்கை வடமுஞ் சிலம்பு மணிந்த பாதங்களும், தலையின்மீது உள்ள அழகுமிக்க குடுமியின் வனப்பும், தண்ணளிமிக்க தண்டம் என்னும் ஆயுதந் தரித்த ஒரு திருக்கரமும், இடையிற் சேர்த்திய ஒரு திருக்கரமும் அழகுற்றிலங்க, மிருதுவாகிய மாலையைத்தரித்த பூமியிலுள்ள அரசர்களும் தேவர்களும் துதிக்கும் பழநிமலைக்கண் நன்மை வந்த மேலைச்சாரலில், சேரமகாராசனாற் புதுப்பிக்கப்பட்ட திருக்கோயிலின்கண் நின்று விளங்கும் பரஞ்சோதியாகிய தண்டபாணிச் சுவாமிகளை மனத்திற் றியானிப்பாம்.

இம் மூர்த்தத்தைக் குமார தந்திரம், கந்த மூர்த்தம் என்று கூறுகின்றும் தணிகைப் புராணத்தாரும் "வைவாய்க் கணிச்சிப் படையென்ன வதிவித் திதிங்கோவணத்தண்டு-கைவாய் வலத்தினமைத்தருளிக் கடியிடக்கை பதித்தருளி-மைவாய் வழங்கும் பொறிபுலனை யுவித்த வுறவரிமை யவர்க-ளுய்வா னிறைஞ்சவருள் வழங்குங் கந்தனுரு மூன்றா நரும்'' என்றுரைத்து நிறுவினர். ஆரம்-தண்டையென்னும் அணியுமாம்.



அலம்—படை. அதாவது மழுப்படைபோன்ற கோவணித்தண்டு "மென்காற் பாரணுதிபர்'' எனக்கொண்டு மிருதுவாகிய காற்றைப் புசித்தலையுடைய முனிவர் என்றுமுரைத்தலுமொன்று. வாரம்—பக்கம். 7

## செல்வக் குமாரர்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சேயிரவியொளிகவற்றுமாமணிப்பொன்முடியுஞ்
செம்முகமுங்கருணைபொழிநயனமுஞ்செவ்வாயுந்
தூயநறும்புழுகொழுகுஞ்செழுமணிப்பொற்குழையுந்
தொடைநிறைந்ததிணைத்தோளுஞ்சுடரிலைவேற்படையு
மாயுமறைநூன்மார்புங்களவநறுஞ்சாந்து
மணிபணிப்பூணாரமும்பொன்னொளியவுடையழகும்
பாயொளிக்கிண்கிணிபுனைந்தசீரடியும்படைத்த
பழநிமலைக்குமரனையாம்பணிந்திடுதல்செய்வாம்.

இ-ள். சிவந்த சூரியனது ஒளியையும் வருத்துகின்ற (வெல்கின்ற) சிறந்த இரத்தினங்கள் அழுத்திச் செய்யப்பட்ட பொற்கிரீடமும், செவ்விய திருமுகங்களும், அருளைப் பொழிகின்ற திருக்கண்களும், சிவந்தவாயும், சுத்தமாகிய நல்ல புழுகு சிந்துகின்ற செழிய இரத்தினங்கள் பதித்த பொற்குண்டலங்களும், மாலை நிறைந்த வலிய புயங்களும், ஒளிபொருந்திய இலைபோலும் வேலாயுதமும், ஆராயப் படுகின்ற வேதமாகிய உபவீதத்தை யணிந்தமார்பும், நல்ல கலவைச் சந்தனமும், அழகாகச் செய்யப்பட்ட ஆபரணங்களும், பீதாம்பரமாகிய உடையினழகும், பரந்த வொளியையுடைய கிண்கிணியணிந்த சிறிய திருவடிகளும் பெற்றுள்ள பழநிமலையின்கணெழுந்தருளி யிருக்குஞ் செல்வக்குமாரரை யாம்வணங்குவாம். 8

## ஆறுமுக நாயனார்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

ஆறுமணிமவுலியுங்கண்ணீரா றுங்குழைகளீரா றும்பால
யாறுதந்தவனசவாயா றுமாறுநுதலா றுமாகி
நூறுமிளிர் நாசியுடனீரா றுங்கரங்களீரா றுஞ்சேர்த்
யாறுவதனமுமொளிரா றுமுகப்பிரானைப் பணிவாமே.

இ-ள். மாறுபடாத ஆறெழுத்தின் பொருளாகவும் விளங்குகின்ற சண்முகக் கடவுளது ஆறு இரத்தின கிரீடங்களையும், பன்னிரு திருக் கண்களையும், பன்னிரு குண்டலங்களையும் ஆறு நெற்றிகளையும், ஆறு நல்ல பவளம்போன்ற திருவாய்களையும் ஆறாக விளங்கும் நாசிகளையும், பன்னிரு திருப்புயங்களையும் பன்னிரு திருக்கரங்களையும் ஒளிகொண்ட ஆறுமுகங்களோடும் வணங்குகின்றவர் அழியாத பிறவியினின்றும் நீங்குவார்கள்.

ஆறெழுத்தாவது-சடக்கர மந்திரம் அது "நமக்குமாராய" என்பது ஆசிரியர் நச்சினார்க்கினியர் கருத்து. சிலர் வேறுவிதமாகவுங் கூறுப. அவ்வுண்மை யெல்லாம் குருமுகமாகத் தேர்ந்தறிக. குமாரக்கடவுளுக் குப் பன்னிரு விழியன்றி, நெற்றிக் கண் ஆறுஞ்சேர்த்துப் பதினெட்டு எனவுஞ் சிலவிடத்துக் கூறப்பட்டது. இது சொற்பின் வருநிலை யலங்காரம். 9

## தெய்வயானை யம்மையார்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

பழுதிலறுதொழின்மறையோர் துதிக்கையுந்தா
னமும்படைத்துப்பருவந்தாங்கிச்
செழுமணிப்பூணிழைத்தமுலைத் துணைமருப்பும்
பூணுதலாற்றிருவினோங்கிக்



கொழுமலர்க்கூந்தலாற்றொடுத்தகண்ணியும்பூங்
கடம்புதாருஞ்சுரவுந்தோய்ந்த
வெழிலுறும்பாகனுக்குவகையுதவுதெய்வ
யானைபதமிதயஞ்சேர்ப்பாம்.

இ-ள். குற்றமற்ற ஆறு தொழில்களையுடைய பிராமணர்களால் துதிக்கப்படுதலையும் சுவர்க்கத்தையும் பெற்று, கன்னிப்பருவந் தரித்து; அழகிய இரத்தினாபரணம் புனைந்த இருதனங்களாகிய கொம்புகளும், ஆபரணமணிந்த நெற்றியும் அழகினுடன் பெற்றுயர்ந்து, கொழுவிய பூக்களும் வில்வ இலைகளுந்தொடுத்துக் கட்டியமாலையும் பொலிவாகிய கடப்பமாலையும் வாசனைகொண்ட குராமாலையும் தோய்ந்ததனுடனாகும் அழகுவாய்ந்த (முருகவேளாகிய) பாகனுக்கு மகிழ்வைத் தருகின்ற தெய்வயானை யம்மையாரது திருவடிகளை எம்மனத்தின்கண் வைத்துத் தியானிப்பாம்.

யானைகளுக்குத் துதிக்கை, தானம் (மதம்) பருவம் (வயது) மருப்பு, நுதல், பாகன் இருத்தல் போலத் தெய்வயானை யென்றதற் கேற்ப இவ் வண்ணம் வருணித்துக் கூறினர். இதனைச் சிலேடையணி யென்ப பாகன்—பாகத்திலிருப்பவன், யானையை நடாத்துவோன். 10

## வள்ளியம்மையார்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

கண்ணகன்மாவிரும்புவிசியின்றொர்புதிதென்னவுமுட்
கவன்றவிடர்
தன்னிணைவருவிருமுகமுமேனியவும்பணைகளுந்தோன்
றுமதிற்றுன்றிய

பண்ணவர்க்கண்டவரவளர்வேங்கைகொழுகொம்பெனப்
படர்ந்துபற்றுந்
தண்ணமலர்பொதுள்வள்ளிப்பசுங்கொடிச்செந்தளிரடிகள்
சரண்புக்கேமால்.

இ-ள். இடமகன்ற சிறந்த பெரிய பூமியில் இதுபோன்ற வியப்பு வேறில்லையென்று (உலகர்) கூறவும், வேடர்கள் மனம்வருந்தி நடுங்கவும், ஆறு திருமுகங்களும் மற்றைய உறுப்புக்களும் ஆயுதங்களுங் காணப்படாது முளைத்து, தேவர்களது கண்களையெல்லாங் கொள்ளை கொள்ளும்படி வளர்ந்த வேங்கை மரத்தைக் கொழுகொம்பாகக் கொண்டு படர்ந்து பற்றிநிற்கும், குளிர்ந்த அழகிய பூக்கள் நெருங்கிய பசியவள்ளிக் கொடியினது சிவந்ததளிர்போன்ற பாதங்களையே அடைக்கலமாகக் கொண்டு (யாம்) புகுந்தேம்.

வள்ளியம்மையாரைக் களவொழுக்க வழியிற் கொள்ளும்படி தினைப்புனஞ்சென்ற முருகக்கடவுள் தமதுருவைக்கரந்து வேங்கை மரமாயினர். அதுகண்டவேடர் ஒருகாலத்து மில்லாதவேங்கை இதுபோது முளைத்ததெவ்வாறு என்று மன நடுக்கமும், அற்புதமுங்கொண்டுநின்றார் என்பது கந்தபுராண சரித்திரம் ஆதலின் இங்ஙனங்கூறினார். வள்ளியம்மையாரைக்கொடியென்றதற் கேற்பக் குமாரவேளைக் கொழுகொம் பென்றார். கொழுகொம்பாவது-கொடிகள் படருதற்காக ஊன்றுங்கொம்பு. இச்சா சத்தியாராகிய வள்ளியம்மையார் வள்ளிக்கிழங் கெடுத்தகுழியிற் றோன்றினமையால் வள்ளியம்மையெனப்பெயர் பெற்றார். அதனை,

பாத்தி படுவள்ளிப் படுகுழியில் வந்திடலால்
வாய்த்த வியனாமம் வள்ளியெனக் கூறினரே.

எனவருஉங் கந்தபுராணச் செய்யுளால் அறிக. இதனாற்சத்திமான் எவ்வுருக் கொள்கின்றானோ அதற்கேற்பச் சத்தியு முருக்கொள்வள் என்னும் உண்மை பெறப்படும். 11



1

தலைவன்.

முந்தநனவாதிவடிவாகிமுதலந்தமின்றி
மூலஞால
மந்தணமாருயிர்கடொறுநிறைவியாபகன்சிவமா
மலையின்மீது
கொந்தணவுங்குடுமியுங்கோவணவுடையுநூன்மார்புங்
கோலுங்கொண்டோ
ரந்தணனாய்வடுகுருவந்தரித்துநின்றானவனடிகண்
முடிமேல்வைப்பாம்.

இ-ள். முற்பட்ட சாக்கிர முதலிய வடிவங் கொண்டு முதலும் முடிவுமில்லாமல், பிரகிருதியின் வழிப்பட்ட பூமியின்கணுள்ள அரிய உயிர்க் கூட்டங்கடோறும் நிறைந்த வியாபகமுடைய சிவமாகிய மலையின்மேல், பூங்கொத்துகள் நெருங்கிய குடுமியும், கோவண ஆடையும், உபவீத மணிந்த மார்பும் தண்டுங்கொண்டு ஒரு பிராமணனாகி, பிரமசாரி வடிவங்கொண்டு நின்றிருந்த நாயகன் உடைய திருவடிகளை (எமது) சிரமேல் வகிப்பாம்.

கனா என்பதற்கு எதிர்மொழி நனா. நனவு - சாக்கிரம். மூலம்— பிரகிருதி; மாமாயையுமாம். மந்தணம்—இரகசியம் எனக்கொண்டு இருதயமாகிய குகையென்பாருமுளர். வடுகன் என்பது வடுகென நின்றது. கொல்லன் என்பது கொல் என நின்றாற்போல. பிரமசாரி வடிவங் கொண்டு நின்ற சரிதத்தைச் சிவரகசியத்துச் சம்பவகாண்டத்திற் காண்க. 12

துளங்குமறந்தெறுபிறைவாய்கறைகெழுவெஞ்
சொலைமழுமான்றுணைக்கைபற்றி
விளங்குமரன்றன்றிமழத்தனிவிழிச்சேய்
செழுமலர்தாய்விரும்புவோருட்

களங்குமரங்கைத்துங்களைந்தகதிரிலைவேற்
கடவுள்சிவகிரியில்வைகு
மிளங்குமரனிணைமலர்க்கிண்கிணிச்சரணஞ்
சரணெனத்தாழ்ந்திறைஞ்சுவாமால்.

இ-ள். நடுக்கத்தைத் தருகின்ற பாவங்களை யழிக்கும் பிறைபோன்ற வாயிலே யிரத்தந்தோய்ந்த வெவ்விய கொலைத் தொழில் கொண்ட மழு வாயுதத்தையும் மானையும் இருகரத்திலுந் தாங்கி விளங்காநின்ற சிவ பெருமான் எழுந்தருளியிருக்கும் கயிலை மலையை விட்டு நீங்கிய அந்த ஒப்பில்லாத (நெற்றிக்) கண்ணையுடையசேயும், செழுமையாகிய பூக்களைத் தூவி விரும்பி வழிபடுவோரது மனக்களங்கத்தையும் துன்பத்தையும் நீக்கிய ஒளிபொருந்திய இலைபோலும் வேலாயுதத்தைத் தரித்த கடவுளும் ஆகிய பழநி மலைக்கண் எழுந்தருளியிருக்கும் இளைய பிள்ளையாரது இருதாமரை மலர்போன்ற கிண்கிணியென்னும் ஆபரணமணிந்த திருவடிகளை புகலிடமெனக் கொண்டு விழுந்து வணங்குவாம். ஆல்-அசை. 13

## குழந்தை வேலப்பர்.

இருவருங்காண்பரியவொருமுதல்வனுதல்கிளர்த்தவிழி
யெரியிற்றோற்றும்
பொருவருஞ்சேயெனத்தெரியாதிகலுமடல்கெழுமிடும்பன்
போன்றவீட்டி
வெருவறமீளவுந்தடுத்தாட்கொண்டுசிவகிரிக்காவல்
விளைப்பானுந்
திருவருணல்கியகதிர்வேற்சேவகன்சேவடிக்கமலஞ்
சென்னிசேர்ப்பாம்.



இ-ள். பிரம விட்டுணுக்களாகிய இருவராலும் உணர்தற் கரிய முழு முதலான சிவபெருமானது நெற்றியினின்றும் வெடித்த அக்கினிக்கண்ணில் நின்றும் அவதரித்த ஒப்பில்லாத குமாரனென்பதை யறியாமல் எதிர்த்த வலிமைபொருந்திய இடும்பன் என்பவனை வரங்களழிய வழித்து பின்னரும்பயநீங்கும்படி (அவனைத்) தடுத்தடிமைக்கொண்டு சிவகிரியாகிய பழநிமலையை யென்றுங் காவல்செய்யுமாறு திருவருளைப்புரிந்த ஒளியையுடைய குழந்தை வேற்பெருமானது செவ்விய பாதங்களாகிய தாமரைமலரை (எமது) தலையிற்றரிப்பாம். 14

அரவினிழலுமிழ்மணிகளிளவயிரகோமளந்தண்
டரளராசி
விரவிநிழலருவிகொழித்திழியுமுயர்சிவகிரியில்
விளங்கிநாளு
மிரவிநிழனுழைநுழைவானெழுந்தலைவிசும்பினக
டுரிஞ்சிநீடு
குரவினிழனுறைகுழந்தைக்குமரனிருகமலபதங்
குறித்துவாழ்வாம்.

இ-ள். சர்ப்பங்களினது ஒளியைக் காலுகின்ற இரத்தினங்களும், குளிர்மையாகிய வயிரமும் கோமளமும் தண்ணிய முத்துக்கூட்டங்களும் ஒன்று கலந்து, சாய்ந்த அருவிநீரானது கொழித்துக்கொண்டிறங்கும் உயர்வாகிய சிவமலையின்கணிருந்து, நாடோறுஞ் சூரியன் தன்னிழலின்கணுழைந்து செல்லும்படி மேலோங்கி. விளங்குகின்ற அவ்வாகாயத்தின் வயிற்றைக் கிழித்து அப்பாற்சென்ற திருக்குராமர நீழலின்கணெழுந்தருளி யிருக்கும் குழந்தைவேற் பெருமானது இருதாமரை மலர்போன்ற பாதங்களைத் தியானித்து வாழுவாம். 15

## திருஆவினன்குடிக் குழந்தை வேலாயுதர்.

சேவினன்வந்தனமாசாவெனத்தெரிந்துதாழ்த்தியசெஞ்
செவியில்ஞானந்
தூவினன்வந்தனைபுரிபுத்தேளிரருந்துயர்துமித்த
சுடர்வேற்றோன்றல்
பூவினன்வந்தனைமுனிவரிறும்பூதுற்றுவகைபெறப்
பூமான்பூமி
யாவினன்வந்தனைபுரியாவினன்குடிவேளடிமலர்க
ளகத்துள்வைப்பாம்.

இ-ள். இடப வாகனராகிய சிவபெருமான் குருவே வந்தனமென்று சொல்லி அறிந்து சாய்த்துக் கொடுத்த திருச்செவியின்கண், ஞானோப தேசத்தை யோதி யருளினவரும், வழிபாட்டைச் செய்கின்ற தேவர்க ளது பெருந் துன்பத்தைக் களைந்த கதிர்வேலாயுதப் பெருமானும், பூமி யின்கண் வந்த அவ்வளவு முனிவர்களும் வியப்படைந்து மகிழ்வையடை யச் செய்யும் அரசரும் இலக்குமியும் காமதேனுவும் சூரியனும் வழிபாடு செய்த திருவாவினன்குடியின்க ணெழுந்தருளி யிருக்கும் கந்தசுவாமியி னது திருவடிகளாகிய புட்பங்களை யெம் மனத்தின்கண் வைத்துத் தியா னிப்பாம். 16

## முத்துக்குமார சுவாமி.

திருவருவிண்ணவர்முதலோர்பிரசமணிமுரசியம்பத்
தைப்பூசத்திற்
பொருவரும்பொற்றேரினருள்வழங்கியிருதலைச்சூலங்
குலிசம்பொற்பத்



திருவாதரபயமிலங்கத்தென்றிசையிலருட்கடைக்கண்
சேர்த்திமாத
ரிருவருடனரசுவீற்றிருக்குமொருதலைவனையா
மிறைஞ்சுவாமால்.

இ-ள். (சந்தானம் அரிசந்தானம் மந்தாரம் பாரிசாதம் கற்பகம் என் னும் ஐவகைத்) தருக்களும் பொருந்திய விண்ணுலகத்து வசிக்கும் தே வர்கள் முதலாயினோர் துதிக்க, மணிகளும் முரசவாத்தியங்களும் ஒலிக்க, தைமாதத்துப் பூசநட்சத்திரத்திலே ஒப்பில்லாத பொன்னாற் செய்யப் பட்ட தேரின்கண் எழுந்தருளி (யாவர்க்கும்) அருளைக்கொடுத்து, இரு பக்கத்துஞ் சூலமும் வச்சிராயுதமும் அழகைச்செய்ய, சிறந்தவரதம் அப யம் என்னுந் திருக்கைகளும் விளங்க, தெற்குத் திக்கினிடத்தே தமது திருவருட்கடைக்கணோக்கத்தை வைத்து (இச்சாசத்தி கிரியாசத்திகளா கிய வள்ளியம்மையார் தெய்வயானையம்மையார் என்னும்) பெண்கள் இருவரோடும் கொலுவீற்றிருக்கும் ஒரு தலைவராகிய முத்துக் குமார சுவாமியை யாம் வணங்குவாம். 17

## திருநந்தியடிகள்.

கருநந்தியிடுமொருமுனிவர்காஞ்சிரமுகிழ்ப்பக்
கனகமேரு
பொருநந்திமழுவிடைமேற்பொன்மலர்மாமழைபொழிந்து
புலவர்போற்ற
வருநந்திவடிவமுமால்யன்பணியுங்கணங்கடொழு
வாழ்வும்பெற்ற
திருநந்தியடிகளிணையடிகண்முடிபுனைந்துவினை
தீர்துமன்றே.

இ-ள். கருவினூற்றுப் பிறக்கும் பிறவி கெடும்படி இருடிகள் தமது கைகளைத் தலைக்கண் வைத்து அஞ்சலிசெய்யவும், பொன்மயமாகிய மேருமலையை யொத்த தருமநந்தியாகிய இளமைபொருந்திய இடபவாகனத்தின்மேற் கற்பக மலரை விடா மழைபோலத் தேவர்கள் யாவருஞ் சொரிந்து துதிக்கவும்வந்து அருளுகின்ற சிவபெருமானது திருவுருவத்தையும், விட்டுணு பிரமர்களும் வணங்குஞ் சிவகணத்தவர்கள் பூசிக்கும் பெருவாழ்வையும் அடைந்த திருநந்தி தேவரது இருதிருவடிகளையும் சிரமேற்றரித்து வினைகளினின்றும் நீங்குவாம். 18

## நவவீரர்.

பாலொளிவெண்ணீற்றினர்செம்பவளவொளிச்
சடையினர்பார்வதிதன்பால்
சூலொளிவாட்பலகையர்சூர்முதறடிந்த
வேற்கிறைவர் துணைவர் தூய
வாலொளியகூரெயிற்றர்வீரவாகு
வைமுதலமணியிற்றோற்றம்
போலொளிரோன்பதின்மரையும்விரைமலர் தூய்த்
தூய்ப்பணிந்துபோற்றுவாமால்.

இ-ள். பால்போலும் நிறத்தையுடைய வெள்ளிய திருநீற்றையுடையவரும், பவளம்போலுஞ் சிவந்த நிறத்தையுடைய சடைமுடியினரும், உமையம்மையாரின் புத்திரரெனச் சொல்லப்படுவோரும், சூலம் ஒளி பொருந்திய வாள் கேடகம் என்னும் ஆயுதங்களை யுடையவரும், சூரபன்மனாகிய முதல்வனைக் கொன்ற வேலாயுதத்திற்குத் தலைவராகிய சுப்பிரமணியக் கடவுளுக்குத் தம்பிமாரா யிருப்பவரும், வெண்ணிறத்தையுடைய கூரிய பற்களை யுடையவரும் ஆகிய வீரவாகுதேவர் முதலாகவுள்ள, இரத்தினங்களின் காட்சிபோல விளங்கும் வீரர்கள் ஒன்பதின்மரையும்வாசனை பொருந்திய புட்பங்களைச் சொரிந்து சொரிந்து வணங்கித் துதிப்பாம்.



சதாசிவ மூர்த்தியின் ஆறு திருமுகங்களினின்றும் ஆறுபொறிகள் தோன்றி உலகங்கரும் பார்த்தல் கண்டு இறைவி யஞ்சினள்போல் ஓடாநின்றாள். அதனாலே யவள் திருவடிச் சிலம்புகளிற் பதிந்துள்ள நவரத்தினங்களும் வீழ்ந்தன. அவை யொன்பதும் ஒன்பது சத்திகளாகி, இறைவனைப் பார்த்தமாத்திரையிலே மோகமுற்றுக் கருப்பவதிகளாயினர். அவரிடத்தினின்றும் தோன்றினவரே நவவீரர் எனப்படுவார். அவர் பெயர் வருமாறு—வீரவாகு, வீரதீரர், வீரமாபுரந்தரர், வீரமார்த்தாண்டர், வீரகேசரி, வீரமாமகேசர், வீரமாமகேந்திரர், வீரராக்கதர், வீராந்தகர், தாய்த்தாய் என்னும் அடுக்குப் பன்மைப் பொருட்டு. 19

## திருஞானசம்பந்தநாயனார்.

முரசதிரும்பிரமபுரமுனையெழுந்துதமிழ்முழங்க
முழக்கிவேதந்
தரைசெறிநன்மாக்களுய்யமறைவன்மொரீஇக்கடம்பா
டவிசார்ந்தங்க
ணரசுமிழலெண்பெருங்குன்றமண்வெள்ளத்திரண்முருக்கு
யகிலங்காக்கும்
பரசமயகோளரியைவேதியர்சூளாமணியைப்
பணிதல்செய்வாம்.

இ-ள். முரச வாத்தியம் முழங்குஞ் சீகாழிப் பதியாகிய குகையினின்றும் எழுந்து, தமிழ்மொழி முழங்க, வேதமெனுந் தேவாரத் திருப்பதிகங்களைக் கர்ச்சித்து, பூமியின்க ணுள்ள நல்ல மனிதர்கள் பிழைக்கும்படி வேதாரண்ணியத் தலத்தினின்றும் நீங்கிக் கடம்பாரணியம் எனப்படும் மதுரைநகரையடைந்து, அவ்விடத்துக் கூன் பாண்டிய அரசனது காவ

ஊக்குட்பட்ட எட்டுப் பெரிய மலைகளினும் இருந்துவந்த சமணவெள்ளத் தொகுதிகளை யழித்துப் பூமியிலுள்ளாரைக் காத்தருளிய பரசமய கோளரியும், அந்தண குலசிகாமணியும் ஆகிய திருஞான சம்பந்த நாயனாரை வணங்குவாம்.

முரசு - கொடை முழவு, வெற்றி முழவு, மண முரசு என மூவகைப்படும். பிரமனாற் பூசிக்கப்படலாற் சீகாழிக்குப் பிரமபுரமென்று பெயராயிற்று. பரசமய கோளரி - புறச் சமயங்களாகிய யானைகளை யழிக்குஞ் சிங்கம் கோளரி என்றதற் கேற்பப் பிரம புரத்தைக் குகையாகவும், தேவார வோதையைக் கர்ச்சனையாகவும், குலச்சிறைநாயனார் மங்கையர்க்கரசியார் முதலாயினோரை மாக்களெனவும், மறைவனம், கடம்பாடவி எனவும் கூறினர். எண் பெருங்குன்று - பசுமலை, ஆனைமலை முதலாயின. "எண் பெருங்குன்று அமண் வெள்ளம்" என்பதற்கு, பெரிய மலைகளில் வசித்த எண்ணாயிரஞ் சமணவெள்ளம் என்று முரைக்கலாம். சூளா—சிகை, மணி—இரத்தினம், தலையிலணியப்படும் இரத்தினம்.

## திருநாவுக்கரசு நாயனார்.

மலராகிநெறியரிடுங்கற்பிணைவாரிதிமிதப்ப
மறைவல்லோர்பற்
பலராகியகர்திருப்பாதிருப்புலியூர்க்கரைசார்ந்து
பவநோய்தீர்வான்
புலராகிநெறியொருவிச்சிவசமயநெறியினிடைப்
போந்துஞானச்
சலராசிபடிந்ததமிழ்வாகீசன்சரணமலர்
தலைமேற்கொள்வாம்.

இ-ள். மும்மல சம்பந்தமுடைய ஒழுக்கமழியினிற்குஞ் சமணர்களாலிடப்பட்ட கல்லானது தெப்பமாகக் கடலின்கண் மிதக்க; வேதங்களில்வல்ல பிராமணர்கள் பற்பலர் வாழ்த்துக்களைக் கூறி நிற்கும் திருப்பாதிரிப் புலியூர்க் கரையை யடைந்து, பிறவிப்பிணியை நீக்கும்படி ஐம்புலக்கூட்ட வழியைவிட்டுச் சைவசித்தாந்தமார்க்கத்திற் புகுந்து சிவஞானமாகிய கடலின் மூழ்கிய தமிழ்வல்லவாகீசப் பெருமானது திரு
வடிகளாகிய தாமரைமலரைச் சிரமீதுவகிப்பாம். 21



## சுந்தரமூர்த்தி நாயனார்.

முடிதடவவிருவிசும்புந்தடவவொருமலரடியார்
முழுதுமற்றே
ரடிதடவவளரரியுமயனுமிருவருமடியு
முடியும்பாங்கட்
கடிதடவல்லிளமுலைவானுதற்பரவைகிரணமணிக்
கனகவாயிற்
படிதடவவிடுந்தமிழ்த்தெள்ளமிழ்தகவிநாவலன்றன்
பணிதல்செய்வாம்.

இ-ள். திருமுடியை, பெருமைவிளங்கும் ஆகாயத்தினுந் தேடவும், ஒப்பற்ற தாமரை மலர்போலும் திருவடியைப் பூமிமுழுதினும் இன்னுமோர் முறைதேடவும், வளர்கின்ற திருமாலும் பிரமனுமாகிய இருவரும், அடியையும் திருமுடியையும், சர்ப்ப படத்தையொத்த நிதம்பமும் சூதாடு கருவியை நிகர்த்த இளமைகொண்ட தனமும் ஒளிபொருந்திய நெற்றியுமுடைய பரவை நாயகியாரது ஒளிபொருந்திய இரத்தினங்களழுத்திப் பொன்னாற்செய்யப்பட்ட வாயிற்படியில் தேடும்படி தூதாகவிட்ட தமிழில் வல்லதெளிந்த அமிழ்தகவியாகிய சுந்தரமூர்த்தி நாயனாரது திருவடிகளை வணங்குவாம்.

முன்னோர்கால் சிவபெருமானது முடியையும் அடியையும் தேடிக் காணாத பிரம விட்டுணுக்களாகிய இருவரையும் இன்னுமோர் முறையவை வாயிற்படியைத்தேடுவாராயின் அவை நமக்கெளிதிற் புலப்படு
மென, இறைவனைத் தூதாகவிடுத்த சுந்தரனென்பது கருத்து. 22

## வாதவூ ரடிகள்.

நரைசெறியும்வாதவூர்ப்பிறந்துகுருந்தடியின்மதிப்
பாகன்கையு
றுறைசெறியங்குசத்தடங்கியருட்டளையோடானந்த
வொளிநீராடிக்
குறைசெறியுமுணர்வுசேவகம்பயின்றுபொதுவிலிளங்
கொம்போடாடு
மரசுநிழலடிவைகுமாணிக்கமழ்களிற்றை
யகத்துள்வைப்பாம்.

இ-ள். (வைகைநதிக்) கரையை யடுத்த திருவாத வூரிற்றோன்றி குருந்தமரத்தடியின்கீழ் வீற்றிருந்த பிறைத் துண்டமுடைய பரமசிவனது திருக்கரத்தின்க ணுள்ள சிவஞானபோத மென்னும் அங்குசத்தி லடங்கி, திருவருள் என்னும் பிணிப்புடனே சிவானந்தம் என்னும் பிரகாச முள்ளவாரிதியின் மூழ்கி, (சிவத்துவ) விளக்க மமைந்த தம்மறிவு செவ்விய உண்மைப்பொருளிற்கலந்து, அம்பலத்திலே (கனகசபையின் கண் இளமைகொண்ட பூங்கொம்பு போன்ற சிவகாமி யம்மையாருடன் திருநடனஞ் செய்தருளும் நடராசப் பெருமானது குளிர்மையுடைய திருவடிக்கண் சேர்ந்திருக்கும் மாணிக்க வாசகரென்னும் இளயானையை மனத்தின்கணிருத்தி நினைவாம்.

மாணிக்க வாசக சுவாமிகளை யானை யென்றதற் கியையமதிப்பாகன், அங்குசம், தளை, நீராடல், சேவகம், நிழலடிவைகுதல் கூறப்பட்டன. மதிப்பாகன்-புத்தியுள்ள யானைப் பாகன் எனவும், சந்திரனைய பகுதி வைத் தரித்தவன் எனவும் பொருள். அங்குசம்—தோட்டி. உரை செறி அங்குசத்து அடங்கி—சிவஞானபோத உபதேசம் காதிற்செறித்த அப்பொழுதே உண்மைப் பொருள் பதிந்து என்னலுமாம். அங்குசத்து



அடங்கி—அழகிய திருவடித் தாமரையினடங்கி யென்றலுமொன்று செம்மை அகம்—செவ்விய உண்மைப்பொருள். சேவகம்-யானை துயிலுமிடம். 23

## சிவனடியார்.

பண்டீசரெனக்குவித்தமணலிலாப்பயம்பெய்து
பணியும்போழ்திற்
கண்டீசரென்றுசிதைத்ததந்தைதாண்மழுவாற்
கடிந்துசேட
முண்டீசர்சூடியதுஞ்சூடிமகப்பேற்றினரு
ளுயர்வுபூண்ட
தண்டீசர்முதலதிருத்தொண்டர்பதஞ்சார்ந்தவர்தாட்
சார்ந்துமன்றே.

இ-ள். முன்னைக் காலத்திற் சிவலிங்க மெனப் பாவித்துக்குவித்த மணலிலே பசுக்களின் பாலையபிடேகஞ்செய்து பூசிக்குங்காலத்தில், அதனைப் பார்த்து, சிவமேயென் றுகருதாது (வெறுமணல் எனக்கருதி) அழிக்கத் தொடங்கிய தமது தந்தையின் பாதத்தை மழுவாயுதத்தாற் றுணித்து சிவதிருமாலியத்தை யுட்கொண்டு, சிவபெருமான் றரித்த கொன்றைமாலையைத் தாமுந்தரித்து, சிவனுக்குக் குமாரரென்னும் பேற்றினோடு திருவருள் உயர்வையும் பெற்ற சண்டேசுர நாயனார் முதலிய திருத்தொண்டர்களுடைய பாதங்களைக் கதியாக அடைந்த அடியார்களது திருவடிகளை 24
யடைவோம்.

## குகனடியார்.

உய்யவேதகருதியருச்சனைபுரிவோர்வரியையந்து
முறைப்போர்செம்பொன்
பெய்யவேதந்தேற்றபணிபுரிவிப்போர்புரிவோர்தம்
பெருமைகேட்போர்

சைவமேசமயமெனத்தலைநிற்போர்சிவகிரியிற்
றயங்கும்வைவேற்
றெய்வமேதெய்வமெனத்தெளிந்திடுவோர்மலர்ப்பாதந்
தெரிசிப்போமால்.

இ-ள். முத்தியடைந்து உய்வதொன்றையே நினைத்து அருச்சனை செய்கின்றவரும், பஞ்சாக்கரங்களையுஞ் செபிக்கின்றவரும், சிவந்தபொன் முதலிய கொடுத்த பொருள்களை (அன்புடன்) வாங்கித் தகுந்த திருப்பணிகளைச் செய்விப்பவரும், அங்ஙனமுள்ளாராத பெருமைகளைக் கேட்டோரும், சைவசித்தாந்த சமயமே மெய்ச்சமயமெனக்கண்டு அதன் வழி நின்று ஒழுகுவோரும், பழநித்தலத்துக்கணுள்ள சிவமலையின்கண் விளங்கும் கூரியவேலாயுதத்தைத் தரித்த தெய்வமே முழுமுதற் றெய்வ மென்று தெளிந்து வழிபடுவோரும் ஆகிய குகனடியார்களது தாமரை மலர் போன்ற திருவடிகளைத் தரிசிப்போம் ஆல்-அசை. 25

நனிதவநாடோறும்புரிந்துசாத்துவிககுணமடைந்து
நவைகடீர்ந்து
தனுமுழுதுமுழுத்ததிருநீற்றினொளிபழுத்தொழுகுந்
தலைமைசார்ந்து
புனிதமுறவிளங்கிவைவேற்குமரனுறைசினகரஞ்சூழ்
போந்துபோற்றி
யனுதினமேவலிற்பரிவுபுரிந்ததிருவகவடிமைக்
கடிமையாமால்.

இ-ள். மிகுந்த தவத்தைத் தினந்தோறுஞ் செய்து, சாத்துவிககுணங்களைப் பொருந்தி, குற்றங்களினின்றும் நீங்கி, தம் உடம்பு முழுதும் உத்தூளனமாகத் தரித்த விபூதியி னொளிமுதிர்ந்து காணப்படும் பெருமைகொண்டு அகத் தூய்மையும் பொருந்த நின்று, கூரிய வேலாயுதத்



தைத்தரித்த குமாரக்கடவுள் வீற்றிருந்தருளுங் கோயிலை வலம் வந்து துதித்து, நாடோறும் (அவன் உடைய) திருப்பணி செய்தலில் அன்பாக விரும்பிய திருவகம்படித் தொண்டர்க்கு (யாம்) அடிமையாவேம்.

தவம் என்பது ஈண்டுச் சரியை கிரியா யோக ஞானங்களை, "ஐம்புலவேடரி னயர்ந்தனை வளர்ந்தனை-தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட் டன்னிய மின்மையி னரன்கழ் செலுமே" என்னுஞ் சிவஞான போத சூத்திரத்தா னுணர்க.

சாத்துவிக குணமாவன—ஞானம், தவம், மேன்மை, அருள், மோனம், வாய்மை, பொறுமை, புலனடக்கல் என்பனவாம். அதற்கு மேற்கோள்.

பிங்கலந்தை.

ஞானந் தவ மேன்மை நல்லருண் மோனம்
வாய்மை பொறைபுல னடக்கல்சாத் துவிகம்.

குற்றங்களாவன - காமம், வெகுளி, மயக்கம், என்பன, அகத் தூய்மை யின்ன தென்பதை, புண்ணிய நன்னீராடல் கடவுளர் பூசை யாற்றல்" எனவரூஉங் கூர்மபுராணச் செய்யுளாலும், "சத்தியந்தானருஞ் சம்ந்தம மின்சொற் சாறுத லொருவழிப்படுதல் - புத்தியேமுதல கரணமோர் நான்கு மடக்குதல் புலன்கள் போம்வழியி - னாய்த்திடாதமைத்தல்" எனவரூஉங் காசிகாண்டச் செய்யுளானு முணர்க.

அகம்படித் தொண்டாவது கண்ணி, தொடை, பிணையல், இண்டை முதலிய மாலைகள் சமைத்தல், திருவாபரணம், திருப்பரி வட்டம், கொடி, குடை, சாமரம் முதலிய மங்கலப் பொருள்களைத் தாங்குதல், அவற்றான் அலங்காரஞ் செய்தல் முதலாயின. அவற்றை,

பொங்கிய திருவி லீடும் பொற்புடைப் பணிகளேந்தி
மங்கலத் தொழில்கள் செய்து மறைகளாற் றுதித்து மற்றுங்

தங்களுக் கேற்ற பண்பிற் றரும்பணி தலைநின் றுய்த்தே
யங்கணர் கோயி லுள்ளா லகம்படித் தொண்டுசெய்வார்.

என்னும் பெரியபுராணச் செய்யுளாற் றெறிக. அடிமை என்பது, தச்சு என்றாற்போல விகுதிகெட்டுநின்ற பெயர் என்பர் இலக்கணக் கொத்தார். 26

## சந்தான குரவர்.

நந்தாவொள்ளொளிஞானமுதிப்பமல
விருணீங்குநயத்தற்கொண்டு
முந்தாயபொருளிதுவென் றருளுருக்கொண்
டுயிர்மெய்ப்பொருண்மூன் றுமேற்று
வந்தாளும்பெண்ணைநதியுடுத்தவெண்ணெய்
மெய்கண்டான்வழியிற்றோற்றுஞ்
சந்தானகுரவர்பதம்பிறவிநோய்
தவிர்க்குமருந்தெனவுட்கொள்வாம்.

இ-ள். குறையாத வுண்மைச் சிவஞானந்தோன்ற, அதனால் மல இருள் அகன்று, சொல்லுதற்கியலாத முதன்மையுடைய பதிப்பொருள் இதுவே யென்று தெளியும்படி அருளே யுருவமாகக்கொண்டு, ஏழுது உயிர் உடல் பொருள் என்னு மூன்றனையும் ஏற்று விரும்பி அடிமைக் கொண்ட பெண்ணையாற்றினாற் சூழப்பட்ட திருவெண்ணெய் *நல்லூரி லமர்ந்தருளிய மெய்கண்ட தேவப் பெருமானையும், அவனது சந்தான வழியிற் தோன்றிய ஆசாரியர்களான அருணந்திசிவாசாரிய சுவாமிகள் மறைஞான சம்பந்த நாயனார், உமாபதி சிவாசாரிய சுவாமிகள் ஆகிய ஆசாரியர்களது திருவடிகளைப், பிறவியாகிய நோயை நீக்கும் மருந்தாக உட்கொள்வாம். 27

கடவுள்வணக்கம் முற்றிற்று.

---

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

# பாயிரம்.

---

பாயிரம் என்பது நூல் வரலாறுரைத்தல். "ஆயிர முகத்தா னகன்றதாயினும் - பாயிர மில்லது பனுவ லன்றே" என்று இலக்கணத்தார் கூறலின், எவ்வகைச் சிறப்புடைய நூலாயினும் பாயிர மில்லாக்கால் அது நூலெனப்படாது. ஆகலின் இங்குப்பாயிர முரைத்தார். அதன்வரலாறுவது:-

முன்னாட் காலத்திலே, வேதம் சிவாகமம் என்னும் இருநூல்களின் உண்மைப் பொருள்களின் சாரங்களெல்லாம் அடங்கி அநாதி மலமுத்தபதி யாகிய சிவபெருமான் பதினெண்புராணங்களையு மருளிச்செய்தார். அவையாவன:- பிரம புராணம், பதும புராணம், விஷ்ணு புராணம், சைவ புராணம், பாகவத புராணம், பவிடிய புராணம், நாரதீய புராணம், மார்க்கண்டேய புராணம், ஆக்கினேய புராணம், பிரமகைவர்த்த புராணம், இலிங்க புராணம், வராக புராணம், கந்த புராணம், வாமன புராணம், கூர்ம புராணம், மற்ச புராணம், காருட புராணம், பிரமாண்ட புராணம், என்பன வாம்.

இவற்றுள் சைவம், பவிடியம் மார்க்கண்டேயம், இலிங்கம், வராகம், காந்தம், வாமனம், கூர்மம், மற்சம், பிரமாண்டம், என்னும் பத்தும் சிவபுராணங்களாம்.

விஷ்ணு புராணம், பாகவதம், நாரதீயம், காருடம் என்னும் நான்கும் விட்டுணு புராணங்களாம். பிரமம், பதுமம் என்னும் இரண்டும் பிரமபுராணமாம். ஆக்கினேயம் என்னும் ஒன்று அக்கினி புராணம் ஆகும். பிரமகைவர்த்தம் என்பது சூரியபுராணம் ஆகும்.

இப்புராணங்கள் பதினெட்டுக்கும் மூலமாக அநாதியே யிறைவன் ஓர்புராணஞ் செய்தனன். அதனையே பின்னுள்ளோர் பதினெட்டாக்கினர். முதலிற் சிவபெருமான் திருநந்தி தேவர்க்கு உபதேசித்தார். அவர் சனற்குமார மகா முனிவர்க்குப் போதித்தார். அவர் வேத வியாதர்க்கு உபதேசித்தனர். அவர் சூதமகா முனிவர்க்கு உபதேசித்தார். அவற்றுட் கந்தபுராணமே மகா விசேடமுடையது. அதனிற் கூறப்படாத சரிதங்களும் பொருள்களும் உலகத்தில் இல்லை. "எந்தப் பொருளுங் கந்தத்தி லுண்டு" என்ற பழமொழியும் அதனை விளக்கும். அது ஓரிலக்கங் கிரந்தமுடையது. இத்துணைச் சிறப்புக்களை யுடைய் கந்தபுராணத்திலே சிரிப்பிரகாச காண்டத்திலே இப்பழநித் தலமான்மியம், இருபத்து நான்கு அத்தியாயத்தின் மேற் கூறப்பட் டிருக்கின்றது. அதனை யாராய்ந்து செந்தமிழ் நடையிற் பாடுகவென்று பேரறி வுடையோர் பணித்தாராகலின், அவர் மொழியைத் தலைமேல் வகித்துச் சிறியேன் விருத்தப் பாக்களிற் பாடினேன். இதன் கண் சருக்கம் இருபத்து மூன்று உள்ளன. குமரனே! குருபரனே! சரவண பவனே! சண் முகனே! குகனே!



என்று சொல்லும் நாமங்களைக் கேட்டபொழுதிலே, அவர் பெறுதற்கரிய பேறெல்லாம் பெறுவர் என்றால் அக்கடவுளது பெரும் புகழையெல்லா மெடுத்த இப்புராணத்தைக் கேட்போர், பாராயணஞ் செய்வோர், பதிப்பிப்போர், பொருள்விரிப்போர் யாவரும் எத்துணைப் பெரும்பேறுகளையும் எளிதில் அடைவர் என்பது சத்தியம்! சத்தியம்! முக்காலுஞ் சத்தியமே. இவ்வாறு சூதமுனிவரர் ஆணையிட்டுக் கூறினராயின் இப்புராணத்தையும் யாவரும் கைக்கொண்டொழுகலே மானுடப் பிறவிக்கு இன்றியமையாப் பயனாகும்.

---

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இறைவனருள்வழிநந்திபாற்றெரிந்துசனற்குமார
　　னியல்வியாதற்
கறையவவன்சூதமுனிக்கருளியமூவாறுபுரா
　　ணத்திற்காந்த
முறைபிறழாதுதவுசிரிப்பிரகாசகாண்டத்தின்
　　மொழியுமின்றாற்
குறைவிலத்தியாயமறுநான்குநடைபேற்றதன்மேற்
　　கூறுமாதோ.

இ-ள். சிவபெருமான் அருள்வழிப்பட்ட திருநந்திதேவரிடத்துக் கேட்டுணர்ந்து, சனற்குமார முனிவர் நல்லிலக்கணமுடைய வியாச முனிவர்க்கு உபதேசிக்க அவ்வியாத முனிவர் சூதமுனிவர்க்கு உபதேசித்த பதினெண் புராணங்களுட் கந்தபுராணமானது, இயல்புலமூவா மற் சொல்லப்பட்ட சிரிப்பிரகாசகாண்டத்திலே கூறப்பட்டு இப்புராணக் கதைகள், குறைவில்லாத இருபத்து நான்கு அத்தியாயம் சொல்லி முடிந்தன. பின்னர்க் கூறிநிற்கும். மாது-ஓ-அசைகள். 1

அள்ளிலைவெள் வேற்குமரன் சிவகிரியி
லரசுவீற்றிருக்குமந் தண்
கள்ளவிழ்பூங்கழனிவளந்திகழ்பழநிக்
காதைவடமொழியையாய்ந்து
தெள்ளுதமிழாற்றருதிசிறந்தெனவத்
தலன்வைகுந்தெளிமெய்ஞ்ஞான
வள்ளுணர்முதுக்குறைவோர்வெளிற்றறிவி
னெனைவிளித்தேயுரையென்றால்.

இ-ள். கூரிய தகட்டுவடிவாய் வெள்ளிய வேலாயுதத்தைத்தரித்த குமாரக்கடவுள் சிவகிரியினிடத்து அரசுகொண்டிருக்கப்பெற்ற, அழகிய குளிர்ந்த தேன் செறிந்த பூக்க ணெருங்கிய வயல்களின் வளங்கள் விளங்கும் பழநி மான்மியத்தை, வடமொழியையும் ஆராய்ந்து தெளிந்த தமிழ் மொழியாற்செய்து சிறக்கத் தரக்கடவாய் என்று, அந்நகரின்கண் வைகுந் தெளிந்த மெய்ஞ்ஞானமாகிய உண்மை யறிவையுடைய பெரியோர்கள், வெறுமை யறிவுடைய (கல்விகேள்விகளிற்) சிறியேனாகிய என்னை அழைத்து உரைத்தனர். 2

அத்திருமாநகர்வதிநுண்ணறிவுடையோர்
சிறியேன்புல்லறிவினாற்று
மித்தமிழின்குறைதீர்ப்பச்சொல்வகைசொற்
பொருணிரப்பியெடுப்பரென்றே
வைத்தமுறைச்சருக்கமிருபான்மூன்று
வரவினிதுவழங்குமாற்றான்
மெய்த்தமிழின்சுவையொழுகும்விருத்தயாப்
புதுவிளங்கவிளம்பலுற்றேன்.

இ-ள். அந்த அழகிய பழநி யென்னும் பெரிய நகரத்தில் இருக்கும் கூரிய அறிவினையுடைய பெரியோர், சிறியவனாகிய யான் அற்ப



மதி கொண்டு செய்த இத்தமிழ் நூலிற் பொருந்திய குறைகளை நீக்கும்படி நினைத்து சொல் வகைகளையும் சொல்லின் பொருள் வகைகளையும் நிறைத்து ஏற்றுக் கொள்வாரென்று எண்ணியே, முறையாக வகுக்கப் பட்ட சருக்கங்கள் இருபத்துமூன்று பொருந்த, உறுதிப் பயனைக்கொடுக் குந் தன்மையுடன், நிலைபெற்ற செந்தமிழ்ச் சுவை தேங்கும் விருத்தப் பாக்கள் விளங்கும்படி சொல்லத் தொடங்கினேன். 3

## நூற் பெருமை.

குமாரகுருபரசரவணோற்பவகுகாசண்
முகாவென்றோதி
லமரரறிவரியபரகதிபுவியிலெளிதினில்வந்
தடையுமென்றால்
விமலமுடனிருசெவியாலவனதுதொல்கதையமுத
மிசைந்தோர்முற்றுந்
தமலமதுவிளியநனிபெறும்பயனெல்லையையொருவர்
சாற்றற்பாற்றோ.

இ-ள். குமாரனே! குருபரனே! சரவணோற்பவனே! குகனே! சண்முகனே என்று சொன்னால், தேவர்களும் அறிதற்கரிய பரமுத்தி யிப்பூமியிலேயே இலகுவாக வந்து சேருமென்றால், பரிசுத்தமுடன் இருகாதுகளினாலும் அக்கடவுளது புராண சரித்திரமாகிய அமிர்தத்தை யுண்ட பெரியோர்கள், தம்மை யநாதியேபந்தித்து நிற்கும் ஆணவமல சத்தியெல்லாங்கெட, மிகவும் அடையும் உறுதிப் பயன்களின் அளவினை யொருவர்சொல்லும் பகுதியுடைத்தோ? 4

## நூல் செய்த காலம்.

மலர்தலைபுரந்தாங்குமணிமுடிச்சகமதென்னு
நிலைபெறநிறுத்தமுனைவஞ்ஞாற்றின்மேற்றிகழுமைம்பான்
றலைசெறிபருவந்தன்னிற்றனிநெடுங்கதிர்வேலண்ண
லலைவறுபழநிமுதாப்பெருமையைநவிலலுற்றேன்.

இ-ள். பரந்த தலைமையுடைய ஆதிசேடனாற் றாங்கப்படுகின்ற இரத்தின மமைந்த முடிகளுள்ள சகம் என்றும் சொல்கின்ற. நிலை பெற வைத்தோதிய ஆயிரத்தைஞ்ஞூற் றைம்பது என்னும் முதன்மை யுற்ற வருடத்தில், ஒப்பற்ற நீண்ட ஒளிபொருந்திய வேலாயுதப் பெருமானது, நன்மையுள்ள பழைய பழநித்தலத்தின் மான்மியத்தைச் சொல்லத் தொடங்கினேன்.

ஆதிசேடன் ஆயிரந் தலைகளை யுடையதாகலின் "மலர்தலையுரகம்" என்றார், உர—மார்பினால், கம்—சஞ்சரிப்பது. இந்நூல் சாலிவாகன சகவருடம் ஆயிரத்தைஞ்ஞூற் றைம்பதாம் வருடத்திற் செய்யப்பட்டது. ஆகவே இற்றைக்கு இருநூற் றெழுபத்தைந்து வருடத்திற்கு முன்னர் என்க. நலம்-நலன் எனப்போலி.

## நூற் பெயர்.

பொருந்துமூக்குணமுமந்தக்கரணமும்புலனுமுள்ளுந்
திருந்தமுற்றெருருங்குணர்ந்தோர்செவிப்புலன்றேக்கவாரி
யருந்தமுதனையதொன்னூல்வழிநடாயசலமேந்தி
பெருந்தமிழ்புனைந்தவிந்நூற்பெயர்பழனிப்புராணம்.

இ-ள். அநாதியே வந்து பொருந்திய மூக்குணங்களும் மனமுதலிய அந்தக் கரணங்களும் ஐம்புலன்களும் ஏனைய உட்கருவிகளுந் திருத்த முறும்படி கல்வி கேள்விகள் முற்றையும் ஒருசேர அறிந்த பெரியோர்கள் தமது செவிப்புலனிற்கு நிறைக்கும்படி யள்ளியெடுத்து உண்ணுகின்ற அமுதத்தை யொத்த முதனூலின் வழியே நடந்து, மலையை வில்லாக வளைத்த சிவபெருமானால் அநாதியே உண்டாக்கப்பட்ட பெரியசெந்தமிழால் அலங்கரித்துச் செய்யப்பட்ட இந்நூலின் பெயர் யாதெனிற் பழநிப் புராணம் என்பதாம்.

முக்குணமாவன—சாத்துவிகம், இராசதம், தாமதம். அந்தக்கரணமாவன—மனம், புத்தி, சித்தம், அகங்காரம். என்பனவாம். புலன்களாவன—சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம் என்னு மைந்துமாம்.



உள் எனவே மெய் வாய் கண் மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளும், தசவாயுக்கள் முதலியவுங் கொள்க அசலம்—சலித்தலில்லாதது. சிவபெருமான் சம்ஸ்கிருதத்தை யருளியகாலத்தே தமிழ்மொழியையும் அருளினர் என்பது தோன்ற "அசலமேந்தி பெருந்தமிழ்" என்றார். இதனானே தமிழ் சம்ஸ்கிருதத்தினின்றும் பிறந்ததென்பார் கூற்றும், இடையிற் சிலராலே கட்டப்பட்டதென்பார் மதமும் மறுக்கப்பட்டன. 6

## நூல் செய்த காரணம்.

இந்தநூலாரியத்தையீர்ந்தமிழ்த்தொடர்புசெய்ய
வந்தகாரணம்யாதென்னில்வண்டமிழ்நிலத்தில்வைகுங்
கந்தவேளடியாராயங்கலந்தருட்கடலின்மூழ்கு
மந்தவாழ்வடையலாம்பேரின்பமுமடையலாமே.

இ-ள். வடமொழிக்க ணுள்ள இந்த நூலை, தண்டமிழ்ப்பாக்களாலே செய்யவந்ததற்குக் காரணம் யாதென்று கேட்பின், சொற்பொருள் வளங்களையுடைய தமிழ் வழங்குந் தேயத்தின்க ணிருக்கும் கந்தக்கடவுளின் அன்பர்கூட்டங்கள் ஒருவரோடொருவர் கலந்து பாராயணஞ் செய்து, அக்கடவுளது திருவருட் கடலிலே முழுகச்செய்யும் அந்தப் பெருவாழ்வையும் பெறலுமாகும், அத்துவித முத்தியாகிய பேரின்பத்தையு மடையச்செய்தலு மாகும் என்னுங் காரணமே.

தமிழ் என்பதற்குத் தனித்த ழகரத்தையுடைய மொழியெனவும், தனிமையான மொழியெனவும், இனிமையையுடைய மொழியெனவும் பொருள் கூறுப. வடக்கண் வேங்கடமுந் தெற்கட் கன்னியாகுமரியும எல்லையாக வுடையது எனவும், வடக்கின்கண் வடுகும் தெற்கின்கண் கடலும் எல்லையாக வுடையது எனவும், பாண்டிநாட்டை யதுவெனவும், சோழநாட்டை யதுவெனவும் பலரும் பலவாறு கூறுப.

பாயிர முற்றிற்று.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

# அவையடக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வானமுட்பருகும்விரைமலியுவர்நீரும்பூந்தண்
கானிருங்குளவிமேவிக்கவர்பசுங்கிடமும்போற்
றேனிமிர்விசாகனன்பருளங்கொளிற்சிறியேன்புன்சொற்
றூனிதுநன்காம்யானுந்தொண்டெனப்புரிவதாமே.

இ-ள். மேகங்கள் உட்கொள்ளுஞ் சமுத்திரத்தி னிறைந்த உப் நீரும், பொலிவாகிய குளிர்ந்த காட்டினிடத்துப் பெருமையையுடைய குளவியானது சென்று எடுக்கின்ற பசிய புழுக்களும்போல், தேன்வண்டுகளொலிக்கின்ற ஆட்டுக்கடா வாகனத்தாராகிய கந்தக்கடவுளின் மெய்யன்பரது மனத்தில் இது கொள்ளப்படுமானால், (கல்விகேள்விகளிற்) சிறியவனாகிய எனது இழி மொழிகளையுடைய இந்நூலும் யான் தொண்டுபட இயற்றுவதனாலே சிறந்ததாகும். 1

வார்கடற்புலவுமோரார்மைநிறச்சேறுமோரார்
நீர்மலியுவருமெண்ணார்நித்திலமணிகொள்வார்போற்
சீர்தபவிருண்டதீஞ்சொற்பொருசுவைதிரிதறோரார்
கூர்வெயிற்படைவேள்காதைகுறித்துளங்கொள்வர்நல்லோர்.

இ-ள். நீண்ட கடலின்க ணுள்ள புலால் நாற்றத்தையும் அறியமாட்டார், கருநிறத்தையுடைய சேறிருத்தலையுங் கவனியார், நீரினிறைந்த உப்புத் தன்மையையும் நோக்கார், முத்துக்களையும் இரத்தினங்களையுந் விரும்பி யெடுப்பார், அதுபோலப் பெரியோர்களும், சீரொழிய இருள்



போன்ற கொடுஞ்சொற்களும், பொருள்களும், சுவைகளும். வேறுபட்டதையும் பாராதவராய், கூறியகதிர்வேற் பெருமானது கதையைச் சொல்லுவதென்றுணர்ந்து மேலாகக்கொள்வர். 2

புலவரும்போற்றுந்தாதைக்கொருமொழிபுகன்றுப்வெற்பிற்
புலவனுக்கரம்போதித்தும்பொருள்வகைவிரிவுங்கூட்டிப்
புலவருக்கருளியும்பார்புகழ்சிவகிரியில்வைகும்
புலவனுட்கொள்வான்பாடப்புக்கவென்புலமைநன்றே.

இ-ள். தேவர்களுந் துதிக்கின்ற தமது தந்தையாராகிய சிவபெருமானுக்குப் பிரணவப்பொருளை யுபதேசித்தும், பொதியமலையின்கணுள்ள அகத்திய முனிவர்க்குத் தருமநெறியைப் போதித்தும், அகப்பொருளின் வகையுரை விரிவுரைகளையுஞ் சேர்த்து ஆராய்ந்து அவற்றின் உண்மைகளைக் கடைச்சங்கப் புலவர்க்குத் தெரித்தும், பூமியிலுள்ளவர்களாலே புகழப்படுகின்ற சிவகிரியில் எழுந்தருளியிருக்கும் பெரும்புலவராகிய குமாரப்பெருமானார் விரும்பும்படி பாடுதற்குப் புகுந்த எனதறிவு நன்றுநன்று.

மூதுணர்வுடையோர்வேதமுதலியதெரிந்தெஞ்ஞான்று
மோதுசொல்லமுதமுண்டுதேக்குமொள்ளிலைவேற்சேய்பொற்
காதுகளென்சொனஞ்சங்கைக்குமோதுய்க்குமோயா
யாதுசொல்லறியேனுசைதூரப்பதற்கென்செய்கேனே.

இ-ள். பேரறிவுடைய புலவர்கள் வேதமுதலாய பற்பல நூல்களையெல்லாம் ஆராய்ந்து, எக்காலுமோதிய சொற்களாகிய அமிர்தத்தை யுட்கொண்டு நிறைந்த ஒள்ளிய இலைத்தொழின் மூற்றிய வேலாயுதத்தையுடைய கந்தக்கடவுளினது அழகிய செவிகள், எனது சொற்களாகிய விடத்தை வெறுத்துவிடுமோ, அல்லது ஏற்றுக்கொள்ளுமோ, எதுஞ் சொல்வதற்கு அறியகில்லேன், பாடவேண்டுமென்னும் அவாப்பிடித்துச் செலுத்தலால் யான் என்செய்வேன். (பாடத்தொடங்கினான்.) 4

அவையடக்கம் முற்றிற்று.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

முதலாவது,

# கிரிச் சருக்கம்.

முனிவர்களாலே துதிக்கப் படுகின்ற வியாத முனிவர் மாணாக்கராகிய சூதமுனிவர் நைமிசாரணியத்திற் சென்றார். அவ்விடத்திருந்த தவத்தினர் யாவரும் அவரைக்கண்ட அளவில் எதிர்சென்று உபசரித்து எமக்குக் கிடைத்தற்கரிய பெருவிருந்து வந்ததென்று மனமும் முகமும்மலர்ச்சி கொண்டு, உபசார மொழிகளைச்சொல்லி, அவரையாசனத் திருத்தினர். ஏனைய உபசாரங்களையுஞ் செய்து, கல்விகேள்விகளில் வல்ல முனிவரரே! சூலபாணியராகிய சிவபெருமானது புகழை விரிக்கும் புராணங்கேட்பதற்கு மிக்க அவாவுள்ளேம். தேவரீர் கருணைகூர்ந்து திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று குறை யிரந்தார். அதுகேட்ட சூதமுனிவர் கூறுவார்.

எந்தையாம் பிரம னிணையடி மறவா வுளத்தீர்! புராணத்தை யோதுதற்கு இடம், காலம், பாத்திரம்வேண்டும். இவ்வனம் தெய்வ வனமாகலானும், இக்காலம் நல்ல காலமாகலானும், சிவனடியராய் நீங்க ளிருத்தலானும் இங்குப் புராண மோதற்குத் தகுதி வந்தது என்றார். முனிவர் ஐய கேள், முன்னர்ப் பதினெண் புராணங்களையும் உபதேசித்



தீர். அவற்றுட் சிறந்த கந்தபுராணத்திலே கிரிப் பிரகாச காண்டத்திலே மேருமுதலிய மலைகளையும் புவனங்களையுங் கூறிய பாகத்திலே, எல்லாமலைகளினும் விசேடித்ததாகித் தென்றிசையிலே வராககிரி என்று ஓர் மலையுளது. அதனிடத்தே யிருமை யின்பங்களையும் அளிக்க வல்ல ஒரு தலமிருக்கின்றது என்று சொன்னீர். அதன் பெருமைகளை யெல்லாம் விரித்துக் கூறுதிர் என்றிரந்தனர். முனிவர் பெருமான் உவகையுடையராய், சூததாசர்களே! அதனது பெருமை யாவரானும் அளவிடக் கூடாது. ஆயினுஞ் சுருங்கச் சொல்வேன். கேண்மின்.

இப்பூவுலகின்கண் மலைகள் அளவிலவாக விருந்தாலும் மேரு, ஏமகூடம் (கதிர்காமமலை) இமயம், மந்தரம், கயிலை கந்த சைலம் என்பவற்றில் குமாரக்கடவுள் எந்நாளும் வீற்றிருப்பர். இன்னுங் கடம்புமலை, சம்புமலை, போதிமலை, ஆலி, கேதார பருப்பதம், சீபருவதம், திருக்காளத்தி, திருக்கழுக்குன்றம், திருத்தணிகை, வேங்கடம், குகனேரி, திருவண்ணாமலை, முதுகுன்று, திருச்சையம், திருச்செங்கோடு, நாராயணகிரி, கொல்லி, ஈங்கோய்மலை, திருக்கற்குடி, திரிசிராமலை, சுவாமிமலை, குன்றக்குடி, திருப்பரங்குன்றம், பழமுதிர், சோலைமலை, திருச்செந்தூர்க் கந்தவெற்பு, பொதியகிரி, திரிகூடாசலம், வெண்ணெய்வரை, கொடிமுடிக்கிரி, கோங்குமலை, மருதமலை, அத்திரி, பேரூர், வெள்ளியங்கிரி, காளமலை, வராககிரியென்னும் பெயர்கொண்ட மலைகளிலே குமாரசுவாமி என்றென்றும் வீற்றிருந்தருளுவர். இவற்றுள் வராக

கமலை என்னும் அம்மலைக்கு வடசாரலில் விட்டுணுமலையொன்றுளது. வாயுதிக்காகிய வடமேற்குத் திசையில் ஒருகுரோச தூரத்தில் பிரமன்மலையுளது. அதற்குக் கிழக்கே சிவபெருமானுறையுஞ்சிலம்பொன்றுளது. அம்மலை பூமியிலுள்ளாராலும் விண்ணுலகத்தாராலும் அளவிடற்கரிய பொலிவையுற்று, சத்திமலையோடுகூடி, குமாரக்கடவுள் நடுவே தங்குதலாற் சிவமலை யென்னுமது சிவனையே போன்று நின்றது. சிவனது சடையைப்போலவும், திருவிழிபோலவும், திருமுகம்நேரவும் விளங்குவது. அச்சிவமலையிற்றான். சூரபன்மனாதியசுரரைக்கொன்று தேவரைக் காத்த பெருமான் வீற்றிருந்தருளுகின்றார். அதன் பக்கத்திற்றான் திருவாவினன்குடித்தலமென்னும் பழநித்தலம். அதன் பாங்கர்க்கூவிளவனமுண்டு. கோங்குவனம் என்னுமோர் தலமும் உள்து. இவற்றின் பெருமைகள் சொல்லற்கு அரியனவாயிருந்தாலுஞ் சிலவற்றை யெடுத்துக் கூறுவோம் என்று சூதமுனிவர் சொல்வாராயினர்.

---

புனிதமாமுனிவர்போற்றும்பொருவருவியாதவேத
முனிபுகன்றொல்புராணமுழுதொருங்குணர்ந்தசூதன்
பனிமுதலியவருத்தும்பருவங்கட்குடையாதென்று
நனிதவம்புரிவோர்வைகுநைமிசாரணியநேர்ந்தான்.

இ-ள். பரிசுத்தமுடைய பெரிய இருடியர்கள் துதிக்கும் ஒப்பில்லாத வேதத்தில் வல்லவியாசமுனிவர், சொல்லிய பழைய புராண முழுவதையும் ஒருசேர அறிந்தசூதமுனிவர், பனிமுதலியவருத்துகின்ற பருவகாலங்களுக்கு (தம்முடல்) வருந்த மாட்டாதென்று, மிக்கதவத்



தைச் செய்கின்ற முனிவர் இருக்கும் நைமிசாரணியத்தை யடைந்தார். 1

சென்றமாதவனைவேதச்சிரப்பொருளுணர்ந்துமூன்றும்
வென்றமாமுனிவர்நேர்ந்துவேணவாவுறத்தழீஇக்கொண்
டின்றுநல்விருந்துவந்ததெனமனமகிழ்வுதூங்க
நன்றுறக்கொணர்ந்தோர்பீடத்திருத்தினர்முகமனல்கி.

இ-ள். அவ்விடத்துப்போன சூதமுனிவரை, வேதாந்தப் பொருளையறிந்து, முக்குற்றங்களையும் வெற்றி கொண்ட பெரியமுனிவர்சேர்ந்து வேண்டும் அவாவானது மிகத்தழுவிக்கொண்டு, இற்றைத் தினம் நல்ல விருந்து வந்ததென்று மனமகிழ்ச்சி மிருக்க, நன்மைபொருந்தக் கொண்டுவந்து ஒருபீடத்தில் இருத்தி உபசாரங்களைச் சொல்லி.

அருக்கியமுதலநல்கியதரிளைப்பாற்றியந்தண்
முருக்கிதழ்ச்சருக்காமீட்டுமுகநயக்கிளவிகூறிச்
சருக்கமில்கேள்வியோய்முச்சுடரிலைப்பெருமான்றொல்சீர்
பெருக்குதொல்புராணங்கேட்கும்வேட்கையோம்பெரிதுமென்றார். 2

இ-ள். அருக்கியம்முதலான உபசாரங்களை யெல்லாஞ் செய்து, வழி நடத்தலா லுண்டாகும் ஆயாசத்தையும் போக்கி, அழகிய குளிர்ந்த முருக்கமலரை யொத்த உதடுகளைக் குவித்துப் பின்னரும் உபசாரமொழிகளை உரைத்து, குறைவின்றி விரிந்த கேள்வியறிவுடைய முனிவரே! மூன்று ஒளிகொண்ட இலைபோலும் வேலாயுதப் பெருமானது பழமையான சிறப்புக்களை மிகுதியா எடுத்துச் சொல்லுகின்ற பழைய புராணங் கேட்கும் விருப்பம் பெரிதும் உடையேம் என்று கூறினர் (முனிவர்.) 3

அவ்வுரைகேளாநன்னரருளினீராரணங்கள்
செவ்வங்கமங்களுந்தொல்புராணங்கடெளியவோதி

லெவ்வமிறேசகாலபாத்திரமிவைகள்வேண்டும்
வெவ்வியல்பில்லீர்சொல்லில்விரியுமோர்சிறிதுசொல்வாம்.

இ-ள். முனிவர்கள் கூறிய வார்த்தைகளைக் கேட்டுச் (சூதமுனிவர் சொல்வார்) நன்று சொன்னீர், வேதங்களையும், செவ்விய சிவாகமங்களையும் பழமையாகிய புராணங்களையும் தெளிவுறும்படி சொல்லுங்கால் குற்றமில்லாத இடம், காலம், பாத்திரம் என்னு மிவைகள் வேண்டும், கொடியகுணமில்லாத முனிவர்களே! அவற்றைச் சொல்லுங் காலத்து விரிவுபடும். ஒருசிறிது எடுத்துச் சொல்வாம். 4

நற்பெருந்தேசநற்பூதரந்தெய்வநதிதீர்த்தங்க
ணற்பெருந்தவவனங்கணாடுநன்னகர்மடங்க
ணற்பெருங்கோயிலாதியவற்றினுநற்காலத்தி
னற்பெருந்தவத்தோர்கேட்பநவிற்றுகென்றனர்நன்னூலோர்.

இ-ள். நல்ல பெரிய தேசம், சிறந்த மலைகள், தெய்வத்தன்மை பொருந்திய ஆறு, புண்ணிய தீர்த்தங்கள், நல்ல பெருந் தவத்தைச் செய்யும் ஆரணியங்கள், நாடு, நல்லநகரம், மடங்கள், சிறந்த பெரிய தேவாலயங்கள்முதலிய இடங்களில், சுபகாலத்திலே நற்குணமுடைய பெரிய தவத்தினர் கேட்கும்படி சொல்லுக வென்றுரைத்தார் நன்னூலில் வல்ல புலவர்கள். 5

ஆதலின்வனத்துட்டெய்வவனமிதுவன்றோநம்மைக்
காதலினிறைஞ்சுமிந்தக்காலநற்காலமன்றோ
தாதலரிதழிவேணிச்சங்கரன்றொண்டர்தம்மின்
மூதறிவினிர்நீரன்றோமொழிகுவனும்பாலென்றான்.

இ-ள். ஆதலால் காடுகளுள் இக்காடு தெய்வத்தன்மை பொருந்திய காடு ஆகும் உங்களை (புராணங் கேட்கவேண்டுமென்னும்) விருப்பத்தில் ஆழ்த்துகின்ற இக்காலமும் நல்லகாலமாகும் மகரந்தம் பொருந்திய கொன்றைப்பூமாலையைத் தரித்த சடாமுடியையுடைய சிவபெருமானது அடியவர்களுட் பேரறிவுடையவர் நீவிரல்லவோ, இன்னன காரணத்தால் உங்களிடத்து அதனைச் சொல்வேன் என்றார் (சூதமுனிவர்) 6



என்பதுமுனிவர்கேளாவெதிர்முனிவரனைநோக்கி
முன்பருளினைபுராணமுழுவதுமவற்றுட்காந்த
மின்பொலிகிரிப்ரகாசகாண்டத்தின்மேருவாதி
நன்கெழுகிரிகளுந்தானங்களுநவிற்றுமெல்லை.

இ-ள். என்ற சொன்னதை நைமிசாரணியத்து முனிவர்கள்கேட்டு எதிரில் இருந்த முனிசிரேட்டராகிய சூதரைப் பார்த்து, புராணங்கள் எல்லாவற்றையும் முன்னரே எமக்கு உபதேசித்தருளினீர். அப்புராணங்களுட் காந்தபுராணத்தில் ஒளி விளங்கும் கிரிப்பிரகாச காண்டத்திலே, மேருமலை முதலாகிய நன்மைவாய்ந்த மலைகளையும், தலங்களையுஞ் சொல்லுங் காலத்தில். 7

சிறந்தனகிரிகளுட்டென்றிசையினினீர்கொண்மேக
நிறந்தருவராகவெற்பொன்றுளததனிழலின்கண்
ணுறைந்துளதின்பமுத்திதருவதோர்தலமுண்டென்றே
யுறைந்தனைவகையினன்றின்றருளுதிவிரிவென்றார்.

இ-ள். சிறப்புடைய மலைகள் யாவற்றினுஞ் சிறந்ததாக, தெற்குத் திசையிலே கருக்கொண்ட கரிய மேகத்தை யொத்த நிறத்தை யுடையவராககிரி யொன்று இருக்கின்றது. அதனடிக்கண் இவ்வுலக வின்பங்களையும் முத்தியையும், அளிப்பதாய ஒரு தலம் உளதென்று சுருங்கக்கூறினீர், இப்போது அதனை விரிவாகச் சொல்லியருள்க வென்றார். 8

என்றவரிசைப்பக்கேளாவிருந்தவன்சிரந்தாழ்த்தி
நன்றிநன்றிதென்றேநமதுநன்கருத்துமற்றப்

ரன்றிவெற்பியல்பு மந்தப்பாங்கரின்பெருமையும்பா
லொன்றறப்புகல்வார்சேடனு மரைக்கவுமரியவென்றால்.

இ-ள். என்று அம்முனிவர்கூற, பெரிய தவத்தினரான குருமுனிவர் தலையை யசைத்து, முனிவர்காள்! நீவிர் கூறிய இது நல்லது நல்லதே. நமது எண்ணமும் இதுவே. அவ் வராகமலையின் தன்மைகளையும், அதன்பக்கத்துள்ள தலத்தின் பெருமைகளையும் ஒன்றும் விடாது சொல்லவல்லவர் யாவர்? ஆதிசேடனாலுஞ் சொல்லுதற்கு முடியாதென்றால். 9

ஆரியமரியவற்றுளரியதைத்தெரியுமோறெந்
தாயினுமினியஞானதேசிகன்சாற்றல்வேண்டு
நீபவைபறைதிரியென்றீர்நிமலவாக்குணர்ந்துநெஞ்சிற்
பாயிருடுமீந்துளீர்யாமறிந்தவைபகருகின்றாம்.

இ-ள். அவ்வாறு சொல்லற்குக் கூடாதானாலும், அரியவைகளுட் சிறந்த விஷயத்தை யுணரும்படி நமது தாயைப் பார்க்கினுஞ் சிறந்த ஞானகுருவே யுண்ணின்று தெரித்தல்வேண்டும். நீர் சொல்வீராக என்று கூறினீர், சுத்தமான சொற்களைக் கேட்டறிந்து மனத்தின்கட் பொருந்தும் பரந்த மலஇருளை நீக்கியுள்ள முனிவர்களே, யாம் அறிந்தவற்றைச் சொல்கின்றோம். 10

எனமனத்தடர்ந்தொண்ஞானதேசிகனிணைப்பொற்பாத
கனைமலர்நளினமென்போதலர்த்திநாண்மலர்ப்பூங்கொன்றை
வணையும்வேணியர்க்கோர்வாய்மைபுகன்றதேசிகர்கோமானை
நினைவரமுகூர்த்தமொன்றுநினைத்துளங்குமிழ்ப்பநேர்ந்து.

இ-ள். என்றுரைத்து, மனத்தின்கணெருங்கியுள்ள அழகிய ஞானாசாரியாது அழகிய இருபாதங்களாகிய தேன்பொருந்திய மிருதுவானதாமரைமலர்களை விரியச்செய்து, அன்றலர்ந்த கொன்றைப் பூமாலையைத்



தரித்த சடாமுடியையுடைய சிவபெருமானுக்கு ஒரு உண்மைப் பொருளை யுபதேசித்த பரமாசாரியராகிய பழநிப்பெருமானை நினைவிற்பொருந்தும்படி ஒரு முகூர்த்தகாலந் தியானித்து, மனங்குவியப்பெற்று. 11

மாமறைத்தலைவிர்கேண்மோவரையளப்பிலவுண்டேனுங்
காமர்பொற்குவட்டிமேமங்கவினிமாசலத்திற்றெய்வத்
தூமணிமந்தரத்திலவெள்ளியங்கிரியிற்றெல்லோ
ரேமுறவைகுங்கந்தகிரியில்வேளுறையுமென்றும்.

இ-ள். பெரிய வேதங்களுக்குத் தலைமை வாய்ந்த முனிவர்களே! கேட்பீராக, (இப் பூவுலகின்கண்) மலைகள் அளவில்லாதன இருந்தாலும், அழகிய மேருமலையினும், ஏமகூடம் என்னுங் கதிரைமலையினும் சிறந்த இமயமலையினும், தெய்வத்தன்மையுடைய சுத்தமாகிய அழகிய மந்தரமலையினும், கயிலாயமலையினும், பெரியோர் இன்பமுற்று இருக்குங் கந்தகிரியிலும் கந்தசுவாமி எக்காலத்தும் நீங்காது வீற்றிருப்பர்.

மறை - இரகசியப்பொருளை யுடையது என்பர்ஆசிரியர் நச்சினார்க்கினியர் கேண்மோ - மோ, முன்னிலை யசை. "எமங்கவின" என்பதற்கு, இன்பஞ்சிறந்துள்ள என இமாசலத்திற்கு அடையாக்குவாருமுளர். கதிரை மலையாவது - இலங்கையிலே தென்பாகத்துள்ள திவ்வியதலம். இதுவே சூரபன்மனாதி யசுரரை யழித்தற்குக் கொண்டபாசறை யென்பது துணிபு. என்னை? மகேந்திரக் கடல் என்னும் இந்து சமுத்திரம் பக்கத்தில் இருத்தலானும், கந்தபுராணத்தார் கருத்தும் அதுவேயாகலானு மென்க. 12

தண்மலர்க்கடம்புசம்புதண்சிலைப்போதிமேலை
விண்ணிவாரினான்குமேருவின்குணபாலாதி

நண்ணுநாற்றிசையின்னீடுகாவலந்தீவின்மேவு
மண்ணலங்குமரிகண்டத்துளபலவடுக்கன்மாதோ.

இ-ள். குளிர்ந்த புட்பங்களை யுடைய கடம்புமலை, சம்புமலை குளிர்மையான போதிமலை மேலாய ஆகாயத்தை யளாவிய ஆலியமலை யென்னும் நான்கும், மேருமலையின் கிழக்குத் திசைமுதலாகப் பொருந்தும். நான்கு திக்குகளினும் மிக்க சம்புத்தீவினுள்ள பெருமையிற் சிறந்த குமரி கண்டத்தினிடத்தே பலமலைக ளுள்ளன. (அவற்றையுஞ் சொல்வேம்.)

மேருவின் றென்பாகத்துள்ள வெள்ளை நாவற் பழத்தினிரதம் ஓடுகிற காரணத்தால் இத்தீவிற்கு நாவலந்தீவு எனவும், சம்புத்தீவு எனவும் பெயர் குமரிகண்டம் இந்தியா இலங்கை முதலாயின. 13

கலிநிலைத்துறை.

ஒளிவிளங்குகேதாரமென்றுரைப்பதோரோங்க
றெளிவுகொண்டசீர்ப்பருப்பதந்தேமலர்பிலிற்றி
யளிவிழைந்தவர்தொழுந்திருக்காளத்தியசலந்
தளிர்நறுமலர்ச்சோலைசூழ்தருங்கழுக்குன்றம்.

இ-ள். புகழ்விளங்கப்பெற்ற கேதாரம் என்று சொல்லப்படுவதோர் மலையுளது தெளிவுபொருந்திய சீசயிலம், தேன்பொருந்திய பூக்களைச் சொரிந்து அன்பை விரும்பிய அடியவர்கள் வணங்குந் திருக்காளத்தி மலை, தளிர்களும் நல்ல புட்பங்களு முள்ள சோலைகளாற் சூழப்பட்ட திருக்கழுக்குன்றம். 14

கொல்சினத்தவெங்கொடுமறக்கிராதர் தஞ்செருவிற்
றொல்லைநல்லெழில்காட்டிவெள்குவர்க்கருள்சுரந்து
வல்லிருங்குவிவளமுலைவள்ளிமென்குறமான்
செல்வியோடரசிருப்பதுசெருத்தணிக்குன்றம்.



இ-ள். கொல்லுகின்ற கோபத்தை யுடைய மிக்க தீவினை வாய்ந்த வேடர்களோடு செய்த யுத்தத்தில், பழமையாகிய தமது நல்ல அழகைக் காண்பித்து. தம்மைவிரும்பிப் பூசிப்பவர்க்குக் கருணையளித்து, சூதாடுங்கருவியைப் போன்ற திரண்ட அழகிய தனங்களையுடைய குறமகளாகிய வள்ளியம்மையாராஞ் செல்வ நங்கையுடன் அரசுவீற்றிருப்பது திருத்தணிகை மலையாகும்.

செரு—யுத்தத்தினின்றும், தணி—தணிந்த இடம். அதாவது சூரபன்மன் முதலிய அசுரரோடுசெய்த யுத்தத்தினின்றும், நம்பிமுதலியவேடரோடு செய்த போரினின்றும் வந்து தணிந்த இடமாதலால் இப்பெயர் பெற்றதென்க. செருத்தணி யென்பது இக்காலத்துத் திருத்தணி யெனவழங்கப் படுகின்றது. "வெள்வாக்கருள்சுரந்து" என்னும் பாடஞ்சிறப்பன்று. மான் செல்வி—இலக்குமியாகிய மானினது மக என்றலுமாம். 15

தண்டுழாய்குரவணிந்துசக்கரமயிறுங்கி
மண்டுபொற்கலைசெய்யகோசிகமருங்கசைத்துக்
கொண்டல்செந்நிறந்திகழ்ந்திருபுட்கொடிகொண்டு
விண்டுவேளுறைவேங்கடமிளிர்குகனேரி.

இ-ள். குளிர்ந்த துழாய் மாலையும் குராமாலையும் அணிந்து, சக்கராயுதமும் வேலாயுதமுந் தரித்து, நெருங்கிய பீதாம்பரமும் சிவந்தவத்திரமும் இடையிற்சுற்றி, மேகம்போன்ற கருநிறமும், சிவந்தநிறமுங் கொண்டு, கருடன் சேவல் என்னும் இருபறவைக் கொடிகளுந்தாங்கி, விட்டுணுவும் சுப்பிரமணியக் கடவுளும் வீற்றிருக்கின்ற திருவேங்கடமலையும் குகனேரியு முள்ளன

விட்டுணு - துழாய் மாலை. சக்கராயுதம். பீதாம்பரம், கருநிறம், கருடக்கொடி என்னும் இவற்றையும், சுப்பிரமணியப்பெருமான் - குராமாலை, வேலாயுதம், சிவப்பு ஆடை, செந்நிறம், கோழிக்கொடி என்னும்

இவற்றையுந் தூங்கி யீற்றிருக்கின்றனர் என்பதாம். வேங்கடம் திருப்பதியெனவும், குகனேரி கோனேரி எனவும் இக்காலவழக்கு. திருவேங்கடம் ஆனாதியே சுப்பிரமணியதலம் என்பது கந்தபுராணத்தானும், பிரமாண்டபுராணத்தானும், தணிகைப்புராணத்தானும், வேங்கடசுப்பராயன் என்னும் பெயருண்மையானும் பெறுதும். பிரமதேவரைச்சிறையில் வைத்துச், சிருட்டிசெய்ய நினைத்த கந்தக்கடவுள் வேங்கடப்பதி சென்று படைத்தனர் எனப் புராணங் கூறுகின்றது. இதுபற்றியே.

"உலகங்கடந்த நெடுமுடி யண்ணலை நோக்கி உலகந் தவஞ்செய்து வீடுபெற்ற மலையாகலான்" என இளம்பூரணர், நச்சினார்க்கினியர் என்னும் பண்டையாசிரியரும் உரைகூறினர்.

தொல்காப்பியச் சூத்திர விருத்தியிலும், மாதவப்பெருந் தகையாசிரியர் சிவஞான யோகிகள், "தமிழ் நாட்டிற்குவடக்கட் பிறவெல்லையுமுளவாக வேங்கடத்தை யெல்லையாகக் கூறினர், அகத்தியனார்க்குத் தமிழைச்செவியறி வுறுத்த செந்தமிழ்ப் பரமாசாரியனாகிய அறுமுகக்கடவுள் வரைப்பு என்னு மியையுபற்றி" என்றுரைத்தமைகாண்க. விட்டுணுவுந்தவஞ்செய்து அம்மலைக்கண் வசிக்கும் வரத்தைக் குமாரக் கடவுளிடம் பெற்றமையால் அவரும் அமர்வது கூறப்பட்டது. 16

செங்கண்மாயனுந்திசைமுகக்கடவுளுமகந்தை
பொங்கியேனமுமன்னமுமெனப்புவியகழ்ந்து
மங்கண்வானுறீஇநேடியுமடிமுடிகாணாச்
சங்கரன்றழற்பிழம்பினைத்தயங்குதொல்விலங்கல்

இ-ள். சிவந்த கண்ணையுடைய விட்டுணுவும் நான்கு முகங்களையுடைய பிரமதேவரும் (நாமே பிரமம் என்று ஒருவர்க்கொருவர்) அகங்காரம் மிகுந்து, பன்றியும் அன்னமும் ஆக வடிவெடுத்துப் பூமியைத்தோண்டிச் சென்றும், அழகிய இடமகன்ற ஆகாயத்தை யுருவிச் சென்று



தேடியும் அடிமுடிகள் காணப்படாத சிவபெருமான் அக்கினித்தாணுவடிவாக விளங்கிய பழைய திருவண்ணாமலையுமுளது.

இச்சரித விரிவைக் கந்தபுராணம் அடிமுடிதேடுபடலத்தும் உபதேசகாண்டம் சிவவிரத மொழிந்த சருக்கத்தும், சிவராத்திரி புராணம் சிவராத்திரியுற்பவச் சருக்கத்துங் கண்டு தெளிக.

திருவருணைக் கலம்பகமும்,

மணிகொண்ட நெடுங்கடலில் விழிவளரு மாயவனும்
அணிகொண்ட புண்டரிக மகலாத சதுமுகனும்
ஞானக்கண் ணதுகொண்டு நாடிமா றுணராதே
யேனத்தின் வடிவாகி யெகினத்தின் வடிவாகி
யடிதேடி யறிவ லெனா வவனியெலா முழுதிடந்தும்
முடிதேடி வருவலெனா முதண்ட மிசைப்பறந்துங்
காணரிய வொருபொருளாய்க் களங்கமற விளங்குபெருஞ்
சோணகிரி யெனநிறைந்த சுடரொளியாய் நின்றருள்வோய்,

என்று விளக்கிற்று. விட்டுணு மூர்த்தி பன்றியாக அடிதேடினார் என்பதைச் சில வைணவர் ஒப்பாது வேதப்பிரமாண மிருப்பின் உடன்படுவேம் என்னலால், அந்தப் பிரமாணங்களையுங் காட்டியவரைய மயக்கங்களை யகற்றுவாம். பிரமர் அன்னமாகத் தேடினார் என்பதனை வாதிப்பாரின்மையின் விடப்பட்டது. அதனையும் சிவராத்திரி புராணவுரைக்கண் தெளிவுற நிறுவியுள்ளாம். ஆங்குக்கண்டு கொள்க.

விட்டுணு பன்றியாகிச் சிவபெருமானது பாதத்தைத்
தேடியுங் காணார் ஆயினர் என்பதற்குப்
பிரமாணம்.

இருக்குவேதம்.

விஷ்ணுர்வை வாராகம் ரூபமாஸ்தாய, பூமிம் விதாரயன் சகஸ்ரம் ஸமா ஆசன் – பாதாம் விஷ்ணு பரோ பூத்வா, த்வமேவமாதாஸி த்வமே

வப்பிதாஸி, த்வமேவப்ராதாஸி, த்வமேவஜ்யேஷ்டோஸி, த்வமேவ ஸ்ரேஷ்டோஸி, யயேவம் மகிமாநம் வேதாத்ருஷ்டாபவதி, விக்ஞாதா பவதி, கர்த்தாபவதி, காரயதாபவதி, யயேவம் வேதா, சிவசாயுஜ்ய மாப்நோதி, சிவஸாயுஜ்ய மாப்நோதி.

பாஸ்கர சங்கிதை யென்னும் வேதபாகம்.

ப்ரஹ்மா விஷ்ணு ரஜஸா பத்த வைரௌ மத்யேதயோ த்ரஸ்யதி ஜாத வேதா; ஸ்தாணு ருத்ரஸ் திஷ்டத் புரஸ்ய கோப்தாத்ருஷ்ட்வாஷ் தாணு முபரம்ய யுத்தம் ப்ரதஸ்த தார்ஞா மஸௌ திக்ஷ: வாரோ விஷ்ணுர் நிமஜ்ஜபூமௌ ப்ரஹ்மோத்பாத பூமேர் திவமாசக்ருத்ர.

அதர்வண வேதச் சாப உபநிடதம்.

யத்பாதாம் போருஹத் துவம் த்வம் ம்ருக்யதே விஷ்ணு நாது ஸ்ஸ்து, த்வாஸ்து துத்தியம் மஹேசாநம வாங் மாந ஸகோசரம், பக்தியா நீர்தரோ விஷ்ணௌ ப்ரசாத மகரோத விபு:

வில்லிபுத்தூரர் பாரதம்.

அருச்சுனன் றவநிலைச் சருக்கம்.

"ஓரேனத் தனைத்தேட வொளித்தருளு மிருபாதத்
தொருவனந்தப்
போரேனத் தனைத்தேடிக் கணங்களுடன்
புறப்பட்டான்"

"புள்ளுடைக் கொடியோ ரிருவருங் காணாப் புண்ணியன்" என்னும் இவற்றானும் பிறவற்றானும் கண்டுகொள்க. 17

வெய்யசூர்முதறடிந்தசெவ்வேற்கிறைதோன்றுஞ்
செய்யகண்ணுதலுறுவதுதிருமுதுகுன்றம்
வய்யமுய்யவண்காவிரிமலிபுனல்விளங்கச்
சய்யமாமுனிகும்பநீர்தருதிருச்சையம்.



இ-ள். கொடிய சூரபன்மன் முதலிய அசுரரைக் கொன்ற செவ்விய வேலாயுதத்திற்குத் தலைவராகிய பழநிப் பெருமான் தோன்றிய சிவந்த அக்கினி கண்ணையுடைய சிவபெருமான் வீற்றிருப்பது விருத்தாசலம், பூமியிலுள்ளார் உய்யும்படி வளப்பமுடைய காவிரியாற்றில் நிறைந்த நீர் விளங்குமாறு அகத்தியமுனிவர் தமது கமண்டல நீரைவிடுத்த இடமாகிய திருச்சைய மலையாகும். 18

தளவவாணகைச்சாம்பவிபருந்தவங்காணு
விளங்கியோர்புறம்பசப்பநல்கிறைவனின் றதுவெம்
பளகறுத்தசெஞ்சீறடிப்பன்னிருபுயத்துக்
குழகன்வீற்றிருப்பதுதிருக்குலவுசெங்கோடு.

இ-ள். முல்லை மலர்போன்ற வெள்ளிய பற்களையுடைய பார்வதி தேவியாரது அரியதவத்தைக் கண்டு மனமிரங்கி (தமது திருவுருவில்) ஓர்பாதி பசுமை நிறமாகும்படி (அவர்க்கு இடப்பாகத்தைக்) கொடுத்த சிவபெருமான் வீற்றிருப்பதும், (எமது) வெவ்விய வினைகளை நீக்கிய சிவந்த குறுகிய திருவடிகளையும் பன்னிரு திருப்புயங்களையு முடைய குமரப் பெருமான் எழுந்தருளியிருப்பதுமாக வுள்ளது அழகுவிளங்குந் திருச் செங்கோட்டு மலையாம்.

அம்புயத்திருமார்பனாராயணகிரிதண்
கொம்பரிற்பசுந்தேன்சொரிகுளிர்பொழிற்கொல்லி
யெம்பிரானருள்விளங் குமீங்கோய்மலையொன்று
மும்பர்போற்றுமாணிக்கமாமலையெனுமோங்கல்.

இ-ள். தாமரை மலரின்மேல் இருக்கின்ற இலக்குமி தங்கிய மார்பினையுடைய விட்டுணு மூர்த்தியின் நாராயணகிரியும், மிருதுவானகொம்

ன்கண் பசிய தேனைப்பொழியும் குளிர்ந்த சோலைகளையுடைய கொல்லி மலையும், எமது கடவுளாகிய சிவபெருமானது திருவருள் விளங்குகின்ற திருவீங்கோய் மலையும், எந்நாளுந் தேவர்கள் துதிக்கும் பெரிய மாணிக்க மலை யென்னு மலையும் உள்ளன. 20

அற்றவர்க்கருள்புரிதிருக்கற்குடியடுக்கல்
செற்றமுக்குறும்பினர்தொழுஞ்சிராமலைச்சிகரி
கற்றையஞ்சடைக்கடவுடன்றுதைநற்செவியிற்
சொற்றதூமொழித்தேசிகன்சுவாமிமால்வரையால்.

இ-ள். ஆன்ம போதம் அற்றவர்க்குத் திருவருளைச் செய்யுந் திருக்கற்குடிமலையும், மூக்குற்றங்களையும் நீக்கிய அடியவராற் றொழப்படுந் திரிசிராமலையும், அழகியசடைத் தொகுதியையுடைய கடவுளாகிய தமது தந்தையான சிவபெருமானது திருச்செவியினிடத்து, சுத்தமாகிய பிரணவப் பொருளை யுபதேசித்த குருபரனது பெரிய சுவாமிமலையும் உள்ளன. 21

எருக்கைவேணியனிடத்திளங்குமரவேளிருக்கும்
வருக்கைதுன்றுகுன்றக்குடிவரைமலர்த்தருவி
னிருக்கைமன்னவனிபமகளிளமுலைமுயங்கித்
திருக்கைவேற்கிறையிருப்பதுதிருப்பரங்குன்றம்.

இ-ள். எருக்கம்பூ மாலையணிந்த சடையையுடைய சிவபெருமானிடத்தில் அழகிய குமாரப் பெருமானும் இருந்தருளும் பலாமரங்கள் நெருங்கியுள்ள குன்றக்குடி மலையுளது, பூக்கள் செறிந்த ஐந்தருநீழலில் வசிக்கும் இந்திரனது குமாரியாகிய தெய்வயானை யம்மையாரது இளமைபொருந்திய தனங்களை யணைந்து, திருக்கையின்கண் தரித்த வேலாயுதத்திற்குத் தலைவர் ஆகிய சண்முகக்கடவுள் அமர்வது திருப்பரங்குன்றமாகும்



கண்ணோராயிரமேற்கொடுகாண்பரிதாமெம்
மண்ணலாறுரையினுதித்தகண்ணாறிரண்டுடையோன்
விண்ணறாதகார்மேனியன்வீற்றிருப்பதுபூந்
தண்ணறாவுமிழ்பழமுதிர்சோலைவேதண்டம்.

இ-ள். ஆயிரங் கண்கொண்டுங் காணுதற் கரிய எமது பரமசிவனது நெற்றிக் கண்களினின்றும் அவதரித்தருளிய பன்னிரு திருக்கண்களையுடைய வேலாயுத மூர்த்தியும், ஆகாயத்தினின்றும் நீங்காத மேகம் போன்ற திருமேனியையுடைய மாயவனும் பெருமையோடும் அமர்ந்த தலம் யாதெனில், பூவினின்றும் குளிர்ந்த தேனைப் பொழிகின்ற பழமுதிர் சோலை மலையாகும். 23

தாதுதூற்றுபூந்துணர்பொதுளியகவிழ்தலைச்சூர்ச்
சூதமோர்நொடிகூறிடுஞ்சுடர்மணிவேலோன்
சீதவார்பொழிலுடுத்தமூதூர்த்திருச்செந்தூ
ரோதநீரலைவாயிலோர்கந்தவெற்புளதால்.

இ-ள். மகரந்தத்தை யுதிர்க்கின்ற புட்பக் கொத்துக்கள் நெருங்கிய கவிழ்ந்த தலையையுடைய சூரபன்மனாகிய மாமரத்தை ஒரு கணப்பொழுதுட் பிளந்த ஒளிபொருந்திய அழகிய வேலாயுதத்தை யேந்திய முருகக் கடவுள் எழுந்தருளியிருக்கின்ற. குளிர்மையுடைய நீண்ட சோலைகளாற் சூழப்பட்ட பழைய ஊராகிய திரைகொண்ட நீர்நிறைந்த கடற்கரையினுள்ள திருச்செந்தூரிலும் ஒருமலையுளது.

சூரபன்மன் போர்க்களம் விடுத்துக் கடலிடைத் தலைகவிழ் மாமரமாய் நிற்க, அதனை வேல் செலுத்தியோர் கணத்துட் பிளந்தனர் என்பது சரித்திரம். 24

சாம்புவிக்கொருதலைவனதடிமலர்ச்சார்பின்
மேம்படும்பெருந்தவம்புரிகுறுமுனிமேவுந்

தேம்பொதிந்தசந்தனமணந்தமிழொடுந்திளைத்துப்
பூம்பொதும்பரிற்றைறவருந்தென்றலம்பொதியம்.

இ-ள். உமா தேவியார்க்கு ஒருநாயகரான சிவபெருமானது திருவடி மலர்களையடைவது குறித்து மேம்பட்ட பெரியதவத்தைச் செய்யும் அகத்திய முனிவர் இருக்கின்ற, இனிமைமிக்க சந்தனமணம் தமிழோடுங் கலந்து பொலிவாகிய சோலைகளிற் றடவிச்செல்லுந் தென்றற்காற்று விளங்கும் பொதிய மலையுமுண்டு.

சம்புவின் மனைவி - சாம்பவி. அங்குட்ட வளவினதாகிய உருவுடையராதல் பற்றிக் குறுமுனி யென்ப. 25

நெருக்குறும்பல்முனிவருமமரருநேர்நின்
றிருக்குறும்பலகலைகளாலேத்திவீழ்ந்திறைஞ்ச
மருக்குறும்பல்வளைத்தளிர்க்கரத்தளோர்வாமன்
திருக்குறும்பலவுருக்கொளுந்திரிகூடாசலமே.

இ-ள். நெருக்கமுற்ற பல இருடியர்களுந் தேவர்களும் முன் நின்று உறுதிப்பொரு ளிருக்கப்பெற்ற பலகலைகளாற் றுதித்து வணங்குகின்ற, பக்கத்தில் இருக்கின்ற, பல வளையல்களைத் தரித்த தளிர்போன்ற கரத்தினையுடைய பார்வதி தேவியாரும் ஒப்பற்ற அழகினராகிய சிவபெருமானும் அழகிய குறும்பலா வுருவங்கொண்டு விளங்குந் திரிகூடாசலமுமுளது. 26

கலி விருத்தம்.

செங்கதிர்மணிமுடிச்சேரலன்றிகழ்
கொங்குநன்னாட்டிடைக்கொன்றைவார்சடைப்
புங்கவன்குமரவேளுறையும்புண்ணியத்
துங்கவெற்புளசிலசொல்லுவாமரோ.



இ-ள். சிவந்த ஒளிபொருந்திய இரத்தினங்கள் குயிற்றிச்செய்த கிரீடத்தைத் தரித்த சேராசன் விளங்குகின்ற நல்ல கொங்கு நாட்டிலே கொன்றை மாலையைத் தரித்த நீண்ட சடையையுடைய சிவபெருமானும் குமாரக்கடவுளும் வீற்றிருக்கும் உயர்வுடைய புண்ணியமலைகளு மிருக்கின்றன. அவற்றுட் சிலவற்றையுஞ் சொல்லுவாம். 27

மழைதவழ்வஞ்சியாரணியத்தும்பரும்
விழைபொருடருவதுவெண்ணைமால்வரை
தழைத்தருகாசையுற்றவங்குசங்கவெண்
குழையினனுறைவதுகொடுமுடிக்கிரி.

இ-ள். மேகங்கள் தவழுகின்ற வஞ்சியாரணியத்திலே தேவர்களும் விரும்புகின்ற பொருளைத் தருவது பெரிய திருவெண்ணைமலையாகும். வயல்கள் பொருந்திய காசைநகரத்தில் விளங்குகின்ற வெள்ளிய சங்கக் குண்டலத்தையுடைய சிவபெருமான் இருப்பது கொடுமுடி மலையாகும்.

கைதவமிரியுமாகருதிநன்னரின்
மொய்தவம்புரிகுறுமுனிநெடுங்கிரி
வைகதிர்வேலினன்மருதமாமலை
செய்தவர்வணங்குதென்சேரியத்திரி.

இ-ள். வஞ்சனைகள் அகலும் விதத்தை நினைத்து, நன்மையுடன் நெருங்கிய தவத்தைச் செய்கின்ற அகத்திய முனிவரது நீண்ட மலையும், தரித்த ஒளியைக்கொண்ட வேலாயுதத்தையுடைய குமாரக்கடவுளது பெரிய மருதமலையும், தவஞ்செய்கின்றவர் வழிபடும் தென்சேரிக்கண் அத்திரிமலையும் உள்ளன. 29

தொல்விடைப்பாகர்பேரூரின்சூழலின்
வில்கெழுமணிமுடிவெள்ளியங்கிரி

கவ்வெழினான்முகனகிரம்பூந்துழாய்
மல்லலந்தொடைப்புயல்வண்ணன்மால்வரை.

இ-ள். பெரிய இடபவாகனத்தை நடத்துகின்ற பேரூர்நகரத்தில், ஒளிபொருந்திய அழகிய சிகரங்களையுடைய வெள்ளிமலையும், சிறந்த அழகுடைய நான்கு முகங்களுடைய பிரமமலையும், பொலிவாகிய வளப்ப முடைய துழாய்மாலையைத் தரித்த மேகமேனியரான திருமால் மலையும் இருக்கின்றன. 30

கோலநன்மணிமுடிகுலவிமார்பின்முந்
நூலணிந்துலகெலா நுகர்ந்துநின்றமால்
போலகல்விசும்பொரீஇப்பொலிவுகொண்டதோர்
மாலைவெள்ளருவிதாழ்வராகமாகிரி.

இ-ள். அழகுபொருந்திய சிறந்த இரத்தினகிரீடந்தரித்து, மார்பினிடத்தே உபவீதத்தையணிந்து உலகமெல்லாவற்றையும் உண்டு நின்ற திருமால் ஆனவர் அகன்ற ஆகாயத்தை விட்டு இறங்கிவந்தாற்போன்ற பொலிவையுடைத்தாய வரிசையான வெள்ளிய அருவிதூங்குகின்ற பெரிய வராகமலையுளது. 31

ஆயதோர்கிரியுதக்கடுத்தசாரலின்
மாயவசைலமொன்றுண்டுவாயுதிக்
கேயநாற்குரோசமென்றிசைக்குமாயிடைத்
தூயவெள்ளோதிமன்சுரும்பொன்றுண்டரோ.

இ-ள். அவ்வாறாய வராகமலைக்குத் தெற்கின்கணுள்ள பாகத்தில் விஷ்ணுமலை யொன்றுளது. வாயுதிசையாகிய வடமேற்கில் நாற்குரோச தூரமென்று சொல்லுமிடத்தில், சுத்தமாகிய வெள்ளிய பிரமனது மலை யொன்றுளது.



மாயவன் - கருநிறத்தை யுடையவன். குரோசம் - கூப்பிடுதூரம். ஆயிடை என்பது வழியசை புணர்ந்த சொற்சீரடி. அ - இடை என்பன ஆயிடையெனப் புணர்ந்தன. "வடவேங்கடந் தென்குமரி - ஆயிடைத் தமிழ்கூறுநல் லுலகத்து" எனத் தொல்காப்பியப்பாயிரச் சூத்திரத்தும் வந்தமையுணர்க. சுரும்பு - மலையின் பரியாயப்பெயர். 32

உரைத்தகேழலங்கிரிக்குதக்கிணாண்மலர்
விரைத்தடந்தாமரைப்பொகுட்டுவேதியன்
வரைத்தலமதன்குணபாலின்மாமறைச்
சிரத்துறைசிவனுருச்சிலம்பொன்றுண்டரோ.

இ-ள். சொல்லப்பட்ட வராகமலைக்குத் தெற்கின்கண் அழகிய பூவினையுடைய வாசனைபொருந்திய பெரியதாமரைக் கொட்டையின்மே லிருக்கின்ற பிரமனது மலைக்குக் கிழக்குத்திசையில் பெரிய வேதசிரசின்கணிருக்குஞ் சிவபெருமானுடைய திருவுருவமான மலையொன்றுளது. 33
அரோ - அசை.

தொன்னெடுநாளினிற்சுருதிவேதிய
னன்னரின்வகுத்தனநகிரமியாவினுந்
தன்னிகரில்லதுசத்தியென்றொரு
மின்னிகர்வரையொடுமிளிர்ந்துமேயது.

இ-ள். பழைய முற்காலத்தில் வேதத்தில்வல்ல பிரமதேவன், நன்மையாகச் சிருட்டிசெய்த மலைகள் யாவற்றினும் தனக்கு வேறொன்று மொப்பில்லாதது, சத்தியென்று சொல்லப்படுகின்ற ஒரு மின்னலையொத்த மலையோடு விளங்கியிருந்தது. 34

புவனிவிண்ணளக்கரும்பொலிவுகொண்டுமா
தவர்புகழ்சத்தியோரிடந்தரித்தொரீஇ

நவைதவிர்குமரவேளடுவண்வைகலாற்
சிவமலைசிவனையேசிவணிநின்றது.

இ-ள். பூமியினுள்ளவர்களாலும் ஆகாயத்தி லுள்ளவர்களாலும் அளந்தறிதற்கரிய பொலிவைக்கொண்டு, பெரியதவத்தையுடைய முனிவரால் புகழப்படுகின்ற சத்திமலையையுந் தன்பக்கத்திற்கொண்டு, குற்றங்களை (அநாதியே) விட்டுநீங்கிய குமாரக்கடவுள் நடுவிடத்தேயிருத்தலாற் சிவமலையென்னும் அந்தமலை சிவபெருமானையே போன்று நின்றது. 35

மஞ்சிளமதிநதிவளைந்துமாமறை
யஞ்சனுமனமுறவானமீதுறீஇ
யெஞ்சலிற்சேயொளியிலங்கலாற்சிவ
னஞ்சடைகடுப்பதுதிகழ்சிவாசலம்.

இ-ள். இன்னும் விளங்காநின்ற அச்சிவமலை எத்தன்மையதென்னில், மேகத்திற் சஞ்சரிக்கும் பாலசந்திரனையும் கங்கையாற்றையுந் தரித்து, பெரியவேதங்களில் வல்லபிரமனும் அன்னத்திற்பொருந்த, ஆகாயத்தின் மேற்சென்று வளர்தலாலும், சிவந்த ஒளிவிளங்கலாலும், சிவபெருமானது அழகிய கபர்த்தமென்னுஞ் சடைமுடியையு மொத்து நிற்பதாகும்.

மஞ்சு—மேகம். அஞ்சன் — அன்னவாகன முடையவன். அஞ்சம்—அன்னம். ஹம்சம் என்னும் வடமொழி அஞ்சம் என்றாயிற்று. அனம்—அன்னம். 36

மையறுமெரியொளிமணிவிளங்கிவான்
வெய்யவனுடுபதிமிளிர்கண்மேன்மரீஇத்
துய்யசெவ்வேற்கிறைதோன்றலாற்சிவன்
செய்யகண்ணனையதுதிகழ்சிவாசலம்.



இ-ள். பழநித் தலத்து விளங்காநின்ற சிவமலையானது, குற்றமற்ற அக்கினியும், ஒளிபொருந்திய மணியும் (இரத்தினங்களும்) விளங்கப் பெற்று, சிறந்த சூரியனும் சந்திரனும் விளங்குந் தன்னிடத்தில் மருவப் பெற்று, சுத்தமாகிய வேலாயுதத்திற்குத் தலைவராகிய சுப்பிரமணியக் கடவுளுந்தோன்ற நிற்றலினால், சிவபெருமானது சிவந்த நெற்றிக்கண்ணையும் போல்வது. சிவ-அசலம்—சிவமாகிய மலை. அசலம்—அசைதலில்லாதது.

நெற்றிக் கண் அக்கினியாதலின் "மையறுமெரி" என்றும், கண்ணின் இடத்துக் கருமணி யிருத்தலால் "ஒளிமணிவிளங்கி" என்றும், சூரியனாகிய வலக்கண்ணிற்கும், சந்திரனாகிய இடக்கண்ணிற்கும் மேலே யிருப்பது "அக்கினிக்கண்ணாதலால்" வான் வெய்யவனுடுபதி மிளிர்கண் மேன் மரீஇ" என்றும், குமாரசுவாமி நெற்றிக்கண்ணிடத்தினின் றுந் திருவவதாரஞ்செய்தலின் "வேற்கிறை தோன்றலால்" எனவுங் கூறினர். மரீஇ—மருவி. சொல்லிசை யளபெடை. 37

குருநிறமணிவனத்தோடுகுண்டல
மருவிமுச்சுடர்நெடுங்கண்வயங்கிவா
னருணதியருவிதந்தருளலாலரன்
றிருமுகநிகர்வதுதிகழ்சிவாசலம்.

இ-ள். பொன்னிறமும் இரத்தினங்களும், காடுகளுடனே சுனைகளும் போதுமானவைபொருந்தி, சூரியன் சந்திரன் அக்கினி என்னுந் திரிசுடர்களும் நீண்ட தன்னிடத்தில் விளங்கப்பெற்று, ஆகாயகங்கையாகிய அருள்பொருந்திய ஆற்றின் அருவியைக் கொடுத்து நிற்றலினால் சிவனது திருமுகத்தை நிகர்ப்பதாகும்.

குண்டு—அலம் எனக் கொள்க. அலம் போதுமான அளவு. பிராசமெனலுமாம். அரன் — பாசங்களையகற்றுவோன். "உயிர்க்குண்

"மலமொடுக்கலாலே யுயிர்க்கு - ளுயிர்க்கு மானெனும்பேருண்டு" என்னுஞ் சைவசமயநெறித் திருக்குறளா னுணர்க.

சிவபெருமானது திருமுகத்திற்கு உரைக்குங்கால், வெள்ளிய நிறத்தினையுடைய இரத்தினங்கள் குயிற்றப்பட்ட அழகிய தோடும், குண்டலங்களும் பொருந்தி, திரிசுடர்களாகிய முக்கண்களும் விளங்கி, ஆகாய கங்கையையும் உண்டாக்கி யருளுஞ் சிவம் என்க.

சிவபெருமானது திருக்கண்களை ஓர் திருவிளையாட்டினிமித்தம் உமையம்மையார் திருக்கைகளால்மூட உலகமெல்லாம் இருளாயிற்று. அதுகண்டு இறைவன் நெற்றியில் ஓர் திருவிழியைத் திறந்து ஒளிசெய்தான். அதனால் மிகப் பயமடைந்த இறைவிகையினை யெடுக்க, அக்கைகளின் விரல்களினின்றும் சிந்திய வியர்வைத்துளிகள் கங்கையாகப் பெருகி உலகமெங்கும் பரந்துவருதல் கண்டு, பரமன் அதனைத் தஞ்சடையிற் றிவலையாக்கிச் சூடினர். இக்காரணம்பற்றி "அருணதி யருவிதந்தருளலால்" என்றார். 38

அக்கிரியடைகுநர்க்கருள்சுரந்துவெங்
கைக்கிரியுரியினனினியகாதலன்
கொக்கிரிதரவுயிர்குடித்தவேலினான்
மைக்கிரிவண்ணமான் மருகன் வைகுமே.

இ-ள். அந்த மலையையடைந்து பூசிப்பவர்க்கு, திருவருளைப் பெருகவளித்து, கொடியகைம்மலையாகிய யானைத்தோலையுடைய சிவபெருமானது இனிய குமாரரும், (சூரபன்மனென) மாமரம் உலைவுறும்படி அதனுயிரைப் பருகிய வேலாயுதத்தை யுடையவரும், கருமலைபோன்ற திருமேனியையுடைய விட்டுணுவின் மருகருமாகிய சுப்பிரமணியப்பெருமான் எழுந்தருளியிருக்கும். 39

ஆங்கொருசார்திருவாவினன்குடிப்,
பாங்கர்முற்கூறுதொல்பதியவாணிகோற்



றோங்குகூவிளவனமோதில்லன்றியுங்
கோங்குநீள்வனமதொன்றுளதுகூறினேம்.

இ-ள். அச்சிவமலைக்கு ஓர்பக்கத்திலே முற்சொல்லப்பட்ட திருவாவினன்குடி யென்னுந் தலமுளது, அதுவே பழைய திருத்தலமாகும். அதன்பக்கத்து உமாதேவியார் தவஞ்செய்துயர்ந்த கூவிள வனமும், சொல்லுமிடத்து நீண்ட கோங்கவனம் என்னுந்தலமும் உளதென்பதுஞ் சொன்னேம். 40

பேறுநல்கவற்றுளபெருமையாவையுங்
கூறுதுநமக்குமேற்கோலமால்வரை
மாறில்சீர்வளம்பலவுள்ளவருக்கதி
ஈறின்மாதவிர்சிலவிளம்புவாமரோ.

இ-ள். முடிவில்லாத தவத்தையுடைய முனிவர்களே! பெரும்பேற்றை யளிக்கும் அத்தலங்களின் பெருமைகள் எல்லாவற்றையும் நமக்குப் பின்னர்ச் சொல்லுதும். பெருமை பொருந்திய வராகமலையினிடத்து ஒப்பில்லாத சிறப்பும் வளப்பங்களும் பலவுள்ளன. அவற்றையெல்லாஞ் சொல்லுதல் இயலாது, சிலவற்றைமாத்திரங் கூறுகின்றேம். கேட்பீராகவென்று சூதமுனிவர் சொல்வாராயினர். 41

கிரிச் சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம்—79.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

இரண்டாவது.

# வராககிரிச் சருக்கம்.

கலி விருத்தம்.

மின்றிகழ்வேணியும்வென்றிவேலனு
மென்றுமுவைகியவெழிலேனவெற்பையோர்
குன்றொடுசிவணியேகூறற்பாலதோ
தென்றிசைபிரசதசிகரியென்பவே.

இ-ள். மின்னலைப்போல விளங்குஞ் சடையையுடைய சிவபெருமானும் வெற்றி வேலாயுதப் பெருமானும் எந்நாளும் வீற்றிருக்கின்ற வராககிரியை, வேறோர் மலையுடனே பொருத்திச்சொல்லும் பான்மைத்தோ? தெற்குத் திசைக்கணுள்ள வெள்ளியங்கிரியென்றே புலவர் கூறுவர்.

வேணியன் வேணி எனவிகுதி விகாரப்பட்டு நின்றது இஃது அறியார் சினையாகு பெயரெனக் கொள்ப. 1

உருவெழுதருமையினுயர்ந்துபூசுரர்
பொருள்வழிபயிலுறும்புனிதநல்கிவா
னிருநிலநிலைபெறுமிசைவிளங்கலா
லருமறைப்பொருளொடவ்வசலமொத்ததே.

இ-ள். தனது வடிவத்தை யெழுதற் கியலாத தன்மையி னுயர்வுற்று, அந்தணர்கள் தன்பொருளிடத்தே பயிற்சிசெய்யுந்தோறும்



பரிசுத்தத்தைக் கொடுத்து, மேலுலகத்தும் பூமியாகிய வுலகத்தும் நிலைபெறும்படி புகழ் விளங்குதலால் அரியவேதப் பொருளுடன் அம்மலையு மொப்பாய் விளங்கியது. 2

செய்யசெம்பொன்னிறந்திணிந்தகன்றுநீண்
டய்யவைமுதலதந்தசைதலின்றியே
வெய்யவெம்பாந்தண்மேல்விளங்கியேய்தலால்
வய்யகநிகர்வதுவராகமால்வரை.

இ-ள். அழகிய சிவந்த பொன்னிறத்துடன் திண்மையுற்று, பருத்து நீண்டு அழகிய வைமுதலிய தானியங்களையும் பொருள்களையு மளித்து, அசைவின்றி, கொடிய சர்ப்பங்கள்மேல் இலங்கி யிருத்தலால் பூமியை நிகர்ப்பது அப்பெரிய வராகமலை.

ஐம்பூதங்களையும் ஒத்திருக்கிறது வராகமலையென்று கூறவந்த நூலாசிரியர் முதலிற் பிருதிவியை யொத்ததென்று கூறினர். பிருதிவிபொன்னிறமுந் திண்மையும் அகலமும் நீளமும் வைமுதலியதாலும் அசைவின்மையும் அட்டநாகங்களின் மீதும் இருத்தலால் மலைக்கு உவமையாயிற்று. வை - மலை நெல், தானியம். 3

எரிறாலலவன்வான் மீனினஞ்செறி
காரறல்சிறுபுனவனங்கலந்தெழு
பேர்வளங்கொண்டுதண்டலைபிறங்கலால்
வார்புனனேர்வதுவராகமால்வரை.

இ-ள். அழகிய தேன்கூடு, சந்திரன், நட்சத்திரக் கூட்டங்கள் நெருங்கிய கரியமணல், சிறிய தினைப்புனமுள்ள காடுகளுங் கலக்கப் பெற்று, பொருந்திய பெரிய வளங்களையுமுற்று, சோலைகளையுங்கொண்டு விளங்கலால், நீண்ட நீரையொப்பது பெரிய வராகமலையாகும்.

நீருக்கு உரைக்குமிடத்து, அழகிய இறால்மீன், நண்டு, வாலையுடைய வேறு மீன்கூட்டங்கள், நெருங்கிய கருமணல், விரும்பத்தக்க

அன்னப் பறவைகள் என்னும் இவை கலந்திருக்கப்பெற்று, வழுவென்னன் மாவை யொத்த வனங்களைக் கொண்டு குளிர்ந்த இடம் விளங்கும் புது என்க. இதனால் அப்பு பூதத்தையுவமித்தார். 4

அறுதொழிலினரிடமாதலால்வரைக்
கூறுமுதிரையனமுட்கோடலாலுள
மறுவிலகுறமனைவழங்கலால்வினை
தெறுமெரிபுரைவதுசிகரமால்வரை.

இ-ள். கொடுமுடிகளை யுடையபெரிய வராகமலையானது, அற்ற தொழிலையுடைய முனிவர் வசித்தலாலும், மேலெழுந்து மிகுந்த கூலவு ணவுகளை யுட்கொள்ளலாலும், உள்ளே தெருக்கள் விளங்கும்படி வீடுக ளைக் கொடுத்தலாலும், இருவினைகளையு மழிக்கின்ற அக்கினியையுமொப் பதாகும்.

அறு தொழிலினர்—கொலைத்தொழில் செய்யும் வேடர் ; ஆறுதொ ழில்களையுடைய பிராமணர் முதலியோர். கூலம் ஆவன—நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி, எள்ளு, கொள்ளு, பயறு, உழுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை என் னும் பதினாறுமாம்.

"நெல்லும் புல்லு வரகுதினை சாமை
யிறுங்கு தோரை யிராகியெண் கூலம்."
எள்ளுக் கொள்ளுப் பயறுழுந் தவரை
கடலை துவரைமொச்சை யென்றாங்
குடனிவை முதிரைக் கூலந் தனவே,

கூலம் பதினெட்டுவகைத் தென்பாருமுளர். அதனை, "அந்தணர் வேள்வியோ டருமறை முற்றுக - வேந்தன் வேள்வியோடியாண்டு பல வாழ்க - வாணிக ரருநெறி நீணிதி தழைக்க - பதினெண் கூலமு முழ வர்க்கு மிகுக" என்றார் கூத்தநூலார் ஆகிய மதிவாணர் நாடக ஆசி



யரும். அக்கினிக்கு உரைக்கு மிடத்து, ஆறுதொழில்களையுடைய பிரா மணரிடத்து விளங்கலும், முதிரையுணவு கொள்ளுதலும், உள்ளே மது விளங்கு மண்டபம்மழைக்கலும் எரிக்காம் என்க. 5

சேயுயர்விசும்புபார்செறுமிடைத்தலை
லாயபல்லுடற்குயிராயளித்தலா
லோய்வருதிருகுகோட்டுமலையூர்தலால்
வாயுவைநிகர்வதுவராகமால்வரை.

இ-ள். மிகவுமுயர்ந்த ஆகாயம் பூமியென்னு மிவற்றில் நெருங்கி யுயர்ந்து நிற்றலாலும், தகுந்த பலசரீரங்களுக்கும் உயிராய் நன்மையைக் கொடுத்தலாலும், ஓய்தலில்லாத முறுகிய கொம்புகளையுடையமான்மேற் செல்லுதலாலும், வாயுவையொப்பது, அவ்வராகமலையாகும். 6

கந்தரநிரைநிரைகவினிக்கங்கைநீர்
சுந்தரமுறதனிதோன்றிவானவ
ரிந்திரன்முதலியபதங்களேய்தலா
லந்தரமனையதவ்வணிகொண்மால்வரை.

இ-ள். மேகக் கூட்டங்கள் வரிசையாக மொய்த்து, கங்கைநீரானது அழகாகமிகவு முற்பவித்து, தேவர்கள் இந்திரன் முதலியோரது பதங் கள் பொருந்துதலால் அழகிய அந்தப்பெரிய மலையானது ஆகாயத்தை நிகர்த்தது. 7

கொண்டல்போழ்கச்சென்மருங்கிற்கொண்டது
கண்டவர்கண்கவர்காட்சித்தாயது
புண்டகன்முடிமிசைமுடிவின்றுதலா
லெண்டருகதிக்கொருவேணியென்பவே.

இ-ள். மேகங்களை அழகிய கச்சினைப்போல இடையிற் கொண்டுள்ளது, தரிசித்தவர்களது கண்களைக் கொள்ளை கொள்ளும் தோற்றத்தையுடையது, பிரமன் இறந்தாலும் தான் அழியாமல்நிற்பது, மதிக்கத்தகுந்த உயர்ச்சிக்கு ஒரு எணியைப் போன்றதென்று கூறுவர் புலவர்.

"எண்டரு கதிர்க் கொருகேணி யென்பவே - என்னும் பாடம் அத்துணைச் சிறப்பன்று.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

முத்தொழிலினர்பெறுமெழிலுருவரசு
முதலறம்புகன்றதொன்மரமுங்
கத்திகைமலர்ப்பூங்கடுக்கையுந்திருச்செங்
காட்டிடைவீற்றிருந்ததாதகியு
மொத்தசிந்தையராய்ப்பதினொருகோடி
யுருத்திரர்வழிபடுமருது
மத்திநீள்வனவெண்ணாவலுங்கூட
லணிநகர்விளங்குபூங்கடம்பும்.

இ-ள். படைத்தல், காத்தல், அழித்தல் என்னு மூன்று தொழில்களையுமுடைய பிரமன் விட்டுணு உருத்திரன் என்னு மும்மூர்த்திகளின் பெரிய அழகுபொருந்திய வடிவமெனப் படும் அரசமரமும், முதன்மையான சிவஞான போதத்தைப் புகலுதற் கிடமாய ஆலமரமும், மாலைபோன்ற மலரையுடைய பொலிவாகிய கொன்றை மரமும், திருச் செங்காட்டிலே (சிவபெருமான்) வீற்றிருந்தருளும் ஆத்திமரமும், ஒத்த மனமுடையராய்ப் பதினொருகோடி யுருத்திரர்கள் வழிபடும் மருத மரமும், நீண்ட திருவானைக் காவிலுள்ள வெள்ளை நாவலும், அழகிய மதுரைப் பதியிலுள்ள பொலிவாகிய கடம்பமரமும். 9



ஒற்றியூர்மகிழுங்கற்பினையொருவர்க்
குதவுமூர்மருவுபாதிரியு
நற்றவர்கலையார்நயந்தருங்குரவு
நலங்கொழுபராய்த்துறைப்பராய
சற்குருவெனச் சங்கரனுறைகுருந்துஞ்
சம்புவையீன்றபைங்கழையும்
பொற்குறும்பலவுஞ் சண்பகாடவியும்
பொதியமேற்சந்தனாடவியும்.

இ-ள். திருவொற்றி யூர்க்கணுள்ள மகிழமரமும், கருங்கல்லைத்தெப்பமாகக் கொடுத்த திருப்பாதிரிப் புலியூர்க்கணுள்ள பாதிரிமரமும், நல்ல தவத்தினரும் கலைஞானங்களையுடையவரும் விரும்பிய குங்கிலியமும், நன்மைபொருந்திய திருப்பராய்த்துறையின்கணுள்ள பராய்மரமும், சற்குருவாகச் சிவபெருமான் எழுந்தருளியிருந்த குருந்தமரமும், சிவபெருமானைத் தோற்றுவித்த பசிய மூங்கிலும், அழகிய குறும்பலாவும், சண்பகக்காடும், பொதிய மலைக்கணுள்ள சந்தனவனமும். 10

மன்கருவூர்நீர்வஞ்சியுங்கரையூர்
வன்னியும்பொன்னிசூழ்கண்ணுத்
தென்பதியதனுள்வதரியும்பேரூர்ச்
சித்தமூலியுந்திகழ்கினு
முன்புகாஞ்சியினிற்காஞ்சிநுண்மருங்கு
முதல்வினோற்றிருந்தமேமாவும்
மின்பவள்கண்ணிசாரநீள்வனத்திற்
பெருந்தவம்புரிந்தகூவிளமும்.

இ-ள். நிலைபெற்ற கருவூர்க்கணுள்ள குணமுள்ள வஞ்சியும், தருமகரையூரினுள்ள வன்னிமரமும், காவிரிசுற்றியிருக்குந் தென்பதிக்க

ளுள்ள இலந்தைமரமும், மேலைச் சிதம்பர மென்னுந் தலக்கணுள்ள சித்தமூலியும் விளங்குகின்ற புளியும், முதன்மை பொருந்திய காஞ்சித் தலத்திருக்குங் காஞ்சியணிந்த சிறிய இடையையுடைய இறைவி தவஞ் செய்திருந்த இனிய மாமரமும், நீண்ட கோங்கவனத்திற் பெரிய தவத் தைச்செய்த வில்வமும். 11

மாமணிக்கதிர்வேன் முருகனதுருவா
லரிச்சினைவேங்கையும்பூந்தண்
டேமலர்த்திரடோட்செச்சையுஞ்செங்கேழ்க்
கோடலுஞ்செழுமலர்க்குறவுந்
தாமவேணியன்றனன்பினர்போலுந்
தண்ணிழற்காஞ்சியுமுதல
காமருதெய்வத்தருக்களுமகவான்
கற்பகவனங்களுநெருங்கும்.

இ-ள். சிறந்த அழகிய ஒளிபொருந்திய வேலாயுதத்தைத் தரித்த அந்தக்கடவுளின் உருவாகிய சுத்தமான பொன்போன்ற கொம்பர்களையு டைய வேங்கைமரமும், பொலிவாகிய தண்ணிய வாசனை பொருந்திய புட்பங்களையுடைய வெட்சியும், சிவந்தநிறத்தை யுடைய காந்தளும், செழிய (முருகன் திருப்புயத்தணிந்த) மலர்கள் கொண்ட குராமரமும், கொன்றைமாலையைத் தரித்த சடையையுடைய சிவபெருமானது அன்பி னர்போலும் தண்ணிய ஒளியையுடைய காஞ்சிமரமும், இவைமுதலாய அழகு பொருந்திய தெய்வத்தன்மையை யுடைய மரங்களும் இந்திரனது கற்பகச்சோலைகளும் நெருங்கா நிற்கும். 12

அன்றியும்பசுங்காய்த்தாற்றிளங்கமுகு
மகருவமரிதகிச்செறிவுந்
துன்றுமுப்புடைக்காய்த்தாழையுங்குருக்குந்
துருக்கமுமிரவெரிதருவு



மின்றவழ்சினைகெட்டாயுமாசினியும்
விளவுமாமலகமுமுருக்கும்
பொன்றரும்பலாசுவதிங்கமும்புன்கும்
புன்னையுஞ்சாதியுமதவும்.

இ-ள். இவையல்லாமல், பசிய காய்கள் பொருந்திய குலைகளையு டைய இளங்கமுக மரங்களும், அகில்மரங்களும், கடுக்காய் மரக்காடுகளும், நெருங்கிய மூன்று பக்கங்களையுடைய காய்கள் நெருங்கிய தாழை மரங்க ளும், வடலி முதலியன வடர்ந்த தோப்புக்களும், குங்கும மரங்களும், சோதி விருக்கமும், ஒளிவிளங்கிய கொம்பரையுடைய காம்புகள்கொண்ட மலைமரமும், விளாமரங்களும் நெல்லியும் முருக்கமரங்களும் அழகுவிளங் கும் பலாசவிருட்சமும், அதிமதுரமும், புன்குமரங்களும், புன்னையும்சண் பகமும் அத்திமரமும். 13

சாலமுஞ்சிறுமாரோட்டமுந்தேருந்
தமாலமுங்கதலியுங்களவுங்
கோலமுங்காயத்திரியுமற்கடியுங்
குடசமுந்திலகமுமுனியு
மேலமுங்கோவிதாரமுமொடுவு
மிரத்தியுங்கனகமுந்தகரு
மூலமாயுளதாவரங்களுங்கொடியு
முண்டகாதிகளுமங்குளவாம்.

இ-ள். ஆச்சா மரமும் செங்கருங்காலியும் உண்ணுதற்குரிய பச் சிலை மரமும், வாழையின் களாமரமும் அழிஞ்சிலும் கருங்காலியும் மற்க டியும் மலைமல்லிகையும் மஞ்சாடியும் அகத்திமரமும், ஏலமும், காட்டாத் தியும் ஒடு என்னு மரமும் இத்திமரமும்பொன்னும் புன்முருக்கும் வேரா யுள்ள தாவரங்களும் கொடிகளும் முள்ளிச்செடி (அல்லது தாமரை) முத லியவைகளும் அம்மலைக்கணுள்ளனவாம். 14

தைத்தவத்திரஞ்சத்திரந்தணித்திடு
சல்லியகரணியுந்துணியாக்
கைத்தனசந்துபுரைந்தசந்தான
கரணியுமிரணமுந்தழும்பு
மொய்த்தனநீவித்தகைமைசெய்சமான
கரணியுமுடிந்தபல்லுயிரு
மெய்த்தொகைதோறும்வந்துயிர்ப்பனபுரியு
மிரதசஞ்சீவினிமருந்தும்.

இ-ள். அத்திமரங்களுஞ் சத்திரங்களுந் தைத்ததனு லுண்டாகிய புண்களை மாற்றும் மருந்தாகிய சல்லிய கரணியும், துணிபட்ட உறுப்புக்களைப் பொருத்தும் மருந்தாகிய சந்தானகரணியும், விரணங்களையுந் தழும்புகளையுமுடைய உறுப்புக்களிற் றடவிச் சமஞ்செய்யு மருந்தாகிய சமனிய கரணியுட்,* இறந்துபோன பல உயிர்களையும் உடம்புத் தொகுதிகடோறும் பொருத்தி யுயிர்பெறச்செய்யும் சுவை பொருந்திய சஞ்சீவினி மருந்தும்.

பிங்கலநிகண்டு மரப்பெயர் வகை

சல்லிய கரணி சந்தான கரணி
சமனிய கரணி முதலி லுதித்த
மிருதசஞ் சீவினி மருந்துநால் வகையே.

தைத்த வத்திரஞ் சத்திரந் தணிக்கு
மெய்த்தரு மருந்தே சல்லிய கரணி
துண்டமான வுறுப்புத் துணியினைச்
சந்துசெய் மருந்தே சந்தான கரணி
விரணமுந் தழும்பு நீக்கி மெய்யினைத்
தகைமைசெய் மருந்தே சமனிய கரணி
யுயிர்தரு மருந்தே மிருதசஞ் சீவினி.



விருத்தர்நல்லிளமையாவதுமிளைஞர்
விருத்தராவதும்புரிதக்க
தருக்களும்புகலும்வல்லியுமுதிர்ந்த
சருகுகல்லெனவலிபுனலுங்
கருத்தினினினைந்தவரந்தருமரிய
மூலியுங்காயமேவலியத்
திருத்துபன்மருந்துங்குருதியந்தடமு
முதலியதிகழ்வனசெறிந்தே.

இ-ள். கிழவர் நல்ல இளமைப் பருவத்தை யடைவதும், பாலியப் பருவமுடையவர் கிழவராவதும் செய்யத் தகுந்த மரங்களும், சொல்லப்பட்ட கொடிமருந்துகளும், உதிர்ந்த சருகுகளும் கல்லென வலிபெறத் தக்க நீரும், மனத்திலே நினைந்தவரங்களைக் கொடுக்கும் அரியமூலிகளும் சரீரம் வலிமையுறும்படி திருத்துகின்ற பலமருந்துகளும் இரத்தத் தடாகங்களும், இவைபோன்றன பிறவிசேடப் பொருள்களும் நெருங்கி (அம் 16
மலையில்) விளங்குவனவாகும்.

எழுசீரடிச் சந்தவிருத்தம்.

ஆயவரைமேல்விசயைகாரியவளூர்திக
ளுசாவிவிளையாடுமொருசார்
மாயன்விழிகூரணையும்வாகனமும்வேண்முருகன்
வாகனமுமேவுமொருசார்
தூயமதிவேணியுடையாயதும்வெள்ளேறுமுழை
குழுமெருறுமேயுமொருசார்
பேயபரன்மார்பணியும்வேழமுகனூர்தியும்
விராவியளைசேருமொருசார்.

இ-ள். இவ்வாறுள்ள வராகமலையின்மேல் காளி அரிகர புத்திரர் என்னு மிவர்து வாகனங்களாகிய சிங்கம் யானை யென்பனவொன்றற்கொன்று சுகங்களை வினவி ஒருபக்கத்தில் விளையாடுவன, திருமால் அறிதுயில் புரியும். பாம்பினங்களும் முருகக்கடவுள துவாகனமாகிய மயிலினங்களும் ஓரிடத்திற் கூடியிருப்பனவாகும், சுத்தமாகிய சந்திரனைத்தரித்த சடையையுடைய சிவபெருமானது உடையாயுள்ள புலியினங்களும் வெள்ளிய எருதுகளும் தாந்தாமிருக்கின்ற இடங்கடோறும் மேய்வன ஓரிடத்துள தாம். ஆன்மாக்கடோறும் பொருந்தியிருக்கின்ற சிவபெருமானது மார்பிற் றரிக்கப்பட்ட நாகங்களும். யானைமுக விநாயகக் கடவுள துவாகனமாகிய பெருச்சாளியினங்களும் ஒன்றோடொன்று கலந்து ஓரிடத்தே யோரளைக்குள் வசிக்கும். 17

ஆதவனடத்திரதமேழ்புரவிபூடுசெலு
மல்லததின்மீதுநடவாச்
சீதமதியார்புடைபகற்பொழுதினுவினின
மோடுசிவணித்திகழுமான்
மீதுசெறிசோலையில்விண்மீனின்நறுவொழுகு
வீயெனவிளங்கிவதியு
மாதவருநீடுகுறவாணருமகிழ்ந்தொருமை
கூறவனவாசமுயல்வார்.

இ-ள். சூரியன் செலுத்துகின்ற தேரிற் கட்டப்பட்ட குதிரைகளே ழும் (அம்மலையில்) நடுவே செல்லுவதன்றி அதன்மேற்சேறல் இல்லையாம். குளிர்ச்சிபொருந்திய சந்திரன் பகற்காலத்தே (அம்மலையின்) ஓர்பக்கத்தித பசுக்களினினங்களோடு ஒன்றாய்த் தோன்றுநிற்கும். மேலே யுயர்ந்தசோலையில் காணப்படும்நட்சத்திரக்கூட்டங்கள்தேனொழுகுகின்ற புட்பங்களைப்போலவிளங்கியிருக்கும், பெரியதவத்தையுடைய முனிவர்களும் நீண்டவேடர்களும் மகிழ்ச்சிகொண்டு ஒற்றுமை யதிகரிக்க வனத்தில் வாசஞ்செய்யப் பிரயத்தனிப்பார். 18



தானநிலைகாறுநறுமாமணிவராகநெடு
மாமுனிகடாம்வளர்தலாற்
கானமடவாரருகுசேர்வரரமாமகளிர்
காமர்சுனையாடவருவா
ரேனலிடியோவினிதிறுனறவமோவினிதி
யாமுமுணவேண்டுமெனவே
வானமுதைவாரிவிலைகூறியிடுவார்கவரு
வார்நுகருவார்தினமுமே.

இ-ள். நல்ல சிறந்த இரத்தினங்கள் பொருந்திய நீண்டபெரிய வராகமலை வளர்தலினால், காட்டிலுள்ளபெண்கள் (சுவர்க்கத்தின்) அருகை யடைவார், தேவமகளிர் அழகியசுனையின்கண்ணீராடவருவார், தினைமாவோ நல்லது, கூட்டிலுள்ள தேனோ நல்லது நாமுண்ண வேண்டுமென்று, சுவர்க்க லோகத்துள்ள அமிர்தத்தை (கையில்) வாரிவிலைகூறுவார் (தினை மாதேன்முதலியவற்றை) நாடோறும் கொள்ளையிடுவார் உண்பார். 19

வேறுநறுமாமணியினொரமணியீர்மறு
விளங்குகுருவிந்தமணிவீர்
கூறைபுனையீர்புனைகுவீர்தழைபொன்மாளிகை
குலாவியுறையீரிதனின்மீ
தேறுவிரெனுமணிபொனுடைசிலநல்லதிரு
வீரெனவிகழ்ந்துநகைகூர்
மாறில்குறமாதரையணங்கினரியற்கையரி
தென்றிவைவகுத்துரைசெய்வார்.

இ-ள். குற்றமுள்ளன குன்றிமணி தரிக்கும் குறத்திகளே, வேறு யுள்ள நல்ல சிறந்த இரத்தினமாலையை விதோதரியுங்கள், தழைகளைத்

தரிக்கும் நீங்கள் கூறையை யுடுப்பீராக, பாணின்மேலேறும் நீவிர் பொன்னாற்செய்த மாளிகைகளிலேறி யுலாவுவீராக என்று, இரத்தினங்களையும் பீதாம்பரங்களையும் மிகுதியாகக்கொடுத்து எம்வீட்டிற்கு வருவீராகவென்று விகழ்ச்சிசெய்து குறமுறுவல்பூத்த ஒப்பில்லாத குறப்பெண்களை, தேவமகளிர் அழைத்தும் (அவர் சொல்லாமையின்) இவை யிவரியற்கையாதலின் வருதல் அரிதென்று எடுத்துச் சொல்வார். 20

கொய்தினைநறுங்குரல்விழுங்கிளிவருந்தமணி
யின்குழைவைவாரிநடுவே
மெய்துகவனைச்சியொருசாரிபமருப்பனை
பிறங்குறநெருங்கநிரையே
யொய்யெனவிடிப்பர்சிறையளியலையவிப்பருமை
யின்றசையறிந்துசிறுக
கொய்யெரிமடுப்பர்நறவந்தனினனைப்பர்குற
வாணருடனேநுகருவார்.

இ-ள். முறிக்கப்படுகின்ற தினைகளின் நல்லகதிர்களில்விழுகின்ற கிளிகள் வருந்தும்படி இரத்தினக்கற்களைவாரிக்கவணின்நடுவேயிட்டு எறிந்து, ஒருபக்கத்தே யானையின் கொம்புகள்போன்ற தனங்களால் (தம் நாயகர்) நெருங்க அவரை வரிசையாக விரைவினிடிப்பார், சிறகுகளையுடைய ஈக்கூட்டம் அலைதலைநீக்குவார், மானினது இறைச்சியையரிந்து மிக்க நொய்தான அக்கினியிற் காய்ச்சுவார். தேனில் நனைப்பார் (தம்நாயகராய) வேடுவருடனே உண்பார் (குறமகளிர்.) 21

நன்னிறமறக்குருதிபெய்துதினையோடலரின்
வண்டுமிழ்நறுவிரவியே
கன்னலொடுபன்னமிசைவைத்தனபடைத்தழலி
லையவிநறும்புகையிடாச்



சென்னிறவிழிக்கவிரிதழ்ப்பொருவுசெந்தலைய
சேவலொடுதூவிமயிலும்
பன்னிருபுயக்கடவுண்முன்னரின்விடுத்தெதிர்
பராவிவெறியாடல்புரிவார்.

இ-ள். ஆட்டின் மார்பிலுள்ள சிவந்த இரத்தத்தைப் பலியிட்டு, தினைமாவுடன் புட்பங்களினின்றுங் கொண்டுவந்து வண்டுகள் கக்கிவைத்த தேனையுங் கலந்து, காசத்துடன் (தேக்கு) இலைமுதலியவற்றில் வைத்துள்ள அவைகளைப் படைத்து, அக்கினியிற் கடுகினது நல்லபுகையையிட்டு, சிவந்த நிறமுற்ற கண்களையும் முருக்கமலரையொத்த சிவந்த தலைச்சூட்டையுமுடைய கோழிகளோடு, இறகுகளையுடைய மயிற்பறவைகளையும், பன்னிரண்டு திருப்புயங்களையுடைய குமாரக்கடவுளது திருமுன்னர் விடுத்து நேர்நின்று துதித்து, வெறியாட்டைச் செய்வார்கள். 22

சீறடியர்வெண்கவடிமாலையர்சிறார்கள்சின
வெம்புலிமடங்கலுழையின்
வீறுகுருளைத்திரள்கயந்தலைபிடிப்பர்கொடி
வீக்குவர்விடுப்பர்பழகி
மாறுபுரியாதுவிளையாடுவர்களாகுளிமு
ழக்குவர்கைகால்விழிகொள்வா
ரேறுபொருவித்திரிவர்காளையருடுப்பூளையெ
னப்பணியெடுப்பர்விடுவார்.

இ-ள். சிறந்த கால்களையுடையவரும், வெள்ளிய சோகிமாலையை யணிந்தவருமான வேட்டுவச் சிறுவர்கள், கோபமுள்ள கொடிய புலி சிங்கம் மான் என்னும் இவற்றின் குட்டித் திரள்களையும் யானைக் கன்றுகளையும் பிடிப்பார், கொடிகளாற் கட்டுவார், பின்னர் அவிழ்த்துவிடுப்பார்,

அவையோடுபழகியோர்க்கு கொடுஞ்செய்கைகள் செய்யாதவாறு விளையாடு வார், சிறுபறையை யடிப்பார்கள், கை கால் கண் என்னுமிவற்றைக் கொள்ளுவார், இடபம்போலச் செருக்கித்திரியும் காளைப்பருவமுடைய வேடர் உடும்பினது புற்றென்று (கையையோட்டி) பாம்புகளையெடுப்பர், அவை பாம்பாயிருக்கக்கண்டு விடுவார்கள். 23

கல்லருவியோதைபுனலாடுநர்தமோதைகரை
யேறுநர்தமோதைதமுதிரைக்
கொல்லையினெழுங்கிளியினோதைகடியோதைநெடி
யோதைகவணோதைகருதலைச்
சொல்லினர்தம்மோதைதினைகொய்யுமவரோதைதுறை
தோறுமிபவோதையெதிரே
செல்லசனியோதைமுரசோதைவரையோதைமலை
வாணர்சிலையோதையுமறா.

இ-ள். அவ்வராகமலையினிடத்தே, கல்லென்னுமொலியோடு வீழும் அருவியின் ஒலியும், நீரின் முழுகுவார் ஒலியும், கரையினேறுவார் தொனியும், கூலங்கள் விளையுங் கொல்லைகளினின்றும் எழுங் கிளிகளின் குரலும், அவற்றைத் துரத்துவாரோசையும், மூங்கில்கள் (ஒன்றோடொன்று உரோஞ்சுதலா லுண்டாகுஞ்) சத்தமும், கவண் எறிதலா லுண்டாகு மொலியும், மழலைமொழிகளை வசனிக்குஞ் சிறார்களின்குரலும், தினைக் கதிர் கொய்வார் துழனியும், நீர்த்துறைகள்தோறும் யானைகளின் முழக்கமும், அதற்குமாறாக இடிக்கும் இடியின் முழக்கமும், முரசவாத்தியங் களினொலியும், மலையின் எதிரொலியும், மலைக்கண் வாழும் வேடர்க ளது வில்லோசையும் எக்காலும் நீங்காவாம். 24

பூசலெனின்மேவலரைவென்றசினமாறுவர்பொ
றாரிடைவிடார்தடைபடார்
நேசமுறவேயடையிலாரமுதமேயனையர்
நீடுலகுவாழ்வுமுடையார்



தேசுபொலிதேவர்சிறைமீள்வடிவேல்விடுசெவ்
வேளலதுதெய்வமறியார்
வாசமலர்தூவிவழிபாடுபுரிவார்பணியின்
மீள்வர்மலைவாணர்திறனே.

இ-ள். இன்னும் அம்மலைக்கண் வாழும் வேடரது வலிமையைக் கூறுமிடத்து, போரென்றுகேட்பின் உடனே பகைவரை வென்று கொண்டு தங்கோபத்தை நீக்குவர், அன்றிப் பொறுக்கமாட்டார், ஓய்ந்து சிலகாலந்தங்கமாட்டார், தடைப்பட்டுநில்லார், அன்பு பொருந்த (ஒருவர்) அவரை யடைவாராயின் அவர்க்கு அரிய அமிர்தம்போன்றவராவர், நீண்ட உலகவாழ்வையுஞ் செய்விக்கு நன்மையுமுடையர், பிரகாசம் மிக்க தேவர் களது சிறைமீளும்படி வேலாயுதத்தை எவிய கந்தநாதனையல்லாது வேறொருதெய்வத்தை யுணரமாட்டார், அக்கடவுளை மணமுள்ள பூவைச் சொரிந்து வழிபாட்டைச் செய்வார், அதுசெய்தே தந்தொழிற்குச் செல்வார். 25

அன்றுசிவனார்விழிசெநீர்சொரியவாளிகொ
டகழ்ந்துதமதங்கணணிவார்
வென்றிபுனைதிண்ணர்குலமேன்மையுடையார்திருவி
ரும்புமடமான்மகளைமுன்
மன்றல்புரியும்படிசெவ்வேண்முருகனுக்குதவு
மாமர்பரசாரல்வதிவார்
நன்றறமலாதுபுரியார்தவமலாதுமுய
லார்நலமிலாததுசொலார்.

இ-ள். அந்நாளில் திருக்காளத்தி யப்பரது திருக்கண்ணினின்றும் இரத்தஞ்சொரிய (அதனைக்கண்டு பொறாமல்) அம்பினால் தோண்டித் தம்கண்ணை யவர்க்குச் சாத்தினவரான, அகப்பற்றுப் புறப்பற்றுக்களை வெற்றிகொண்ட திண்ணனார் என்னுங் கண்ணப்பநாயனாரது குலத்திற்

பிறந்த பெருமையையுடையவர், இலக்குமியும் விரும்பத்தக்க இளமையுடைய மானின் மகளாகிய வள்ளியம்மையாரை முன்னர் விவாகஞ் செய்யுமாறு செந்திறவேளாகிய முருகக்கடவுளுக்குக் கொடுத்த மாதவரா முரிமையையுடையவர், மேற்சாரலில் இருப்பார், நன்மையான அறச் செய்கையைச் செய்வதன்றி வேறானவற்றைச் செய்யார், தவமல்லாது வேறொன்றற்கும் முயற்சிசெய்யார், நன்மையில்லாததை ஒருகாலும் உரைக்கமாட்டார். 26

கலி நிலைத்துறை.

ஏனமால்வரையடைகுநர்யாவரேயெனினும்
வானநாடவர்வழுத்தவும்வாழ்த்தவுந்தகுவார்
ஞானவாலகில்லியர்முனிவரர்சித்தர்நாகர்
கானர்விஞ்சயர்கின்னரர்கடவுளர்தொழுவார்.

இ-ள். பெரிய வராகமலையை யடைவோர் யாவரேயாயினும், அவர் தேவலோகத்தவரால் வணங்கப்படவுந் துதிக்கப்படவுமான தகுதியை யுடையராவர், அறிவினையுடைய வாலகில்லியர், முனிசிரேட்டர், சித்தர், சர்ப்பர், இசையையுடைய கந்தருவர், வித்தியாதரர், கின்னரர் முதலிய கணங்களாலும் வணங்கப்படுவார்.

வாலகில்லியர் - அறுபதினாயிரம் இருடியர். வித்தியாதரர்—மாலி காஞ்சனமுதலிய வித்தையைத் தரித்தவர். 27

இயக்கர்சாரணரரக்கர்வசுக்கள்யோகிசர்
மயக்கமொனறிலர்முதலியர்வைகுவர்தேவர்
வியககமாநதிக்கரையில்வெண்பளிக்கறைமீதி
னயக்கநாண்மதிச்சடையனையருச்சனைநவில்வார்.

இ-ள். இயக்கர்களும் சித்திபெற்றோரும், அரக்கர்களும் வசுக்களும் யோகீசுரர்களும் ஒருமயக்கமு மில்லாராய் முதன்மையுற்று இருப்பர், தேவர்கள் வியக்கும்படி பெரிய ஆற்றின் கரையில் வெள்ளிய



பளிக்கறையின்மேல் விருப்பமுற, புதிய பால சந்திரனைத்தரித்த சடாமுடியையுடைய சிவபெருமானை அருச்சனை செய்வார்கள்.

பிரமதேவன் படைக்குங் காலத்திலே கோபமும் பசியு முடையராயினர், அப்போது அச்சத்தைக் கொடுக்கும் மீசையுந் தாடியு முடையராய் விகாரவடிவினராய்ச் சிலர் தோன்றினர். அவருட் சிலர் பசிபொறுக்கலாற்றாது பிரமதேவனை (யக்ஷாம) உண்ணுவேம் என்று பாய்ந்தனர். அவர் (யக்ஷர்) இயக்கர் எனப்பட்டார். சிலர் (ரக்ஷாம) காப்பேம் என்றார். அங்ஙனமுள்ள அவர் அரக்கர் எனப் பெயர்பெற்றார். இவ்வாறு கூர்மபுராணம், விஷ்ணுபுராணம் என்பவற்றிற் கூறப்பட்டது. 28

அண்ணலஞ்சினகரங்களுமுளவளவருவி
தண்ணறுங்குழாம்பலவுளவுளதடஞ்சுனைக்
கண்ணியாடுநர்க்கருணனிவழங்கிடாநும்
வெண்மதிச்சடைவிளங்கியகங்கைவீற்றிருக்கும்.

இ-ள். அம்மலையிற் பெருமையிற் சிறந்த கோயில்களும் பலவுள, அருவிகளும் பலவுள்ளன, குளிர்ந்த ஆற்றுக் கூட்டங்களும் பலவுள்ளன. பெரிய சுனைகளும் பலவுள, அவற்றை யடைந்து தோய்வார்க்குக் கிருபையை மிகவுங் கொடுத்து, வெள்ளிய சந்திரனுலாவுஞ் சடைக்கணுள்ள கங்கையானது தினந்தோறும் ஆங்குவீற்றிருக்கும். 29

இமயமீன்றவெம்பிராட்டியோர்புடையில்வீற்றிருப்பச்
சமரவேற்கிழமானதலைசுடரொடுத்தயங்கச்
சிமயமால்வரைத்தவஞ்செடாறுந்தொறுந்தொழு
மமரர்க்கருள்வழங்கியாகிடைவைகுமமலன்.

இ-ள். இமயமலையரசன் பெற்ற எமது பெருமாட்டியாராகிய உமையம்மையார் ஒருபாகத்தில் வீற்றிருப்பவும், போர்த்தொழிலில்வல்ல வேலாயுதத்திற்குத் தலைவரான கந்தக்கடவுள் நடுவே சூரியனைப்போல விளங்கவும், சிகரங்களையுடைய பெரியமலைகடோறும் வந்து பூசிக்கும் தேவர்க்குக் கிருபையைப் புரிந்து அவ்விடத்து வீற்றிருந் தருளுவர். 30

சூகராசலஞ்சேணெறிகாண்பினுந்துன்ப
நாகராசிகள்பீதித்திடுநவிலுதற்கெளிதோ
மோகராசிகண்முனிந்திடுமுனிவர்காளென்றான்
யோகராசிமுற்றொருங்குணர்சூதமாமுனிவன்.

இ-ள். மோகமுதலிய தீக்குணங்கள் எல்லாவற்றையும் ஒழித்த முனிவர்களே! வராககிரியை மிக்க தூரவழியிற் கண்டாலும் துன்பமென்னும் மலைக்கூட்டங்கள் பயப்படும். ஆகலால் அதன் பெருமை சொல்வதற் கெளிதாகுமோ என்று, யோகசாதனவியல்புகள் முழுமையும் அறிந்த சூதமாமுனிவர் கூறினர். 31

வராககிரிச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள்—110.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

மூன்றாவது,

# மாயாத்திரிச் சருக்கம்.

பழநிப் பதிக்கணுள்ள வராகமலைக்கு மாயாத்திரி என்ற பெயர் வருதற்குக் காரண மென்னவென்று, நைமிசாரணியத்து முனிவர்கள் கேட்ப, சூதமுனிவர் கூறுகின்றார். ஐம்புலங்களையும் அறவொழித்த மாதவர்களே! முதன் மூதல் மகாசங்கார காரணராகிய சிவபெருமான் பராசத்தியின் அருளாலே சிவதத்துவ முதற்பிரகிருதி யீறாக வுள்ள முப்பத்தாறு தத்துவங்களையும் தோற்றுவித்துக் காத்து ஒடுக்கிப் பின்னரும், பஞ்ச கிருத்தியங்களையும் இயற்றற்கு அதிகாரகர்த்தாக்களைப் படைக்கவுன்னிப் பராசத்தியின் கூறும் தமது கூறுமாயுள்ள மாமாயை என்னுஞ் சத்தியைத் தோற்றுவித்தனர். அதுவே குடிலை உத்கீதை, சுத்தவித்தை எனப் பெயர்பெறும். அதனது பலவகைப்பட்ட சத்திகளுள் ஒரு கூற்றின் சத்திபேதங்களுள் ஒன்றினின்றும் சாதாக்கியமுதிக்கும். அதன்ஓர் கூற்றினின்றும், சதாசிவநாயனார் தோன்றுவர். அவரினின்று மனோன்மணி சத்திதோன்றும். அதனினின்று மகேசுரர் தோன்றுவர். அவரிலிருந்து மகேசுவரி தோன்றுவள். அச்சத்

தியி னின்றும் உருத்திர மூர்த்தி தோன்றுவர். அவரினின்றும் உமையம்மையார் உதிப்பர். உமாசத்தியி னின்றுந் திருமால் பிறப்பர். அவரினின்றும் இலக்குமியும், அவ்விலக்குமியினின்று பிரமரும், அவரினின்று சரசுவதியும் உதிப்பர். இவருள் பிரம விட்டுணுக்கள் இருவரும் தவஞ் செய்தார். அவர்க்குமுன் பரமேஸ்வரி பிரசன்னமாய் வேண்டியது என்னவென்றாள். அவர்கள் வணங்கிச் சாம்பவி, தேவி, உலகங்களிலே பலதானங்க ளிருப்பினும். மிக விசேடித்ததாகி, நின்னை வணங்குதற்கு ஒரு வடிவத்தைக் கொடுத்தருளுதி என்றார். அப்போது சிவ சத்தி அவர்க்குச் சைவசித்தாந்த போதகஞ் செய்து, தனதுகலைபி னொன்றாகிய மாயாசத்தியினாலே ஒரு மலை வடிவெடுத்து நின்றனள். அதற்குத் தக்கபடி பரமேசுரனும் ஓர்மலை* யுருக்கொண்டு நின்றனர். பிரம விட்டுணுக்கள் இருவரும் பூசித்து முறையே படைத்தற் றொழிலையும், காத்தற் றொழிலையும் பெற்றுத்தேவர்களுண் மேலவராகவும் விளங்கினர். அன்றியுஞ் சத்தியையுஞ் சிவத்தையும் வணங்கி யொன்று வேண்டினர். சர்வலோக சுதந்திர சுந்தரீ, கருணாநிதீ, கர்த்தவ்விய முழு முதற் பொருளே! உங்க ளிருவரது திருவடிகளையும் அடியேங்கள் மறவாதிருத்தல் வேண்டும். ஒருகால் மல வயத்தாலே மறந்து தீவினைக் குள்ளாயினும் வந்து ஆட்கொள்ளல் வேண்டுமென்று இரந்தபடி வரம்பெற்றார். இவ்வாறு பிரம விட்டுணுக்கள் வேண்டியபடி சிவசத்தியாகிய முதல்வி தன் கலையு ளொன்றாய மாயையாய் மலையுருவானபடியால் மாயாத்திரி எனப்பெயர் பெற்றதென்றார் சூத முனிவர்.



மாயா - அத்திரி என்னுந் தொடர்மொழிகள் வடநூன் முடிபுபற்றி மாயாத்திரி எனப் புணர்ந்தன. மாயையாகிய மலை என்பது பொருள். வராகமலை மாயாத்திரி எனவும் பெயர் பெறும். இச் சருக்கத்தால் வராக மலையின் தோற்றங் கூறப்பட்டது.

கலிநிலைத்துறை.

முற்றொருங்குணர் சூதனைமுனிவர்கைம்முகிழாச்
சொற்றரும்புகழ்சூகராசலச்சிறப்புணர்ந்தோ
நற்றவத்தினையதனுலைதாற்றமுகவிற்றி
மற்றதன்பெயர்வந்ததுந்தந்துரையென்றார்.

இ-ள். ஞான நூல்கள் யாவற்றையும் ஒருசேர அறிந்த சூதமுனிவனை ஆங்கிருந்த இருடியர்கள் கைகுவித்து, சொல்லுதற்கரிய புகழையுடைய வராகமலையின் பெருமைகளை யெல்லாம் அறிந்தேம். நல்ல தவத்தினையுடைய முனிவரே! அதுவந்த வரலாற்றையுஞ் சொல்லி, அதற்கு மாயாத்திரி என்னும் பெயர் வந்ததையுங் கூறியருளுதிர் என்று பிரார்த்தித்தார். 1

மேயமாற்றமாதவன்செவிதாழ்த்துமெய்ம்முனிவீர்
நீயிர்சொற்றனகுய்யமேநிகழ்த்துதற்கரிதா
லாயினுந்தவத்துயர்ந்தவர்க்கறைதலேயறனுந்
தூயவக்கிரிநெறிவரக்கேண்மெனச்சொல்வான்.

இ-ள். பொருந்திய அச்சொற்களுக்குச் சூதமுனிவர் செவிசாய்த்து, உண்மையுணர்ந்த முனிவர்களே! நீங்கள் சொன்னசொற்கள் வஞ்சனைச் சொற்களே! ஏனெனில் அது சொல்லற்கரியதாகும் ஆயினும் இந்தப் பொருள் உயர்ந்தோர்க்குச் சொல்லுதலே தருமமாகும், பரிசுத்தமாகிய அவ் வராகமலை வந்த வரலாற்று முறையைக் கேளுங்களென்று சொல்வா ராயினர். 2

ஆதியிற்பராசிவையருளாற்சிவமுதலா
யோதுபாரிறுவாயவைதோற்றிவைத்தொடுக்கிப்
பேதமின்றியெம்பிராற்கொருபிராட்டியும்பெற்ற
மாதுமாகியகுடிலையிலொருசத்திவடிவில்.

இ-ள். முற்காலத்திற் பராசத்தியின் அருளாலே சிவதத்துவ முதற் பிருதிவி யீறாகவுள்ள முப்பத்தாறு தத்துவ சமூகங்களாகிய உலகங்களை யெல்லாம் வெளிப்படுத்தி, காத்துப் பின்னர் ஒடுக்கி, ஒரு பராசத்தி யானவள் எமது பெருமானாகிய தற்பர சிவத்திற்கு வேறுபாடின்றிப் பெற்ற குடிலையென்னும் மடமகளின் ஒருசத்தியுருவில். 3

மாற்றருஞ்சதாசிவனுமாய்மகேசனுமாய்ப்பின்
றேற்றுருத்திரக்கடவுளுங்கடவுள்பாற்றோன்றி
யேற்றமாயுறையிருவருமிதயமூடெழுதிப்
போற்றிநிற்றலுஞ்சகளையாய்முன்னரிற்போந்தாள்.

இ-ள். குடிலையின் சத்திவடிவாகிய பஞ்ச சாதாக்கியங்களுள் ஒன் றாய கர்த்திரு சாதாக்கியத்தினின்றும் சதாசிவனாகி, அதினின்றும் மகே சுரன் றோன்றி, பின்பு அதினின்றுந் தோற்றினர் உருத்திரக் கடவுள், அவரிடத்தினின்றுந் தோன்றிய விட்டுணு பிரமன் என்னும் இருவரும் தம்மனக்கிழியி னெழுதித் துதித்து நிற்குதலும், சிவசத்தியானவள் உருவ முடையவளாய் அவர்க்கு முன் வந்தாள்.

இங்ஙனமாய நவபேதத் தோற்றங்களை யெல்லாம் சிவஞான சித்தி யார், சிவப்பிரகாசம், உண்மை விளக்கம், சித்தாந்த சாராவளி, தத்துவப் பிரகாசம் முதலியவற்றிற் பரக்கக் காண்க. 4

போந்தபேதையைப்பழிச்சினர்புதுமலர்பொழிந்தார்
பாந்தளாயிரம்பஃறலைப்பணமுடிச்சுடிகை



யேந்துபாரிடையிடம்பலவிருப்பினுமியாங்க
ளோர்ந்துனைத்தொழுநல்கலாயோருருவென்றார்.

இ-ள். அவ்வாறு தோன்றிய சிவசத்தியைத் துதித்து அன்றலர்ந்த புட்பங்களைத் தூவினர். ஆதிசேடன் ஆயிரக்கணக்கான பலதலைகள் என்னும் பட்முடியி னுச்சியில் தாங்குகின்ற இப்பூமியினிடத்தே பல இடங்களிருப்பினும் அடியேம் ஆகிய நாங்கள் உன்னை யறிந்துவணங்க ஒரு திருவுருவத்தைக் கொடுத்தருள்வாயாக என்றார். 5

சொற்றவாய்மொழிகேட்டதுமெமதுதொல்கலையி
லுற்றசத்திகளனந்தமுண்டோரொருபேத
மற்றவற்றினுக்களவிலைவரன்முறைவழாமை
முற்றுமைந்தொழினடக்குமெஞ்ஞான்றுமூவுலகும்.

இ-ள். பிரம விட்டுணுக்கள் சொன்ன சொற்களைக் கேட்குதலும் (சிவசத்திசொல்வாள்) அடியவர்களே! எம்முடைய பழையகலைகளுட் பொருந்திய சத்திகளோ அளவில்லாதன வளவாம். ஒவ்வோர் சத்திகளின் பேதங்களுக்கோ அளவில்லை. அவை வரலாற்றுமுறை வழுவாமல் மூவு லகங்களையும் எக்காலத்தும் ஐந்தொழிலை நடத்துமென்க. 6

ஐந்தொழிற்கும்வித்தாயிருந்தனமவையாற்றற்
கைந்தெனும்பெயர்நம்மையும்வகுத்தனமடைவே
யைந்துசத்தியும்யாமெனவைகினமன்றி
யைந்தவித்துயர்ந்தோரகத்திருந்தனமன்றே.

இ-ள். ஐந்துதொழில்களுக்கும் நாமே காரணமா யிருந்தேம். அவ் வைந்தொழில்களையும் இயற்றுதற்கு ஐந்தாகிய மூர்த்திகளான நங்களையும் நிருட்டித்தேம்; முறையே பஞ்ச சத்திகளும் நாமென்றுசொல்ல இருந் தேம், அல்லாமலும் பஞ்சப்புலன்களையும் நீக்கின ஞானிகளது உள்ளக் கோயிலினும் இருந்தனம்.

அன்று-ஏ-அசைகள், ஐந்தொழில் - படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், ஐந்துமூர்த்திகள் - பிரமன், விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் ஐஞ்சத்திகளாவன - ஆதிசத்தி, பராசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி, ஐம்புலன்கள் - மெய், வாய், கண், மூக்கு, செவி. 7

நித்தமாய்த்தனுவாதிகணிகழ்த்தியெவ்வுயிருந்
துய்த்தொழிந்துமீண்டுதிப்பதற்கொன்றெனத்தோன்று
மத்தமாயைமால்வரையெனவருதுமென்றரனோ
டுய்த்துமற்றையோரிருவர்க்குந்திரோதமாயுறைந்தாள்.

இ-ள். எக்காலத்தும் உடம்பு, மனமுதலிய கருவிகள், புவனம், போகம் என்பவற்றைக் கொடுத்து, அவற்றால் ஆன்மாக்கள் தமது இருவினைப் பயன்களையும் அநுபவித்து, இறந்து, பின்னருந் தோற்றுவித்தற்குக் காரணமாவன் மாமாயை என்னும் ஒருசத்தியாகக் காணப்படும் மாயாசத்தியானவள் யாமே பெரியமலையாக வருகின்றேமென்று சிவபெருமானுடன் பொருந்தி, பிரம விட்டுணுக்களாகிய இருவருக்கும் மறைவாக இருந்தாள். 8

ஆயகாலையிலசலமுமாகியெவ்வுயிர்க்குந்
தாயுமாயவண்மாயைமூவுலகமுந்தயங்க
மேயநின்றுதித்தசலமாய்விளங்கினன்யாரு
மேயிலானுமங்கிருந்தனனிருவருமிறைஞ்ச.

இ-ள். அவ்வாறாகிய சமயத்தில் எவ்வுயிர்களுக்கும் தாயுமாகி நிற்கும் சிவசத்தியானவள் மலையாகிய மூன்றுலகமும் விளங்க எவர்களும் பொருந்துதற்கரிய முத்தியாக இருக்கும் சிவபெருமானும் பிரம விட்டுணுக்களாகிய இருவரும் வணங்குமாறு அதற்குப் பொருந்திநின்று ஓர்மலையாக விளங்கினர். 9



மூவருமளாருவனென்றேமுதல்வனையிறைஞ்சிநின்றான்
மேவரும்பாரியாகவிரவினன்விகாரமின்றித்
தாவரவிருவரோடத்தடஞ்சிலம்புறையாய்வந்தான்
யாவனென்றறிகிற்பாமெம்மிறைவிளையாடலம்மா.

இ-ள். எமது பரமபதியாகிய சிவபெருமான், மும்மூர்த்திகளுள் தாமுமொருவர் என்று பராசத்தியை வணங்கி நின்றனர். கலக்கின்ற மனைவியாக அவளுடன் வேறுபாடின்றிச் சேர்ந்துநின்றனர், ஆதாரமாக நிற்கும் பிரமவிட்டுணுக்களென்னும் இருவருடன் அந்தப் பெரிய மலையிருக்கை யாகிவந்தனர் எத்தன்மையனென்று அறிவேம் எமது சிவபிரான் திருவிளையாடலை. 10

ஆதலினுலகமூன்றுமான்றளித்தழிக்குமாயா
பூதாமெனும்பேர்முற்றும்புனைந்ததெவ்வுலகும்போற்ற
மாதவிரந்தவெற்புவராகவெற்பெனும்பேர்பெற்ற
தோதுவன்கேண்மினென்றான்சூதனென்றுரைக்குமேலோன்.

இ-ள். இவ்வாறாகிய காரணத்தால் மூவுலகங்களையும் விரித்துக் காத்து அழிக்கின்ற மாயையினுருவாகலின் (மாயாபூதாம்) மாயசத்திரி எனப் பேர்பெற்றது, எந்த வுலகத் துள்ளவருந்துதிக்க, மாயாசத்தியெழுந்தருளி யிருக்கின்ற அந்தமலை வராககிரியெனப் பேர்பெற்றதற்குங் காரணஞ் சொல்வேம். கேளுங்கள் என்றார் சூதமுனிவர். 11

மாயாத்திரிச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள்—121.

---

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை,

நான்காவது.

# பன்றிக்குட்டிக்குப் பால்கொடுத்தச் சருக்கம்.

நைமிசாரணிய முனிவரைச் சூதமுனிவர் நோக்கிச் சொல்வார். முனிவர்காள்! வராககிரியென்று பெயர்வந்ததற்குக் காரணமுரைப்பேம். கேளுங்கள்! சிங்கமுதலிய விலங்குகள் இருக்குங் காடுகள் நெருங்கியதாய், வியாசமுனிவர் இருந்து தவஞ்செய்த திருக்குருந்துறையென்று ஓர் தலமுண்டு. அந்த ஒரு முனிவர் சென்று, இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதியென்னும் எட்டுறுப்புக்களையுமுடைய சிவயோகம் புரிந்து, பின்னர்ப் பஞ்சாக்கினி மத்தியில் நின்றுஅரிய தவத்தைச் செய்தார். அப்போது பிரமதேவரின் வமிசத்துப்பிறந்த சகல முனிவரின் புத்திரர்கள் பன்னிருவரும் அங்குச்சென்று அவாறு வடிவத்தை யசைத்துத் தவத்திற்கு இடையூறு செய்தனர். முனிவர் அதனால் தந்தவத்தைவிட்டு விழித்து, இக்கொடுந் தொழில் செய்தமையினால் நீங்கள்பன்னிருவரும் மலையில் வாழும் பன்றிகளாகப் பிறக்கக் கடவீர், என்று சாபஞ்சொன்னார்.



அதனைப் பெற்ற பன்னிரு முனிகுமாரர்களும் மிக்க வருத்தமுற்று, வித்தியாதரன் என்னும் விஞ்சையர் பதியும் அவன் மனைவியும் பன்றிவடிவாகி மாயாசலத்தி லிருத்தல் கண்டு, அப்பெண் பன்றி வயிற்றிற் குட்டிகளாகப் பிறந்திருந்தார். அந்நாளில் மதுரைமாநகரத்தில் அரசுபுரிந்தபாண்டியராசன் மிருகவேட்டையாடநினைந்து, யானை, தேர், குதிரை, காலாள் என்னும் நால்வகைச் சேனைகளுந்தன்னைச் சூழ்ந்து வர, அம்மலைச்சாரலிற் சென்றனன். சேனைகளுட்சிலர், மிருகங்களைக் கொன்று வெற்றிபெற்றுநிற்பது கண்ட பன்றிகள், அச்சேனைகளை யெதிர்த்துச்சின்ன பின்னமாக்க அதுகண்டு பாண்டியராசன், மிக்ககோபங்கொண்டு வில்லைவளைத்து, மிருகங்கள் ஒன்றுமில்லையென்னும்படி பாணங்களைச்சந்தித்துச் செலுத்திக்கொன்றான்.

அதனை இவ்வாண் பெண் பன்றிகள் இரண்டுங் கண்டு மனநொந்து மூர்க்கமும் கோபமும் முன்வந்து அலைப்ப, பிரசண்ட வாயுவோடு இருண்ட மேகக்கூட்டம் முழங்கிவந்தாற்போல, உறுமிச் சீறிச்சென்று அரசனது எஞ்சியசேனைகளையெல்லாம் கால்வேறு, கைவேறு, குடல் வேறாகிழியும்படி கொம்புகளாற் குத்திக் கொன்று ஆர்ப்பரித்துநின்றன. ஆண்பன்றியை யரசன் கொன்றான். அதுகண்ட பெண்பன்றி, நாயகனிறக்க நாம் ஓர் கணமேனும் உயிர்வைத்திருத்தல் தகாதென்று எதிர்த்துவர அதனைச் சரசன் என்னும் வேடன் கொன்றான். பெற்ற தாய் தந்தையரை யிழந்துநின்ற பன்றிக்குட்டிகள் நொந்து நொந்து தாயின் முலைதேடி யலைந்து,

வீரிடும், கதறும், சிலகுட்டிகள் வாய்பிளக்க இரங்கும். பாலில்லாமல் வயிறுகாய்ந்து நாவுலர்ந்து விம்மிவிம்மிச் சோர்ந்து உயிர்போகுந் தருணமாயிருக்கும்போது, சராசரங்களாகிய உலகையும் உயிரையும் பெறாது பெற்ற உலக மாதாவாகிய உமாபிராட்டியார், சர்வஞ்ஞத்துவ பதியாகிய பரமேசுரனைத் தொழுது, சர்வலோகபதீ, பன்றிக்குட்டிகளின் பரிதாப நிலையைப் பாராதிருத்தல் தேவரீர் திருவருட்கு அடுக்குமோவென, சிவபெருமான் இயற்கையே கருணையுடைய ராகலின் முறுவல்பூத்து, அப்பன்றிக் குட்டிகளின் தீவினை கழியுங் கால நோக்கி, இதுகாறுந் தாழ்த்தேம், இனியவற்றை யாட்கொள்ளுதும் என்று வேதாகம வடிவாகிய ஓர் பன்றியுருவெடுத்துச் சென்று மாயாத்திரி என்னும் பழநி மலைக்கணுள்ள பன்றிக் குட்டிகட்குப் பாலையூட்டினர். தாயினும்பார்க்கக் கருணையுடைய தாய்மார்க்கெல்லாம் பரமதாயாம் பரமேசுரனது பாலையுண்ட மாத்திரையே அக்குட்டிகளெல்லாம் மகாதேசுசுள்ள அரசிளங் குமாரரானு தேவதுந்துபிகள் ஒலித்தன. வானவர் பூமழை பொழிந்தார். மண்ணவர் யாவரும் அதிசயித்தார். பாண்டியன் பேரற்புதங் கொண்டுநின்றான்.

இறைவன் அப்பன்னிரு குமாரர்களையும் நோக்கி நீவிர் பாண்டியனுக்கு மந்திரியாக விருப்பீராக என்று மறைந்தனர். பாண்டியராசன் அம்மலை முடியில் ஒரு சிவலிங்கந்தாபித்து அருச்சித்தான். அதன்பெயர் பாண்டீசர் என்பதாம். அது தொடங்கி அத்தலம் நேத்திரபுரியெனவும் பெயர்பெற்றது.



இதுவல்லாமல் காசிப முனிவரின் வழிவந்த வராகமுனிவர் என்பார், மாயாசலத்தி லிருந்த வன்னிமர நிழலில் சிவபெருமானைக் குறித்துத் தோத்திரிட்டார். சிவபெருமான்றோன்றி, இருடியே! நீ விரும்பியவற்றைச் சொல்வாயாகவென்று திருவாய் மலர்ந்தருளினார். முனிவர், கொன்றைமாலைபுனைந்த குழகனே! என்பிறவி தொலையச் சிவயோகத்தை யருளக்கடவாய். நின் திருவடியையும் பின்னர் அருளுதல் வேண்டுமென்று இரந்தார். அவற்றிற்கிசைந்து, இம்மலைவராககிரியெனப் பெயர்பெறுக என்றுவேண்டுவோர்களையும் அருளி அந்தர்த்தானமாயினர். சிவபெருமான் வராகமாகவந்துபால்கொடுத்த மலையாகலானும், வராகமுனி தவம்புரிந்து அருள்பெற்ற மலையாகலானும் வராககிரியெனப் பெயர்பெற்றதென்று சூத முனிவர் வதரிகாச்சிரமத்து முனிவர்க்கு உரைத்தார்.

---

கலிநிலைத்துறை.

செருவுன் றிரனுற் றியசியம்வழங்குகானில்
வெருவின் றியோரைம்புலன்வென் றவிபாதனென்போன்
பொருவின் றியருந்தவம்போற் றிவிளங்குவைகுங்
குருவின் றுறைறயென்பதொன் றவ்வழியுண்டுகேடின்.

இ-ள். போரின் வலிமையில் மிக்க சிங்கங்கள் சஞ்சரிக்குங் காட்டிலே பயமில்லாமல் பஞ்சப்புலன்களையும்வென்றி கொண்டவிபாசமுனிவர், தமக்கு ஒரு வருத்தமில்லாமல் அரிய தவத்தைக்காத்து விளங்கி யிருந்த திருக்குருத்துறை என்னும் ஒருதலம் அவ்விடத்துள்ளது.

தொன்மாநகராயிடையோர்முனிதோன்றிமோன
நன்மாமரபிற்சலியாதடையோகநாளும்
பன்மாமறையோர்ந்துணர்மெய்ப்பொருட்பான்மைநேர்ந்து
முன்மாதவமைந்தமுறைப்பண்முயங்குமெல்லை.

இ-ள். பழைய பெரிய அத்திருக்குருத்துறை என்னுந்தலத்தில் ஓரிடத்து ஒருமுனிவர்வந்து மௌனநிலையாகிய நல்லசிறந்த முறைமையோடு கலக்காதுசெய்யும் யோகத்தையும் நாடோறும் பலபெரிய வேதப்பொருள்களையும் ஆராய்ந் தறிந்தும் எண்ணத்தகுந்த மெய்ப்பொருட்பகுதியையறிந்தும் முதன்மையையுடைய பெரியதவத்தைப் பஞ்சாக்கினி மத்தியிற்செய்யுங்காலத்தில். 2

சுகலன்சதுத்தொல்குலத்தோன்றன்முன்றொல்லையின்ற
விகலந்தருபன்னிருமைந்தர் தீவினைகளாற்றும்
புகலொன்றுசெருக்கறப்புண்ணியமோனிமெய்யை
மிகலொன்றவசைத்திடையூறுறமின்னல்செய்தார்.

இ-ள். பிரமதேவாதி வமிசத்திற்பிறந்த சுகலமுனிவர் முன்னர்க் காலத்துப்பெற்ற வெறுப்பையுண்டாக்கும் தீவினையாளான பன்னிரு புத்திரர்களும், சொல்லப்பட்ட அநாதியே பொருந்திய அசைப்பற்றுநீக்கும் படி தவத்தைச்செய்யும்மௌனநிலைகொண்ட இருடியினது உடம்பை, மாறுபொருந்த அசைத்துத் தவத்திற்கு இடையூறுசேருந் துன்பங்களைச் செய்தனர். 3

மோனம்புரியுமுனியோனன்மோனநீங்கி
மானந்தல்புரிந்தசிறாருரவன்மைநோக்கி
யூனம்புரியுங்கரிகேழ்ச்சினிலோக்கல்வைகு
மேனங்களாதாருதிர்நீவிரெனச்சபித்தான்.

இ-ள். மௌனநிலைகொண்டு தவத்தைச் செய்யும் அம்முனிவர், தாங்கொண்ட சிறந்த மௌனநிலையை விட்டுநீங்கி, பெரியவடைச்செய்த



பிள்ளைகளின் கொடுமையைப் பார்த்து, சிறுமையைச்செய்யும் மதம் பொருந்தியமனத்தினையுடையீர், நீங்கள்மலைகளில்வசிக்கும் பன்றிகளாகப்பிறக்கக்கடவீர் என்றுசபித்தார். 4

இரங்கிவித்தியாதரனெனும்விஞ்சையற்கிறையுந்
தரங்கொள்கற்புடைத்தலைவியுமுன்பெறுந்தவத்தா
லுரங்கெழுந்துணைக்கேழலினுருவுகொண்டடைந்தார்
வரங்கிடந்தமாயாசலத்துறைந்துவைகினரால்.

இ-ள். விஞ்சையர்களுக்குத் தலைவனாகிய வித்தியாதரன் என்பானும் தகுதியையுடைய கற்பினைக்கொண்ட அவன்மனைவியும் இப்பன்னிருவர்க்கும் நேர்ந்த துன்பங்கண்டு, இரக்கமுற்று, முன்னர்ச் செய்த தவப்பேற்றினாலே வலிமை பொருந்திய இருபன்றிகளின் வடிவத்தைக் கொண்டு சென்று மேன்மைதங்கிய மாயாசலம் ஆகிய அம்மலையி னீங்காதிருந்தனர். 5

குன்றிமாமணித்தெறுவிழிக்கோலவெங்கேழற்
பன்றியாயவர்கட்டுழிப்பன்னிருசிறாருஞ்
சென்றுதித்தனர்முனிவர்சொற்றிறம்புமோமறங்கூர்
வன்றிறற்சிறுமழலையம்பருவமெனவளர்ந்தார்.

இ-ள். சிறந்த குன்றிமணிபோன்ற சிவந்த கண்களையுடைய ஆண்பன்றியாகவும் பெண்பன்றியாகவு முருவெடுத்த அவர்வயிற்றினிடத்தில் அப்பன்னிரு முனிபுத்திரர்களுஞ் சென்றுதோன்றினர். நிறைமொழிமாந்தர் ஆகிய முனிவர்சொற் பிழைபடுமோ? கொலைத்தொழில் மிக்க வலிமையையுடைய சிறுதொனிசெய்யும் குட்டிகளாக வளர்ந்தனர். 6

முதிர்பசுங்கடம்பருப்பொருட்சுருதிகண்முழக்கு
மதுரைமீனவன்வேட்டைமேன்மனம்புரிவித்துச்

சதுவிதப்பெருந்தானையுந்தலைத்தலைதயங்க
விதுவிளங்குமாயாசலச்சாரன்மேயினனால்.

இ-ள். பழமையாகிய பசிய கடம்பமாநிழலில் எழுந்தருளியிருக்குஞ் சொக்கநாதப் பெருமானால் அருமைவாய்ந்த பொருளையுடைய வேதங்கள் ஒலிக்கின்ற மதுரைப் பதியிலுள்ள பாண்டியன் வேட்டைத்தொழிலில் மனத்தைச் செலுத்தி, யானைதேர் குதிரை, காலாள் என்னும்நால்வகைச் சேனைகளும் இடமிடங்கடோறும் சேர்ந்துவர, சந்திரன் விளங்காநின்ற மாயாத்திரி என்னும் மலைச்சாரலை யடைந்தான். 7

சாரலிற்சிலதானைமாவேட்டையினடந்து
போருடற்றிமாக்குலங்களைச்சயித்திடும்போழ்திற்
கார்மிடைந்தெனவல்லுழிக்கணங்கணெருந்தரசன்
வீரவன்றிறற்றானையைமுருக்கிவென்றனவால்.

இ-ள். அம்மலைப் பக்கத்திலே சிலசேனைகள் மிருகவேட்டைக்குச் சென்று போர்புரிந்து மிருகக் கூட்டங்களை வெற்றிகொள்ளும்போதில், மேகங் கவிந்தாற்போல வலிய பன்றிக்கூட்டங்கள் வருத்தமுற்று அரசனது வீரமிக்க வெற்றிகொண்ட சேனைகளையெல்லாம் அழித்து வெற்றி கொண்டன. 8

வெற்றிகொண்டநம்மாக்கணம்வேட்டைநன்றெனவெங்
கொற்றவன்கொடுமரங்குழைத்தடுசரங்கோத்து
முற்றும்வென்றதிறன்மொமோழுவுங்காணப்
பெற்றவன்பறட்குழாம்விடப்பெயர்ந்தெதிர்ந்தனவால்.

இ-ள். வெற்றிகொண்ட நமது சேனைகளினதும் நம்முடையதுமான வேட்டைத் தொழில் நன்றாயிருந்ததென்று, வெவ்விய பாண்டியராசன் வில்லைவளைத்துக்கொல்லுந்தொழில்வாய்ந்த அம்பைச் சந்தித்து, மிருகங்கள் முழுவதையும் வெற்றி கொண்டதை இரண்டு பெரிய



பன்றிகளுங் கண்டு, தாம் ஈன்ற குட்டிக் கூட்டங்களை விட்டகலச் சென்று எதிர்த்தன. 9

முத்துவெண்பிறைக்கோடுகொண்டுபடைமுழுது
மத்திடுந்தயிரெனவுடைத்துயிர்தபவதைத்துத்
தத்துவாம்பரிச்சவுரியர்தலைவனைச்சருவி
மத்தமாக்கரியெனப்பொருதனதுணைமாவும்.

இ-ள். இருபன்றிகளும், முத்துக்கள் தோன்றுதற் கிடமாயவெள்ளிய பிறைபோன்ற கொம்பைக்கொண்டு, எதிர்த்த அரசனதுசேனைகளையெல்லாம் மத்திட்ட தயிரைப்போல உடைத்து உயிர்கள் அழியும்படி கொன்று தாவிச் செல்லும் குதிரைச்சேனையையுடைய பாண்டியனை எதிர்த்து உன்மத்தமுடைய பெரியயானைகள் என்று சொல்லும்படி போர் புரிந்தன. 10

இரண்டுமாவினதெறுழ்வலியென்சொல்கேமெமது
திரண்டதானையைச்செகுத்தெனவெனவெதிர்சென்று
முரண்டருஞ்சுடர்வாளியான்முதல்வருமாவைப்
புரண்டுவீழ்தரவெய்தனன்புரவலர்பெருமான்.

இ-ள். இருபன்றிகளினுடைய பன்றிகளின் மிக்க வலிமையை யென்னென்று கூறுவேம், எமதுகூட்டமாகிய சேனைகளைக் கொன்றன வென்று அவற்றிற்கு எதிரேபோய், வலிமைபொருந்திய ஒளியையுடைய அம்புகளால் முதலில் வந்தபன்றியைப் புரண்டுவீழும்படி அரசர்க்கு அதிபனாகிய பாண்டியராசன் எய்தான். 11

சருவுமற்றைப்போர்க்கேழலைச்சரச்சரனென்னும்
பொருநெடுஞ்சிலைப்புளினனெய்தகன்றனன்சாப்
மொருவிலிந்திரசயன்றனைவியோடொளிர்விமானத்திற்
கருணையங்கடல்வளர்திருக்கயிலையையடைந்தான்.

இ-ள். எதிர்த்த மற்றப் பன்றியைச் சாசான் என்னும் பெயரையுடைய, போர்த்தொழிலையுடைய பெரியவில்லையேந்திய வேடனெய்து சென்றான். வித்தியாதரன் தன்மனைவி யுடனே சாபம் நீங்கப்பெற்று பிரகாசிக்கின்ற விமானத்திலே யேறி, அருட்கடலாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்கயிலாய மலையையடைந்தான். 12

இருந்தசூகரமென்பறழிடம்பிறிதின்றி
யருந்துதாய்முலைதேடிநின்றலம்வருமஞ்சும்
வருந்தும்வீறிடும்வாய்பிளந்தலறிடும்வரிக்கண்
பொருந்துறாதுயிர்போமெனும்போலிளைப்புறுமே.

இ-ள். (பன்றிக ளிரண்டும் இறந்து இவ்வாறாக) மலைக்கணிருந்த அப்பன்றிகளின் இளங்குட்டிகள் துணையொன்று மில்லாமல், தாம்பருகுகின்ற தாய்ப்பன்றியின் முலையைத்தேடிநின்று சுழலும் பயப்படும். வருத்தமுறும் வீரிட்டழும், வாயைத்திறந்து கதறுகிற்கும், புள்ளிகளையுடைய கண்கள் தூங்கப்பெறாது உயிர்செல்லுந் தன்மைபோல இளைப்படையும். 13

பதங்களுத்தலமுறைத்துளம்பதைத்துடல்வெதும்பும்
ன்தந்துதாயணைப்பின்றியுண்பெலியுமவ்வேலைக்
கதம்பநீள்வனத்தண்ணலைக்கயற்கணுமையகிபார்த்
திதங்கொடாருயிர்க்கிரங்குதனியலதுண்டோ.

இ-ள். சூரியனது வெயிலுறைத்ததனால் மனம் பதைபதைத்துச் சரீரமுழுதும் வெதும்பும், இரங்கித்தாயின் சேர்க்கையில்லாமல் மனம் வருந்தும். (அவ்வாறு பன்றிக்குட்டிகள் வருந்துஞ்) சமயத்தில், கடம்பவனத்தில் எழுந்தருளியிருக்கும் சொக்கநாதப்பெருமானை அங்கயற்கண்ணம்மையார் பார்த்து, இன்பத்தினால் அரிய ஆன்மாக்களுக்கு இரக்கஞ் செய்தற்குத் தேவரீரல்லது வேறொருவருளரோ? 14



ஆதிநாளுதித்துயர்ந்தமாயாசலச்சிகிரி
மீதுதாயிழந்தனமெனக்குருளைகண்மெலித
லீதுநின்னருட்கிசையுமேயெனக்கரமுகிழ்த்த
மாதுமென்முகமிளநகைவரமுறுவலித்தான்.

இ-ள். முன்னர்க் காலத்திற் றோன்றியுயர்ந்து விளங்கும் மாயாத்திரியென்னும் மலையின்மேல் தாயை யிழந்தேமென்று அதன் குட்டிகள் வருந்துதலாகிய இச்செய்கை தேவரீரது திருவருட்குப் பொருந்துமோ? என்று கைகுவித்த உமாதேவியாரது மிருதுவான முகத்தினின்றும் (சிவபெருமான்) புன்னகைதோன்றப்பார்த்து நகைத்தனர். 15

ஆசிலருமறையோநான்கடிகளாரணமுடியின்
றேசபொலிமெய்ஞ்ஞானத்திரட்சியோதிருமேனி
பேசரியகருணைநதிப்பெருக்கோபேரொளிவதன
மாசிலாமணிகேழல்வடிவுகொண்டதெவ்வாறே.

இ-ள். (சிவபெருமான்) நகைத்து அக்குட்டிகளுக்கு அருள் செய்யும்படி பெண்பன்றி வடிவத்தை யெடுத்தருளினர் (எவ்வாறெனில்) அதன் நான்குகால்களும் குற்றமற்ற அரிய வேதங்களோ? அதனுடல் வேதமுடியினுள்ள ஒளிமிக்க மெய்ஞ் ஞானத்தின் கூட்டமோ? பெரிய ஒளியையுடைய முகம்சொல்லுதற்கு அரிய அருள் வெள்ளப்பெருக்கோ? குற்றமற்ற, இரத்தினம்போன்ற சிவபிரான் பன்றியுருக்கொண்ட தெத்தன்மையோ யாமறிகிலேம். 16

## கொச்சகக்கலிப்பா.

இன்பாலன்பாலொழுகுமிளமுலையாமனைவடிவோ
முன்பாறருதவமாயாசலம்பெறுமொய்வரமேயோ
பின்பான்பறழின்முன்பிழைத்தபெருந்தவமேயோ
வன்பாளன்கோலவடிவாகியெழுந்தருளியதே.

இ-ள். இங்ஙனஞ் சிவபெருமான் பன்றி யுருவமாகி யெழுந்தருளி யது, இன்பத்தாலும் அன்பினாலும் சிறந்து விளங்கும் இளமையாகிய தனங்களையுடைய துர்க்காதேவியின் உருவமோ? முன்னர் அழிவில்லாத் தவத்தைச் செய்த மாயாசலம் பெற்ற வரமோ? அல்லது பன்றிக்குட்டி கள் செய்த பெரியதவமோ? யாதோ வறிகிலேம். 17

கொந்தழுகைநீங்கிமுகநோக்கியிளம்பறழினனம்
வந்ததுதாயெனச்சென்றுமுலையுண்ணமகிழ்ந்தளித்தா
னந்தமுமாதியுமில்லோனானுமெவ்வுயிர்க்குந்
தந்தையுந்தாயுந்துணையுந்தமருமெனச்சமைந்தோனே.

இ-ள். முடிவுமுதலும் இல்லாதவராயினும் எவ்வகைப்பட்ட ஆன் மாக்களுக்கும் பிதாவும் மாதாவும் உடன் பிறப்புஞ் சுற்றமுமாக விளங்கும் சிவபெருமான், பன்றியுருக் கொண்டு சென்று, கொந்து அழுதலினின் றும் நீங்கி, முகத்தைப் பார்த்து, இளங்குட்டிகள் யாவும், தம்முடைய தாய் வந்ததென்றுபோய் முலைகுடிக்கும்படி பாலை யுவகையுடன் கொடுத் தருளினர்.

சிவபெருமான் அந்தமும் ஆதியு மில்லார் என்பதனை,

பலகலை யாகம வேதம் யாவையினுங் கருத்துப்
பதிபசுபா சந்தெரித்தல் பதிபரமே யதுதா
னிலவுமரு வுருவின்றிக் குணங்குறிக ளின்றி
நின்மலமா யேகமாய் நித்த மாகி
யலகிலுயிர்க் குணர்வாகி யசல மாகி
யகண்டிதமா யானந்த வுருவா யன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வதுதற் சிவமென்பர் தெளிந்து ளோரே.

என்னுஞ் சிவப்பிரகாசத் திருவிருத்தத்தாற் றெளிக. இக்கார ணத்தாலே சிவபிரானும் பன்றியாயினரே, அதுபோல நந்திருமாலும்



வராகவடிவெடுத்தலிற் சிறுமை யென்னை? என வைணவர் கூறியயங் குவார். அதற்குமிதற்குமுள்ள வேறுபாடு பெரிதே. விட்டுணுபன்றி யுருவெடுத்தது, தான் பரப்பிரமம் என்பதை யுண்மைப்படுத்தும் பொருட்டு, பாதந்தேடுவதற்காக எடுத்த அகங்காரவடிவம். சிவபெருமான் எடுத்தது, எவ்வெவ் வான்மாக்கட்கு எவ்வெவ்வாறு கருணைபுரியவேண் டுமோ, அவ்வவ்வாறு கருணைபுரியும் [illegible] அருட்கோலமாம். ஆகலால் அதனையும் இதனையும் ஒப்பிடல் நியாயவி ரோதமும் மாபாவமுமாகும். 18

22491

தூந்துபியார்த்தனநறும்பூமால்சொரிந்தனநல்கியகாட்சி
யந்தரர்கண்டொறுமன்னு [illegible]ருச்சித்தாரருந்தவர்க
ளெந்தையருளிருந்தவா[illegible]
பைந்தமிழ்மாறனும்பாரிற்பரிந்[illegible].

இ-ள். நல்ல பாலைப்பெருக்கி யுண்ணும்படி (பெருமான்) அளித் தருளிய காட்சியைக் கண்டு தேவதுந்துபிக ளொலித்தன. தேவர்கள் காணுந்தோறும் புட்பந்தூவி அருச்சனை செய்தார்கள். அரியதவத்தையு டைய முனிவர்கள் எமதுதந்தையாகிய சிவபெருமானது கிருபையிருந்த வாறு என்னெனக் கண்களினின்றும் நீர் சொரியநின்றார்கள். பசியதமிழ் வளர்க்கும் பாண்டியனும்பூமியில் அன்புற்றுப் பரவசமானார்கள். 19

உண்டமுலையருள்வான்கொண்டிழிகேழலுருவையொழீஇ
யெண்டருமீராறுகுமாரரெனவெழில்பூத்திறைஞ்சினர்
வண்டமிழ்மாறனுக்கமைச்சராய்வாழ்மினென்றருளி
யண்டர்பிரானகதம்பவனத்தெழுந்தருளினன்விடைமேல்.

இ-ள். பால்குடித்த முலையின் அருட் சிறப்பைப் பெற்று, இழிந்த பன்றிவடிவத்தைவிட்டு, மதிக்கத்தகுந்த பன்னிருகுமாரர்களென்றுசொல் லும்படி யழகுமிகுத்து வணங்கினர்; வளப்பமுடைய தமிழிற்

சிறந்த பாண்டியனுக்கு மந்திரிமாராய் வாழக்கடவிர் என்று அருள்புரிந்து தேவர்க்கு அதிபராகிய சிவபெருமான் கடம்பவனத்திற்கு இடபவாகனத்தின் மீதிவர்ந்து சென்றருளினர். 20

மைத்தலை வானுரிஞ்சுகிரிமணிமுடியில்வழுதியர்கோன்
மெய்த்தலைநின்றருச்சித்தானொருகுறியவ்விமலனைவெம்
பைத்தலைமாசுணம்புனையும்பாண்டீசரெனப்பகர்வ
ரத்தலநேத்திரபுரியென்றறைந்திடுமார்கலிஞாலம்.

இ-ள். கருநிறமுற்ற இடத்தையுடைய ஆகாயத்தை யுரோஞ்சுகின்ற வராகமலையின் அழகிய சிகரத்திற் பாண்டியராசன் உண்மையான இடத்தில்நின்று ஒருசிவலிங்கத்தை அருச்சனைசெய்தனன். அச்சிவலிங்கப் பெருமானை வெவ்விய படத்தலையுடைய சர்ப்பத்தையணிந்த பாண்டீசர் என்று சொல்வர், அந்தத் தலத்தை நேத்திரபுரி என்று கடலாற் சூழப்பட்ட இவ்வுலகமானது கூறுநிற்கும். 21

இன்னுமிதுவன்றி நுமக்கியம்புதுமொன்றெழின்முனிவீர்
மன்னியகாசிபன்றாயவழித்தோன்றல்வாரகமுனி
மின்னிவர்மாயாசலத்தின்மிசையொருவன்னியினீழ
றன்னின்மழவிடையோனைவணங்கியருந்தவம்புரிந்தான்.

இ-ள். இன்னும் இதுவல்லாமல் உங்களுக்கு ஒன்றைச்சொல்வோம் அழகுபொருந்திய முனிவர்களே! நிலைபெற்ற காசிப முனிவரது பரிசுத்தமாகிய சந்ததியான வராகமுனி என்பவர், மின்னல் விளங்குகின்ற மாயாசலத்தின்மேல் உள்ள ஒரு வன்னிமரத்தி னிழலில், இளமைபொருந்திய இடபவாகனத்தையுடைய பரமசிவனைவழிபட்டு அரியதவத்தைச் செய்தனர். 22

புரிகின்றதவமுனிமுன்புரிசடையோனெழுந்தருளி
விரிகின்றசதுமறையோய்விளம்புதிவேட்டதுவென்னச்



சொரிகின்றநறவிதழித்தொடையோய்சூழ்பவந்தொலைய
வரிகின்றசிவயோகமருணின்றாளடையவென்றான்.

இ-ள். தவத்தைச்செய்கின்ற வராகமுனிவர்க்கு முன்னர் முறுகிய சடையையுடைய சிவபெருமான்றோன்றி, விரிந்து விளங்கும் நான்கு வேதங்களிலும் வல்லமுனிவனே? நீ விரும்பியதைச் சொல்லக்கடவா யென்ன, தேன் பொழிகின்ற கொன்றை மாலையைத்தரித்த கடவுளே! சுற்றிய பாவங்கள் நீங்கும்படி, அவற்றையழிக்கின்ற சிவயோகத்தை அருளுகின் திருவடிகளைச் சேர்தற்கு என்று கூறினர் (முனிவர்.) 23

இயமமுதலானசமாதியினுருவமயன்விரிவின்
மயர்வறநல்குவன்மாயாசலமிதனைவராககிரிப்
பெயர்பெறவோதுகவெனுஞ்சொற்பெய்துவரம்பலவருளி
யுயர்மழவெள்விடைமீதெம்மிறைவனுமையொடுமறைந்தான்.

இ-ள். வராகமுனிக்கு இயமம் முதலாகிய சமாதியின்வடிவத்தைப் பிரமன் மிகுதியாக மயக்கமின்றி விளங்க உபதேசிப்பான், மாயாசலம் என்னும் இம்மலையை வராககிரி என்னும் பெயர்பெறும்படி சொல்க என்னுஞ் சொல்லைத் திருவாய்மலர்ந்து, பலவரங்களையும் கொடுத்து, உயர்ந்த இளமையாகிய வெள்ளிய இடபத்தின்மேல் எமது தலைவராகிய சிவபெருமான் உமையம்மையாரோடும் மறைந்தருளினர். 24

மாமுனிவன்யோகலிங்கமொன்றுவரைமிசைநிறுவிக்
கோமுனிவரொடும்வழுத்திக்கொட்புறும்வெவ்வினைப்பிறவி
போமுனிவுதரும்யோகம்பொருவறச்செய்தருமறையோர்
தாமுனிவந்தனைபுரியுந்தலைவனதுசரணடைந்தான்.

இ-ள். பெருமைபொருந்திய வராகமுனி யென்பவர் சிவயோகலிங்கமொன்றை மலையின்மேல் தாபித்து. தலைமைபெற்ற இருடி கணங்களோடு துதித்து, சுழற்றுகிற கொடிய வினைபாலுண்டாகும் பிறவி நீங்கு

இன்ற விரத்தியை யுண்டாக்கும் சிவயோகத்தை யொப்பில்லாமற்செய்து அரியபிராமணர்கள் உன்னி வழிபாட்டைச் செய்யுந் தலைவராகிய சிவபெருமானது திருவடிப் பேறாகிய முத்தியைச் சார்ந்தனர்.

சிவபெருமான் வராகவடிவெடுத்துப் பன்றிக்குட்டிகளுக்குப் பாலூட்டினமையாலும், பிரமதேவரின் வழித்தோன்றலாகிய வராகமுனியென்பவர் தவம்புரிந்து அருட்பேறுற்று, சிவலிங்கப் பிரதிட்டைசெய்து, முத்திபெற்றமையாலும் மாயாத்திரி என்னும்மலை வராககிரி எனப்பெயர் பெற்றது. 25

பன்றிக்குட்டிகளுக்குப் பால்கொடுத்த சருக்கம்.

முற்றிற்று.

ஆ செய்யுள்—146.

உ

சிவமயம்.

வேலுமயிலுந் துணை.

ஐந்தாவது,

# அருச்சுனன் றவச் சருக்கம்.

காமம் வெகுளி மயக்கம் என்னு முக்குற்றங்களையும் நீக்கிய முனிவர்களே! வராககிரியின் பெருமைகளை யெல்லாம் எடுத்துச் சொல்லவருதல் பெரியோர்க்கு நகையையுண்டாக்கும். அம்மலையின் பெருமையைச் சொல்ல வல்லவர் யாவர்? முன்னோர் காலத்து மதுரைக்கணுள்ள வெள்ளியம்பலம் வரைக்கும்தேவர்களும் முனிவர்களும் நிறைந்துநிற்க, பிரமவிட்டுணுக்கள் பக்கத்தேநின்று துதிக்க, தேவேந்திரன் பின்வருமாறு மதுரைச் சொக்கநாதப் பெருமானைப்பின்வருமாறு துதித்தான்.

நெற்றிக் கண்ணரே! சர்ப்ப ஆபரணமுடைய கடவுளே! காலகாலனே! விடையூர்தியே! நஞ்சுண்டதிருக் கண்டரே! விட்டுணுவாகிய பன்றியின் தந்தத்தையும், கூர்மத்தின் ஓட்டையும், மற்சத்தின் கண்ணையும், நரசிங்கத்தின் தோலையும், வாமனரின் கங்காளத்தையும் இன்னும் பலவற்றையுந் தரித்த பரமபதியே! காட்டிலேவேட வடிவங்கொண்டுசென்று அருச்சுனனது வில்லாலடிபட்ட வேதமுதலே! என்று பலவாறு துதித்து அடியேங்களுக்குத் தேவரீரன்றி வேறு களைக

னுண்டோ? ஆகலால் உய்யும்வகைபணியாய் என்றிரந்தான். அதனைத் திருநோக்கஞ் செய்தபெருமானார் புன் முறுவல் பூத்து அவ்விந்திரற்கு வேண்டுவரம் அளித்தருளினர். அப்போது அங்கயற் கண்ணியாம் மீனாட்சி யம்மையார், ஐயனே! தேவரீர் அருச்சுனனை யாட்கொள்ளற்காக வேடவடிவங் கொள்வது எப்போது என்றுகேட்டனர். பரமனார் கூறும். நம் அருட்சத்தியே! அவ்வடிவங் கொள்ளுங் காலமுமுண்டு. அப்போது நீ அதனைக் காணக் கடவாயென் றருளினர். நாட் கழிந்ததும் அக்காலம் வந்தது.

துரியோதனன், வீட்டுமன், சகுனி, கன்னன் முதலினோர் யாவரும் ஒன்று சேர்ந்து, சகுனி உபாயத்தால் பாண்டவரை வரவழைத்துச் சூதாடுவித்து அவரது இராச்சியம் நாடுநகர் முதலிய வெல்லாவற்றையும் அபகரித்துக்கொண்டு காட்டுக்குத் துரத்திவிட்டனர். பாண்டவர் காடுசென்று வராக மலைசென்று இருந்தார். அங்குத் தவம்புரிந்தமையாற் கண்ண பிரானைக் கண்டனர் வணங்கினர். சிவசின்னம் பொலிந்து விளங்குஞ் சீதர மூர்த்தி அவரைவாழ்த்தி, பாண்டு குமாரர்களே! மார்க்கண்டேயம் என்று ஒரு மலை யுளது. அங்கே தவஞ்செய்யின் சந்திர மௌலியாகிய சிவ பெருமான் நினைத்த வரம் அருளும். உங்கள் துன்பமும் நீங்குமெனச் சொல்லித் துவரை போந்தார். அங்ஙனமே அருச்சுனன் றவஞ்செய்தான். அவனை யாளுதல் வேண்டிப் படப்பாம்பணிந்த பெருமான் சிகைவகுத்து, வரைமாலை சூடி, நெற்றிக் கண்ணை மறைத்து, மழுவையும் மானையும்



பிடித்த திருக்கரத்தில் அம்பும் வில்லு மேந்தி, சோகி மாலை தரித்து, நீலநிறக் கச்சப்பூட்டி, செருப்பைக்காலில் மாட்டி, வேடவுருவங் கொண்டு சென்றார். கருங்கயற் கண்ணியாம் உமாபிராட்டி வேடுவிச்சி யுருவங்கொண்டு, கந்தனாகிய இளங் குதலைப் பாலனையும் கையிலேந்திக் கூடையுடன் புவனங்கள் அதிசயிக்கப் பின்னர்ச்சென்றார். சிவகணர்கள் வேடகூட்டங்களாகப் போயினர். வேதங்கள் நான்கும் நாய்களாகத் தொடர்ந்தன. இவர்நிலை யுணர்ந்த யமன் பன்றியாகிச் சென்றான். சிவபெருமானாகிய கிராத மூர்த்தி வில்லைவளைத்துப் பன்றி மேலுருவிப்பாயுமாறு பாணமொன்று விரைவின் விடுத்தார்.

பன்றி யர்ச்சுனனைத் தேடியோடிச் சரண் புகுந்தது. அருச்சுனன் றவத்தை விடுத்து அடைக்கலம் புகுந்தபன்றியைக் காக்கத் தொடங்கவே வேடமூர்த்திக்கும் அருச்சுனனுக்கும் பெரும்போர் மூண்டது. அந்தப் போரில் வேட மூர்த்தி பார்த்தனையெடுத்தெறிந்து வில்லையுந் துணிபடுத்தினார். கிரீடி பெருங் கோபமுற்றுத் தன் வில்லா லடித்தான். சர்வ லோகாதிபதியாய், சராசரப் பொருள்களெல்லாவற்றினும் வியாபித்து விளங்குவோராய் இலங்குஞ் சிவபெருமான் மீது அடிபட்டகாலத்தே எல்லாப் பொருள்களுக்கும் அடி பட்டன.

வேதமடி யுண்டன் விரிந்தபல வாகம
விதங்களடி யுண்டனவெலாம்
பூதமடியுண்டன விநாழிகை முதற்புகல் செய்
பொழுதொடு சலிப்பில் பொருளின்

பேதமடி யுண்டுன பிறப்பிலி யிறப்பிலி
பிறங்கலா சன்றன் மகளார்
நாதனம லன்சமர வேடவடி வங்கொடு
நான்கையடி யுண்ட பொழுதே.
விண்ணிலுறை வானவரில் யாரடி படாதவர்
விரிஞ்சனரி யேமு தலினோர்
மண்ணிலுறை மானவரில் யாரடி படாதவர்
மனுக்கண்முத லோர்க ளதலக்
கண்ணிலுறை நாகர்களில் யாரடி படாதவர்கள்
கட்செவி மகிபன் முதலோர்
எண்ணிப்பல யோனியிலும் யாவடி படாதன
விருந்துழி யிருந்துழியரோ.

என்ற வுண்மையை மாபாரதமும் முழங்கி விளக்கிற்று மல்யுத்தம் புரிந்து வேடமூர்த்தியா லெடுத்து மேலேயெறி யப்பட்ட அருச்சுனன், கீழ் வருவதற்கு முன் பரம மாதா வாகிய கருணையங் தடங்கடற் பெருமாட்டி, அருள் வள்ளால்! தேவரீர் திருவிளையாட்டை யினிமேற் காட்டுதலை விடுத்து அருள் புரியவேண்டுமென்று வேண்டினன். உடனே சிவபெருமான் இடபாரூடராய்ப் பார்வதி சமேதராய்க்காட்சி கொடுத் தருளினர். அருச்சுனன் பலவாறுமெய்யன்புடன் துதித்துத் தான்கருதிய வரங்களைக் கேட்டான்.

கண்ணுதற்பெருமான் அவைகளை யெல்லாங்கொடுத்து அருளி. அன்பனே! இத்தலத்திற்கு வடமேற் றிசையில் பிரமமலை யொன்றுளது. ஆங்குச்சென்று நீவிர் ஐவரும்



சுகிப்பீராக. இந்த இடம் யாம் யுத்தஞ் செய்தமையாற் சாபவில்லி யெனப் பெயர் பெறுக. இம்மலைக் கொடி யிடத்திற் சடக்கர மந்திரத்தை யுச்சரிப்பவர்க்கு முருகன் அருள்புரியும். இதுசத்தியம். இவ்வாறாக மலைக்கண் ஐம் பூத வடிவு கொண்டு நூல்களுக்குக் காட்சி யளிப்பேம் என்று பெருமானார் சகல கணர்களோடும் மறைந்தார். அருச்சுனன் சென்று துணைவர்க்கு நிகழ்ந்த வெலாங்கூறி, அவருடன் பிரமகிரிக்குப் போனான். சிவபெருமான் பெண்பன்றியாகப் பால் அளித்தமையாலும், வராகமுனிபூசித்து முத்திபெற்ற மையாலும், யமன்பன்றி வடிவங்கொண்டு அருச்சுனன் இடம் அடைக்கலம் புகுதலானும், இம்மாயாத்திரிக்கு வராக மலை யெனப் பெயர் வந்ததென்று சூதமுனிவர் கூறினர்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

காமமாதிமுக்குறும் பெறிந்தைம்புலக்
கள்வருர்நெறிதூர்த்துத்
தூமவொள்ளழற்கருத்திஞெண்பாற்றியே
துய்க்குமாமுனிவீர்காண்
மாமலர்ச்சுரும்பிமிர்பொழில்வராகமா
மலைப்பெருமையைமுற்றும்
யாமுரைப்பதுகேண்மினென்றிசைப்ப
நேரினோர்க்கொருநகையாமால்.

இ-ள். காமம் வெகுளி மயக்கம் என்னும் முப்பகைகளையுங்கடிந்து, பஞ்சப்புலக் ளென்னுங் திருடர் செல்லும் வழியையடைத்து, புகை கொண்ட ஒள்ளிய அக்கினிக்கு அவிமுதலியன இட்டுத் தவம்புரிந்து,

சிவாநந்தத்தை யநுபவிக்கும் முனிவர்களே! சிறந்த புட்பங்கள்தோறும் வண்டுகள் வீழ்ந்தொலிக்கும் பெரிய வராகமலையின் பெருமைகளையெல்லாம் யாஞ் சொல்வேங்கேட்பீராக என்று சொல்வதே மற்றையோர்க்கு நகையை யுண்டாக்கும். 1

யாவரக்கிரியாற்றலைவரையறுத்
திசைப்பவர்தமிழ்க்கூடற்
றேவர்கடேவன்வெள்ளியம்பலத்
திருநடகந்தெரிகாறு
பூவருஞ்சதுவேதனுமாயனும்
புலவரும்புடைபோற்றக்
காவருஞ்சதமகன்சிரங்குவித்தசெங்
கையினனெதிர்போற்றி.

இ-ள். அவ்வராக மலையின் பெருமை முழுதையும் எடுத்து அளவுபடுத்திச் சொல்லவல்லவர் எவர்? தமிழ் வளஞ்செறிந்த மதுரையம்பதிச் சோமசுந்தரக்கடவுள் வெள்ளியம்பலத்திற் றிருநடனஞ் செய்கின்றதைத் தரிசிக்கும் நாளில், தாமரைப்பூவிலிருக்கின்ற பிரமனும் திருமாலும் இரு பக்கத்தும் நின்று துதிப்ப, கற்பகச்சோலைக் கிறைவனாகிய இந்திரன் தலையிற்கூப்பிய கையினனாய்ப் பெருமான் முன் நின்று துதித்து. 2

பாலலோசனமாசுணப்பூணின
பாய்கரைவிடைப்பாக
காலகாலபார்ப்பனமடவார்வளை
கலைகவர்காபாலி



சூலபாணிநீறுடிபேயாடிய
சுடலையிலெரியாட
மேலையோரமுதுண்ணவெண்பாற்கடற்
கரியவெவ்விடமுண்டாய்.

இ-ள். நெற்றிக்கண்ணை யுடையவரே! சர்ப்ப ஆபரணரே! பாய்கின்ற வெள்ளிய இடபத்தை வாகனமாக வுடையவரே! யமனுக்கும் யமனாக இருப்பவரே! பிராமணப்பெண்களது வளையல்களையும் ஆடை முதலியவற்றையுங் கவருங் காபாலியே! சூலமேந்திய திருக்கையரே! விபூதியை யுத்தூளனமாகத் தரித்தவரே! பேய்களாடிய சுடலையிலே அக்கினியினின் றாடுகின்றவரே! தேவர்கள் அமிர்தத்தை யுண்ணும்படி வெள்ளிய பாற்கடலினிடத்தே தோன்றிய கரிய கொடிய நஞ்சையுண்டவரே. 3

ஏனவெண்ணெயிறென்புதோலாமையோ
டெருக்குமத்தணிந்தாய்வெம்
கானவேடுருத்தரித்தனையஞ்சவன்
கைப்பிரம்படியேற்று
யானவாறுகண்டிறைஞ்சிடேன்காண்குறு
முறுதியோருங்கொண்ட
ஞானவெம்பவந்துடைப்பவர்யாரினி
யுய்யலாம்வகைநல்காய்.

இ-ள். (விட்டுணுவாகிய) பன்றியின் கொம்பு, வாமனரின் எலும்பு, நரசிங்கத்தின் தோல், ஆமையின் ஓடு, எருக்கமலர், ஊமத்தம்பூ என்னும் இவைகளையணிந்தவரே! கொடிய வேடவுருவங்கொண்டு சென்றும் அருச்சுனனது கைவில்லினா லடிபட்டாய், இவ்வாறான தன்மைகளை

யான்கண்டு வணங்கேன், அவற்றைக் கண்டடையும் உண்மைநெறியார் தேவரீரது தொண்டரேயாம். இழிவாகிய வெவ்விய பாவங்களை நீக்கு வோர் வேறுயாருளர். ஆதலால் தேவரீர் உய்யும் வகையை எளியனே னுக்கு அருள்புரிவாய். 4

என்றிறைஞ்சலுந் தண்பிறைக்கண்ணியோனிள
நிலாநகையாடி
பன்றவன்றனக் கருள்சுரந்தளித்திடும்
போதிலங்கயற்கண்ணி
கொன்றைவார்சடையாயருச்சுனனையாட்
கொள்வதுகுறிக்கொண்டு
நின்றுநீபொருங்கிராதரூபங்கொள
நிகழ்வதென்றினியென்றாள்.

இ-ள். என்று இவ்வாறு இந்திரன் துதித்து வணங்குதலும் குளிர்ந்த பாலசந்திரனைத் தரித்த சிவபெருமான் இளமையாகிய சந்திரிகை காலும் பற்கள்தோன்றப் புன்முறுவல் பூத்து, அவ்விந்திரனுக்குக் கிருபைசுரந்து திருவருள் புரியுங்காலத்தில், மீனாட்சியம்மையார் (சுவாமியைநோக்கி) நீண்ட கொன்றைமாலையைத் தரித்த திருச்சடா முடியையுடைய பரம்பரனே! அருச்சுனனை அடிமைக் கொள்ளும் அருளை முன்னிட்டு, தேவரீர்நின்று போர்புரிந்த வேடரூபங்கொள்ள வருங்காலம் எக்காலம் எனக் கேட்டனள். 5

எம்மையாளுடையான்கயற்கண்ணிநு
ளொளிர்ன்மதிமுகநோக்கி.
மைம்மலர்க்குழலாயினிமேல்வருங்
காலமுமுளதென்று
மம்மையெய்துமப்போதுநீகாண்டிமா
யாசலத்தெனப்பூவை
கைம்முகிழ்த்தனள்கழிந்தனநாள்சில
காலம்வந்ததுவன்றே.



இ-ள். எங்களை யடிமையாக வுடைய சிவபெருமான் அங்கயற்கண் அம்மையாரது அழகுபொருந்திய முகத்தைப் பார்த்து, மலரணிந்த கரிய அளகத்தையுடைய நங்காய்! இனிமேல் அவ்வுருவையெடுக்குங் காலமும் இருக்கின்றது.

அது வருங்காலத்தில் மாயாத்திரி யென்னும் பழனி மலையிற் பார்த்தறிவாயாக என்றருள, உமையம்மையார் கைகூப்பினள். சிலநாள்கழிந்தன. கழியவே காலமும் வந்தது. 6

வெந்திறற்துரியோதனன்முதலினர்
மேவினர்விறற்பாண்டு
மைந்தரைவரும்பொருந்திபசூதில்வண்
பதியிழந்தருங்கான்புக்
கந்தநீள்வரையியக்காங்கொடுமுடி
யதனிடத்தடைந்தெம்பூம்
பைந்துழாய்புனைகண்ணனைக்கண்டனர்
பயிறவம்புரிந்தம்மா.

இ-ள். மிக்க வலிமையையுடைய துரியோதனன் (கன்னன்; வீட்டுமன், துரோணன், சகுனி) முதலாயினோர் கூடினார்கள். வீரமுடைய பாண்டுராசன் புத்திரர்கள் ஐவரும் பொருந்திய சூதாட்டத்தில் தமது வளப்பமுடைய நகரையிழந்து அரிய காட்டிற்புகுந்து, அந்த மாயாத்திரி மலையின்கண் ஒளிபொருந்திய உச்சியிற் சேர்ந்திருந்து செய்த தவத்தி

னாலே எமது பொலிவாகிய பசிய துழாய்மாலையைத் தரித்த கண்ணபிரானைக் கண்டனர். 7

இறைவர்கண் டடிதொழ லுங்கண்ண னுமவ
ரெழிற்றிருமுகநோக்கி
மறையுயிர்த்தமார்க்கண்டயமென்றொரு
வரையுளததன்மீதி
னறையுயிர்க்குமோர்முல்லைநன்னீழலி
னனிதவம்புரிந்தால்வெண்
பிறைமுடிப்பிரான்வரந்தருமுறுந்துயர்
பெயருமென்றுரைசெய்தான்.

இ-ள். பாண்டவ மன்னர்கண்டு பாதங்களை வணங்குதலும், கண்ணபிரான் அவரது அழகிய முகத்தைப்பார்த்து, வேதங்களொலிக்கும் மார்க்கண்டேயம் என்று ஒருமலை யிருக்கிறது, அதன்மீது தேனைப்பொழியு மொருமுல்லைக் கொடியுளது அதனது நல்ல நிழற்கணிருந்து தவம்புரிந்தால் வெள்ளிய பிறைச் சந்திரனைத் தரித்த முடியையுடைய சிவபெருமான் றோன்றி வரங் கொடுப்பர். உங்கட்குற்ற பெரிய துன்பங்களும் நீங்குமென்று கூறினர். 8

செய்யதாமரைக்கண்ணினனகன்றபின்
றேமலர்க்கொடிமுல்லைத்
துய்யநீழலிற்றவம்புரிவிசயனைத்
தொழும்புகொள்ளுதல்வேண்டிப்
பையராமுடிப்பண்ணவன்றண்ணளிப்
பார்வையோர்புடைவைத்தான்
வையமீன்றவளுணர்ந்திளகைவிருந்
தளித்தனண்மகிழ்நன்பால்.



இ-ள். சிவந்த தாமரைக் கண்ணாகிய கண்ணபிரான் இவ்வாறு கூறி (துவாரகாபுரிக்குச்) சென்றபின், தேன்பொருந்திய புட்பங்களையுடைய முல்லைக்கொடியினது பரிசுத்தமுள்ள நிழலிலிருந்து தவஞ்செய்த அருச்சுனனை யாட்கொள்ளத் திருவுள்ளங் கொண்டு படத்தை யுடைய சர்ப்பத்தைத்தரித்த சிவபெருமான் தண்ணிய கிருபாநோக்கத்தை யோர் பக்கத்து வைத்தனர். உலகமெல்லாவற்றையும் பெற்ற பரமேசுவரி யதனையறிந்து தம் நாயகரிடத்துக் குறுமுறுவலாகிய விருந்தைக் கொடுத்தனள். 9

வேணியோன்சிகைவகுத்தனன்வாகைமேன்
மிலைந்தனனுதல்காதில்
வாணிழற்சுடர்விழிகரந்தனன்மறைத்
தனன்மழுமானோர்
பாணியிற்சிலைபிடித்தனன்வடிக்கணை
பாணியொன்றினிற்கொண்டான்
றாணிவிக்கினன்வெரிநிடைக்கரியதோர்
கோதைகைதொகுவித்தான்.

இ-ள். சடாமுடியையுடைய பெருமானார், குடுமிவைத்தார், நெற்றி மீதும் செவிமீதும் வாகைமாலையைச்சூடினர், மிக்க ஒளியையுடைய அக்கினிக்கண்ணை யொளித்தார். மழுவாயுதத்தையும் மானையும் மறைத்தார், ஒரு திருக்கரத்தில் வில்லைத்தாங்கினர், மற்றைத் திருக்கரத்தில் கூரிய அம்பினை யேந்தினர், முதுகினிடத்தே அம்புக்கூட்டைக் கட்டினர், கருநிறமுடைய தோற்போர்வையைக் கைக்கு இட்டார். 10

நூலொளித்தமார்பிடைவரிக்கவடியி
னூலணிவருவித்தா
னீலமாசுணக்கச்சொரீஇநீனிறக்
கச்சரைவாங்வித்கான்

றேலடிக்கழலிரட்டனன்சிலம்பணி
துறந்தனனுகர்காள
மேல்பரந்தெனக்கறுத்தனன்கிராதர்போல்
வீறினனிகரில்லான்.

இ-ள். ஒருவாற்றானும் ஒருபொருளுந் தமக்குச்சமானமாகப்பெறாத பரமசிவன், உபவீதத்தைமறைத்த மார்பினிடத்தே வரிகளையுடையசோகி கோத்த நூல் அணிந்தார், கரிய பாம்பாகிய கச்சைவிடுத்து மேலதிறமுடைய தோற்கச்சை வரும்படிசெய்தார். சிலம்பு முதலிய ஆபரணங்களை நீங்கினவராய்ச் செருப்பைக் காலில் மாட்டினர், தாம் முன்னர் உண்ட நஞ்சு உடம்பெங்கும் பரந்தாற்போலக் கருநிறமுற்றார் வேடரைப் போலவேடங் கொண்டார். 11

குரும்பைமென்முலையஞ்சாயற்கொழுங்கயற
கண்ணிதன்னருந்
சுரும்பிமிரளகம்பாதிசுவற்புறம்
விரிந்துதாழத்
திரும்பவோர்பாதிவாரிச்செருகிமென்
குரலஞ்சேர்த்தாள்
கருங்கயலருட்கணேற்றகாட்சியி
லிருப்பதானாள்.

இ-ள். தென்னங்குரும்பைபோன்ற மிருதுவாகிய முலையையும் அழகிய சாயலையுமுடைய செழிய அங்கயற்கணம்மையார், தண்ணிய சுரும்புகள் ஒலிக்கின்ற கூந்தல் பாதி பிடரின் பக்கத்தில் விரிந்து தூங்கவும், மற்றைப் பாதியைச் (சீப்புக்கொண்டு) சீவி, மிருதுவான குரமலரைச் சூடினாள், கரியகயல் மீனையொத்த பெருமாட்டி இவ்வாறு ஏற்ற கோலத்தைக் கொள்வதிலிருந்தாள். 12



துய்யபைங்குழைகாந்துசங்கவெண்டோடுசேர்த்தாள்
செய்யவாய்வெள்வாயானவடளிபொன்மங்கலங்கழுத்துள்
வைகிடவொளித்தவெங்கைவள்ளுகிர்த்தாலிபூண்டாண்
மொய்யிளம்பாசிகுன்றிமணிவடமுலையிற்றாழ்த்தாள்.

இ-ள். சுத்தமாகிய பசிய குண்டலத்தைநீக்கி வெள்ளியசங்கக்குண்டலத்தை யணிந்தாள், சிவந்த வாய்வெண்மை யாகிய வாயாகக் கொண்டாள், தெளிந்த பொற்றாலிகழுத்துள் அடங்கும்படி செய்து புலியினது கூர்மையாகிய நகங்களாலான தாலியைத் தரித்தாள், நெருங்கிய பாசிமணிகளாலும் குன்றிமணிகளாலுஞ் செய்யப்பட்ட மாலைகளை முலையிற் சேர்த்தனள். 13

மணிவளைமறைத்துச்சங்கில்வளைத்தவெண்காப்பணிந்தா
ளணிவிரலாழிவஞ்சித்தழுங்குமோதிரந்தரித்தாள்
கணியிளந்தளிர்மருங்கிற்கருந்துணியறுவைசூழ்ந்தாள்
பிணிமுகமயிலஞ்சாயல்பிறங்கவேமறைத்துவந்தாள்.

இ-ள். இரத்தின வளையல்களை மறைத்துச் சங்கினால் வளைத்துச் செய்யப்பட்ட வெள்ளைக்காப்பைத் தரித்தாள், ஆழி விரலில் (குறி சொல்லி) வஞ்சித்து வாங்கியணியும் மோதிரம் போன்ற ஒன்றையணிந்தாள், வேங்கைமரத்தின் இளந்தளிர்களாற்செய்யப்பட்ட கரியதுணியாம் உடையைச் சுற்றினாள், மயில்போன்ற சாயலைமறைத்து இவ்வாறுருக் கொண்டுவந்தாள். 14

பாரினுக்கறங்களாற்றப்பணித்ததோவேதநன்னூற்
சீரியபொருளினீட்டந்திணித்தபெட்டகமோபேட்பி
னோர்கெழுபிரணவத்தைவளைத்தெடுத்ததுவோகண்டற்
கூர்கெழுகூரலாற்செய்கொடுங்கையிற்கொண்டகூடை.

இ-ள். தாழையினாலும் கூர்மைபொருந்திய பிரம்பினாலுஞ்செய்து கொடுங்கையிலே கொண்ட கூடையானது, பூமிக்குத் தருமங்களைச்செய்தற்காகச் செய்ததோ? வேதங்களாகிய சிறந்த நூல்களின்பொருட் கூட்டங்களை யெல்லாஞ் சேமித்த பெட்டகமோ? விருப்பத்துடன் அழகு விளங்காநின்ற பிரணவத்தை வளைத்துக் கோலியதோ? (யாதென்று கூறுவேம்.) 15

இன்னணங்கிராதரூபமெடுத்தனன்செருமலைக்கே
மன்னினரினநால்வேதம்வளைத்தனருமலிமான
வந்நிலையுணர்ந்துகாலனடைந்தனன்கேழலாகிக்
கன்னியுமிறையுமாயாசலங்கவின்விளங்கச்சென்றார்.

இ-ள். இவ்வாறாக வேடவடிவத்தைக் கொண்டனர். யுத்தஞ் செய்யும் மலையிடத்திற்குச் சிவகணங்களுஞ் சென்றனர். நான்கு வேதங்களும் நாய்களாகவளைந்தன, அந்த நிலைமைகளைப் பார்த்து யமன் பன்றிவடிவாகச் சென்றான். உமாதேவியாரும் சிவபெருமானும் வேடவடிவங் கொண்டு, மாயாத்திரி என்னும் மலையின் அழகு உலகம் விளங்கும்படி சென்றனர். 16

சந்தக் கலிவிருத்தம்.

விசயன்றவமுயலுங்கிரியிசைமுல்லைவனத்திற்
றிசைதுன்றியகருமாவடுசரத்தோடுமுன்னடப்பத்
திசைகொண்டுதொடர்ந்தோடிவளைப்பத்திரண்ஞாளி
யசைகொண்டுநடந்தானெமையாள்கின்றகிராதன்.

இ-ள். எம்மையாளுதலுடைய வேடமூர்த்தியானவர், அருச்சுனன் றவஞ்செய்யும் மலையின்மீதுள்ள முல்லைவனத்தில் அத்திசைவழியாவந்த பன்றியைக் கொல்லுதற்குரிய பாணத்துடன் முன்னரே நடந்து செல்ல, அப்பன்றி செல்லுந் திசையையறிந்து நாய்கள் ஓடிவளைப்ப, அசைதலைக்கொண்டு நடந்து சென்றார். 17



கிராதன்குனிசிலைசீர்கெழுமியவாளிமெய்யுருவி
வராகஞ்சரணெனச்சென்றுழிவளைகின்றசெந்நாய்கள்
விராவுந்தொனிசெவியிற்புகவிழித்தான்றவமொழித்தான்
பராவுந்தொழின்மறந்தான்விறற்பார்த்தன்புடைபார்த்தான்.

இ-ள். வேடமூர்த்தி வளைத்த வில்லினின்றும் சிறப்பாகவந்த அம்பானது (பன்றியின்) உடலை யுருவியதனால், பன்றியானது (அர்ச்சுனனுக்கு) அடைக்கலமெனச் சென்றபோது, வளைக்கின்ற செந்நாய்கள் மொய்க்குஞ் சத்தமானது தன்செவியிற் புகாநிற்க, அர்ச்சுனன் கண்களை விழித்தான், தவத்தை விடுத்தான், சிவபெருமானைத் துதிக்கின்ற தொழிலையும் விட்டான், பக்கத்திற்பார்த்தான். 18

சாலத்தெருமந்தேதனதாணீழலடைந்த
தூலக்கருமாமீதடுதொழின்ஞாளிவிடுத்துக்
கோலுய்த்ததுவரிக்கார்முகங்குழையக்கொலைவேடன்
காலிற்கடிதடருஞ்செயல்கண்டானுள்வெகுண்டான்.

இ-ள். மிகவுஞ் சுழன்று தன்னுடையகாலின்கீழ் அடைக்கலம் புகுந்தபெரிய கரியபன்றியின்மேற் கொல்லுந் தொழிலையுடைய நாய்களைவிடுத்து, வரிந்து கட்டப்பட்ட வில்லை வளையவாங்கிக் கொலைத்தொழிலுடையவேடன் பின்னரும் அம்பைச் செலுத்தியதையும், அப்பன்றி தன்காலின்கீழ் விரைவாகவந்து சரண் புகுந்ததையும் அருச்சுனன் கண்டு மனத்திற் கோபங்கொண்டான். 19

வேடாசரணெனவந்ததைவிடுவேனலன்மனத்தி
னூடாதொழியென்றானிதுநன்றென்றுநகைத்தே
நீடாரணியத்தேயுடனெறிதப்பியிந்நெறியின்
பாடான்றதானேநரபழுதென்றனன்மொழிவான்.

இ-ள். வேடனே! அடைக்கல மென்று வந்ததை யான்காவாது விடமாட்டேன். இனி யதனை நீ விரும்பாதே போவாய என்று அருச்சுனன் சொன்னான், அப்போது வேடமூர்த்தி, நரனே! இதுநன்றா யிருக்கிறதென்று நகைத்து, நீண்ட காட்டினிடத்தே வழிதவறியோடி யிவ்வழியிற் றானாகவே வந்துசேர்ந்தது, நீ சொல்வது தவறாகும் என்று பின்னருஞ் சொல்வார். 20

பின்னுஞ்சடைமுடியாய்பிறைமுடியானடியவர்போ
லுன்னுந்தவமுடையாயிது தகுமோவுனையடைந்தா
லென்னம்பொடுவருமாவினையென்பால்விடுவதுவே
மன்னுந்தவமென்றானதுமறுத்தான்கொறுகொறுத்தான்.

இ-ள். முறுகிய சடைமுடியையுடைய நரனே! பாலசந்திரனை யணிந்த தலையை யுடைய சிவபெருமானது அடியவரைப்போல, நினைக்குந் தவக்கோல முடையாய், இது நிற்குத் தகுதியாமோ? உன்னைச் சரண்சேர்ந்தாலும் எனது அம்புடன்வரும் மிருகத்தை யென்னிடம் விடுவதே நிலைபெற்ற தவமாகுமென்று வேடமூர்த்தி கூறினர். அருச்சுனன் அதுகேட்டு மறுத்துக் கொறுகொறுத்தான்.

கொறுகொறுத்தான் என்னும் அடுக்குவெகுளிப் பொருளில்வந்தது. பிறை—பிறத்தலுடையது ; சந்திரன் தவம் - தப் என்னுந் தாதுவினடியாகப் பிறந்த வடமொழி. 21

ஒருவேடனென்றுறுத்தாய்செருமுடிப்பேனுலகெல்லாங்
கருவேரறநின்னைப்பொருகின்றேனதுகாணென்
றிருகால்வளைத்தொருகார்முகமெடுத்தான்கணைதொடுத்தான்
குருமாமரபோனுஞ்சிலைகுழைத்தான்செருவிளைத்தான்.

இ-ள். ஒரு வேடனென்று நினைத்துக்கோபிக்கின்றாய், அருச்சுனனே! உலக மெல்லா வற்றையும் போர்புரிந்து அழிப்பேன்



கருவேரும் இல்லாமற்போகும்படி உன்னுடன்போர் புரிவேன் அதனை பார்ப்பாயாகவென்று, ஒருவில்லையெடுத்து இருகாலினும் பொருந்த வளைத்து அம்பை விடுத்தனர். குருகுலாதிபதியாகிய அருச்சுனனும் வில்லை வளைத்துப் போர்புரிவானாயினான். 22

ஓமந்திரமுதலானதொல்லுருவந்தெரிவரியோ
னாமந்திரவேடன்னெனநடித்தாலறிவானோ
மாமந்திரமன்போடுறப்பெய்தானவைமகிழ்விற்
பூமந்திரமன்பொட்டியவாறிற்றுகள்போன்ற.

இ-ள். ஓம் என்னும் பிரணவமந்திரமுதலான பழைய வடிவங்களொன்றுந் தெரிதற்கரிய சிவபெருமான், அச்சத்தைக்கொடுக்கு முறுதியுடைய வேடனென நடித்தால் அறிவானோ? சிறந்த மந்திரங்களை அன்புடனே யுச்சரித்துப் பாணங்களைப்பொழிந்தான், அவையெல்லாம் பூவாகிய வீட்டின்கண் அன்புடனே ஒட்டிய பாகம் போன்ற தன்மைத்தாயின. 23

உள்வாங்குவில்வளையுங்கணையுமிழ்கின்றதொர்விரைவும்
விள்வாயெழுநகையும்மறைகூவுந்தெறுவிறலுந்
துள்வாகுதிசிறுகும்படிபெருகுந்தொழில்விதமு
மெள்வார்சிலரிலதாயிருவருமேற்றெதிர்பொருதார்.

இ-ள். உள்வாக வளையும் வில்வளையும், பாணங்களைக் காலுகின்ற விரைவும், திறந்த வாயினின்றுந் தோன்றும் வெகுளிச்சிரிப்பும், போர்க்கு வருகவென அறைகூவும் வீரமும், துள்ளுகின்ற தோளுஞ் சிறுக்கும்படி பெருகுகின்ற தொழில்வகையும், இகழத்தக்கவர் ஒருவருமில்லையென்னும்படி யிருவரும் எதிர்த்தெதிர்த்துப் போர்புரிந்தார். 24

முடித்தார்செருமுடிவிற்றவமுயல்வோன்கரிவில்லா
லடித்தானடியுண்டானவன்சரணாறிவார்மற்

பிடித்தான்பிடியொடுங்கீழொடுமேலும்பெருமானுங்
கடித்தார்விசயனும்வீழ்ந்துடனெழுந்தானுமைகண்டாள்.

இ-ள். போரினை முடித்தார், முடிவுகாலத்தில் தவத்தைச்செய் வோனாகிய அருச்சுனன்வரிந்து கட்டப்பட்ட வில்லினாற் சிவபிரானை அடித்தான், அடிபட்டவராகிய சிவபெருமானது திருவடிகளை யெவர் அறிய வல்லவர், சிவபெருமான் அருச்சுனனுடன் மற்போரைக் கொண் டார், பிடியுடனே கீழும்மேலும் ஆகப்பெருமானும் புரண்டனர், அர்ச் சுனனும் விழுந்தெழுந்தான். அதனையுமையவள் பார்த்தனள். 25

சிலையாலடிபடும்வேளையிலெவர்தா மடிகொள்ளா
ரிலைமாலயன்முதலாமுயிர்யாவுந்தழும்புற்ற
மலைபார்த்தனினுடன்மீதினும்படவிம்மிதமுற்றான்
கலைசூடியுமுலகெங்குறைபதியென்பதொர்காட்டே.

இ-ள். வில்லினால் (சிவபெருமான்) அடிபட்ட சமயத்தில் யாவர் தாம் அடிபடாதவர்? ஒருவருமில்லை, விட்டுணு பிரமன்முதலாமுயிர்கள் எல்லாம் தழும்புகொண்டன, போர்புரிந்த அருச்சுனனது உடலினும் அவ்வடிபட அவனும் ஆச்சரியமுற்றான், ஓர்பிறைக் கலையைத் தரித்த சிவபெருமானும் உலகமெங்கும் வியாபித்திருக்கின்ற பதியென்பதற்கு இதுவுமோர் உதாரணமாம். 26

கண்ணன் சாரசத்தனா லடிக்கப்பட்டு ஓடிய காலத்தும், அசோதை யினால் உரலிற் கட்டப்பட்டு அவளால் அடிக்கப்பட்ட போதும், இறை வர்க்குமல ராகச் சாத்தும்படி கண்ணைத்தோண்டியபோதும், வாலியால் அடிக்கப்பட்ட சமயத்தும் ஒருவருக்காயினும் அவ்வாறு நிகழாதாக, இது நிகழ்ந்தமை எங்கும் வியாபகனென்பதற் கிலக்கியம் என்பார் "கண் கூடே" என்றார்.



அண்டாதிபர்மலர்தூவிவிண்ணார்த்தாரருமறைகள்
பண்டாயினதுதிகொண்டனதருமன்பழவடிவங்
கொண்டான்மலரடிபோற்றினன்குழகன்மழவிடைமேல்
விண்டாவியெழுந்தான்விசயன்கண்டுவிழுந்தான்.

இ-ள். தேவலோகத்தி லிருப்பவர் ஆகாயத்தில் மலரைச்சொரிந்து ஆரவாரித்தார், பழமையாயுள்ள அரியவேதங்கள் தோத்திரஞ்செய்தன, யமனும் பழைய உருவத்தைக்கொண்டு (சிவபெருமானது) தாமரைமலர போன்ற திருவடிகளைத்துதித்தனன், மணக்கோலத்தை யுடையவராகிய சிவபெருமான் இளமையாகிய இடபத்தின்மேல் ஆகாயத்திற் றாவியெ ழுந்தனர், அருச்சுனன்கண்டு விழுந்து வணங்கினான். 27

வாயிற்கைபுடைத்தான்முகமலரிற்கையறைந்தான்
தீயிற்புகையெழவீழ்பவர்சிவணப்பதைபதைத்தான்
றாயிற்கனிவுடையாயறிவில்லேன்றவறிழைத்தே
னாயிற்கடைபடுவேனுய்வதுண்டோவெனநைந்தான்.

இ-ள். அருச்சுனன், வாயிலே கையாலடித்தான், முகமாகிய தாம ரைமலரில் கையாலறைந்தான், நெருப்பிலே புகையெழும்புமாறுவீழ் கின்றவர் போலப்பதைபதைப்புற்றான், தாயைப்பார்க்கினுங் கனிவுடைய வரே, அறிவில்லாதவனாகிய யான்குற்றஞ்செய்தேன், நாயினுங் கடை யேனாகிய அடியேன் பிழைக்கும் வழியும்உண்டோவென்று வருந்தினான்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நைவான்முகமலர்ந்துநகைநிலவுபரப்பியலா
நளினம்விண்டு
மைவாளொண்கண்ணியொடுமெதிர்ந்துமழவிடைக்காட்சி
வழங்கிமன்னு

மெய்வாய்மையுடையவில்லியர்தலைவநல்விநோதமொன்று
விளைத்தேமஞ்ச
னுய்வாழிவேணவாவுரைத்தியென்றானன்பர்தம
துணர்வினின்றான்.

இ-ள். வருந்துகின்ற அருச்சுனன் முகமலர்ச்சிகொண்டு பற்கள் நிலவைப் பரப்புந்தன்மையாக, தாமரை மலர்போலும் வாய்திறந்து, கரிய வாள்போன்ற அங்கயற்கண்ணம்மையாரோடும் முற்பட்டுக்காட்சிகொடுத்து, அருச்சுனனை நோக்கி, அரசனே! உண்மையுடைய வில்வீரன் நீயாகலால் ஒரு விளையாட்டைச்செய்தேம்; அதனால் (சிறிதும்) பயப்படாதே, நீயுய்ந்து வாழுதி, வேண்டிய விருப்பங்களை யெல்லாஞ்சொல்லக்கடவாய் என்றார், அன்பரது இருதயங்கடோறும் நின்றவராகிய சிவபெருமானார். 29

புன்மலத்துக்கீடமொருபொருளோபல்லுயிர்க்குதவும்
பொருணீயன்றோ
நின்மலர்த்தாளுணர்ந்தருச்சித்தொருபணியும்புரிந்திலே
னீயாட்கொண்டா
யென்னறிவுபோயரியவுனதறிவுமெனதறிவு
மிரண்டிலாமை
யுன்னதெனக்கலந்தன்றேவுலகொழுகுமாறுழுதி
ஞுலுமெந்தாய்.

இ-ள். எமது தந்தையே மலத்திலுள்ள புழுக்கள் ஒருபொருளாகுமோ? பலஆன்மாக்களுக்கும் திருவருளைக் கொடுப்பவர்தேவரீரன்றோ? தேவரீருடைய தாமரை மலர்போன்ற திருவடிகளையறிந்து அருச்சனை செய்து ஒருதிருப்பணியையுஞ் செய்திலேன், அவ்வாறான சிறியேனை



யுந் தேவரீர் அடிமைக் கொண்டீர், என்னுதற்போதுணர்ச்சியொழிந்து, தேவரீரது அறிவு என்றும், என்னுடைய அறிவு என்றும் இரண்டறிவில்லாமல் உன்னுடைய அறிவாக வன்றோ இவ்வுலகம் இன்பத்தை யனுபவிக்கும், அவரெத்தன்மையாய் ஒழுகினாலும் அவர்க்குத் தற்போதமுளைப்பில்லை யென்பதாம். 30

வேண்டவருவென்றியுநின்றொண்டருக்காட்
படவேண்டும்விரவியாண்டுங்
காண்டொறுங்காண்டொறுங்காட்சிதரல்வேண்டுங்
கன்னன்முதலியரைக்காதி
மூண்டமரிடைவேண்டும்பாசுபதம்
வேண்டுமமர்முடியுங்காறு
மாண்டகையேவைகவொருதலம்வேண்டும்
பவந்தொறுநீயாளல்வேண்டும்.

இ-ள். (யாவரும்) விரும்பாநிற்க வெற்றிவேண்டும். அஃதல்லாமல், தேவரீரது திருத்தொண்டருக்கு அடிமையாதல் வேண்டும், எவ்விடத்தும் கலந்துநின்று தரிசிக்குந்தோறும் தரிசிக்குந்தோறும் தேவரீர் பிரசன்னமாதல் வேண்டும். கன்னன் முதலாய அரசர்களை யெல்லாம் மூளுகின்ற போர்க்களத்திற் கொன்று வெற்றியடைதல் வேண்டும், அதற்குப் பாசுபத அத்திரம்அருளல் வேண்டும், ஆண்டன்மையை யுடைய கடவுளே! போர்தொடங்கும் வரையும் அடியேம் இருத்தற்கு ஓரிடமும் வேண்டும். பிறவிகடோறும் தேவரீரடியேனை யாட்கொள்ளுதலும் வேண்டும். 31

என்றானவ்வாறுனக்கீதற்குமாருதத்
திசையினெழுந்தென்ஞான்றும்
பொன்றுதலிலாதகிரியொன்றுளதவணீயப்
போகிவாழ்தி

னின்றுடல்புரிதலினலிவ்விடனுஞ்சாபவில்லி
யெனும்பேர்பெற்றுக்
குன்றுமல்விளங்குகவென்றனமலன் மீட்டுமொன்று
கூறுகின்றான்.

இ-ள். என்று (அருச்சுனன்) பிரார்த்தித்தான். மலரகிதராகிய பரமசிவன் அவ்வாறே வரங்கொடுத்து, இதற்கு வடமேற்குத்திசையில் வளர்ந்து எக்காலத்தும் அழியாதிருக்கின்ற பிரமமலை ஒன்று இருக்கின்றது நீங்கள் ஐந்துபேரும் அவ்விடஞ்சென்று இருக்கக்கடவீர்! யாம்நின்னு போர்புரிதலால் இந்த இடஞ்சாபவில்லி என்னும் பெயரைப்பெற்று, குறையாது விளங்கக்கடவது" என்று திருவாய் மலர்ந்தருளிப் பின்னருமொன்று கூறுகின்றார். 32

புரியிதனுண்மார்க்கண்டன்முதலினார்க்கும்பகவதிக்கும்
பொடிக்குநெற்றி
யெரிவிழியில்வருமுருகனருள்வழங்குமினிமேற்றண்
ணிழன்மென்முல்லை
வரிமலர்ப்பூங்கொடியிடத்தாறெழுத்தையுமுச்சரித்தவர்பாண்
மஞ்ஞையூர்தி
தெரிசனநன்களித்துமுத்திவீடுதவுந்திண்ணமின்னுஞ்
செப்புவோமால்.

இ-ள். இந்நகரத்துள் மார்க்கண்டேயன் முதலாயினோர்க்கும், து-காதேவிக்கும் அக்கினிக்கண்ணினின்றுந் தோன்றிய நமதுகுமாரன் கிருபை செய்வான், இனிமேல் குளிர்ந்த நீழலையுடைய மிருதுவான நிறமுள்ள பூக்களைக்கொண்ட பொலிவான முல்லைக்கொடியிடத்து இருந்து (அவனது) சடக்கர மந்திரங்களையும் உச்சரித்த அன்பரிடத்து மயில்வாகனனாகிய நங்குமரன், நன்மையொடுந் தெரிசனங்கொடுத்து முத்திப்பேற்



றையுங் கொடுப்பான். இதுசத்தியம் இன்னுஞ் சொல்லுதுங் கேட்பாயாக. 33

வரையிதன்கணைம்பூதவுருவுகொண்டந்தலத்திமையோர்
முனிவர்மற்றோர்
பரசிவழுத்திடவுறைதுநுங்களுக்குங்காட்சிபரிந்
தளிக்குவாமென்
றுரைசெய்துமையொடுமமலன்மறைந்துபூம்புரையினுற்று
ஞெழிந்தநால்வ
ரரசரும்பெற்றுயர்ந்தவிசயனும்பிரமகிரியினைச்சென்
றடைந்தாரன்றே.

இ-ள். இம்மலையி னிடத்தே ஐம்பூத வுருக்கொண்டு அழகிய இடத்து வசிக்கும் தேவர் முனிவர் ஏனையோர் யாவருந் துதித்துவணங்க இருப்போம், உங்களுக்குக் காட்சியையன்புடனே கொடுப்போம் என்று திருவாய் மலர்ந்து உமாதேவியாரோடும் சிவபெருமான் மறைந்துபொலிவிளங்கிய குகையுட்சென்றார் இவ்வரத்தைப்பெற்ற அருச்சுனனும்மற்றைய சகோதரர் நால்வரும்பிரமகிரியை யப்போதே யடைந்திருந்தனர், பூம்புரை-ஓர் தானமுமாம். 34

ஆதலினேனப்பறழைக்கவ்வுருக்கொண்டவிர்சடையோ
னளித்தலானு
மாதவங்கூர்வராகமுனிசிவயோகமிழைத்துமுத்தி
மருவலானு
மேதகுகூற்றிறனைமென்முனையெழுந்துவிசயனுழை
மேவலானு
மேதமின்மாயாசலந்தான்வராககிரியெனவழங்கிற்
றென்றான்சூதன்.

இ-ள். இவ்வாறு யிருத்தலால், பன்றிக்குட்டிகளுக்கு அந்தவடிவத் தைக்கொண்டு விளங்காநின்ற சடையையுடைய பரமசிவன்பால்கொடுத்த தனாலும், பெரியதவத்தின் மிக்கவராகமுனிவர் சிவயோகம்செய்துமுத்தி யடைதலாலும், மேன்மை மிக்கயமன்பன்றியாகப் போர்முனையினின் றும் ஓடி யருச்சுனனிடஞ் செல்லுதலாலும் குற்றமில்லாத மாயாத்திரி என்பதற்கு வராககிரி எனப்பெயர் பொருந்திற்றென்றார் சூதமுனிவர்.

அருச்சுனன் றவச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள்—181.

உ.

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

ஆறவது,

# வராககிரிச் சிவத்தான சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தொன்மன்றமுனிவர்சூதமுனிவனைத்தொழுதுநோக்கி
நன்மறைவியாதமாணவரினுநன்றுணர்ந்தோய்ஞால
மன்மறையவர்சூழ்மேனவரையின்மால்விடையோன்வைகும்
பன்மறைபயிறனங்கள்புகலெனப்பகரலுற்றான்.

இ-ள். பழமை யாகிய வேதங்களில் வல்ல நைமிசாரணியமுனிவர் கள் சூதமுனிவரைப் பார்த்து, சிறந்த வேதங்களைத்துறைப்படுத்திய வியாசமுனிவரது மாணாக்கர் அனைவருட் சிறந்தபொருளை யறிந்த முனிவ ரே! பூமியின்கண் நிலைபெற்ற அந்தணர்கள் சூழாநின்ற பெரிய வராக மலையின்கண், இடபவாகனராகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற பல வேத மந்திரங்கள் ஓதப்படுகின்ற இடங்களைச்சொல்லி யருள்வீராகவென னச் சூதமுனிவரும் சொல்வாராயினர். 1

பண்டுதம்பணிகளாற்றுதகந்தைவெம்பரவைமூழ்கி
யண்டர்கோனகரின்மேவுதருக்களந்தணராய்க்கேழல்
விண்டொடுகுடுமிவெற்பில்விளங்குமோர்பிலத்திலுற்றுத்
துண்டவெண்பிறையோர்போற்றித் துறுகலினினார்கறிவி.

இ-ள். முன்னர்க் காலத்தில் தம்முடைய தொழில்களைச்செய்யா மல் அகங்காரமாகிய கொடியகடலில் மூழ்கி, தேவர்தலைவனாகிய இந்திர

னதுாகாத்தில் இருக்கின்ற தருக்கள் பிராமணராகி, பன்றி மூங்கில் என்னு மிவைகளோடு கூடிய சிகரத்தை யுடைய வராகமலைக்கண் விளங்கும் ஒருகுகையுட் பொருந்தி, பிறைச் சந்திரனைத் தரித்த பெருமானைத் துதித்து, முழைகளிற் பூங்கொத்துக்களைச் சொரிந்து. 2

மூலத்துவாயுவூர்த்தமுகமெனவுதித்தமேனற்
பாலத்திற்பிரமரந்திரத்தின்மீதுருவநிற்குங்
காலத்திற்கடவுள்காட்சியளித்தனன்கருணைபொங்கச்
சாலத்தாங்கருணைபெற்றுத்தருக்களுஞ்சார்ந்ததானம்.

இ-ள். மூலாதாரத் துள்ள பிராணவாயுவானது, மேன்முகமெனத் தோன்றிய மேலான நல்ல நெற்றியிலுள்ள பிரமரந்திரத்தின்மேல் உருவும்படியான காலத்திலே, அருளானது சுரக்கச்சிவபெருமானது மிக்க அருளை யடைந்து, அம்மரங்கள் யாவும்தத்தம் இடத்தை யடைந்தன. 3

பிரமரந்திரத்தூதித்துப்பெருகமிழ்திழிந்ததானம்
வீரவுதென்னருவியாகவீழ்ப்பவத்துறுகண்மீதி
ரெண்முடிவீழ்ந்துமென்பூவாயிடைவிளங்கலாற்போற்
புரவரசமருங்குன்றுபூம்புரையாயிற்றன்றே.

இ-ள். பிரமரந்திரத்தி னின்றுந் தோன்றிச் சுரக்கின்ற அமிழ்தமானது இறங்கிய இடத்திற் கலந்த அழகிய அருவியாகத் துளித்துவிழ, அம்முழையின்மீது அமரும் சிவபெருமானது திருமுடியில் இருந்து விழுந்த மிருதுவானபூ அவ்விடத்தில் விளங்குதலால், அழகிய புரவாசு (பூவாசுமரம்) இருக்குமலை பூம்புரை எனப்பெயர் பெற்றது. 4

தீவந்தருபுரியுந்தானஞ்சார்குநர்விழைந்தயாவு
முவந்துடனெய்தவன்போடளிப்பர்யோகிசர்பாசப்
பவந்தெறுமுனிவர்வைகிப்பழமறைதெரிதற்கொண்ணாச்
சிவந்தனையடைந்தாரயரேயதன்பயன்றெரிகிற்பாரே.



இ-ள். தருக்கள் தவத்தைச்செய்யும் அவ்விடத்தை யடைகின்றவர் விரும்பின எல்லாவற்றையும் மகிழ்வுடன் பெறும்படியோகீந்திரர்கள் அன்புடன் கொடுப்பர், மும்மலங்களால் உண்டாகும் பிறவியை யறுக்கின்ற இருடிகளும் (அவ்விடத்து) இருந்து (அங்ஙனம் கொடுப்பர்), பழையவேதங்களாலும் அறிதற்கரிய சிவபெருமானையடைந்த அடியவரே அதனது பிரயோசனங்களை யறியவல்லவராவர். 5

அன்னதன்பாங்கர்விண்ணோர்க்கலைகடலமுதவாங்கிப்
பன்னருஞ்சிறப்பினல்கும்பசுந்துழாய்ப்படலைமாயன்
முன்னரசியற்றுந்தானமொன்றுளத்ததனைமுன்னோர்
மன்னவனென்பர்யாவர்வரைவளம்வகுத்துச்சொல்வார்.

இ-ள். அம்மலையின் பக்கத்திலே, திரைகொண்ட சமுத்திரத்திற் றோன்றிய அமிர்தத்தை யெடுத்து தேவர்களுக்குச் சொல்லுதற்கரிய சிறப்புடன் கொடுக்கும் பசிய துழாய்மாலையை யணிந்த விட்டுணுவானவர் முன்னர் அரசுசெய்யும் இடம் ஒன்று இருக்கின்றது, அதனை முன்னோர் அரசனென்று கூறுவர், அம்மலையின் வளத்தை யெடுத்துச் சொல்ல வல்லவர் எவர்? 6

புண்ணியநதியுந்தண்ணஞ்சுனைகளும்பொலன்பூங்கொன்றைக்
கண்ணியனருள்பூந்தண்டார்கடிமலர்கடம்பமார்ப
னண்ணியகோயின்மற்றுமளப்பிலனவுமேனும்
வெண்ணிலாமுடியோன்றானமைந்துள விசேடித்தோங்கும்.

இ-ள். புண்ணியதீர்த்தங்களும், குளிர்ச்சி பொருந்திய அழகிய சுனைகளும், பொன்மயமாகிய பொலிவான கொன்றைமாலையைத் தரித்த சிவபெருமானும், வட்ட வடிவான பொலிவானகுளிர்ந்த கடப்பமலர் மாலையையணிந்த மார்பினையுடைய குமாரக்கடவுளும் எழுந்தருளியிருக்கின்ற கோயில்களும் பிரவிசேடதானங்களும் அளவில்லாதனவாக இரு

க்குமாயினும், வெள்ளியபிறைச்சந்திரனைத் தரித்த சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடமாக விசேடித்து விளங்கும் ஐந்துதானங்கள் உள்ளனவாகும். 7

ஐம்பெருந்தலத்தினாற்றல்கேட்பினன் கறையிற்சென்னி
கம்பிதங்கொளினுட்கொள்ளிறகதிதருங்கதிவந்தெய்தும்
வெம்பவவிருளையுள்ளவிளக்கினாலெரித்துவீட்டின்
செம்பொருளுணர்விரையந்திரிவின்றித்தெளிந்துகேண்மின்.

இ-ள். அந்த ஐந்து பெரியதலங்களின் பெருமைகளைக் கேட்டாலும், நன்மையாகச் சொன்னாலும் தலையசைப்புக் கொண்டாலும், உயர்வை யளிக்கும் முத்திபுண்டாகும், கொடிய பிறவியாகிய இருளை மனத்தகழியி னுள்ள ஞான தீபத்தினா லெரித்து அழிக்கின் செவ்வியபொருளென்னும் உண்மைப்பொருளை யுணரவல்ல முனிவர்களே, சந்தேகம் விபரீத மில்லாமல் (யாங்கூறுவனவற்றைக்) கேட்பீராக. 8

சூழ்மலர்ப்பொதுள்பைங்கானிற்றோகைமேகாரமாலுங்
கேழ்கிளர்மேககாரகிரகமொன்றுளதொன்றாண்டு
தாழ்வரக்குறிநிறீஇமாதவந்தினைத்துருவந்தாங்கி
வாழ்வுறவழிபாடாற்றிப்பிருதிவிவணங்கிற்றன்றே.

இ-ள். மலர்நெருங்கிய சோலைகளாற் சூழப்பட்ட பசிய அவ்வனத்தில் கலாபம் போன்ற மேகங்கள் ஆரம்போலத் தாங்குகின்ற, நிறம் விளங்குகின்ற மேககாரகிரகம் ஒன்று அவ்விடத்துளது. ஆங்கு, ஆழும்படியாகச் சிவலிங்கம் ஒன்று தாபித்து, பெரிய தவத்தைச்செய்து உருவெடுத்து, வாழும்படியாக வழிபாட்டைச் செய்து, பிருதிவி பூதமானது அருச்சனை செய்தது. 9

பிருதிவிவணங்கலோடும்பிறைநறுங்கண்ணிவேய்ந்தோ
னருளினங்குணந்திகழ்தகாட்சிநன் கருளிச்சென்றான்



பொருவிறொன்மறைகணான்குப்போற்றுமக்குறிக்கெஞ்ஞா
யிருடபிபிருதிவீசனெனும்பெயர்விளங்கிற்றெங்கும். [ன்று

இ-ள். பிருதிவிபூதமானது (இங்ஙனம்) வழிபாட்டைச்செய்தலும், பிறையாகிய நல்ல கண்ணியைத் தரித்த சிவபெருமான், அருள்வடிவாகிய சத்தம் பரிசம் ரூபம் இரசம் கந்தம் என்னும் ஐந்து குணங்களும் விளங்கும் வடிவை நன்மையோடுங் காட்டிச்சென்றனர், ஒப்பில்லாத பழைய நான்கு வேதங்களாலுந் துதிக்கப்பட்ட அந்தச் சிவலிங்கத்திற்கு, எக்காலும் மலமாகிய இருளையழிக்கும் பிருதிவீசர் என்னும் பெயர் எவ்விடத்தும்விளங்கிற்று. 10

கலி விருத்தம்.

ஓதுதொல்வாயுவின்றிசையினும்பரெண்
வேதகூபத்துறைவேங்கைநீழலிற்
காதலித்தப்புவோர்கடவுட்கன்னியாய்த்
தீதரநோற்றதொராறுதிங்களே.

இ-ள். சொல்லப்பட்ட வடமேற்றிசையில் தேவர்களும்மதிக்கின்ற வேதகூபம் என்னுந் தீர்த்தக்கரையி லிருக்கின்ற வேங்கைமர நிழலில், அப்பு பூதமானது அன்புகொண்டு ஓர் தேவகன்னியாகி, ஆறுமாதந்தவத்தைச் செய்தது. 11

தேவர்கோனற்குணந்திகழத்தோன்றினன்
றேவறுகாட்சியும்வரனுமீந்தொரீஇ
மேவியதொருகுறியதனைமேலையோர்
யாவருமெத்துமப்புலிங்கமென்பவே.

இ-ள். தேவர்களுக்குத் தலைவராகிய சிவபெருமான் சத்தம் பரிசம் ரூபம் இரசமென்னும் நான்கு குணங்களும் விளங்கும்படிபிரசன்னராகி, ஒழிதலில்லாத காட்சியையும் வரத்தையுங்கொடுத்து மறைந்திருந்தது

ஒரு சிவலிங்கமாகும். அந்தலிங்கத்தைப் பெரியோர்கள் யாவரும், துதிக்கப்படுகின்ற அப்புலிங்கம் என்று கூறுவர். 12

பூவனனுழியனகந்தைபொன்றமுன்
மேவனலுருவினதடியின்மீதரோ
மாவனநீர்வழிபாடிழைத்தலாற்
சீவனவனமெனச்சிறந்ததவ்வனம்.

இ-ள். பிரமதேவரதும் திருமாலினதும் அகங்காரம், அழியும்படி, முன்னர்க்கொண்ட அக்கினி யுருவினது அடியின் இடத்து, சிறந்த அழகையுடைய அப்புவானது வழிபாட்டைச்செய்தலால். சீவனவனம் என்னும் பெயரிற் சிறப்புற்றது அந்தவனம்.

அக்கினி யுருவானதைக்கந்தபுராணத்தும், சிவராத்திரிபுராணத்தும், அருணசலபுராணம், அருணகிரிபுராணம் என்பவற்றும் காண்க. சீவனவனம்—சீவனம்—நீர், வனம்—காடு. நீராற்பூசிக்கப்பட்ட வனம் என்பது பொருள். 13

நாலடித்தரவு கோச்சகக் கலிப்பா.

வாழ்தலனோர்பகற்றென்கீழ்த்திசையிலிசைமறைபயிலு
வேழ்விதகரவெரிக்கடவுளேழ்பிரமசாரியர்போற்
பேழ்வணவெண்மதிமவுலிக்குறிகிறுவிப்பூசைமுற்றித்
தாழ்விலொருபருவமருந்தவம்புரிந்ததுபோழ்தில்.

இ-ள். அவ்விலிங்கம் இருக்கும் இடத்திற்குத் தென்கிழக்குத்திசில். இசைபொருந்திய வேதங்களைப் பாராயணஞ் செய்யும் எழ்விதநாக்களையுடைய அக்கினித் தெய்வம் எழு பிரமசாரிகளைப்போல வடிவெடுத்து, பிளக்கப்பட்ட அழகினை யுடைய வெள்ளிய சந்திரசேகரனது உருவாகிய சிவலிங்கத்தைத் தாபித்து, பூசைசெய்து, குறைவில்லா ஒரு பருவம் வரையும் அரியதவத்தைச் செய்தது, அதுகாலத்தில். 14



மூன்றுகுணங்கெழுங்காட்சிமுதல்வழங்கப்பெற்றருளா
லான்றுவடமீன்கற்பிற்கன்னியரோரெழுவரைவேட்
டான்றுபுகழ்திகழ்தலனையக்கினீச்சுரமென்பர்
வான்றொழுமக்குறியதற்குப்பெயரதுவாய்வழுத்துவார்.

இ-ள். முதல்வராகிய சிவபெருமான், சத்தம் பரிசம் ரூபம் என்னும் முக்குணங்கள் பொருந்திய காட்சியைக் கொடுக்கப்பெற்று, அவரது கிருபையிற்சிறந்து, அருந்ததியை நிகர்த்த கற்பினையுடைய எழுகன்னியர்களை விவாகஞ்செய்து, பெரியகீர்த்திவிளங்கப்பெற்ற அத்தலத்தை அக்கினீச்சுரம் என்பர், சுவர்க்கலோகத்தாராலும் வணங்கப் படுகின்ற அந்தச் சிவலிங்கத்திற்கு அக்கினீச்சுரன் என்னும் பெயர்கூறித்துதிப்பர் (பெரியோர்.) 15

கலிநிலைத்துறை.

கூறுமத்தலந்தனக்கொருபாற்குணதிசையின்
மாறின்மாதவம்புரிந்தொலிநந்திதன்வடிவும்
பேறுஞானமும்பெற்றதெம்பிரானிடத்ததுமுன
னீறில்வந்தனைபுரிகுருஞானலிலிங்கம்.

இ-ள். சொல்லப்பட்ட அக்கினீச்சுரத்திற்கு ஒருபகுதியிற்கிழக்குத் திசையில், வாயுவானது குற்றமில்லாத பெரிய தவத்தைச்செய்து, நந்தியினது வடிவத்தையும் பெறவேண்டிய செல்வங்களையும் சிவஞானத்தையும் எமது கடவுளாகிய சிவபெருமானிடத்துப்பெற்றது. அவ்வாயு முன்னர் முடிவில்லாத வழிபாட்டைச் செய்ததலம் வாயுவீச்சரம் எனவும், இலிங்கம் குருஞானலிங்கம் எனவுஞ் சொல்லப்படும். 16

காசின்மாமலைமிசைப்பிரகதிபதிபுரியிற்
றேசுசூழசரர்சுரர்கரர்குருத்தேவர்களனை
மாசிறைர்தன்முதலியருடன்வான்பூத
மேசின்மாதவப்பருவநான்கியற்றியபின்னர்.

இ-ள். இரத்தினங்களையுடைய பெரிய மலையின்மீது பிரகற்பதி தலத்தில், ஒளிவிளங்கும் அசுரர் குருவாகிய சுக்கிரனும் தேவகுருவாகிய வியாழபகவானும், ஏனைய தேவர்களும் குற்றமில்லாத நாரதமுனிவர் முதலாயினோரும் உடனிருக்க, புகழப்பட்ட பெரியதவத்தை ஆகாய பூதமானது நான்கு பருவகாலம் இயற்றிய பின்பு.

பிரகற்பதி - வியாழன். பிரகது—வாக்கு, பதி—தலைவன். பருவமாவது இரண்டு மாதங் கொண்டது. நான்கு பருவம் எனவே எட்டு மாதம் எனக் கொள்க. 17

குருமுதற்றவமுனிவரர்குழுமியகுழாத்திற்
பிரமசாரியவுருக்கொடுபிறங்குவானவணங்கிச்
சுருதிமாமனுத்திளைத்திடுமெல்லையிற்றொல்லை
னொருகுணப்பரப்பிரமமாயுதவினன்காட்சி.

இ-ள். வியாழன் முதலாகிய தவத்தையுடைய தேவர் முனிவர் நிறைந்த கூட்டத்தில், பிரமசாரி வடிவங்கொண்டு, விளங்காநின்ற ஆகாய பூதமானது வணங்கி, வேதங்களிற் சொல்லப்பட்ட பெரியமந்திரங்களைச் சொல்லித் துதிக்குங் காலத்தில், அநாதிப்பழம்பொருளாகிய சிவபெருமான் சத்தம் என்னும் ஒருகுணமுடைய பரம்பொருளாகக் காட்சிகொடுத்தனர். 18

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நானந்தம்நான்பிழைக்குமுனிவீர்காளவ்வரையை
நவிலப்பாற்றோ
ஊனந்துபவமொழிக்குஞ்சிற்பாராகாயமுளா
தோங்குமாங்கண்
வானந்தமின்றிநிறையொளிவான்மனாதியுங்கா
ணாதஞான
வானந்தநடம்புரிந்தானிரந்தரமாய்ப்பொற்பொதுவி
லாடுங்கோமான்.



இ-ள். நான் என்னும் அகங்காரத்தை யழிக்கின்ற தவத்தைச் செய்யும் முனிவர்களே! அம்மலையின் பெருமையைச் சொல்லத் தக்கதோ? உடம்பை வளர்க்கின்ற பிறவியைக் கெடுக்கும் ஞானமுடைய பராகாயம் உயர்வாய் அவ்விடத்து விளங்கா நிற்கும். ஆகாயத்தின் முடிவில்லாமல் நிறைந்த ஒளியையுடைய சிதாகாசம் மனமுதலிய எவற்றிற்குங் காணப்படாத ஞானானந்தக் கூத்தைச் செய்தருளுவார், யாரெனில், கனகசபையின்கண் எப்போதும் ஆனந்ததாண்டவஞ் செய்தருளுஞ் சபாநாயகப்பெருமான். 19

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

புராதனனங்கணன்பங்கனிருவிகற்பன்மலரகிதன்
பொருவிலாத
நிராமயனிர்க்குணனிராதாரனிரஞ்சனனி
ராகாரன்ஞான
பராபரன்மாயாசலத்திற்சிற்பராகாயத்திற்
பயிலுஞ்சோதி
விராவியநாடகநடமேயிலங்கமங்குலேசனென
விளங்கிற்றன்றே.

இ-ள். பழமையா யிருப்பவரும், அழகிய நெற்றிக்கண்ணை யுடையவரும், (உமாதேவியைப்) பாகத்தி லுடையவரும், விகற்ப மில்லாதவரும், மலசம்பந்த மில்லாதவரும், ஒப்பில்லாத நோயற்றவரும், குணமில்லாதவரும், தமக்கு ஓராதாரமில்லாதவரும், களங்கமில்லாதவரும், அநாதியே ஞானமுடையபராபர மூர்த்தியும், மாயாத்திரியென்னும் இம்மலைக்கண் சிற்பர ஆகாயமாகப் பொருந்தும் ஒளிவடிவரும், அநாதியே பொருந்திய ஞானநாடகமாகிய திருக்கூத்தே விளங்க மங்குலேசன் என அச்சிவலிங்கம் விளங்கா நிற்கும். 20

மெய்ஞ்ஞானசபையினை விழைந்திசைப்பினுங்கேட்பினுமுத்தி
விளைக்குமுண்மை
யஞ்ஞானமகற்றியவைம்பூதலிங்கமான்மியமீ
தன்றியாங்க
ணெஞ்ஞாலமும்பரவுந்தக்கிணகேதாரமென்றோர்
தலனுண்டெய்தின்
மெய்ஞ்ஞானம்விளைவிக்குமடைவிக்குங்கதியதன்மான்
மியமுங்கேண்மின்.

இ-ள். (அத்தலத்துள்ள) மெய்ஞ்ஞான சபையை விரும்பிச்சொன்னாலும், அதனைக் கேட்டாலும் முத்தியை யுண்டாக்கும் இது சத்தியம். அறியாமையை நீக்கும் பஞ்சபூத லிங்கத்தின் மகிமைக ளிவையல்லாமல் ஆங்கு, எவ்வுலகத்தாராலுந் துதிக்கப் படுகின்ற தக்ஷிண கேதாரமென்று ஒரு தலமுளது. அதனை யடைந்தால் உண்மையறிவாகிய சிவஞானத்தைக் கொடுக்கும். அன்றி மோக்ஷத்தையும் கொடுக்கும். அத்தக்ஷிண கேதாரத்தலத்தின் மகிமையுங் கேட்பீராக. 21

வஞ்சந்தபமாதவமுஞற்றும்வராகமிரு
தனெனுமுனிவன்
புஞ்சங்கெழுபொன்முடிக்கேழற்பொருப்பில்வதிந்து
பொறிபுலன்போக்
கஞ்சலறவென்றறையுதகம்யாக்கைவலியு
மாறயின்று
நெஞ்சிலணிமாமுதலவியமாதிநிகழு
மாப்பயின்றான்.

இ-ள். வஞ்சனைகள் நீங்கப் பெரியதவத்தைச் செய்யும்வராக மிருதனென்னும் இருடியானவர், மூழைகள் பொருந்திய பொன் மயமான



சிகரத்தையுடைய வராகமலைக்கண் வசித்து, இந்திரியம் புலன்கள்போகும் வழிகளும் அஞ்சுதலும் ஒளியும்படி யென்று, சொல்லப்பட்ட நீர் கொண்டு வலிமையுறும்படி பருகி, மனத்தின்கண் அணிமா முதலிய சித்திகள் முதலியன நிகழும்படிசெய்தார். 22

உலகுதொறுஞ்சென்றாண்டுளபல்லுயிரு
மொழுகுமாறொழுகி
யிலகுபுதுமையாவுளமற்றவையெல்லா
மேற்பனவியற்றி
யலகின்மறையுமறைப்பிலந்தணருஞ்
சுரருமருந்தவரு
மலர்கடூவியழுத்தியதொல்வடக்கே
தாரவரையடைந்தான்.

இ-ள். உலகங்கள் தோறும் போய், அவ்விடத்துள்ள பல உயிர்கள் தம் வயப்பட்டு ஒழுகும்படி நடப்பார், விளங்குகின்ற புதுமையாயுள்ளன வெல்லாவற்றையும் செய்து, அளவில்லாத வேதங்களும் வேதங்களை யத்தியயனஞ்செய்யும் பிராமணரும் தேவர்களும் அரிய தவத்தையுடைய இருடிகளும், புட்பங்களைச்சொரிந்து அருச்சித்த பழமையாகிய வடகேதார பருப்பதத்தைச் சேர்ந்தனர். 23

சென்றுசினவெள்விடையோனைச்சேவித்
தொருசார்மலர்ததடக்கை
யொன்றவெடுத்துப்பணிந்துமனதுருகி
யுருவந்தருதீர்த்த
பன்றநுகர்ந்துமுன்வைகும்வராக
கிரியமருவியிவ்வா
றென்றுமொருவ திருவரையும்வரையா
திறைஞ்சிவருநாளில்!

இ-ள். வடகேதாரத்திற் சென்று சோபம் பொருந்திய வெள்ளிய இடபவாகனத்தையுடைய சிவபெருமானை வணங்கி, ஓரிடத்தில் நீண்ட கைகளிற் புட்பங்களை யன்புபொருந்த எடுத்து அருச்சித்து, மனமுருகி, சிவசாரூப்பியத்தைக் கொடுக்கின்ற தீர்த்தத்தை மிகவுமுண்டு, முன்னர் இருக்கும் வராகமலையையும் தவறாமல்வந்து வணங்கிவருங்காலத்தில். 24

கோலவரையிற்குறிசிருங்கமுடியிற்
குடிலவடிவரையிற்
சிலமுனிவர்சிவயோகர்செறிவதனைக்
கண்களிவரக்கண்
டேலவவர்வைகிடனுவகியரோடொழுகி
யிருந்துதவஞ்
சாலவிழைப்பிற்பானுபவமுதிக்கு
மெனவத்தலைசார்ந்தே.

இ-ள். வராகமலைக்கண் சிகரத்திலுள்ள சிவலிங்கத்தையும், மாயாத் திரி என்னும் அம்மலையின் அடிக்கண் தவவொழுக்க முடைய முனிவர்ளுஞ் சிவயோகிகளும் வீற்றிருப்பதைக் கண்கள் களிப்புறும்படி பார்த்து, பொருந்தும்படி யவர் இருக்கும் இடத்தில் இருந்து அவர்களோடு கலந்து ஒழுகி, மிக்கதவத்தைச் செய்தாற் சுவானுபவந்தோன்றுமென்று அவ்விடத்தையடைந்து. 25

எழுதுமணியொண்சுடரினிருந்தெழுதா
மறையின்சிறப்பொருளை
முழுதுமுணர்ந்தோரொடுமுயல்வோனொருநாண்
முனிவர்தொடர்பொருவா
தொழுகிவரவுங்கேதாரந்தொழுது
வரவுமுளம்வலிக்கும்
வழுவையுரியோய்புரிவதியாதெனவுங்
கவன்றுவருந்துதலும்.



இ-ள். எழுதப்பட்ட அழகிய இர்த்தின தீபம்போல அசையாமலிருந்து, எழுதாமறையாகிய வேதமுடியின் பொருள் முழுவதையும் அறிந்த அந்தணரோடுகூடி யொழுகுவாரான வராக மிருதமுனிவர் ஒரு தினம், முனிவர்களது சிநேகத்தை நீங்காது கலந்து வரவும், திருக்கேதாரலிங்கத்தைத் தரிசித்து வரவும் எனது மனம் இழுக்கின்றது,யானைத் தோலையுடைய கடவுளே! யான் செய்வது என்னையென்று மனம் விசாரமுற்று வருந்துதலும். 26

தாதரிதழிச்சிழிகைதாழ்சடிலன்
விசும்புதடவுவட
கேதாரத்தினளித்தபெருங்காட்சி
கேழல்வரைமீதில்
வேதாமுதலினோர்பரசவிடையினுமை
யோடளித்ததிர்ந்தான்
மாதாபதர்வீழ்ந்தெழுந்துபரவசராய்
விழிநீர்வாரநின்றார்.

இ-ள். மகரந்தமுள்ள கொன்றைமாலை தூங்கும் சடையையுடைய சிவபெருமான் ஆகாயமளாவிய வடகேதாரத்திற் கொடுத்த காட்சியை, வராகமலையின்கண் பிரமன் முதலாயினோர் துதிக்க, இடப வாகனத்தில் உமாதேவியாரோடுஞ் சென்று காட்டி முன் நின்றார், பெரியமுனிவர்கள் விழுந்து வணங்கி யெழுந்து பரவச முடையராய்க் கண்களினின்றும் நீர் வரும்படி நின்றனர். 27

வாசத்துளவோன்முதலினருக்கரியை
நினைவழித்தொழும்பி
னேசித்திடுமன்பினர்க்கெளியையென்ப
தறிந்தேனிறைந்தபெருந்

தேசிற்பொலிசின் னுருவுதருதீர்த்த
மளித்தாய்சருமலரித்
தூசிற்பொலிவோயெனத்தாழ்ந்துதொழுதான்
வராகமுனிவனென்போன்.

இ-ள். வராகமுனிவர் என்பார் அதனைக் கண்டு புலித்தட்டாலாகிய உடையிற் பொலிந்து விளங்கும் கடவுளே! வாசனை பொருந்திய துழாய்மாலையைத் தரித்த விட்டுணுமூர்த்திமுதலிய தேவர்களுக்கு அரியவராயிருக்கின்றீர், தேவரீரது அருள்வழி நின்ற தொண்டருக்கு எளியவரா யிருக்கின்றீர் என்னும் உண்மையை யின்று அறிந்தேன், விளாபித்த பெரிய ஒளியின்மிகுத்த தேவரீரது சாரூப்பிய முத்தியை யளிக்கின்ற தீர்த்தத்தையும் கொடுத்தீர் என்று துதித்துவணங்கினர். 28

பிறைவார்சடையன்விடையிழிந்துபெறுதற்
கரியபிரணவங்கூ!
நறைமீதரியசிவயோகமாற்று
முனிவரெதிர்போற்ற
மறையோலிடமேலவர்தாழவாணன்
மணிமாமுழவார்ப்ப
விறையாளகாணவராககிரிப்பெறும்பே
ரிறைவனடம்புரிந்தான்.

இ-ள். பிறைச்சந்திரனைத் தரித்த நீண்ட சடையையுடைய சிவபெருமான், இடபவாகனத்தை விட்டு இறங்கி, அடைதற் கியலாத பிரணவ ஆகாரமான அறையின்மீது நின்று, அரிய சிவயோகத்தைச் செய்யும் இருடியர்கள் எதிர்நின்று துதிக்க, வேதங்களோலமிட, தேவர்கள் வணங்க, வாணாசுரன் மார்ச்சனை கொண்ட அழகிய முரசத்தை முழக்க, உமாதேவியார் (இடப்பாகத்து நின்று) தரிசிக்க வாராகமலையின் கண் அமரப் பெறும் தனிமுதல்வர் திருக் கூத்தாடியருளினர். 29



புரியும்போழ்தின்மழவிடையோனருளாற்
புனிற்றுப்பிறைநிலவு
விரிசெஞ்சடையிற்பாந்ததிரிபதகை
யிழுந்துவெண்கூவ
வுருவந்திகழ்ந்தானிறைநடனமொழிந்தான்
வராகமிருதன்முதற்
செருமுமுனிவர்சுதரிசனவெனுமந்
சிறப்பித்திறைஞ்சினர்.

இ-ள். (சிவபெருமான் திருநடனத்தைச்) செய்தருளுங் காலத்தில், இளமைமிக்க இடபவாகனத்தை யுடைய பரமனது திருவருளினாலே, புதிய பிறைச்சந்திரன் விரிந்த சிவந்த சடையில் நிலவைப் பாய்ச்சிற்று, கங்கைநதி சிந்தி வெள்ளிய கூவநீர் வடிவாயிற்று. அதுகண்டு இடபவூர்தியாகிய பரமசிவன் நடனத்தை விட்டனர், வராக மிருதமுனிவர் முதலாய நெருங்கிய இருடிகள் சுதரிசன என்னும் பெயரைச் சொல்லினர். 30

நறுவெண்கூவற்சுதர்சனவெனுமந்
திகழுங்கேதாரோ
தகநீர்மூழ்கிநுகர்ந்துசதாசிவராய்
வராகமிருதன்முதற்
புகழ்தாபதருமடைந்தனரப்புனலை
யியைவோர்யாரேனு
மகனுளறிந்துமறியாதும்புரிமா
பாவமதுதீரும்.

இ-ள். ஒளிர்கின்ற வெள்ளிய தீர்த்தத்தை யுடைய சுதரிசன வென்னும் நாமம் விளங்கும் கேதாரதலத்துள்ள தீர்த்தநீரில் முழுகி

யும் அதனையுண்டும், வராகமிருத முனிவர் முதலாய இருடிகள் சதாசிவ வடிவமுற்று முத்தியடைந்தார். அத்தீர்த்தத்தை யடைவோர்யாவராயினும் மனம் அறிந்தும் அறியாதுஞ் செய்த பெரிய பாதகங்களெல்லாம் நீங்கும். 31

பெறுதற்கரியபிரணவொண்பாரை
யதனாற்பணிமவுலி
யுறுதக்கிணகேதாரமெனும்பெயர்பெற்
றுயர்ந்துவிளங்கியது
மறுவற்றொளிமங்கலசிருங்கமுளதொன்
றருமாமறைக்கடலின்
றுறையிற்படிவீரதனதுமான்மியமு
மக்குத்தொகுத்துரைப்பாம்.

இ-ள். அரிய பெரியவேதமாகிய சமுத்திரத்தின் றுறையிற்றோயு முனிவர்களே! அடைதற் கரிய பிரணவமாகிய அழகிய அறைபிருந்தலாஞ் சம்பத்தைத் தரித்த திருச்சடா முடியை யுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் தக்கிண கேதாரம் என்னும் பெயரை அவ் வராகமலை பெற்று விளங்கியது, குற்றமற்று விளங்கும் மங்கல சிருங்கம் என்னும் ஒருதலமு மிருக்கின்றது. அதனுடைய பெருமைகளையும் உங்களுக்குச் சுருக்கமாகச் சொல்வாம். 32

நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா.

துயிலாயன்றுறந்தயன்மாதவர்சுரரோடயல்போற்றக்
குயிலாயமொழியிமவான்கொம்பொருபாற்குழைந்துவரக்
கயிலாயனயிலோனைங்கரனிருபாற்கலந்துபொய்ப்ப
மயிலாயஞ்செறிகயிலைமருங்கணைந்தான்மழவிடைமேல்.

இ-ள். திருமால் நித்திரையி னின்றும் நீங்கிப் பிரம தேவர் முனிவர் தேவர் என்னு மிவரோடு கூடிநின்று பக்கத்திற் றுதித்துச்



செல்லவும், குயின்மொழிபோன்ற மொழியையுடைய இமயமலையரசன் பெற்ற பூங்கொம்புபோன்ற உமாதேவியார் ஒருபக்கத்தில் மனமுருகிச் செல்லவும், சுப்பிரமணியக்கடவுளும் விநாயகக்கடவுளும் இருபக்கத்தும் களிகொண்டு செல்லவும், மயிற்கூட்டங்கள் நிறைந்துள்ள திருக்கயிலாயமலையின் இடத்தைச் சிவபெருமான் இடபத்தின்மீதேறி யணைந்தார். 32

தளர்நடைவந்திளஞ்சிறுகாலடிவருடத்தளவநிலா
விளவரும்பேடவிழ்ந்துமணமிறைப்பவிமசலந்துளிப்பக்
களபகரும்பளிதநறைகமழவருகான்றுமிறு
விளரியின்பாட்டயரவிஞ்சையோர்வீணைவிரலிசைப்ப.

இ-ள். இளஞ்சிறு தென்றற் காற்றானது, தளர்ந்த நடையுடன் வந்து திருவடிகளை வருடவும், முல்லையினது வெள்ளிய இளவரும்பு இதழ்விரிந்து வாசனைவீசவும், பனித்துளி சிதறவும், கலவைச்சாந்தும் நல்ல பச்சைக்கருப்பூரமும் வாசனை வீசவும், பறக்கின்ற காலையுடைய வண்டுகள் விளரிப்பண்ணையுடைய பாட்டுக்களைப் பாடவும், கந்தருவர்கள் தத்தம் யாழ்கொண்டு விரலால் இசைசெய்து பாடவும்.

தென்றல் தளர்நடை யுடைத்தாகலின் "மந்தமாருதம்" எனப்பட்டது. இமம்—பனி. இமசலம்—குளிர்ந்தநீர். பனிநீருமாம். வண்டுகள் தேன், சுரும்பு, வண்டு ஞிமிறு என நால்வகைப்படும். அது "மங்கை நல்லவர் கண்ணுமனமும்போன் - றெங்குமாடியிடறுஞ் சுரும்புதான்" எனவருஉம் சிந்தாமணிச் செய்யுளாலும், இங்ஙனமே நைடதத்தும், வில்லிபுத்தூரார் பாரதம் சல்லிய பருவத்தும் கூறப்பட்டதுணர்க. வண்டு ஞிமிறு என்பதும் வண்டுகள் என்னும்பொதுப்பெயராகின்றது.

விஞ்சையர் ஆவார்—தும்புரு, நாரதர், ஆகா, ஊகூ, விசுவாவசு, அத்திரசேனன், வசிருசி, சருவாசு, சித்திரசேனன், ஊருகன், திருதராட்டிரன், சூரியவாசன் என்னுந் துவாதச கந்தருவர் முதலாயினோர்.

வீணைகளாவன? விபஞ்சிகை, சித்திரிகை, சித்திரகோடாவணி, இலவுலாட்சி, கூர்ம்மிகை, குச்சிகை, பரிவாதினி, கின்னரி, வல்லகி, கீசகி; இராவணசுவரம், சகளவல்லகி, ஆரவாளி, ஆநாவிதை, கைசிபம், பிரமவீணை, சாரங்கம், சரவீணை, ஆகாயவீணை, அந்தரவீணை, உருத்திர வீணை என்னும் இருபத்திரண்டும் பிறவுமாம். 34

கோகிலங்காளங்குறிப்பக்குளிர்மதிவெண்குடைநிழற்றப்
பூகநறும்பொதும்பரிற்பூங்கணையுமுடல்குழைத்தவில்லு
மோகமதன் றரித்திருகைமுகிழ்த்தொருபால்விளையாட்
வோகைபலர்தரவுமையோடொருதவிசின்மிசையிருந்தான்.

இ-ள். குயில்கள் எக்காளமூதவும், குளிர்மையாகிய சந்திரன் வெள்ளிய குடையாகநின்று நிழலைச்செய்ய, நல்ல சமுகஞ்சோலையில் புட்பங்களாகிய பாணங்களையும் உடல்வளைந்த (கரும்பாகிய) வில்லையும், மயக்கத்தைச் செய்யும் மன்மதன் தரித்து இருகையையும் அஞ்சலிபண்ணி ஒரு பக்கத்து விளையாடி நிற்பவும், இங்ஙனம் பலர் மகிழ்வுசெய்ய உமாதேவியாரோடும் ஒப்பற்ற சிங்காசனத்தின்கண் சிவபெருமான் வீற்றிருந்தனர்.

நடைபெறுபல்விலங்கொடுபன்னகவைரிமுதலபுள்ளுந்
தொடைபெறுவணியன்மலர்த்தாடொழுதனசூழ்வந்தபணி
விடைபெறுமால்புரிந்தபெயராயிரமுமென்சிறை
யுடைபெறுமாதவர்புரையவோதுநின்றுருகுவான்.

இ-ள். நடத்தலைச் செய்கின்ற பலமிருகங்களுடன், கருடன்முதலாகிய பலபறவைகளும், கொன்றை மாலைதரித்த சடாமுடியினராகிய சிவபெருமானது தாமரை மலர்போன்ற திருவடிகளைவணங்கின்றன, வலம்வந்தன, குற்றேவலைக் கொண்ட திருமாலானவர் யாவராலும்விரும்



பப்பட்ட சகத்திர நாமங்களையும் மிருதுவான மாவுரிவத்திரமுடுத்தபெரிய தவத்தையுடைய முனிவர்போலச் சொல்லிநின்று மனமுருகி நின்றார்.

வருவினைசஞ்சிதவினைமாவடிவிளைவாய்ந்துயிர்பருகு
பொருவினைமூவினையுமொருவினையுமாறெவ்வாவா
விருவினையொன்றுமளவுமெவ்வுயிரும்புரியும்வினைக்
கருவினையாயவனுறைந்தானஃறிணைசெய்வினைதனையே.

இ-ள். அஃறிணைப் பொருள்களாய் மிருகங்களும் பறவைகளுஞ் செய்த வினைகளுக்கு, ஆகாமியமும் சஞ்சிதமும் பெரிய (தூல) வடிவத்தையெடுத்து ஆன்மாக்கள் அநுபவிக்கும் பிராரத்துவ வினையும் ஆகிய மூவகைவினையும் ஒழியும்படிசெய்யுஞ் சிவபுண்ணியங்களும் நிகராகா வாம், நல்வினை தீவினை யென்னும் இருவினைகளும் சமமாகு மளவும் எந்த ஆன்மாக்களும் புரியும்தொழில்களுக்கெல்லாம் அரியவினையாய் அப்பெருமான் அன்றோ இருந்தனன். 37

அவ்வேலையடுதிறற்சூரவுணருயிர்குடிப்பவடற்
செவ்வேலைவிடுகுழகன்றேவருயிர்பருகவெழு
மைவேலைவிடநுகர்ந்தாய்வேட்டமெனமனம்புரிந்த
திவ்வேலைபருளெனமாயாசலஞ்செல்கெனச்சென்றான்.

இ-ள். அவ்வாறாகச் சிவபெருமான் திருவோலக்கம்உற்றுஇருக்குங் காலத்தில், கொல்லுந் தொழிலையுடைய சூரபன்மன்முதலாய அசுரரது உயிர்களை யெல்லாம் பருகும்படி, வலிமைபொருந்திய சிவந்த வேலாயுதத்தை விடுத்தருளிய இளமைப்பருவத்தை யுடையவர், ஆகிய முருகக்கடவுள் (சிவபெருமானைநோக்கி)தேவருடைய உயிரைப்பருகும்படியெழுந்த கரியகடலினெழுந்தநஞ்சினை யுண்டுகாத்த இறைவனே! இச்சமயத்தில் என்னுடைய மனம் வேட்டையாடுதலில் விரும்பாநின்றது. ஆத

லால்வீடையருள வேண்டுமென்று கேட்பமாயாத்திரிக்கு (பழநிமலைக்கு) போகக்கடவாய் என்று சிவபெருமான் கூறியருள, கந்தக்கடவுளும் அவ்வாறே சென்றார். 38

பிரணவவொண்பாறைவைகிப்பெட்புறமுன் னுரைந்துமலர்ச்
சரணமிசைதாழ்முனிவர் தமைநோக்கியாதிதனி
லாணநமக்கிகனவதிந்ததிதுவென்றுனதுகொண்டு
மரணமின்மாதவர்மூலத்தானமெனவமுந்துதலும்.

இ-ள். பிரணவ வடிவாகிய அழகிய மலையறையில் (கந்தப்பெருமான்) வீற்றிருந்து, விருப்பம் பொருந்தத் தாம் வருதற்குமுன்னரே வந்திருந்து, தம்மைக்கண்ட அளவிலே தாமரைமலர்போன்றபாதங்களில் விழுந்து வணங்கியமுனிவர்களைத் திருநோக்கஞ் செய்து, (முனிவர்களே) படைப்புத் தொடக்கத்தில் இத்தலம் நமக்குப்படைவீடாகிய காவலிடமாகும் என்று கூறினர். அச்சொல்லைக்கேட்டு இறத்தலில்லாத முனிவர் மூலத்தானம் இத்தலமே என்று துதித்தலும். 39

பூந்தார்வண்குரவனருள்புரிந்தொருவிப்பொருவில்புட்ப
காந்தாரத்தெழுந்தருளிக்கனவ்விழிப்பேய்வாய்மிருக
வேந்தாதிவிலங்குவணமுதலியபுள்ளினமிடைந்து
தாந்தாமாறிரிந்துபதந்தாழ்வரையணுயினன்.

இ-ள். பொலிவாகியவளப்பமுடைய குராமாலையைத் தரித்தருழந்தைவேற்பெருமான் அம்முனிவர்க்குக்கிருபைசெய்து, அவ்விடத்தினின்றும் நீங்கி, ஒப்பில்லாத புட்பகாந்தார வனத்தின்கணெழுந்தருளி, அக்கினிசிந்தும் பெருத்த வாயையுடைய மிருகராசனாகிய சிங்கங்கள் முதலிய மிருகங்களையும் கருடன் முதலாய பறவைகளையும் நெருங்கிச்சென்று அவை யஞ்சியோடலால் தாம்மலையிற்பொருந்தும் திருவடியுடையராய்க் கீழ்வரைக்கண்வந்தார். 40



அணிக்கோலவரைமுனிவாமரர்தமக்கரியசெருத்
தணிக்கோலமெனவிசும்புதடவுதடஞ்சிலைமலர்த்தண்
கணிக்கோலம்புரிந்துமுதற்காட்டியசெவ்வேணீல
மணிக்கோலவள்ளிதிருமணக்கோலம்வழங்கினன்.

இ-ள். அழகிய வடிவத்தையுடைய அம்மலையின் கீழிருந்த முனிவர்க்கும் தேவர்க்கும், அறிதற்கரிய செருத்தணித் தலத்திலெழுந்தருளுங் கோலத்தைப்போல, ஆகாயத்தை யளாவிய நீண்டவில்லையேந்திய மலர்போன்ற திருக்கரத்தையுடைய வேட்டுவக்கோலத்தை முதலிற் காட்டிய முருகப்பெருமான், நீலரத்தினம்போன்ற வடிவத்தையுடைய வள்ளியம்மையாரது திருமணக் கோலத்தைக் காட்டினர். 41

வெள்ளியங்குன்றொருவிவள்ளிமென்கொடியிற்சிமிழ்ப்புண்டு
புள்ளியங்குன்றெனமுருகமழகளிறுபரிவுறலாற்
றுள்ளியங்குன்றருவிநெடிதுவைத்தெழுமக்குளிர்குவடு
வள்ளியங்குற்றெழிற்கெழுமங்கலசிருங்கமெனவழங்கும்.

இ-ள். கயிலைமலையை விடுத்து, வள்ளியம்மையாராகிய மிருதுவான கொடியிற் கட்டப்பட்டு, பள்ளிசெய்தருளும் அழகியமலைபோல முருகக்கடவுளாகிய இளயானை யன்புடன் இருத்தலால் சிறந்த மலையின் அருவி துள்ளிப்பாய்ந்து ஒலிசெய்துவீழ்ந்துசெல்லும் அந்தக் குளிர்மையாகிய மலையானது, வள்ளிமலையின் சிறப்புக்களைப்பொருந்தி மங்கலசிருங்கம் என்று சொல்லப்படும்.

வள்ளி மலைக்கண் நடந்த திருமணக் கோலத்தை யிங்குத்தேவர் முனிவர்க்குக் காட்டினமையால் மங்கலசிருங்கம் எனப்பெயர்பெறும். 42

முல்லைவனத்தயில்வேற்கைமுருகனெழுந்தருளிமுன்னி
யெல்லையின்மாதவம்புரிமார்க்கலாடனுக்குமீர்ந்தொடப்பைங்

குல்லைபுனைபகவுதிக்குங்காட்சிகொடுத்தருளிநித்தந்
தொல்லைபல்லுயிர்க்குமருள்சுரந்துபூம்புரைவதிந்தான்.

இ-ள். பழநிப்பதிக்கணுள்ள திருமுல்லைவனத்தின் இடத்து, வேலாயுதத்தைத் தரித்த திருக்கரத்தையுடைய கந்தக் கடவுள் எழுந்தருளி, தம்மைநினைத்து அளவில்லாத பெரிய தவத்தைச்செய்யும்மார்க்கண்டேய முனிவர்க்கும், குளிர்ச்சி கொண்டவெட்சிமாலையைத் தரித்த துர்க்காதேவிக்குங் காட்சி கொடுத்து அருள்புரிந்து, நாடோறும் பழமையாகியபல ஆன்மாக்களுக்கும் கிருபைசெய்து பூம்புரை யென்னுந் தானத்தில்வீற்றிருந்தருளினர். 43

மைத்தவழ்மங்கலசிருங்கமான்மியமிதனையபோற்
கொத்திதழியோன்றானம்பலவுளவன்றியுங்கேல
வத்திரியினிற்றெய்வநதிகளுமுண்டாடினரை
முத்தியினுய்ப்பிக்குமென்றான்முற்றுமொருங்குணர்சூதன்.

இ-ள். மேகங்கள் தவழுகின்ற மங்கல சிருங்கமென்னுந்தானத்தின் மகிமை யிதுவாகும் அதுபோல, கொன்றைப்பூமாலையினராகியசிவபெருமானது தானங்கள் பலஉள்ளன, அல்லாமலும் வராகமலையின்கண் தெய்வத்தன்மை பொருந்திய யாறுகளும் பலவுள்ளன. அவைதம்மிற் றோய்ந்தாரை முத்தியின்கட்சேர்க்குமென்று சாத்திரங்க ளெல்லாவற்றையு மறிந்த சூதமுனிவர் கூறினர். 44

வராககிரிசிவத்தானச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள்—225.

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

ஏழாவது,

# நதியுற்பவித்த சருக்கம்.

கலிநிலைத்துறை.

விதியிணங்கிநான்மறைவிழிவிழைவுறமுயல்வோர்
துதிபுரிந்திருகரஞ்சிரங்கொண்டுசூதனையே
மதிமிலைந்தபொன்மணிமுடிவராகமால்வரையி
னதிவருஞ்சரிதையைநவிற்றுதியெனநவிலும்.

இ-ள். ஊழானது வந்துபொருந்தி நான்கு வேதங்களின்வழியே உண்மைப்பொருளை யுணர்ந்து விருப்பமுற்றுப் பெறும்படிபிரயத்தனஞ் செய்யும் முனிவர்கள் துதிசெய்து இருகைகளையுந் தலைமேற்கொண்டு, பிறைச்சந்திரனைத்தரித்த அழகியஇரத்தினங்கள் நிறைந்த சிகரங்களையுடைய வராகமலையினின்றும் நதியுற்பவித்த சரித்திரத்தைச் சொல்லியருள்வீராகவென்று சூதமுனிவரையே கேட்குதலும், அவர் சொல்வாராயினர். 1

தொலைவின்மாதவர்தொழும்பெருங்கயிலையிற்றூய
கலையிலாயமூலப்பிரகிருதிகன்னிகையாய்த்
தலைவணங்கிநீடலையெறிகடல்வலயத்தி
னிலைபுரிந்தவந்தனைக்கிடாநிகழ்த்துகென்றதுவே.

இ-ள். அழிவில்லாத பெரிய தவத்தினை யுடைய முனிவர்களால் வணங்கப்படுகின்ற பெரிய கயிலாயமலையின்கண், சுத்தகலாதத்துவத்தி

வின்றுந் தோன்றிய மூலப்பிரகிருதி என்னும் மாயையானது கன்னிப் பெண்ணின் வடிவெடுத்து, தலைபொருந்தவந்தனைசெய்து, நீண்டதிரைகள் வீசுகின்ற கடலாற்சூழப்பட்டபூமியில் நிலையுடைய வழிபாடுசெய்தற்கு ஓரிடத்தை யருளுதல்வேண்டுமென்று கூறிற்று. 2

எஞ்சுபல்லுயிருயிர்ப்பதற்கேதுவாயிருந்த
வஞ்சளாடவியெனுங்கர்ப்பபுரியினைமருவி
விஞ்சுதேனுவினுருக்கெழீஇவிழைந்தெமைப்பூசித்
துஞ்சிடும்படியுலகெலாந்தருதியென்றுரைத்தான்.

இ-ள். மிகுந்த பல ஆன்மாக்களையும் படைத்தற்கு ஏதுவாயிருந்த, பஞ்சபூத லிங்கமுள்ள முல்லைவனமென்னுங் கர்ப்பபுரியை யடைந்து, மிக்க காமதேனுவி னுருவத்தைக் கொண்டுவிருப்பமுற்று எம்மைப் பூசித்து, (ஆன்மாக்கள்) உயயும்படி உலகமெல்லாவற்றையும் தோன்றச் செய்வாயாகவென்று (சிவபெருமான்) ஆஞ்ஞாபித்தருளினார். 3

கண்ணுதற்பெருமானருள்கடிநகர்போகி
யுண்ணிகழ்ந்தவாபுரிந்தவக்கேழலோங்கலின்மே
னண்ணிநோற்றனளாவெனமாவெனநனுரு
மெண்ணிறேவர்நோன்பிழைத்தனளிழைத்திடுநாளில்.

இ-ள். நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் அருளிச்செய்த புதுமைபொருந்திய தலத்திற்குச்சென்று, மனத்தின் கண் தோன்றிய வாறுசெய்த அந்தவராகமலையின்மீது அடைந்து பசுவென்னு மிருகம் போல உருவத்தைக் கொண்டு, அளவில்லாத தேவர்கள்செய்த தவத்தை யெல்லாம் பிரகிருதி மாயையானவள் செய்தாள், அவ்வாறு செய்யுங் காலத்தில். 4

கலிவிருத்தம்.

கொந்தார்நறவக்குளிர்பொன்னிதழிப்
பைந்தார்புனைபண்ணவனேவலினால்



விந்தார்சலம்வென்றவன்வேரிநறுஞ்
சந்தார்பொதியந்தனியெய்தினனால்.

இ-ள். பூங்கொத்துகள் நிறைந்த தேன் பொருந்திய குளிர்மையாகிய பொன்மயமான பசிய கொன்றைப்பூ மாலையையணிந்த சிவபெருமானது ஆஞ்ஞைப்படி விந்தமலையை வெற்றிகொண்டவராகிய அகத்திய முனிவர் தேன்பொருந்திய வாசனையையுடைய சந்தன மரங்களையுடைய பொதிய மலையின்க ணடைந்தார். 5

பண்பாருயிருய்ந்திடமுன்பரவை
யுண்பாலவனெண்சிகரத்துறையு
நண்பார்பொருநாநதியின்புனலைத்
திண்பாருலகஞ்செலவுய்த்தனனால்.

இ-ள். நற்குணமுடைய ஆன்மாக்கள் உய்யுங் காரணமாக முன்னர்க் காலத்திற் சமுத்திரத்தையுண்ட பாவில் வல்ல அகத்தியமுனிவர் அப் பொதிய மலையின் அழகிய சிகரத்தின்கணிருந்த, உறவினையுடைய பொருநை யாற்றினீரை, திண்ணிய பெரியபூமி யுய்யும்படி செல்ல விடுத்தார். 6

ஒருசீருணவெற்புறிநின்றுயர்பார்
வருநீர்மையுமவ்வடிவங்கொளலாற்
பெருநீர்வருதாம்பிரவன்னியென
வருள்சேரொருபாதியடைந்ததுவே.

இ-ள். ஒப்பற்ற செப்புமலையினின்றும் உயர்ந்த நிலத்தில் வரும் நீர்மையும் அத்தாமிரம் ஆகிய வடிவத்தைக் கொண்டு வருதலால், மிகுந்த வருகின்ற தாம்பிரவன்னி நதியென்று, கிருபை மிக்க ஒரு பாதியைப்பெற்றது.

சிருணம்—செம்பு. உழி - ஏழனுருபு. செம்பு மலையினின்றுந் தீப் போலும் நிறத்தையுடைத்தாக வருதலால் தாமிரபர்ணியெனப் பெயர் பெற்றது என்க. தாமிரவன்னி என்பதற்குத் தாமிரம் போன்றவர்ணத்தை (நிறத்தை) யுடையது எனலுமாம். 7

ஒருபாதியுதக்கிணடந்துபிலந்
தருமோர்நெறிசார்ந்துவராககிரி
வருதேனுவுமாழையும்வைகிடமீ
தருள்கூரவெழுந்ததனக்கரிணே.

இ-ள். (ஒருபாதி தாமிரவன்னியெனச்செல்ல) மற்றைப் பாதிநீர் வடக்குத்திசைக்கண் ஓடிச்சென்று, பாதவம் அளவுஞ் செல்லும் ஓர் வழியாகச் சென்று, வராக மலைக்கண்வந்து பசுக்களும் பொன்னும் இருக்கும் அவ்விடத்தின்கண் கிருபை மிகும்படி சமுத்திரத்தைப் போலப் பெருகி நின்றது. 8

விண்ணந்தருகார்வரைமீதுவிராய்த்
தண்ணந்துறையைந்திணையுந்தழுவி
வண்ணந்தருபல்பொருளும்வாரிக்
கண்ணன்றுயில்பைங்கடல்கண்டதுவே.

இ-ள். ஆகாயத்தை யளாவிய தருக்கள் நிறைந்தபெரியவாக மலையின்கண் கலந்து, குளிர்ச்சி பொருந்திய அழகிய ஐந்து துறைகளையுஞ் சேர்ந்து, அழகுகொண்ட பலபொருள்களையும் அள்ளிக்கொண்டு, தாமரைக் கண்ணராகிய நாராயணர் தூங்குகின்ற பாற்கடலிற் சென்றது. 9

திரையிற்செறிசித்திரநன்னதியென்
றுரையிற்புகழ்கொண்டொழுகொள்ளருவி



குரையிற்பொலியுந்திரிகூடசல
வரையிற்கலையொன்றுவழங்கியதே.

இ-ள். கடலினிடத்திற்குப் போகும் சித்திர நதி யென்று சொல்லப்படுகின்ற கீர்த்தியையுடைமையாக் கொண்டு ஒழுகுகின்ற அழகிய அருவியாறானது, ஒலியாற் பொலிவுபெற்ற திரி கூடாசலம் என்னும் மலையில் ஒருசிறுபகுதி தங்கநின்றது. 10

கலையொன்றுகணந்தவழுஞ்சிகரத்
தலையொன்றருவித்திரடாழுமணி
மலையொன்றிவருந்திகழ்வைகையென
வலையொன்றுவராழியினார்த்ததுவே.

இ-ள். ஒருசிறிது பகுதி நீரானது, பாய்ந்து செல்லும் மலைமுடியினின்றும் வரும் அருவித் தொகுதியுடன் தாழ்ந்துசெல்லும் இரத்தினக் கூட்டங்களும் பொருந்தி வருகின்ற விளங்காநின்ற வைகை என்னும் பெயருடன், திரைகள் பொருந்திய உவர்ப்பினையுடைய சமுத்திரத்தைப் போல ஆரவாரித்தது. 11

நீராழிநிலம்புகழுங்கலையொன்
றோராழிபுதக்கெழல்போலொழுகிப்
பேராழிபுனைந்துபெருங்குடபாற்
காராழிபுகுந்துகலந்ததுவே.

இ-ள். நீர் பொருந்திய கடலாற் சூழப்பட்ட நிலவுலகத்தாராற் புகழப்படுகின்ற சமுத்திரத்தின் ஓர்கலை வடக்கேயெழுந்து செல்லுதல்போலச் சென்று, பெரிய வட்டவடிவத்தைக் கொண்டு, பெருத்த குடகடலிற்சென்று சங்கமமாயிற்று. 12

பொற்பார்பொதியம்பொருவில்குமர
வெற்பனைவையின்மிளிருஞ்சிகரத்

தற்பால்வருநன்னதிதன்பெருமை
நற்பான்மையையாவர்நவிற்றுவரே.

இ-ள். அழகு நிறைந்த பொதியமலையும் குமரவெற்பும் ஆகியஇவற்றில் மின்னல் விளங்குஞ் சிகரத்தினின்றும், அன்புடனே யோடிவரும் நல்ல ஆற்றின் பெருமையின் நல்லபகுதியை எவர்எடுத்துக்கூற வல்லவர்.

கலிநிலைத்துறை.

ஆன்மாயைவெற்படைதலாலருட்பிரகிருதி
தானமெய்தலாலந்தமான்றடம்பொழிற்கருவூர்க்
கோனவற்குநன்பாலுடனூட்டலாற்கொணர்ந்து
மாநிலத்திலம்பாநதியென்பர்நான்மறையோர்.

இ-ள். நன்மையான மாயாத்திரியைச் சேர்தலாலும், பிரகிருதியாற் பூசிக்கப்பட்ட இடம் இருத்தலாலும், அழகிய பெரிய நீண்டசோலைகளையுடைய கருவூர்க்கணுள்ள சோராசனுக்கு நல்லபாலுடன் கொண்டுவந்தூட்டலாலும், நூல்வழக்கறிந்த பெரியோர் பெரிய இப்பூமியில் அந்த ஆற்றை அம்பாநதி என்று சொல்வார்கள். 14

மாமழைநீழல்போந்தாம்பிரவதியெனவழங்கி
யேண்மைதேனுவினுருவுகொண்டினிதுவீற்றிருக்குஞ்
சூழல்போதலின்றாளும்பமான்பொருநையென்றொருபே
ரேழிருங்கடலுடுத்தபாரிசைப்பமேவியதே.

இ-ள். மாமரத்தினீழலிலே போகின்ற தாம்பிரவதி எனச் சொல்லப்பட்டு, உமாதேவியார் பசுவினுருக்கொண்டு நன்மையுடன் வீற்றிருக்கின்ற இடத்திற்குப்போதலால் பெரியபொருநை என்னும் ஒருநாமத்தை ஏழுபெரிய சமுத்திரத்தாற் சூழப்பட்ட பூமியிலுள்ளவர்கள் யாவரும் சொல்லும்படி பொருந்திற்று. 15



மணிமுத்தாறுகாவிரிவரிவாளைபாய்பொருநை
யணிமொய்த்தோங்குமுக்கூடலினணிமணியீசன்
றிணிமொய்த்தோங்குமெண்டோட்டிரிகுலேசன்வீரேசன்
பிணிமொய்த்தேறுவந்தேறுமெம்பிரான்பரமேசன்.

இ-ள். மணிமுத்தாநதியும் காவிரியாறும் வாளைமீன்கள் பாயும் தாமிரபர்ணி நதியும், அழகு நெருங்கி விளங்கும் முக் கூடலில் அழகியமணியீசரும், வலிமை நெருங்கி மிகுந்த எட்டுத்தோள்களையுடைய திரிகுலேசப் பெருமானும், வீரேசரும் விருப்பம் மிகுந்தேறுகின்ற சமது இடபாருடேசரும், பரமேசரும். 16

தாரகேசுரன்றயங்குகொங்கணேசன்வாகீச
னாறணிந்தகாளீச்சுரனருள்விசாலேச
னேருறுங்கரசேசனோடகத்தியவீசன்
சீரணங்கனந்தேசன்வைகிடங்கரைதிகழும்.

இ-ள். தாரகேசுரரும், விளங்காநின்ற கொங்கணேசுரரும், நதியைத் தரித்த காளீச்சுரரும், கிருபையை யுடைய விசாலேச்சுரரும், அழகுபொருந்திய கரசேச்சுரரும், அகத்தியேச் சுரரும், சிறப்புப்பொருந்திய அனந்தேச் சுரரும், ஆகிய இம் மூர்த்திகள் வீற்றிருக்கின்ற தானங்கள் அந்நதிக்கரையின்கண் விளங்கும். 17

இன்னநம்பதிமற்றுளபுடைபுடையிலங்கு
முன்னருந்துறைதொறும்பலதீர்த்தங்களோங்கு
மின்னடுங்கிடையுமைபசுவுருக்கொடுமேவு
மன்னெடுங்கொடுமுடிபசுமலையென்பர்கண்மாதேந.

இ-ள். இவ்வாறுய நமது சிவதலங்கள் மற்றைய பக்கம் பக்கங்கடோறும் விளங்கும், நினைத்தற்கரிய துறைகள்தோறும் பலதீர்த்தங்கள்

விளங்கும், மின்னல் போன்ற நடுங்கிய இடையை யுடைய உமாதேவியார் பசுவடிவத்தைக் கொண்டு இருக்கின்ற சிகரங்கள் நிலைபெற்றநீண்ட பசுமலை யென்று கூறுவர் புலவர். 18

முன்னையாமைபொருநாநதியன்றிமாமேழ
னன்னெடுங்கிரிமீதுசண்முகநதியுளதா
லன்னவற்றினன்சரிதைமேலறைகுதுமன்றி
முன்னருந்திரிவேணிசங்கமமுளதுரைப்பாம்.

இ-ள். முதன்மையை யுடைய தமிரவன்னி யல்லாமல், பெரிய பன்றியாகிய நல்ல நீண்ட மலையின்மேல் சண்முகநதி யுள்ளதாகும், அவற்றின் சரித்திரத்தைப் பின்னர்க் கூறுவாம், அல்லாமல் முன்னர்க் காலத்துள்ள திரிவேணிசங்கம தீர்த்தமும் உளதுசொல்வாம். 19

கலிவிருத்தம்.

கீற்றிளம்பிறைமுடிக்கிரீசனைப்பரா
யேற்றவேழ்மகளிர்குற்றேவலாற்றமுன்
வேற்றடங்கட்டளிர்மேனியம்பிகை
யாற்றினடவுமிமயாசலத்தினே.

இ-ள். வேலாயுதம் போன்ற நீண்ட கண்களையும் தளிர்போன்ற மேனியையும் உடைய உமாதேவியார், இமயமலையின் கண், கீறிய இளம் பிறையைத் தரித்த தலையையுடைய கிரீசரைத் துதித்து, தகுந்த எழு பெண்களுங் குற்றேவலைச் செய்யத் தவமிருந்தாள். 20

அரியமாதவந்தெரிந்தணங்கையாய்வழி
வரிமலர்க்கொன்றையோன்வதுவையாற்றினன்
பிரிவுறுதொழுகுமேழ்பேதைமார்குழீஇப்
புரிசடையோனடிபோற்றினின்றனர்.



இ-ள். அருமையாகிய பெரிய தவத்தையாராய்ந்து தெரிந்து, அவ் விமயத்திலேயே நிறமுடைய கொன்றை மாலையைத் தரித்த சிவபெருமான் திருமணஞ் செய்தருளினர். உமாதேவியாரை விட்டு நீங்காது குற்றேவல்செய்யும் பெண்கள்கூடி, முறுகிய சடையையுடைய சிவபெருமானது திருவடிகளைத் துதித்து நின்றார். 21

ஆங்கவர்கடிவிழைவறிந்தரன்களி
றோங்கலின்வேதகூடத்திறெண்கரை
வேங்கைகீழவிற்றவம்புரிதிறமென்மலர்ப்
பூங்கொடியீர்வரந்தருதும்போமென்றான்.

இ-ள். அப்பெண்களின் புதிய விருப்பத்தை யுணர்ந்து, சாரலை யுடைய வராகமலையின்கணுள்ள வேதகூடத்தின் அழகிய கரைக்கண் நிற்கும் வேங்கைமரத்தின் நீழலிலே, மிருதுவாகிய பூங் கொடியைப் போன்ற பெண்களே! தவஞ்செய்வீராக, அப்போது யாம் வந்து வரங் கொடுப்போம் என்று கூறினர். 22

அருளியவாற்றினேழ்பெயருமாயிடை
மருவினர்தென்றிசைநோக்கிமம்மர்தீர்
திருமலனிருபதநினைவினெஞ்சமேர்க்
துருகினருந்தவமுஞற்றலுற்றனர்.

இ-ள். சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளியபடி எழுபெண்களும் அவ்விடத்தை யடைந்து தெற்குத் திசைநோக்கி யிருந்து மயக்கமில்லாத சிவபெருமானது இரு திருவடிகளையும் மன நினைவிலிருத்தி உருகி அரிய தவத்தைச் செய்வாராயினர். 23

கள்ளவிழ்குழலியருளங்கவற்றவென்
றள்ளிலைச்சூலிறையருளின்வாளியுங்

துள்ளுஞ்சாவித்திரிப்புன லுஞ்சூதநீர்
வெள்ளமும்வெருண்டொலிவிழைத்தவேலைபோல்.

இ-ள். தேன் பாந்த கூந்தலையுடைய பெண்களது மனத்தைப் பய முறுத்த வென்று, கூர்மையாகிய இலைபோலுஞ் சூலாயுதத்தையுடைய சிவபெருமான் திருவருளினால், காயத்திரி தீர்த்தமும் பொருநையாற்று நீரும் பொங்கிச் சமுத்திரம்போலப் புரண்டன. 24

வளைத்தனநெருங்கினவளரிளம்பிறை
முளைத்தனநுதலியர்முகிழ்த்தநெஞ்சிலீண்
டிளைத்திலரெம்பிரானிணைமலர்ப்பதந்
திளைத்தனர்வலங்கொடுசென்றநீத்தமே.

இ-ள். அப் பிரவாக மானது எழு பெண்களையும் வளைத்தன, நெருங்கிச்சென்றன, கலை வளருகின்ற இளஞ் சந்திரன் முளைத்தாற் போன்ற நெற்றியை யுடைய பெண்கள் குவிந்த மனத்திற் சிறிதேனும் இளைப் பில்லாதவராய்ச் சிவபெருமானது தாமரை மலர்போன்ற இரு திருவடிகளையும் தியானித்தனர். வெள்ளமானது அவரை வலங்கொண்டு சென்றது. 25

பைந்தொடியோர்புடைவிளங்கப்பால்விடை
யுந்திநின்றிறையவனும்பரேத்தவேழ்
செந்துவர்வாயினர்திளைப்பக்காட்சியு
நந்தலில்வரங்களுநல்கியேகினான்.

இ-ள். பசிய வளையல்களை யணிந்த உமா தேவியார் ஒரு பக்கத்தில் விளங்கவும், வெள்ளிய இடபவாகனத்தைச் செலுத்தி வந்து சிவபெருமானும், தேவர்கள் துதிசெய்ய, செவ்விய பவளம் போன்ற வாயினை யுடைய பெண்கள் தரிசிக்கும்படி காட்சி கொடுத்து, குறைவில்லாத வரங்களும் அளித்துச் சென்றனர். 26



ஆதலின்வருமப்பீசர்நாமமு
மாதரீச்சுரமெனவழங்கிற்றவ்விடத்
தோதுமாயாசலத்துடனுதித்தலாற்
றீதின்மாயாபுரிப்பெயர்சிறந்ததே.

இ-ள். இவ்வாறாகிய காரணத்தால் அப்பீசர் என்னும் பெயரும் மாதரீச்சுரம் என வழங்கப்பட்டது. அவ்விடத்திலே சொல்லப்பட்ட மாயாசலம் என்னும் மலையுடனே கூடத் தோன்றுதலால், கொடுமை யில்லாத மாயாபுரி என்னும் பெயருடன் சிறந்துவிளங்கிற்று. 27

மன்றலங்கோதையர்பொருட்டுவல்லுழிக்
குன்றினின்னதிகளோர்மூன்றுங்கூடிய
யின்றருதலந்திரிவேணிசங்கம
மென்றனருணர்வினரின்னுங்கேட்டிரால்.

இ-ள். வாசனை பொருந்திய கூந்தலை யுடைய பெண்கள்காரண மாக, வலிய வராகமலையினிடத்துத் தோன்றிய (காளிந்தி, சாகவதி நதி, பொருநையாறு என்னும்) மூன்றுநதிகளும் ஒன்றுசேர்ந்து விளங்குந் தலம் திரிவேணி சங்கமம் என்று அறிவுடையோர் கூறினர். இன்னும் கேட்பீராக. 28

விளம்புமாயாபுரியதற்குமேற்றிசை
யளந்திடுமிருகுரோசமற்றபின்
களங்கொள்காளிந்தியுந்தாமர்வாணியும்
குளிர்ந்தவான்பொருநைநன்னதியுங்கூடுமே.

இ-ள். சொல்லப்பட்ட மாயாபுரி என்னுந் தலத்திற்கு மேலைத் திசையில் அளக்கப்பட்ட ஆறுகுரோச முடிவின்பின் களங்கமுடைய காளிந்தி நதியும் அழகிய சாகவதி நதியும் குளிர்மையுற்ற சிறந்த தாமிர பர்ணியென்னும் நல்ல ஆறும் ஒன்றுசேரும். 29

மேவிடனுந் திரிவேணிசங்கம
மாவயினிருமலன் சகளனுகிமென்
பூவைவண்ணனைமலர்ப்புண்டரீகனைத்
தாவரவிருபுடைதரித்துநின்றனன்.

இ-ள். (இம்மூன்று நதியும்) ஒன்றுசேரும்இடம் திரிவேணிசங்கமமாகும். அவ்விடத்தில் மலாகிதாகிய சிவபெருமான் உருவங்கொண்டு, மிருதுவான காயாமலர்போன்ற நிறத்தையுடைய திருமாலையும், தாமரைமலரின்மேல் இருக்கும் பிரமனையும் ஆதாரமாக இருபக்கத்துந் தரித்துநின்றனர்.

திரிவேணி சங்கமம்—திரி—மூன்று, வேணி—நதி, சங்கமம்—கலப்பது. பிரமனும் விட்டுணுவும் முறையே சிவபெருமானது வலப்பக்கத்தும் இடப்பக்கத்துந் தோன்றுவர்என்க. இதற்குப் பிரமாணம்:—

கூர்ம புராணம்.

மைந்த நின்னையென் வலப்புறத் தளித்தன னறிய
பைந்து ழாய்மணி வண்ணனை யெனதிடப் பாலிற்
றந்த ளித்தன னீவிர்வெங் கரிமுகன் றழல்வேற்
கந்த னேயெனக் கருணையி னுச்சிமோந் துரைத்தான்.

வாமன புராணம்.

தத: பிதாமஹோ தேவ: கேசவச்ச ஜகத் பதி:
ஆஜக் மதுஸ்த முத்திச்ய யத்ரலிங்கம் பவச்யது இத்யாதி
தைவாந்த மம்பராத் ப்ரஹ்மா விஸ்மித: புகாரகத:
விஷ்ணுர் கத்வாத பாதாளாக் ஸப்தலோக பராயண:
சக்ர பாணீர் விநிஷ்க்ராந்தோ லிங்கம் கலபதே ஜகே.
விஷ்ணு: பிதாமஹஸ் சோபௌ ஹரலிங்கம்ஸமேத்யஹி
க்ருதாம்ஜலி புடௌ பூத்வா ஸ்தோத்ரம் தேவஸ்ய சக்ரது:



ஏகபாதத் திரிமூர்த்தியாகச் சகளீகரித்தசிவபெருமானது திருமேனியிலே ஆயிர மம்சமாக உருத்திரமூர்த்தி தோன்றுவர். கோடியம்சமாக வலப்பக்க இடப்பக்கங்களி னின்றும் பிரம விட்டுணுக்கள் தோன்றுவர் என்று, வாதுளாகமம், ஆதித்தியபுராணம், இலிங்கபுராணம், அதர்வசிகோப நிடதம், மாபாரதம் - அநுசானிகபருவம் முதலியவற்றிற் கூறப்பட்டுள்ளன.

வாதுளாகமம்.

கர்மே சஸ்ய ஸகஸ் ராம்சாக் மஹேசஸ்ய ஸமுத்பவ:
மஹேசஸ்ய ஹைஸ் ராம்சாத் ருத்ர தேவஸமுத் பவ:
ஏதம் மஹேச கோட்யம் சாத் ப்ரஹ்ம விஷ்ணு ஸமுத்பவ:

வடிவுடைமுதலைமாப்பிரபுவென்பநீண்
முடிநெடுமுகுந்தனுமுளரிச்செம்மலுங்
கடிமலர்பொழியநன்கருளிக்கன்மிசை
யடிமலர்நிறீஇயறிவரியனாகினான்.

இ-ள் இத்தன்மையை யுடைய உருவத்தைக் கொண்டமுதற்பொருளாகிய பரமசிவனை மகாப்பிரபு என்று கூறுவர், நீண்ட கிரீடத்தையுடைய விட்டுணுவும் தாமரை மலரின்மேல் இருக்கும் பிரமனும் வாசனையுள்ள புட்பங்களைத்தூவ, நன்மையோடும் அவர்க்குஅருள்புரிந்து, வாகமலையின்கண் தமது திருவடியை நிறுத்தி யறிதற்கரியவ ராயினர்.

அருவடிவிலனுருவம்புயச்செழுந்
திருவடியமலருட்டிளைத்துக்காண்புது
கருவடியினிலுறுஞ்சமலர்காண்பதற்
குருவடிவறிவரிதுண்மையாமரோ.

இ-ள். அருவுரு வில்லாத சிவபெருமானது திருவுருவின்தாமரைமலர்போன்றசெழுமையாகிய திருவடியானது மலமற்றவிஞ்ஞானகலருட் கிடையிற் றரிசிப்பது, கருவினிடத்தில் இருக்கின்ற மலசயபந்திகளீ காண்பதற்கு அவ்வுருவின் றன்மை யுணர்தற்கரியது. இதுசத்தியம். 22

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சீதமலர்த்திரிவேணிசங்கமத்தெண்ணீர்செழும்பொ
        றகும்பிற்பெய்தேழ்
மாதர்வழிபாடிழைக்குமாதரீச்சுரநாடி
        யருளவுய்ப்பின்
மேதினியெவ்விடனுமிருவிசும்புசொரிதருமாரி
        வியந்தெந்நான்றுந்
சோதிபதச்சுவடுவைகுஞ்சூழறனைச்சோதிபதத்
        தானமென்ப.

இ-ள். குளிர்மையாகிய புட்பங்களையுடைய திரிவேணி சங்கமம் என்னுந் தீர்த்தத்தின் தெளிந்தநீரை, செழிய பொன்னாலாய கும்பத்திற் கொண்டு, எழுபெண்களும் பூசனைசெய்த மாதரீச்சுரம் என்னுந் தலத்தை யாரியந்து சொல்லின், பூமியெவ்விடத்தும் பெரிய மேகத்தாற் பொழிகின்ற மழைவியப்புற்று எந்நாளும் பதிகின்ற, சிவபெருமான் றமது அடிச்சுவட்டைப்பதித்திருக்கும் இடமாம் அதனைச் சோதி பதத்தானம் என்பர் புலவர். 33

கலி விருத்தம்.

மைத்தடம்பொழில்சூழும்வராகவெற்
புத்தரத்தினெண்மாநதிமேற்கரை
சித்தவொண்கிரியுண்டதிற்சித்தர்கண்
முத்தர்மொய்த்திருப்பார்முத்திமுன்னியே.

இ-ள். கரிய நீண்டசோலைகள்சூழ்ந்த வராகமலைக்கு வடக்கேயுள்ள பெரிய ஆற்றினது மேலைக்கரையில், அழகிய சித்தகிரினும் மலையிருக்



கின்றது. அம்மலையி னிடத்தே முத்திப்பேற்றைநினைத்துச்சித்தர்களும் சீவன்முத்தர்களும் நெருங்கியிருப்பர். 34

அன்னநற்கிரிமீதுண்டரனரு
ளென்னுமேழ்பெருந்தீர்த்தமவற்றினுட்
பன்னிரண்டுபெருவந்தொறும்பரன்
றன்னுவேணிச்சுரநதிதோன்றுமே.

இ-ள். அவ்வாறாய சிறந்த சித்தகிரியின்மேல், சிவபெருமானது திருவருள் ஏழியென்று சொல்லப்பட்ட பெரிய தீர்த்தங்கள் ஏழுள்ளன. அவற்றுள் பன்னிரு வருடத்திற் கொருமுறை, சிவபெருமானது திருச்சடைக்கணுள்ள கங்காநதிபிறக்கும். 35

தெய்வநன்புயலாயவத்தீர்த்தத்தி
னுய்யுநெஞ்சினிருதுசென்றாடினோர்
வெய்யவெயபிணியாவும்விலிக்கிடு
மொய்யெனக்கதிசேருவருண்மையே.

இ-ள். தெய்வத்தன்மை பொருந்திய சத்த தீர்த்தங்களினும், உய்ய வேண்டுமென்னும் மனத்துடன்சென்று இருதுக்கள் தோறும் மூழ்கினவர் உடைய மிக்க கொடிய நோய்களெல்லாம் நீங்கும், அவர் விரைவின் முத்தியை யடைவார், இது சத்தியம். 36

அறையுமக்கிரியானபொருநைக்கோந்
திறைவலாரிதிசைச்சந்திரகிரி
யுறையுமொண்புனற்றண்ணளியுண்டது
பொறைஞர்போற்றுமப்புண்ணியதீர்த்தமே.

இ-ள். சொல்லப்பட்ட சித்தமலைக்கணுள்ள தாமிரவன்னிநதிக்கு ஒருபக்கத்திலே, கிழக்கு திசையில் (இந்திர திக்கில்) சந்திரகிரி இருக்

கின்றது. நல்ல நீரினது அருள் அதன்கண் உண்டு. சசிதீர்த்தம் என்னும் அது பொறுமையையுடைய பெரியோராற் றுதிக்கப்பட்டது. 37

தண்ணந்திங்களோர்சாபத்தினுற்றுடற்
கண்ணதாங்கயரோகங்கடிதலா
லெண்ணருஞ்சசிதீர்த்தமென்றெங்கணு
முண்ணலங்கொடுரைக்கவிளங்குமே.

இ-ள். குளிர்ந்த சந்திரனானவன் ஒருசாபத்திற் பொருந்தி, அதனு லுடலினிடத் துண்டாகிய க்ஷயரோகத்தை (ஆங்குவந்துபூசித்து) நீங்குத லால், மதித்தற்கரிய சந்திர தீர்த்தமென்று எவ்விடத்து முள்ளவர்களா லும், மன அன்பினாற் சொல்லித் துதிக்கும்படி விளங்காநிற்கும்.

சந்திரனுக்கு உண்டாகிய சாபமாவது - பிரமனது புத்திரனாகிய தக்கனென்பான், அசுவினி முதலிய இருபத்தேழு நட்சத்திரங்களாகிய பெண்களை யீன்று, அத்திரிமுனிவரின் புத்திரனாகிய சந்திரனுக்கு விவா கஞ்செய்து கொடுத்தான். ஒவ்வோர்தினத்தும் ஒவ்வோர் பெண்களுடன் வாழுதல் வேண்டுமென்னும் நியமத்தை விடுத்து, மிக்க அழகுடைய உரோகிணி இடத்தில் மோகங்கொண்டு அவளுடனே மருவியிருந்து மற்றவர்களை யெண்ணாமல் இருந்தான். அந்த மடந்தையர் சென்றுதம்பி தாவாகிய தக்கனிடம் முறையிட்டனர். அவன் சந்திரனை வரவழைத்து நியமப்படி யிருப்பாயாகவென்று கூறினன். அவ்வாறே சிலநாள் இரு ந்து. பழையபடியே உரோகிணி யிடத்தையே விரும்பினன். அதனைத் தந்தைக்குப் பெண்கள் முறையிட்டுவருந்த, தக்கன் சினந்து கலைதேயக் கடவது என்று சபித்தான். அச்சாபத்தை யிங்குவந்து பூசித்துநீக்கினன் என்பது சரித்திரம். 38

வாலவிந்துவளரவளர்ந்திடுங்
கோலமேனிகுறையிற்குறைந்திடு



மேலுமோர்புனலெவ்வந்தொலைக்குநோய்
சாலும்வெய்யபவமுந்தணிக்குமே.

இ-ள். பாலசந்திரன் வளருந்தோறும் தானும் வளர்ந்து நிற்கும், அவனது கலைகள் குறையுந்தோறும் தானுங் குறையாநிற்கும், அத்தன் மைத்தாய வேறோர் தீர்த்தமும் அத்தலத் துள்ளது. (அது தன்னின் மூழ்கினவரது) துன்பங்களை யெல்லாம்நீக்கும், நோயைக் கொடுக்கின்ற கொடிய பாவங்களையும் ஒழிக்கும். 39

தூய்யபூரணையிற்சுனைதோய்ந்திடிற்
பையுமர்கங்கைதோயும்பலனெய்து
மையமில்லையதகம்பலவுள
தெய்விகம்பலவுண்டச்சிலம்பினே.

இ-ள். சுத்தமாகிய பௌர்ணிமை திதியிலே சுனையின்கண் மூழ்கி னால், துன்பங்களை நீக்குகின்ற கங்கை யாற்றின்கண் மூழ்கும் பலன் வந்து சேரும், இதற்குச் சந்தேகமில்லை. அம்மலையின்கண் பெருமருந்து கள் பலவுள்ளனவாகும், தெய்வத்தன்மைகளும் பல்வுள்ளன வாகும். 40

அதன்மருங்கிலென்றூழ்மடுவாடினோர்க்
குதவுஞானமதற்கொருசார்வைகுஞ்
சிதைவில்சூலசிருங்கத்தொர்வாவியற்
புதத்துறும்பல்புதுமைகணல்குமே.

இ-ள். அதற்குப்பக்கத்திலே சூரியதீர்த்த முள்ளதாகும், அதன் கண் மூழ்கினவர்க்குச் சிவஞானத்தைக் கொடுக்கும், அந்தச் சூரியதீர்த் தத்திற்கு ஒருபக்கத்தில், அறிவில்லாத சூலசிருங்கம் என்னும் மலைக்கண் ஒருதீர்த்தம் அதிசயமாக வுள்ளது, அதுபல அற்புதங்களைக் கொடுக்கும்.

கிளைக்குமக்கிரியின்வடகீழ்த்திசை
துளக்கமின்றிநுமக்குமுன்சொற்றிடு
மளக்கரும்பிரமாசலமாங்கதன்
விளக்கமுற்றபலன்யார்விளம்புவார்.

இ-ள். குலங்கள் பொருந்திய அச்சுல சிருங்கம் என்னுமலைக்கு வடகிழக்குத் திக்கில், நடுக்க மில்லாமல் உங்களுக்கு முன்னர்ச்சொன்ன, அளவிட்டு அறிதற்கரிய பிரமமலை உள்ளது. அம்மலையின் விளக்கங் கொண்ட தன்மைகளை யெல்லாம் எவர்விளம்புவார். 42

ஆங்கதனுச்சியில்விநாயகன்வைகுமீ
தோங்குபல்குகையுண்டவற்றுன்னடுத்
தாங்கரும்பராசத்தியமர்ந்திடும்
பாங்கரிற்சித்தர்பண்ணுறுவார்நண்ணுவார்.

இ-ள். அம்மலையி னுச்சிக்கண் விநாயகக்கடவுள் வீற்றிருப்பர், அதன்மேல் உயர்வாய பலகுகைகள் உள்ளன, அக்குகைகளின் நடுக்குகையுள் உலகங்களை யெல்லாந் தாங்குகின்ற அரியபராசத்தி வீற்றிருப்பள், அதனிடத்தே சித்தர்களும் தேவர்களும் அடைந்து வசிப்பார். 43

சிற்பராபரைதீர்த்தமுமாதவர்
சொற்பராவன்னதீர்த்தமுஞ்சூழுமா
னற்பராபரஞானத்திசாமுநான்முகன்
சற்பராயினனுமுருச்சார்ந்ததே.

இ-ள். ஞானவடிவாகிய பராபரைதீர்த்தமும், பெரியதவத்தை யுடைய முனிவர்கள் சொற்கொண்டு துதிக்கின்ற அன்னதீர்த்தமும் சூழ்ந் திருக்கும், பிரமதேவர் ஹம்சமாக வடிவங்கொண்டு, சிறந்த பராசத்தியை வணங்கினார். 44



அன்னதீர்த்தம்படிந்தைங்கரற்பராய்ச்
சின்மயப்பரையைப்புரைதீர்த்தமு
மன்னுமானலங்கொண்டுவந்திப்பவ
ருன்னருங்கதியெய்துவருண்மையே.

இ-ள். அன்ன தீர்த்தத்திலே முழுகி, ஐந்துதிருக்கரங்களையுடைய விநாயகக் கடவுளைத் துதித்து. ஞானமயமாகவுள்ள பராசத்தியையொத்த பரைதீர்த்தமும் நிலைபெற்றிருக்கும், நன்மைகொண்டுபூசிப்பவர், நினைத் தற்கரிய முத்தியை யடைவர். இது சத்தியமே யாம். 45

பூரணையிற்புகர்மகமெய்துகா
லோரணையமுன்சொற்றவியற்கையிற்
சீரணையுஞ்சிவையைவழுத்திய
பாரணையர்பரபதம்பற்றுவார்.

இ-ள். பௌர்ணிமை திதியிலே வெள்ளிக்கிழமையிலே மகநட்சத் திரம் வந்த காலத்தில், அழகானது பொருந்த முன்னர்ச் சொல்லப்பட்ட விதியால், சிறப்புப் பொருந்திய உமாதேவியாரைப் பூசித்த தொண்டர் கள் மேலான முத்திப்பேற்றையடைவார். 46

ஆரணச்சதுர்வேதனமர்தலாற்
பிரமவொண்கிரிப்பேர்பெற்றுயர்ந்தது
மரபிலோர்புடைமற்றொருவெற்பின்மேற்
பரவுதெய்விகப்பன்மடுவுண்டரோ.

இ-ள். நான்கு முகங்களை யுடைய பிரமதேவர் பாம்புருக்கொண்டு அம்மலையி லிருத்தலால் அழகிய பிரமமலையெனப் பெயர்கொண்டு உயர் வற்று விளங்கியது, முறைமையுடைய ஓர் பக்கத்திலேயுள்ள வேறோர் மலையின்மேல் (யாவராலும்) துதிக்கப்படுகின்ற தெய்வத்தன்மை யுடைய பலமடுக்கள் உள்ளன. 47

முற்றுணர்ந்தவர்முற்றுணர்கேள்வியர்
பற்றுநீத்தவர்பாங்கரிற்பற்றுவார்
மற்றதன்றென் குணத்தில்வராகமா
வெற்புதக்கினுளதரிவெற்பரோ.

இ-ள். கடந்த வெற்றியையுடைய அரசர்களும், எல்லாவற்றையும் அறிந்த கேள்வியில் வல்ல ஞானியரும், இருபற்றுக்களையும் விட்ட முனிவர்களும் பக்கங்கடோறும் இருப்பார், அதற்குத் தென்கிழக்கிற் பெரிய வராக மலையுளது, அதற்கு வடக்கே நாராயணகிரி யுள்ளதாகும். 48

காசைவண்ணன்கபிலையுருவிகொண்
டோசைதீர்சத்ததீர்த்தத்தின்கரை
யாசைதீர்சித்தரும்பர்க்கருணல்கிப்
பூசையீசனைப்போற்றிப்புரிந்திடும்.

இ-ள். காயாம் பூவண்ணனாகிய திருமால் பசுவுருக்கொண்டு, ஒலியில்லாத சத்ததீர்த்தத்தின் அழகிய கரையின்கண் ஆசைமிக்க சித்தருக்கும் தேவருக்கும் அருளைக்கொடுத்து, சிவபெருமானைத் துதித்துப் பூசை செய்யாநிற்பர். 49

மாயன்வைகலினாற்பெருமாள்கிரி
யாயதந்தவசலத்துதக்கினிற்
சேயசத்திசிவகிரிரண்டுள
மேயவற்வறச்சொல்வாமினிமேலரோ.

இ-ள். திருமால் பசுவடிவங்கொண்டு இருத்தலினால் அம்மலைக்குப் பெருமாள் கிரி என்னும் பெயர் உண்டாயிற்று, அந்த மலைக்கு வடக்கிற் செவ்விய சத்திகிரி, சிவ மலையென இருமலை யுள்ளன, அவற்றின் பெருமையை யினிமேற் சொல்லுதும். 50

சூகராசலத்தொல்வளங்கூறநா
வேகரானவருக்கெளிதோவுமை



பாகராரமென்றோதப்பயன்பெறு
நாகராயனவிற்றினவிற்றுமே.

இ-ள். பன்றி மலையினது பழைய வளங்களைச் சொல்ல, ஒருநாவுடையர்க்கு எளிதாகுமோ, உமாதேவியை ஒரு பாகத்திலுடைய சிவபெருமானது ஆரமென்று சொல்லுதற்குரிய பயனைப் பெற்ற நாகராசனாகிய ஆதிசேடன் சொன்னாலுஞ் சொல்லப்படுமோ. 51

வன்றிறற்பன்றிமால்வரைச்சாரலி
னொன்றுமுத்தரத்துள்ளதுதென்றலங்
கன்றுலாங்கன்னிகாரவனந்தனிற்
கொன்றைநாறுங்குறிகுய்யமென்பவே.

இ-ள். வலிமை மிக்கபெரிய வராக மலையின் பக்கத்தில், பொருந்திய வடதிசைக்கணுள்ளது, தென்றற் காற்றாகிய குழவி தவழுகின்ற கன்னிகார வனமேயாம், ஆங்குள்ள கொன்றைப் பூநாறுஞ் சிவலிங்கம் குய்யலிங்க மெனப்படும். 52

அரியயன்றொழுமவ்விலிங்கத்தையுட்
பரிவினேத்திப்பணிந்தருச்சித்தவர்
தெரிவருங்கதிசேர்குவர்திண்ணமே
துரியமாதவிரென்றனன்சூதனே.

இ-ள். துரிய நிலையை யடைந்த முனிவர்களே, விட்டுணு பிரமன் என்னு மிருவாராலும் வணங்கப்படுகின்ற அவ்விலிங்கத்தை மனத்தின்கண் அன்புடன் துதித்து வணங்கிப் பூசித்தவர், அறிதற்கரிய மேற்கதியை யடைந்தவர், இது திண்ணம் என்றார் சூதமுனிவர். 53

நதியுற்பவித்த சருக்கம் முற்றிற்று.

ஆ. செய்யுள்— 278.

உ

சிவமயம்.

வேலும்மயிலுந்துணை.

எட்டாவது,

# கன்னிகார வனச் சரு[illegible]

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சுருதிவேதியர்சூதனைத்துதித்துநீர்
சூழ்புவியிருள்சீக்கும்
பரிதிபோலுளவிருள்கெடவிமைத்தசெம்
பரிதிநீபகர்காதை
பெருகுமின்சுவையமிழ்தினைக்கருணையாற்
பெட்புறவினிதூறு
மிருசெவிப்புலனுகர்வதற்குவகைபூத்
தின்னமும்விழைகின்ற.

இ-ள். வேதங்களில் வல்ல முனிவர்கள், சூதமுனிவரைத் துதித்து நீரால் சூழப்பட்ட இப்பூமியின்கணுள்ள இருளையழிக்கும் சூரியனைப் போல, எமது உள்ளத்தின்கணுள்ள அஞ்ஞான மாகிய இருள் அழியும்படி பிரகாசிக்கின்ற சிவந்த சூரியனாகிய நீர்சொன்ன கதைகள், சுரக்கின்ற இனிய சுவையாகிய அமிர்தத்தை அருளாலே விரும்பும்படி நன்றாக ஊறுகின்றன, அதனால் எமது செவிகளாகிய புலன்கள், அதனை யுண்ணுவதற்கு மகிழ்ச்சி சிறந்து இன்னும் கேட்க விரும்புகின்றன. 1



புனிதமாதவபொங்கொளியிலிங்கமொன்
றுளதுபோற்றினருள்ளங்
கனியுமாறுபேரின்பமேதருமெனக்
கழறினைபவநோயிற்
றுனியுறுதியாமறியுமாறதனது
பெருமையைத்துகடீர்க்க
கனிவிழைந்துரையெனத்தொழுதார்பெற
நவிலுவானெதிர்போற்றி.

இ-ள். பரிசுத்தமுடைய தவத்தையாற்றுஞ் சூதமுனிவரே! மிகுந்த பிரகாசமுடைய சிவலிங்க மொன்றிருக்கின்றது, அது தன்னையடைந்து பூசித்தவர்களது மனங் குழையும்படி பெரியமுத்தி யின்பத்தைக்கொடுக்குமெனச் சொல்லி யருளினிர், நாங்களும் பிறவியாகிய பிணியாற் பயப்படாது அதனை யறியும்படி, அப்பெருமையை யெங்கள் குற்றத்தைப் போக்குமாறு மிகவும் விருப்புற்றுச் சொல்வீராக வென்று (முனிவர்) வணங்கினார், அதனை யவர் பெறும்படி எதிரிலிருந்து துதித்து சொல்லத்தொடங்கினார். 2

மருளிலிங்கநீருளம்புரியாதுமா
தவம்புரிந்துயர்ஞானத்
தெருளிலிங்கதுவிதெனும்பான்மையை
தெரிவருஞ்சிவரூப
வருளிலிங்கமற்றதன்றிறமறைகுத
வழிநெறித்தெனவேற்
பொருளிலிங்கநெஞ்செழுதிமுன்பார்த்தபின்
கேண்மெனப்புகல்கின்றான்.

இ-ள். (முனிவர்களே) நீவிர் மயக்கத்தில் நமது அறிவைவிடாது, பெரிய தவத்தைச் செய்து, சிவஞானமாகிய தெளிவில், அது இது என்று பலவகைப் பட்ட வேதங்களாலுஞ் சொல்லுதல் தருமவழிப்பட்டதாகும் என்று, ஞானப் பொருளாகிய குறியைத் தம்மனத்தின்கணெழுதி அதனைத் தரிசித்து பின்சேறுங்க ளென்று சொல்வாராயினர் (சூதமுனிவர்.) 3

அண்ணலுக்குநஞ்சருத்தலிற்பத்திநாந்
தாங்குதலறனென்று
வெண்ணருந்தவமிழைத்திருநிலத்தின்மீ
தெறிதிரைப்பாலாழி
விண்ணெடுங்கிரியுருவெடுத்தாங்கொளி
விளங்கவேதியர்விண்ணோ
ருண்ணிகழ்த்தமாமறைப்பிழம்பெனமிளிர்ந்
தோங்குமோர்வேதண்டம்.

இ-ள். சிவபெருமானுக்கு நஞ்சினை யுண்ணக் கொடுத்தமையால, நாம் அன்பு கொண்டு அவரைச் சுமந்திருத்தலே தருமமாகும் என்று மதித்தற் கரிய தவத்தைச் செய்து, பெரிய பூமியின்மேல், திரையெறிகின்ற பாற்கடலானது, ஆகாயமளவு நீண்டமலை வடிவைக் கொண்டு இருந்தாற் போல, வெள்ளொளியாற் சிறந்து, அந்தணர் தேவர் என்று மிவரது மனத்தின்க ணுள்ள பெரிய வேத சாரத்தைப் போல ஓங்கி விளங்கும் வெள்ளிமலை. 4

அந்தநீள்வரைச்சிகரியிலாயிரங்
கோடியாதவரொன்றாய்
வந்துதித்தனசினகரத்தரியயன்
வானவர்முதலேனோர்



முந்துறச்சிரமிசைகரமுகிழ்ப்பவெண்
முடங்குழையரிமான்சூழ்
தந்தமாமணியாசனத்திறைவியோ
டிருந்தனன்றனிநாதன்.

இ-ள். அந்த வெள்ளி மலையின் உச்சியில் ஆயிரகோடி சூரியர்கள் ஒன்று சேர்ந்து உதயஞ்செய்தாற் போன்ற கோயிலின்கண், விட்டுணு பிரமன் தேவர் முதலாயினோர், முதன்மை பொருந்தத் தலையின்மீது கைகூப்பி யஞ்சலிக்க, வெள்ளிய பிடர் மயிரினையுடைய சிங்கங்களாற் றாங்கப்பட்ட சிறந்த இரத்தினாசனத்தி னிடத்து; ஒரு முதல்வராகிய சிவபெருமான் உமாதேவியாரோடும் வீற்றிருந்தனர். 5

அருளுருப்பொலிநந்தியெம்மடிகள்கைப்
பிரம்பொலியவைநாப்பண்
டெருளுநெஞ்சினன்சுரர்குருச்சென்றெதிர்
தாழ்ந்தெழுந்தனன்சென்னி
மருமலர்க்கரங்கூப்பினனிருகண்ணீர்
வாரருவியின்மூழ்கி
யுருகினன்பரவசத்தடைந்தனன்விழித்
தொருவனதடிபோற்றி.

இ-ள்: திருவரு ளுருவாற் பொலிந்து விளங்கும் எமது அடிகளாகிய திருநந்தி தேவரது கையின்க ணுள்ள பிரம்பு விளங்கும் சபையின் நடுவே, தெளிந்த மனத்தை யுடையராய் தேவகுருவான வியாழபகவான் எதிர் சென்று (சிவபெருமானை) வணங்கி யெழுந்து, தலையின்கண் வாசனை பொருந்திய தாமரை மலர்போன்ற கைகளைக் குவித்து, இருகண்களி னின்றும் நீர் அருவியைப்போலப் பொழிய அதின்மூழ்கி, மனமுருகிச் சிறந்த பரவசப்பட்டு, பின் விழித்து ஒப்பற்ற முதல்வராகிய சிவபெருமானது திருவடிகளை யேத்தெடுத்து. 6

குறிகுணங்களாயினை யவையொழிந்தனை
கோதின்மாமறைச் சென்னி
யறிபழம்பொருளாயினை யறிவதற்
கரிமையாயினை மூல
நெறியினின்றகன் றனையுயிர்தொறுந்தொறுந்
தருப்பணநிழல்போலச்
செறியநின்றனையிறைவநின் றிருவுளச்
செயலறிகுநர்யாரே.

இ-ள். குறியுங் குணங்களு மாயினீர், அவை யொழிந்தீர், குற்றமில்லாத பெரிய வேத சிரசின் கண் அறியப்படும் பழம்பொருளானீர், பசுபாச ஞானங்களா லுணர்வதற்கு அருமை யுடையாயினீர், எல்லாவற்றிற்கும் முதற்காரண மாகநின்று, அதுவல்லவாகவும் நின்றீர், ஆன்மாக்கடோறும் கண்ணாடி விம்பம்போல அதுவதுவாகக் கலந்து நின்றீர் தலைவரே! தேவரீரது திருவருட்டன்மைகளை யாவரறிய வல்லவர். 7

அற்புதத்தினை மனாதிகட்கணுகொணா
வருவுருவெனநின்றாய்
முற்புரிந்தமுத்தொழிலினைதொழில்புரி
மூவராயினை யேவாய்
சொற்பொருட்டெரிவோருளந்தெரிந்தனை
சூக்குமதூலத்தோய்
சிற்பரஞ்சுடருருவநின் றிருவுளச்
செயலறிகுநர்யாரே.

இ-ள். ஆச்சரிய குண முடையானீர், மனமுதலிய கருவிகளால் அறியப்படாத அருவவடிவும் உருவமுமாக நின்றீர், முதலிற் செய்யும் படைத்தல் காத்தல் அழித்த லென்னும் முத்தொழில்



புடையீர் அத்தொழில்களைச் செய்தற்கு மும்மூர்த்திகளாயினீர், மூவாதன்மையரே! சொல்லும் அதன்பொருளும் அறிந்தவரது மனத்தாலறியப்பட்டவரே! அணுவிற்கு அணுவாகியும் மகத்திற்கு மகத்தாயும் இருக்கின்றவரே! ஞானமாகிய பெரிய சோதிவடிவரே! தேவரீரது திருவருட் செயல்களை யறிவோர் யாவர். 8

எனத்துதித்தருட்கடைவிழியேற்றிமை
யவர்குருத்தொழுமெல்லை
மனத்துதித்தபேரன்பினனொருபுறம்
வாழ்திருப்பவள் வானோர்
இனத்தநீப்பொறியுமிழ்சிறுகட்பெரி
யகிம்புரிக்கோட்டுக்
கனத்துதிக்கைமாலியானையீருரியினன்
கழற்பதம்போற்றி.

இ-ள். என்று இவ்வாறு துதித்தான் திருவருட் கடைக்கண் பார்வையை விரும்பித் தேவகுருவாகிய வியாழன் துதிக்குங் காலத்தில், அடியவரது மனத்தின்கண் தோன்றும் பெரிய அன்புருவானவரும், சிவபெருமானது ஒருபக்கத்து வாழ்ந்திருப்பவளும் ஆகிய உமாதேவி, தேவர்மீதுள்ள கோபத்தினால் அக்கினிப் பொறிகளைக் கக்கும் சிறிய கண்களையும் பெரியகிம்புரிப் பூணணிந்த கொம்புகளையும், மேகம்போன்ற துதிக்கையையும் மதமயக்கத்தையுமுடைய கயாசுரன் என்னும் யானைத்தோலையுடைய சிவபெருமானது ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த திருவடிகளைத் துதித்து. 9

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பாலலோசனமான்முதலியோர்கட்பருவம்
வீறிணும்வியாக்
காலனைக்கால்கொடுமோதுநிதகன்
கழறிபுனைற்றிட்

நிலைசுக்குமவுருவினையெனநினைத்துதித்தது
தோமறியீறன்
நிலைவாதெனவிரண்டுமோர்தொடர்புகொண்டிருக்கு
மென்றனனெந்தை.

இ-ள். நெற்றிக்கண்ணை யுடையவரே! விட்டுணு முதலிய தேவர்களது ஆயுள் முடிந்தாலும் அழியாதயமனுக்கும் யமனா யிருப்பவரே! நான்கு வேதங்களையு மோதியுணர்ந்த வியாழன் தோத்திரஞ் சொன்னவற்றுள், தூலம் சூக்குமம் ஆகிய வடிவங்களை யுடையாய் எனத் தேவரீரைத் துதித்ததைத் தெளியமாட்டேன், மாறுபாடில்லாமல் அதனை யறியும்படி திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, (சிவபெருமான் கூறுவார், நங்கையே!) அவ்விருவகை யுருவும் ஓர் சம்பந்தத்தைக் கொண்டிருக்கு மென்றுசொன்னார். 10

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

துண்டவெண்பிறைநுதலிகேட்டிறைஞ்சித்
துணைவசூக்குமதூலமென்றிரண்டுங்
கொண்டதோர்தொடர்பென்றனைபிரித்துக்
குவலயத்தருச்சிப்போர்க்கருள்வாய்
விண்டெனக்கிரிமுழுவதுங்கொள்குவம்
விளங்குகோபுரஞ்சிகரமுப்பலிதூ
மெண்டருந்திருப்பீடமதியாவு
மிலங்குதூலமாமிலங்கமற்றவையே.

இ-ள். பாதிச் சந்திரன்போன்ற நெற்றியை யுடைய உமாபிராட்டியார் அதனைக்கேட்டு, வணங்கி, நாயகரே! சூக்குமம் தூலம் என்னும் இரண்டும், தேவரீர் கொண்டதாய் ஒரு சம்பந்தமுடைய வடிவென்று



திருவாய் மலர்ந்தருளினீர், பூமியின்கண் அவற்றைத் தியானித்துப் பூசிப்பவர்க்குக் கிருபைசெய்வீர்! ஆகாயத்தைப்போல மலை முழுவதையும் கொள்ளுவோம், கோபுரங்களுந் தூபியும் பலியிடுகின்ற மதிக்கத் தகுந்த அழகிய பலிபீடமும் இனையவைகளும் ஆகிய அவையெல்லாம் விளங்காநின்ற தூல லிங்கமெனப்படும். 11

அவ்விலிங்கமற்றேழ்வகைத்தாகுமற்
றவற்றுண்மற்றொருகாரணமின்றிச்
செவ்விபெற்றொருசுடர்க்கிரிவடிவந்
திகழ்ந்துபாதலக்கீழின்வேரோடிப்
பௌவநீணிலத்தருட்கொழுந்துருவம்
படைத்துநாலிரண்டொன்றெனுமியல்பிற்
சைவநன்னெறித்தலைசிறந்தொன்றாய்த்
தயங்கியோங்கொளியாயதுசயம்பு.

இ-ள். அத்தூல லிலிங்கம் எழுவகைப்படும். அவைகளுள் வேறு தமக்குக் காரணமொன்று மில்லாமல், அழகுகொண்டு ஒப்பற்ற ஒளிவடிவமுள்ள மலையாகவிளங்கிப் பாதலலோகத்திற்கும் அப்பால் வேரோடிச் சென்று, கடலாற் சூழப்பட்ட நீண்ட பூமியின்கண் திருவருட்கொழுந்து உருவைக் கொண்டு, நான்கு; இரண்டு ஒன்று என்னுந் தன்மையால் சைவசம்பந்தமுள்ள சித்தாந்த சன்மார்க்கத்தின் விளங்கப் பெற்று ஒன்றாயிலங்க, மிக்க பிரகாசமுடையது சயம்புலிங்கம் ஆகும். 12

இலங்குமச்சிவகிரியினிலொருபோ
தேனும்பிரிதெனவுன்னுறுவம்யாம்
விலங்கலஞ்சுடர்ச்சிகரிவான்கொழுந்து
மேவுறுங்குறிதைவிகலிங்கம்

புலன்களைந்தையுங்களைந்தொருங்குணர்ந்த
பொதியமாமுனிமுதலமாமுனிவர்
தலங்களெங்கணும்வழிபடல்புரிவான்
சாரிலிங்கமஃதாரிடலிங்கம்.

இ-ள். விளங்குகின்ற அச்சிவலிங்க சொரூபத்தில் ஒருகணமேனும் நீக்கமின்றி யாம் சாந்நித்தியரா யிருப்பேம். விலகி வீட்டொளிரும் முடியாது ஆகாயத்தி னுச்சியின்காறுஞ் செல்லுஞ் சிவலிங்கம் தைவிக லிங்கமாகும், பஞ்சப் புலன்களையும் வென்று பாசிவத்தை யுள்ளவாற றிந்த அகத்தியர்முதலிய சிறந்த இருடிகள் தலங்களெவ்விடத்து வழி பாடுசெய்து தாபித்தது ஆரிட லிங்கமாகும். 13

செய்யதாமரைக்கிழவனுந்துளபத்
தெரியன்மார்பனுங்குலிசனுஞ்சுரரும்
வெய்யசொற்றயித்தியருமற்றையரும்
வேணவாவுறல்காணவாலிங்கம்
வையமாமனுமுதலியநிருபர்
வழிபடுங்குறிமானிடலிங்க
மெய்யராகியெனோர்பெறநிறுவி
யலறிடுங்குறிய நாரலிங்கம்.

இ-ள். சிவந்த தாமரை மலரின்மே லிருக்கும் பிரமனும் துழாய்மா லையைத் தரித்த திருமாலும் வச்சிராயுதத்தையுடைய இந்திரனும் தேவர் களும், கொடுஞ்சொற்களை வசனிக்கின்ற அசுரர்களும் ஏனையகணங்க ளும் விருப்பத்துடன் தாபித்தது காணலிங்கம், பூமியின்கண் சிறந்த மனுமுதலிய சிறந்த அரசர்களாலே தாபித்து வழிபடப்பட்ட இலிங்கம் மானிடலிங்கமாம், அறிவுடையவரான, மற்றைய நரர்களால் கீர்த்தித்துப் பூசிக்கப்பட்ட இலிங்கம் நரலிங்கமாகும். 14



உயிர்பிரிந்திடுங்களேபரங்கழிய
வுண்டுமித்தக்குமொள்ளெரிதவிழ்கானி
னியமமுற்றுயர்சினகரங்கோலி
நிறுவுமக்குறிமயானலிங்கங்
கயனெடுங்கணாயீராறுபருவங்
கழிந்தபின்பதிற்கவினிவீற்றிருப்பேம்
பயில்வுகொண்டமுன்பகர்சயம்புவினி
பரிந்துவந்தனைபுரிந்திடுகென்றான்.

இ-ள். ஆன்மாநீங்கிய பிணங்கள் முழுவதையும் இல்லையென்னும் படி உண்டு எப்பமிடுகின்ற மிக்க அனல்பொருந்திய இடுகாட்டில் நியம மாகவுள்ள கோயில்செய்து, தாபிக்கின்ற இலிங்கம் நீண்ட மயானலிங்க மெனப்படும், கயல்மீன்போன்ற நீண்டகண்களையுடைய பெண்ணே! பன்னிரண்டுவருடங் கழிந்தபின்பு அவ்விலிங்கத்தில் அழகுடன் வீற்றி ருப்பேம்; யாம் இடைவிடாது வீற்றிருக்கின்ற சுயம்புலிங்கத்தின்கண் நீயன்புற்று வழிபாட்டைச் செய்க என்று (சிவபெருமான்) திருவாய் மலர்ந்தருளினர்.

இந்நூலாசிரியர் சுயம்புலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், காண லிங்கம், மானிடலிங்கம், நரலிங்கம், மயான இலிங்கம் என எழுவகைப் படுமென்று கூறியுள்ளார் இவை யாகம விரோதமாகலின் இச்செய்யுள் பதிப்பித்தவாது செய்கையா னேர்ந்த பிழைபோலும். சிவாகமங்களிலே சொல்லப்பட்ட சிவலிங்க விதியைக் காட்டுவாம்.

இலிங்கம் எழுவகைப்படும். அவையாவன—பார்த்தலிங்கம், சுயம் புலிங்கம், காணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம், கணிகலிங்கம், (க்ஷணிகலிங்கம்) என்பனவாம். அவற்றுள்,

(1) பார்த்தலிங்கமாவது—சிவபெருமான் மகாசங்கார காலம் வரையும் சாந்நித்தியரா யிருந்து ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிக்கப் பெறும்

இலிங்கமாம். இது தாவரலிங்கம், திரலிங்கம் எனவும் பெயர் பெறும்.

(2) சுயம்பு லிங்கமாவது—தானே தோன்றியது.

(3) காணலிங்கமாவது—விநாயகர், வைரவர், வீரபத்திரர், சுப்பிரமணியர் முதலிய சிவகணாதிபர்களாலும் கணங்களாலுந் தாபிக்கப்பட்டது.

(4) தைவிக லிங்கமாவது—விட்டுணு, பிரமன், இந்திரன் முதலிய தேவர்களாலே தாபிக்கப்பட்டது.

(5) ஆரிட லிங்கமாவது—அகத்தியர், புலத்தியர், நாரதர், அத்திரி, வசிட்டர், விசுவாமித்திரர், காசிபர், வாமதேவர், பிருகுமுதலாய முனிவர்களாலே தாபிக்கப்பட்டது. அசுரர் இராக்கதர் முதலினோராலும் தாபிக்கப்பட்டதும் இதுவே.

(6) மானுடலிங்கமாவது—மனுமுதலிய அரசர்களானும் அறிவுடைய கண்ணர், பரசுராமர், இராமர் முதலாயினோராலுந் தாபிக்கப்பட்டதாகும்.

(7) கணிகலிங்கமாவது—பூசித்தவுடன் விடப்பட்ட இலிங்கம் இது மண் அரிசி, அன்னம், ஆற்றுமணல், கோமயம், வெண்ணெய், உருத்திராக்ஷம், சந்தனம், கூர்ச்சம், புட்பமாலை, சருக்கரை, மா என்னும் பன்னிரு பொருள்களு ளொன்றாற் செய்யப்படுவது,

இவற்றுள் க்ஷணிகலிங்கத்தி னுயர்ந்தது மானுடலிங்கம். மானுடலிங்கத்தி னுயர்ந்தது ஆரிடலிங்கம். அதினுயர்ந்தது தைவிகலிங்கம். அதின் உயர்ந்தது காண லிங்கம். அதினு முயர்ந்தது சுயம்புலிங்கமாம். இவ்வாறு விம்பாகமம், காமிகாகமம், வாதுளாகமம், காரணாகமம், சுவாயம்புவாகமம், சந்தான ஆகமம், சர்வோத்தம முதலிய சிவாகமங்களிலே சொல்லப்பட்டன. 15



நீலவாட்கணியுளங்குமிழ்த்திறைவ
நினைச்சயம்புவிலருச்சனை புரிவா
னேலவோர் தறனருள்கெனத்தென்பா
லேனமால்வரை ழிருகன்னற்
கோலுழத்தரங்கொங்குநீள்வனத்திற்
குரவனுந்துளவனும்புரிகின்றதவத்தான
மூலமாயுதித்தனமவணெய்தி
முழன்றுவந்தனை புரியெனமொழிந்தான்.

இ-ள். கருநிறமுடைய வாளாயுதத்தை யொத்த கண்களையுடைய உமாதேவியார் மனங்குவிந்து, இறைவனே! தேவரீரைச் சுயம்புலிங்கத்தில் அருச்சனை செய்யும்படி தகுந்த வொருதலத்தைத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, தென்றிசையிலே பெரிய வராக மலைக்கு ஆறுநாழிகை வழிகொண்ட வடக்கில் கன்னிகார வனத்திலே பிரமனும் விட்டுணுவும் முன்செய்த தவத்தினாலே மூலகாரணமாகத் தோன்றி யுள்ளோம், மாதரசே நீ யவ்விடஞ்சென்று வழிபாட்டைச் செய்வாயாக வென்றார். 16

கலிநிலைத்துறை.

கேட்டாளுமைமீளவுங்கேழலனைப்போற்றிமாலுந்
தாட்டாமரைச்செல்வனுந்தாழ்ந்துதவங்களாற்றி
வேட்டாயிடையுய்ந்தாரெனக்குவிரித்துவக்காற்
காட்டாயெனக்கார்மிடற்றெந்தைகழறுகின்றான்.

இ-ள். உமாதேவியார் கேட்டுப் பின்னரும் வராகமலைக்கணெழுந்தருளும் சிவபெருமானைத் துதித்து விட்டுணு மூர்த்தியும், நாளத்தையுடைய தாமரைமலரின்மீது இருக்கும் பிரமனும் வணங்கித்தவங்களைச் செய்து, என்னவரத்தை விரும்பி அவ்விடத்தி லடைந்து உய்ந்தனர்

அதனை யடியேனாகிய எனக்கு விரிவுபடுத்தி. தேவரீர் திருவாக்காற் காட்டியருளுதிர் என்று பிரார்த்திக்க, சிவபெருமான் கூறுவாராயினர்.

கேளாயதுமுன்புகிரேதாயுகத்தில்வையந்
தாளாலளந்தோனுலகந்தருமாறுநாபி
நாளார்நளினத்திடைநான்முகனைப்பயந்து
மூளாரணத்துட்பொருளாகியமூலநல்கி.

இ-ள். உமையே யதனைக் கேட்பாயாக. கிருத யுகத்திலே, பூமியைத் தனது கால்களால் அளந்த விட்டுணு உலகத்தைப் படைக்குமாறு, தனது உந்தியினுள்ள நாளமுடைய தாமரை மலரினின்றும் பிரமனைப்பெற்று, அன்பு மூளுதற்குரிய வேதத்துட் பொருளாகிய முதற்பொருளை உபதேசித்து. 18

சார்வாய்வியாகிருதிப்பொருடானும்வீசிப்
பார்வானமுதலாயபடைத்தியெனப்படைத்தோ
னோர்வாய்மறைப்பொருள்யானெனுமுள்ளந்தோன்றிச்
சோர்வாய்க்கருத்தனகந்தையிற்றோயலுற்றான்.

இ-ள். அதற்குத் துணையாகப் பிரிக்கப்பட்ட பொருள்களின் இலக்கணங்களையும் உபதேசித்து, பூமி ஆகாய முதலியவற்றைப் படைப்பாயாக வென்றுகூறச் சிருட்டித்த பிரமன், தனிமைபொருந்திய பிரணவவேதங்களினுண்மைப் பொருள் நானேயென்னும் அது தன் மனத்திற்றோன்றப் பெற்றுச் சோர்வுற்று, நானே பரம்பொருளென்னும் அகங்காரத்தில் மூழ்கினன். 19

பூப்பானும்பூதம்யாவையும் பூத்தவண்ணங்
காப்பானுங்காப்பாவைமுற்றுங்கடந்துநின்று



நீப்பானுமீளநிறுத்திநிறுத்துவேதங்
கோப்பானும்நானேயென்றுரங்கொட்டிநின்றான்.

இ-ள். பூதமுதலிய எல்லாப் பொருள்களையும் படைக்கின்றவனும், படைத்தவாறு காக்கின்றவனும், காத்தவைக ளெல்லாவற்றையுந் தாண்டிநின்று அழிப்பவனும், திரும்பவுநிறுத்தி, பொருள்களை நிறுத்துகின்ற வேதத்தைப் படைக்கின்றவனும் நானேயென்று பிரமன் தன்மார்பைத் தட்டிநின்றனன். 20

தண்டாமரையோன்செயருமரைக்கண்ணனோர்ந்துட்
கொண்டான்குறிப்பிற்பிறந்தார்குழைக்காதிரண்டி
ரண்டானவராயமதுகைடவரென்போ
ருண்டாய்மறையைக்கவர்ந்தேகினரோதைவேலை.

இ-ள். குளிர்ந்த தாமரை மலராசனனாகிய பிரமனது செய்கையைத் தாமரைக்கண்ணனாகிய திருமால் அறிந்து, அவன் அகங்காரத்தை யொழிக்க நினைந்தனன், அவன் மனக்குறிப்பின்படி அத்திருமாலது குண்டலங்களணிந்த செவிகளினின்றும் மது, கைடவன் என்னும் இரண்டு அசுரர்கள் தோன்றிப் பிரமனிடத்துள்ள வேதங்களைப் பிடுங்கிக்கொண்டு திரைகள் பொருந்திய சமுத்திரத்திற் சென்றனர். 21

தோட்டின்கமலத்தன்றுழாய்ப்புயல்சொற்றிறம்பி
வீட்டின்பொருளாரணநான்கையும்வேறுபோக்கிக்
கோட்டுந்திரனெஞ்சுடைத்தாய்ப்பிறர்கொள்ளநாளு
மீட்டும்பொருள்போக்குமகந்தையரென்னதைந்தான்.

இ-ள். இதழ்களையுடைய தாமரை மலராசனனாகிய பிரமன் துழாய் மாலையைத்தரித்த மேகம்போன்ற கரிய விட்டுணுவின்சொல்லை மீறி, முத்திப்பொருளை யுரைக்கும் வேதங்கள்நான்கையும் தன்னினின்

றும் போகவிட்டு, உலோபமானது நிலைத்தமனமுடையராய், அந்நியர் அபகரிக்க நாடோறும் தாந்தேடிய பொருளைக் கொள்ளைகொடுக்கும் அகங்காரிகளைப்போல வருந்தினான். 22

நானேபிரமப்பொருளென்பதுநைந்துவேதன்
றானேதுதிப்பத்தளரேலெனத்தந்தவேலை
மீனையெனத்தானவர்ச்செற்றுயர்வேதநான்கும்
வானேழ்நிலம்பண்டையினோங்கவழங்கலுற்றான்.

இ—ள். பிரமன் நானே பரப்பிரமம் என்று கொண்ட அகங்காரத்தினின்றும் நீங்கி, தானாகவே துதிக்க, விட்டுணு, பிரமனே வருந்தாதேயென்று அபயங்கொடுத்து, சமுத்திரத்துள் மீனுருவங்கொண்டுசென்று, அவ்வசுரர் இருவரையுங் கொன்று, நான்குவேதங்களையும், ஆகாயமுதலிய வுலகங்களும் முன்னர்ப்போலவிளங்கும்படி கொடுத்தான். 23

ஆர்த்தானுவகைக்கடன்மூழ்கியறிவின்றூசு
போர்த்தான்கரியோன்செழும்பொன்முடிமீதுபோது
தூர்த்தானவனாயிரநாமமுஞ்சொல்லிச்சொல்லி
நாத்தான்றழும்பத்துதித்தானவைதீர்த்தியென்றான்.

இ—ள். பிரமன் மகிழ்ச்சியாகிய கடலில் மூழ்கி யாரவாரித்தான், ஞானமாகிய வஸ்திரத்தால் தன்னை மூடினான், விட்டுணுவின் செழிய பொன்னாற் செய்யப்பட்ட கிரீடத்தின்மேல் புட்பங்களைத் தூவினான், அத்திருமாலின் ஆயிரநாமங்களையுஞ்சொல்லிச்சொல்லி நாத்தழும்புபடத் துதித்தான் என்னுடைய குற்றத்தை நீக்குதி யென்று வேண்டினான்.

அவ்வாறுதுதித்தவனைக்கதிராழிதாங்கு
கவ்வானவன்கையமைத்தெண்டிசைக்காவலரு



மெவ்வானுலகத்திமையோர்களும்யானுநீயு
மொவ்வாவொருவன்றனைப்போற்றிடனோதுகின்றான்.

இ—ள். அங்ஙனந் துதித்த பிரமனை, ஒளிபொருந்திய சுதரிசனமென்னுஞ் சக்கரத்தைத் தரித்ததிருமால்கையாலமைத்து, அட்டதிக்குப் பாலகரும் எந்த எந்த மேலுலக வாசிகளும் யானும்நீயும் ஒப்பாகாத தனி முதற் பொருளாகிய நம்மைத் துதித்து வழிபடும் இடத்தைக் கூறுகின்றான். 25

நின்னாற்றொழுவோற்றொழுமாறுமைந்நீலமேனிப்
பன்னாகணையாய்பகர்கென்றிடும்பாலனோடு
மந்நாளடைந்தான்கருமாவரையந்தன்சார
லன்றுண்மலர்க்கோங்கவனத்தைமுன்ஞாலமுண்டோன்.

இ—ள். உன்னாலே தொழப்பட்ட சிவபெருமானை நான்வணங்கும்படி, கரிய மேனியை யுடைய படங்கொண்டசர்ப்பசயனனே (அவரிருக்குமிடத்தைச்) சொல்லி யருளுதி யென்றுகேட்ட புத்திரனானபிரமனுடன், முன்னர் மண்ணையுண்ட திருமால், வராகமலையின் சாரற்கு வடக்கேயுள்ள கோங்கவனத்தை யடைந்தான். 26

தண்பாலின்மலர்த்தடங்கண்டதன்றண்ணந்தீரத்
தெண்பார்வையோனைப்பணியாத்தவமாற்றுகென்று
வெண்பாற்கடற்றானவர்க்கொல்வினையிட்டுமீனின்
புண்பாற்றவமாற்றினனீருட்படிந்துமாயன்.

இ—ள். குளிர்ந்த இடத்தில் மலர்கள் பொருந்திய தீர்த்தமொன்று செய்து, அதனது தண்ணென விளங்குங் கரையின்கண் எட்டுக் கண்களையுடைய பிரமனை யீண்டிருந்து தவஞ்செய்கவென்று கட்டளையிட்டு, வெள்ளிய பாற்சமுத்திரத்தில் மதுகைடவரைக்கொன்ற தொழிலைச்

செய்த மீனுக்கு எற்ற தன்மையால் திருமால் (அத்தடாக) நீருக்குள் மூழ்கித் தவஞ்செய்தான். 27

உழைத்தாரணமோதியைந்தாறமைத்துண்டிநீத்து
விழைத்தாரனந்தம்பதப்போதில்விழைந்திருகுல்லைத்
தழைத்தார்ப்புயல்வண்ணனுந்தாமரைக்கண்ணியோனுந்
திழைத்தார்தவமெண்ணைந்துநாள்வரத்தெய்வவாண்டில்.

இ-ள். இடைவிடாது வேதங்களையோதி, மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் பஞ்சப் பொறிகளையும், காமம் குரோதம் உலோபம் மோகம் மதம் மார்ச்சரியம் என்னும் அறுபகைகளையும் உள்ளடக்கி, உணவைவிட்டு, அளவில்லாத சூரியர்களைப்போன்ற ஒளியையுடைய பாத தாமரையை விரும்பி, துழாயிலை மாலைதரித்த மேகநிறத்தனாகிய திருமாலும், தாமரை மாலையையணிந்த பிரமனும் தேவவருடத்தில் நாற்பது தினம் வரையும் தவத்தைச் செயதனர். 28

அருணை சம்பந்தமான பாடல்களையுடைமையான் வேதத்திற்கு ஆரணமெனப் பெயர்வந்ததென்ப. ஐந்து ஆறு என்பனதொகைக்குறிப்புச் சொற்களாய், பொறிகளையும் உட்பகைகளையுங் கருதநின்றன. தேவவருடம் நாற்பதுநாள் எனவே மனுடவருடம் நாற்பது ஆண்டு காறுந் தவஞ்செய்தனர் எனக்கொள்க. 29

பாதாளவித்தோங்கலிளேங்கொளியாகப்பாரின்
மீதார்சிவலிங்கவுருக்கொடுமேற்குநோக்கிப்
யோதார்திருப்பாற்கடல்போலும்பொய்கைவாயிற்
காதார்குழைக்காரிகைகாட்சிவழங்கினேமால்.

இ-ள். காதி லணிந்த குண்டலங்களை யுடையஉமையே, பாதலத்தினின்றும் முளைத்த மலையைப்போல், மிக்க ஒளியுடையதாக, பூமியின் மேல் சிவலிங்க வடிவங்கொண்டு, மேற்றிசைத் திருமுகமுற்று புட்பங்க



ணிறைந்த திருப்பாற் கடலையொத்த தடாகத்திணிடத்திலே தோன்றி அவ்விருவர்க்குங் காட்சிகொடுத்தேம். 29

அஞ்சேலுருப்பாப்புருவாயபுத்தேளிர்யாங்க
ளஞ்சேஞ்சிறியோமையாள்பெரியோயையென்று
நெஞ்சேமுருவந்தனையாற்றிநிச்சநிச்சஞ்
செஞ்சேவடிபோற்றினரைபசித்திங்கண்முற்றும்.

இ-ள். அழகிய மீன்வடிவும் பாம்புருவுங் கொண்டவிட்டுணுவும் பிரமனும் நாங்கள் உய்ந்தேம், சிறியேங்களாகிய எங்களையடிமைக்கொண்டருள்வாய் பெரிய பொருளா யிருப்பவரேயென்று, தம்மனத்தில் இம்மாண்புள்ள வடிவத்தைத் தியானித்து, நாடோறும் ஐப்பசிமாத முழுதும் செவ்விய சிவந்த எமது பாதங்களையருச்சித்தனர். 30

மழுவெள்ளடைவந்தெதிர்கேண்மின்வரங்களென்னக்
குழைவந்திடுதானவர்ச்சிந்தியகோணீங்க
பிழையுள்ளனவாற்றினுநிற்பிழையாமையெற்குப்
பழையோய்வரந்தந்தருளென்றனன்பைந்துழாய்மால்.

இ-ள். (யாம்) இளமை பொருந்திய வெள்ளிய இடபத்தின்மீது வெளிப்பட்டு எதிரில்வந்து (நீவிர் நினைத்த) வரங்களைக்கேட்பீராக வென்று கூற, பசிய துழாய் மாலையைத் தரித்தவிட்டுணு, பழம்பொருளே, குண்டலமுடைய அசுரர்களைக் கொன்றபாவம் அகலல்வேண்டும், குற்றமான செய்கைகளைச்செய்தாலும் உன்னைப் பிழையாமை வேண்டும் இவ்வரங்களைத் தந்தருளவேண்டுமென்றான். 31

நானென்னுமகந்தைகழிந்துனைநாளும்போற்றத்
தானன்னரளித்தியென்றான்றாமரைத்தாமமார்பன்
மீனன்னநோக்கியிருவர்க்கும்விழைந்தநல்கி
யானன்னிகிலேயோய்விலாமேவினமவ்விலிங்கம்.

இ-ள். தாமரைப்பூ மாலையைத் தரித்த பிரமன் (எம்மைக்கேட்டதாவது) நான் எஞ்ஞான்றும் அகங்காரம் விடுபட்டுத் தேவரீரைத் தினந்தோறுந் துதித்தலாகிய நன்மையைக் கொடுத்தருளவேண்டுமென்று கேட்டனன், மீன்போன்ற கண்ணையுடைய நங்கையே, அவ்விருவர்க்கும் வேண்டிய வரங்களைக்கொடுத்து, யாம்அந்த இலிங்கத்தில் ஒருகணமேனும் நீங்காதிருந்தேம். 32

ஆயும்பசுந்தார்த் துளவோனுமம்போருகத்தி
னேயுஞ்சதுர்வேதனுந் தத்தமிருக்கைசார்ந்தார்
நீயும்புரிவந்தனை முன்னர்நிகழ்ந்தவாற்றுத்
தீயோன்கரியாகவருங்கடிசெய் துமன்றே.

இ-ள். ஆராயப்பட்ட பசிய துழாய் மாலையை யணிந்ததிருமாலும், தாமரை மலரின்மே லிருக்கும் பிரமனும் தங்கடங்கள் இருப்பிடஞ் சார்ந்தார்கள், நீயும் முன்னர்ச் செய்தபடியே யாங்குச்சென்று அருச்சனை செய்யக் கடவாய், அக்கினிசாட்சியாக உன்னை அரிய திருமணஞ்செய்வேம். 33

கரியோன்வேதியன்புரிகாட்கனிந்துசிறியோமையாள்
பெரியோனென்பதனானும்பிரமமாதலினானும்
வரியோடுமதர்நெடுங்கண்மடநல்லாய்குறியையரு
ளுரியோர்தொழுவர்பெரியானுடையநாயகனென்றும்.

இ-ள். கருநிறமுடைய திருமாலும் பூசைசெய்த நாளில் மனங்கனிந்து சிறியேமாகிய வங்களையாளுவாய் பெரியோனே என்று துதித்தமையாலும், பிரமப் பொருளாயிருத்தலினாலும், வரிகொண்டமதர்த்த நீண்டகண்களையுடைய பெண்ணே, அச்சிவலிங்கத்தை அவனுக்கு உரியரான பெரியோர்கள், பெரியானுடைய நாயகன் என்று எக்காலத்தும் தொழுவார். 34



அன்றரிவராலெனவந்தனையாற்றலானுமய
னின்றுபரவுதலானுநிகழ்கன்னிகாரவன
மென்றுமதுசபாபுரம்பிரமபுரமெனுநாம
மொன்றிவிரவியதுமூன்றுலகமெனவோதுதலும்.

இ-ள். அக்காலத்தில் விட்டுணு மீனாக இருந்து வணக்கத்தைச் செய்தலாலும், பிரமன் நின்று துதித்தலாலும், விளங்காநின்ற கன்னிகார வனம் என்னும் அத்தலம் சபாபுரம் பிரமபுரம் என்னும்பெயர்மூவுலகத்தும் பொருந்தி விளங்கினது என்றுசொல்லுதலும். 35

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

வென்றிவெங்கணிச்சிதாங்கும்விமலனைமீட்டுநோக்கி
யென்றனைத்தலைவமுன்னரிசைப்பதோர்மாற்றங்கொண்டு
நின்றெனைவதுவைசெய்வாய்நிரப்புகபூசையென்று
தொன்றறவுணர்த்தென்றாள்பல்லுலகமீன்றளித்தகன்னி.

இ-ள். வெற்றிபொருந்திய கொடிய மழுப்படையைத்தரித்த நிருமலராகிய பரமசிவனைப் பின்னரும் பார்த்து, எனக்கு நாயகராகவுள்ள பதியே முன்னர்ச் சொல்லிய வார்த்தையை உறுதியாகக்கொண்டு நின்று எளியேனைத் திருமணஞ் செய்தருள்வாய், பூசையை நிறைவாகச்செய்க. என்றதை ஒன்றும் விடாது அறித்தருள்வீராக என்றாள் பல உலகங்களையும் பெற்றுக்காத்தகன்னிப்பருவமுடைய உமாதேவி. 36

தாழிருளோதிகேட்டிதாருகாவனத்துள்வைகி
வாழ்குநர்மறைநூற்கேள்விவழிபிறழ்ந்தாற்றினார்தா
மூழ்முறைகுறியாரன்றேயொழுக்கம்வேறொழுக்கமாகப்
போழ்துமென்றனைரும்போழ்நிற்போர்தனன்பூவைவண்ணன்.

இ-ள். தாழ்ந்த இருள்போன்ற கூந்தலையுடைய பெண்ணே கேள், தாருகா வனத்தின்கணிருந்து வாழும் முனிவர்கள் வேதநூல் வழியை

விட்டு ஊழ்வழிகுறியாதவராய் ஒழுகினர், அவரொழுக்கத்தை நீக்குவே மென்று அறிந்தகாலத்தில் திருமால்சென்றான். 37

தாமரைக்கிழவனேனோர்சார்ந்தனரவ்வனத்தி
ஞமுனிக்கணத்தர்வேள்வியகம்பிரமத்தினற்றுந்
தோமுறுமொழுக்கநம்பாற்சொற்றனர்தொழுதுபோனர்
தேமலர்த்துளவோனந்தங்குறிப்பினைத்தெரிந்துநிற்ப

இ-ள். தாமரை யாசனனாகிய பிரமனும் மற்றையரும் அத்தாருக வனத்தை யடைந்து, முனிவர் கூட்டங்கள் நாமே பிரமம் என்று யாகத்தைச் செய்யும் குற்றமான ஒழுக்கத்தை நம்மிடத்துச்சொல்லி வணங்கிச்சென்றனர், தேன்பொருந்திய புட்பங்களாலாகிய துழாய் மாலையைத் தரித்த திருமால் நம்முடையகுறிப்பை யறிந்துநிற்க. 38

விண்டவன்பாற்பன்மூரல்விளைத்தருட்கடைக்கண்சேப்பத்
தண்டுழாய்ப்புயனுணர்ந்துதாபதர்வனத்துட்சேறல்
கொண்டதுகுறிப்பென்றங்கைகுவித்தயல்பெயர்தாற்கோலம்
பண்டையையைந்திலொன்றுகொண்டகாபாலியென்ன,

இ-ள். வெளிப்பட்ட அன்பினாலே சிறு முறுவல்செய்துதிருவருட் கடைக்கண் சிவப்பயாம் இருத்தலைக் குளிர்ந்த துழாய்மாலையையணிந்த மேகம்போன்ற திருமால் அறிந்து, முனிவர் இருக்கும் தாருகாவனத்துட் செல்லுதலே யாங்கொண்ட கருத்தாகும் என்று தனது கையைக் குவித்துப் பக்கத்திற் செல்லும் முன்னர்த்திருவுருவம்இருபத்தைந்தனுளொன்றாய பிக்ஷாடனமூர்த்தியாக.

இருபத்தைந்து வடிவங்களிலவன:—சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூடர், சபாபதி, கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், அரியர்த்தர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர்,



சமுகாநுக்கிரகர், சோமாக்கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தக்ஷிணாமூர்த்தி, இலிங்கோற்பவர் என்னும் இருபத்தைந்துமாம். 39

மாதநீணெறிச்சல்காலைமைந்நிறமணிநீர்வண்ணன்
மோகினிவடிவுதாங்கிமுன்புகைகுவித்துநின்று
நாகிளவடிவுமாதர்நவிலபிநயமுங்காணு
வாகமுள்ளுறுத்துக்காமநுய்ப்பதற்கருத்திவைத்தாம்.

இ-ள். ஆகாயத்தில் நீண்டவழியாகப் போகுங்காலத்தில், கரிய இந்திரநீல ரத்தினம்போன்ற நிறத்தையுடைய திருமால், மோகினியுருவங்கொண்டு, எமது முன்னர்க் கையைக்குவித்து நின்று, மிக்க இளமை பொருந்திய வடிவத்தையும், பெண்கட்குச்சொல்லப்பட்ட அபிநயங்களையுங் கண்டு, உடலையுட்சேர்த்துக்காமவின்பத்தை யநுபவிக்கஆசைகொண்டனம்.

அபிநயம் என்பது பாவகம் அஃது இருபத்து நான்குவகைத்து. வரலாறு—வெகுளல், ஐயமுறல், சோம்புதல், களித்தல், உவத்தல், அழுக்காறுறல், இன்பமுறல், தெய்வமுறுதல், ஞஞ்ஞையுறுதல், உடன்படல், உறங்கல், துயிலுணர்தல், சாதல், மழைபெய்யப் படுதல், பனித்தலைப்படல், வெயிற்றலைப்படல், நாணமுறல், வருத்தமுறல், கண்ணோவுறல், தலைநோவுறல், அழற்றிறம்படல், சீதமுறல், வெப்பமுறுதல், நஞ்சுண்ணுதல் என்பனவாம். இவற்றை "வெகுண்டோனவிநயம் விளம்புங்காலை-மடித்தவாயு மலர்ந்தமார்புந் - துடித்தபுருவமுஞ் சுட்டிய விரலுங் - கன்றினவுள்ளமொடு கைபுடைத்திடுதலு - மன்ன நோக்கமோ, பாய்ந்தனர் கொளலே" என வரூஉம் நாடகத்தமிழ்ச் சூத்திரங்களா னுணர்க. 40

மாமலரிளைஞர்கண்மாமலரொடுசொருகுழைம்பாற்
காமர்மோகினியென்சாயற்கண்டனுங்கலவிவேட்டு

யாமுனைமுய லுமென்னமா றடுத்திறையகற்புந்
தாமுனிவரர் தம்வீறுந்தணித்தபின் றழுவுகென்றான்.

இ-ள். சிறந்த பூக்களுடன் இளைஞாது கண்களாகிய அழகியபூக்க ளோடு, சொருகிய ஐந்துவகைப்பட்ட கூந்தலையுடைய அழகிய மோகினி யின் மிருதுவாகிய சாயலைப்பார்த்தலும், கலவியைவிரும்பி யாம் உன் னைச் சேருவேம் என்று கூறுதலும், திருமால்தடுத்து இறைவனே முனி வப்பெண்களது கற்பும் முனிவர்களது அகங்காரமுந் தணித்தபின்பு என்னைச் சேர்வீராகவென்றான்.

ஐம்பாலாவன—முடி, குழல், தொங்கல், பனிச்சை, சுருள்என்பன அவற்றுள், முடியாவது மயிரை யுச்சியின் முடித்தல். குழலாவது— சுருட்டி முடித்தல். தொங்க லாவது— மயிரைமுடிந்துவிடுதல். பனிச் சை ஆவது—பின்னி விடுதல். சுருள் ஆவது—பின்னே சொருகல். 41

அங்கதுங்கழ்ந்தபின்னரகல்விசும்பொருவிவேள்வி
தங்குமல்வனம்பொருந்தித்தாமமுத்தாரந்தாங்கும்
பொங்கெழின்முலையார்முல்லைப்புறத்தலர்செறியப்புக்கேஞ்
செங்கணன்முனிவர்சிந்தைதிறைசொரிதரச்சென்றானால்.

இ-ள். அது கடந்தபின்பு அகன்ற ஆகாயத்தை விட்டுநீங்கி, யாகங் கள் பொருந்திய தாருகவனத்தை யடைந்து, பூமாலையும் முத்துமாலையும் தரித்த மிக்க அழகினையுடைய இருடி பத்தினிமாரது கற்பின்கண் பழி மொழி யுண்டாகும்படி யாம் சென்றேம், மோகினி ஆகிய திருமால் இருடிகளது மனம்திறையாகக்கொடுக்கும்படி சென்றான்.

*முல்லை - கற்பு, முல்லைச்செடி, அலர் - பழிமொழி, பூ. இது சிலேடை. 42

தெருத்தலைதொறுநாமையங்கொள்தலைமலைவில்கற்பின்
கருத்தலைவரவாண்டேற்றுக்காதலைக்குழையார்காதற்



பெருத்தலைகடல்போற்பொங்கிப் பெயர்த்தலையிலாராய்க்கையோ
டிருத்தலையோடேயென்பாரொருதலைக்காமநீண்டார்.

இ-ள். தெருவினிடங்கடோறும் யாம் பிச்சை யெடுக்கின்றதலை யோட்டில் மயக்கமில்லாத கற்பினையுடைய மனம் அலைய, அவ்விடத்திற் பலியெடுத்து, காதிற் றூங்குங் குண்டலத்தைத் தரித்த. பெண்கள் விருப்பமிகுந்து, திரைபொருந்திய சமுத்திரத்தைப்போலப் பொங்கி, நீங்குதலில்லாதவராய், கையின்கணுள்ள வடிவுதலையோடேயென்று ஒரு தலைக் காமங்கொண்டனர். 43

உறுசிறுதுடியொலிக்கோவொழுகியுள்ளாழங்கொள்ளு
மறுவில்சீரொலிக்கோமம்மர்மனங்கொடுவளைவார்வந்து
குறுநகைநிலவுகொள்ளைகொண்டுவண்சகோரம்போல்வார்
தெறுவுபூணணிசங்கோசஞ்செய்யசெங்கலைகள்சோர்வார்.

இ-ள் கையின்கணுள்ள சிறிய உடுக்கைச் சத்தத்திற்கோ காமமா னது ஒழுகி யுள்ளே ஆழங்கொள்ளும், குற்றமில்லாத சிறந்த யாழ்வொ லிக்கோ மயக்கங்கொண்ட மனத்தையுடையவராய் வந்துசூழ்வார்கள், வந்து சிறியபற்களின் ஒளியைக் கொள்ளைகொண்டு அழகிய நிலாமுகிழ் புள்ளையொத்தார், நெருங்கிய ஆபரணங்களும் வெட்கமும் அழகியசிவந்த வத்திரங்களும் அவிழ்ந்து விழப்பெறுவார். 44

மன்னிமுல்லைசாய்கையாற்செலவந்துகாமம்
பின்னியநெஞ்சராயெம்பிரானிர்நங்கேள்வரில்லை
யன்னியமல்லங்கேட்குமையமுண்டையமில்லை
யென்னினையொருசற்றங்கேயிருந்தெழுந்தருளுமென்பார்.

இ-ள். நிலைபெற்ற கற்பாகிய முல்லைக்கொடி சாய்தலால் மெல்ல வந்து காமாசை முறுகிய மனத்தை யுடையவராய், எமதுபெருமானே தேவரீர், நமதுநாயகரும் அவ்விடத்தில்லை, யாங்களும் நமக்கு வேறல்

லேம், நீவிர் கேட்கின்ற பிச்சையோ எம்மிடத்துண்டு, இதற்குச் சந்தேக மில்லை, நமது நினைவென்ன? சிறிதுகாலம் எமதுவீட்டிற்கு எழுந்தருளி யிருந்து செல்வீராகவென்பார் (முனிவபத்தினிமார்.) 45

செய்யறங்கரந்தசெவ்வாய்புண்டாஞ்சிறந்தநெற்றி
துய்யவோர்பொருளாய்த்தோன்றினீர்தொடர்மனத்தராகி
மையல்கூர்காமங்காழ்த்து நமதுகைவசத்தரானோ
மையமென்றுழல்வீர்யேவிர்வீட்டின்பமன்றோவென்பார்.

இ-ள். செய்யத்தகுந்த தருமமில்லா தொளித்த சிவந்தவாயும் முக்குறிசிறந்து விளங்கும்நெற்றியும் உடைய சுத்தமாகிய ஒருபொருளாக வந்தீர், உம்மைத்தொடரும் மனவிருப்பமுடையராய் மயக்கம் மிகுந்த காமாசை முறுகி நமதுகைவசப்பட்டேம், பிச்சையென்று கேட்கின்றீர், எமதுவீட்டிற்கு வருவீர், வரின் இன்பமுண்டாகுமென்று கூறுவார். 46

வேலின்வாவுடையேங்காமவெள்ளத்துட்டாழவைத்தீர்
பாணிசைாரரானீர்சரவளைபறித்தீர்வாளா
நாணிறையாவிதூசுநலன்கலன்பலிக்கபாலத்
தோணியுட்சுமத்திச்செல்வீர்பழியுநீர்சுமந்தீரென்பார்.

இ-ள். மிக்க பேராசையுடைய எம்மைக் காமசாகரத்துள் முழுகும்படி வைத்தீர், பண்களைப் பாடுகின்ற குணத்தையுடையரானீர். வரிசையாகவுள்ள வளையல்களைக் கவர்ந்தீர், பிரயோசனமில்லாமல் எமது நாணையும் (வெட்கத்தையும்) கற்பையும் உயிரையும் புடைவையையும் அழகு ஆபரணம் என்பவற்றையும் பிச்சையெடுக்கும் கபாலமாகியமரக்கலத்துள் வைத்து செல்கின்றீர், நீர் பழியையுஞ் சுமந்தீர் என்று கூறுவார். 47

சேண்பலியென்பீர்கொண்டுசெல்கின்றீர்வளையோர்முற்று
நாண்பலிகொள்வீர்கண்டார்நகுபலியன்றிமாதர்



ருண்பலிகொள்வீரல்லீருயிர்ப்பலிகொள்வார்போலும்
வீண்பலிதேர்வீர்போகமிசைப்பலிதேரீரென்பார்.

இ-ள். தூரத்தே நின்று பிச்சையென்று கேட்கின்றீர், வளையல் களைந்தரித்த எம்மிடத்துவந்து எமது வெட்கத்தைப் பலியாகக்கொள்கின்றீர், பார்த்தவர்கள் சிரித்தற் கிடமாய பிச்சையையெடுக்கின்றீரன்றி, பெண்களாலிடப்படும் அன்னப்பிச்சையைக் கொள்ளுகின்றிலீர், உயிர்ப்பலியைக் கொள்ளுகின்றவரைப்போலப் பிரயோசனமற்ற பலியைக் கொள்கின்றீர், எமதுபோகமென்னும் மேலாயபலியைக் கொள்ளக்கடவீர் என்று கூறுவார். 48

தொடவர்பின்றொடர்ந்துபக்கஞ்சூழ்வர்சூழ்போழ்துமோகம்
பிடர்பிடித்துந்தவோடிப்பிடித்துமென்றடிக்கீழ்வீழ்வ
ரிவரின்முன்பிறந்தகோலமெமக்கறிவிப்பார்போல்வார்
மடநல்லார்திறனீதாற்றுமாதவர்திறனுஞ்சொல்வாம்.

இ-ள். (இவ்வாறுகூறிய பெண்கள்) பிச்சாடன மூர்த்தியின் பின்னர்த் தொடர்ந்து செல்வார், தொடர்ந்து சென்று பக்கத்தே போவார், சூழுங்காலத்திற் காமாசை பிடர் பிடித்துத்தள்ளஓடிச்சென்று பிடிப்பேம் என்று அவரது பாதங்களினிடத்துவிழுவார், துன்பத்துடன் தாம் முன்னர்ப்பிறந்த வடிவத்தையெமக்கு அறிவிப்பவரைப் போன்ற உருவமுடையாரி யிருக்கின்றார் என்பார் அறியாமையுள்ள முனிவருடைய மனைவிமார்களின் தன்மை யிதுவாகும். பெரிய தவத்தைச்செய்யும் முனிவரது தன்மையையுங் கூறுவாம். 49

ஏவலிற்றலைமைசார்ந்தவீர்ந்துழாய்திவுலப்புத்தே
ளாவயினழகுபூப்பமோகினியாயகாலை
யோவறுவேள்வித்தாமமணம்வெறுத்துறவோர்துண்டம்
பூவலரோதிநாணப்புதுமணமோர்ந்துயிர்ப்ப.

இ-ள். சிவபெருமானது குற்றேவல் புரிதலிற் றலைமையாகவிளங்கும் குளிர்ந்த துழாய்மாலைதரித்த கிரீடத்தினாகிய திருமால், அவ்விடத்தில் பேரழகு சிறக்கும்படி மோகினிவடிவத்தைக் கொண்டபோது, ஒழிதலில்லாத யாகப்புகைமணத்தைவெறுத்து, முனிவரது நாசிகள், பொலிவாகிய மலர்செறிந்த கூந்தலையுடைய மோகினி வெட்கமுற, அந்தப்புதிய மணத்தையறிந்து முகப்பன. 50

மந்தணமறைநூற்கேள்விநீத்துமாமுனிவர்கேள்வி
கொந்தலரோதிவண்டின்குரலின்யாழிசையுங்கோலப்
பைந்தொடிமுரல்வுஞ்செம்பொற்பருமமேகலையினார்ப்பு
மந்தளிரடியினார்சில்லரிச்சிலம்பிசையுங்கேட்ப.

இ-ள். பெரிய முனிவரது செவிகள், இரகசியப் பொருளையுடைய வேதநூலின் கேள்வியறிவை விடுத்து, பூங்கொத்துக்கள்செறிந்த அளகத்தையுடைய மோகினியின்மேலுள்ள வண்டுகளினிசையையும், இனிய வீணையி னிசைபோன்ற சொற்களையும், அழகிய பசியவளையல்களினொலியையும், சிவந்த பொன்னாலாய பருமம் என்னும் பதினெண்கோவை மணியினதும் மேகலையினதும் ஒலியையும், அழகிய தளிர்போன்ற கால்களிற்செறிந்த நுண்கற்கள்பெய்து செய்யப்பட்ட சிலம்புகளினொலியையுங் கேட்பனவாகும். 51

யாவராயினுந்தீதாற்றற்கிடம்பிறிதில்லாத்தாரு
காவனநலன்யாவுந்தன்காமருக்கவர்ந்துகொள்ளத்
தூவிழுதுஞ்சுருக்குந்தொழில்களுஞ்சோர்ந்துகாமத்
தீவளர்தொழிலராய்மாதவர்மனந்திறப்பச்சென்று.

இ-ள். எவராயிருப்பினுந் தீமைசெய்தற்கு இடம் வேறில்லாத தாருகாவனத்தின்கணுள்ள அழகுகள் எல்லாவற்றையும் மோகினி தனது அழகினாலே யபகரித்துக் கொள்ள, சுத்தமாகிய நெய்யுஞ் சுருக்கும் யா



கத்தொழில்களும் சோர்வுற்று, காமாக்கினியை வளர்க்குந்தொழிலையுடையவராய், முனிவர் மனந்திறப்பப்போய். 52

பொருந்துபாலெகினப்பேடும்பூணுதற்பிடியும்போற்று
மருந்தவருயிரும்பின்போயடிக்கடிதொடரவெங்கும்
பருந்தலைநெடுவேலொண்கண்பரப்பிவண்குழைவில்வீச
முருக்கிளநிலவுதட்பமுறுவலித்தோங்கிநின்று.

இ-ள். பால்போலப்பொருந்திய பெண் அன்னங்களும் பட்டந்தரித்த வெற்றியையுடைய பெண்யானையும் துதிக்கின்ற அரியதவத்தினையுடைய முனிவரது உயிர்களும் பின் சென்று பன்முறை தொடர்ந்துவர, எவ்விடத்தும், பருத்த நுனியையுடைய வேலாயுதத்தைப்போன்ற அழகிய கண்பார்வையைப் பரப்பி, வளப்பமுடைய குண்டலங்கள் ஒளியைக் கால, கண்டவரை வருத்துகின்ற இளநிலாப்போலப் புன்னகைபுரிந்து அழகுடனின்று. 53

பணைத்தடியிறுகிவிம்மிப்பளபளத்திளகிச்செம்மாந்
திணைக்கவின்முடியிலண்ணாந்தெழில்சுமந்தறவோராவித்
துணைத்தவமுழுதும்வெளவித்தொழுங்கழைக்காமனாவு
கணைக்குநன்கொடைவழங்குங்கதிர்முலைத்திருவங்காட்ட.

இ-ள். அடிபருத்து,இறுக்கமுற்றுப் பூரித்து. பளபளப்புக்கொண்டு இளகி, இறுமாந்து இரண்டு அழகிய மன்மத கிரீடம்போல மேனோக்கி, அழகுகளெல்லாவற்றையுந் தரித்து, முனிவர்களுடைய உயிர்போன்ற துணையாகவுள்ள தவங்கள்எல்லாவற்றையும் கவர்ந்து, வணங்கிய கரும்புவில்லையுடைய மன்மதன்சொரியும் அம்புகளுக்கு நன்கொடையாகக் கொடுக்கும் ஒளிபொருந்திய தனமானது அழகைக்காட்டவும். 54

காமர்பைங்குவளைவள்ளைகயிரவஞ்சண்பகஞ்செந்
தாமரைமலர்ந்துகோங்கமுகையிளந்தளிர்தளிர்த்துப்

பூமலர்க்கொம்புபோன்றுபுனமயிர்சாயல்வாய்ந்து
தேமலரன்னமென்ன வருவதுதெரியக்கண்டார்.

இ-ள். அழகிய பசியநீலோற்பல மலர்களும், வள்ளைக்கொடியும், ஆம்பற் பூவும், சண்பக மலரும், செந்தாமரை மலரும் பூத்து, கோங்கும் அரும்பும் இளந்தளிருந் தளிர்த்து, பொலிவாகிய பூங்கொம்புபோன்று, புனத்தின்கணுள்ள மயில்போன்ற சாயல்பொருந்தி, தேன்பொருந்திய தாமரைமலரின்கணிருக்கும் அன்னப்பறவையைப்போல வருவதைத் தெரியக் கண்டார். 55

கண்டனர்காமமுற்றுங்கண்களின்முகந்துவாரி
யுண்டனர்யார்கொல்லோவானமார்மாதருமுண்டேயிப்
பெண்டகையார்போலுண்டோபெருந்தவமுடையேமாகிற்
றொண்டைவாயூறலுண்டேமுயங்கலாமென்றுசொல்வார்.

இ-ள். (முனிவர்கள்) பார்த்து, காமம் முழுவதையுங் கண்களினால் மொண்டு அள்ளிப்பருகினர், இம்மடந்தை யாவளோ! சுவர்க்கலோகத்து வசிக்கும் தேவமகளிரு ளொருத்தியோ? இப்பெண்ணரசியைப்போல யாருளர்? பெரியதவமுடையேமானால், (இப்பெண்ணினது) கோவைக் கனிபோன்ற வாயூறலைப் பருகிச்சேரலாகுமென்று சொல்வார். 56

தலைமலரைம்பால்வைத்தகண்ணியிற்றழலார்வெய்ய
வுலைமலிவேற்கட்பார்வைவலையிலொண்முத்தம்பூண்ட
மலைமுலைபொருக்குவீரின்மாமுனித்தலைவராய
கலைகள்கோட்பட்டவென்றால்யாவர்காமத்தைவெல்வார்.

இ-ள். தலையின்கண் மலரை ஐந்து பகுதியாகவைத்த கண்ணியினாலும். அக்கினியிற் பொருந்திய கொடிய உலையினிறைந்த வேலாயுதத்தைப்போன்ற கண்ணோக்காகிய வலையினாலும்? அழகிய முத்துமாலை தரித்த மலை போலும் தன வொழுக்கின் கச்சினாலும், பெரி



இருடி சிரேட்டர்களாகிய கலைமான்கள் அகப்பட்டன வென்னில், எவர் காமத்தை வெற்றிகொள்வர். 57

நிலம்படிவார்கைகூப்பிநிற்பார்முற்பரசுவார்போற்
சிலம்படிதாழச்சிந்தைமயக்குறுந்தீர்த்தராயும்
புலம்படியென்முன்பாற்றும்புண்ணியம்போந்தீர்காமப்
பலம்படினுய்வேமென்பார்படிற்றொழுக்கினருமானார்.

இ-ள். நிலத்தில் வீழ்ந்து வணங்குவார், கைகுவித்துநிற்பார், முன்னர் நின்று துதிப்பவரைப்போல, சிலம்புகளணிந்த பாதங்களை வணங்க மனமயக்கங் கொள்ளும் திருத்தமுடையா ரிருந்தும், புலம்புகின்ற அடியேன் முன்னர்ச்செய்த புண்ணியத்தினாலே யிவ்விடம் வந்தீர், காமத்தினா லுண்டாகும் பலன் உண்டாகுமாயிற் பிழைப்போமென்று கூறுவார், வஞ்ச ஒழுக்கத்தினருமாயினர் முனிவர்கள், 58

பங்கயந்தளவசோகம்பானன்மாமலருந்தூய
மங்கையர்முனிவர்மெய்யும்வைகிடந்தொறுந்தொறுந்தூ
பைங்கணைக்கிழவன்போந்தங்குரசுவீற்றிருத்தலாலப்
பொங்கெழில்வனமநங்கபுரமெனப்பொலிந்ததன்றே.

இ-ள். தாமரை மலர், முல்லை, அசோகமலர், நீலோற்பலப்பூ, மாம்பூ ஆகிய ஐங்கணைகளையுஞ் சுத்தமுடைய பெண்களும் முனிவர்களும் இருக்கும் இடங்டோறும் இடங்டோறுந் தூவி, பஞ்சபாணங்களை யுடைய தலைவனான மன்மதன்வந்து அவ்விடத்துக் கொலுவிருத்தலால், அந்த மிக்க அழகையுடைய தாருகாவனமானது மன்மத நகரம்போலப் பொலிவுற்று விளங்கியது. 59

இம்முறைபிறழ்வித்தென்பான்மாயவனெய்துமெல்வை
மம்மர்சற்றொருவியுற்றதவர்மனத்துணர்ந்துசாபஞ்

சம்மதித்திடாராமைதெரிந்துசெந்தழல்வளர்த்து
வெம்மையிற்பிறந்தயாவும்வெகுளியில்விடுத்துநின்றார்.

இ-ள். இவ்வாறு முனிவர் யாவரையும் மோகினியாகிய திருமால் முறைபிறழச்செய்து, எம்மிடத்து வருங்காலத்தில், மயக்கஞ் சிறிதுநீங்கி யிருந்த முனிவர் தம்மனத்தால் அறிந்து, சாபஞ்சொல்ல, அது எம்மையும் திருமாலினையும் அடையாமை யறிந்து, சிவந்த அக்கினியை வளர்த்து அபிசார வோமஞ்செய்து, கொடுமையோடுந் தோன்றிய எல்லாவற்றையும் சினத்தினால் எம்மீது விடுத்தார். 60

வாவரவேற்றும்போர்த்துமருங்கினிலசைத்துமார்த்தும்
விரவுவெம்படைகளாகநிறுத்தியுமிதித்துமாண்டும்
பரவசராயினோருட்பருவரலாற்றியம்புமீச்
சுரர்முதலினோர்க்குநன்னர்சுரந்தருள்புரிந்தகாலை.

இ-ள். (அம்முனிவர் விடுத்தவைகளெல்லாம்) வரவர அவற்றை வாங்கியும் போர்த்தல் செய்தும், அரையில் அணியாக உடுத்தும், சுற்றியும் கலந்த வெவ்விய ஆயுதங்களாக நிறுத்தியும், காலால் மிதித்தும், அடிமைப் படுத்தியும் பரவச மடைந்தவாது மனத்துன்பங்களை நீக்கியும், மேலாயதேவர் முதலாயினோர்க்கு நன்மை பொங்கிக் கிருபைபுரிந்த சமயத்தில், மந்திரங்களையும் அக்கினியையும் விடுத்தனர், அதனையுரித்துப் போர்த்தனர். சர்ப்பங்களை விடுத்தனர் அவற்றை ஆபரணங்களாக அணிந்தனர் மழுவாயுதம் மான் இவற்றைப் படைகளாகத் தரித்தனர் முயலகனைக் காலின்கீழடங்க மிதித்தனர், இவற்றையெல்லாங் கூர்மபுராணம், கந்தபுராணம், என்பவற்றிற் பார்க்கக்காண்க. 61

மோகினியுருவினின்றமரர்நும்மூரலேற்று
ளோகைபெற்றனன்யாதுவேணவதுவுரைத்தியென்ன



வேகநாயகனீயானின்றேவியென்றிரந்தானுண்மை
யாகலின்பயனுநல்கியருட்கடிபுரிதுமென்றும்.

இ-ள். மோகினி வடிவாகி நின்ற திருமால், நமது முறுவலைக் கொண்டு மனம் மகிழ்ச்சியடைந்தான், திருமாலே உனக்கு வேண்டியது யாது கூறக்கடவாயென்று வினவ, பரமபதீ, தேவரீர் எனக்குத் தனி நாயகன் அடியேன் தேவரீர்க்கு மனைவியாகும் இவ்வார்த்தை யருளுதல் வேண்டுமென்று குறையிரந்தனன், அது உண்மை யாதலால் அவ்வார்த்தைக் கொடுத்துத் திருவருளாலே விவாகமுஞ் செய்வேம் எனக்கூறினேம். 62

ஆங்கதுநிகழ்ந்ததிவ்வாறந்தமாலெந்நான்றும்
பாங்கரின்வைகுந்தேவிநீயதுபகரினுண்மை
யீங்கிதற்கையமில்லையிறைவிநின்கலைபேதத்தொன்
றோங்குமாலெனவேதாவைத்தந்துபாரொருங்குதாங்கும்.

இ-ள். பின்னர் அதுவும் நடந்தது, இப்படியந்தத் திருமால் எக்காலத்தும் பக்கத்தில் இருக்குந் தேவியாகிய நீயேயாம், அது சொல்லுங்காலத்தில் உண்மையாகும், இதற்குச் சந்தேகமில்லை, தலைவியே யுன்னுடைய கலைபேதங்களுள் ஒருகலை உயர்ந்த விட்டுணுவாகி, பிரமனைப் படைத்துப் பூமிமுழுதையும் ஒருங்கே காக்குமே. 63

நம்பராபரையுமாதிநாரணன்றானுநீயென்
றும்பருமுணரவேநாமுணர்த்துமாமறையின்சென்னிச்
செம்பொருட்சிவம்யாம்நீயேசிவசத்தியுயிர்கட்கெல்லாந்
தம்பமாயிருப்பேமன்றிமற்றொருசார்வுமுண்டோ.

இ-ள். நமது பர அபர சத்திகளும், ஆதி சத்தியும் விண்டுச் சத்தியும் நீயேயென்று தேவர்களும் அறியும்படி தெரித்தேம், பெரியவேத சிரசுகளாகிய உபநிடதங்களுட் சொல்லப்பட்ட உண்மைப் பொருளாகிய

சிவம் யாமேயாகும், நீயே சிவசத்தியாகும், நாம் இருவருமே ஆன்மாக் கட்கெல்லாம் ஆதாரமாக விருப்பேம், நாமன்றி வேறோர் ஆதாரமு முண்டோ (இல்லை யென்றபடி.) 64

ஆருயிர்கிரங்கியன்றோவைந்தொழிலாற்றிமுத்தீச்
சாரலினிறுத்தறத்தோர்சிற்பொருடணர்ந்துமற்றோர்
சோரிநூற்பிரமமென்றேதுணிபொருண்மயக்கந்தீர்வா
னோரதாத்தொழில்விளைதமிழைத்தருள்வழங்கினோமால்.

இ-ள். அரிய ஆன்மாக்கட்கு இரக்கங்கொண்டே (யாம்) படைத்தல் காத்தல் அழித்தல், மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களையுஞ் செய்து, காருகபத்தியம், ஆகவனீயம், தக்கிணாக்கினியம் என்னும் மூன்றக்கினிகளுமுடைய மலைப்பக்கத்தி னிறுத்திய அறத்தினையுடைய தாருகாவனத்து முனிவர்கள் உண்மைப்பொருளை நீக்கி, வேறொருசோ வின்றலே தாமே பிரமமென்று துணிந்த பொருள் மயக்கத்தி னின்றும் நீங்கும்படி அழகாகத் தொழில் விளையாட் டொன்றைச் செய்து நமது அருளை யளித்தேம்.

சிவபெருமான் பஞ்சகிருத்தியங்களையும் இயற்றுதல் ஆன்மாக்களி னது மும்மலங்களையும் நீக்கி, அத்துவித முத்தியை யளிக்குங் கருணை யென்பார் "ஆருயிர்க் கிரங்கி யன்றோ வைந்தொழி லியற்றி" என்றார். அது,

தன்னை நேரிலாப் பரம்பொரு டனியுருக் கொண்ட
தென்ன காரண மென்றியே லைந்தொழி லியற்றி
முன்னை யாருயிர்ப் பாசங்கண் முழுவது மகற்றிப்
பின்னை வீடுபே றருளுவா னினைந்தபே ரருளே.

என்னுங் கந்தபுராணத் திருவிருத்தத் தானுணர்க. ஆன்மா என் னும் உண்மைப்பொருள் எதுவென்று ஆராயப்புகுந்து, "தாம் பிரமங் கண்டவர்போற் றம்மைக்கண் டாங்கதுவே - நாம் பிரமமென்பவர்பா



னன்றோதே" என்று திராவிட உபநிடதத்துள் ஒன்றாய நெஞ்சுவிடுதூ தினும், "பன்முகச் சமய நெறிபடைத்தவரு மியாங்களே கடவுளென் றிடும் பாதகத்தவரும்" என்னும் தாயுமானசுவாமிகள் பாடலினும் கூறியவாறு தாமே பிரமம் எனமயங்குவார் மாயாவாதிகள் (ஏகான்ம வாதிகள்) எனப் படுவாராகலின், "சிற்பொரு டணர்ந்து மற்றோர்-சோரி நூற் பிரமமென்றே துணிபொருண் மயக்கம்" என்றார். 65

நிகழ்ந்தனமாற்றமுன்னரினையவேநெடுந்தவத்தோர்
புகழ்ந்தகோங்கடவியிற்கூவிளநிழற்போதுகென்றைந்
திகழ்ந்தவர்மனத்துளண்ணலிசைப்பவேதண்டநீங்கித்
திகழ்ந்தனளாயிடைப்பார்முழுவதுமீன்றதேவி.

இ-ள். முன்னர் நடந்த காரியங்கள் இவைகளே, மிக்க தவத்தை யுடைய முனிவர்களாலே புகழப்பட்ட கோங்குவனத்திலேயுள்ள வில்வ வனத்திற் போகக்கடவா யென்று பஞ்ச இந்திரியங்களையும் வென்றஞா னியாது இருதயத்தின்க ணிருக்கும் சிவபெருமான் திருவாய்மலர்ந் தருள, கயிலைமலையை விட்டுநீங்கி, அவ்விடத்திற்கு உலகமெல்லா வற் றையும் பெற்ற சிவசத்தியாகிய உமாபிராட்டியார் சென்றார். 66

கருதுதொல்வாமைசேட்டையிரௌத்திரிகாளியாதி
தெரியிருநால்வராயசிலதியரேவலாற்ற
மருமலிகன்னிகாரவனத்தினிற்பூசைசெய்தா
ளருளியவில்வநீழலருந்தவமுயல்வதானாள்.

இ-ள். நினைக்கப் படுகின்ற பழைய வாமை, சேட்டை இரௌத் திரி காளிமுதலாய ஆராயப்பட்ட எட்டுவகைச் சத்திகளாகிய தோழி யர்கள் குற்றேவலைச் செய்ய, வாசனை மிக்ககன்னிகார வனத்திலே பூசைசெய்தனள், (அதன் பின்னர்ச் சிவபெருமானால்) அருளப்பட்ட வில்வநீழலின்கண் அரிய தவத்தைச் செய்யும்படி பிரயத்தனஞ்செய் தனள். 67

கோச்சகக்கலிப்பா.

மைதயலறம்புரிகாலந்தருதிரேதாயுகத்தி
லையனைவந்தனையாற்றியரியவரந்தரவுயர்ந்தாண்
மையிறவம்புரிந்ததுவாபரயுகத்திலாயிரவாய்ப்
பையுரகபதிபணிந்துதனதுபருவரலொழிந்தான்.

இ-ள். உமாதேவியார் தருமத்தைச் செய்யுங் காலமாகிய திரேத யுகத்தில், சிவபெருமானை வணக்கஞ்செய்து, அருமையாகிய வரங்கொடுத்த வுயர்வையடைந்தனன், குற்றமில்லாத தவத்தைச் செய்த துவாபர யுகத்திலே ஆயிரம் வாய்களை யுடைய படத்தைக்கொண்ட ஆதிசேடன் வணங்கித் தனது துன்பத்தை யொழிந்தான். 68

ஒள்ளிலைவேற்குரிசில்கவுசலனாலாம்யுகந்தனிற்
கள்ளலர்தூய்வழிபாடுபுரிந்துபரகதியடைந்தான்
வள்ளால்கன்னிகாரவனப்பெருமைநினைப்பினும்வாயால்
விள்ளினும்விள்ளருங்கதியுண்டெனச்சூதன்விளம்பினான்.

இ-ள். நான்காவது யுகமாகிய கலியுகத்திலே, ஒளி பொருந்திய இலைத்தொழில் முற்றிய வேலாயுதத்தை யேந்திய கௌசல ராசன் தேன்பொருந்திய பூக்களைத்தூவி வழிபாடுசெய்து, முத்தியை யடைந்தனன், திருவருள் வள்ளலாகிய சிவபெருமானெழுந்தருளி யிருக்குங் கன்னிகாரவனத்தின் பெருமையை நினைத்தாலும், வாயாற் சொன்னாலும், சொல்லுதற்கரிய முத்தியுண்டாமென்று சூதமுனிவர் கூறினர்.

கன்னிகாரவனச் சருக்கம் முற்றிற்று.

ஆக செய்யுள்— 347.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

ஒன்பதாவது,

# அக்கினிசேடர்
# அருச்சனைச் சருக்கம்.

நாலடித்தரவு கோச்சகக் கலிப்பா.

சூதனைமீளவுந்தொழுதுசுடர்மணிவெண்
குழைதாங்கு
காதனையங்கியும்பணியுங்கவுசவுசலனும்
பணிந்துவினை
வேதனைதீர்ந்ததைவிரைவில்விளம்புதிதொல்
வியாதனுக்கு
நீதனயனவனிகரியானென்றார்
நெறிநின்றார்.

இ-ள். சிவஞான நெற்றியினின்ற முனிவர், சூத முனிவரைப் பின்னரும் வணங்கி, ஒளி பொருந்திய அழகிய சங்கக்குண்டலந் தூங்குகின்ற திருச்செவியையுடைய சிவபெருமானை, அக்கினி தேவனும் ஆதிசேடனும் கவுசலராசனும் வணங்கி, தீவினையாலுண்டாகும் துன்பத்தினின்றும் நீங்கியதைச் சீக்கிரமாகச் சொல்வீராக. பழமையான வியாசமுனிவர்க்குப் புத்திரனையொத்த முனிவராகிய நீவிர் என்றனர்.

அறுதொழின்மாமுனிவர்பணிசடைமவுலி
யுவனன்றிச்
சிறுவியாதியாற்றியமகத்திற்செறிதேவர்
முதலினரைக்
கறுவியெறும்வலிவீரன்கடிகாலைக்
கதமெரிகா
வுறுங்கையிழந்துளநாணிக்களதபுத
வரையுறைந்தான்.

இ-ள். அறு தொழில்களையுடைய பெரிய சிறந்தமுனிவர்களாலே வணங்கப்படுகின்ற சடாமுடியையுடைய ஈசானருத்திரரல்லாத தக்கன் செய்த யாகத்திற்போயிருந்த தேவர்கள் முதலாயினோரை மிக்க வலிமையினையுடைய வீரபத்திரமூர்த்தி. கோபித்துத் தண்டனைசெய்த காலத்துச் சுவாலித்து எரிகின்ற அக்கினி தேவன் தன்னுடைய நாவும் கையும் இழந்து மனம் வெட்கமுற்று வள்ளிமலையை யடைந்தான். 2

காய்சினவெள்விடையுடையாய்கவிரிதழ்மா
தொருபுடையாய்
நீசினவப்பட்டார்க்குநீயலது
புகலுண்டோ
சேய்சினவவாமனமுற்றிமைத்திழைத்த
தாற்பயந்த
தாய்சினவுதொழின்மீளத்தாயலது
துணையுண்டோ.

இ-ள். கொல்லுகின்ற கோபத்தினை யுடைய வெள்ளிய இடப வாகனத்தை யுடைய கடவுளே! முருக்க மலர்போன்ற அதரத்தினை யுடைய உமாதேவியை யொருபாகத்துடையவரே தேவரீரால்.



கோபிக்கப்பட்டவர்க்கு தேவரீரல்லாமல் வேறுபுகலிடமுண்டோ! குழந்தைகள் மிக்க ஆசைபொருந்திய மனத்தினால் ஒரு குற்றத்தைச் செய்யின் அவற்றைப்பெற்ற தாயானவள் கோபித்துக்கொள்வாளாயின் அப்பிள்ளைகளுக்கு அத்தாயேயன்றி வேறு துணையுமுண்டோ? (இல்லையென்றபடி.)

தக்கனுழியடைந்தபெருந்தவருபொறுத்
தருள்கவென்றான்
மிக்கருகரவரையில்விளங்குகன்னி
காரவனத்
தக்கினிசெல்கெனப்போகியையொன்பான்
றினம்பூசித்
தாக்ககனல்வல்வினைநீங்கிதாருந்தென்கீழ்த்
திசைபுக்கான்.

இ-ள். தக்கனுடைய யாகத்திற் சென்றிருந்த பெரியகுற்றத்தைப் பொறுத்தருள வேண்டுமென்றுபிரார்த்தித்தான். (சிவபெருமான் அக்கினியைநோக்கி) மேம்பட்ட வராகமலையினிடத்து விளங்குகின்றகன்னிகாரவனத்தில், 'அக்கினியே! சென்றுபூசிப்பாயாகவென்று திருவாய்மலர்க்தருள, அவன் அவ்வாறுசென்று காற்பத்தைந்து தினம் பூசித்துத் தாங்கொண்ட வலியதீவினையினின்றும் நீங்கித் தென்கீழ்த்திசைக்குச் சென்றான். 4

வன்னிவழுத்தலின்வன்னிநாதனென
வழங்கியது
தன்னிகரில்குறிவன்னிபுரமெனச்சாற்
றுவனதாம்

பன்னகவேந் தருச்சித்தபான்மையிவ்வா
றெனவுளங்கூர்ந்
துன்னருமா தவர்கேண்மினென் றொண்
முனியுரைப்பான்.

இ-ள். கன்னிகாரவனத்தின்கண் இருக்கும் தனக்கு நிகரில்லாத சிவலிங்கமானது அக்கினிதேவன் பூசித்தமையால் வன்னிநாதனென வழங்கப் பட்டது. அத்தலமும் வன்னிபுரமெனப்பெயர்பெற்றது. இனி சற்பராசனாகிய ஆதிசேடன் பூசனைசெய்ததனையும் இவ்வாறென்று கூறுவேம். மனமகிழ்ச்சி கூர்ந்து, நினைத்தற்கரிய தவத்தையுடையமுனிவர்களே! கேட்பீராகவென்று, சூதமுனிவர் சொல்வாராயினர். 5

மகதிவீணைக்கிழவன் புகலாற்பின்மனங்
கொதித்தெழுந்து
சிகரமேருவைமறைத்தகணபணத்தி
விழிச்சேட
னிகலியூதைக்குடைந்துவெள்கியிரு
நிலத்தொருகா
னிகரின்மாதவந்திளைத்துநின்றுநெடு
நாட்கழித்தான்.

இ-ள். மகதியென்னும் யாழினையுடைய நாரதமுனிவரது உபாயத்தால் மனஞ் சினங்கொண் டெழுந்து நெடு முடிகளையுடைய மேருமலையைமறைத்த கூட்டமாகிய படங்களையும் அக்கினிகாலும் கண்களையுமுடைய ஆதிசேடன் பகைகொண்டெதிர்த்த வாயுதேவனுக்குத்தோற்று வெட்கமுற்றுப் பெரியபூமியினிடத்து ஒருகாலத்து ஒப்பில்லாத பெரிய தவத்தைச் செய்து அதனால் இளைப்புற்றுநின்று பலநாட்கழித்தான். 6



துளங்காதைந்தவித்துணவுதுறந்துதூங்
கியப்பணிப்பால்
விளங்கோணாரதன்மகதியாழினிசை
வருவித்துக்
களங்காணுமணிமிடற்றோன்பாடல்களை
யக்கறைந்தா
னுளங்காணுமுணர்வொடுங்கேட்டுருகினா
னுரகர்பதி.

இ-ள். மனக்கலக்க மின்றிப் பஞ்சேந்திரியங்களையும் அடக்கி உணவைவிட்டு யோகநித்திரையி லிருந்த ஆதிசேட னிடத்து விளங்காநின்ற அழகிய நாரதமுனிவர்சென்று மகதிவீணையினின்றும் இசையையெழுப்பிக் கருமைவிளங்கும் திருக்கண்டத்தினையுடைய சிவபெருமானது சாமகானங்களை மனங்கரையும்படி பாடினார். ஆதிசேடன் அப்பாடல்களை மனத்தால் அறியப்படுகின்ற நல்லறிவோடுங் கேட்டு மனமுருகினான். 7

எதிரிறைஞ்சினோன்றனைப்பார்த்திதுமுயன்ற
தெவன்கொலெனச்
சதுமறைமாமுனிகேட்பச்சதாகதியை
வெல்லவென்றான்
கதுமெனப்போகுதிகன்னிகாரவனத்
தீரமதி
நதிபுனைவேணியன்பெரியநாயகனை
வழுத்துகென்றான்.

இ-ள். எதிரில்வந்து வணங்கிய ஆதிசேடனைப்பார்த்து இந்தத் தவத்தைச் செய்வது எதற்காக என்று நான்கு வேதங்களிலும் வல்ல

நாரதமுனிவர்கேட்ப ஆதிசேடன் வாயுதேவனை வெல்லுதற்கு என்று கூறினன். (அதுகேட்ட முனிவர்) சர்ப்பவேந்தே! கன்னிகார வனக்கரைக்கு விரைவாகப் போகக் கடவாய். ஆங்கு எழுந்தருளியிருக்கும் கங்காநதியைத் தரித்த திரிச்சடையையுடைய பெரியநாயகனைப் பூசிக்கக் கடவாயென்று கூறினர். 8

நாரதன்சொற்றதுகேளாநாகபதி
மேவுகன்னி
காரவனத்திறைவன்மலர்க்கமலபத
நனிவழுத்தி
யாரவருச்சனைவிதியென்றுறுதிவா
லாற்றுதலு
மீரமதிக்கண்ணியவன்வெள்ளேற்றிலெழுந்
தருளினன்.

இ-ள். நாரதமுனிவர் சொன்னதை ஆதிசேடன் கேட்டு நன்மை பொருந்திய கன்னிகார வனத்தின்கணிருக்கும் சிவபெருமானது தாமரைமலர்போன்ற திருவடிகளை மிகவும் வணங்கிமனஒருமையுடன் அருச்சனையை விதிப்படி நாற்பத்தெட்டுநாள் செய்தலும் குளிர்ச்சிபொருந்திய சந்திரனைத் தரித்த சிவபெருமான் வெள்ளிய இடபவாகனத்தின்கண் எழுந்தருளினர். 9

ஆயிரமாயிரங்கோடியவிர்கதிரா
தவர்நெருங்கு
மாயிரமாயிரங்கோடியாதவரில்
வீறொளியோ



னாயிரமாரணமோதுமாயிரநா
மங்களுமீ
ராயிரநாவாற்றுதித்தானாயிரமா
முடிச்சேடன்.

இ-ள். பத்துலட்ச கோடியாக விளங்கும் கிரணங்களையுடைய சூரியர்கள் மிக்க ஒளியையுடைய பரமசிவனது, பலவகைப்பட்ட வேதங்கள் சொல்லுகின்ற ஆயிரந் திருநாமங்களையும், ஆயிரம் பணாமகுடங்களையுடைய ஆதிசேடன் தனது இரண்டாயிரம் நாவினாலுஞ் சொல்லித் துதித்தான். 10

வேட்கையாவுளகேட்டியனந்தவென
விளம்பவண்ணல்
பூட்கைவீழுரியுரிவைபுனைபுனித
நினதுமலர்த்
தாட்கையாலருச்சிப்பச்சதாகதியைச்
சயிக்கவருள்
கேட்கையாவனவிவைகளெனத்தாழ்ந்து
கிளத்தினன்.

இ-ள். சிவபெருமான் ஆதிசேடனைத் திருநோக்கஞ் செய்து அநந்தனே! உனது விருப்பங்கள் எவையுள்ளன? அவற்றைக்கேட்குதி, என்றுசொல்ல, யானைத்தோலை யுடையாகப்போர்த்த பரிசுத்தரே! தேவரீரது திருவடிகளை நெறியோடு அருச்சனைசெய்யவும் வாயுவைவெல்லவும், அருள்செய்தலே என்னுடைய வேண்டுகோளென்று வணங்கிச் சொன்னன். 11

இன்றமுதனையருச்சித்தெஞ்ஞான்று
மிவணிருத்தி
யின்றமுதற்பூஜைநாளாக
வெமையடைதி

யின்றமுத லிலவைநினக்கிரையாக
நுகர்வாயா
லின்றிவைநல்கினமென்னக்குறியிலெழுந்
தருளினன்.

இ-ள். ஆதிசேடனே இற்றைத்தினம் முதலாக இவ்விடத்தில் அருச்சனை செய்திருப்பாயாகில், இற்றைத்தினம் முதல் எமக்கு ஆபரணமாகவும் வில்லிநாணாகவும் எம்மை அடையக்கடவாய். இந்நாள்முதல் வாயுவை உனக்கு உணவாகக் கொண்டு உண்பாயாக. இவ்வரங்களை உனக்குக் கொடுத்தேமென்று சிவலிங்கத்தில் மறைந்தருளினர். 12

பணிபணியா தலினகாபரணனெனும்
பெயர்கா ள
மணிமிடற்றோற்காகிவழங்கியதுகன்னி
காரவனந்
திணிநிலத்திற்புயங்கபுரமெனத்திகழ்ந்த
தருமறையீ
ரணிகொள்கவுசலன்பரனையருச்சித்த
திறனுரைவாம்.

இ-ள். அரிய வேதங்களை அறிந்த முனிவர்களே ஆதிசேடன் ஆபரணமானமையால் நாகாபரணனென்றுநஞ்சார்ந்த கண்டத்தையுடைய சிவபெருமானுக்குப் பெயர் வழக்கத்தில்வந்தது. திண்மையாகியபூமியின் கண்ணுள்ள கன்னிகாரவனம் என்பதும் புயங்கபுரமென வழங்கியது. அழகினையுடைய கௌசலராசன் சிவபெருமானை அருச்சித்தவகையை இனிமேற்கூறுவாம். 13

அக்கினிசேடர் அருச்சனைச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள்—360

---

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

பத்தாவது,

# கௌசல சேரன்

# அருச்சனைச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

கொழுமலர்த்திருவுங்கலைமடந்தையுங்கொற்றந்
தழுவுமங்கையுந்திருவமுந்தருமமும்வயங்கி
யெழுநிலக்கணியாய்த்திசையெங்கணுஞ்சீர்த்தி
முழுநிலாக்கதிர்பரப்புமத்திரிகிரியெனுமூதூர்.

இ-ள். கொழுமையாகிய தாமரை மலரின்மேலிருக்கும் இலக்குமிதேவியும் சரசுவதி தேவியும் தனலக்குமியும் தருமலக்குமியும் விளங்கி, எழுலகங்களுக்கும் ஓராபரணமாகி, திக்குகளெவ்விடத்தும் தன்புகழாகிய பூரண சந்திரிகையைப் பரப்புகின்ற அத்திரிகிரி என்னும் ஓர்பழைய வூரொன்று உளது. 1

கற்றவர்க்கொருதுணைகலிக்கிருநிதிக்கடவுள்
பற்றலர்க்கரிமாவடைந்தவர்க்கருட்பரவை
மற்றைநீணிலங்குளிர்ப்புறவருமதிக்குலவன்
கொற்றவெண்குடைக்கோமனங்குசத்துசவரசன்.

இ-ள். படித்த புலவர்களுக்கு ஒப்பற்ற சகோதரன், வறுமைக்கு இரண்டாகிய நிதித்தெய்வமாகும் பகைவர்க்கு ஒரு சிங்கம், தன்னைச்

சரணாக வந்தடைந்தவர்க்கு அருட்கடல், எல்லாவிடங்களுங் குளிர்மையுண்டாகத் தோன்றுகின்ற சந்திரகுலத்தோன், வெற்றிபொருந்திய வெண்குடையை யுடைய அரசன் அங்குசத்துசன் என்னும் நகரத்திற்கு அதிபதியானவன். 2

இழைத்தமா தவத்துதித்தசேயின்பமன் பூறிக்
குழைத்தநெஞ்சினன் ஞானநூற்கேள்வியன் கொண்மூத்
தழைத்தசெங்கயன் றடவுவாட்படையினன் றாளக்
கழைத்தடஞ்சிலைக்காமவேள் கவுசலனென்போன்.

இ-ள். உலகமெல்லாம் செய்த பெரிய தவத்தினாற் பிறந்தவன், இன்பமும் அன்புஞ் சுரந்து இளகிய மனத்தினை யுடையவன், ஞானநூல்களை நல்லாசிரியரிடங் கேட்டவன், மேகங்கள் குடியிருந்தாற்போன்ற சிவந்தகைகளை யுடையவன், உறையுட்சொருகப்பட்ட உடைவாளையுடையவன், முத்துக்களை யீனும் நீண்ட கரும்பாகிய வில்லைத்தரித்த மன்மதனைப்போன்றவன், அவன்பெயர் கௌசல னென்பது. 3

கரைந்தவுள்ளமுங் கலைமதிக்கண்ணியனருளில்
விரைந்தவார்வமும்பல் லுயிர்த்தொகையின்மேல்விழைவுஞ்
சுரந்தபேரருளுடைமையுங்கண்டுதொல் லுலகம்
புரந்ததந்தையுமமைச்சருமுவகையிற்பொருந்தார்.

இ-ள். இளகிக் கனிந்த மனமும் ஒருகலையை யுடைய பிறைமதியைத் தரித்த சிவபெருமானது திருவருளைப் பெறுதற்குவிரைந்து செல்லும் அன்பும், பல உயிர்க்கூட்டங்களின்மீது விருப்பும், ஊற்றெடுக்கின்ற பெரிய அருளுடைமையும் அக்கௌசலகுமாரனுக்கு இருத்தல்கண்டு பழைய உலகத்தைக்காத்த தகப்பனும் மந்திரிமார்களும் மிக்கமகிழ்ச்சியை யடைந்தனர். 4

மணவணித்திரனாற்றிமாற்றலர் திறைவழங்கக்
கணமணிச்சுடர்மாமுடிகவித்தினன்றாதை
துணைவரைப்புயப்பூச்சுமையிறக்கினன்சுதன்ற
னிணைவரைப்புயத்தேற்றினனேற்றவீற்றிருந்தான்.

இ-ள். விவாகச் சடங்கையுஞ் செய்வித்துப் பகைவர் யாவரும் திறைப்பொருள் கொடுக்கும்படியாகவுந் தன்குமாரனுக்குப்பட்டாபிஷேக விதிச்சடங்கைச் செய்து சிறந்த இரத்தின கிரீடத்தையுஞ் சூட்டினான், அதனால் தந்தையான அரசன் இருபுயங்களினாலுஞ் சுமந்த பூமிபாரத்தை யிறக்கினான். அப்பாரத்தைத் தன்மகனது மலைபோன்ற இரு புயங்களினும் ஏற்றினான், ஏற்றித்தான் தவஞ்செய்து இருந்தான். 5

தந்தைநல்கியதிருவமுந்தனதுதொல் லுணர்வுஞ்
சிந்தையிற்றெளிந்துலகெலாந்திகிரியொன் றுருட்டி
மந்திரக்கிழவோர்புகன்மனுநெறிநடாத்தி
யைந்தருப்பணிகவுசலனரசுவீற்றிருந்தான்.

இ-ள். தன் றந்தை தனக்குக் கொடுத்த செல்வங்களையும், தனது பழைய அறிவையும் மனத்திற் றெளிந்தறிந்து, உலகமுழுதினும் ஏகச்சக்ராதிபத்தியஞ் செலுத்தி, மந்திரிமார்கள் சொல்லும் மனுதருமவழியை நடத்தி, சந்தானம், அரிச்சந்தானம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம் என்னும் ஐந்தருக்களும் வணங்குகின்ற கௌசலராஜன் அரசுசெய்திருந்தான். 6

இருந்துசில்பகலகனறப்னிருங்களிற்றுரியோன்
றிருந்துசேதிமம்பரசுவானுள்ளிடைத்தெரிந்து
வருந்துறுதுலகளிப்பிரென்றமைச்சரைவைத்துப்
பொருந்திறற்படையொருநரேசிடமூந்துபோயினனால்.

இ-ள். இவ்வாறு அரசு வீற்றிருந்து சிலநாட்சென்ற பின்னர், பெரிய யானைத்தோலைப்போர்த்த சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற சேதுமுதல் இமயமலை யீறாகவுள்ள தலங்களெல்லாவற்றையும் வழிபட

வேண்டுமென்று மனத்தினினைத்து, வருத்தப்படாமல் உலகத்தைக் காப்பீராகவென்று மந்திரிமாரைத் தன்னிடத்திற்கு நியமித்து, போர் செய்யுந் தொழிலில் வல்ல சேனைகளுடனும் அரசர்களுடனும் எழுந்து சென்றனன். 7

காசியும்பிறதலங்களுங்கடிமலர் தூவி
யேசிறின்னர்கண்மலர்புனையிடனுமேனையவும்
பாசிழைப்பரை தவம்புரிபதிமுதலனவும்
பேசருந்தழற்கிரிபழமலைமுதற்பிறவும்.

இ-ள். காசித்தலமும் பிறதலங்களுஞ் சென்று வாசனைபொருந்திய புட்பங்களைச் சொரிந்துவணங்கி, குற்றமில்லாத கண்ணப்பநாயனார் தமது கண்ணாகிய மலரைச் சாத்திய காளத்திமலையும் ஏனைய தலங்களும், பசிய ஆபரணங்களைத் தரித்த உமாதேவியார் தவம்புரிந்த திருக்கேத்ர முதலிய தலங்களும், சொல்லுதற்கரிய திருவண்ணாமலை விருத்தாசல முதலிய பிறதலங்களும். 8

கடித்தபொற்பொதுமுதனீர்நாட்டுளநகரும்
வடித்தமுத்தமிழ்மதுரையுங்குமரியும்பிறவுங்
கொடித்தடஞ்சிலைக்கோதைநாட்டினிலெழுபதியுங்
கடித்திகழ்ந்தமென்மலரினாற்கைகுவித்திறைஞ்சி.

இ-ள். அம்பரத் திருத்தாண்டவஞ் செய்தருளுங் கனகசபை முதலாகிய சோழநாட்டின்கணுள்ள தலங்களும், தெளிந்த இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என்னும் முத்தமிழ்களும் பொருந்திய மதுரை குமரிமுதலிய தலங்களும், வெற்றிக்கொடி நாட்டிய நீண்ட வில்லையேந்திய சேரநாட்டின்கணுள்ள எழுதலங்களும் சென்று. வாசனை கமழும் மிருதுவான பூக்கள்கொண்டு கைகூப்பி வணங்கி, 9

மல்லலம்புகழ்க்கொங்குநாட்டொருமலைச்சாரல்
செல்லலுந்தருமிடைந்துசிள்வீடுசில்லென்னக்



கொல்சினப்புலிவயப்புலிகுஞ்சரங்கலைமான்
பல்விலங்குறையொருவனமிருப்பதுபார்த்தான்.

இ-ள். வளப்பம்பொருந்திய கீர்த்தியையுடைய கொங்குதேயத்தின் கணுள்ள, ஒரு மலைப்பக்கத்திற் போதலும், மரங்கள் நெருங்கி, சிள் வண்டு சில்லென்று ஒலிக்க, கொல்லுகின்ற கோபத்தையுடைய புலியுஞ் சிங்கமும் யானையும் கலைமானும் முதலான பலமிருகங்க ளிருப்பதான ஒருகாடு இருப்பதைக்கண்டான் (கௌசலராசன்.) 10

பார்த்திவன்புடைத்தூதுவர்ப்பார்த்தனன்றூதர்
சீர்த்தவேத்திரர்வேட்டைமேற்செலுவெனத்தெரிந்து
கூர்த்தவெங்கணைக்கொடுந்தொழிற்புளினரைவிளிக்கக்
கார்த்தடம்புயலிழிந்தெனக்கடிதின்வந்துற்றார்.

இ-ள். கௌசலராசன் பக்கத்தினின்ற தூதுவர்களைப் பார்த்தான், தூதர்கள் அழகிய பிரம்பு தாங்கினவராய வேட்டைத் தொழில் மீது செல்லவென்று நினைத்து, கூரியபாணங்களை யுடைய கொடுந்தொழில் கொண்ட வேடர்களையழைக்க. அவர், கார்காலத்துப் பெரிய மேகங்கள் இறங்கி வந்தாற்போல வந்தனர். 11

வெஞ்சினத்தினர்பொறித்தழல்விழியினர்நிலக்
கஞ்சுகத்தினர்கச்சினர்கழலினர்கமஞ்சூல்
மஞ்சிடித்தனவார்த்தையர்மறலியிற்கொடியர்
குஞ்சியிற்புனைவாகையர்கொடுமரக்கிராதர்

இ-ள். வில்லை யேந்திய அவ்வேடர்கள், மிக்ககோபத்தினையுடையவர், அக்கினிப் பொறிகளைக் கான்று சுடுகின்ற கண்களை யுடையவர், கச்சினையுடையவர், வீரக்கழல் அணிந்தவர், நிறைந்த கருவுடைய மேகங்கள் இடித்தாற்போன்று வசனிப்பவர், யமனிலுங்கொடியவர், தலைகுடுமியிற் சுற்றிய வாகைமாலையை யுடையவர். 12

கூரொழுக்குறத்தொழுதனர்கட்குடியெறிந்து
வாரொழுக்கினர்மணிவலைபிணித்தனராத்தி
நாரொழுக்கியகண்ணிகணிறைத்தனர்நவிலுங்
காரொழுக்கெனத்துவைத்தனர்கலைத்தனர்விலங்கு.

இ-ள். மலைத் தெய்வத்தை யொழுங்கு பொருந்த வணங்கினர், வாயகன்ற குறிஞ்சிப் பறையை முழக்கி, வார் பூட்டினர், சிறந்த வலையைக்கட்டினர் ஆத்திப் பூவாலாகிய மாலைகளை நிறையச்சூடினர், சொல்லப்பட்ட மேகத்தின் ஓட்டம்போல நடந்து விலங்குகளைத் துரத்தினார்கள். 13

செந்நிறத்தவெண்ணிறத்தனகரியதீவிழிய
பின்னெடுஞ்சுருள்வாலவாளெயிற்றடும்பேழ்வாய்
முன்விழுந்தமேதார்செவியநீண்முகத்தவான்குரைய
வின்னபன்ஞமலிகள்விரைந்தெழும்வனமெங்கும்.

இ-ள். சிவந்த நிறத்தை யுடையனவும், வெள்ளிய நிறத்தையுடையனவும் கரியனவும், அக்கினிபோன்ற கண்களையுடையனவும் பின்னர் நீண்ட சுருண்ட வால்களையும் வெள்ளிய பற்களையும் கொல்லுகின்ற பெருத்த வாய்களையும் முன்னர்த் தூங்கும் காதுகளையு முடையனவும், நீண்டமுகத்தையுடையனவும் பெரியகுளம் புகளை யுடையனவும் ஆகிய இத்தன்மையனவான பலநாய்க்கூட்டங்கள் காடு எவ்விடத்தும் வேகங்கொண்டு எழுந்திருக்கும். 14

கலி விருத்தம்.

சூழ்கொலைவேடர்துவக்குவலைக்கே
வீழ்குவசிந்திவெருண்டுகைவேழம்
போழ்குவசென்னிபுடைத்தபுணரியுன்
மூழ்குவமீளமுழங்குவசிங்கம்.



இ-ள். சுற்றிய கொலைத்தொழிலையுடைய வேடர்கள்கட்டிய வலைக்குள் யானைகள் சிதறப்பட்டுத் பயந்து விழுவன, சிங்கங்கள் அடித்த அடியினால் மண்டைபிளந்து, ஒழுகும் இரத்தத்தின் முழுகுவ, பின்னர் எழுந்து முழங்குவன. 15

பெய்வனவாளிபிழைத்துவெகுண்டு
நெய்யெரிகால்விழிசீறிநெருங்கி
யொய்யெனவாவியிடம்பிடியோடு
மெய்யுயிர்போயெதிர்வீழ்வனவேங்கை.

இ-ள். புலிகள் செலுத்தப்பட்ட அம்புகளுக்குத் தப்பிக் கோபமுற்று, நெய்சேர்ந்த அக்கினிபோன்ற பொறிகளைக் காலுகின்ற கண்கள் கோபித்துநெருங்கி, திடீரெனத் தாவிப்பாய்ந்து, வேடர் கையாற் செலுத்தப்பட்ட வேலாயுதத்துடன் உயிர்மாண்டு விழுவன. 16

போர்புரிமள்ளர்புறத்தொலிகேளாய்
பேர்வனபொங்கர்பிடுங்குவபின்பே
சோர்பிடிதேடுவசூழ்தலமீள்வ
வீரெனவாழ்குழிவீழுவவேழம்.

இ-ள். போர்த் தொழிலைச் செய்யும் வீரரது பக்கத் தொலிகளைக் கேட்டுத் தம்மிடத்தை விட்டுப் பெயர்வன, மரங்களைப் பிடுங்கி யெறிவன, பின்னர்ச் சோர்கின்ற பெண்யானைகளைத் தேடிச் செல்வன, தம்மைச் சூழ்ந்திருக்கும் இனங்களைத் தேடிப்போவன, வீரென்று படுகுழியுள் விழுவன யானைகள். 17

கண்ணியிலாவிகரைந்துகழிந்தும்
பண்ணியநாண்வலையிற்படவாயுந்
திண்ணியவாளிசிதைப்பவுலர்ந்து
மெண்ணில்விலங்கினமின்னனமெய்த.

இ-ள். வேடர்களா விடப்பட்ட கண்களி லகப்பட்டு உயிர் வருந்தி யிறந்தும், கட்டிய கயிற்று வலையில் பல அகப்பட்டன வாகியும், வலிமையுள்ள அம்புகள் தாணிக்க இறந்தும், அளவில்லாத மிருகக் கூட்டங்கள் இவ்வாறு அழிய. 18

மாய்ந்தகலைக்குலமோடிளமான்கள்
வீந்துமுயிர்த்துயிர்விம்மியுமோய
ரேய்ந்தவரோடுயிர்தோற்றமின்றாரு
மேய்ந்துயிர்கொண்டிடவாரையுமொத்த.

இ-ள். இறந்த கலைமான்களுடன் இளமையாகிய மான் கூட்டங்கள், இறந்தும், கெட்டுயிர்ப் பெறித்தும், தம்முயி ரிழங்கியும் இளைத்தல், தம்மையணைந்த நாயகரது உயிரையிழந்த பதிவிரதைகளையும், குற்றுயிர்கொண்டு வருந்துவாரையும் போன்றது. 19

வேடர்கைவாளிபிழைத்துவெகுண்டு
கோடுறுநாண்வலையிற்படுமாக்க
ளோடிவினைக்குளமொல்குநர்மீள
வாடிமனைக்குண்மயங்குதல்போன்ற.

இ-ள். வேடர் கையினின்றும் விடுபட்ட அம்புகளுக்குத் தப்பிக் கோபித்துப் பக்கத்திலிருந்த கயிற்று வலையில் அகப்படும் மிருகங்கள் எவ்வாறிருந்ததெனில், தீவினைக்குப் பயந்து ஓடி மனம் வருந்துகின்ற விரத்தர் திரும்பவும் வாட்டங்கொண்டு சமுசாரத்துள் வந்து மயங்குதல் போலும். 20

தூனுறுநாண்வலைநூறியதாவிற்
கோலியவாளிகுளிப்பமெய்சோர்வ
ஞாலம்வெறுத்தகல்வோர்களிகண்மத்
தாலலர்வாளியடுந்தொழில்போலும்.



இ-ள். நாலினாற் கட்டப்பட்ட கயிற்றுவலையை யறுத்து வெளிவந்த மிருகங்களில், (வில்லிற்) சந்தித்து விடுத்த அம்புகள் சென்று தைக்க, அதனால் உடல் சோர்ந்து விழுந்தன்மை, உலகவாழ்வை வெறுத்துச் செல்லும் ஞானியர்கள் மிகுந்த சம்பத்தினால், மன்மதனது புஷ்பபாணங்களால் வருத்தப்படுந் தன்மைபோலும். 21

சிந்தவராகமுறுஞ்சினமூரி
வந்தவராகமருண்டுவெகுண்டு
நொந்தவராகவெதிர்த்துயிர்நாறு
மந்தவராகவகந்தமுலர்ந்த.

இ-ள். கடலினிடத்துள்ள அந்தச் செவ்வனல் போலுங்கோபத்தையுடைய வலிமைகொண்டு வந்தபன்றிகள். அரசனது சேனைகளைக்கண்டு மயங்கிக் கோபித்து, பகைவரால் வருத்தப்பட்டவரைப் போல எதிர்த்துப் போர்புரிந்து, உயிரை விடுகின்ற வாழ்நாள் முடிந்தார்போல அளவில்லாதன இறந்தன. 22

வெருவுவ்வெழுவனவிழுவனமுயல்கள்
வருவனபிரிவனமருள்வனமரைக
ளுருள்வனதிரிவனவுழல்வனவுளியங்
குருவுவன்கரிதுடியடியிடிகள்.

இ-ள். முயல்கள் பயப்படுவன, மேலெழுந்து துள்ளுவன. கீழே விழுவன, மரைகள் ஒன்றோடொன்று கூடிவருவன, பிரிந்துசெல்வன மருண்டோடுவன, கரடிகள் உருளுவன, எங்கணுந்திரிவன, உழலுவன, பருத்தயானைகளும், பெண்யானைகளும் உடுக்கைபோன்ற கால்களையுடைய யானைக்கன்றுகளும் ஓடிச்செல்வன. 23

செருவிடைசருவுவசிலசிலமிருகங்
குருதிகள்சொரிவனகுறைகடற்புடைமே

லெருவைகள் விரிவன விரைவன குருகு
பொருநர்கணிரைநிரை புரிவனபொழுதில்.

இ-ள். யுத்தமுனையில் எதிர்த்தன சில மிருகங்கள், இரத்தத்தைப் பொழிவன சில மிருகங்கள், ஒலிக்கின்ற அவ்விரத்தக் கடலின்மேல் பருந்துகள்வந்து விழுந்து பாவியிருக்கும், பறவைகள் ஒலிப்பன, போர் செய்வார் வரிசை வரிசையாக நின்று யுத்தத்தைச் செய்யுங் காலத்தில்.

நீர்மலிவேணியனீடருளோ பைந்
தார்மலிவேந்து தவப்பயனோ தண்
கார்மலிசாரலெழுந்தது காசி
லோமலிகின்றபொன்னின்வடிவோர்மான்.

இ-ள். நீர் நிறைந்த திருச்சடா முடியை யுடைய சிவபெருமானது திருவருளோ, பசிய மாலை விளங்கிய கௌசல ராசனுடைய தவத்தின் பிரயோசனமோ, மகிழ்ச்சி பெருகுதற்கிடமான குற்றமில்லாத பொன்னிறமான வடிவத்தையுடைய ஒரு மானானது குளிர்ந்த மலைச்சாரலின்கணின்றும் தோன்றிற்று. 25

கண்டனர்பின்புதொடர்ந்துகவன்றே
பெண்டகர்போலவணின்றுபெயர்ந்தா
ரெண்டிசைகாவலவிண்டொரிறும்பூ
துண்டதுகேளெனவொண்கைகுவித்தார்.

இ-ள். அரசனது சேனைகள் அந்த மானைப்பார்த்து, அதன்பின்னர்த் தொடர்ந்துசென்று, அது அகப்படாமையால் வருந்தி, பேடிகள் போல அவ்விடத்தினின்றும் திரும்பினவராய் மன்னனிடம்வந்து, எட்டுத் திக்குகளும் காவலாயிருக்கும் மகிபதியே! இவ்விடத்து ஓர் ஆச்சரியம் இருக்கின்றது. அதனை (தயைகூர்ந்து) கேட்குதி என்று அழகிய தமது கையைக்குவித்து நின்றனர். 26



செம்பொனிறஞ்சுதைசேர் நுதல்சென்னிக்
கொம்புமெய்ந்நான்குமுழந்திகழ்கோலம்
பைம்பொறிமான்வெருள்பார்வையதிங்கே
வம்பவிழ்பொங்கரின்வந்ததையென்றார்.

இ-ள். சிவந்த பொன்னிறமும் வெண்ணிறமுமுடைய நெற்றியும், சிரத்தின்கணுள்ள கொம்புகளும், நான்குமுழங்களையுடைய வடிவமும், பசிய புள்ளிகளும், வெருண்டநோக்கமும் உடைய ஓர்மான் வாசனை பரந்த வனத்தின்கண் வந்தது ஐயனே! என்றுகூறினர். 27

வேட்டமிழைப்பவர்மாற்றம்விழைந்தே
கேட்டெழின்மார்பினறசென்றதுகண்டான்
வாட்டமிலவ்வினையவெளவுதுமென்னாக்
கோட்டுவில்வாளிகைக்கொண்டுதொடர்ந்தான்.

இ-ள். வேட்டையாடுதலைச் செய்பவரது சொற்களை விரும்பிக் கேட்டு, பெருமைபொருந்திய அழகினைக்கொண்ட மார்பினையுடைய கௌசலராசனும்போய் அதனைப் பார்த்தான், வாடுதலில்லாத அந்தமானைக் கவர்வேமென்று வளைந்த வில்லையும் அம்பையும் கையிற்கொண்டு தொடர்ந்தனன். 28

காவதநாலுமோர்கணமாகப்
போவதுவானகமோபுவியோகால்
பாவுவதோவுறுபார்மனனேவு
மேவதுபோமுனமேழ்வகைதாவும்.

இ-ள். இந்தமானானது நான்கு காததூரவழியை ஒரு கணத்திற்குள்ளாகத் தாண்டிச் செல்கின்றது, ஆகாயத்திலோ பூமியிலோ இதன் கால்கள் பாவிச்செல்வது, பூமியின்கண் மனோவேகமாகச்செல்கின்றது,

நமது அம்பு செல்வதற்குமுன்னர் ஏழ்மலைகளையுந் தாண்டிச்செல்லு கின்றது. 26

நெஞ்சநினைக்குமுனீணிலவேந்தன்
வெஞ்சமர்வில் லுமிழ்வெங்கணைசேண்போ
மெஞ்சலிசாயகமேகுடனேகு
மஞ்சினுமாருதவைப்பினுமோர்மான்.

இ-ள். மனம் நினைத்தற்றொழிலைச் செய்தற்குமுன் நீண்டபூமிக்கு அதிபனாகிய கௌசலராசனது, கொடிய யுத்தத்தில் வல்ல வில்லினின் றும் விடப்படும் வெவ்விய அம்புகள் ஆகாயத்திற்றாவும், அவ்வாறாய பாணங்கள் போதற்கு முன்னரே, ஒப்பற்ற மானானது மேகமண்டலத்தி னுந் தாவிச் செல்லும். 30

கேழ்கிளராசைகெழீஇயசரங்கள்
சூழ்கருமர்வரைதோய்ந்ததுகாறு
னேழ்நிலவேந்தெழில்வில்லிடமேந்தி
வாழ்கன்னிகாரவனத்துளடைந்தான்.

இ-ள். நிறம் விளங்குகின்ற திக்குகடோறும் மருவியபாணங்கள் சுற்றிய வராகமலையிற் சென்றழுந்தியதை அறியாதவனாய், சப்ததீவுகளுக் கும் அரசனாகிய கௌசலமன்னன், அழகுடைய வில்லைத் தன்னிடந் தரித்துக்கொண்டு, மான் இருந்த கன்னிகார வனத்துள்ளே சென்றான்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பல்வகைமம்மராற்றும்பைப்பொன்சாரங்கஞ்செம்மல்
செல்கெழுகன்னிகாரவனத்திடைச்சேர்ந்தகாலைத்
தொல்லையவினைப்பயன்களளவைதுய்க்குமெல்லை
வல்லையின்மயக்கநல்குமாயையிற்போயிற்றன்றே.



இ-ள். பலவகைப்பட்ட மயக்கங்களைச்செய்த பசிய பொன்போன்ற மானானது, பெருமையிற்சிறந்த மேகங்கள் கிடந்த கன்னிகார வனத்தைச் சேர்ந்தபோதில், பழைய வினைகளது பிரயோசனங்களின் அளவை அநுபவித் தொழுக்குமிடத்து, விரைவில் மயக்கத்தைக்கொடுக் கும் மாயை யொழிவதுபோலக் காணப்படாதாயிற்று. 32

அவ்வனத்தொருசாரந்தணீணிழனின்றுபொன்மா
னெவ்வனத்தகன்றுபோயிற்றனிப்புரிவதியாதென்னாக்
கௌவனப்பகழிமன்னன்கவலுறுங்காற்கானேக்கி
மௌவனக்கிராதரும்போர்மன்னரும்வந்துபுக்கார்.

இ-ள். அக்காட்டி னொருபக்கத்துள்ள அழகிய குளிர்ந்தசோலையி னின்றும் வெளிப்பட்டபொன்மான் ஆனது, எக்காட்டினிடத்துச்சென்று ஒளித்ததோ? இனியாம் செய்வது என்னையென்று, கௌவுகின்றகூரிய அம்பினையுடைய அரசன் துன்பமுறுங்காலத்தில், அக்காட்டைநோக்கி, குறிஞ்சிப்பூச் சூடிய வேடர்களும் யுத்தத்தில் வல்லஅரசர்களும்வந்து புகுந்தனர். 33

மள்ளரைநோக்கிநீவிர்வருதிரால்வாவிகூவல்
வெள்ளம்யாண்டுளதென்றற்குவிரைவினிற்போகிதேடிப்
பள்ளநீர்தசும்பிற்பெய்தார்பரிசனமீண்டுமுண்ணக்
கொள்ளுநீர்கொணர்வான்போலக்கடலினிற்குளித்தான்வெய்யோன்.

இ-ள். வீரர்களைப்பார்த்து நீங்கள் தடாகம், கிணறு என்பவற்றின் நீர் எவ்விடத்திருக்கின்றது தேடிக்கொண்டு வருவீராக என்றுகேட்க அரசனுக்கு (அந்நீர் கொண்டுவருமாறு) சென்றுதேடி, நீர்நிலைக்கணுள்ள சலத்தைக் கும்பத்திற் கொண்டுவந்தார், பின்னரும் சேனைகளும் பருகு தற்கு வேண்டும் நீரைக்கொண்டுவரத் தான்செல்பவனைப்போல மேலைச் சமுத்திரத்திற் சூரியன் குளித்தான். 34

தீம்புனல்கொணர்ந்தார்தம்மைச்செம்மலுமம்மேலோதிக்
காம்புநல்லிளமென்றோளிகணவனைத்தொழினல்லாதி
யாம்புனலருந்தேமுண்மினெம்மொழிவழாதுநீவிர்
தாம்புனலென்றுனுண்டாரேவலிற்றடையொன்றில்லார்.

இ-ள். இனிய நீர் கொண்டுவந்தவரை யரசன் பார்த்து, அழகிய மிருதுவான கூந்தலையும், சிறந்த மூங்கில்போன்ற தோள்களையுமுடைய உமாதேவி நாயகராகிய சிவபெருமானைப் பூசித்தல்லாமலே, யாம்நீரும் உண்ணமாட்டேம், நீங்கள் எமதுசொற்றவறாதுகொண்டுவந்த நீரையுண்ணக்கடவீர் என்று கூறினான். குற்றேவல்செய்வோர் தடையொன்று மின்றிப் பருகினர். 35

காடுறுவேட்டமீதிற்கவனுறுமவலங்கொண்டு
தேடிதழியினாற்போற்றுநியமமுற்றொலைந்ததென்று
வாடுறுமரசனுள்ளத்திளைப்பினைமாற்றுவான்போ
னீடிணர்விரித்துவெய்யோனீர்முகந்தெதிர்வந்துற்றான்.

இ-ள். காட்டிற் செல்லும் வேட்டைத்தொழிலில் மனத்துன்பங் கொண்டு விரும்பி, அதனாற் கொன்றைப்பூ மாலையைத்தரித்த சிவபெருமானைத் துதிக்கும் நியமமுங் கேடுற்றதென்று, வருந்துகின்ற அரசனுடைய ஆயாசத்தை நீக்குவானைப் போல, மிக்கபூங்கொத்துக்களைவிரித்து, நீரை மொண்டுகொண்டு சூரியனும் எதிரில் வந்துதித்தான். 36

அற்றைநாட்கடிகையைந்தொன்றுற்றுவகடன்களாற்றிப்
பொற்றடம்புயக்கோமானும்போவதற்குளம்வாராமை
மற்றதிசயம்பிறந்தகருத்தொடுமனத்தன்பூறி
யொற்றினர்க்கூவிக்கோயிலுளதெனிற்பார்மினென்றான்.



இ-ள். அந்தத் தினத்தில் விடிய ஐந்துநாழிகைக்கு முன்னரே அரசனெழுந்து தான் செய்யவேண்டிய நித்திய கடன்களையெல்லாஞ் செய்து, இலக்குமி குடியிருக்கப் பெற்ற விசாலித்த கௌசலராசனும் அக்கோங்கவனத்தை விட்டுப்போதற்கு மனம்வாராது, அந்த அதிசயந் தோன்றியமனத்தினால் அன்புமிகுந்து, தூதுவரை யழைத்து இவ்விடத் திற் கோயில் இருக்குமாயிற் பார்த்துவருவீராக என்றான். 37

அங்கவரகன்றாரண்ணலகத்தினுள்விழித்திருந்தா
னுந்தலத்தோன்றனாட்டநுதலியைவழுத்தக்கோங்கந்
தங்கியவனத்தடைந்தானென்றுமார்த்தாண்டன்மேல்பாற்
றிங்களுக்குவகைசொல்லச்செல்லலைப்போலச்சென்றான்.

இ-ள். அந்தத்தூதர்கள் பார்த்தற்குச் சென்றார்கள், பெருமையிற் சிறந்த கௌசலராசன் றன்கூடாரக்கண் மனம் விழிப்புற்றிருந்தான், நமது குலத்திற்றோன்றிய அரசன் நெற்றிக்கண்ணையுடைய பரமசிவனை வணங்குதற்காகக் கோங்கமரங்கணிறைந்த வனத்தின்கண் வந்தனன் என்று, சூரியனானவன் சந்திரனுக்கு மகிழ்ச்சிச் செய்திசொல்ல மேற்குத் திசைக்குச் செல்வதுபோல அஸ்தமித்தான். 38

ஆலயநேடிக்காணார்மீண்டிறைக்கறையும்போழ்திற்
சோலையங்கன்னிகாரவனத்தினந்தோன்றற்காணக்
காலையிற்பெயர்ந்தான்வெய்யோன்யாமினிக்காண்டுமென்னு
மாலையில்வருதல்போலத்தோன்றினன்மதியப்புத்தேள்.

இ-ள். ஆலயத்தைத் தேடித்தேடிக் காணாதவராய்த் தூதுவர்திரும் பிச்சென்று, அரசனுக்கு அறிவிக்குங் காலத்தில், சோலைகளி னழகு வாய்ந்த கன்னிகார வனத்தி லிருக்கும் நமதுவழித்தோன்றலைப்பார்க்கும் பொருட்டுப் பகற்காலத்திற் சூரியன் போயினன், யாம் மாலைக்காலத்திற் போய்ப் பார்த்துவருவேமென்று வருதல்போலச் சந்திரன்தோன்றினன்.

மின்னவிர்செக்கர்வானில்விளங்குவெண்பிறையையெந்தை
பொன்னவிர்சடையிற்றோற்றும்பிறையெனப்போற்றிவைகு
மன்னவற்கன்றுகாட்சிமழுவலான்வழங்குகின்று
னென்னதுகாணப்புக்தான்போன்றுதித்தருக்கன்போந்தான்.

இ-ள். மின்னல் விளங்குஞ் சிவந்த வானத்தில் விளங்காநின்ற வெள்ளிய பிறைச்சந்திரனை, எமது பிதாவாகிய சிவபெருமானது பொன்போலவிளங்குகின்ற திருச்சடையிற் காணப்படுகின்ற பிறையென்று துதித்திருக்கும் கௌசலராசனுக்கு அற்றைத்தினம் கோடரிதரித்த பரயர் காட்சிகொடுத்தருள்வர். அதனையானுங்காண்பேனென்று வந்தவனைப் போலச் சூரியனும் உதயஞ் செய்தான். 40

முத்தினமாயகாலைமுத்தினன்கவிகைநீழ
லத்தினமாலோன்வைகுஞ்சூழலிற்றாமரைப்பூங்
கத்திகைமார்பனாதிசைவமாமறையோன்கஞ்ச
னத்தினன்போதினார்க்குநாண்மலர்கொய்யச்சென்றான்.

இ-ள். மூன்றுநாட் கழிந்தபின்பு, முத்துக்களா லலங்கரிக்கப்பட்ட குடையானது நிழலைச்செய்ய, சூரியனுஞ் சந்திரனுங் குடிகொண்ட சோலைக்கண், தாமரைப்பூ மாலையையுடைய ஓர் ஆதிசைவப்பிராமணர், தாமரை மலரையுடைய பிரமனும் விட்டுணுவும் பூசித்த சிவபெருமானுக்காக அன்றலர்ந்த புதியபுட்பங்களைக் கொய்யும்படிசென்றார். 41

கண்டனன்பணிந்தான்செம்மல்விறலினன்கலைநான்மார்பன்
விண்டனனாரும்பெருமடைந்தனும்விரைத்தார்வேந்தன்
பண்டருமறைவலாளன்பார்த்தனன்பணிகளாற்றிற் [ன்
கண்டார்கோனருளிற்போந்தவரையனென்றகனுட்கொண்டா



இ-ள். அரசனானவன் ஆதிசைவப் பிராமணரைப் பார்த்துவணங்கினான், மான்றோல்கட்டிய உபவீத மணிந்த மார்பினையுடைய ஆதிசைவர் நீயாவன் எனவினவினர், வாசனை பொருந்திய மாலையைத்தரித்த அரசன் தன்னுடைய ஊரையும் பேரையும், தான்வந்த காரணத்தையும் எடுத்துக் கூறினான், பழமையாகிய அரியவேதங்களில் வல்ல பிராமணர் மனத்தில் ஆராய்ந்து, திருப்பணிகளைச் செய்தற்காகத் தேவர்பிரான சிவபெருமானது திருவருளால்வந்த அரசனாமென்று தம்மனத்து ணினைத்தார். 42

மன்னவகன்னிகாரவனமிதுஞானபூமி
பன்னருமிலிங்கமாகிப்பரப்பிரமந்தானோங்கிற்
றந்நிலைக்கண்ணென்றான்முன்னிகழ்ந்தனயாவுங்கூறிச்
சந்நிதிதிகழ்பாலோடைதனிற்படிவித்தானறக்கோன்.

இ-ள். அரசனே கன்னிகார வனம் என்று சொல்லப்படும் இத்தலம் ஞானபூமி யெனப்படும். சொல்லுதற் கரிய இலிங்கவடிவாகிப் பரப்பிரமமாகிய சிவம் வளர்ந்து நின்றது, அந்தத்தானத்தி லாகுமென்று, முன்னர் நடந்தவைகளெல்லாவற்றையுஞ் சொல்லி அக்கோயிற் சந்நிதியின் பக்கத்தில்விளங்குந் தீர்த்தத்தில் அரசனை முழுகுவித்தார் ஆதிசைவப்பிராமணர். 43

ஞானநோக்கருளிஞானவாய்மையுநவிற்றுவேத
ஞானதேசிகனன்ஞானநறுமணிக்கோயில்புக்கு
ஞானநற்குறியைஞானநாட்டமோடருச்சித்தோதி
ஞானவாரிதுபடிக்குமூழ்கினொருவிநின்றான்.

இ-ள். ஞானப் பார்வையைக் கொடுத்து, ஞானத்தின் உண்மையிலக்கணங்களையுஞ் சொல்லிய ஞானதருவாகிய ஆதிசைவப் பிராமண

னால் கௌசலராசன் சின்மயம் விளங்கும் ஒளியைக்கொண்ட அழகிய கோயிலுட் புகுந்து ஞானக்கண்ணுடன் அருச்சனைசெய்து, துதித்து ஞானசாகரத்துள் தோய்ந்து அமிழ்ந்தினன் என்னும் அகங்காரத்தினின்றும் நீங்கிநின்றான். 44

மெய்ம்மயிர்பொடிக்கவுள்ளம்விதிர்விதிர்விதிர்த்திரண்டு
கைம்மலருச்சிகூப்பிக்கண்கணீரருவிதாழ்த்தி
நெய்ம்மலிநெடுவேலண்ணனினைப்பறநினைந்துநின்றான்
மைம்மலிமிடற்றோனேற்றில்வந்தெதிர்காட்சிதந்தான்.

இ-ள். நெய்நிறைந்த நீண்ட வேலாயுதத்தைத் தரித்தகௌசலராசன். தேகம் உரோமப் புளகிதங்கொள்ள நடுநடுங்கி, இரண்டு கரங்களாகிய தாமரைமலர்களையுந் தலையிற் குவித்து, கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம் அருவிபோலச் சொரிந்து, தற்போத நினைப்பின்றித் தியானித்து நின்றனன், கருமைநிறைந்த திருக்கண்டத்தையுடையபரமசிவன் இடபவாகனத்தி லாரோகணித்துவந்து காட்சி கொடுத்தனர். 45

காட்சியிற்கலந்துமூலமாமனுக்கழறிநெஞ்சு
ளாட்சியிற்கீருருத்ரமாயிரநாமத்தானு
மாட்சியிற்றுதித்தான்வேட்டவரம்பலவழங்கிவள்ள
னீட்சிநன்னெறியிலானுனெறிநின்றார்நெஞ்சுளானான்.

இ-ள். அருள் ஞானத்திற் கலந்துநின்று, பெரிய சிவமூலமந்திரத்தைச் செபித்து, மனத்தினுள்ள அன்பினாலே, சிறப்புப்பொருந்திய உருத்திர மந்திரத்தாலும் ஆயிர நாமத்தினாலும் முறைப்படி அரசன் றுதித்தான், அருள்வள்ளன்மையால் விரும்பிய பலவரங்களைக் கொடுத்துநீட்சியையுடைய சிவலிங்கத்திலந்தர்த்தான மாயினர், நன்மார்க்கத்தினின்ற தொண்டரது இருதயகமலத்தி னீங்காது நிற்பவரான சிவபெருமான். 46



நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா.

வெள்ளைமால்விடையுகத்தோன்மிளிர்குறிமறைந்ததற்பி
னுள்ளமார்வங்கெழுமொள்ளிலைவேலோனெங்கலருள்
வள்ளைவார்குழையன்னைவைகிடம்யாண்டுளதுமன்றே
தெள்ளுநான்மறைமுனிவவருள்கெனச்சேவடிதாழ்ந்தான்.

இ-ள். வெண்ணிறமுடைய பெரிய இடபத்தைக் கொடியாகவுடைய சிவபெருமான், விளங்காநின்ற சிவலிங்கத்தின்கண் மறைந்ததன் பின்பு, மன அன்பு மிக்க அழகிய இலைத்தொழின் முற்றிய வேலாயுதத்தை யுடைய அரசன், உயர்ந்த இச்சோலையுள் வள்ளைக்கொடிபோலும் நீண்ட காதுகளையுடைய உமை யம்மையாராகிய எமது தாயார் எழுந்தருளியிருக்குமிடம் எவ்விடத்துளது, தெளிந்த நான்கு வேதங்களில் வல்ல முனிவரே அருள் வீராகவென ; பிராமணரது செவ்வியபாதங்களை வணங்கினன். 47

பூபதிகேள்பவானியும்பொன்னியும்பொருந்துநன்னாவிந்
றுபதர்கோன்றுருவாசன்றமனியவிண்ணவர்வைகு
மாபயனன்கலைழத்தேவலிழைப்பவாய்மறைநெறியின்
மாபரனைவழிபாடுபுரிந்துவைகுஞான்றொருநாள்.

இ-ள். உமை யம்மையாரதும் இலக்ஷமி தேவியினதும் அருள் பொருந்திய நல்ல நாவினையுடைய அரசனே கேட்பாயாக, முனிவர்க்குத் தலைவராகிய துருவாசமுனிவர், பொன்மயமாகிய தேவர்கள்வசிக்கும் சுவர்க்கலோகத்துள்ள காமதேனுவின் பஞ்ச கவ்வியத்தையும் நன்மையோடு வருவித்துப் பெற்று, அக் காமதேனு தாமிட்ட குற்றேவல்களைச் செய்ய, ஆராய்ந்த வேதவிதிப்படி, மேலான பரம்பொருளாகிய சிவபெருமானை வழிபாடுசெய்து இருக்கின்ற நாளில் ஒருநாள். 48

காலமறிந்தடைவதொருகடிகைபிரிந்தடைந்ததென்னுச்
சீலமுனிவரன்சினவித்தேனுவேசிவபூசைக்
கேதுவிடையூறிழைத்தாயேலாதுன்பணிபாவங்
கோலினையென்முன்னைவாராதேகுதிநீகொடியையென்றான்.

இ-ள். பூசாகாலத்தையறிந்து அக்காலத்தில் வருங்காமதேனு, ஒரு நாழிகை தாமதித்துவந்ததென்று, ஞான வொழுக்கத்தை யுடைய துருவாசமுனிவர்கோபித்து, காமதேனுவே ! சிவபூசைக்கே கொடிய இடையூற்றைச் செய்தாய், இனி உன்னுடைய தொழில் தகாது, பாவத்தைச் சுமந்தாய், நீ கொடுமையை யுடையை, ஆதலால் என்முன் வாராது போகக்கடவாயென்றார். 49

அம்மாற்றமதுகேளாவழுங்கிநெடிதுயிர்த்திதனுக்
கெம்மாற்றமிசைப்பதெனவிடைந்தறியாமையினிழைத்த
மைம்மாற்றுமுனிவமுனிவொழிந்தளியேன்வாழ்வுறவோர்
செம்மாற்றமருள்கெனச்செஞ்சேவடிதாழ்ந்ததுதேனு.

இ-ள். காமதேனு, முனிவர் கூறிய வார்த்தைகளைக் கேட்டு இரங்கிப் பெருமூச்சுவிட்டு, இதற்கு என்னமொழி கூறுவது என்று வருந்தி, அறியாமற் செய்த குற்றத்தை நீக்கும் முனிவரே ! தேவரீர் கொண்ட கோபத்தைவிடுத்து, எளியேனாகிய நான் உய்யும்படி ஒரு செவ்விய சொல்லைத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று, துருவாச முனிவரது சிவந்த பாதங்களை வணங்கிற்று. 50

ஏனவரைநீழல்வைகுமேர்கொள்கன்னிகாரவனந்
தானடைதியெனச்சார்ந்துதபனதிசையொருதடங்கண்
டானதவமுயன்றமலனருளொடுவிண்ணடைந்ததந்தத்
தேனியிர்பூந்தடந்தேனுதீர்த்தமெனச்சிறந்துளதால்.



இ-ள். வராகமலையி னடிக்க ணிருக்கும் அழகுபொருந்திய கன்னிகாரவனத்தை அடைந்து பூசிப்பாயாக வென்றுகூற, காமதேனுவந்து கிழக்குத்திசையில் ஒருதடாகம் உண்டாக்கி, நன்மையான தவத்தை முயன்று செய்து, சிவபெருமானது திருவருளைப் பெற்றுச் சுவர்க்கத்தையடைந்தது, அந்தத் தேனிறைந்தபுட்பங்களையுடைய தடாகம் தேனுதீர்த்த மென்று பெயர் வழங்கிற்று. 51

தீர்த்தமதன்றென்கரையிற்செறிபலர்கூவிளவனத்திற்
பார்த்திபமாதெனவுலகம்பரித்தபார்ப்பதியரிய
மாத்தவநாளும்பயின்றவைகினளதுகொண்டு
கோத்தமறைதிருக்காமக்கோட்டமெனக்கூறியவே.

இ-ள். அந்தத் தேனுதீர்த்தத்திற்குத் தெற்குக் கரையில், பொருந்தியபூக்களையுடைய வில்வவனத்தில், அரசப் பெண்போல உலகத்தைத் தாங்கும் பார்வதி தேவியார் அரிய பெரியதவத்தை நாடோறும் செய்தனர், அதனால் அதனைக் கூட்டமாகிய வேதங்கள் திருக்காமக் கோட்டம் எனச் சொல்லின. 52

இதுகுய்யமியாவருமெய்துதற்கரியதென்றோனை
மிதுவின்றொல்குலவேந்தன்போற்றிமிளிர்விமலைபதப்
பதுமங்காண்பதற்கொன்றுபகர்கெனத்தாழ்ந்தனன்கமல
மதுமென்றார்மறைமுனிவன்வருந்தலையென்றருள்வழங்கி.

இ-ள். இது இரகசியமாகும். எவர்களும் அடைதற்கரியதுஎன்று கூறிய ஆதிசைவப் பிராமணரை, பழமையாகிய சந்திரகுலத் தோன்றலாகிய கௌசலசேர மன்னவன் துதித்து, விளங்காநின்ற உமையம்மையாரின் பாதங்களாகிய தாமரைமலரை அடியேன் தரிசிப்பதற்கு ஒருபாயம் உபதேசித்தருளவேண்டுமென்று வணங்கினான். தேனபொருந்திய தாமரைப்பூ மாலையையுடைய ஆதிசைவப் பிராமணர் வருந்தாதேயென்று கிருபைபுரிந்து. 53

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சாலுமகாகோடமேசத்திகாமஞ்
சக்கரமேபுவனையாகாசஞ்சத்தி
கோலியகாமஞ்சகளம்புவனைசத்தி
கோடமாதங்கோடசக்கரமேபுவனை
வேலுடைச்செவ்வேள்விளம்பவிளங்காநின்ற
வித்தியாமந்திரமாடிவற்றைத்தேனு
வாவியதீர்த்தக்கரையிற்செபிக்கிலுன்பால்
மாதொருமண்டலஞ்செல்காலவந்துவரந்தருமே.

இ-ள். பொருந்திய மகாகோஷமே சத்திகாமம், சக்கரம் புவனையாகும், ஆகாயம் சத்தியாகும், கொள்ளப்பட்ட காமம்சகளமாகும் புவனை சத்திகோடம் மாதங்கோடம் புவனேசுவரி சக்கரம், வேலாயுதத்தைத் தரித்த கந்தசுவாமி சொல்லும்படி விளங்காநின்ற வித்தியா மந்திரமாகும், இவற்றைச் சுத்தமாகிய தேனுதீர்த்தத்தின் கரையினிடத் திருந்துசெபிக்கில் உன்னிடத்து உமையம்மையார் ஒருநாற்பது நாளைக்குள் தோன்றி நீநினைத்த வரத்தைக்கொடுப்பார். 54

நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா.

ஆயமறையோனுரையேற்றாயிடையவ்வாறிழைப்பத்
தாயுமுதுபார்ப்பனத்தியுருவுகொண்டுதண்டேந்திப்
போயிறைமுன்யாரையுன்னிப்புரிகின்றாய்தவமென்றா
ளேயுலகமீன்றளித்தவிறைவிதனைநோக்கியென்றான்.

இ-ள். அவ்வாறாய ஆதிசைவப்பிராமணர் சொன்ன வார்த்தைகளை யேற்றுக்கொண்டு அவ்விடமடைந்து அவ்வாறுசெய்ய, உலகமாதா ஆகிய உமையம்மையார் கிழப் பிராமணப்பெண் வடிவங்கொண்டு, தண்டினை



யூன்றிக்கொண்டு அரசன் முற்சென்று, யாரைநினைத்து இத்தவத்தைச் செய்கின்றாய் என்று கேட்டனர். உலகத்தைப்பெற்ற பரமேசுவரியை நினைத்துச் செய்கின்றேனென்று அரசன் சொன்னான். 55

நன்றுவரவுங்கேள்விநலனுமாதவத்திறனுந்
தன்றுணைக்கேள்வனைத்தழுவத்தவம்புரிகின்றாளுன்பா
லின்றுவெளிவரவரியவளியுடையையாயினிமேன்
மன்றலணிகாண்டியெனமறைந்தாண்மாமறையுணின்றாள்.

இ-ள். அரசனே! உன்னுடைய வருகையும், கேள்வி யறிவும் பெரிய தவவகையும் நன்றாயிருக்கின்றன, அந்த அம்மையானவள் தனது நாயகனைச் சேரும்படி தவத்தைச்செய்கின்றாள், உன்னிடத்து இற்றைத் தினம் வெளிவருதற்கு அரியள், அன்புடையவனே இனிமேல் திருமணக் கோலத்தைக் காண்பாயாகவென்று மறைந்தனள், யாரெனில்பெரிய வேதப்பொருளாய் நின்றவராகிய பார்வதிதேவியார். 56

அன்னையெழுந்தருளினளென்றானந்தபரவசமுந்
தன்னுணர்வுங்கமலப்பொற்றாரைவிழிநீர்தாழ
வென்னையுமாண்டனண்ஞமலிக்கினித்தவிசுமிடுவளென்றே
முன்னிமணங்காணமொழிந்தான்மாதவமுயன்றான்.

இ-ள். அரசனானவன் எமது அன்னையார் எழுந்தருளினர் என்று ஆனந்த பரவசமும், தன்னையறியு மறிவுபெற்றுத், தாமரைமலர்போன்ற சிவந்தகண்களினின்றும் நீர்சொரிய, என்னையும் அடிமைக் கொண்டனள், நாய்க்கு இனி ஆசனமும் இடுவாளென்று, பெரிய தவத்தை முயற்சிகொண்டு முற்பட்ட திருமணக்கோலத்தைத் தரிசிக்க இச்சிப்பேன் என்று அரசன் தவத்தைச்செய்தான். 57

சில்பகல்செல்காலமகதித்தியாழ்முனிமேழ்வர்
கொல்புலத்தாபிதர்கோங்குவனங்குறுகிக்குழகனடி
தொல்பவந்திரத்தொழுதார்தமிற்சிலர்காய்மலர்கொய்ய
வில்வவனந்தனிற்றேனுதீர்த்தமிளிர்கரையடைந்தார்.

இ-ள். சிலநாட் செல்லுங்காலத்தில், தெய்வத்தன்மைபொருந்திய மகதி என்னும் வீணையுடைய நாரதமுனிவர் முதலாய எழுவரான, புலன்களை வெற்றிகொண்ட முனிவர்கள் கோங்கு வனத்தையடைந்து சிவபெருமானது திருப்பாதங்களை, பழைய பிறவிகள் நீங்கவணங்கினர், அவருட்சிலர் காயும் மலரும் கொய்யும் படியாக வில்வ வனத்தின்கணுள்ள தேனு தீர்த்தத்தில் விளங்கும் கரையடைந்தனர். 58

கைக்கமலர்கொய்வார்கன்னியர்பலர்வைகிடங்களுஞ்செங்
கைக்கதிர்வேற்குரிசிறவம்புரிந்ததுங்கண்டதிசயித்தார்
தெக்கிணநோக்கினரமுதசீதளவொண்ணிலவொருங்கு
புக்கெனவோங்கொளிவிளங்குபொலிவுகண்டுவெருவினர்.

இ-ள். கைக்கு அழகிய புட்பங்களைக் கொய்யும் முனிவர்கள், கன்னியர்கள் பலர் இருக்கும் இடங்களையும், சிவந்த கையின்கண் ஒளிபொருந்திய வேலாயுதத்தைத் தரித்த கந்தசுவாமி தவத்தை செய்ததையும் பார்த்து அதிசயித்தனர், தென்றிசையைப்பார்த்தனர், அங்கே அமிர்தமாகிய குளிர்ந்த அழகிய நிலாக்கூட்டம் ஒருங்கு சேர்ந்தாற்போல், மிக்க ஒளிவிளங்கும் அழகைக்கண்டு பயந்தார். 59

தருணமணிநிலவுமிழுந்தபனரளவிலகோடி
பெருகொளிவாலுளைமடங்கற்பிடரினருமறைமுடிவி
னொருகுடிலைவடிவினொளியொழுகுவிமானத்தினிடைக்
கருணைதிருவுருவுகொண்டுகன்னிமுயல்வதுகண்டார்.



இ-ள். சிவந்த அழகிய ஒளியைக் காலுகின்ற சூரியர் அளவில்லாத கோடியரின் மிக்க ஒளியைக் கொண்டு வெள்ளிய பிடரி மயிரையுடைய சிங்கத்தின் முதுகில் உபரிடத ஆசனத்தில் ஒப்பற்ற பிரணவ வடிவத்தின் ஒளி விளங்குகின்ற விமானத்தி னிடத்திலே அருளே உருவமாகக் கொண்டு கன்னிப் பருவத்தை யுடைய உமாதேவியார் தோன்றுவதைக் கண்டார்கள். 60

அஞ்சினர்நோற்றிருந்தாரன்னையெனச்சேணிடைநின்
றுஞ்சினமுய்ந்தோமென்றிறைஞ்சிமேயுவகைகொண்டு
பிஞ்சுநாண்மதிவேணிப்பெருமானனைகிடம்போகி
விஞ்சைநாரதன்முதலோருளங்குளிரவிரும்பினார்.

இ-ள். தவஞ்செய்திருந்தவர்கள் உலகமாதா வந்தாளென்று பயமுற்றுத் தூரத்தில் நின்று யாம் உய்ந்தோம் உய்ந்தோமென்று வணங்கி மகிழ்ச்சிகொண்டு இளஞ்சந்திரனைத்தரித்த சடாமுடியையுடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடத்திற்குச் சென்று இசையில் வல்ல நாரதமுனிவர் முதலாயினோர் மனங்குளிர விருப்பமுற்றார். 61

முழுத்தலங்கூவிளவனத்தின்முதல்விமுயல்வதுகேளாச்
செழுத்தவப்பெற்றனமென்றேதிசைநோக்கிநறுமலர்தூய்
வழுத்தினர்பின்மழவிடையோன்பரிந்துமனைக்கோலமனைத்
தழுத்துவமிஞ்ஞான்றெனநின்றார்க்குணர்த்தினனமலன்.

இ-ள். மேன்மைபொருந்திய தலமாகிய கூவிள வனத்திலே பார்வதி தேவியார் பிரசன்னமாயதைக்கேட்டு அழகிய தவத்தின் பிரயோசனத்தை யடைந்தோமென்று திக்குநோக்கி வாசனைபொருந்திய புட்பங்களைத் தூவித் துதித்தனர். பின்பு இளமை பொருந்திய இடபவாகன

ராகிய சிவபெருமான் அன்புகூர்ந்து திருமணக்கோலத்தை இவருடைய மனத்திற் பதிப்பேமென்று அங்கு நின்றோர்க்கு அறிவித்தனர். 62

உம்பர்பரசிடும்பெரியாவுடையநாயகனுவந்து
செம்பவளவாய்மலர்ந்தவகைதெரிந்துநோற்றிருந்தார்
விம்பவிதழமுதமென்சொல்வேல்விழிக்கோல்வளையுமையை
வம்பவிழ்சேயிதழியண்ணன்மணம்புரிந்தவாறுரைப்பாம்.

இ-ள். தேவர்களாற் றுதிக்கப்படுகின்ற பெரியாவுடைய நாயகரென்னுந் திருநாமத்தையுடைய சிவபெருமான் மனமகிழ்ந்து (திருமணக்கோலம் இந்நாளிற் காட்டுவேமென்று) சிவந்த பவளம்போன்ற திருவாய் மலர்ந்த விதத்தை யுணர்ந்து தவஞ்செய் திருந்தார்கள். இனிகோவைக் கனிபோன்ற அதரத்தையும், அமிர்தம்போலும் மிருதுவான சொற்களையும், வேற்படையை யொத்த கண்களையும் அழகிய வளையல்களையுமுடைய உமாதேவியாரை, வாசனைபரந்த சிவந்த கொன்றை மாலையைத் தரித்த சிவபெருமான் திருமணஞ்செய்த சரித்திரத்தைச் சொல்லுவாம்.

கௌசலசேரன் அருச்சனைச் சருக்கம் முற்றிற்று.

ஆ செய்யுள்— 423.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

பதினொன்றாவது,

# திருமணச் சருக்கம்.

கலி விருத்தம்.

வான்றரைமுதலவின்றாட்குமாலயன்
றோந்தவுந்தோன்றிடாத்தோன்றலார்க்குமின்
றேன்றவாறெழின்மணமென்றெழுந்துதொன்
மூன்றுலகமுமணமுரசமார்த்தவே.

இ-ள். ஆகாயம் பூமி முதலாகிய சராசரப் பொருள்களைப்பெற்ற உமாதேவியார்க்கும், விஷ்ணு பிரமர்முதலாயினோர்பிறக்கவும் ஒருகாலும் பிறக்காத் சிவபெருமானுக்கும் இற்றைத்தினம் தக்கபடி அழகிய விவாகம் நடக்குமென்று மணமுரசானது திரிலோகத்திலு மெழுந்து முழங்கியது. 1

கரம்பயின்மழுவினோன்வனத்திற்காஞ்சன
புரம்பயில்புலவரும்பிறரும்போந்தனர்
சரம்பயில்விழியுமைதவஞ்செய்கானிடை
யரம்பையர்முதலினோரடைதன்மேயினார்.

இ-ள். காத்தி னிடத்திலே பொருந்திய மழுவாயுதத்தை யுடைய சிவபெருமானது கூவிளவனத்திலே பொன்னுலகத்தி லிருக்கின்ற தேவர்களும் ஏனையரும்வந்தார்கள். அம்பினையொத்த கண்களையுடைய பார்வதிதேவியார் தவஞ்செய்த கன்னிகாரவனத்தின் இடத்தில் தேவஸ்திரீகள் முதலாய பெண்களும் வருவாராயினார். 2

மருந்துவானவருணவாரிவெய்யநஞ்
சருந்திஞ்ஞீன்வனங்கயிலாயமேயது
கருந்தடங்கண்ணிஞட்கருதிமாதவ
மிருந்தகாந்தாரநீயுமையமேயது.

இ-ள். திருப்பாற் கடலிற்றோன்றிய அமிர்தத்தைதேவர்களுண்ண, கொடியநஞ்சைத் தாம் உண்டருளத்த சிவபெருமான் எழுந்தருளி யிருக்கின்ற அவ்வனம் கைலாயத்தை யொத்தது. கரியநீண்டகண்களையுடைய பார்வதிதேவியாரை நினைத்துமுனிவர்கள் தவமிருந்தகாந்தாரவனம்நீண்ட இமயமலையையொத்தது. 3

மரகதனளகையென்றயிர்ப்பவானவன்
விரவுபொன்னுலகெனமயங்கிவெள்குறச்
சுரர்புரீமயன்புரிதொழில்வனப்பிஞ
லரியயன்குயிற்றமற்றழகுவேண்டுமோ.

இ-ள். குபேரன் தனது அளகாபுரியென்று சந்தேகங்கொள்ளவும், இந்திரன் தானிருக்கின்ற பொன்னுலகோ வென்றுமயங்கி வெட்கமுறவும் தேவர்களும் விசுவகர்மாவும் செய்கின்ற தொழிற்சித்திரங்களினால் விஷ்ணுவும் பிரமரும் அலங்கரிக்கவேறும் ஓர் அழகுவேண்டுமோ? 4

பைந்தருவைந்துநீள்பந்தராய்மலர்க்
கொந்தவிழிணர்களாற்குளிர்நிறைத்தன
சந்தனமணமுறைத்திளகுந்தண்டமிழ்
மந்தமாருதமளாய்வந்துலாயது.

இ-ள். பூசியசந்தானம் அரிசந்தானம் பாரிசாதம் மந்தாரம் கற்பகம் எனும் ஐந்தருக்களும் நீண்டபந்தராகி மலர்க்கொத்துகள்பரந்த குலைகளால் குளிரை நிறைத்தன. சந்தனமரங்கள்வாசனைவீசிச் செந்தமிழொடு கலந்து சிறந்தென்றற் காற்றுஞ்சுறவுந்துலாவிற்று.



வாயுவுமல்கிடுதொழிலின்வாய்ந்தவத்
தோயுதண்டுளிசாலூர்த்திசிந்திடத்
தேயுமென்குய்ப்புகைசெறிவித்தும்பரி
னேயவெங்கனுஞ்சுடரேற்றிநின்றதே.

இ-ள். வாயுதேவனும் நிறைந்துவீசுந் தொழிலினால் இந்திரவாகனமாகிய மேகங்கள் நீரைப்பருகிக் குளிர்ந்த மழைத்துளிகளைச் சிதறுந்தக, அக்கினியும்,யிருதுவான தாளிதப்புகைகளைநிறைவித்து ஆகாயம் வவ்விடத்தும் தன்சுவாலையை விட்டுகின்றது.

மாசுணவேந்தினம்வனவனந்தொறும்
வீசுறுநறுமணிவிளக்கஞ்செய்தன
பூசுறுகலவைபூணணிநிறைத்தன
காசிறெள்ளமுதுபொற்கலசமேந்தின.

இ-ள். சர்ப்பங்களுக்குத் தலைமையான நாகக்கூட்டங்கள் அழகிய காடுகள்தோறும் வீசுகின்ற நல்ல இரத்தினங்களாகிய விளக்குகளை உண்டாக்கின. பூசுகின்ற கலவைச்சாந்துகளையும் தரிக்கின்ற ஆபரணங்களையும் நிறைத்தன, குற்ற மில்லாததெளிந்த அமுதத்தைப் பொற்கும்பங்கள் தோறும் ஏந்திநின்றன. 7

தேனுவினினம்பணிவேட்டுச்சென்றன
வானுறையிருநிதிமருங்கிறேங்கின
மீனுறமுவாமஞுவிழிந்தவிரைக
ளானவைவையைந்துமற்றனைத்தன்மேயின.

இ-ள். காமதேனுவின் கூட்டங்கள் வேலைகளை விரும்பிச்சென்றன, சுவர்க்கலோகத் திருக்கின்ற சங்கநிதிபதுமநிதி யென்னும் இருநிதிகளும் பக்கத்தில் உயர்வுற்று விளங்கின. மீன்களைப்பொருந்திய உப்புக்கடலும்

சுராக்கடலும் ஆகிய இருசமுத்திரங்களும் நீங்கலாக மற்றைய ஐந்துசமுத்திரங்களும் அவ்விடம்வந்துநின்றன. 8

விண்ணுளார்பாதலமிடைந்துளார்புவிக்
கண்ணுளார்காட்சியிற்கண்ணுளாரெனப்
பண்ணுளாரணத்தினுட்பயின்றபான்மொழிப்
பெண்ணுளார்வம்பிரான்பெருக்கினரோ.

இ-ள். மேலுலகத்தி லிருப்பவரும் பாதலத்தில் நெருங்கியிருப்பவரும் பூமியின்கண் இருப்பவர்களும் திருமணக்கோலந்தரிசித்தற்கு வந்தனமென்று சொல்ல, இசையுள்ள வேதத்தினுட்பொருந்திய பால்போலுஞ் சொற்களையுடைய உமாதேவியாரினிடத்துச் சிவபெருமான் விருப்பத்தை மிகவுங் கொண்டனர். 9

திப்பியலிங்கமுட்டிகழ்ந்துபோந்துசெந்
துப்புவார்சடைமுதற்றோன்றத்தோன்றினான்
மைப்பிறழ்கண்ணியைவதுவையாற்றுவான்
மெய்ப்பெருந்தவிசின்மேல்வீற்றிருந்தனன்.

இ-ள். தெய்வத்தன்மை பொருந்தியசிவலிங்கத்தினிடத்தும்விளங்கித் தோன்றிச் சிவந்த பவளத்தையொத்த நீண்டசடைமுதலாகிய உறுப்புக்கள் காணும்படி தோன்றினார். அங்ஙனந்தோன்றிக் கருமையையுடைய பிறழ்தலைக்கொண்ட அங்கயற் கண்ணியாரைத் திருமணஞ் செய்யும்படி உண்மையாகிய பெரிய ஆசனத்தின்கண் வீற்றிருந்தனர். 10

திருவுளச்செயலைவச்சிரவேணன்றெரிந்
துரியகீண்புடைத்தவமுகுன்றநீர்மையா
லருளுருவாயினும்வதுவைக்காவண
பொருவில்பூணணிமுதற்புனைந்துபோற்றினான்.



இ-ள். சிவபெருமானது திருவுளச் செய்கையைக் குபேரன்தெரிந்து சிறந்தபூமிமுதலிய இடங்களிலுள்ளார்தவத்தைச் செய்ததன்மையினால், திருவருளே வடிவாயிருந்தாலுந் திருமணஞ்செய்தற்காக உள்ள ஒப்பில்லாத ஆபரண முதலாயினவற்றைச் சாத்தித் துதித்து நின்றான்.

இந்துகாந்தத்திடையிரவிகாந்தமொன்
றுந்தியாங்கொருமழவிடையுகைத்தனன்
றந்தமினிரைநிரைசாரதக்குறள்
கொந்தவிழ்மாலைவெண்குடைநிழற்றவே.

இ-ள். சந்திரகாந்தக் கல்லினிடத்துச் சூரியகாந்தக் கல்லொன்று ஏறியிருந்தாற்போல ஒரு இளமை பொருந்திய இடபவாகனத்தின்மேல் ஏறிச் செலுத்தினர். குறள்வடிவுள்ள பூதக்கூட்டங்கள் தங்கள் தங்களுக்குள்ளே வரிசைவரிசையாகநின்று பூங்கொத்துக்கள்பரந்த மாலைகட்டப்பட்ட வெள்ளிய குடையைப்பிடித்து நிழலைச்செய்யவும். 12

வீசணிசாமரைமிளாத்தூயவெண்
டூசணிகதலிகைதுவன்றிச்சூழ்தரக்
காசணியடைப்பைகளாஞ்சிமற்றுள
தேசணிபரிசனமிடைந்துசென்றவே.

இ-ள். இரட்டுகின்ற அழகிய சாமரங்கள் விளங்கவும் சுத்தமாகிய வெண்ணிறமுள்ள வஸ்திரத்தாற் கட்டப்பட்ட கொடிகள் நெருங்கிச் சூழவும் இரத்தினங்களாற் செய்யப்பட்ட வெற்றிலைப்பைகளையும் காளாஞ்சிகளையும் மற்றுள்ளவற்றையும் பிரகாசமுள்ள சேனைகள் கொண்டுசெல்லவும். 13

மண்டியநான்மறைப்பரியுஞானமே
கொண்டிரண்டாயிரக்கோட்டுவேழமுந்

தண்டுழாய்மால்விடைதனிப்பதாகையு
மெண்டிசைப்பெருங்களிற்றினமுமீண்டின.

இ-ள். பழமையாகிய நான்கு வேதங்களாகிய குதிரைகளும், ஞான வுருவங்கொண்டு இரண்டாயிரங்கொம்புகளையுடைய அயிராவணம் என் னும் யானையும் தண்ணிய துழாய்மாலையைத்தரித்த விட்டுணுவாகிய இடபமும், ஒப்பற்ற இடபக்கொடியும் எட்டுத்திசைகளினுமுள்ள பெரிய யானைகளும் நெருங்கின.

பரி—பரிப்பது. (பரித்தல்—சுமத்தல்.) இரண்டாயிரங் கொம் புள்ளயானை ஐராவணமென்பதனை "வான்கோடிரண்டாயிரம்" எனவரு உம் அமுதாம்பிகையம்மை பிள்ளைத் தமிழ்ச்செய்யுளானு மறிக. வேழம் ஆண் யானை. வேழக்குரித்தே விதந்து களிறென்றல், என்றார் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனாரும்.

மால்—பெருமை. அது பண்பாகு பெயராய் உடையான்மேனின் றது. விஷ்ணுவிடையான சரித்திரமாவது—தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன்மாலி என்னு மூவசுரர் இமையவர்க் கிடுக்கண்செய்வாராயினர். அவர் இறைவனிடஞ்சென்று முறையிட, பெருமான் ஆயிரந்தேவவரு டம் திருக்கண்களை விழித்திருந்தார். திருமால் புத்தவடிவங்கொண்டு நாரதர் சீடராக உடன்வர அசுரரிடஞ்சார்ந்து அவரைமயக்கிப் புத்தராக்கி இறைவருக் கறிவித்தார். இறைவர் உலகமாகிய ஒருநெடுந் தேர்மீது இவர்வான்சென்றகாலை, தேர்வடிவாய்நின்ற தேவர்முதலாயினோர் எம் மைக்கொண்டன்றோ இறைவன் பகைகடக்க உன்னினான் என்று இறு மாந்தாராக, அன்னதையறிந்த ஆலகண்டப்பெருமான் தந்திருவடியை வைத்தகாலத்து அச்சுமுறிந்து தேர்முதலியனதுலைந்தன. அதுகண்ட திருமால் வெள்ளேறாகி யெளியேனை ஊர்ந்தருளவேண்டுமென் றிரப்ப அடியார் வேண்டுவன வேண்டியாங்கருளும் வேண்டுவன வேண்டியாங் கருளும் விமலமூர்த்தி அதன்மேல் ஆரோகணித் தருளினர். இடபமா னோன் எளியனேனும் இறைவனைச் சுமக்கும் ஏறூழ்வலி படைத்தே



னென்று இறுமாப்ப, எம்பாமனைகன் தன்னியல்காட்ட, ஏறு இருவிழி களும் பிதுங்கித் தன்னிடங்கடோறும் இரத்தம் இருங்கடல்போ லொ ழுக இளைத்து எந்தையே எந்தையே என்றிரங்கி யிரங்கி இடிபோல் இரு நிலத்திற் புரண்டுஇறந்ததுபோற் கிடந்தது. இவ்வாறு கந்தபுராணத்து உப தேசகாண்டம் முதலியன முழங்காநின்றன. இன்னும் திருவருணை நித் தமிழ்வேதப் பிரமாணமுங் காட்டி நிறுத்துவாம்.

திருவாசகம்.

தச்சு விடுத்தலுந் தாமடியிட்டலு
மச்சு முறிந்த தென்றுந்தீ பற
வழிந்தன முப்புர முந்தீ பற.

கட்கரியும் பரிமாவுந் தேரு முகந் தேறாதே
யிடப முகந் தேறிய வாறெனக் கறிய வியம்பேடீ.
தடமதில்க ளவை மூன்றுந் தழலெரித்த வந்நாளி
லிடப மதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ. 14

புங்கவர்பதியொருபுங்கவங்களு
மெங்களீசானன்வெள்ளேறுந்தாமரைச்
செங்கணன்கணனூர்தியுஞ்செழுந்
துங்கவெள்விடைவலஞ்சூழ்ந்துபோதவே.

இ-ள். ஏகாதசருத்திரர்களுடைய இடபவாகனங்களும், எமது ஈசானருத்திரரது வெள்ளிய இடபவூர்தியும் தாமரைமலர்போலுஞ்சிவந்த கண்ணையுடைய விட்டுணுவினதும் பிரமனதும் வாகனங்களும் அழகிய உயர்வாய வெண்ணிறமுடைய (சிவபெருமானது) இடபவாகனத்தை வலம்வந்து போகவும். 15

உரவியபுரத்தவன்றவளவும்பலு
மிரவிகளிர்தமாறிரண்டும்பூண்டபைம்

புரவியினீட்டமும்புரந்தரன்படாம்
விரவியநான்மிருப்பிபமுமேவர.

இ-ள். வலிய உருவத்தையுடைய மாசாத்தாது வெள்ளையானையும், பன்னிருசூரியர்களுடைய பன்னிருதேர்களும், அவற்றிற் கட்டப்பட்ட பசிய குதிரைக் கூட்டங்களும், இந்திரனது முகபடாம் போர்த்த நான்கு கொம்புகளையுடைய ஐராவத யானையும் வரவும். 16

தட்பகலாமதிதனதனித்திலப்
புட்பகவிமானமும்புலவரேனையர்
விட்பகல்கெடமிளிர்விமானபுஞ்சமு
மெட்பகவிடம்பிறிதின்றியெய்தவே.

இ-ள். குளிர்மையாகிய சந்திரிகை யுடைய சந்திரனதும் குபேரனதும் முத்துவிமானமும் புட்பகவிமானமும், ஏனைய தேவர்களது, விரிந்தசூரியனது ஒளியுங் கெடும்படி விளங்கும்விமானக் கூடுகளும், எள்ளின் பிளவிடமும் வேறில்லை யென்னும்படிவரவும். 17

நாரதர்மகதியாழ்நரம்புதைவரச்
சீரதரேழிசைதெளிப்பவிஞ்சையர்
காரதராவுசேகரக்குறுஞ்சடைச்
சாரதர்வெள்ளமுந்தழங்கிச்சாரவே.

இ-ள். நாரதமுனிவர் மகதிவீணையின் நரம்புகளைத் தடவிப்பாடவும், வித்தியாதரர்கள் சிறப்பாகிய வழியையுடைய ஏழுஇசைகளையும் தெளிக்கவும், பெரிய சர்ப்பங்களையணிந்த குறியமுடியையுடைய பூதவெள்ளங்கள் ஒலிசெய்துவரவும். 18

நனிதவரெழுவர்தாபதர்நலங்கெழு
புனிதர்புள்ளடியர்கிம்புருடர்சித்தர்கள்



பனிதரவிம்பியபவளவாயருட்
கனிதரவுருகியவிரதர்கைதொழ.

இ-ள். மிக்க தவத்தையுடைய எழு முனிவர்களும், நன்மையைப் பொருந்திய பரிசுத்தரான கருடர்களும் கிம்புருடர்களும் சித்தர்களும் உடல் நடுங்கவிம்மலுற்ற பவளம்போலும் வாயினையுடையராய், மனங் கனிந்துருகும் விரதத்தினை யுடையவராய்க் கைகூப்பி வணங்கவும். 19

அங்கமாமறையொலியருணந்திசர்கைத்
துங்கவேத்திரவொலிதொண்டரார்ப்பொலி
சங்கொலிமுழவொலிதழங்கவாக்கியம்
பொங்கொலிபுணர்ப்பவாய்புதைத்தொலிப்பவே.

இ-ள். சிட்சை வியாகரண முதலிய அங்கங்களை யுடைய சிறந்த வேத முழக்கமும் கிருபை யுடைய திருநந்தி தேவரது கையின்கணுள்ள உயர்வாய பிரம்பி னொலியும், அடியவர்கள் ஆரவாரிக்கும் ஒலியும், சங்கு முழக்கமும் முரச வாத்தியத்தின் ஆரவாரமும் சத்திக்க, ஒருவரோடொருவர் பேசும் ஒலியும் அவையோடு கூட எவ்விடத்தையும் மூடி யொலிக்கும். 20

சிலைமலிவாணுதன்மனத்தின்செய்கையுங்
கலைமலிகவுசலன்கருத்துமுற்றவே
கொலைமலிமழுவலங்கொண்டவெம்பிரா
னிலைமலிகூவிளவனஞ்சென்றெய்தினான்.

இ-ள். வில் பொருந்திய ஒளிகொண்ட நெற்றியை யுடைய உமையம்மையாரின் றிருமணக் காட்சியும், நூலறிவு மிகவுள்ள கௌசல ராசனது எண்ணம் நிறைவேறவும், கொலைத்தொழின்மிக்க மழுவாயுதத்தை வலக்கரத்திற் றரித்த சிவபிரான், இலைகள் நிறைந்த வில்வ வனத்தையடைந்தனர். 21

மதிநுதலணங்குகுற்றேவன்மங்கையர்
புதுநறுஞ்சுண்ணமும்பூவுந்தூவினர்
துதிவரமங்கலச்சுடர்கைசுற்றின
ரெதிரெதிர்புகுந்துபல்லாண்டிசைத்தனர்.

இ-ள். அர்த்த சந்திரனைப்போன்ற நெற்றியையுடைய உமையம்மையாரது குற்றேவலைச் செய்யும் பெண்கள், புதிய வாசனைகொண்ட சுண்ணச் சாந்தையும் புட்பங்களையுஞ் சிந்தினர், துதிகள்பாட மங்கலதீபங்களைக் கையாலெடுத்து ஆலத்தி சுற்றினர், முன்னர் முன்னராகச் சென்று பல்லாண்டு பாடினர். 22

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தொல்விடையிழிந்துவிண்ணந்தொடுமணிமண்டபத்தின்
மல்லல்வாலுழைமடங்கலாசனத்திருந்தான்வள்ளல்
செல்கெழுபூவைவண்ணன்றிருமணப்பந்தரின்கி
ழொல்லையிலேவலாற்றற்குரியரையுனுற்றிநின்றான்.

இ-ள். அருள் வள்ளலாராய சிவபெருமான் பழைய இடபத்தினின்றும் இறங்கி, ஆகாயத்தை யளாவிய அழகிய மண்டபத்தின்கணுள்ள, வலியவெண்மையான உரோமத்தை யுடைய சிங்காசனத்தின்கணிருந்தனர், மேகத்தைப் போன்ற திருமேனியை யுடைய விட்டுணு திருமணப் பந்தரின் இடத்து விரைவிற் குற்றேவல் செய்தற்கு உரியாரைச் செலுத்தி நின்றனர். 23

சேயரிபரந்தபுன்கட்சிலதியர்விரைவிற்போடு
மாயிரும்புவனமுற்றும்வயிறுவாய்ந்தயர்த்தகன்னித்
தாயருந்தவங்கனிந்ததையல்சிறடியிற்றாழ்ந்து
தூயலர்தூயினர்சோபனஞ்சொல்லித்தொழுதுநின்றார்.



இ-ள். செவ்வரி பரந்த சிறிய நோக்குடைய ஏவற்றோழியர்கள் விரைவிற் சென்று, கரிய பெரிய பூமி முழுவதையும் தன்னிடத் தடக்கித் தோற்றுவிக்கும் கன்னிப் பருவமுடைய மாதாவும் அரியதவத்தின் முதிர்ந்தவருமான உமையம்மையாரது, சிறிய பாதங்களில் வீழ்ந்து வணங்கி, சுத்தமாகிய புட்பங்களைச் சொரிந்தார், மங்களவாழ்த்துக்களைக் கூறி வணங்கிநின்றனர். 24

கொண்டவோகையிலெருத்தங்கோட்டுவாண்முகமுஞ்செவ்வாய்
விண்டபுன்னகைமுகிழ்ப்பும்வேட்கையுங்கருணைதாங்கு
கெண்டையங்கண்ணுமுள்ளேகிடந்தபேரன்புந்தன்பா
லண்டர்கோன்போந்தகேள்விபார்வமுந்தோன்றநின்றாள்

இ-ள். பார்வதிதேவியார், தாம்கொண்ட பெருமகிழ்வினாலே பிடரைவளைத்த ஒள்ளிய முகமும், சிவந்த வாய்திறக்கப்பெற்ற குறுநகைத் தோற்றமும், விருப்பும் அருளைத் தரித்த கயல்மீன்போலுங் கண்களும், மனத்துட் பதிந்த பெரிய அன்பும், தன்னிடத்துத் தேவர்க்குத் தலைவராகிய சிவ்பெருமான் தேடிவந்தனர் என்னும் ஆசையும் கண்டோர் யாவருக்கும் தோன்றும்படி நின்றார். 25

அன்னையாடுவநீராட்டினாரணிவனவணிந்தார்
துன்னலர்மாலைமற்றுஞ்சூடுவசூட்டினார்செம்
பொன்னிறமாதர்மாதுபூசுவபூசினார்பைங்
கன்னலிற்கனிமென்சொல்லாள்கமழ்வனகமழச்செய்தார்.

இ-ள். (தோழியர்) பசிய கரும்பினும் மிருதுவான கனிந்தசொற்களையுடைய பார்வதிதேவியார் ஆகிய எமது தாயார்க்கு அபிடேகிப்பனவற்றை யபிடேகித்தார், அணிவனவற்றை யணிந்தனர் நெருங்கிய பூக்களாற் கட்டப்பட்ட மாலைகள் முதலியன சூட்டினர், பூசுவன வற்றைப் பூசினர், வாசனைப் பொருள்களை நாற்றஞ் செய்தனர். 26

மாககன்னியருந்தெய்வவரையரமகளிர் தாமு
நாககன்னியரும்வீணைநரம்புளர்நங்கைமாரும்
போககன்னியருமேனைப்புனங்கெழுமணங்கனரும்
யேர்ககன்னிகையைச்சூழவலம்புரியொண்சங்கொத்தாள்.

இ-ள். தேவப் பெண்களும் தெய்வத்தன்மை கொண்டமலையர மகளிரும், நாகமாதர்களும், கந்தருவப் பெண்களும், போக பூமியின்க ணுள்ள பெண்களும், மற்றைய தினைப்புனத்திலுள்ள தெய்வமகளிரும், தவஞ்செய்த உமை யம்மையாரைச் சுற்றி யிருத்தலால் வலம்புரியைப் போன்றிருந்தனர் அம்மையார். 27

இரதிமேனகையரம்பைதிலோத்தமையிந்திராணி
யருமுருப்பசிபணித்தவரிசையிற்பணிகளாற்றத்
திருமகள்கலைமடந்தையிருபுடைசெங்கைநல்கப்
பரையொருகுமரியாகிப்பயப்பயவடிபெயர்த்தாள்.

இ-ள். இரதி, மேனகை, அரம்பை, திலோர்த்தமை, இந்திராணி அரிய ஊர்வசி, கட்டளையிட்ட முறைமையின்படி ஏவல்களைச்செய்யவும், இலக்குமி தேவியும் சரசுவதிதேவியும் முறையே வலப்பக்க இடப்பக் கங்களி னின்று கரங்கொடுக்கவும், பராசத்தியானவர் ஒரு கன்னிப் பெண்ணாய் நின்று மெல்லமெல்ல அடிபெயர்த்துவைத்தனர். 28

நொய்யபஞ்சிடச்சிவந்துபரிவுற்றுநொந்தயாமேல்
வெய்யகன்மிதிக்கலாற்றேமென்றுநீர்வெருவலையன்
கையதுபடும்பேறென்னக்கருதுகவென்றுபையச்
செய்யதாட்கறைதலேபோற்சிலம்பொலிபுலம்புமாதோ.

இ-ள். நுண்ணிதாகிய பஞ்சியூட்டுதலாற் சிவப்புற்று வருத்தங் கொண்டு துன்பப்பட்ட யாங்கள், இனிமேற் கொடிய கல்லின்மேல் மிதித்தற்குச் சகிக்கமாட்டேம் என்று நீவிர் அஞ்சற்க, அங்ஙனம் நடந் தால் சிவபெருமானது திருக்கரம் தீண்டும் பெரும்பேறு உண்டாகு



மென்று நினைக்கக் கடவீர் என, மெதுவாகச் சிவந்த திருப்பாதங்களுக் குச் சொல்வதுபோல, சிலம்புகளின் சத்தஞ் சத்திக்கும். 29

பொற்றசும்பிணைமென்கொங்கைப்பொறைசுமந்தொழிந்துமாய்குஞ்
சிற்றிடையிருந்துபாதுகாத்தனம்விரைவிற்சென்மி
னெற்றைவெண்குழையோன்பாற்செல்லுகளதாட்கமலங்கேட்ப
மற்றவைபுகலுமாபோன்மணிக்கலையொலிப்பமன்றே.

இ-ள். பொன்னலாகிய கலசம்போன்ற இரண்டு மிருதுவாகிய தனங்கள் ஆகிய பாரத்தைச் சுமந்து, அதனாற் றேய்ந்துவருந்தும் சிறிய இடையின்மீது இருந்து யாங்கள் பாதுகாத்தோம், சீக்கிரம் செல்வீராக என்று, வெள்ளிய சங்கக்குண்டலத்தை யுடைய சிவபெருமானை நோக் கிச்செல்லும் இரு திருவடிகளாகிய தாமரைமலர்கள் கேட்கும்படி தாம் எடுத்துச் சொல்லுமாறுபோல அழகிய மேகலைமுதலிய ஆபரணங்கள் ஒலிக்கா நிற்கும்.

பெண்கள் இடையிலே தரிப்பன காஞ்சி, மேகலை, கலாபம், பரு மம், விரிசிகைஎனப் பலவகைப்படலான் ஈண்டுப்பன்மையாற் கூறினர். அவற்றுட் காஞ்சி - எண்கோவைமணி. மேகலையாவது - எழுகோவை மணியாகும். கலாபம் பதினாறு கோவைமணி. பருமம் பதினெட்டுக் கோவைமணி. விரிசிகை யென்பது பருமுத்தக்கோவை முப்பத்திரண் டாற் செய்யப்பட்டது. இது நிலநிறங்கொண்ட பூத்தொழிலை யுடைய நீலச்சாத குடையின்மீது தரிப்பது. மேற்கோள் வருமாறு:—

சிலப்பதிகாரம்-கடலாடுகாதை.

பிறங்கிய முத்தரை முப்பத் திருகாழ்
நிறங் கிளர்பூந்துகி னீர்மையி னுடீஇ. என்றதனுற்காண்க.

"குறங்கு செறிவோடு கொய்யகங்கார - நிறங்கிளர் பூந்துகினீர் மையி னுடீஇப் - பிறங்கிய முத்தரை முப்பத்திருகாழ் - அமிழ்ந்த தமை

வா வல்குற் கணிந்தாள்" என்னுஞ் சங்கநூல் கொண்டு வேறுறுப்பின்
அணியெனக் கோடலு மொன்று. 30

தூய்பகைதீண்டினெம்மான்கைதொடப்பெறுதுமென்று
வாய்திறந்தறைதல்போல வரிவளைமுரலத்தூது
போயிறைசெவ்விநோக்கிமீள்குவாரெனமுதலேபோ
லாயிசையோதிபோதியெழுந்தெழுந்தளிகளாட.

இ-ள். சத்தமாகிய (இறைவியின்) திருக்கரத்தைத் தீண்டினேம், இனி எமது இறைவனது திருக்கரங்களையுந் தொடப் பெறுவேமென்று வாய்திறந்து சொல்லுதல்போல வரிவளைகள் சத்திக்க தூதாகச்சென்று பெருமானது காலநிலையையுணர்ந்து, திரும்பும்படி புறப்படுந் தன்மைபோல ஆராயப்பட்ட காமரப் பண்ணைப்பாடிப் பாடி யெழுந்து வண்டுகள் ஆடவும்.

வரிவளை என்வே, மாணிக்கவளை, முத்தவளை, சூடகம், பரியகம் வெள்ளிவளை, பவளப் பல்வளை, நவரத்தினவளை, சங்கவளை என்னும் இவைகள் கொள்ளப்படும்.

வளையாபதி.

புரைதபு சித்திரப் பொன்வளை போக்கி
விரிமவிர் பொன்மணி யெல்லென் கடகம்
பரியகம் வால்வளை பாதத்தில் பவழ
மரிமயிர் முன்கைச் சுமைய வணிந்தாள்.

என்றதனுற் காண்க. 31

நீற்றினன்சீர்த்திதோய்ந்தாய்காண்குதுநின்முனென்னுச்
சாற்றுதல்போலவொன்கண்குழைமுகந்தளவிமீள
வேற்றிமையவர்கைகூப்பமெய்திகழிறைவியுள்ளே
போற்றினள்பண்டுபோலோர்புடையில்வீற்றிருந்தாளன்னை.



இ-ள். விபூதியை யணிந்த எம்மிறைவனது புகழெல்லாம் பொருந்திபோய், நினது முன்னழகைப் பார்ப்பபமென்றுசொல்லுதல்போல (தேவியாரது) ஒள்ளிய திருக்கண்கள் (சிவபெருமானது) குண்டலம் பொருந்திய திருமுகத்தைத் தடவி மீண்டுவர, பார்வதிதேவியார் ஏனைய தேவகூட்டங்கள் எல்லாம் கைகூப்பி வணங்கத் திருமணச்சாலையை யடைந்து நமது தலைவராகிய சிவபெருமானைத் தம் மனத்தினுள்ளே துதித்தனர், முன்னர்ப்போல அவரின் ஓர் பக்கத்தில் வீற்றிருந்தனர் பராசத்தியம்மையார். 32

அங்கியுந்தூமமுஞ்சேயலரியும்புயலும்போலும்
பைங்குவளையுஞ்சிவந்துபசிந்தொளிர்மணிகளுஞ்சூழ்
கொங்கவிழ்தருவும்பைம்பூங்கொடியுமோருழிக்கண்டாங்கு
திங்களங்கண்ணியோனும்தவியுமுடனிருந்தார்.

இ-ள். அக்கினியும் புகையும் சிவந்த சூரியனும் மேகமும் போலவும், பசிய குவளை மலரும் சிவந்து பசுமைகொண்டு விளங்கும் இரத்தினங்களும், சூழ்ந்த வாசனைபரந்த மரமும் பூங்கொடியும் ஓரிடத்திற் காணப்பட்டாற் போலவும், பிறைச் சந்திரனை தரித்த சிவபெருமானும் பரமேசுவரியும் ஓரிடத்தில் வீற்றிருந்தனர். 33

உறைபிருவோருமொவ்வாவுவகையங்கடலினுப்பண்
முறையெழிலமுதுகண்களான்முகந்துண்டார்முற்று
மறைகழற்பிரானுமெங்களம்மையும்புரிவிநோத
மறைகளுமுணராவின்னும்யாவர்மற்றுணரவல்லார்.

இ-ள். பரமேசனும் பார்வதியும் ஒருங்கு இருந்த மகிழ்ச்சியாகிய கடலின் நடுவே முறையாக எழுந்த அமிர்தத்தைத் தமது கண்களினுல் மொண்டு ஆங்குநின்றவர் யாவரும் பருகினர், ஒலிக்கின்ற வீரக்கழலைய

ணிந்த சிவபெருமானும எமது இறைவியும் செய்யும் திருவிளையாடல்களை வேதங்களும் இன்னும் அறியமாட்டா, அவ்வாறுபின் எவர்தாம் அறியவல்லவர். 34

தாமரைக்கிழவன்வேதச்சடங்குசெந்தழலினிறைறக்
காமர்பூங்கொடிசெங்கைப்பூங்காந்தளுங்கடுக்கைமார்பன்
மாமலர்த்தடங்கைச்செந்தாமரையையுமடுக்கிமாயன்
பூமலர்ச்சிரகநீர்பெய்தடிமலர்போற்றிநின்றான்.

இ-ள். பிரமதேவர் வேதவிதிப்படி திருமணச் சடங்கைச் செவ்விய அக்கினிகொண்டு செய்ய, அழகிய பூங்கொடிபோன்ற உமாதேவியாரது சிவந்த திருக்கரமாகிய காந்தள் மலரையும், கொன்றை மாலையணிந்த மார்பினையுடைய சிவபெருமானது, சிறந்த பரந்த நீண்ட திருக்கரமாகிய தாமரை மலரையுமொன்று சேர்த்து, திருமால், பொலிவாகிய புட்பங்களையுடைய கரத்திங்கணுள்ள நீரைவார்த்துத், தாமரை மலர்போன்ற பாதங்களைத் துதித்து நின்றார். 35

வேறு சந்தவிருத்தம்.

வான்முழவைந்துமதிர்ந்தனவால்வளைபொங்கிமுழங்கின
நான்மறையங்கநவின்றனநாண்மலரன்பர்கைசிந்தின
மோனிகள்சிந்தைகனிந்தனமூவுலகுங்களிகொண்டன
வானுயரந்தணனம்பிகையாமிவர்மன்றல்சிறந்தது.

இ-ள். தேவ துந்துபிகள் ஐந்து மொலித்தன, வெள்ளிய சங்குகள் மிக்கு முழங்கின, நான்கு வேதங்களும் வேதாங்கங்களும் ஒலித்தன, அன்பருடைய திருக்கைகள் அன்றலர்ந்த புட்பங்கள் சொரிந்தன, மோன நிலையையுடைய முனிவர்களுடைய மனங்கள் கனிவுற்றன. திரிலோகமுங் களிப்புக்கொண்டன. மேலான உயர்வையுடைய பிராமணத் தெய்வமாகிய சிவபெருமானதும் பார்வதிதேவியாரதும் திருமணஞ் சிறப்புற்றது. 36



ளம்பெருமானையுமன்றவிலெம்பெருமாட்டியையுந்தொழ
நம்பெருமாதவநன்றிதுநன்றிதுநாமுநவின்றெதிர்
வம்பலர்மாரிவழங்கினர்மந்திரமோதிவணங்கின
ரும்பருமாதவரும்பிறரும்பெறுமோகைமலிர்ந்தது.

இ-ள். தேவர்களும் முனிவர்களும் பிறரும் இத்திருமணக் காலத்திலே, எமது பெருமானையும் பெருமாட்டியாரையும் வணங்க, நாங்கள்செய்த பெரியதவம் நல்லது நல்லது என்று. சகத்திர நாமங்களை எதிரிற்சொல்லி வாசனை பரந்த புட்பமழையைப் பொழிந்தார், மந்திரங்களைச்சொல்லி வணங்கினர். யாவர்க்கும் மகிழ்ச்சி பொங்கிற்று. 37

நன்னெடுமாலனும்வேதனுநாரதருந்தவரேழவருங்
கன்னியருந்தவநீள்பெருங்கௌசலகோமகனுந்தொழ
மன்னியகாட்சிவழங்கினனமால்வடிவாகியமாதுமை
முன்னொடுவாறுமுயன்றனண்மூலமுமீறுமிலாதவள்.

இ-ள். நல்ல நீண்ட வடிவத்தையுடைய திருமாலும் பிரமனும், நாரதமுனிவரும் மற்றையசப்தமுனிவரும், கன்னிப்பெண்களும், தவந் தின்மிக்க பெருமையையுடைய கௌசல சோராசனும் தரிசித்து வணங்கும்படி நிலைபெற்ற திருமணக் கோலத்தைக் காட்டியருளினர் திருமாலினுருவாகிய உமாபிராட்டியார் முதலும் முடிவும் இல்லாதவரானமையால், நினைத்ததைச் செய்தற்குத் தொடங்கினள். 38

என்னுடையன்னையுமெந்தையுநின்னணநன்னரின்மாமண
மன்னினர்பால்வழிபாடுகளாற்றிவரம்பெறுமன்னவன்
கன்னவிலுந்திரடோளினன்கௌசலன்மாசில்வளர்பெற
முன்னகர்கண்டதுகேண்மினெனத்துணர்குதன்மொழிந்தனன்.

இ-ள். என்னுடைய தாயாகிய பார்வதிதேவியாரும் தந்தையாராகிய பரமேசுரனும், இவ்வாறு நன்மையாகப் பெரிய திருமணத்திற் பொருந்தினர், அவர்களிடத்து வழிபாடுகள் செய்து வரம்பெற்ற மன்னவனாகிய கல்லை யுவமானமாகச் சொல்லப்படுகின்ற திரண்ட புயங்களையுடைய கௌசலசோராசன், குற்றமில்லாத செல்வத்தைப் பெறும்படி முன்னர் நகரஞ்செய்தது கேட்பீராகவென்று பழம்பொருளையறிந்த சூதமுனிவர் கூறத்தொடங்கினர். 39

திருமணச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள்—462.

---

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

பன்னிரண்டாவது,

# நகர்செய் சருக்கம்.

கலிவிருத்தம்.

அந்தநீரெமையாளுடையாண்மணப்
பந்தரிற்றுளவோன்முதற்பண்ணவர்
தந்தமக்கருணல்கிமண்டாங்குகோன்
சிந்தையார்வந்தெரிந்துகண்சேர்த்தினன்

இ-ள். அந்தக்காலத்தில் எம்மை யடிமையாகவுடைய உமாபாகனுடையாரது திருமணப்பந்தரிலே விட்டுணுமுதலிய தேவர்கள் யாவர்க்கும் கிருபையைப் புரிந்து, பூமியைத் தாங்குகின்ற கௌசல சோராசனது மனவிருப்பத்தை யறிந்து அவன்மீது திருக்கண்வைத் தருளினார். (சிவ பெருமான்.) 1

ஆயகாலையரசனெம்மண்ணறன்
சேய்த்தாமரைச்சீரடிதாழ்ந்தெழீஇத்
தூயநான்மறைதுதித்துதிப்பரன்
நேயம்யாதுரையென்றனனீறிலான்.

இ-ள். அவ்வாறாகிய சமயத்திலே கௌசலசோர மன்னவன் எமது கடவுளாகிய சிவபெருமானது சிவந்த தாமரை மலரையொக்கும் சிறந்த பாதங்களை வணங்கியெழுந்து, பரிசுத்தமுடைய நான்குவேதங்களைக் கொண்டு துதிக்க, ஒப்பில்லாதவராகிய சிவபெருமான் அரசனை நோக்கி உன்விருப்பென்ன கூறுநீயென்றருளினார். 2

சீர்மணஞ்செய்சிவபுரமீதிந்தப்
பார்வரும்பல்லுயிரும்பணிந்துய்ம்மா
றோரவளம்பதியாற்றவுவந்தருள்
கூர்கெனப்புரிகென்றனன்கேரதிலான்.

இ-ள். திருமணஞ்செய்த சிவபுரமாகிய இந்தத் தலத்திலே, பூமியின்கண்ணுள்ள பலஆன்மாக்களும் வணங்கியுய்யும்படி, ஒருவளப்பத்தையுடைய நகரத்தைச் செய்வதற்குத் தேவரீர் மகிழ் சிறந்தருள்க என்று பிரார்த்தித்தான், அதற்குச் சிவபெருமானும் அவ்வாறு செய்க எனஅருளினர். 3

காட்சியும்வரனும்பெற்றகாவல
னாட்சிறந்துநகரஞ்செயிற்றுவா
னாட்சியாந்தன்னளிநகர்க்கோலையுஞ்
சூட்சியொற்றுந்துணைவரப்போக்கினான்.

இ-ள். திருமணக்கோல தரிசனமும் வரமும்பெற்ற கௌசலசேரன், சுபமுகூர்த்தங்கொண்டு ஓர்நகரத்தைச் செய்யும்படி, தனது ஆளுகைக் குட்பட்ட அன்புடைய நகரத்திற்குத் திருமுகமும், உபாயத்தில் வல்ல ஒற்றனொருவனையுந் துணையாகச்செலுத்தினான்.

வரம் - வரன் எனப் போலியாய் நின்றது. காவலன் - காத்தலில் வல்லவன். நகரீ என்னும் வடமொழி நகரம் எனத் திரிந்து நின்றது. மலைபோன்ற மாடமாளிகைகளையும் செய்குன்றுகளையுமுடையது எனத் தாதுப்பொருள் கொள்க. ஓலை—திருமுகம். கடிதம். 4

ஒற்றுடன்சென்மடங்கலையுள்ளுணர்ந்
துற்றதோதத்துணைவரொண்மாநிதி
முற்றுந்தானைமுதலகமன்றொய்யெனக்
கொற்றவற்பணிந்தொன்றெனக்கூடினார்.



இ-ள். தூதுவரோடு அடைந்த அத்திருமுகத்தின்கருத்தையறிந்து, தக்கசூழ்ச்சிகளைச் சொல்கின்ற மந்திரி மார்களும், மேலான சிறந்த திரவியங்கள் முழுவதும் சேனைகள் முதலாயினவும், அரசனிடம்சென்று விரைவிற் கண்டு அரசனைப் பணிந்து ஒருங்கு சேர்ந்தார். 5

தேரும்யானையுமாவுந்திறற்படை
யோருந்தேர்ச்சித்துணைவருமொக்கலும்
பாருமுய்யும்படிமன்னன்வல்வினை
யீருமெந்தைகுற்றேவலனாயினான்.

இ-ள். இரதங்களும் யானைகளும் குதிரைகளும் வலிய சேனைகளும் மந்திரிமார்களும் சுற்றத்தார்களும் உலகத்தவர்களும், உய்யுமாறு கௌசலராசன் வலிய தீவினையைப் போக்குகின்ற எமது பரசிவனது குற்றேவற்காரனானான்.

உலகத்தார் யாவரும் உய்யும்படி இந்நகரத்தைப் புரிவித்தலால் கௌசலேசரமன்னன் சிவபெருமானது ஏவலாளாக நின்றான் என்பது கருத்து. பார்—பார்க்கப் படுவது, பருமையை யுடையது, பூமி மன்னன்—பெருமையையுடையவன். 6

கூறுமோர்திசைக்கைந்துகுரோசங்கொண்
டேறினான்குதிசையுமியம்பிடின்
மாறிலபுண்ணியமாத்தலமாயிடை
யூறில்பலகலையாண்மதித்தோன்றலே.

இ-ள். சொல்லப்பட்ட ஒவ்வொரு திசைகளுக்கும் ஐவைந்து குரோசதூரம் கொண்டு, முடிவில்லாத நான்கு திக்குகளிலுள்ள இடங்களாயுள்ளன சொல்லுமிடத்துக் குற்றமில்லாத பெரிய புண்ணியதலமாகும். அவ்விடத்துப் பிழையில்லாத பலகலைகளெல்லாம் கற்றுணர்ந்த அறிவினையுடைய சந்திரகுலத் தோன்றலாகிய கௌசலராசனானவன்.

ஒவ்வோர் திசைக்கும் ஐந்து குரோசமாக நான்கு திசைகளுக்கும் இருபது குரோசதூரம் புண்ணியதலமாகும். குரோசம் - கூப்பிடு தூரம்.

கன்னிகாரவனமுங் கனங்குழை
மன்னும்வில்வவனமுமற்றேனையும்
பொன்னினீணகர்போலப்புரிவித்தான்
றன்னதன்புதழைத்துவிளங்கவே.

இ-ள். (சிவபெருமான் வீற்றிருக்கின்ற) கன்னிகார வனத்தையும், உமாதேவியார் எழுந்தருளி யிருக்கின்ற வில்வ வனத்தையும் மற்றைய இடங்களையும் நீண்ட சுவர்க்கலோகம் போலச் செய்தான், தன்னுடைய அன்புமிகுந்து விளங்கும்படி. 8

நகரமெங்கணுமந்தணரன்குறப்
புகரினூறுபொருவில்கிராமமு
நிகரில்வேள்விகளாற்றிடநீண்மறைப்
பகர்வீராறுபள்ளியுங்கண்டனன்.

இ-ள். நகரங்களெவ்விடத்தும் ஆதிசைவப் பிராமணர் நன்மை பொருந்த, குற்றமில்லாத உயர்வுடைய நூறு கிராமங்களையும், ஒப்பில்லாத யாகங்கள் செய்தற்காகவும் நீண்ட வேதங்கள் அத்தியயனஞ் செய்தற்காகவும், பன்னிரு ஊருஞ்செய்தார். 9

நன்னரிற்றிருநாலிருமங்கலம்
பொன்னகர்க்கிணைபொற்பக்குயிற்றியே
தன்னிகர்த்தகுறியைத்தலந்தொறு
மன்னுவித்தடிபோற்றினன்மன்னவன்.

இ-ள். நன்மையுடன் அழகிய எட்டு மங்கலங்களை, சுவர்க்கலோகத்திருக்குச் சமான மாகும்படி செய்து, தனக்குத்தானே யொப்பாயுள்ள



சிவலிங்கத்தை எட்டுமங்கலங்களோறும் நிலைபெறத் தாபித்துத் திருவடிகளைப் பூசித்துத் துதித்தான் அரசன். 10

ஆங்கவற்றுளளிமுரன்றுய்பிழி
தேங்கமழ்ந்துண்டுதேக்கும்பொன்னுண்மலர்க்
கோங்குநீள்வனத்தின்குணபாற்றிசைப்
பாங்கர்வைகுமோர்பண்புடைத்தொண்கிரி.

இ-ள். அவற்றுள், வண்டுகளொலித்து, தேன்மணம் வீசி, மது வுண்டு தேக்கிய அழகிய அன்றலர்ந்த புட்பங்களை யுடைய நீண்ட கோங்க வனத்தின் கீழ்த்திசையின் பக்கத்தில் ஓர் அழகிய மலையுண்டு. 11

போதவிழ்ந்தபெண்ணைப்பொலன்றார்ப்புய
னாதரங்கொண்டருச்சித்திறைஞ்சலாற்
றூதுகுந்தண்மலர்த்தடஞ்சோலைசூழ்
கோதைமங்கலமென்பர்சொற்கூறினர்.

இ-ள். விரிந்த பனம்பூவாற் செய்யப்பட்ட பொன்மயமான மாலையையணிந்த மார்பினையுடைய கௌசலசோன் அருச்சித்து வணங்குதலால், மகரந்தம்பொழியும் குளிர்ந்த மலர்களையுடைய சோலைகளாற்சூழப்பட்ட கோதை மங்கலமென்பர் சொற்பாகு பாடுணர்ந்த பெரியோர்கள்.

தொக்ககேழற்சுரும்பினுதக்கினீர்
நக்கசாமந்திந்தனதீர்க்கத்தின்
மிக்கநீள்குறிவெவ்வெரிபோற்றலா
லக்கினேயனென்றோதுபவாய்ந்தவர்

இ-ள். தொகுதி கொண்ட வராக மலைக்கு வடக்கே, நீர்மிக்கு விளங்கும் சாமந்தியென்னுஞ் சிறந்த தீர்த்தக் கரையின்கண் மிருந்து

விளங்கும் நீண்ட சிவலிங்கமானது வெப்பமுடைய அக்கினி தேவனாற் பூசிக்கப்படுதலால் ஆக்கினேய லிங்கம் என்று கூறுவர் உண்மைப்பொருள் கொண்டவர்.

மருந்துகளும், மணி, பொன், சந்தனம், தேன்முதலிய வளங்களும் தொக்கதன்மையால் "தொக்க கேழற்சுரும்பு" என்றார் - குறி என்பது உபசாரமொழி. 13

மாதவந்தனின்மாமறையோர்குழீஇ
யோதலின்புற்றெருங்குணர்ந்தோதலிற்
போதலர்ந்துபொதுவயல்சூழ்சதுர்
வேதமங்கலமென்பர்சொன்மேதையோர்.

இ-ள். பெரிய தவத்தினையுடைய சிறந்த அந்தணர் ஒருங்குசேர்ந்து ஓதுதலில் விருப்புக்கொண்டு எல்லாவற்றையும் அறிந்து அத்தியயனஞ் செய்தலால், புட்பங்கள் மலர்ந்து வயல்கள் சூழும் சதுர்வேத மங்கலம் என்று கூறுவர் பொருளையறிந்த புலவர். 14

பௌவநேர்நன்னதிக்குடபால்வைகு
மெவ்வமில்குறியெல்லவர்வந்தனை
செவ்விதிற்புரியச்சிறந்தோங்குவ
தவ்வியத்தசோதிப்பெயரானரோ.

இ-ள். கடலை நிகர்த்த நல்ல பொருனை நதிக்கு மேற்குப் பக்கத்தில் இருக்கும் குற்றமில்லாத சிவலிங்கமானது, சூரியர்கள் வந்து பூசனையை அன்புடனே செய்தமையால், அவ்வியத்த சோதிலிங்கம் என்னும் பெயரினால் விளக்கும். 15

விரவியங்கல்மேருவலங்கொளிம்
புரவிமங்கலத்தேர்போற்றவ்விடன்



பரவிமங்கலம்பாடகராடல்கூ
ரிரவிமங்கலமென்றுவிளங்குமே.

இ-ள். பனிகலந்து விளங்கும் மேருமலையைச் சுற்றியோடுங் குதிரைகட்டப்பட்ட மங்கலவடிவான இரதத்தையுடைய சூரியர்கள் துதித்தலால் அந்த இடம், பாடகர் மங்கலமாகப்பாடி யாடலைச்செய்து துதிக்கின்ற இரவிமங்கலம் என்று கூறுவர் அறிவுடையோர். 16

விமலைவில்வவனத்தநின்மேற்றிசை
கமழும்பானதிதீர்த்தத்திற்காமர்தெள்
ளமுதலிங்கமதுவைகுமவ்விட
னமுதமங்கலமென்பரறிஞரே.

இ-ள். நிருமலையாகிய உமாபிராட்டி யெழுந்தருளி யிருக்கின்ற கூவிள வனத்திற்கு மேற்குத் திசையில், வாசனை வீசுகின்ற பால்நதி தீர்த்தத்தின் கரையில் அழகிய தெளிந்த அமுதலிங்கம் இருக்கும். அதனால் அவ்விடத்தை அமுத மங்கலமென்பர் புலவர். 17

தரவு கொச்சகக்கலிப்பா.

மங்கலஞ்சூழ்தலினட்டமங்கலக்கேத்திரமென்னுஞ்
சங்கரனைவழிபற்றனிவெண்குடைநிருபன்றருதலினாற்
கங்கைபுணர்காசிநிகர்கௌசலமாபுரமென்றும்
பொங்குபெரும்பெயர்புனைந்துபொலிந்ததுபுண்ணியநகரம்.

இ-ள். அந்தப் புண்ணியத் தலமானது எட்டு மங்கலவூர்கள் நிறைதலின் அட்டமங்கலக்ஷேத்திரம் எனப்படும். சிவபெருமானது ஆஞ்ஞைப்படி ஒப்பற்ற வெண்கொற்றக் குடையையுடைய கௌசலேசமன்னவன் செய்தலால், கங்காநதி பொருந்திய காசியைநிகர்த்த கௌசலமாபுரம் எனவும் மேலானபெரியபெயரைத்தரித்து விளங்கிற்று. 18

பையணைமால்கிரிபிரமகிரிசிவபூதரஞ்சத்தி
சையமுயரியகருமீவரையெனுந்தென்கயிலையங்
குய்யபரையோர்கதிசண்முகநதிசூழ்தருந்தொடர்பாற்
செய்யகவுசலபுரமேசிவபுரமென்பதுந்திண்ணம்.

இ-ள். சர்ப்பசயனத்தையுடைய நாராயணமலையும், பிரமமலையும் சிவமலையும் சத்திமலையும், உயர்வாய வாரககிரியும் தக்கிணகயிலாயமும், சுத்தமாகிய சத்தி தீர்த்தமும் சண்முகநதியும் ஆகியஇவைகள் சூழ்ந்திருக்கும் இயைபினால் அழகிய கௌசல புரமானது சிவபுரமென்பது சத்தியமாகும்.

பை-ஆகுபெயர். பை—படம். பூதரம் பூ—பூமியை, தரம்-தரிப்பது. வரை-கீறு. அது உவமையாகுபெயராய்க்கணுவுக்குஆகி, அது சினையாகு பெயராய் மூங்கிலுக் காகி, அதுதானியாகுபெயராய் மூங்கில் உண்டதற்கு இடமாகிய மலைக்காதலின் மும்மடியாகுபெயர். சிலர் நான் மடியாகு பெயரென்ப. 19

கதிர்மணிமாளிகைநெருங்காமரெயிலுடுத்தோங்கு
பதியுமாபதிதிருவிழாப்பொலியும்படைகுடிசூழ்
மதியமைச்சுமுதலியமாண்புறமகவுக்கரசுநல்கி
யதிர்கழற்காலரசரெமையாளுடையான்கழலடைந்தார்.

இ-ள். அந்நகரத்தில் ஒளிபொருந்திய இரத்தினங்கள் குயிற்றிச் செய்யப்பட்ட மாளிகைகள் நிறைந்து விளங்கும், அழகிய மதில்கள் சூழ்ந்துதோன்றும், உமாதேவியாரின் நாயகரான சிவபெருமானது திருவிழாக்கள் பொலிந்துவிளங்கும், படை குடிசூழ் அமைச்சர்முதலிய அரசமாட்சிகள் பொருந்த ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த காலையுடைய சோராசர்கள் தமதுமைந்தர்க்கு அரசாட்சியைக் கொடுத்து எம்மை அடிமைக்கொண்ட சிவபெருமானது திருவடிப்பேறாகிய அத்துவிதமுத்தியை உடைந்தனர். 20



உமா என்னும் வடமொழிக்கு, உ—வேண்டாம், மா—அம்மா என்று உறுப்புப் பொருள்கூறுவர். மலையரசன் மகளாகத்தோன்றிய இறைவி யைந்தாம்வயதில் அரனைத் திருமணஞ்செய்ய வுன்னித்தவஞ் செய்ய முயற்சிகொண்டபோது, தந்தையான மலையரசன், கின்றுடல் பொறாது. ஆதலால் "அம்மையே தவஞ்செய்யவேண்டாம்" என்று தடுத்தமையால் வந்தபெயர். அன்றி-உ-ம்-அ-என்னும் வியட்டிப் பிரணவங்கள் சேர்ந்து உமா என்றிருத்தலிற் பிரணவ மாகவும், பிரணவ வடிவாகவும், பிரணவப்பொருளாகவும் இருப்பவள் உமையென்று கூறுதலு மொன்று.

"படைகுடி கூழமைச்சு நட்பரணாறு
முடையா னரசரு ளேறு"

என்னுந் திருக்குறட் செய்யுளுமது கூறிற்று. இறைமாட்சி யென்னும் அதிகாரத்தான் அவ்வியல் எல்லாமுணர்க. முதலிய என்றமை யானே நட்பு, அரண் என்பனவும்,

ஐம்பெருங்குழுவுள் அமைச்சரோடு கூறப்பட்ட, புரோகிதர், சேனாபதியர், தூதர், சாரணர் என்பவரும்,

எண்வகைத் துணைவர் ஆகிய கரணத் தியல்வோர், கருமவதிகாரர், சுற்றத்தார், கடைகாப்பாளர், நகர மாக்கள், படைத்தலைவர், இவுளி மறவர், யானைவீரர் என்பாரும்,

ஐவகையுறுதிச் சுற்றமாகிய நட்பாளர், அந்தணர், படைத் தொழிலாளர், மருத்துவக் கலைஞர், நிமித்திகப் புலவர்என்பாருங்கொள்க.

மறைபயின்மாதவர்வில்வவனஞ்சிவமாமலைநாப்ப
ணிறைவனாறுமுகன்றிருவாவினன்குடியென்றொருதலமற்
றறைபிணுங்கேட்பினுமுத்தியடைவிக்குமதனாற்றல்
சிறிதறிந்தவாறுசொல்கேமென்றனன்செந்நெறிச்சூதன்.

இ-ள். வேதங்களை யத்தியயனஞ் செய்கின்றமுனிவர்களே! வில்வவனம் பெரிய சிவமலை என்பவற்றிற்கு நடுவே, எமதுகடவுளாகிய அறுமுகப் பெருமான் எழுந்தருளி யிருக்கின்ற திருவாவினன்குடி என்று ஒருதலமுளது. அது தன்கண் வசிப்பினும் தன்பெயரைக் கேட்பினும் முத்தி கூடச்செய்யும், அக்காரணத்தினால் அதன் பெருமை முழுதுஞ் சொல்லுதல் கூடாது, ஒருசிறிது அறிந்தவாறு கூறுகின்றேமென்றார், செப்பமான வழியிற் செல்லுஞ் சூதமுனிவர்.

மறை—மறைந்த பொருளையுடையது என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். இறைவ னறுமுகன்-இருபெயரொட்டு. ஆதிசத்திமுதலிய ஐஞ்சத்திகளோடு குடிலையெனுஞ் சத்தியொன்றுகூட்டி ஆறு சத்திகளே முகமெனக் கூறுவாரும், அறுகுணங்களே முகமெனச்சொல்வாரும், சிவபெருமானது ஐம்முகங்களுடன் தேவிதிருமுகமொன்றுங் கூட்டி யவையாமென்பாரும், அகர உகரமகரங்களோடு நாதம், விந்து, சத்தி என்னும் ஆறுஞ்சேர்த்து முகமென்பாரும், ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் ஐம் முகங்களுடன் அதோமுகமொன்றுஞ் சேர்ந்து முகமா மென்பாரும் ஆகப் பலரும் பலவாறு கூறுப.

கார்செய் சருக்கம் முற்றிற்று.

ஆ செய்யுள்— 483.

சிவமயம்

வேலுமயிலுந்துணை.

பதின்மூன்றாவது,

# திருவாவினன்குடிச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தேனிமிர்போதக்குரவன்றெரிவரும்போதக்குரவன்
றூனுதவவாரணத்தான்றழுவுதெய்வவாரணத்தா
னனகரவச்சிரத்தானாறுயவச்சிரத்தான்
வானபரங்குன்றத்தான்வளர்ந்தபரங்குன்றத்தான்.

இ-ள். வண்டுக ளொலிக்கின்ற புட்பங்களாலாய குராமாலையை யுடையவன்; யாவர்க்குந் தெரிதற்கரிய ஞானத்தெளிவையுடைய ஆசாரியன், தன்னாற்சொல்லப்பட்ட அந்த மறைகளையுடையவன், தேவியாகப் புணர்ந்த தெய்வயானை யம்மையாரையுடையவன், திருக்கரத்திற்பொருந்திய வச்சிராயுதத்தை யுடையவன், ஆறுதலைகளையுடையவன் ஆகாயமுங் கீழாகிக் குறையும்படி அத்துணை வளர்ந்த திருப்பரங்குன்றத்தை யுடையவன். 1

நாகவிற்கோலங்கையானைவைதவிர்கோலங்கையான்
வேகமுடனூறூரான்விரிபொழிலினூறூரான்
மோகமொழிவாயினான்மோனமொழிவாயினான்
மாகமலைவாய்க்கரையான்மருவுமலைவாய்க்கரையான்.

இ-ள். இளமை விளங்குந் திருவுருவத்தை வெறுக்காதவன், குற்றத்தை நீக்குகின்ற கோவணத்தண்டினை யுடையவன், கோபமுற்று அசுரர்புரங்களை யழித்தவன் (அல்லது வேகத்துடன் இடையூறும் தன்

னிடத்தில் ஊரப்பெறாதவன்) விரிந்தசோலைகளையுடைய நூறு ஊர்களை யுடையவன், மோகநீங்கிய இடத்திலிருப்பவன், மௌனநிலையாகிய ஞான மொழிகளை யுபதேசிக்குந் திருவாயினையுடையவன், தேவகிரியி னிடத் துள்ள தலத்தில் வசிப்பவன். சமுத்திரக்கரையிற் பொருந்திய திருச் செந்தூரில் வாழ்பவன், 2

வன்பணநாகரவரையான்மதலைசூகரவரையா
னின்பமயில்வாகனத்தானேற்றுமயில்வாகனத்தா
னன்பருளமலைவேலானணிகொள்சிவமலைவேலா
னன்கெழுமாவினன்குடியானலங்கெழுமாவினன்குடியான்.

இ-ள். வலிய இளமை பொருந்திய படங்களையுடைய சர்ப்பங்களை யரையிற்றரித்த சிவனதுகுமாரன், வராகமலையையுடையவன், இன்பத் தையுடைய மயில்போலுஞ் சாயலையுடைய இலக்குமி குடியிருக்கும் மார் பினையுடைய விட்டுணுவும் அன்னவாகனராகிய பிரமதேவரும் துதிக் கின்ற மயில் வாகனத்தை யுடையவன், அன்பரது உளத்தில் மலைவைப் பொருத்தாதவன், அழகுகொண்ட சிவமலையின்கண் வீற்றிருக்கும் வே லாயுதன், நன்மைபொருந்திய இடபவாகனத்தையுடைய சிவனதுகுடி யிற்றோன்றினன், வளங்கள் விளங்குந் திருவாவினன்குடியிலெழுந்தருளி யிருப்பவன், 3

சீலர்தமக்கறமறைந்தான்செய்படிறர்க்கறமறைந்தான்
மாலவனின்பமருமகன்மறைவரரன்பமருமகன்
கோலமலர்க்கதம்பத்தான்குழைவினர்மிக்கதம்பத்தா
னூலவரினோரகத்தானுவலவருமேரகத்தான்.

இ-ள். தவவொழுக்க முடையவர்க்குத் தருமத்தை யுபதேசித்த சிவனதுகுமாரன், வஞ்சவொழுக்க முடையார்க்கு மிகவும் மறைந்திருப்ப வன், விட்டுணுவினது இன்ப மருகனாயிருப்பவன், வேதங்களைத் திருவாய் மலர்ந்த சிவனதுசெல்வப்புதல்வன், அழகிய பூக்களையுடைய கடம்ப



மாலையினன், குழைந்த மேலான மனமென்னுந் தம்பத்திற் பிணிக்கப் படுவோன், நூலின்பொருளையுணர்ந்த ஞானியாது அழகிய உளக்குகை யில் வசிப்பவன், சொல்லுதற் குரிய திருவேரகத்தின்கண் வீற்றிருப்ப வன். 4

மெல்லியலாள்பழநிமலைவிமலைசெய்பழநிமலை
செவ்வியர்மேகாரவனஞ்சிறந்தகன்னிகாரவன
மல்லல்வளநாட்டினன்வைகாவூர்நாட்டினன்
கொல்சினவேலாடலான்குன்றுதொறுமாடலான்.

இ-ள். மிருதுவான சாயலையுடைய பழமையாகி மலரகிதையான பார்வதிதேவியாரின் புத்திரன், பழநிமலை மேகாரவனம் என்னும் வில்வ வனம் கன்னிகாரவனம், வளப்பம்பொருந்திய இந்நாடுகளையுடையவன், திருவைகாவூர்த்தலத்தில் வீற்றிருப்பவன், கொல்லுந் தொழில்வாய்ந்த வேலாயுதத்தைத் தரித்த வீரன், குன்றுதோறுந் திருவிளையாடல் செய்ப வன். 5

வெவ்வியவாசகத்துறையான்வேதவாசகத்துறையான்
மைவணமாறுனனத்தான்வாழ்த்திடுமாறுன்னத்தான்
பௌவமாவினைக்கொன்றான்பவமுறுமாவினைக்கொன்றான்
றெவ்வர்புரமலைக்குமரன்சேய்சோலைமலைக்குமரன்.

இ-ள். கொடிய குற்றங்களையுடைய மனத்தின் கணிருக்காதவன் வேதச்சொற்களாகிய துறைகளையுடையவன், மேகம்போன்ற நிறத்தினை யுடைய விட்டுணுவும் அன்னவாகனத்தையுடைய பிரமனுந் துதிக்கின்ற ஆறு திருமுகங்களை யுடையவன், கடலின்கண் மாமரமாகநின்ற சூரபன் மனைக்கொன்றவன், பிறவியைச்செய்யும் தீவினைக்கு இயையாதவன், பகைவரது திரிபுரங்களையும் எரித்தழித்த சிவனது குமாரன், பழமுதிர் சோலைமலை என்னுந்தலத்தில் வீற்றிருப்பவன்.

வெவ்விய ஆசு அகத்து உறையான் எனவும், மைவன் தான் அனத்தான் எனவும், பவம் உறும்மாவினைக்கு ஒன்றான் எனவும், தெவ்வர் புரம் அலைக்கும் அரன் சேய் எனவும் பிரித்துக்கொள்க.

கடலினிடத்தே சூரபன்மன் மாமரமாக நிற்க, அதனைவேல்விடுத்துப் பிளந் தழித்தார். இது பின்வருஞ் செய்யுள்களானும், கந்த புராணத் தூரபன்மன் வதைப்படலத்தானும் உணர்க.

திருமுருகாற்றுப் படை.

சூரா மகளி ராடுஞ் சோலை
மந்தியு மறியா மரன்பயி லடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தட்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார் முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முத றடிந்த சுடரிலை நெடுவே
லுலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்,

கல்லாடம்.

உயிர்புகுஞ் சட்டக முழிதொறு முழிதொறும்
பழவினை புகுந்த பாடகம் போல
முதிர்புயல் குளிறு மெழுகலை புக்க
கட்டிடைச் சூருடல் காமங் கொண்டு
பற்றியுட் புகுந்து பசுங்கடல் கண்டு
மாவொடுங் கொன்ற மணிநெடுந் திருவேற்
சேவலங் கொடியோன்.

இங்ஙனமே "பாயிரும் பணிக்கடல்" என்னும் பரிபாடல் ஐந்தாஞ் செய்யுள் உணர்த்தது முணர்க. 9

வாரிசுடுஞ்சரவணத்தான்மருகவேள்சரவணத்தான்
சூர்தபமுன்பொருமயிலான்சுரேசர்விரும்பொருமயிலான்,



சீருணர்வுதருமடிகள்தேவரோ தருமடிக
ளார்வமுறப்பணிவாரேயமரர்சிறப்பணிவாரே.

இ-ள். கடலைவற்றச்செய்த பாணத்தையுடைய அழகினாகிய திருமாலின் மருமகனாகவேள் ஆக வுள்ளவன், சரவணவாவியிற் றிருவவதாரஞ் செய்தவன், சூரபன்மன் அழியும்படி முன்னர்ப் போர்புரிந்த வேலாயுதத்தையுடையவன், தேவர்களுக்குத் தலைவரா யுள்ளார் ஆன இந்திர பிரமவிட்டுணுக்களால் விரும்பப் படுகின்ற ஒப்பற்ற மயில்வாகனத்தையுடையவன், சிறந்த சிவஞானத்தை யுபதேசிக்கின்ற பெரியோன், தேவர்களாலும் எடுத்துச் சொல்லுதற்கரிய முதன்மையை யுடையவன், இன்னனபெருமைவாய்ந்த கந்தக்கடவுளை அன்பு பொருந்தப் பணிகின்றவரே தேவர்களுடைய சிறப்புக்களைக் கொள்ளுவார். 7

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மீட்டுமுனிவர்மகிழ்தூங்கிவரைவேலைபுரண்டனநீர்
நாட்டமுடையாராகவுளந்துயிழ்த்துநவிலுந்தொறுஞ்சரிதை
வேட்டகருத்துப்புலநெறியில்விழாமைநிறுத்திச்சிவகரணத்[தி]
தோட்டிமுகூர்த்தமொன்றரங்கிவிழித்தார்சூதனுடனுரைப்பா

இ-ள். பின்னரும் நைமிசாரணியத்து முனிவர்கள் உவகைமிகுந்து சமுத்திரம் புரண்ட நீர்போ லெழுந்த கருத்துடையவராய், மனம்பொங்கி சூதமுனிவர் சொல்லுந்தோறும் விரும்பிய மனத்தை ஐம்புல வழியில் விழாதுநிறுத்தி, சிவச்செயல்களாகவே நிறுத்தி ஒரு முகூர்த்தகாலம் யோகநித்திரைகொண்டு எழுந்தவராகி அவர் சூதமுனிவரோடு கூறுவார். 1

வேதமுனிவர்வழுத்துமறைவியாதமுனிபாலொருங்குணர்ந்த
சூதமுனிவநீயுணர்த்துந்துகளூர்சரிதையுபதேச

மாதலுணர்ந்தோர்வழியின்கணுதவிமாறிக்
ரேதமகலத்தெருட்டுதனின்கடனென்றொன்றலுமுனிவன்.

இ-ள். வேதத்தை, முனிவர்களால் துதிக்கப்படுகின்ற வியாசமுனிவரிடத்து ஒருசேரக்கேட்டுணர்ந்த சூதமுனிவரே! தேவரீர் அருளிச்செய்த குற்றமில்லாத சரித்திரம் உபதேசப்பொருளாவதை யறிந்தேம், அவ்வழிக்காகப், பிரதியுபகாரஞ்செய்து களிப்படைவோர் யாவர், எம்மிடத்துள்ள குற்றங்கணீங்கத் தெளிவித்தல் தேவரீரது கடமையாகும் என்று சொல்லுதலும் சூதமுனிவர் கூறுவார். 9

பகர்ந்தசரிதையுபதேசமென்றீரன்றேபரிந்தொருகா [றுண்மை
ஆகந்துதிருவாவி னன்குடியென்றுரைத்தோர்முத்தி யடைவ
யுகந்தையிதுவன்றமதுபொருட்டடியேனறையப் பெற்றனநீர்
முகந்துகொளப்பெற்றீரெளிதோவென்றனதனைமொழிகின்றான்.

இ-ள். (முனிவர்களே) நீவிர் யான்கூறிய சரித்திரத்தை யுபதேசமென்று கூறினீர், அன்புகொண்டு ஒருதரம் மகிழ்வுடன், திருவாவினன்குடி என்றுசொன்னவர் முத்தியடைவார்கள், இது சத்தியம், இது அகங்காரத்தாற் சொல்வது அன்று, அது காரணமாக அடியேனாகிய யான் சொல்ல வந்தனன். நீங்கள் அதனுண்மையை எடுத்துக்கொள்ளப் பெற்றீர், அது யாவர்க்கும் எளியதோ வென்று கூறிய சூத முனிவர் பின்னரும் அதனைச் சொல்வாராயினர். 10

சூழ்கிரேதாயுகந்தோன் றுநாளிற்சூகராசலத்திற்
சூழ்வெள்ளருவிமனுச்சிருங்கமுடிமேற்றுளவத்தடமௌலி
வாழ்கஞ்சிவயோகீசரைநோர்ந்துமலன்சரணமலர்ப்போதில்
வீழ்வண்டெனச்சென்றடைமாறவிஞவும்விடையுமிகவிருந்தான்.

இ-ள். வந்த கிருதயுகந் தோன்றுங்காலத்திலே, வராகமலையின் கண் சுற்றிய வெண்மையாகிய அருவியாயும் மந்திர சிருங்கத்தின் உச்



சியின்மேல், துழாய்மாலைதரித்த நீண்ட கிரீடத்தையுடைய திருமால் அங்கிருந்த சிவயோகத் தலைவர்களை மதித்து, மலரகிதாகிய சிவபெருமான் திருவடிகளாகிய தாமரைப் பூவில், வீழ்கின்ற வண்டு போலப் போயடையுஞ் சந்தனங்களைக் கேட்டும் விடுத்தும் இருந்தனர்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

இருக்குமேல்வைநிலமகளுமெறிவெண்
டிரைப்பாற்கடற்பிறந்த
முருக்கினிதழ்வாய்ச்செழுந்திருவுமு
குந்தன்முவரிப்பதம்பேழற்றிப்
பெருக்குந்துதிகொண்டருகுசென்றார்
பிறிதொன்றுரையான்முகநோக்கான்
குருக்கும்பணிவேணியன்றொண்டர்
கூறுங்கூற்றுக்கெதிர்கூறும்.

இ-ள். இங்ஙனம் இருக்குங்காலத்திற் பூமிதேவியும், திரையெறிகின்ற வெள்ளிய திருப்பாற்கடலிற் பிறந்த முருக்க மலர்போலுஞ் சிவந்த அதரங்களையுடைய வாயினளாகிய இலக்குமி தேவியும், திருமாலது தாமரைமலரடியை வணங்கி, மிக்க துதியைச் செய்துகொண்டு பக்கத்திற்போயினர், அவர்களைக்கண்ட திருமால்வேறொன்றனையுங் கூறாதவராய், அவர் முகத்தையும் பாராதவராய், வெள்ளையாகிய சர்ப்பத்தைத் தரித்த சிவபெருமானது அடியவர் யாதுஞ் சொன்னாலும் அவைக்கெல்லாம் எதிர்சொல்வாராயினர். 12

நின்றுவருந்திக்கெடிதுயிர்த்து
நீங்கியொருசாரகமலுக்
குன்றிலுறைபுண்டரீகமெனும்
யாகவதன்கைகுவித்தெதிர்ந்து

கன்றியிதயங்குவன் றனையீர்
வருவதெவன்கொல்கழறுகென்று
அன்றுநிகழ்ந்தவாமுழுது
மறைந்தாரவனுமகந்தெரிந்தான்.

இ-ள். பூமிதேவி சீதேவி என்னும் இருவரும் அங்கு நின்றவருந்த முற்றுப் பெருமூச்சுவிட்டு, அவ்விடத்தினின்றும் நீங்கி ஒருபக்கஞ்செல்லுதலும், அம்மலையின்கணிருக்கும் புண்டரீகர் என்னும் பாகவதர் அவர்களைக்கண்டு கைகுவித்து எதிர்கொண்டு சென்று, தான் மனம்வருந்தி, தாய்மார்களே! இவ்விடம் வந்தது என்னகாரணம் சொல்வீராகவென்று வினவினன், அவ்விடத்து நடந்தவைகளை யெல்லாம் சொன்னார். புண்டரீகரும் அவற்றுண்மைகண்டார். 13

அனையீரோதற்கரியபரம்
பரன்சேவடிகளகந்திழைக்கு
நினைவோர்வழியினொழுகியலந்
தோரநீவிரடைதலினாற்
புனையீர்ந்துளவோனீத்தனனென்
றுரைத்தபுண்டரீகனைப்பார்த்
தினையதறியாமையினிழைத்தே
மினிமேல்யாதுபுரிவதென்றார்.

இ-ள். தாய்மார்களே! சொல்லுதற்கரிய பரம்பொருளாகிய சிவபெருமானது சிவந்ததிருவடிகளை மனத்தினினைவும் சிவயோகியரின் வழியில் நடக்கும் அந்தக்காலத்தில், நீவிர் சேர்ந்தமையால், குளிர்மையாகிய துழாய் மாலைதரித்த திருமால் உங்களை வெறுத்தனர், என்று சொல்லிய புண்டரீக முனிவரைப் பார்த்து, இவ்வாறாய் குற்றத்தை அறியாமையால் செய்தோம், இனிமேல் யாம்செய்யுங் காரியம் என்னென்று கேட்டனர் (பூமிதேவி சீதேவி என்னு மிருவரும்.) 1



மாதர்மலர்ச்சேவடிபாக
வதன்றாழ்ந்தனையீர்வடகீழ்ப்பாற்
சீதமலிதீம்புனற்சித்த
தீர்த்தக்கரையிற்கூவிளஞ்சூழ்
போதுவனத்தென்கீழ்ப்பாலா
மலகவனத்திற்புரிதிர்தவந்
தாதுமலிதண்டுளவனுமைச்
சாருமெனச்சாற்றினனகன்றான்.

இ-ள். பூதேவி சீதேவி என்பாரின் செவ்வியபாதங்களைப் புண்டரீக முனிவர் வணங்கி, தாய்மார்களே! வடகிழக்குத் திசைக்கணுள்ள குளிர்மை மிக்க இனிய நீரையுடைய சித்ததீர்த்தக் கரையினிடத்தும் வில்வவனத்திற்குத் தென் கிழக்கிலுள்ள நெல்லிவனத்தும் தவத்தைச் செய்யக்கடவீர், மகரந்தநிறைந்த குளிர்ந்த துழாய் மாலையை யுடையவிட்டுணுமூர்த்தி நுங்களைச் சார்வார் எனச் சொல்லிப்போனார். 15

விண்டவுரையுட்கொண்டுசித்த
தீர்த்தக்கரையின்மேதினிமான்
பண்டைமகிழ்நனடைமாறு
பயிறற்கரியதவம்பயின்று
ளண்டர்முனிவன்தொழுங்குழகன்
மாழூராமலகவனங்
கண்டுபுரிந்தாளருந்தவஞ்செங்
கமலத்தவிசினரசிருந்தாள்.

இ-ள். புண்டரீக முனிவர் சொல்லிய வார்த்தைகளை யெல்லாம் ஏற்றுக்கொண்டு, பூமிதேவி சித்த தீர்த்தக்கரையின்கண் பழமைப்படி தன் நாயகன் சேரும்படி செய்தற்கரிய தவத்தைச் செய்தாள், செந்தா

மரைப் பூவின்கண் இருக்கும் இலக்குமிதேவியும், தேவர்கள் முனிவர்களால் வணங்கப்படுகின்ற சிவபெருமானது பழையதலமாகிய நெல்லிவனத்தைக்கண்டு தவத்தைச்செய்தனள். 16.

வருதிரேதாயுகந்தனிற்கோ
சிகன்போர்வலியும்வன்படையுஞ்
செருவிலுடையப்பொருதுமனஞ்
செருக்குங்காமதேனுவைமா
லொருவுவசிட்டன்முகநோக்கி
யகந்தையுடையாருலகிலுய்மா
றரிதுநீயுந்தவம்புரிந்தா
லடைவைதுறக்கமெனவறைந்தான்.

இ-ள். வந்த திரேதயுகத்திலே விசுவாமித்திர முனிவரது போர்வலிமையும், வலியசேனைகளும் போரிலழியச்செய்து அதனால் மனத்தில் அகங்காரங்கொண்ட காம தேனுவை, மயக்கம் நீங்கிய வசிட்டமுனிவர் முகம்பார்த்து, அகங்காரமுடையவர் உலகில் உய்யுந் தன்மையில்லை. ஆதலால் தவஞ் செய்தாற்றான் நீயுஞ் சுவர்க்கலோகத்தை யடைவாய் என்று கூறினர். 17

மாற்றமதுகேட்டுளம்வெருவி
மறைவல்லோய்நின்பணிவிடைநீத்
தாற்றுவேன்யாண்டருந்தவமென்
றலுநின்கலையிலொன்றதுகொண்
டேற்றபணிநீபுரிதியென
யாவுமுருவுகொடுகேழ
ரேற்றகிரிகூவிளவனத்தின்
வடபான்மடுவினிடைத்தோன்றி.



இ-ள். அவ்வார்த்தைகளைக் காமதேனு கேட்டு, மனம் அஞ்சி, வேதங்களில் வல்ல முனிவரே! தேவரீரது குற்றேவலை விட்டு எங்குச் சென்று அரியதவத்தைச் செய்வேன் என்று கூறுதலும், காமதேனுவே! நினது கலையி லொன்று கொண்டு எனக்குத் தகுந்த பணிகளைச் செய்வாயாக, மற்றைய கலைகளைக் கொண்டு வாராக மலையின்கணுள்ள கூவிளவனத்திற்கு வடதிசைக்கணுள்ள தீர்த்தத்தினிடத்தே தோன்றி. 18

அறிவோடலர்மான்றவம்புரியா
மலகவனஞ்சென்றரியதவ
முறுதிவரநின்றிழைத்திடுநாற்
றொன்றுமூன்றாம்யுகந்தன்னின்
மருவிலருமாதவம்புரியும்
போழ்தில்வாதன்வழங்குமருள்
பெறுவைநீயுமெனுமாற்றங்
கேட்டுப்பிறழாதடைந்ததுவே.

இ-ள். நல்லறிவுடனே தாமரைமலரின் மேலி
தேவி தவத்தைச் செய்கின்ற நெல்லி வனத்தை யடைந்து, அரியதவத்தை நிலைவரும்படி நின்றுசெய்து வருங்காலத்தில், மூன்றாம் யுகத்திலே, குற்றமில்லாத அரியபெரிய தவத்தைச் செய்யுங்காலத்தில், சிவபெருமான் கொடுக்கின்ற திருவருளைப் பெறுவாய் என்ற சொற்களைக்கேட்டுத் தவறாமல் அங்குச்சென்றது (காமதேனு.) 19

புரிசில்காலங்கழிதலுமுன்
புகன்றவாற்றான்யுகந்தோன்றக்
கரியமணிவண்ணனுந்தண்ணங்
கமலத்தோனுங்கட்டுவாரும்

விரிநீருலகவிருள் பருகி
மிளிரும்பருதிவானவனுந்
தெரிமெல்லிழைபங்கினன்மலர்த்தாள்
பணியவெள்ளிச்சிலம்படைந்தார்.

இ-ள். தவஞ்செய்து சிலகாலம் நீங்குதலும், முன்னர் வசிட்ட முனிவர் சொற்படி மூன்றாவது யுகமாகிய துவாபரயுகம் பிறக்க, இந்திரநீல ரத்தினம்போன்ற திருமாலும், தாமரைமலராசனனாகிய பிரமதேவரும் தேவர்களும் பரந்தநீரையுடைய கடலாற் சூழப்பட்ட உலகத்திலுள்ள இருளையுண்டு விளங்குஞ் சூரியதேவனும், ஆராய்ந்த மிருதுவான ஆபரணத்தையுடைய உமா தேவிபாகராகிய சிவபெருமானது மலர்போன்ற திருவடிகளை வணங்கும்படி கயிலை மலையை யடைந்தனர். 20

கடவுட்கயிலைதனையடைந்தோர்
குழுவிற்கதிரோனமுகநோக்கி
யிடனோங்கனுநின்றுதவஞ்சென்
றிலதேன்மெலியா திருக்குமோ
மிடையுமுயிர்களெனமகதி
வீணைக்கிழவன்விதந்துரைப்ப
வீடலுந்தணவாவகந்தையுங்கொண்
டலரியடிகளடிபணிந்தான்.

இ-ள். தெய்வத்தன்மையுடைய கயிலைமலையடைந்த தேவகூட்டங்களுள், சூரியனது முகத்தைப்பார்த்து, நீ எவ்விடத்தும் நின்று வெயில் செய்தலில்லையேல், நெருங்கிய உயிர்களெல்லாம் அழியாதிருக்குமோ, என்று இவ்வாறு மகதி வீணைக்குரிய நாரதமுனிவர், வியந்துகூற, வீரமும் நீங்காத அகங்காரமுங் கொண்டு சூரியனானவன் நாரத முனிவரது பாதங்களை வணங்கிட 21



எந்தையுணர்ந்துவலந்திகழ்கண்
ணிமைத்துவிழித்தானதுபோழ்தில்
வந்தரவிகாலமளவில்
சென்றனவந்தனையாக
நந்தவுலகமெலிவதுபா
ரென்றானிரவிநடுநடுங்கி
பந்தவினையேனகந்தையெவ்வா
றொழிப்பேனென்றுபணிந்திரந்தான்.

இ-ள். எமதுதந்தையாராகிய சிவபெருமான் அதனையறிந்து பக்கத்தில் விளங்காநின்ற கண்ணை யிமைத்துத் திறந்தார். அச்சமயத்திற் சூரியனுடைய காலம்அளவில்லாதனசென்றன, சூரியனே இவ்வாறு வந்தாயாக, அதனால் ஒளிகுறைய உலகத்துயிர்கள் வருந்துவது பார்த்தாயோ என்று கேட்டனர், சூரியன் நடுநடுங்கி, பாசபந்தத்தால் தீவினைசெய்த நாயேனது அகங்காரத்தை யெப்படி நீக்குவேனென்று வணங்கிக் குறையிரந்தான். 22

கோங்குவனத்தென்குணபாலா
மலகவனத்திற்கோகநகந்
தாங்குமலர்ப்பொன்சுரபிதவந்
திளைக்குந்தானத்தந்தணனு
யாங்குவிரதம்புரிதருதும்
வரனென்றமலனருளியவா
றோங்குமிரவியகந்தைதபா
முயன்றான்மழுங்குமொளிவீற.

இ-ள். கோங்கவனத்திலே தென்கிழக்குத் திசையின்கணுள்ள நெல்லிவனத்தின்கண், செந்தாமரை மலரின்மேலிருக்கின்ற இலக்குமிதேவி

யும் காமதேனுவும் தவஞ்செய்யும் இடத்தில் பிராமணனாகவிருந்து தவத்தைச் செய்குதி, யாம்வந்து வரங்கொடுப்பேமென்று சிவபெருமான் கூறியவாறு, உயர்ந்த சூரியனானவன் அகங்காரத்தை நீக்குதற்கு மழுங்கிய கிரணங்கள் சுவாலிக்கத் தவத்தைச்செய்ய முயன்றனன். 23

நாறுமலர்பெய்தரியதவ
நவைதீர்தரநாடொறுமியற்றிப்
பேறுபெறுவானிவனுணர்வு
பிறழாதுழலும்பெற்றியினு
வீறின்முனிவரிருவிசும்பி
னிமையோரிறைஞ்சுமெழின்மூதூர்
வீறுதிருவாவினன்குடியென்
றுலகமூன்றும்விளங்கியதால்.

இ-ள். வாசனை வீசுகின்ற புட்பங்களைத் தூவி, குற்றமில்லாத அரிய தவத்தை நாடோறுஞ்செய்து, பெரும்பேற்றை யடையும்படி இச்சூரியன் றன் நல்லறிவு கெடாதுசெய்யுந் தன்மையினால், அழிவில்லாத இருடியர்களும், பெரிய ஆகாயத்திலுள்ள தேவர்களும் வணங்குகின்ற பழமையாகிய பழநியானது, பெருமைமிக்க திருவாவினன்குடிஎன்று திரிலோகத்தும் விளங்கியது. 24

எந்தஞான்றும்பரசிவனெவ்
வுயிருமீன்றாளுடனிருக்கு
மெந்தஞான்றுமொருதனிவே
லிறைவனரசுவீற்றிருக்கு
மெந்தஞான்றும்பொறிபுலன்போக்
கெறிந்தோரிருக்கையாயிருக்கு
மெந்தஞான்றுமடைந்தோர்பே
ரின்பமிசையநுகர்விக்கும்.



இ-ள். எந்நாளும் பரசிவப்பெருமான் உமாதேவியாரோடும் கூடி வீற்றிருந்தருளுவர், எந்தக்காலத்தும் ஒப்பற்ற வேலாயுதத்திற்குத் தலைவராகிய சண்முகக்கடவுள் எழுந்தருளி யிருப்பர், எந்தக்காலத்தும் ஐம்பொறிகள் பஞ்சப்புலன்கள் என்னும் விடயங்களை யில்லாமற்செய்த முனிவர் வாசமாக விளங்கும், எந்தக்காலத்துந் தன்னையடைந்தவர்களைப் பேரின்பமாகிய அத்துவித முத்தியை யடையும்படிசெய்யும். 25

மூவர்பெயராநிலையின்மூ
தூரின்முருக்கினிதழ்ச்சூட்டுச்
சேவலிமையாக்கருங்கணிறை
செறிபைந்தோகைச்சென்னியினெண்
ணேமயிற்சூர்முதறடிந்த
சுடர்வேற்குமரன்றொல்லையினன்
காவிவிரிபூங்கயிலையினின்
றடைந்தவாறுகழறுவாம்.

இ-ள். பிரமன் விட்டுணு உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளும் அகலாதிருக்கும் நிலைமையை யுடைய பழநிப் பதியின்கண் (திருவாவினன் குடியில்,) முருக்க மலர்போன்ற தலைச்சூட்டையுடைய சேவலைக் கொடியாக்கொண்டு, இமையாத கரியகண்களையுடைய பசிய மயில்வாகனத்தின்மீது இருந்து, அழகிய கலாபத்தையுடைய மயில்வடிவான சூரபன்மனாகிய முதல்வனைக்கொன்ற ஒளிபொருந்திய வேலாயுதத்தையுடைய கந்தக்கடவுளானவர், முன்னர்க்காலத்திலே நல்ல சோலைகள் பரந்த பொலிவாகிய கயிலைமலையினின்றும் வந்தருளிய சரித்திரத்தையும் கூறுவாம். 26

மும்மூர்த்திகளும் நீங்காது பூசித்திருக்கும் திருவாவினன்குடியில், மயிலில்நின்று மயில்வாகனமான சூரபன்மனைக்கொன்ற சுப்பிரமணியப்

பெருமான் கயிலையினின்றும் வந்தமர்ந்த சரித்திரத்தைக் கூறுவாம் என்பது கருத்து. இது கவிக்கூற்று.

மும்மூர்த்திகள் அகலாது பூசித்த சரித்திரமாவது - சுப்பிரமணியக் கடவுள் சூரபன்மன் முதலிய அசுரரைக்கொன்று திருப்பரங் குன்றத்து வந்து வீற்றிருக்க, பிரமன் முதலினோர் இந்திரன் குமரியாராம் தெய்வயானை யம்மையாரை யக்கந்தற்காக விவாகஞ்செய்விப்பான் கருதி வேண்ட, இறைவனு மதற்கிசைந்து திருமணஞ் செய்திருந்தான். ஒருநாள் பிரமன், விட்டுணுமுதலினோர் தம்மைச் சூழ்ந்திருக்கும் பேரவையத்து, குகப்பெருமான் அவரைநோக்கி, "அளியீர்! எமக்குவெல்லாந் தந்தது இவ்வேல் என்ன" அங்கிருந்த பிரமன் "இவ்வேலிற்கு இந்நிலை என்னால் வந்ததன்றோ" என்றானாக, "நங்கையில் வேலுக்கு நீகொடுப்பதொரு சத்தியுண்டா" என்று குழந்தைவேற்பெருமான் கோபித்து "இங்ஙனங் கூறிய நீ மண்ணிடை வேடனாய்ப்போதி" என்றுசபித்தார் அவ்வாறு பிரமன் சேறலாலே, படைத்தற்றொழில் இல்லையாயிற்று அது இல்லையாகவே விட்டுணுவின் காத்தற்றொழிலும், உருத்திரனது அழித்தற்றொழிலும் இல்லையாயின. அதுகண்ட விட்டுணு உருத்திரர் பிரமனுடன் பழநிசென்று பூசித்து வேலாயுதப் பெருமானிடம் முந்திய வரம் வேண்டலின் "மூவர் பெயரா நிலையின் மூதூர்" என்றார்.

## பத்துப்பாட்டு-முதலாவது ஆற்றுப்படை.

கடுவோ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்
றழலென வுயிர்க்கு மஞ்சுவரு கடுந்திறற்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும் வெள்ளேறு
வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோ
ளுமை யமர்ந்து விளங்கு மிமையா முக்கண்
மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனும்



நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரிரண் டேந்திய மருப்பி னெழினடைத்
தாழ் பெருந் தடக்கை யுயர்த்த யானை
யெருத்த மேறிய திருக்கிளர் செல்வனு
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
வுலகங் காக்கு மொன்றுபுரி கொள்கைப்
பலர் புகழ் மூவருந் தலைவராக
வேமுறு ஞாலந் தன்னிற் றோன்றித்
தாமரை பயந்த தாவிலூழி
நான்முக வொருவற் சுட்டிக் காண்வரப்
பகலிற் றோன்று மிகலில் காட்சி
நால்வே றியற்கைப் பதினொரு மூவரோ
டொன்பதிற் றிரட்டி யுயர்நிலை பெறீஇயர்.

என்றதனு லறிக. இனி, "மூவர்பெயரா நிலையின்" என்றதற்கு, திரு (இலக்குமி) ஆ—(காமதேனு) இனன் (சூரியன்) என்னும் மூவரும் அகலாது பூசித்தலால் என்று கூறுவர் ஒருசாரார்.

சூரபன்மனே சேவலும் மயிலும் ஆகவந்தான் என்று அறியப்படலான், ஈண்டு அவனுடன் போர் செய்யும்போது சேவற்கொடியோடும் மயில்வாகனத்தோடும் சென்று பொருதாரென்று இந்நூலார் கூறியது பொருந்துமாறு என்னை எனில், சூரபன்மன் போர்செய்யுங் காலத்தில் அக்கினிபகவான் சேவலங்கொடியாகவும், இந்திரன் மயில்வாகனமாகவும் நின்றார். சூரபன்மன் பின்னர் இருகூறாக்கப் பட்டுச் சேவலும் மயிலுமாகவர அவற்றையேற்று, அக்கினியையும் இந்திரனையுமுன்னுருவினவாச் செய்தனரென்று, கந்தபுராணம் கூறிற்றாகலின் முரணின்றென்க. குழகன்—மணக்கோலத்தை யுடையவன். இளமைப் பருவத்தையுடையவன் கழறுவாம் - தனித்தன்மைப் பன்மை.

சுருதிவண்டிமிராயிரந்தோட்டிதழ்க்கமலப்
பொருவினான்முகக்கடவுளையடைந்துபுத்தேளி
ரிருக்கநாரதன்மகதியாழொண்கையிலேந்தி
விரலுளாழ்ந்தனன்யாவரும்வியப்பவேதுதிப்பான்.

இ-ள். இசையுடைய வண்டுகள் ஒலிக்கின்ற ஆயிரம் இதழ்களையுடைய தாமரை மலரின்மேலிருக்கும் ஒப்பில்லாத நான்குதிருமுகங்களையுடைய பிரமதேவரை யடைந்து. தேவர்கள்யாவரும் இருக்க, நாரதமுனிவர் மகதியாழைத் தமது அழகிய கையிலேந்தி விரலினால் தடவி யன்பிலாழ்ந்து எவரும் வியக்கும்படி, துதிப்பாராயினர். 27

முண்டகச்சதுமறையவன்முடிமுறைதுளக்கி
வண்டிருக்கையிலிருந்தமாதுளங்கனியொன்றைப்
பண்டுநல்கினன்பரமனுக்கென்றனன்பருமத்
தண்டர்கோனுநங்கருத்துமற்றேயெனவுரைந்தான்.

இ-ள். தாமரை மலரின்மேலிருக்கும் பிரமதேவர் தலைகளைமுறையே அசைத்து, தனது அழகிய கையின்கணிருந்த மாதுளம் பழமொன்றை முன்னர்க் காலத்திற் கொடுத்தனர். நாரதர் அதனையேற்று இது சிவபெருமானுக் காகும் என்று கூறினர். பிரமதேவரும் அதுவே நம்முடைய கருத்துமாகும் என்றுசொன்னர். 28

மகதியாழ்முனிவிடைகொண்டுகனிவலகயிலைப்
பகவன்முன்புவைத்திறைஞ்சினனெடுத்ததைப்பரம
னிகல்கடந்தவைவேற்படைச்சேயினையானைப்
புகர்முகத்தனைநோக்கினன்புன்னகைமுகிழ்த்தான்.

இ-ள். மகதிவீணையில் வல்ல நாரதமுனிவர் அங்கு நின்றும்விடைபெற்றுச் சென்று அம்மாதுளம்பழத்தைவெள்ளியங்கிரியின்கணெழுந்தருளி



யிருக்கும் சிவபெருமான் முன்னர்வைத்து வணங்கினர், அப்பழத்தைப் பரசிவப்பெருமான் எடுத்து, பகைவரையழித்து வெற்றிகொண்ட வேலாயுதத்தைத் தரித்த குமாரக்கடவுளையும், யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளையும் திருநோக்கஞ்செய்து குறுமுறுவல் செய்தருளினர்.

முனி—இறைவனை மனனஞ் செய்பவன், மௌனநிலையை யுடையவன், இனித் தமிழ்மொழியாக் கொண்டு, அகப்பற்றுப் புறப்பற்றுக்களை வெறுத்தவன் என்னலுமாம். வல்ல என்பது வலனெனத் தொகுத்தலாய் நின்றது.

பகவன்—பகம் என்னுந் தாதுவி னடியாகப்பிறந்த வடமொழி. பகம்—ஆறு. அறுகுணங்களையுடையவன் பகவன் என்க. அறுகுணங்களாவன - ஐசுவரியம், வீரியம். புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்பன இவ்வறுகுணங்களும் சிவபெருமானுக்கன்றி யேனைத்தேவர்க்கில்லையென்பது வேதத்தின் உட்கிடையாகும். மாம்பழத்தை நாரதர்கொடுத்தாரெனச்சிலர் கூறுப. ஈண்டு மாதுளம்பழம் கொடுத்தாரெனக் கூறியதும் முரணன்றென்க. 29

யாவராயினுமிக்கனிவிழைந்துளோர்கணத்திற்
பூவலங்கொடுவருதிரேலவர்க்கெனப்புகலத்
தூவியம்பசுந்தோகைமாமஞ்ஞைமேற்றோன்றித்
தேவர்சேனைகாவலன்கிரியிழிந்துபார்சேர்ந்தான்.

இ-ள். எவர்களாயிருந்தாலும் இந்தப் பழத்தை விரும்பினவர்கள் ஒருகணத்திற் பூமியை வலம்வருவாராயின் அவர்க்கே இப்பழங் கிடைக்கும் என்றுசொல்ல, தேவசேனபதியாகிய குமாரக்கடவுள் கலாபமுடைய பசிய அழகிய மயில்வாகனத்தின்மீதேறிக் கைலைமலையை விட்டுப் பூமியை யடைந்தார். 30

ஆயகாலையிலைங்கரனுயிர்முதலீன்ற
தாயையெங்குமாந்தந்தையைவலங்கொண்டுதாழ்ந்து
சேயதாமரைச்சீரடித்துணைகளிற்றீந்தேன்
பாயுமாமலர்மாரிதூய்ப்பரவியொன்றுரைத்தான்.

இ-ள். அவ்வாறாகிய சமையத்தில் விநாயகக்கடவுள் வுயிர்முதலாகிய சராசரப்பொருள்களைப் பெற்ற மாதாவையும் எவ்விடத்தும் வியாபித்திருக்கின்ற தந்தையையும் பிரதக்ஷிணம் வந்து வணங்கி, சிவந்ததாமரை போன்ற அழகிய இருபாதங்களினும் இனிய தேன்பாய்கின்ற புஷ்ப மழையைச் சொரிந்து துதித்து ஒன்று கூறுவாராயினர். 31

ஆண்டாண்டமுமப்பிரமாண்டமுமப்பாற்
பண்டைநான்மறைச்சிரசின்மேற்படரொளிபரப்பும்
விண்டிடற்கரிதாம்வியாபகமுமாயுயிரா
யுண்டொரொண்பொருளென்பதுநீயலதுண்டோ.

இ-ள். அண்டங்களும் வெளியண்டங்களும் பிரமாண்டமும் அதற்கு அப்புறத்துள்ள பழையநான்குவேதங்களின் முடிவிலே கூறப்பட்டிருக்கின்ற பரவெளியும் சொல்லுதற் கரிதாய இவ்விடங்களில் வியாபித்தும் உயிராகியும் ஒருபொருள் உண்டென்றுசொல்வது தேவரீரல்லாமல் வேறொன்றுண்டோ. 32

என்றலுங்கரத்திருந்தசெங்கனியையீர்ந்துளவோன்
றன்றடங்கணிற்பாம்புருச்சாபநீக்கியபூங்
கொன்றையஞ்சடையொற்றைவெண்கோட்டுமால்யானைக்
கன்றினங்கையில்வழங்கினன்கிளங்கனிமிடற்றோன்.

இ-ள். என்று இவ்வாறு விநாயகக்கடவுள் கூறுதலும் களாப்பழத்தையொத்த திருக்கண்டத்தை யுடையராகிய சிவபெருமான் குளிர்ந்த துழாய்மாலையைத் தரித்த விஷ்ணு மூர்த்தியினுடைய புருவத்தை தம்



திருக்கண்ணோக்கத்தால் நீக்கிய, பொலிவாகிய கொன்றைப்பூ மாலையைத்தரித்த சடையையும் வெள்ளிய ஒற்றைக் கொம்பையும் பெருமையையும் உடைய யானைக்கன்று ஆகிய விநாயகக்கடவுளின் உள்ளங்கையில் தம்முடைய கையிலிருந்த மாதுளங் கனியைக் கொடுத்தனர்.

பாம்பு என்பது பாம்பு என வன்றொடராயிற்று அதனை "மென்றொடர் மொழியுட் சிலவேற்றுமையிற்-றம்மின வன்றொடராகா மன்னே" என்ற நன்னூல் விதியால் அமைத்துக் கொள்க. விட்டுணுவின் பாம்புருவச் சாபம் நீக்கியதாவது:—

கைலை மலைக்கண் கறைமிடற்றிறைவனும் கௌரிதேவியும் ஓர் திருவிளையாடல் காரணமாகச் சூது விளையாடினர். வெற்றி தோல்வி அறிந்து சொல்வதற்காகத் திருமாலை நியமித்தார். ஒருமுறை இறைவன் வென்றான் இறைவி தோற்றாள். மறுமுறை இறைவி வெல்ல இறைவன் தோற்றான். திருமாலைக் கேட்கச் சிவபெருமானே வென்றனரென்று பொய் கூறினர். அதுகேட்ட உமாதேவியார் சிறிது சினமுற்று, கண்ணிருந்தும் பொய்கூறினமையால் குருட்டுப்பாம்பாகி உழலக்கடவாய் என்று சபித்தார். அங்ஙனந் திருமால் குருட்டுப்பாம்பாகி அளவிறந்த காலம் வருந்தாநிற்கையில், ஐங்கரக்கடவுள் கயமுகாசுரனைக் கொன்று வரும் வழியிற் பாம்பைநோக்கவே அச்சாபந் தீர்ந்ததென்று சிவாகதியந்தும் கந்தபுராணமும், அகந்தன் சாபநீங்கு படலத்துக் கூறப்பட்டுளது. 33

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

குருளங்கிழிவவென்றமேவுன்முருக
னிறைபுகன்றபடிசூழ்வலன்
பரிபூம்புரிபயிரைதனுக்குமுமு
பாரிடம்புரை ...

வீரவாகுமுதலியதொல்வீரர்கள
மிசைந்தொருங்குமருங்குறச்
சாரதத்தலைவரனிகம்வெள்ளம்வலி
தரநனந்தலைபெயர்ந்தனர்.

இ-ள். சூரபன்மனது மார்பு கிழியும்படி வெற்றிகொண்ட வேலாயுதத்தையுடைய முருகக்கடவுள் சிவபெருமான் கூறியபடி பூமியைச் சுற்றி வலம்வரவேண்டு மென்றுவிரைக் கெழுதலும் கூட்டமாகிய பூதங்கள் பக்கத்திற் பார்தன, வீரவாகு முதலிய பழையவீரர்கள் கூடி யொரு பக்கத்திற் பொருந்த. பூதத்தலைவர்கள் சேனைவெள்ளம் பக்கத்தில் வர நடுவேசென்றார்கள். 34

ஆரநீள்கவிகைநீழல்வாணில
வளிப்பமொய்த்துமிளிர்பிச்சநீ
டாரின்விசனிமகோததிக்குளசை
சாமரைத்திரைகள்வீசிடச்
சீருறுங்கவிரலர்ந்தசெந்தலைய
சேவலந்துவசமீதெழக்
காரிநீடுமுதுகூடுபீலிதிகழ்
கதலிகைக்கொடியுரிஞ்சவே.

இ-ள். மாலைகள் கட்டப்பட்ட நீண்டகுடைகள் நிழலாகிய வெள்ளிய நிலவைச் செய்யவும், நெருங்கிவிளங்கும் பீலிக்குடையாகிய நீண்ட ஒழுங்காகவீசும் அழகிய சமுத்திரத்துள், அசைகின்ற சாமரைக் கூட்டங்களாகிய திரைகள் வீசவும், சிறப்புற்ற முருக்கமரத்தின் பூவைப் போன்ற சிவந்த சூட்டுத்தலையையுடைய சேவற்கொடியானது மேலே எழுந்து, சனிமண்டலத்தின் முதுகினிடத்தே மயிற்பீலி விளங்கும் துகிற்கொடி யுரோஞ்சவும். 35



தெண்டிரைக்கடலினன்மறைச்சுருதி
திசைதொறுந்தொறுமொலிப்பவே
வண்டுபாண்முரலவிண்டவேரிமலர்
கொண்டுவானவர்வழுத்தவே
பண்டைவிஞ்ஞையர்நரம்புளாழ்ந்திசை
ததும்பவீணைமுறைபாடவே
தொண்டர்கண்டுதுளிதூங்கவீங்கருள்
சுரந்துநெஞ்சொடுமிறைஞ்சவே.

இ-ள். தெளிந்த திரைகளையுடைய கடலைப்போல நான்கு வேதங்களின் இசைகள் திக்குகள் தோறும் ஒலிக்கவும், வண்டுகள் பண்ணைப் பாடவும், அலர்ந்த வாசனைகொண்ட புட்பங்களைக் கொண்டு தேவர்கள் துதிக்கவும், பழமையாகிய வித்தியாதரர்கள் நரம்புகளை உள்ளிற் காணஞ்செய்து இசைபொருந்தும்படி வீணைகளைக் கிரமமாகப் பாடவும், அடியவர் கண்டு உவகை யதிகரிக்கவும், மிக்க அருள்பெருகி மனத்தினின்று வணங்கவும்.

கடலின் - இன் - உவமவுருபு சுருதி—இசைகள். தொறும்தொறும் என்னும் அடுக்குமிகுதிப்பொருட்டு. தொறும்—இடப் பன்மைப்பொருளில் வரும் இடைச்சொல்.

வீணையை முறையே பாடுதலாவது:—

சித்திரப் படத்துளிருந்து கோட்டிலே மாலை கட்டப்பட்டு, மணமகளிர் கோலம்போல அழகுற்று, பத்தர், கோடு ஆணி, நரம்பு என்னும் யாழுறுப்புக்களைக் குறைவறப்பெற்று விளங்கும் குற்றநீங்கிய யாழை எடுத்து. மாதங்கி என்னுந் தெய்வத்தைத் தொழுது; பண்ணல், பரிவட்டனை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு என்னும் எட்டுக் கலைத் தொழில்களானும் இசையெழுப்பி

பண்பாகு பாட்டிற் குற்றந்தீர்ந்து, மெல்லிய விரல்கள் பாடுகின்ற வண்டுக் கூட்டங்களைப்போல நரம்புகளின்மீதுபடர, வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை என்னும் இசைக்கரண வுறுப்புக்கள் எட்டினுலும் நன்குபாடல் பொருந்தப்பாடுவதாம்.

சொல்லப்பட்ட எட்டுக் கலைத்தொழிலுள்,

(1) பண்ணலாவது - பாட நினைத்த பண்ணுக்கு இனைகிளை பகை நட்பான நரம்புகள் பெயருந் தன்மை மாத்திரை யறிந்து இறக்குதல்.

(2) பரிவட்டணையாவது - அவ்வாறு கட்டியிறக்கிய நரம்புகளை அகவிரலாலும் புறவிரலாலும் கரணஞ்செய்து தடவிப்பார்த்தல்.

(3) ஆராய்தல் ஆவது - ஏற்ற இறக்க வகைகளால் இசையை யறிதல்.

(4) தைவரல் ஆவது - அநுசுருதி யேற்றுதல்.

(5) செலவு ஆவது,

மகரத்தி னேற்றாற் சுருதி விரவும்
பகருங் குறினெடில் பாரித்து - நிகரிலாத்
தென்னா தெனாதென்று பாடுவரே லாளத்தி
மன்னாவிச் சொல்லின்வகை.

குன்றாக் குறிலைந்துங் கோடா நெடிலைந்து
நின்றார்ந்த மந்தரந் தவ்வொடு - நன்றாக,
நீலத்தா லேழு நிதானத்தா னின்றியங்க
வாளத்தி யாமென் றறி.

என இசைநுணுக்க நூலுடையார் கூறியவாறு ஆளத்தியிலே நிரம்பப் பாடுதல்.

(6) விளையாட்டு ஆவது - பாடநினைத்த வண்ணத்திற் சந்தத்தை விடுதல்.



(7) கையூழ் ஆவது - வண்ணத்திற்செய்த பாடலெல்லாம் இன்பமாகப் பாடுதலாம்.

(8) குறும்போக்காவது - கூடகச் செலவும் துள்ளற் செலவும் பாடுதல்.

இசைக்கரண மெட்டினுள்.

(1) வார்தல் ஆவது - சுட்டு விரலாற் றொழில் செய்தல்.

(2) வடித்தல் ஆவது - சுட்டுவிரலும் பெருவிரலுங் கூட்டி நரம்பினை அகமும் புறமும் ஆராய்தல்.

(3) உந்தல் ஆவது - நரம்புகளைத் தெறித்து வலிவிற் பட்டதும் மெலிவிற் பட்டதும் நிரல்பட்டது முணர்தல்.

(4) உறழ்தல் ஆவது - ஒன்றிடை யிட்டும் இரண்டிடை யிட்டும் நரம்புகளைத் தெறித்தல்.

(5) உருட்டல் ஆவது - இடக்கைச் சுட்டுவிரல் உருட்டலும் வலக்கைச் சுட்டுவிரல் உருட்டலும் சுட்டொடு பெருவிரற்கூட்டி யுருட்டலும், இரு பெருவிரலும் இயைந்துடன் உருட்டலுமெனுமிவை பிறவற்றைச் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், இசை நுணுக்கம் முதலிய பரந்த நூல்களுட் காண்க.

இசைத்தமிழ்ப் பதினறுபடலம் - கரணவியல்.

வல்க்கைப் பெருவிரல் குரல் கொளச் சிறுவிரல்
விலக்கின் றிளிவழி கேட்டு மினைவழி
யாராய்ந் திணைகொள முடிப்பது
விளைப்பருமரபிற் பண்ணலாகும்.

என வருவனவற்றாற் கலைத்தொழில் காண்க.

ஏனைய இசைக் கரணங்களை,

தெருட்ட லென்பது செப்புங்காலை
யுருட்டி வருவ தொன்றே மற்ற

வொன்றன் பரட்டுமடை யொன்ற நோக்கி
வல்லோராய்ந்த நூலே யாயினும்
வல்லோர் பயிற்றுங் கட்டுரை யாயினும்
பாட்டொழிந் துலகினி ளொழிந்த செய்கையும்
வேட்டது கொண்டு விதியுறநாடி

என வருவனவற்றுற் காண்க. 36

பானுகம்பிரணவவலம்புரி
பதாதிவாரியின்முழங்கவே
ஞானவானர்குடமுழவுநான்முகமு
மொத்துநள்ளிடைபுரப்பவே
வானதுந்துமிவிண்ணசனியேற்றெதிர்
மலைந்துபேரொளிவழங்கவே
யேனைமொய்ந்நைதுடிபதலைகல்லவட
மீரலேபேரியுமிரங்கவே.

இ-ள். பானுகம்பனது பிரணவ வடிவான வலம்புரிச்சங்கு சேனை முத்திரத்தில் முழங்கவும், அறிவினையுடைய தேவர்களது குடாமுழாவுட் மத்தளமும் ஒன்று சேர்ந்து நடுவிடத்தேயொலிக்கவுந் தேவதுந்துபிகள் இடியேற்றைப்போல எதிர்த்துப் பெரிய ஒலியைச் செய்யவும், மற்றைய ஒருகட்பறையும், உடுக்கையும், வாயகன்ற பறையும், கல்லவடமும், கொம்பு முரசமுதலியவும் ஒலிக்கவும். 37

மின்னிவுர்ந்தகதிர்வேலன்வந்தனன்
விசாகனாறுமுகன்வந்தன
னன்னையம்பிகைகுமாரன்வந்தன
னலங்கலன்குரவன்வந்தன



னென்னையாளுடையகுழகன்வந்தனனெ
னிறைவன்வந்தனனெனுமணிச்
சின்னமுன்புபணிமாறமஞ்ஞைமிசை
சென்றனன்குணதிசைக்கணே.

இ-ள். மின்னலினும் மேற்பட்ட ஒளியை யுடைய வேலாயுதப்பெருமான் வந்தனர், விசாகநட்சத்திரத்திற் றோன்றினவரும். ஆறுமுகங்களையுடைய கடவுளும் வந்தனர், பரமமாதாவாகிய உமாதேவியின் புத்திரர் வந்தார், குராமாலையையுடைய கடவுள்வந்தனர், என்னை யடிமையாகவுடைய குழகப்பெருமான் வந்தனர், என்னுடைய கடவுள் வந்தனர் என்று, இரத்தின சின்னங்கள் முன்னரே ஊதிச்செல்லக் கந்தப் பெருமான் மயில்வாகனத்தின்மீது கிழக்குத்திசையிற் சென்றார். 33

சீதவெண்டிரைவழங்குதெள்ளமுது
கொள்ளைகொண்டுநுகர்தேவரு
மோதுமண்டர்களுமாரணங்கினரு
முள்ளுவந்துதுதிகொள்ளவே
போதுகொண்டடிபணிந்துவெண்பக
டிவர்ந்துவெண்கெழுபுரந்தர
னுதாங்கொடயல்பெயரவேன்முருக
னங்கியந்திசையனடந்தனன்.

இ-ள். குளிர்மையாகிய வெள்ளிய அலைகள்பயிலும் பாற்கடல்கொடுத்த தெளிந்த அமிர்தத்தைக் கொள்ளைகொண்டு பருகியதேவரும் சொல்லப்பட்ட அண்டங்களி லுள்ளவர்களும் அரிய தேவப் பெண்களும், மனமகிழ்ந்து துதியைக்கொள்ளவும், மலர்கள் கொண்டு திருப்பாதங்களைவணங்கி வெள்ளையானையின் மீது ஏறி, ஆகாயத்தில் இருக்கும் இந்திரனை

வன். அன்புற்றுப் பக்கத்தே செல்லவும், வேலாயுதத்தையுடைய முரு
கக்கடவுள் அக்கினிதிசையாகிய தென்கீழ்த்திசையை யடைந்தார். 39

அவிசொரிந்தெரிவளர்த்தருந்தவ
மிழைத்தரும்பொருடினைக்குமறு
செவிகவர்ந்தசதுமாமறைத்தலை
சிறந்ததாபதர்சிரககரங்
குவியவந்தடிவணங்கவங்கிதிரி
கோட்டுமேழகநடாத்தவே
கவின்விளங்கியசிகண்டியூர்கருணை
வாரிதென்றிசைகலந்தனன்.

இ-ள். பலிகளை யிட்டு, யாகாக்கினியை வளர்த்து அரியதவத்தைச்
செய்து அரிய பொருள்களை நினைத்துத் தங் காதுகளினாலே கிரகித்த
நான்குவேத வொழுக்கத்திற் சிறந்த முனிவர்கள் தமதுதலையிலே கைகள்
குவியும்படி வந்து பாதங்களை வணங்க, அக்கினிதேவன் முறுகிய கொம்
பினையுடைய ஆட்டுக் கடாவாகனத்தைச் செலுத்த, அழகுவிளங்கிய மயில்
வாகனத்தைச் செலுத்துகின்ற அருட்கடலாகிய குமாரக்கடவுள் தெற்குத்
திசையடைந்தார். 40

அம்பரத்தகடுரிஞ்சுசென்னியெரி
குஞ்சிபிஞ்ஞகமெய்யாரழற்
செம்பொறிச்சிதறுகட்படைத்தொகை
செறித்தகைப்படர்நெருக்கெனும்
பைம்பசிக்கடனடுச்சமன்பரவி
வெஞ்சினப்படர்மருப்பிடை
வெம்பகட்டுமிசைபோதமேதகுதென்
மேலைமாதிரம்விராயினன்.



இ-ள். ஆகாயத்தின் வயிற்றை உரிஞ்சுகின்ற தலையும் அக்கினி
போன்ற குலைந்த தலைமயிரும் அழலுகின்ற தேகமும்சிவந்த நெருப்புப்
பொறி சிதறுகின்ற கண்களையுமுடைய சேனைக் கூட்டங்களும் நெருங்
கிய கைகளையுடைய யமபடரும் ஆகிய நெருக்கமானபசியசமுத்திரத்தின்
நடுவிலே யமனானவன் நின்று துதித்து. மிக்க கோபத்தையுடைய பாரத
கொம்புள்ள கொடிய எருமைக் கடாவின்மேற்செல்ல, மேன்மைபொருந்
திய தென்மேற்குத் திசையை அடைந்தார். 41

கங்குல்வெண்பிறைசெவ்வானணிந்துநடை
வந்தியங்குதல்கடுப்பவே
வெங்கண்வாளுணெயிறுசெஞ்சிகை
விளங்கவேலையின்வளைந்தெழப்
பொங்குபோர்நிருதிபோற்றிவீறுநர
வாகனத்தின்மிசைபோதரப்
பங்கயன்பொருண்மயங்கவென்றவ
னகன்றுபச்சிமமடைந்தனன்.

இ-ள். இராக்காலத்தில் தோன்றும் வெள்ளிய பிறைச் சந்திரனா
னது செக்கர்வானத்தைத் தரித்து நடைகொண்டுவந்தாற்போலக் கொடிய
கண்களையுடைய வாளாயுதத்தைத்தரித்த அசுரர்கள் வக்கிரதந்தங்களும்
சிவந்த குடுமியும் விளங்கும்படி சமுத்திரத்தைப்போற் சுற்றிவர, மிக்க
போரில்வல்ல நிருதியானவன் குமாரக்கடவுளைத் துதித்துப் பெருமை
பொருந்திய மனுஷவாகனத்தின், மீது வரவும் பிரமதேவர்உண்மைப்
பொருள் தெரியாது மயங்க வெற்றிகொண்டவரான குகப்பெருமான்
அவ்விடத்தினின்றும் நீங்கி மேற்குத்திசையடைந்தார். 42

வந்துவந்தனைபுரிந்துமுழ்குநர்
மலங்கடிந்தருள்புரிந்திடுஞ்
சிந்துதெண்டிரையிரங்குகங்கைமுத
லளவிறெய்வநதிமோய்தொள

வந்தநீர்வருணனடிவணங்கியுடன்
மதமமீவரவலங்கல்வேற்
கந்தன்விண்டொழுசிகண்டியம்பரி
கடாவிவாயுதிசைமேவினான்.

இ-ள். அடைந்து வழிபாடுசெய்து தம்மிடத்துத் தோய்கின்றவாது மலத்தை நீக்கி அவர்க்கு அருளைப் புரிகின்ற சிந்துநதிதெளிந்த திரைகளையுடைய கங்காநதிமுதலான அளவில்லாத தெய்வத்தன்மையுடைய ஆறுகள் நெருங்கிவரும்படிவந்த, நீர்வடிவத்தையுடைய வருணதேவன் கந்தக்கடவுளினது திருப்பாதங்களைப் பணிந்து வலிமைபொருந்திய மகாமீன் மீதுவர, மாலையைத்தரித்த வேலாயுதத்தையுடையகந்தசுவாமியானவர் மேலுலகத்தவரால் தொழப்படுகின்ற மயில்வாகனத்தைச் செலுத்தி வாயுதிசையாகிய வடமேற்றிக்கிற்சார்ந்தார். 43

விரிதலைப்புவனமுழுதுமொக்கவிர
வியவொலிக்கடவுளெதிர்கொளா
முருகுயிர்த்தநறுமலரிறைத்துமுறை
பரவிமொய்த்தபரிசனரொடே
கருநிறத்திருகுபுரிமருப்பிரலை
கடிதிலுய்த்தருகுதொடரவே
யருள்படைத்தவிழியளைபெற்றதவ
மயில்படைத்தகரனருளினான்.

இ-ள். பரந்த இடத்தையுடைய பூமிமுழுவதினும் ஒருபடித்தாய்க் கலந்து நிற்கின்ற வாயுதேவன் எதிர்கொண்டு வாசனைவீசுகின்ற நல்ல புஷ்பங்களைத்தூவி முறைமையேதுதித்து நெருங்கியசேனைகளோடு கருநிறத்தையுடைய மாறுபட்ட முறுகிய கொம்பினைக்கொண்ட கலைமான்



வாகனத்தை விரைவிற்செலுத்திப் பக்கத்திற் றொடரும்படிசெல்ல, வேலாயுதம் விளங்குங் கையாகிய குமாரக்கடவுள் அளகாடரிசெய்த தவத்தினால் அங்குள்ளவர்தரிசிக்கும்படி தம் திருவுருவைக் காட்டியருளினார்.

கானவிஞ்சையரியக்கர்கிம்புருடர்
கருடர்காந்தருவர்முதலினோர்
வானநாடரசுரேசரேனையர்
கலாவவச்சிரவணன்றொழு
மீனுலாமணிவிளங்குபுட்பக
விமானமீதுவரமேலையோர்
சேனைகாவலன்வடாதுபாலொடு
செறிந்தகீழ்த்திசையுறைந்தனன்.

இ-ள். கீதத்தில் வல்ல வித்தியாதரர்களும் கின்னரர்களும் கிம்புருடர்களும் கருடர்களும் கந்தர்வர்களும் இவர் முதலாயினோரும் தேவர்களும் அசுராதிபர்களும் மற்றையோரும் கலந்துவரக் குபேரனானவன் வணங்கி விண்மீன்போன்ற இரத்தினங்கள் பதிக்கப்பட்ட புட்பக விமானத்தின்மேல்வர, தேவ சேனாபதியாகிய சுப்பிரமணியக்கடவுள் வடக்குத் திசையையடைந்தார். 45

சீருருத்திரர்வசுக்கணமாமுனிவர்
தீர்த்தர்பூத்திரளிரப்பவே
மேருவாதிகிரிபுவனமெண்களிறு
விண்டுவாதிபுடைமண்டவே
சாரதத்தலைசிறந்துளோரொடு
மீசனஞ்சலிதிருத்தவே
கார்மயிற்பரிநடாவியோய்வினோர்
கணந்தனிற்கயிலைமேவினான்.

இ-ள். சிறப்பினையுடைய உருத்திரர்களும் அட்டவசுக்களும்பெரிய முனிவர்களும் சாரணர்களும் புஷ்பத் தொகுதிகளைச்சொரிய, மேருமலை முதலாகிய மலைகளும் புவனங்களும் எட்டுத்திக்குகளினுமுள்ள யானைகளும் குலாசலங்களும் பக்கத்தில்வந்து நெருங்க, பூதகணத் தலைவர்களோடும் ஈசானருத்திரர் அஞ்சலிசெய்துவர நீலநிறம் பொருந்திய மயில் வாகனத்தைச் செலுத்தி ஒருகணநேரத்துட் கந்தசுவாமியானவர் கயிலாய மலையை யடைந்தார்.

உருத்திராவார்—ஆயிரகோடிஉருத்திரர், நூறுகோடி உருத்திரர், பதினொருகோடி உருத்திரர், ஏகாதச ருத்திரரெனப் பலவகைப்படுவர்.

அட்டவசுக்களாவார்—அனலன், அனிவன், ஆபற் சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன், எனுமிவர்களாம்.

சாரணராவார்—தலசாரணம், சலசாரணர், பலசாரணர், புட்பசாரணர், தந்துசாரணர், சதுரங்குல சாரணர், சங்கசாரணர், ஆகாயசாரணர் எனுமிவர். 46

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தந்தைமலர்க் கைச்செழுங்கனி தன்றமையன் றளிர்க்கை
தனிற்காணச், சிந்தைதெளிந்தாண்டொருவியுயர் தேவகிரிச்
சேதிமம்வைகி, யந்தவரைச் சாரலினெடுநாளாற்று மரியதவ
முனிவர், தந்தநெறிவந்தனைபுரியத்தாமேபெறுநல்வரநல்கி.

இ-ள். தந்தையாருடைய தாமரை மலர்போன்ற திருக்கரத்திலிருந்த செழுமையான மாதுளம்பழம் தமது தமையனுடைய தளிர்போன்ற கையினிடத்திற் காணப்பட மனந்தெளிவுற்று அவ்விடத்தினின்றும் நீங்கி உயர்ந்த தேவகிரியின் கண்ணுள்ள சேதிமத்தலத்திற்சென்று வீற்றிருந்து அந்தமலையின் சாரலில் நீண்டநாளாகத்தவத்தைச் செய்கின்ற



முனிவர்கள் சிவாகமவிதிப்படி பூசைபுரிய அவற்றையேற்று நல்லவரங்களையும் அவர்களுக்குக்கொடுத்து. 47

பாயும்விடையூர்பகவனுக்குந்தனக்கும்பழையபதியென்றோ
வாயதிருவாவினனிவரையளித்துமென்றோவேனவரை
யேய்சாரலுறுந்தவமோயாதோயாவரறிகிற்பார்
சேயதிருவாவினன்குடியிற்சென்றான்குன்றுதொறுநின்றான்.

இ-ள். தாவிச்செல்லும் இடபவாகனத்தையுடைய சிவபெருமானுக்குந் தமக்கும் பழமையாகவுள்ள தலமென்றுகொண்டோ? பூசித்த இலக்குமிதேவி காமதேனு சூரியன் என்னும் இவரைக்காப்பமென்று நினைத்தோ? வராகமலையிற் பொருந்திய சாரலானது செய்ததவமோ? யாதோ எவரறியவல்லவர்? மலைகடோறும் தங்கியருளும் குமாரக்கடவுள் செப்பமான திருவாவினன் குடியிற்சென்றனர். 48

போற்றியரியதவம்புரிசெம்பொறியாவினனின்னோர்தமக்குந்
தோற்றவரியகாட்சிநனிவழங்கிவடிவேற்சுடர்நிதியா
னாற்றினிமிர்ந்தநறும்புனலொண்டீர்த்தமொன்றுவருவித்தா
னாற்றலுறநின்றிருபயனும்பெறுமாறுடினான்றே.

இ-ள். தம்மைத் துதித்து அரியதவத்தைச்செய்த சிவந்தஇலக்குமிதேவிக்கும், காமதேனுவுக்கும், சூரியனுக்கும் மற்றையோருக்குந்தோற்றற்கரிய தமது உருவை மிகுதியுமளித்து, கூரிய வேலாயுதமாகிய ஒளி பொருந்திய நிதியினாலே குமாரக்கடவுள், பெருக்கின் மேம்பட்ட நல்ல நீர்நிறைந்த அழகிய தீர்த்தமொன்றை யுண்டாக்கினர், வலிமை பொருந்திநின்று இம்மைமறுமைப் பிரயோசனங்களும் அடையும்படி ஆக்கினார்கள்.

இலக்குமி, காமதேனு, சூரியன் என்னும் இவர் பூசித்தமையால் திருவாவினன் குடியெனப் பெயர்பெற்றதென்க. திரு—இலக்குமி

தேவி, ஆ—காமதேனு, இனன்—சூரியன். கு—பூமி, டி-அக்கினிதேவ னும் பூசித்ததெனவுழுவைப்ப. 49

ஒருகன்னலினுன்மறைக்கிழவ னுவணமுயர்த்தோனுருவு
கொண்ணு, மிருவருணரவரியவடிவெடுக்கு மகேசனெனவைகு,
மருவுமுருவுமருவுருவும் வாமத்தொழிலாற்றிடுமீளப், பொரு
விலுருவுகொளுங்விளையாட்டொன்றோ பலவும்புரிந்திடுமால்.

இ-ள். ஒரு கணத்துள் பிரமன் வடிவையுங்கருடக் கொடியையுடைய விட்டுணு வடிவையும் கொள்வார், அவ்விருவரு மறிதற்கரிய உருத்திர வடிவையுங் கொள்வார், அவர்க்குமேற்பட்ட மகேசுர மூர்த்தியாகவும் இருப்பார், அருவமும் உருவமும் அருவுருவமும் கொண்டு அழகிய பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்வர், பின்னரும் ஒப்பில்லாத வடிவங்களைக் கொள்வார், அவரது திருவிளையாட்டு ஒன்றுகுமோ, பலவற்றை யுஞ்செய்வார். 50

எண்டிசைக்களிப் போருடல் பணிப்பநோக்குமிசைக்கு
முடன்கருணை, கொண்டுசிறுபுன்னகைநகைக்கு மிதுவேகை
லைக்குவடென்னு, மண்டர்தொழவீற்றிருக்கு மெங்களடிகள்
செயலீதங்கரிற், றெண்டை யிதழும்பிகையோடுந்தோன்ற
லடைந்தவாபுகல்வாம்.

இ-ள் எட்டுத் திக்குகளையுங் காக்கின்ற திக்குப்பாலகரது சரீரம் நடுங்கப் பார்ப்பார், பேசுவார், உடனே அருள்கொண்டு குறுமுறுவல் செய்வார், இம்மலையே கயிலை மலையென்று சொல்வார் தேவர்கள் வணங்க வீற்றிருப்பார். எமது குமாரக்கடவுளின் செயல் இதுவாதம், அத்தலத்திற் கோவைக் கனிபோன்ற அதரத்தையுடைய உமையம்மையாருடன் சிவபெருமான் அடைந்தவாலாற்றைச் சொல்வாம். 51

எமதுமுருகனோபிரியுமென்னுவிரங்கியிமயமக
ளுமைபங்குலவமூவிடத்தந்தாதுந்துமிகளுமொலிப்ப



வமரரிறைஞ்சப்பூதகணநெருங்கவயன்மால்புடைவ்ணங்கக்
குமாறுறையாவினன்குடியிற்குடிகொண்டானக்குடிவாழ்வே.

இ-ள். நமது குடிக்கு வாழ்வாகிய சிவபெருமான்) எம்முடைய முருகனே பிரிந்து செல்வான் என்று இரங்கி இமயமலை யாசன் புத்திரியாராகிய உமாதேவியார் பாதத்திலே விளங்க, மூவுலகத்தி னிடத்தும் தேவதுந்துபிகள் ஒலிக்கவும், தேவர்கள் வணங்கவும். பூதகூட்டங்கள் நெருங்கவும், பிரம விட்டுணுக்கள் பக்கத்திலே நின்று வணங்கவும், குமாரக்கடவுள் எழுந்தருளி யிருக்கின்ற திருவாவினன் குடியில்வந்த ருளினர்

செஞ்சேவ்வேற்சேய் சினகரத்திற்சிவபிரான்வெள்விடை
யிழிந்து, வஞ்சியுமையோ டெழுந்தருளு மளவிலளக்கரோட
ளக்க, ரெஞ்சலறவேற்பனபோல் வந்தெதிர்ந்துகலந்ததொகுதி
யிடை, விஞ்சவிறன்மொய்ம் பினனந்தி யடியார்கரவேத்திர
மொலிப்ப.

இ-ள். சிவந்த வேலாயுதத்தை யுடைய குமாரக் கடவுளது கோயிலின்கண், சிவபெருமான் வெள்ளிய இடப வாகனத்தி னின்றும் இறங்கி, அழகிய வில்வடிவுபோன்ற கூந்தலை யுடைய உமாதேவியாருடன் போகுங் காலத்தில், சமுத்திரத்துடன் சமுத்திரம் கலப்பது போலவந்து எதிர்த்துக் கலந்த கூட்டத்தி னிடத்தில், மிக்க திறலையுடைய வீரவாகுதேவரும், நந்தி தேவரும், கைப்பிரம்பி னொலியொலிக்கவும். 53

இன்னவாயவவையினிடையிகல் செவ்வேலோன்றுதை
யையு, மன்னையையுந்தாழ்ந்தனனெமையாளமலனிருகையா
லெடுத்துத், தன்னதகன்மார்புறப்புல்லித் தழுவியுச்சிமோந்து
மணிப், பொன்னந்தவிசிலினிதிருந்து புடைவீற்றிருந்தான்
கரங்கொடுத்து.

இ-ள். இவ்வாறிய சபையி னிடத்திற் பிணக்குற்ற சிவந்தவேலாயுதப்பெருமான் தமதுதந்தையாரையும், தாயாரையும் வணங்கினர், எம்மை

யடிமைக்கொளும் நிருமலாகிய சிவபெருமான் தமது இருகைகளாலு மெடுத்து, தம்முடைய அகன்றமார்பிற் பொருந்தத்தழுவி, உச்சிமோந்து, இரத்தினங்க ளழுத்திப் பொன்னாற் செய்யப்பட்ட ஆசனத்திலே பக்கத்திலே வீற்றிருந்த உமையம்மையாரது திருக்கரத்திற் கொடுத்து.

அறுசீர் சந்த விருத்தம்.

முருகவருகவருளுததிமுத்தேவருகமுராரிதிரு
மருகவருகவெமதுகுலமகவேவருகமுலைதரும்பால்
பருகவருகவெனவெடுத்துப்பருவங்கூறிமடியினில்வைத்
திருகையான்மீளவுமிறைவனெடுப்பவளித்தாளுலகீன்றாள்.

இ-ள். முருகனே யெம்மிடத்து வருக, அருட்கடலில் விளைந்தமுதே வருக, திருமாலின் அழகியமருகனே வரக்கடவாய் எம்முடைய செல்வப்புதல்வனே வருக, தனத்திற் றோன்றும் நல்ல பாலையுண்ணவரக் கடவாய், என எடுத்து வருகைப் பருவஞ்சொல்லி, மடியில்வைத்து இருக்க, இரண்டுகையினால் எடுத்துப்பின்னரும் சிவபெருமான் எடுக்கக் கொடுத்தனள், உலகங்களை யெல்லாம் பெற்ற பெருமாட்டியாராகிய உமாதேவியார். 55

ஈசனுருகிமடியினில்வைத்தெனறிளையோயறிவுடையை
தேசுதருநம்வானுதற்கண்மணிநீசிறுவனோபெரியை
வாசநறுமென்கனியுமொருகனியோமதுரமொழிவர்யாற்
பேசவரியமறைஞானப்பிள்ளைபழநீயெனப்புகன்றார்.

இ-ள். சிவபெருமான் உருகி, தமது மடியில் வைத்து எக்காலத்தும் இளமைப்பருவத்தை யுடையவனே, அறிவையுடையாய், ஒளிகொண்ட நமது உமையின் கண்மணியாகும், நீ சிறுபிள்ளையோ, பெரியவன் ஆயிருக்கின்றாய், வாசனைபொருந்திய நல்லமிருதுவான் மாதுளம்பழமும் ஒரு பழமாகுமோ? இனியசொற்களை வசனிக்கின்ற திருவாயினாலேசொல்லற்கரிய வேதத்திற் கூறப்பட்ட ஞானக்குழந்தை யாகும் பழம் நீ யென்று சொன்னார். 56



கலிநிலைத்துறை.

இவ்வாறுமாற்றமிசைத்தோதுபிதாவையின்சொன்
மைவாட்கண்ணனைதனையுந்துதிவாய்மையின்வழுத்திச்
சைவாகமத்தின்வழிபாடுபுரிந்தேதாழ்ந்து
மொய்வாசம்வீசுமலர்தூவிமுயன்றுநின்றான்.

இ-ள். இங்ஙனம் சொற்களை வகுத்துக் கூறிய பிதாவாகிய சிவபெருமானையும், இனிய சொற்களையும் அஞ்சனந்தோய்ந்த வாளாயுதத்தைப் போன்ற விழிகளையு முடைய உமையினையும், துதிச்சொற்களாகக்கூறித் தோத்தரித்து, சிவாகம விதிப்படி பூசைபுரிந்து வணங்கி, நெருங்கிய வாசனைவீசும் புட்பங்களைச் சொரிந்து வழிபாட்டு முயற்சிகொண்டு நின்றார். 57

நின்றானைநம்பன்வருகென்றுநெஞ்சுருகப்புல்லி
மின்றாவுசீயப்பிடாரதன்மீதுநாப்ப
ணொன்றாயமைத்துப்புரிபூசனையுண்மைநன்று
நன்றாயவீதுமவையாவுநவிற்றுகென்றான்.

இ-ள். நின்ற குமாரக்கடவுளைச் சிவபெருமான் இங்கு வருக என்று குழையும்படி தழுவி, ஒளிநிலைத்த சிங்கப்பிடரியின் நடுவிடத்து, ஒருசேரவைத்து; நீசெய்த பூசனை யுண்மையானது, நல்லது, நன்மையானவற்றைக் கொடுப்பேம், அவைகளெல்லா வற்றையுஞ் சொல்வாயாகவென்றார். 58

மூவாதமுன்னைப்பொருளாகியமுக்கண்மூர்த்தி
யோவாமையெஞ்ஞான்றுநின்றேடிவண்வைகலானு
மாவாதவன்போன்றுயர்தீரவடையினீண்டுத்
தாவாதியாருங்கதிசாரவுந்தந்திடென்றான்.

இ-ள். முதிராத முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாகிய திரிநேத்திரங்களையுடைய தந்தையே! இடைவிடாமல் தேவரீரோடு எந்நாளும் யான் இவ்விடத்திலிருத்தலால், இலக்குமி காமதேனு, சூரியன் என்னு மிவர்போன்று உயர்வு நீங்க வந்துசேரினும், இவ்விடம் வந்தார் யாவரும் குறையாமல் நற்கதியை யடையவும் வேண்டும் அவ்வரத்தைத் தந்தருளவேண்டுமென்று கூறினர். 59

பூமேவுவர்ரிப்புரிமீதுபொருவில்வேலோய்
யாமேவுமூதுரிமையோர்களிறைஞ்சிவாழ்த்தத்
தாமேவுமாமுதலாயவர் தாழ்வுநீங்கி
நீமேவுஞான்றநிலைத்துய்த்தனர்நீக்கல்யாதே.

இ-ள். ஒப்பில்லாத வேலாயுதத்தை யுடையாய்! பூமியின்கணிருப்பவர், இந்தத் தலத்தின்மேல் யாங்களிருவரும் இருக்கு மூர் என்று பூசிப்பராயின் அவர் தேவர்கள் வணங்கித் துதிக்க, எம்மைக்கண்டு முத்தியடைவர். இலக்குமி முதலானோர் தமது குறைவுநீங்கி, நீஇங்கே வந்தநாள்முதலாக நிலைபெற்றுப் பிழைத்தனர், அதனை நீக்குதல்கூடுமோ? 60

வந்தித்துநம்மைக்குகநீமலர்தூவுமூதூர்
சந்தித்தபேர்கள்கதிசார்குவர்தக்கதன்றே
பந்தித்தவெய்யகொடும்பாதகரேனுநின்னைச்
சிந்திக்கின்முத்தியளிப்பமதுதிண்ணமாதோ.

இ-ள். குகனே! நீ எம்மை வழிபட்டுப் பூச்சொரிந்து அர்ச்சித்த பழமையாகிய இவ்வூரை யடைந்தவர்கள் முத்தியை யடைவார்கள், ஆதலால் இது தகுதியையுடையது, மலத்தால் பந்திக்கப்பட்ட மிக்க கொடிய பாதகர் ஆயினும் உன்னை நினைத்தால், உடனே யவர்க்கு முத்தியைக் [illegible] அது உறுதி. 61



தனிநெடுவேலிற்றோட்டசரவணத்தீர்த்தமூழ்கும்
புனிதர்நங்கயிலைவைகும்பொருவினற்கணங்களாவர்
கனியநின்னாமங்கூறிக்கார்த்திகைத்திங்கண்முற்று
மினியவந்நீரிற்றோய்ந்தோரெம்முருப்பெறுவர்திண்ணம்.

இ-ள். நீ ஒப்பற்ற நீண்ட வேலாயுதத்தினாற் றோண்டிய சரவண தீர்த்தத்தின் முழுகும் பரிசுத்தர்கள், நமது கயிலைமலையின்கணிருக்கும் சிவகணங்களாவார், கனிந்தருகுதற் கேதுவாய (அல்லது பழத்தன்மையையுடைய, பழத்தை விரும்பிய) உனது பெயரைச்சொல்லிக் கார்த்திகைமாதம் முழுவதும் இனிய உஷத்காலத்தில், நீரில் முழுகினோர் எமது வடிவைப் பெறுவர் இதுசத்தியம். 62

சிற்றிலைப்பசுங்காய்நெல்லிவனத்திடைத்திறம்புசிந்தை
வெற்றறிவுடையரேனும்விருச்சிகத்திங்கடன்னி
னற்றவம்புரிவோர்க்கேவலாற்றிநன்கியற்றினாலும்
பொற்றருவிசும்பில்வைகும்புலோமசைபோகந்துய்ப்பார்.

இ-ள். சிறிய இலைகளையும் பசிய காயையு முடைய நெல்லி வனத்தின்கண் மாறுபட்ட மனத்தையுடைய வெறுமையான அறிவுடையராயிருப்பினும், கார்த்திகை மாதத்தில் நல்ல தவத்தைச் செய்வோர்க்குக் குற்றேவல் புரிந்து, நன்மையைச் செய்தாலும், கற்பக தருப்பொருந்திய சுவர்க்க லோகத்தில் இந்திராணியினது போகத்தை யநுபவிப்பார். 63

அம்மதியினினற்பூசையாற்றியோராரெழுத்துந்
தம்மறிவொடுந்திளைப்போர்தாபதர்க்கடிசினல்கிச்
செம்மையினிலைத்துநெல்லிவனத்தினிற்செறியுந்தக்கோர்
மும்மையுமுணர்ந்துமூலமலமொரீஇமுத்தராவர்.

இ-ள். அந்தக் கார்த்திகைமாதத்தில் நல்லபூசையைச் செய்து சடக்கர மந்திரத்தைத் தமது நல்லுணர்வோடுஞ் செபிப்பவரும், முனிவர்க்கு

உணவுகொடுத்துச் செப்பமுடனே அவ்விடத்தில் நிலைத்திருந்து நெல்லி வனத்தில் வசிக்கும் பெரியோரும் திரிகாசல சம்பலங்களையும் அறிந்து மூலமெனப்படும் ஆணவமலத்தினின்றும் நீங்கி முத்தியடைவார். 64

ஆடுறுநெல்லிநீழலயினி லிட்டயின்றோரன்னோர்
தோடமதொருவித்தெள்ளாரமுதனுஞ்சுரேசராவார்
பீடுறுசிராத்தஞ்செய்தோர்பித்தர்கண்மணிபுனைந்து
நாடுறச்செபித்தோர்யாருநம்முலகடைவர்மன்னே.

இ-ள். ஆடுகின்ற நெல்லிமா நிழலினிடத்தே உணவைக் கொடுத்துத் தாமும் உண்டவர் தம்மிடத்துள்ள குற்றங்களெல்லாம் நீங்கப்பெற்றுத் தெளிந்த அமிர்தத்தை யுண்ணுகின்ற இந்திராதியவர்கள், பெருமை பொருந்திய சிராத்தத்தைச் செய்தவர்களும் பரமசிவத்தினது உருத்திராக்கமணியைத் தரித்து மன மடங்கச் செபித்தோர்களும் ஆகிய யாவரும் நமது சிவலோகத்தை யடைவர். 65

விருச்சிகமதியில்வெள்ளிபூரணையதுமேமேவி
லருச்சனைமுதலமுன்னரறைந்தனயாவுமாற்றி
யெரிச்சிகைவளர்ப்போர்க்கூட்டியெழிற்சினகரம்புக்கன்று
குருச்சுடர்த்தீபநல்கிற்குரைகழலடைவர்திண்ணம்.

இ-ள். கார்த்திகை மாதத்திலே வெள்ளிக்கிழமையில் பூரணைத்திதி வரின், அருச்சனைமுதலாய முன்னர்ச் சொல்லப்பட்ட யாவுஞ்செய்து யாகாக்கினியைக் கொழுந்தெழும்புமாறு வளர்ப்பவர்களுக்கு உணவுகொடுத்து, அழகுபொருந்திய கோயிலிற் புகுந்து அற்றைத்தினம் திறமுள்ள ஒளியையுடைய தீபங்கொடுக்கின், நமது ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த பாதத்தை யடைவது உண்மையாகும். 66



ஈண்டொருகணம்வதிந்தோரெண்டிசையிறைவரேனை
மாண்டருமயன்மால்வைகும்வாழ்க்கையிற்கழித்துநந்தஞ்
சேண்டருபுரியில்வாழ்வோரென்றிடிற்றினமுமேவிப்
பூண்டறம்புரிவோர்பெற்றியாமன்றிப்புகல்வாரியாரே.

இ-ள். இப்பழநிப் பதியின்கண் ஒருகணப்போது இருப்பவர் எட்டுதிக்குப் பாலகராகவும், ஏனைய மாட்சிமையுற்ற பிரமன், விட்டுணு முதலினோர். இருக்கும் வாழ்வில் இருந்து, பின்னர் அவற்றினின்றும் நீங்கி, நமது அதிகாரத்துள்ள சிவலோகத்தை யடைந்து வாழ்வாராயின், எப்போது மிருந்து தருமத்தைச்செய்வோரது தன்மையை யாமன்றி வேறு யார் எடுத்துச் சொல்ல வல்லவர். 67

கந்தநிற்பூசையோர்நாட்கடிநகரதனிலாற்றி
னிந்தமாஞாலமாதிபுவனங்கடொறுமெஞ்ஞான்றும்
வந்தனைபுரியிலுண்டாம்பலனெய்துமனுவொன்றிங்கன்
சிந்தனைபுரியிலோரேழ்கோடியுஞ்சித்தியாமால்.

இ-ள். கந்தனே! உன்னுடைய பூசையை ஒருதினம் இந்தக்காவல் பொருந்திய பழநித்தலத்திற் செய்வார்களாயின், இந்தப் பெரியபூமி முதலாகப் புவனங்கடோறும், எந்நாளும் வணக்கஞ்செய்யும் பலனுண்டாகும், ஒருமந்திரத்தை யிவ்விடத்துச் செபிக்கின், ஏழுகோடி மந்திரங்களுஞ் சித்தியாகும். 68

தெள்ளருவிகடாழ்கேழற்சிலம்புதென்கயிலையிந்த
வெள்ளியபதியொவ்வாதுசிவபுரியுறையும்யாமே
வெள்ளிலைவடிவேற்சேயிம்மேயினர்கணங்களீட்டம்
பள்ளநீர்முழுதும்பாகீரதிமயிற்பரிவல்லோயே.

இ-ள். மயில்வாகனத்தை நடத்தும் மைந்தனே! தெளிந்த அருவிகள் தாழ்கின்ற வராகமலை தென்கயிலாய மாகும், சிவலோகமும் இக்

தப் பழநிப்பதிகராகாது, இக்கு நாமே வெள்ளிய இலைத்தொழின் முற்றிய வேலாயுதத்தைத் தரித்த குமாரனும், இவ்விடத்தி லிருப்பவர்யாவரும் சிவகணக்கூட்டங்களாவர், கிடங்குகளிலுள்ள நீர்கள் எல்லாம் கங்காதீர்த்தமாகும். 69

புள்வரைபொடித்தவைவேற்பொறிமயிற்குமுகன்கேட்ப
வெள்வளைத்தோளிபங்கன்விளம்பிவேண்டியவரங்கள்
வள்ளிதழ்க்கமலைகாமதேனுவின்மணிக்குநல்கிக்
கள்ளலர்செறியும்வில்வவனந்தனிற்கலந்தான்மன்னோ.

இ-ள். கிரவுஞ்ச மலையைப் பொடிபடச்செய்த கூரிய வேலாயுதத்தையுடைய குமாரக்கடவுள் கேட்கும்படி வெள்ளிய வளையல்களைத் தரித்த தோள்களையுடைய உமாதேவி பாகராகிய சிவபெருமான் கூறி, அழகிய இதழ்களையுடைய இலக்குமிக்கும் காமதேனுவுக்கும் சூரியனுக்கும் வேண்டிய வரங்கள் கொடுத்து, தேன்பொருந்திய புட்பங்கள் நெருங்கிய வில்வவாரணியத்திற் கலந்தனர். 70

ஓதைநீராடைநங்கையுறுதவமுணர்ந்துவேட்டு
மாதவன்புராரிவாக்கான்மலர்மகள்வதுவையாற்றிக்
கோதில்கூவிளவனத்திற்குடதிசைப்பரத்துவாசன்
போதுமாச்சிரமத்தோங்குமகிழின்கீழ்ப்பொருந்தினால்.

இ-ள். விட்டுணு, ஒளிபொருந்திய நீரையுடைய சமுத்திரத்தை ஆடையாகக் கொண்ட பூமிதேவியின் பெரியதவத்தையறிந்து விவாகஞ்செய்து, சிவபெருமானது கட்டளைப்படி பின்னரும் இலக்குமி தேவியையும் விவாகஞ்செய்து, குற்றமில்லாத வில்வவனத்தின் மேற்றிசையில், பரத்துவாச முனிவர் சஞ்சரித்திருக்கும் ஆச்சிரமத்தின்கண் உயர்ந்து விளங்கும் மகிழமரத்தின் கீழ்த்தங்கியிருந்தனர். 71



இன்னறும்பாற்சேதாமீளவுமிறைவனைச்செவ்வேளை
பன்னரும்பூசைமுற்றியடைந்ததுவசிட்டன்பாங்கர்
மின்னவிரொளிவிளங்கும்வெயிலுமிழ்பரிதிப்புத்தேண்
மன்னியதிருவிசும்பில்வந்துவந்தருச்சித்தம்மா.

இ-ள். இனிய பாலையுடைய காமதேனுவானது பின்னரும் சிவபெருமானையும் கந்தக்கடவுளையும் சொல்லுதற்கரிய பூசைசெய்து வசிட்டரிடத்தை யடைந்தது, வெயிலைக் காலுகின்ற சூரியதேவன் நிலைபெற்ற அழகிய ஆகாயத்தின்கண் வந்து வந்து அருச்சனைசெய்து, மின்னலைப் போன்று (இடையறாது) விளங்கும் ஒளியைப்பெற்றனன். 72

## பழநி என்ற பெயர்வந்த காரண முணர்த்துகின்றார்.

கூறுடையாளுங்குன்றாக்குணப்பெருங்குன்றுஞானப்
பேறுடைப்பழநீயென்னப்பெயரதுமருவியெங்க
ளாறுமாமுகவன்வைகுநகரமுமன்றுதொட்டு
வீறுதொல்பழநீயென்றேவிளம்பினவுலகமூன்றும்.

இ-ள். உமாதேவியாரும், குறையாத பெரிய குணமலை ஆகிய சிவபெருமானும், ஞானம் என்னும் பேற்றினையுடைய பழம்நீ என்று குமாரக் கடவுட்குச்சொல்ல, அப்பெயரைப் பொருந்தி, அற்றைநாட்டொடங்கி எமது கடவுளாகிய பெருமைபொருந்திய அறுமுகக் கடவுள் வீற்றிருந்தருளுகின்ற திருவாவினன் குடியும், பெருமை மிக்க பழநித்தலம் என்று திரிலோகமுங் கூறின.

உமாதேவியார் பிருங்கிமுனி தம்மை வணங்காது விட்டதன் காரணம்நோக்கித் தவங்கிடந்து இடப்பாதிபெற்று விளங்கலாற் "கூறுடையாள்" என்றார் குணப்பெருங் குன்று என உருவமாகச் சிவபெருமா

லைக்கூறினர். கருநிறவேளாகிய மன்மதனை விலக்கற்கு "செவ்வேள்" எனப் பிறிதினியையு நீக்கிய விசேடணங்கொடுத் தோதப்பட்டது. இங்ஙனங் கூறுவனவற்றை அந்நிய யோகவியவச்சேதம் என்பர் வடநூலார். சிவபெருமானும் உமையம்மையாரும் பழம் நீ என்று உரைத்தருளலால் அத்தலம் திருவாவினன்குடி யென்ற பெயரிஞலே வழங்கப்பட்டது இக்காலத்தும் பழநி என வழங்கப்படுத லுணர்க இதனிலக்கண மெல்லாம் உரைத்தொடக்கத்து உரைத்துள்ளாம்.

"உலகமென்ப துயர்ந்தோர் மாட்டே" என்பது தொல்காப்பிய விதியாகலான், உலகமென்பதை யுயர்ந்தோர் என வுரைத்துக் கொள்க மூன்றுவன. பூமி - அந்தரம் பாதலம். 73

தளிரியலிமயமீன் றருளையைதன் றனையன்பைம்பூங்
கிளிமறைபயில்குறிஞ்சிக்கிழவன் வீற்றிருந்துவானோர்க்
களிபுரிநகரிலாதியுகந்தனிலகங்குழைந்து
தெளிபிரமேந்திரன்சென் றடைந்த துசிறிதுசொல்வாம்.

இ-ள். தளிர்போன்ற சாயலையுடைய இமயமகளாகிய உமாதேவியாரது புதல்வரும், பசிய பொலிவான கிளிகள் வேதங்களைப் பயிலுகின்ற குறிஞ்சிநிலத் தலைவருமாகிய சுப்பிரமணியப் பெருமான் வீற்றிருந்து தேவர்களுக்குத் திருவருள் செய்கின்ற பழநிப்பதியில், முதலாவது யுகமாகிய கிருதயுகத்தில் மனங்குழைந்து, தெளிவுடைய பிரமேந்திரன்சென்று பூசித்தது சிறிது கூறுவாம். 74

திருவாவினன்குடிச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள்—557.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

பதிநான்காவது,

# பிரமேந்திரச் சருக்கம்.

கலிவிருத்தம்.

பொங்கிராநீர்மணமாமலப்புன்மைதன்
பங்கிராவானமெய்ஞ்ஞானவாட்பற்றிமேற்
சங்கிராமன்சதுமாமறைத்தாபத
னங்கிராவென்னவோரையிருந்தானரோ.

இ-ள். மிக்கஇருட் டன்மையையுடைய அநாதியே ஆன்மாவைப் பந்தித்த ஆணவமலத்தின் சிறுமைப்பகுதியைக் குறைக்கின்ற மெய்ஞ்ஞான வாளைக்கரத்தில் தரித்து, சந்திரனைப்போலப் பிரகாசிப்பவரும் பெரிய நான்குவேதங்களில் வல்ல முநிவரும் ஆகிய அங்கிரா ரிஷியை யொத்த ஒரு முனிவரிருந்தார். 1

தோன்றுநால்வேதமுஞ்சொற்றவாறுற்றதோர்
மூன்றுநன்காற்றியேமுற்றினன்முற்றவே
தான்றனைத்தேர்ந்தனன்சந்நியாசத்தினு
னேன்றநாமம்பிரமேந்திரனென்பவே.

இ-ள். சிவபெருமானுடைய நான்குமுகத்தினின்றுந் தோன்றிய நான்கு வேதமுஞ்சொல்லியபடி நன்மைபொருந்திய தாயமூன்றக்கினிகளையும் நன்குசெய்து முடித்தார் அவ்வாறு முடித்ததனுல் தாம் ஆன்மா

வின் உண்மையை அறிந்தனர், சந்நியாச ஆச்சிரமத்தில் அவர்க்குப் பொ
ருந்தியபெயர் பிரமேந்திரர் என்று கூறுவர் புலவர். 2

அன்னவன்செய்யகற்றோய்ந்தஆசாடையோன்
சொன்னவேய்த்தண்டினான் றாங்குகுண்டிகையினான்
பன்னுநூன்சகுனனின்பாலின்வெண்பல்லினான்
றன்னைநேரின்மையோன் றன்மையார்சொல்வரே.

இ-ள். அம்முனிவர் சிறந்த காவிக்கல்லாற் றோய்க்கப்பட்ட வத்தி
ரத்தை உடுத்தவர் நூலிற் சொல்லப்பட்ட மூங்கிற் றண்டினையுடையவர்
தாங்குகின்ற கமண்டலத்தையுடையவர், சொல்லப்பட்ட நுட்பமான
சகுன சாத்திரத்தில் வல்லவர், இனிய பாலைப்போன்ற வெள்ளிய பற்
களையுடையவர், தமக்கு வேறொருவரும் ஒப்பில்லாத அவரது தன்மையை
யாவர் கூறவல்லவர். சகுனம்—நிமித்தமுமாம் 3

ஒத்தமாணாக்கருமோர்த்தநோன்போர்களு
மொய்த்துமாடேகமூவாண்டுபூவலனுதீஇ
யத்தனாள்பொருநைகாவேரிமுத்தாறுசூழ்
கொத்துலாஞ்சோலைமுக்கூடல்வந்தெய்தினான்.

இ-ள். தமக்கு இயைந்தவராயுள்ள மாணாக்கர்களும் ஆராய்ச்சியுடை
ய முனிவர்களும் நெருங்கித் தம்பக்கத்தில்வர, மூன்றுவருடம் பூவலம்
செய்து சிவபெருமானா லாளப்பட்ட பொருநை நதிகாவிரிநதி முத்தாறுநதி
யென்னுமிவைகளாற் சூழப்பட்ட பூங்கொத்துகள் விளங்கும் சோலை
களையுடைய திருமுக்கூடற் பதியையடைந்தார். 4

செய்யமாமணியிலிங்கேசனைச்சிந்தைதேர்ந்
தொய்யெனச்சையமால்வரையின்மேலோர்மண்டல
மெய்திமுத்தாறுதாழ்சேரவெற்பெய்திமீண்
டையன்முக்கூடல்சென்றண்ணலைப்போற்றினான்.



இ-ள். அழகிய பெரிய இரத்தினலிங்கேசப் பெருமானை மனத்தி
னாராய்ந்து அறிந்து விரைவாகச் சையமென்னும் பெரியமலையின்மே
லேறி நாற்பதுநாள்வரைக்கும் இருந்து, முத்தாறுநதிவீழ்கின்ற சேரமலை
யையடைந்து திரும்பி, சிவபெருமா னெழுந்தருளி யிருக்கின்ற முக்
கூடல் பதியிற்போய்ச் சிவபெருமானைத் துதித்தார். 5

காலகாலன்கருவூருமூர்காவிரி
யேலநெடுங்கரையூருமற்றனவுங்
கோலமாவூறுநீர்க்கோலமாண்பொருநையின்
மூலமுஞ்சென்றுகைகூப்பினான்முனிவனே.

இ-ள். யமனுக்கும் யமனாக விருக்கின்ற சிவபெருமா னெழுந்தருளி
யிருக்கும் திருக்கருவூரையும், காவிரியினது நீண்டகரையிற்பொருந்திய
திருக்கரையூரையும், ஏனையவற்றையும் அழகு பொருந்திய நீர்க்கோலத்
தையும் மாட்சிமைப்பட்டபொருநைத்துறையையும் அடைந்து முனிவர்
கைகூப்பி வணங்கினார். 6

ஆதிதான்கோங்கநீளடவிசென்றேத்தினான்
மாதினைக்கூவிளாடவியல்வந்தனைசெய்தான்
கோதில்சீராவினன்குடியில்வந்தலர்கடூஉய்க்
காதலித்தறுமுகக்கடவுளைப்போற்றினான்.

இ-ள். நீண்ட கோங்க வனத்திற்சென்று முதல்வராகிய சிவபெரு
மானது திருவடிகளைத் துதித்தார், வில்வவனத்திற்போய் உமாதேவி
யாரை வணக்கஞ்செய்தார், குற்றமில்லாத சிறப்பினையுடைய திருவாவி
னன்குடியென்னும் பழநித்தலத்தில்சென்றுமலர்களைத்தூவி அன்புடனே
சண்முகக்கடவுளைத்துதித்தார். 7

வைகியோருழியுடன்வந்தமாணாக்கர்தா
முய்குவாராவினன்குடியினான்காதையு

மெய்குழைந்தேனவெற்பாற்றலும்வெண்டிரை
மொய்கொளாண்பொருநையின்சரிதையுமொழிசெய்தே.

இ-ள். அவ்விடத்து ஒருதானத்திருந்து தம்முடனே கூடவந்த மாணாக்கர்கள் உய்யும்படியாகப் பழநித்தலத்தின் பெருமை பொருந்திய சரித்திரத்தையும் உடல்குழைந்து வராகமலையின் வலிமையையும் வெள்ளிய அலைகள் நெருங்கப்பெற்ற அழகிய தாமிரபர்ணியின் சரித்திரத்தையுஞ் சொல்லி. 8

மைந்தர்காண்முத்திவீடருளுமிம்மாநகர்
தந்தைவாழ்செவியின்மந்தணமொழிப்பொருடருங்
கந்தர்தாளடையலாமெனமனுக்கழறியே
யைந்துமோர்நெறிநிறீஇயரியநோன்பாற்றினன்.

இ-ள். புத்திரர்களே! இந்தச் சிறப்புற்ற தலமானது முத்திவீட்டைக் கொடுக்கும், பிதாவாகிய சிவபெருமானது தாழ்த்தியசெவியினிடத்திலே பிரணவ மந்திரத்தின் உண்மைப் பொருளை யுபதேசித்தகந்தசுவாமியினது திருவடிகளையடைதல்கூடு மென்றுகூறி மந்திரத்தை யுச்சரித்து, ஐம்பொறிகளையும் ஒருவழிப்படுத்தி அரியதவத்தைச் செய்தார்.

சில்பகல்சேறலுஞ்சிற்றுயிர்த்தன்மையிற்
பில்குறுந்தத்துவப்பேதம்யாவையுமொரீஇத்
தொல்குணந்தோன்றிடத்தோன்றும்வெள்வேலினன்
மல்வளங்குலவுதாள்வனசவண்டாயினன்.

இ-ள். சிலநாட்செல்லுதலும் சிறிய அறிவினையுடைய பசுத்தன்மையில் வருத்துகின்ற தத்துவவேறுபாடுகளெல்லாவற்றையும்விடுத்து, [illegible]ஞானங் கைகூட, பிரகாசிக்கின்ற வேலாயுதத்தைத் தரித்த



கப்பெருமானது நிலைபெற்ற பேரானந்தச் செல்வம் இருக்கின்ற திருவடித்தாமரையில் விழுந்த வண்டுபோலாயினார்.

சிற்றுயிர் தன்மை யென்றது, ஆன்மபோதத்தை. தத்துவபேதங்களென்றது, ஆன்மதத்துவ மிருபத்துநான்கும் வித்தியாதத்துவமேழும், சிவதத்துவ மைந்துமாகிய முப்பத்தாறுதத்துவ சமூகங்களையாம்.

அவற்றை விடுதலாவது—தத்துவ ரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி முதலியனகொண்டு ஒவ்வோர் தத்துவங்களையும் சடமெனக் கண்டு நேதிகளைந்து உண்மைப் பொருளை அறிதலாம். ஒரீஇ—சொல்லிசை யளபெடை தொல்குண மென்றது—ஆன்மா கேவலநிலையிற்கிடந்த சிவத்துவ நிலையை யென்க. அது,

அநாதி சிவரூப மாகிய வான்மாத்
தனாதி மலத்தாற் றடைப்பட்ட வாறே
தனாதி மலமுந் தடைப்பட்டு நின்றாலி
யநாதி சிவ ரூபமாகிய தன்றே.

என்னுந் திருமந்திரச் செய்யுளான் உணரப்படும்.

திருவடிகளைத் தாமரை மலரென்பதற்கேற்ப அவற்றின் வியாபகத்துட்நின்று பேரின்பத்தை அநுபவிக்கும் பிரமேந்திர முனிவரை வண்டாக உருவகித்தார் குமாரக்கடவுளின் திருவடியினடைதலே அத்துவித முத்தி யென்பதைப் பின்வரும்பிரமாணத்தால் உய்த்துணர்ந்து கொள்க.

திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்.

இறுமாந்திருப்பன்கொலோ
ஈசன்பல்கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன்சேவடிக்கீழ்ச்சென்றங்
கிறுமாந்திருப்பன்கொலோ.

ஆதலாலாவினன்குடியையாரணமுதற்
கோதிலாமுத்திநற்றலமெனக்கூறுமான்
மாதவத்தலைவிர்காள்கேண்மினோர்மாதவன்
காதைசொல்லுதுமெனக்கழறினன்சூதனே.

இ-ள். பெரிய தவத்தையுடைய முனிவர்களே! இவ்வாறுயகாரணத்தால் திருவாவினன்குடியை வேதமுதலாகவுள்ள உண்மைநூல்கள், குற்றமில்லாத நல்லமுத்தித் தலமென்றுசொல்லாநிற்கும், அதற்கு உதாரணமாக ஒருமுனிவனது சரித்திரமொன்றைச்சொல்லுகின்றோம், கேட்பீராக என்று சூதமுனிவர் சொல்லாயினர். 11

பிரமேந்திரச் சருக்கம் முற்றிற்று.

ஆக செய்யுள்— 568.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

பதினைந்தாவது,

# நித்தியநாதச் சருக்கம்.

வஞ்சி விருத்தம்.

ஆனதோரிரண்டாம்யுகத்
தூனமில்சிவயோகரின்
ஞானநித்தியநாயகன்
றானலத்தொர்தன்மையோன்.

இ-ள். நிகழ்ந்ததான இரண்டாவது யுகமான திரேதயுகத்திலே குற்றமில்லாத சிவயோகஞ் செய்பவர்களுள் நித்தியஞானத்தையுடைய தலைவராகிய சிவபெருமானது தன்மையாகிய அருளைப்பெற்றவரான நித்திய நாதமுனிவர் இருந்தார். 1

மூன்றுகாலமுமுன்னினே
னூன்றுமோர்பவமுண்டதிற்
றோன்றும்வீடடைச்சூழ்வினோர்க்
தான்றுமாதவமாற்றியே.

இ-ள். இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்றுகாலத்தையும நினைத்தவராய் எமக்கு வருத்தருந்த பிறவியொன் றிருக்கின்றது அப்பிறவியில் முத்தியின்பம் உண்டாகும் மென்று ஆலோசித்தறிந்து பெருந்தவத்தைச் செய்து. 2

கிளரிவண்டமிழற்றுதார
வளணியற்றிநற்றவம்

விளருருக்கொடுவந்ததென்
றுளமீவியப்பவுதித்தனன்.

இ-ள். வண்டுகள் விளரிப் பண்ணைப் பாடுகின்ற மாலையையுடைய் ஞளமகாராச னென்பவன் செய்த நல்லதவமே ஒருருவமெடுத்து வந்த தென்று கண்டோர்சொல்ல, மனம் அற்புதத்தைக் கொள்ளும்படியாக அவனுக்குக் குழந்தையாகத் தோன்றினர். 3

இராசராசனெனும்பெயர்
விராவிவெண்குடைவேந்தர்கள்
பராவிவீறுபணுடலித்
தராதலந்தனிதாங்கினன்.

ஞ-ள். இராசராச னென்கின்ற பெயரை அக்குழந்தையான்று கொண்டு வெண்கொற்றக் குடையினையுடைய அரசர்கள் துதிக்கும்படி பெரிய ஆதிசேடனுடையபடக் கூட்டங்களினிடத்தில் இருக்கின்ற பூமியைப்பொதுவின்றிப் பரிபாலனஞ்செய்தார்.

இராசராச னென்று வருதற்கு விதி பிரயோக விவேகத்திற்காண்க. இவ்வாறு சீவகசிந்தாமணியாரும் கூறுவர் பணுடலிவட நான்முடிபு அடலியென்பது, பன்மைப் பொருள்பட நின்றது. தராதலம்—இதன் கண் தலமென்பது எழுனுருபு. தனிதாங்கினனெனவே ஏகசக்ராதிபதியாய் அரசியற்றினனென்பது பெறப்படும். 4

எண்ணூருந்தவனெங்கனும்
பெண்ணிடங்கொள்பிரான்கழற்
கண்ணிடங்களிகொண்டுகண்
டண்ணல்கோங்கிலடைந்தனன்.

இ-ள். மதித்தற்கரிய தவத்தினையுடைய இராசராச னென்பவன் எவ்விடத்துஞ்சென்று உமாதேவியாரை யிடப்பாகத்திலுடைய



சிவபெருமானது திருவடிகளைத் தனது கண்களினாலே களிப்புடன் தரிசித்துப் பெருமையிற்சிறந்த கோங்கவனத்தையடைந்தனன். 5

ஆயநாட்டிடையங்கனான்
கோயிலுள்ளனகொய்ம்மலர்
தூயினன்பரைதொல்பெய
ரேயும்யாற்றருகெய்தினன்.

இ-ள். அந்தக் கோங்கவனத்திலே அழகிய நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானது திருக்கோயிலா யுள்ளனவற்றை யெல்லாம தரிசித்துக் கொய்யப்பட்ட புஷ்பங்களைச் சொரிந்து வணங்கினன் பழைய பரமேஸ்வரியின் பெயரைக்கொண்ட சக்தி தீர்த்தக்கரையை யடைந்தான். 6

திகரிறன்பெயர்கீட்டுவார்
நகரநன்கினியற்றிவெம்
புகர்கடிந்துயிர்போற்புவி
திகிரியொன்றுசெலுத்தினன்.

ஞ-ள். ஒப்பில்லாத தன்பெயரினல் மிகவும் நீண்ட கோயிலொன்றை நன்குசெய்து கொடிய குற்றங்களைக் கடிந்து தன்னுயிர்போல மன்னுயிர்களையும் பார்த்து, பூமியினிடத்திலே ஆஞ்ஞையா சக்கரத்தைச் செலுத்தினன்.

குற்றமாவன—காமம், வெகுளி, மயக்கமென்பன. இனி, ஆணவம், கன்மம், மாயை யென்னும் மும்மலங்களின்று குற்றமென்பாருமுளர். 7

எறறம்பொருளின்பம்வீ
டிறிலாமையுணர்ந்தன
ஞீற்குடியினடியவரால்
வேறுசிந்தையிருப்பிலான்.

இ-ள். மிகுந்த தருமம். அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் உறுதிப்பொருள்களை யடையும் வழியை மேற்கொண்டு கங்காநதியைத்தரித்த சிவபெருமானது திருப்பாதங்களை யல்லாமல் தன்மனத்தின் கண் வேறொன்றினையும் விரும்பாதவனாயினான்.

அறம்—(பெரியோர்களால்) இவைசெய்க, இவை தவிர்க என்று வரை அறுக்கப்பட்டது. இனி, பாவத்தை அறுப்பதென்னுமொன்று அறமொன்றே ஏனையபொருளின்பம் வீடுகளைக் கொடுத்தலால் "அறம்" மெனக்கூறினர் அதற்குப் பிரமாணம் வருமாறு:—

கந்தபுராணம் - காசிபனுபதேசப்படலம்.

தருமமே போற்றிடி னன்பு சார்ந்திடு
மருளெனுங் குழவி யீன்று மாங்கவை
யருவிழித் தவமெனு மாட்சி யெய்துமேற்
றெருளுறு மவ்வுயிர் சிவனைச் சேருமால்.

காஞ்சிப்புராணம் - புராணவாலாற்றுப் படலம்.

அறமே மறங்கண் முழுதழிக்கு மறமே கடவுளுல கேற்றும்
அறமே சிவனுக் கொருவடிவ மாகுஞ் சிவனை வழிபடுவோர்க்
கறமேயெல்லாப் பெரும்பயனு மளிக்கும்யார்க்கு மெவ்விடத்தும்
அறமே யச்சந் தவிர்ப்ப தென வுரைத்தான் சாதா தபமுனிவன்.

பொருள், அறத்திற்கும் இன்பத்திற்குந் துணையாக நிற்றலால் நடுவில் வைக்கப்பட்டது அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப்பொருள்களுள், வீடு என்பது மனத்துக்கும் வாக்குக்கும் எட்டாத நிலைமையையுடையதாகலானும், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதே யல்லது, இலக்கண வகையாற் கூறப்படாமையால் நூல்களால் உணர்க்கப் படுவன அஃதொன்றே யாகலானும் இறுதிக்கட் கூறினார். அறம் மூன்றையும், பொருள் இன்பம்வீடு என்னும் இரண்டனையும், இன்பம் வீடு என்னும் ஒன்றனையும் கொடுத்தலால் முறையின் வைக்கப்பட்டது. 8



மூலஞானமுளைத்துமுக்
காலமுங்கரைகண்டுதன்
சீலமேன்மைதெரிந்துநீர்
வேலைஞாலம்வெறுத்தனன்.

இ-ள். முதன்மையாகிய சிவஞானந் தோன்றி மூன்றுகால சம்பவங்களையும் அறிந்து, தன்னுடைய நன்னெறியும் மேன்மையும் அறிந்து, நீரையுடைய கடலாற் சூழப்பட்ட உலகவாழ்வை வெறுத்தான். 9

ஆவினன்குடியன்றுபோய்
மேவினன்கதிர்வேலர்தாட்
பூவினாருள்பூண்டற
மோவிலாமையுஞற்றினான்.

இ-ள். அப்போது திருவாவினன் குடியிற்சென்று, அங்கெழுந்தருளி யிருக்கின்ற ஒளியையுடைய வேலாயுதக் கடவுளினது திருவடிகளாகிய தாமரைப்பூவினது அரியதிருவருளைத் தரித்து, தருமம் கெடாமற் செய்துவந்தனன். 10

தேன்றயங்கியசெச்சைவே
ளான்றதேசிகனாகிமுன்
போன்றயோகமிழைப்பவே
தோன்றலானெதிர்தோன்றினான்.

இ-ள். பின்னர் அரசனானவன், முதற்பிறவியிற் செய்த சிவயோகத்தைச்செய்ய,. தேன்விளங்கிய வெட்சிமாலையை யணிந்த குமாரக் கடவுளானவர், பெரிய ஞானாசாரியாராகிய அரசனுக்கு முன்னர்த் தோன்றினார். 11

கண்டுபன்னிருகண் ணுடை
யண்டர்கோனிவனுமெனுத்
தண்டுபோற்படிதாழ்ந்தெழீஇ
விண்டுகண்ணுனீர்வீழ்த்தினன்.

இ-ள். தரிசித்து, பன்னிரு திருக்கண்களையுடைய தேவசேனுபதி சுவாமி இவராகுமென்று அரசனனவன் தெளிந்து தண்டுபோலப் பூமியில் விழுந்து வணங்கி யெழுந்து, கண்களி னின்றும் நீரை விழுத்தித் துதிக்கத்தொடங்கினன். 12

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கூவிளமென்றார்புனைதோட்குழகபசுந்துளவோனும்
வேதனுங்காண்பரியதந்தைதனக்கினியமிழற்றுமிளங்
காதலனுந்தேசிகனுங்கடவுளுமொருவனன்றோ
பேதைமையன்றோநின்சீர்பேசுதுமென்றெழுந்துணிவே.

இ-ள். வில்வமாகிய மிருதுவான மாலையை யணிந்த புயங்களையுடைய குமாரக்கடவுளே பசிய துழாய்மாலையை யுடைய விட்டுணுவும், பிரமனும் காணுதற்கரிய பிதாவாகிய சிவபெருமானுக்கு இனியபொருளை யுபதேசித்த இளங்குமாரனும், குருவாகிய கடவுளுந் தேவரீ ரொருவரன்றோ? அங்ஙனமுள்ள தேவரீரது புகழ்களையெல்லாம் எடுத்துச் சொல்வேனென்று எழுந் துணிபானது அறியாமை யன்றோ?

முருகக்கடவுளினது இயல்களையெல்லாம் அறிதலும் சொல்லுதலும் கூடாதென்பது வேதாகமங்களின் கருத்தாகும். அதற்கு மேற்கோள் வருமாறு—

தணிகைப்புராணம் - பிரமன் சிருட்டி பெறுபடலம்.

வானாதி பூத முதலான யாவும் வகுவித் தளித்தி யவைமற்
றனைத் வாவி தொயிலிற் கிளர்ப்ப வுடைவிற் புணர்த்தி யவையா



பூனாதி யூனி னுயிராதி யெண்ணி லுயிருக்கு ணின்றவுணர்வுந்
தானாதி நின்னை யருளாகி நின்ற தவரன்றி யாவ ரறிவார்.

கலங்காத நின்மெய் யருளிற் புகாத கலதிக் குணத் திழுதையேன்,
விலங்கோ டிணைந்து மதியாத குற்றம் விரவாமை யன்று கயிலை, நிலங்
காதி விட்டி யருள் செய்யும் வைப்பு நிமிர்ப்பூ ரணக்கிரியெனுந், தலங்
கோடி நின்னை யருளாகின்ற தவரன்றி யாவறிவார். 13

பிறங்கியபல்லுயிர்க்குயிராயுறைவைபிறழாமையென்று
மறங்கெழுசெங்கதிர்வேலோயருட்புணையொன்றுடைமையாற்
கறங்கெனச்சூழ்தருபிறந்தைக்கனகடலிலடுத்தடுத்தாங்
கிறங்குதலென்கடன்கரையினேற்றுதனின்கடனமால்.

இ-ள். மாறுபடாமல் எக்காலத்தும் கொலைத்தொழில் பொருந்திய சிவந்த ஒளியையுடைய வேலாயுதப் பெருமானே! இவ்வுலகத்து விளங்காநின்ற பல ஆன்மாக்களும் பரமான்மாவாக விருந்தருள்வீர், அன்றியுந் திருவருளாகிய தெப்ப மொன்று உடையீர் ஆதலால், காற்றாடியைப் போலச் சுற்றி சுற்றி வருகின்ற துன்பமொலிக்கின்ற பிறவியாகிய சமுத்திரத்திற் சேர்ந்து சேர்ந்து இறங்கி வீழல் எனது கடனாகும், அச்சமுத்திரத்தினின்றுங் கரையேற்றுதல் தேவரீரது முறையாகும். 14

இந்தவாறிசைக்குவருசிலைபிகல்வேற்கிறையீண்டு
வந்தவாறறைதியென வணங்கிவினவலிபகவீநாய்
தந்தவாறிஃதிதுமேற்சாராதுனருளடையு
மந்தவாறடியேனுக்கருள்கசிவயோகமென்றான்.

இ-ள். இப்படி அரசன் சொல்ல, எதிரிற் றோன்றிய மலையைப் பொடிபடுத்திய வேலாயுதத்திற்குத் தலைவராகிய குமாரக் கடவுள், அரசனே! நீயிவ்விடத்திற்கு வந்தகாரியத்தைச் சொல்லென்று வினவ

அரசன்பணிந்து, இருவினைகளின் வலியானது பிறவியாகிய நோயைத் தந்தது, இத்தன்மையை யுடைய பிறவியடையாது தேவரீரது திருவருளடையும்படி யடியேனுக்குச் சிவயோகத்தை யருள்புரிகவென்று குறையிரந்தான். 15

என்றலுங்கவிழ்தலைச்சூர்மாவினின்னுயிரைவாட்டுங்
குன்றமுங்கொன்றவைவேற்குழகன்கோமகனைநோக்கி
வென்றவன்புலனைந்தும்வென்றனையருளின்ஞான [தி.
மூன்றனக்குணர்த்துவாமென்றுரைத்தருட் கடைக்கண்சேர்த்

இ-ள். என்று சொல்லுதலும் கவிழ்ந்ததலையையுடைய சூரபன்மனாகிய மாமரத்தினது இனிய உயிரைக் கொன்று, கிரவுஞ்ச மலையையும் பொடிபடுத்திய கூரிய வேலாயுதத்தையுடைய குமாரக்கடவுள் அரசனைப்பார்த்து, மற்றையோர்களை வெற்றிகொண்ட வலிய ஐம்புலன்களையும் வென்றனை, ஆதலாற் சிவஞானத்தை யுனக்கு அறிவிப்பேமென்று சொல்லித் திருவருட் கடைக்கண்ணை வைத்து. 16

மூவகையான்மாதத்துவத்தின்முத்திறனுமுற்று
மேவணுவமாதிவிகற்பமும்விளக்கிமேலா
னவனுருவடிவுகாண்டலுணர்த்தியொண்பிரமனாதி
யாவுமோதரியயோகத்திருத்தலீதென்றுநல்கி.

இ-ள். மூன்றுவகைப்பட்ட ஆன்மாக்களினியல்களையும் மூவகைப்பட்ட தத்துவங்களினியல்களையும் நிறைந்து விளங்கும் அணுபக்கம் சம்புபக்கம் என்னும் வேறுபாடுகளையும் உணர்த்தி, மேலவராகிய பரசிவத்தின் வடிவைக் காணுதலும் தெரித்து, அழகிய பிரமன் முதலாய எவருஞ் சொல்லுதற்கரிய சிவயோகத்திலிருத்தல் இத்தன்மை யாகுமென்று உபதேசித்து. 17

ஆனந்தவுருவத்துள்ளேயனுதினம்விடாதுதூங்கி
நானன்றியொன்றுமின்றிநவிலருஞ்சிவானுபூதி



தானதன்றிச்சேர்தீதபங்குறலுமங்கண்ட
வூனந்துகனவையொத்தலிவைசிவயோகமாமே.

இ-ள். இன்பமாகிய வடிவத்துள்ளே நாடோறும் இடைவிடாது அறிதுயில் புரிந்து, நான் என்னும் அகங்காரங் குறைந்து ஒருபற்று மில்லாமல், சொல்லுதற்கரிய சிவாநுபூதியிற் குறைவில்லாமல் ஒளி வடிவு பொருந்த, ஊமையானவன் கண்ட சொப்பனத்தைப்போல இருத்தல் சிவயோகமாகும். 18

நீணிலம்புரக்கப்பூண்டமணிமுடிநிருபனித்த
மாணுறுசிவயோகத்தையியற்றிநல்வழிவீட்டின்பம்
வேணவாவுறத்துய்ப்பாயென்றருளிமேனடுவுகீழுந் [தான்
தானுவாய்த்தயங்கும்வேற்சேய் தனதுபொற்கோயில்சார்ந்

இ-ள். நீண்ட பூமியைக் காக்கும்படி தரித்த அழகிய கிரீடத்தையுடைய அரசன் நாடோறும் மாட்சிமைப்பட்ட சிவயோகத்தைச் செய்து, நல்வழியில் முத்தியின்பத்தை வேண்டிய விருப்பத்தைப் பொருந்த அநுபவிப்பாயாக வென்று திருவாய்மலர்ந்து, மேல், நடு, கீழ் என்னு மூன்றிடத்துஞ் சோதிஸ்தம்பமாகி விளங்கும் வேலாயுதத்தைத் தரித்த குமாரக்கடவுள் தமது அழகிய கோயிலையடைந்தனர். 19

சேய்கழறியவாறாற்றிச்சிவகதியடைதலாலுண்
காய்கனிவதியூர்யோகவனமெனக்கவினியோங்கிற்
றுய்கதிர்வேலோன்காட்சியளிப்பவேதுவாபரத்தேதார்
நாய்கன்வீடெய்துமாறுகேண்மெனநவிலலுற்றான்.

இ-ள் சுப்பிரமணியக்கடவுள் திருவாய் மலர்ந்தருளியவாறு சிவயோகத்தைச் செய்து சிவசாரூப்பிய முத்தியை யடைதலால், உண்ணப்படுகின்ற காய் கனி முதலியன இருந்த அவ்வூரானது யோகவனம் என்

னும் பெயருற்று உயர் வுடைத்தாயது. ஆராய்த வேலாயுதத்தைத் தரித்த குகப்பெருமான் காட்சிகொடுத்தருள, துவாபரயுகத்தில் ஒரு வணிகன் முத்தியடைந்த விதத்தையுங் கேட்பீராக வென்று (சூதமுனிவர்) சொல்லத்தொடங்கினர்.

சேய்—செந்நிற முடையவன், குமாரக்கடவுள். மூன்றும் பாதமாகிய யோகமார்க்கத்தைச் சகமார்க்க மென்ப. அதனை யநுட்டித்தவர் சிவசாரூப்பிய முத்தியை யடைதலால் "சிவகதியடைதலால்" என்றார்.

சிவஞான சித்தியார்.

சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி யிரண்டுஞ்
 சலிப்பற்று முச்சதுர முதலா தாரங்க
ளகமார்க்க மறிந்தவற்றி னரும்பொருள்க ளுணர்ந்தங்
 கணைந்துபோய் மேலேறி யலர்மதி மண்டலத்தின்
முகமார்க்க வமுதுடல முட்டத் தேக்கி
 முழுஞ்சோதி நினைந்திருத்தன முதலாக வினைக
ளுகமார்க்க வட்டாங்க யோக முற்று
 முழத்தலுழந் தவர்சிவன்ற னுருவத்தைப் பெறுவர்.

நித்திய நாதச் சருக்கம் முற்றிற்று.

ஆகச்செய்யுள்—588.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

பதினாறவது,

# சுவணகுத்தச் சருக்கம்.

அஃதாவது கோங்கவனமென்னும் யோகாரணியத்தில் இருந்த சுவணகுத்தன் என்னும்செட்டி முத்தியடைந்த சரித்திரத்தைக்கூறும் பகுதி யென்பது பொருள்.

சுவணம்—பொன், குத்தன்—வைசியன். அந்தணனுக்குச்சர்மன் என்பதும், அரசருக்கு வர்மன் என்பதும், வைசியருக்குக்குப்தன் என்பதும், வேளாளர்க்குத் தாசன் என்பதும் சாதிச்சிறப்புப்பெயர் ஏன்க. குப்தன் என்னும் வடமொழி குத்தன் என்றாயிற்று. ஸ்வர்ணம் என்னும் ஆரியம் சுவணம் எனத்திரிந்து நின்றதென்க. சருக்கம்—படைப்பு. அது ஈண்டுச் சங்கேதத்தாற் பகுதியெனப்பொருள்படும். ௧.

கலிநிலைத்துறை.

அந்நாட்டிடைவணிகர்தொல்குலத்துளோனளிசூழ்
கொந்தவிழ்ந்தார்ப்புயன்சொன்னகுத்தனுமவன்றன்
சிந்தையன்புடைக்காதலியருந்ததிசிவணி
வந்தமாநனிமகேசையுமனையறம்புரிவார்.

இ-ள். அந்த நாட்டினிடத்திலே பழைய வணிகர்குலத்திலே பிறந்தவன், வண்டுகள்சூழ்ந்த பூங்கொத்துக்கள் விரிந்தமாலையை யணிந்த தோளையுடையவன், சுவணகுத்தன் என்னும்பெயருடையவன். அவனும் அவனது மனத்தில் அன்பினையுடைய மனைவியான அருந்ததியை

நிலைத்து ஒழுகின்ற மங்கை என்பாளும் இல்லறத்தை நடாத்திவருவாராயினர்.

வணிகர்—வாணிகத்தொழிலுடையவர். "வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை" என்பது தொல்காப்பியச்சூத்திரம். வைசியர் இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என மூவகைப்படுவர் என்று சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியவற்றிற் கூறப்பட்டது. இக்காலத்துள்ள சிலர், வைசியர்—பூவைசியர், கோவைசியர், தனவைசியர் என மூவகைப்படுவர் என்றும், அவருட்பூவைசியர் வேளாளர் என்றும் கூறியிடர்ப்படுவர். பிங்கலந்தையில் அங்ஙனே புதச்சூத்திரஞ்செய்து நுழைத்தும் சூடாமணியிலும் அவ்வாறே சேர்த்தும் உள்ளார். அவையெலாம் வாதூராசிரிய நியாயசாரோபமகாபாசாதி கண்டிக்கப்பட் டொழிக்கப்பட்டன. கோவைசியர் இடையராகலின் அதுவும் பொருந்தாதென்க. சுவர்ணம் என்பது சுவர்ணம் என்றாகி, அது சொன்னம் என்றாயிற்று. 1

நறைமுறுக்குடைந்தாறுபாய்நறுந்தழ்க்கொன்றை
பிறையிலைச்சடைக்காடானைப்பிணைவிழிநெடுங்கடங்கட்
பொறைமலர்க்குழற்பூந்திருமார்பனைப்போற்று
முறைநெறித்தலைநிலைப்புறமுயற்சியின்மிக்கார்.

இ-ள். தேனானது கட்டவிழ்ந்து ஆறுபோலப் பாய்கின்ற, வாசனைவீசும் பூக்களையுடைய கொன்றையினையும் பிறைச் சந்திரனையுந் தரித்த, சடாமுடியையுடைய சிவபெருமானையும், பெண்மான்போன்ற நீண்டபெரிய விழிகளையும், பூக்களைச்சூடிய அளகபாரத்தையுமுடைய அழகிய இலக்குமியைத் தரித்த திருமார்பினையுடைய விட்டுணுமூர்த்தியையுந் துதிக்கின்ற வழியினிடத்தே நிலைத்தலைக்கொண்ட தொழிலின் மேம்பட்டவராயினர்.

செல்லொழுக்கெனத்தருநிதியொழுக்கமுந்தெய்வச்
சொல்லொழுக்கமுமுறைமையுந்துலைநிகர்முல்லை



நல்லொழுக்கமுநாடொறுநாடொறுஞ்சிறந்த
வில்லொழுக்கினர்மைந்தரில்லாமையைநினைந்தார்.

இ-ள். மேகத்தின் ஒழுக்கத்தைப்போலப் பிரதியுபகாரங் கருதாது கொடுக்கும் செல்வமும், சிவபெருமானாலே திருவாய் மலர்ந்தருளப்பட்ட வேதவொழுக்கமும், தாரசினையொத்த நன்மையாகிய கற்பொழுக்கமும், நாடோறும் நாடோறும் வளரப்பெற்ற அவ்வில்லொழுக்கத்தையுடைய இருவரும் தமக்குப் புத்திரரில்லாமையை நினைத்தார்கள். 3

மற்றுமற்றுள்ள தவகதிபடிந்துமாநிலத்தின்
மற்றுமற்றுள தலங்களில்வணங்கியும்வனத்தின்
மற்றுமற்றுளநோன்புகளாற்றியும்வருந்தி
மற்றுமற்றுளபுரிந்துமோர்மகவின்றிமெலிந்தார்.

இ-ள். வேறுவேறு தலங்களிலுள்ள புண்ணிய தீர்த்தங்களிற் றோய்ந்தும், பெரிய பூமிக்கணுள்ள புண்ணிய தலங்களிலே பணிந்தும், வனத்திலேசென்று பலவகைப்பட்டுள்ள தவங்களைச் செய்துவருந்தியும், இன்னும் வேறுவேறு என்ன உள்ளனவோ அவைகளெல்லாவற்றையுஞ் செய்தும் ஒருபுத்திரனின்றி வருந்தினர். 4

மைந்தருள்ளவர்நோற்குமாதவங்களேதவங்கண்
மைந்தருள்ளவர்பெறுகின்றவரங்களேவரங்கண்
மைந்தருள்ளவரில்லறவாழ்க்கையேவாழ்க்கை
மைந்தருள்ளவரிருமையும்வருபயனுகர்வார்.

இ-ள். புத்திரருள்ளவர்கள் அநுட்டிக்கும் பெரியதவங்களே தவங்களெனப்படும், புத்திரருள்ளவர்கள் பெறுகின்ற மேன்மைகளே மேன்மைகளெனப்படும், புத்திரனைப் பெற்றவர்களது இல்லற வாழ்க்கையே இல்லறமெனப்படும். புத்திரனைப் பெற்றவர்களே இம்மையினு மறுமையிலும் வருகின்ற பிரயோசனத்தை யனுபவிப்பார்கள். 5

பெருமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன் மக்கட் பேறு.

எனத் திருக்குறளினும்

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—வின்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்.

என நளவெண்பாவினும், கூறியவாறு மக்களையில்லாத வாழ்வு வாழ்வெனப்படாது என்றார். மைந்தர் - தாய் தந்தையர்க்குப் பலமாக இருப்பவர்; மைந்து—வலிமை. 5

உரியவாழ்வினுக்கழகுமாண்புடைமனைவாழ்தல
பரிவுகூர்மனைக்கழகுகற்புடைமைபாரித்த
லரியகற்பினுக்கழகுதொல்லறத்தொடுமொழுகல்
புரியறத்தினுக்கழகுநற்புதல்வரைப்பெறுதல்.

இ-ள். சிறந்த வாழ்வினுக்கு அழகாகவுள்ளது மாட்சிமையுடைய இல்லறத்துவாழுதல், அன்புமிக்க மனையாளுக்கு அழகாகவுள்ளது கற்புடைமையைத் தாங்குதல், அருமையாகிய கற்பினுக்கு அழகாகவுள்ளது பழைய இல்லறத்தோடும் பொருந்தி நடந்தல், அவ்வாறுநடத்தும் இல்லறத்தினுக்கு அழகாகவுள்ளது நல்ல புத்திரரைப் பெறுதலாகும், 6

என்றுசண்முகநதிக்கரைகுணதிசையெய்தி
மன்றல்வாழ்பரத்துவாசன்றனிருக்கையில்வைகிப்



பொன்றயங்குதோளிலக்குமிநாரணற்போற்றி
யன்றுசித்திரைத்திங்களிலரியநோன்பிழைத்தார்.

இ-ள். என்றிவ்வாறு நினைத்து, சண்முக நதிக்கரைக்குக் கீழ்த்திசையை யடைந்து, புதிய வாசனைதங்கும் பரத்துவாச ஆச்சிரமத்தினிருந்து, அழகு விளங்காநின்ற தோள்களையுடைய இலக்குமியையும் விட்டுணுவையுந் துதித்து, அந்தத் தினமாகவுள்ள சித்திரைமாதத்தில் அரிய தவத்தைச்செய்தனர். 7

அறந்தவாதிழைப்புறவளித்துழாய்ப்புயலணைந்து
சிறந்துளீர்மகப்பேறுமக்கிலைதரித்திடினும்
பிறந்துவீழ்ந்துபோமாயினும்பெறத்தருகென்றார்
மறங்கடந்தவண்டிகிரியான்வழங்கினன்மறைந்தான்.

இ-ள். தவத்தை (சுவணகுத்தனும் மனைவியான மகேசை, என்பாளும்) தவறாது செய்யாநிற்க, வண்டுகள் வீழும் துழாய் மாலையையுடைய மேகம்போன்ற திருமால்தோன்றி, அன்பிற் சிறந்தவர்களே, புத்திரப்பேறு உமக்கு இல்லையாகும், தரித்தாலும் பிறந்து இறந்துவிடும் என்றார். அவ்வாறாயினும் யாம்பெறும்படி தரக்கடவீர் என்று பிரார்த்தித்தார், பகைகளைக்கடந்த சுதரிசன சக்கரத்தையுடைய திருமால் அவ்வாறே கொடுத்துச் சென்றனர். 8

மாலிடம்பரிவலம்புயுவளையினைநோக்கிப்
பால்வளாய்தவம்பயில்வணிகர்க்கொருமகவா
யேலவாவறப்பருவமோரைந்தெய்திமீள்கென்று
னீலமேனியன்பணித்திடும்பணியினின்றதுவே.

இ-ள். அவ்வாறுசென்ற திருமால் தமதிடத்திற் றரித்தவலம் புரிச்சங்காகிய பாஞ்சசன்னியத்தை நோக்கி, வெண்ணிறமுடைய சங்கே, தவத்தைச்செய்த சுவகுணத்தன் என்னும் வைசியனுக்கு ஒருகுழந்தை

யாகச்சென்று, அவனது அவா நீங்கும்படி ஐந்து வயதுவரையுமிருந்து நம்பிடம் வருக என்றீனர், சங்கும் திருமால் கூறிய கட்டளைக்கு இசைந்து நின்றது. 9

மன்னலந்திகழ்நேமியோன்வரந்தரவாங்கி
பின்னலங்கடலொரீஇக்கரையேறிவைகிடுநாட்
பொன்னலங்கெழுவணிகர்கோன்புணர்முலைத்துணைவி
கன்னலஞ்சொலாள்வயிற்றினிற்கருப்பமுற்றதுவே.

இ-ள். பெரிய நன்மை விளங்காநின்ற சக்கரத்தையுடைய திருமால் வரத்தைக் கொடுக்கப்பெற்று, துன்பசாகரத்தி னின்றும் நீங்கிக்கரை யேறி யிருக்குங் காலத்தில், பொன்னினது நன்மைகள் பொருந்திய சுவணகுத்த னென்னும் வைசியத் தலைவனது நெருங்கிய தனங்களை யுடைய மகேசையென்னும் மனைவியான, கருப்பஞ்சாற்றை யொத்த அழகிய சொற்களையுடையாளிடத்து வயிற்றில் கருப்பம் பொருந்தியது.

தோற்றுமோர்மதிக்கோர்மதிசுவைமுதநிரிந்து
வேற்றுருத்தழீஇயாவுநோய்மருங்கினில்வீங்கி
யீற்றுளைந்துசூறசலஞ்சலமுத்தமீன்றென்ன
வூற்றமிலொருசிறுவனை வயிறுவாய்த்துயிர்த்தாள்.

இ-ள். தோற்றிய ஒருமாதத்திற் கொருமாதம் உணவுமுதலாயின வேறுபட்டு, வேறுவடிவங்கொண்டு கருப்ப வாதனையானது வயிற்றி லதிகப்பட்டு, பிரசவவேதனையுற்று, கருவுற்றசலஞ்சலம் என்னுஞ் சங்கு முத்தை யீன்றாற்போல, சோர்வில்லாத ஒருபுத்திரனைத் தன் வயிற்றி னின்றும் பெற்றனள். 11

உதித்தவோரையிலந்தணர்க்கொண்ணிதிக்குப்பை
விதித்தவாறுவேணவாவுறவீசிநெய்யாடி



மதித்தவொக்கலுங்கறுசுவைவழங்கினன்றேவர்
பதித்தலந்தொறும்விழவணிநடப்பவேபணித்தான்.

இ-ள். புத்திரன் பிறந்த அச்சுப முகூர்த்தத்திலே பிராமணர்க்கு அழகிய திரவியக் குவியல்களை வேதாகமங்களில் விதித்தவாறே, வேண்டு மளவுங்கொடுத்து, நெய்வழங்கி, தன்னை மதித்திருக்குஞ் சுற்றத்தார் களுக்கு அறுசுவை யுணவுகளைக் கொடுத்தனர், தேவாலயங்கடோறும் அழ கிய திருவிழாநடக்கும்படி கட்டளையிட்டான். 12

அயனுமையனுமிளிர்சடைப்பிரானுமாறிரண்டு
நயனநாயகனெனத்திருநாமமுநவிற்றி
வயனைவேலினேய்மகவினைக்காத்தியென்றிறைஞ்சி
நியமமுற்றலர்பெய்துதித்தலுஞ்சென்றுசேர்வார்.

இ-ள். பிரமனும் விட்டுணுவும் உருத்திரமூர்த்தியும், பன்னிரு கண்களையுடைய குழந்தைவேலனென நாமகரணஞ்செயது, வெற்றி பொருந்திய வேலாயுதத்தையுடையோய், இக்குழந்தையைக் காத்தருள் வாயாக என்றுவணங்கி, நியமத்துடன் பூக்களைத்தூவி நாடோறும் ஆல யஞ் சென்று மீள்வா. 13

நாடொருந்திதிமதிதொறுநவினுறுமயன
நீடுறும்பருவந்தொறுநிகழ்வனபுரிந்து
சூடுறும்பணிமுதலனசூட்டியேவளர்ப்பச்
சேடுறுஞ்சிலதிங்களிற்சிறந்துசேய்வளர்ந்தான்.

இ-ள். தினங்களிலும் திதி, மாதம், சொல்லப்பட்ட அயனம் (ஆண்டிற்பாதி) நீண்டவருடம் என்னும் இக்காலங்கடோறுஞ் செய்வன வற்றைச்செய்து, தரிக்கத்தகுந்த ஆபரணங்கள் முதலாயினவற்றையுந் தரித்துவளர்க்க, பெருமைபொருந்திய சிலமாதத்துட் சிறப்பற்று அப்பு த்திரன் வளர்ந்தான். 14

பன்னருஞ்சிறுமதலைகேட்டுருகியும்பாலன்
றன்னுறும்விளையாட்டினுஞ்சூழ்தல்கண்டும்
பின்னருஞ்சிலபுரிவதுநோக்கியும்பிதாவு
மன்னையுங்களியடைந்திடப்பருவமைந்தடைந்தா

இ-ள். சொல்லுதற்கரிய இளங்குதலைச் சொற்களைக்கேட்டு உருக்க முற்றும், அப்புத்திரன் பொருந்தும் விளையாட்டின் ஆடல்கண்டும், பின்புஞ் சில செய்கைகளைச் செய்வது பார்த்தும், தன்னைப்பெற்ற தந்தையுந் தாயும் சந்தோஷங்கொள்ள ஐந்து வயதடைந்தான். 15

பூந்தணோடையும்வாவியுமலைபொருந்திரையாறுந்
தேந்தண்மாமலர்ச்சோலையுஞ்சேதிமம்யாவும்
வேந்தராதியர்சிறாருடன்போய்விளையாடி
வாய்ந்தகேளிருஞ்சூழ்கொளவளர்கின்றநாளில்.

இ-ள். பொலிவாகிய குளிர்ந்த தடாகத்தும், வாவிகளிலும் மோதுகின்ற அலைகளையுடைய நதியினும், தேன்பொருந்திய பெரிய பூக்களையுடைய சோலைகளிலும் செய்குன்றுகளினும், அரசகுமாரர் முதலாயினோருடன் சென்று விளையாடி உரிமையாகவுள்ள சுற்றத்தார் விரும்பிச் சூழ வளர்ந்தனன். அவ்வாறு வளர்கின்ற காலத்தில். 16

ஒருபகற்சிறுமைந்தரோடுயர்வில்வவனத்தி
னருகுதேனுமாதீர்த்தத்தினுடுறுமெல்லை
கருதுமூதுணர்வுதிப்பவக்கான்முளைவளையாய்த்
திருமுயங்குமால்செங்கையிற்சேர்ந்ததுவன்றே.

இ-ள். ஒருநாள் சிறுபருவத்தையுடைய பிள்ளைகளுடன் உயர்வாகிய வில்வவனத்தின் பக்கத்தில் உள்ளபெரிய காமதேனு தீர்த்தத்தினிடத்தில் நீர்விளையாடுங் காலத்தில், நினைக்கப்படுகின்ற பழையபேரறிவுதோன்ற அக்குழந்தை சங்காகி, இலக்குமியைச் சேர்ந்திருக்கும் விட்டுணுவினது சிவந்த கையினடைந்தது. 17



ஆயதாய்வுறூர்மகனறலாழ்ந்தனனென்றுப்
போயறைந்திடப்பயந்தவர்வேரறப்பூவிற்
சாயுநீண்மரம்போல்விழுந்தயர்ந்துகண்டருநீர்
பாயும்யாற்றினுந்துயர்ப்பெருங்கடலினும்படிந்தார்.

இ-ள். அவ்வாறாய தன்மையை யறியாதவர் அக்குழந்தை நீரினுள் முழுகினனென்று நினைத்து, வணிகனிடஞ்சென்று தெரிவிக்க, அவனும் மனைவியும், வேரறுந்துபோகப் பூமியில் விழும் நீண்ட மரம்போல விழுந்து சோர்ந்து, கண்ணினின்றும் பொழிந்த நீராகிய நதியினும் துயராகிய சமுத்திரத்தினிடத்தும் முழுகினர். 18

வீழ்ந்துவீழ்ந்தடிக்கடியெழுந்துமின்வாளாற்
போழ்ந்தநெஞ்சினராயினர்பொய்கைவாய்ப்புகுந்து
சூழ்ந்தகேளொடும்புனலிடைத்துருவியுங்காணு
ராழ்ந்துபூழ்தியின்மாழ்கிவாய்விண்டரற்றினரால்.

இ-ள். அடிக்கடி யெழுந்து விழுந்து விழுந்து ஒளி பொருந்திய வாளாயுதத்தாற் பிளக்கப்பட்ட மனத்தை யுடையவரான தாய்தந்தையர்கள் தேனுதீர்த்தக் கரைக்குச்சென்று தம்மைச்சுற்றிவந்த சுற்றத்தார்களுடன் நீரிடத்தே தேடியுங் காணாதவராய், நிலத்தில் விழுந்து புரண்டு மயங்கி யிரங்கினர். 19

### கொச்சகக் கலிப்பா.

தாவியோடிச்சிறுவர்தம்பால்விளையாடி
மேவியோடியொர்கன்னல்வருமுன்விளிந்தாயோ
பாவியேனோற்றபயனிதுவோபாலாநீ
ராவியோகூற்றேறுநின்னுயிருண்டதுவே.

இ-ள். பாய்ந்து ஓடிச்சென்று சிறுவரிடத்து விளையாடி, நாம் வீடு சென்று ஒருநாழிகைக்குள் வருதற்கு முன்னாக, நீ இறந்தனையோ?

ஹே குழந்தாய் பாவியேமாகிய யாம்செய்த தவம் இதுவோ? உனது உயிரை யுண்டது நீர்த்தடாகமோ யமனோ? யாதோ அறிகிலேம். 20

பேராயெம்மநின்பிராயத்தாரா யமினிச்
சாராய்சிறிதுந்தனிபிரியாயிப்போதெம்
மாராவமுதேயென்றார்வத்தழைக்கினுநீ
வாராயெங்குற்றாய்மகனேமகனேயோ.

இ-ள். எம்மை விட்டுப் பிரியாதே, உன்னுடைய பருவத்தினரான சிறுவர் கூட்டங்களைச்சாராதே, சிறிதும்தனியே செல்லாதே, இப் போது, எம்முடைய தெவிட்டாத அமிர்தமே யென்று அன்புடன் அழைத்தாலும் நீ வாராது எங்குச் சென்றனை, புத்திரனே! புத்திரனே.

பொன்னையிழந்தாலும்புவியிலோர்கோலோச்சு
மன்னையிழந்தாலும்வணிகர்குலமரபு
தன்னையிழந்தாலுந்தமியேந்தவத்தீன்ற
வுன்னையிழந்துமற்றுய்யேமுய்யேமே.

இ-ள். திரவியத்தை யிழந்தாலும் பூமியின்கண் ஒப்பற்ற செங் கோல் செலுத்தும் அரசனை யிழந்தாலும், வைசிய குல மரபினை யிழந்தா லும், தனித்தவராகியயாங்கள் தவத்தினாற்பெற்ற உன்னையிழந்துபிழைத் திருக்க மாட்டேம், பிழைத்திருக்க மாட்டேம். 22

பூணுடைமார்புமழலைவாய்ப்புன்னகையும்
வாணுடைகோலமுகமும்வடிக்குழையுந்
தாணுடைகிண்கிணியுந்தண்டோட்சிறுதொடியுங்
காணாமலாவிகழிவையோகண்மணியே.

இ-ள். ஆபரணங்க ளசைகின்ற மார்பமும், குதலைச் சொற்களை வசனிக்கின்ற வாயினின்றுந் தோன்றுங் குறுநகையும், ஒளிகொண்ட



அழகியமுகமும், தேய்க்கப்பட்ட குண்டலமும், பாதங்களிற் சூழ்ந்துள்ள கிண்கிணியும் தண்ணிய புயத்திலணியப்பட்டவளையும் ஆகியஇவைகளை யாங்கள் காணாமல் எமது கண்மணியே இறப்பாயோ? 23

ஈன்றோம்பெரிதுவகையெய்தினோம்யாவருநிற்
சான்றோனெனச்சொற்றருமுன்றனிபிரிந்தா
யூன்றோயுயிர்தாங்கியுய்யேமுனைநேடி
வான்றோய்நிலையின்வருகின்றோமழகளிறே.

இ-ள். (தவஞ்செய்து) பெற்றேம், மிகவுஞ் சந்தோஷத்தையடைந் தேம், எவர்களும் நின்னைப் பெரியோன் என்று கூறுஞ் சொல்லைச்சொல் லுதற்கு முன்னர்த்தனியே எம்மை விட்டுப்பிரிந்தாய், தசைபொருந் திய உயிரைத்தாங்கிப் பிழைத்திருக்க மாட்டேம். உன்னைத்தேடி ஆகா யத்தில் விளங்கும் சுவர்க்கலோகத்திற்கு வருகின்றேம். இளமைபொ ருந்திய யானைபோன்றவனே.

ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

எனத் திருக்குறள் கூறுமாகலின் "ஈன்றோம் பெரிதுவகை யெய் தினேம் யாவருநிற் - சான்றோ னெனச்சொற் றருமுன்றனி பிரிந்தாய்" என்றார். "மழகளிறே" என்றது உருவகம். 24

வெந்நிரயவீரைநடுவீழாதுமீமிசைச்செம்
பொன்னுலகிலேற்றுவதுபுத்திரனென்றஃதுணர்ந்து
பன்னெடுநாணோற்றுப்பயந்தேமுனைநீங்கி
யின்னுயிர்கொண்டாறியிருப்பேமோமழகளிறே.

இ-ள். கொடிய நரகமென்னுஞ் சமுத்திரத்தின் நடுவே விழாமல் மேலிடத்துள்ள சிவந்த பொன்மயமான சுவர்க்கலோகத்தி லேற்றுவது புத்திரனென்று அறிந்து, பலநீண்ட நாளாகத் தவஞ்செய்து பெற்றேம்,

அவ்வாறாய உன்னை விட்டுப்பிரிந்து, இனிய உயிரைக்கொண்டு ஆறியிருப்பேமோ, இளைய யானைக்கன்றை யொத்தவனே. 25

என்றின்னனவுள்ளிரங்கியிருவோரும்
பொன்றும்பொருளைப்பொருளாய்ப்பொருண்முழுதும்
வென்றியயலோர்க்கும்வேதியரோடாதுலர்க்கு
முந்தியிடையினின்றுமுகந்துமுகந்துநல்கி.

இ-ள். என்று இவ்வாறாயவற்றை மனத்தின்கணினைந்து இரக்கமுற்றுப் புலம்பித் தாய்தந்தையென்னும் இருவோரும் இறக்குந்துணியே தமக்கு உறுதிப் பொருளாகக் கொண்டு, தம்மிடத்து இருந்த பொருள்கள் எல்லாவற்றையும், அயலிலுள்ளவர்க்கும் பிராமணர்களுடன் வறியவர்களுக்கும் முற்பட்டு இடத்திலிருந்து மொண்டு மொண்டு கொடுத்து. 26

கிளைகளுங்குடியுமழுங்கியழக்கேள்வனுடன்
வாளுணங்கண்ணாளும்வருந்திமகவாசைபற்றி
பாளுங்கதிர்வேலடிகளையுள்ளாதரித்து
மூளுங்கொழுந்தழலின்மூழ்கமனமூளுங்கால்.

இ-ள். சுற்றத்தாரும் ஏனையமக்களும் வருந்திப் புலம்ப, வாளாயுதத்தையும் வெற்றிகொண்ட கண்ணை யுடையவளாகிய மகேசை யெந்நாளும் வருத்தமுற்றுப் புத்திரசோகங் கொண்டு, தங்களையாளாகின்ற கதிர்வேற்பெருமானை மனத்தின்கண் ஆதரவுசெய்து, தன் நாயகனுடன் மூண்டகொழுமையாகிய அக்கினியின் இடத்து முழுகும்படிமனத்தில் நினைக்குங் காலத்தில். 27

மட்டவிழ்பூஞ்சிறுகுஞ்சிமாலையும்வானுதனுட்டி
விட்டமணிச்சுட்டியும்வில்வீசுமணிப்பூங்குழையுங்



கட்டெழின்மென்கொடிமூக்குங் கருணைபொழிவிழிநோக்கும்
கிட்டார்தொழுங்கனிவாயுமிளநகையுஞ்செவ்விதர.

இ-ள். தேன்பரந்த பொலிவாகிய சிறிய குடுமியிற்றரித்த மாலையும் வெள்ளிய நெற்றியிற்றரித்த இரத்தினச் சுட்டியும், ஒளிவீசுகின்றபொலிவாகிய இரத்தினக் குண்டலமும், மிக்க அழகினையுடைய மிருதுவான கொடிபோன்ற நாசியும், அருளைப்பொழிகின்ற கண்களின் பார்வையும் பெரியோர்களால் வணங்கப்படுகின்ற கோவைப் பழம் போன்றவாயும், இளமுறுவலும் அழகைச்செய்ய. 25

வேணித்தண்பிறையைமுறித்திணக்கியினழத்தெனமிளிரு
மாணிப்பொற்புலியுகிரிணைப்படையுமழகெறிப்பத்
தூணொப்பித்தன்றோளும்பசுந்தொடியுஞ்சுடர்மணி
மாணிக்கச்சிறுவிரலின்மணியாழிவெயில்விரிப்ப.

இ-ள். சடாமுடியின்கண் தரித்த குளிர்ந்த பிறைச் சந்திரனை, ஒடித்து இணைக்கிவைத்தாற்போன்று விளங்குகின்ற, மாற்றுயர்ந்தபொன்னாற்செய்யப்பட்ட புலிநகத்தோடு கூடிய பஞ்சாயுதமணியும் அழகைச் செய்ய, தூணையொப்பனை செய்தாற்போன்ற தோளும் பசிய வளையல்களும் ஒளியைச்செய்ய, அழகியமாணிக்க ரத்தினம்போலுஞ் சிறு விரலின்கண் இரத்தினமோதிரம் ஒளியை வீச. 26

சீதமணிவிளிம்புடைக்கோசிகமும்மரைஞாணணியுங்
கீதமுரைபரிக்குரற்கிண்கிணியிழற்றுஞ்சீறடியு
மேதகமுன்விளிந்தோன்மீண்டனனென்னவிருவோருங்
காதலிப்பமுன்னுதித்தான்கடவுணுதற்கண்ணுதித்தான்.

இ-ள். குளிர்மையாகிய இரத்தின விளிம்பினையுடைய பட்டாடையும், அரைஞாண் ஆபரணமும், கீதத்தைச் செய்கின்ற கனைக்குங் குரலினையுடைய சதங்கைகள் ஒலிக்கின்ற சிறியபாதங்களும், மேலான தகு

நிலையைக்கொண்ட, முன்னர் இறந்தபாலகன் திரும்பவும் வந்தனனென்று சுவணகுத்தனும் அவன் மனைவியும் ஆகிய இருவரும் விருப்புறும்படி சிவபெருமானது அக்கினிக் கண்ணினின்றுந்தோன்றிய குமாரக்கடவுள் அவர்க்கு முன் தோன்றினர். 30

கண்டனர்கண்களி[illegible]கான்முளையெனவெடுத்தணைத்துக்
[illegible]னமருங்குற்றாயெங்குலக்குன்றேயெமையீர்த்துச்
சண்டனிரயக்குழியிற்றாழ்த்தாதெய்தினையெனவாய்
விண்டனர்யாருணர்வார்செவ்வேள்விளையாடலைமன்னோ.

இ-ள். (வணிகனும் மனைவியுமாகிய இருவரும்) கண்டார்கள், கண்கள் ஆனந்தங்கொள்ளும்படி, தமது புத்திரனென்று எடுத்தணைத்துக் கொண்டு, எமது குலமலையே எவ்விடத்து அடைந்தனை, யமன் எங்களை யிழுத்து, நரகக்குழியில் தாழச்செய்ய விடாது வந்துவிட்டனை, என்று வாயாற்சொன்னார், கந்தக் கடவுளின் திருவிளையாடலை யாவரறிவார். 31

எடுத்தணைக்குமதுபோழ்தினிருவரையுமுலகறியத்
தடுத்தடிமைகொளவேண்டிச்சண்முகமாய்ப்பன்னிருகை
தொடுத்தபடைகளுங்கருணைசுரந்தநயனமுந்தோகை
மடுத்தமயிலுந்தோன்றநின்றனன்வானவர்கோமான்.

இ-ள். எடுத்து அணைத்த அந்தச் சமயத்தில், சுவண குத்தன் அவன் மனைவியென்னும் இருவரையும் உலகம் அறியும்படி தடுத்தாட்கொள்ள விரும்பி, ஆறுதிருமுகங்களும், பன்னிரு திருக்கரங்களும், அவற்றிற் பொருந்திய ஆயுதங்களும் அருளூறிய திருக்கண்களும், கலாபம் பொருந்திய மயில்வாகனமுந் தோன்றும்படி, தேவர்கட்குத் தலைவராகிய சிவசுப்பிரமணியப்பெருமான் நின்றனர். 32

பெய்தார்பூமாரிவிண்ணோர்பேரியங்கினவிசும்பிற்
கைதலைகூப்பினரறவோர்கண்டுளிதேக்கினர்தொண்ட



ரெய்தரியதனிக்காட்சியிடைப்பட்டாரிருவருந்தாம்
பைதலொழிந்துளம்வெருவிப்பணிதலும்வேற்கிறைபகரும்.

இ-ள். தேவர்கள் பூமழையைப் பெய்தனர், தேவ துந்துபிகள் ஒலித்தன, முனிவர்கள் ஆகாயத்தை நோக்கிக் கைகளைத்தலையிற் குவித்தார்கள், அடியவர்கள்யாவருங் கண்ணினின்றும் நீர்த்துளியை நிறைத்தார், அடைதற்கரிய ஒப்பற்ற காட்சியினிடத்துப் பரவசப்பட்டனர், சுவணகுத்தனும் அவன் மனைவியும் ஆகிய இருவரும், துன்பம் நீங்கி மனம் அச்சமுற்று வணங்குதலும் வேலாயுதத்தையுடைய தலைவராகிய குமாரக் கடவுள் திருவாய் மலர்ந்தருளுவார். 33

முன்னீர்மாதவநெடுநாண்முயறலுமுந்நீருறங்கு
மைந்நீர்மேனியன்றோன்றிமகப்பெறின்மற்றில்லையென்றான்
பின்னீர்பெற்றிறந்தாலுமகப்பேறலருளகவென்றே
சொன்னீராதலின்மகவாய்த்தோன்றியதொண்கரச்சங்கமே.

இ-ள். முன்னர் நீங்கள் பெரியதவத்தை நெடுநாளாகச் செய்தலும் திருப்பாற்கடலினிடத்தே துயிலுகின்ற கார்மேகம்போலும் மேனியையுடைய கோவிந்தன் பிரசன்னனாய், புத்திரப் பேறு உங்களுக்கு இல்லையென்றான், பின்னர் நீங்கள் பெற்றுச் செத்தாலும் புத்திரப் பேற்றைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டீர், அதனால் அவனது கையின்கணுள்ள பாஞ்சசன்னிய மென்னுஞ் சங்கானது குழந்தையாகத் தோன்றியது.

பாற்கடல் கடையுங்காலத்தில் ஆலாலந்தோன்றிற்று. அது கண்டு தேவர்களும் அசுரர்களு மோடினர். மாயவன் யாம் காக்கின்றாமென்று நஞ்சிற்கு முன்னர்ச் செல்லுதலும், அதன்வேகம் பட்டவளவிலே பவள வண்ணமாயிருந்த இவர்தேகம் நீலநிறமாயிற்றாகலின் "மைந்நீர்மேனிய" னென்றார்?

சிவபெருமானாற் கொடுக்கப்பட்ட சங்காதலின் ஒண்கரச் சங்கமென்றார் அதி.

செங்காலிற் கருங்காலன் சிரமுருள வுதைத்தனையே
சங்காழி முகுந்தனுக்குச் சங்காழி கொடுத்தனையே.

என்னுந் திருவருணைக் கலம்பகச் செய்யுளாற் பெறுதும். 34

ஏவலினைம்பருவம்வைகியடைந்ததுமீண்டதுபுரிமால்
யாவதும்யாமளியுடையீராதலினிவ்வாறுநும்பாற்
றூவறவாற்றினமென்னாச்சாற்றிவரம்பலநல்கித்
தேவதேவன்றிருவாவினன்புரிச்சேதிமஞ்சென்றான்.

இ-ள். சங்கானது விட்டுணுவின் ஏவலாலே ஐந்து வயதுவரைக்கு மிருந்து பின்னர்ச்சென்றது, அன்பினையுடையீர் யாம் அதுநோக்கி நும்மிடத்து இங்ஙனம் குற்றமறக் குழந்தையாய் வந்தேம் என்று கந்தக்கடவுள் திருவாய் மலர்ந்தருளிப் பலவரங்களையுங் கொடுத்துப் பழநிப்பதியிலுள்ள திருக்கோயிலை யடைந்தனர். 35

அருடேரிநாயகனுமுல்லையணங்குமாவினன்குடியிற்
றெருட்டருசில்பகல்வைகித்தேமலர்த்தாடிளைத்தடைந்தார்
மருடிமாதவமுயன்றுவசுமந்தன்கலியுகத்தி
லிருவினையொத்தடைந்தவாகேண்மெனமாமுனியிசைத்தான்.

இ-ள். திருவருளை யுணர்ந்த சுவணகுத்த னென்பானும் கற்பினையுடைய அவன் மனைவியும் அப்பழநிப்பதியினிடத்தே சிலநாளிருந்து தேன்பொருந்திய தாமரைமலர்போன்ற திருவடிகளை யடைந் தின்புற்றார் அதுநிற்க, முனிவர்களே! கலியுகத்தில் வசுமந்த னென்பவன் மயக்கத்தை நீக்குகின்ற பெரிய தவத்தைச் செய்து நல்வினை தீவினை என்னு மிருவினைகளும் துலைபோலொன்றுபட்டு முத்தியடைந்த சரித்திரத்தைக் கேட்பீராக வென்று சூதமுனிவர் சொல்லத் தொடங்கினர். 36

சுவணகுத்தச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள்—624.

---

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

பதினேழாவது,

# வசுமந்தச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

அங்கிவளர்ப்போர்முதலியமூவர்க்கருளேவல்
வெங்கலிதீரப்புவிதருவேளாண்டொழின்மிக்கோன்
சங்கரிபாகன்சிறுபிறைவேணித்தலைவாழ்வின்
மங்கைதொல்குலவன்மண்மகள்புதல்வன்வசுமந்தன்.

இ-ள். அக்கினியை வளர்க்கின்ற அந்தணர் முதலிய மூக்குலத்தாருக்கும் அருளுடனே ஏவல் புரிதலினும், கொடிய துன்பமானது நீங்கப் பூமியிற்பொருந்திய வேளாண்மைத் தொழிலிலும் மிகுந்தவன், உமாதேவி பாகராகிய சிவபெருமானது பாலசந்திரனைத்தரித்த சடாமுடியின்கண் வாழ்தலையுடைய கங்கையினது பழைய குலத்திற் றோன்றினவன், பூமிதேவியின் புத்திரன் அவன்பெயர் வசுமந்தனாகும்.

பிராமண ரிருவகைப் படுவர். அவருள் அநாதி சதாசிவப்பெருமானது ஐம்முகத்தினின்றும் தோன்றிய பஞ்ச விருடிகள் கோத்திரத்துதித்த அந்தணரே உயர்ந்தவராவார். அவரே ஆதிசைவப் பிராமணரென்றழைக்கப்படுவர். மற்றையோர் பிரமனது முகத்தினின்றுந் தோற்றியவராம் அவர் பலவகைப்படுவர். ஈண்டு அங்கி வளர்ப்போரென்றது ஆதிசைவப் பிராமணரை என்க.

வேளாளர் மூன்றாங்குலமாகிய வைசியரென இக்காலத்துள்ளார் சிலர்மயங்கி இடர்ப்படுகின்றாராதலின் அது வேதாகமாதி உண்மை

நூல்களுக்கும் பண்டையாசிரியராய் உள்ளிட்டா ரெல்லாருக்கும் விரோத மாகலின் அது அஃதெனமறுத்து நூலின்றணியும் தொல்லாசிரியன் கருத்தையும் விளக்குவான் மூவர்க்கருளேவ லென்றும் மங்கைதொல் குலன், மண்மகன் புதல்வன் என்றும் வலியுறுத்தினாராயிற்று. இதனு னே வேளாளர் நான்காம் வருணத்தரென்பது வெள்ளிடை மலைபோற் றெள்ளிதின் உணரக் கிடக்கின்றது. இவற்றின் விரிவெல்லாம் வருண சிந்தாமணி மறுப்பிற் பார்க்கக் காண்க.

வேளாளர்க்கு ஏவல்புரிதல் பயிரிடுத லென்னு மிருதொழிலோடு, ஓதல், ஈதல், வாணிகம், பசுகாத்தல் என்னும் நான்குங்கூட்டி அறு தொழி லுரித்தென்பர் உச்சிமேற் புலவர்கொளும் நச்சினார்க் கினியரும். அதனை "அறுவகைப்பட்ட பார்ப்பன பாக்கமும்" என்னும் தொல் காப்பியத்து வாகைத்திணைச் சூத்திரத் தானறிக.

* ஏவல்புரிதல் உழுவித்துண்போர் உழுதுண்போர், என்னுமிருவகை வேளாளருள் உழுதுண்போர்க் குரியதாக விதிக்கப்பட்டுள்ளது. உழுவித் துண்போர் அரசரிடத்து எனாதி, காவிதி, வேளிர், காவர் என்னும் சிறப் புப்பட்டங்கள் பெற்றும் மந்திரித்துவம் பூண்டும் சேனாபதிகளாக நின் றும் ஒழுகுவரென்க. 1

அறநெறிபிறழானுகில்குலத்தோனன்பீனும்
பொறையுடையாளன்மேவியவீதோர்புரந்தன்னி
லுறைசிவயோகாதியர்பணியோர்போதினுமோவா
னறியனகனிமூலாதிகடினநன்னரினுய்ப்பான்.

இ-ள். தரும *மார்க்கத்தினின்றும் வேறுபடான், குற்றமில்லாத கோத்திரத்தை யுடையவன், அன்பைத்தருகின்ற பொறுமைக் குணத் தையுடையவன், நன்மைபொருந்திய பழநிப்பதியின் கண் வசிக்கும் சிவ யோகத்தில் வல்ல அடியார்களது ஏவலினின்றும் ஒருகணமும் நீங்கான்,



நன்மையுள்ளன வாகியபழம் கிழங்கு முதலியவைகளை நாடோறும் நன் மையுடன் கொடுப்பான். 2

பாவடியானைத்தாரகனுயிருண்படையொள்வேற்
றேவர்கடேவன்கதையமுதுண்டான்செவிவாயான்
மேவினனோர்பாலானவரைப்பான்மிளிர்நெல்லிக்
காவிலடைந்தான்றபதர்குழுவைக்கண்ணுற்றான்.

இ-ள். பருத்த கால்களையுடைய யானைபோன்ற தாரகாசுரனது உயி ரையுண்ட படைக்கலமாகிய அழகிய வேலாயுதத்தைத் தரித்த தேவர் கட்கு அதிபனாகிய கந்தக்கடவுளின் சரித்திரத்தைத் தனது செவிகளை வாயாகக்கொண்டு பருகினவன், இங்ஙன மிருப்போனாகிய வசுமந்தன் ஒருநாள் வராகமலைக்கு ஒரு பக்கத்திலுள்ள விளங்காநின்ற நெல்லிவனத் தையடைந்து முனிவர் கூட்டத்தைப் பார்த்தான்.

தாரகன் என்றது காசிபமுனிவர்க்கும் மாயையென்பாட்குந் தோன் றிய சூரபன்மனது துணைவனன்று. ஈண்டுக்கூறப்பட்ட தாரகன் திரி புரத்தசுரர்களின் றந்தையா யுள்ளவன். அவனொடு பொருதுகொன்ற சரிதத்தைக் கூர்மபுராணம் திரிபுரதகன அத்தியாயக்கண் காண்க. இவனைக் கொன்றமையால் எந்தை கந்தவேள் தாரகாந்தகன் என்ப் பெயர்பெற்றார் எனக் குமாரதந்திரங் கூறிற்று. 3

மொய்த்தவர்புரியுந்தவநெறிகாணுமுகிநெஞ்சம்
வைத்தலர்தூவாவந்தனைபுரியாவழிநின்றா
னத்தவரிவனோதீவிரதரனன்கருளானு
னைத்தகருத்தன்புடையினனென்றேகையரானார்.

இ-ள் நெருங்கிய முனிவர்கள்செய்யுந் தவநெறியைக்கண்டு அருள் அரும்பிய மனங்குவிந்து புட்பங்களைச் சொரிந்து வணக்கஞ்செய்து ஒரு வழிப்பட்டு நின்றான், அதுகண்டு அம்முனிவர்கள் இவன் தீவிரதன

யிருக்கின்றான். நன்மையான அருள்வடிவானவன். ஒத்தமனத்தை யுடையவனாயினன் என்று மகிழ்ச்சிகொண்டார். 4

வாசவமந்தரபூவினள்கோவிண்மணிவானோர்
தாவிறவங்கூர்தலனிதுமுத்தித்தலனுமான்
மூவிருதிருமாமுகவனெவர்க்கும்முதனனென்
றேவரும்வம்மின்பணியுமினுய்ம்மினென்னநின்றான்.

இ-ள். வசுமந்தனே இங்கே வாக்கடவாய், இலக்குமி தேவியும் காமதேனுவும் சூரியனும் ஏனையதேவர்களும் குற்றமில்லாத தவத்தைச் செய்த தலமிதுவாகும். இதுவே முத்தித்தலமுமாம். அழகிய ஆறுதிருமுகங்களையுடைய குமாரக்கடவுள் எல்லார்க்கும் முதற்பொருளாயுள்ளவன் காணே, ஆதலால் யாவர்களும் வாருங்கள் வணங்குங்கள் உய்ந்துபோதிர் என்றுநின்றனர். 5

வீறுவைகாசிவிசாகம்பூரணைவிரவுங்கா
லாறுமுகச்செவ்வேண்மயின்மேல்வந்தருணல்குங்
காறுமிழைக்குதிமாதவமென்றுகரைந்தார்பாற்
கூறருமேவல்குயிற்றினன்வேளாண்குலதீபன்.

இ-ள். பெருமைபொருந்திய வைகாசி மாதத்திலே விசாக நட்சத்திரமும் பௌர்ணிமைத் திதியும் வருங்காலத்தில், கந்தக்கடவுள் மயில்வாகனத்தின்மீது இவர்ந்து காட்சி கொடுத்தருளுவர். அந்நாள்வரையும் பெரியதவத்தை செய்க் கடவாய்என்று கூறினார் அப்பாற் சொல்லுதற்கரிய அத்தவத்தை வேளாள குலதீபமாகிய வசுமந்தன் செய்தான். 6

சொற்றிடுநாளிற்கார்மயின்மீதிற்சுடர்வேலோ
னுற்றிடுவில்வக்காடதினுட்பாலொளிர்நேமி
பற்றிடுசெங்கைப்புயல்பதிகோயிற்குணபானூற்
கற்றிடுவோரெண்சண்முகதீர்த்தக்கரைசார்ந்தான்.



இ-ள். முனிவர் சொன்னநாளிலே நீலநிறம் பொருந்திய மயில்வாகனத்தின்மீது ஒளிகொண்ட வேலாயுதத்தையுடைய குமரவேள் வில்வவனத்தின் பக்கத்திற் பிரகாசிக்கின்ற சக்ராயுதத்தைத் தரித்த சிவந்த கையையுடைய திருமால் இருக்கின்ற கோயிலின் கீழ்ப்பக்கத்தில் நூல்பயின்றறிந்த பெரியோர்களால் எண்ணப்படும் சண்முக தீர்த்தக் கரையை யடைந்தார். 7

இரவிவிண்ணிரதப்புரவிகளொருசாரிடைசாய
வரநதிமீமேலுயரியமணிமண்டபநாப்ப
ணுரகனுமீரியுங்கண்டதிசயமுற்றுளம்வெள்க
வரவுமிழ்மணியினிமைப்புறுமணியாதனமுற்றான்.

இ-ள். சூரியனுடைய ஆகாயத்திற்செல்லுந் தேர்களிற் கட்டப்பட்ட குதிரைகள் ஒருபக்கத்தில் இடையிற்சாய்ந்து நிற்குமாறு ஆகாயகங்கைக்கு மேலும் உயர்ந்துள்ள அரிய இரத்தின மண்டபத்தினடுவே, ஆதிசேடனும் சூரியனுங் கண்டு வியந்துமனம் வெட்குறும்படி, சர்ப்பங்களால் உமிழப்பட்ட இரத்தினங்கள் பிரகாசிக்கின்ற இரத்தினாசனத்தை யடைந்திருந்தார்.

சூரியனது குதிரையைப்பற்றிச் சொல்லுங்காலத்துச் சிலர் சப்தாசுவம் என்னும் பெயரையுடைய குதிரை யென்றும், சிலர் ஏழ்வகை நிறங்களையுடைய குதிரை யென்றும் கூறுவார். ஏழு குதிரைகள் உள வென்னுந் துணிபோதுவான் "இரவிவிண்ணிரதப் புரவிகள்" எனப் பன்மைப்பால்கொடுத்து ஓதினர். இதனைக் கூர்மபுராண விருத்தியுரைக்கண் நன்கு வலியுறுத்தினம் ஆங்குக் கண்டு தெளிக. 8

கவிரிதழரமங்கையர்புடைகவரிக்கால்சாய்ப்பப்
பவமறுதொண்டர்திரண்டயல்வீசணிபணிமாற
வொளிர்சுடர்மணிவிண்ணவர்தருமலர்தண்ணலர்தூவப்
புவனவரோர்தையர்பணிவிடைவேட்டுப்புடைபோற்ற.

இ-ள். மூருக்க மலர்போன்ற உதடுகளையுடைய தேவப்பெண்கள் பக்கத்தில் ஆலவட்டமிரட்டவும், பாவமற்ற அடியவர் ஒருங்குசேர்ந்து பக்கத்திற் சாமரம்வீசவும், விளங்காநின்ற ஒளியையுடைய இரத்தினங்களை யணிந்த தேவர்கள் கற்பக தருவினது அலர்ந்த குளிர்மையாகிய புட்பங்களைச் சொரியவும், புவனத்திலுள்ளவர்கள் தமது மனைவியருடன் வந்து குற்றேவல் கேட்டுப் பக்கத்திற்றுதித்து நிற்கவும். 9

விசிமணிமுழவத்தொனிகளைகடல்விள்வாய்மூடக்
கசிதருகுரல்யாழ்முனிவார்முறைகானம்பாட
வசியிடுவாளுண்கண்ணியரசதியின்வழியாடப்
பொசிநறவூறும்பூமலையங்கீரல்புடைபோத.

இ-ள். வாரினாற் கட்டப்பட்ட அழகிய முரசொலியானது ஒலிக்கின்ற சமுத்திரத்தின் திறந்த வாயைமூடவும், கசிவைக் கொடுக்கின்ற குரலினைக்கொண்ட யாழிசையில் வல்ல முனிவர்கள் முறையே பாட்டுக்களைப்பாடவும், கூர்மைபொருந்திய வாளாயுதத்தையும் வென்ற கண்களையுடைய பெண்கள் யுவதியராக நின்று நடனஞ்செய்யவும், பொசிகின்ற தேன்சுரக்கும் பூமலையானது, அழகியபாதங்களின் மேலுயர்ந்து விளங்கவும். 10

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மூழகதிரிரவியளவில்பலகோடிமேற்செலு
மாமையுமழுங்க
வழுகுவீற்றிருந்துமணிகிடந்திமைக்குமணிகெழு
மவுலியுமாலோன்
குழையுடற்கலைகளொன்றிரண்டோரிலொன்பதுண
ரென்றுகாமனத்தின்
விழையிறும்பூதுவிழைப்பவாணுதன்மேல்விளங்குபுண்
டரமும்வில்வீச.



இ-ள். இளங்கிரணங்களையுடைய சூரியர்கள் அளவில்லாத பலகோடியின்மேற் கூடிய ஒளியும் குறைய அழகானது வீற்றிருந்து இரத்தினங்கள் இருந்து பிரகாசிக்கின்ற வரிசையாக விளங்கும் முடிகளும், சந்திரனது குறைந்த உடலினுள்ள பதினாறு கலைகளுள் ஆராயுமிடத்து ஒன்பது கலைகள் தாமுளவென்று மனத்தின்கண் வியப்பை யுண்டாக்கும்படி ஒளிகொண்ட நெற்றியின்மீது விளங்குகின்ற சந்தனத்திலகமும் ஒளியையெறிக்க. 11

மின்றிருநுதலிற்புண்டரகிலவுவெள்ளமும்
விழியருணதியு
மொன்மெனக்கலவாதிடைவரம்பிட்டாங்கொளிர்புரு
குடிவடிவோங்க
முன்றனித்தனியாய்க்கட்கடைக்களிகண்முழுவது
மொருங்கிமைத்திருப்ப
நின்றிமைக்கோடுகடந்தலையெறியுநீள்விழி
யருட்கடனீட.

இ-ள். ஒளிர்கின்ற அழகிய நெற்றியின்கண் முக்குறிகளாகிய சந்திரிகைப் பிரவாகமும், கண்களினின்றெழுகும் ஆறும், ஒன்றுடன் கலவாதிருக்கும்படி இடையில் வரம்பிட்டாற்போல, பிரகாசிக்கின்ற புருவ வடிவும்விளங்க, முன்னர்த் தனித் தனியாகக் கடைக்கண்ணினின்றும் ஆனந்தவருவிகள் ஒன்றுசேர்ந்து காணப்படவும், நிலைபெற்று இமையாகிய கரையினிடத்தைக் கடந்து திரைவீசுகின்ற நீண்ட கண்களினின்றும் அருட்சமுத்திரஞ் சுரக்கவும்.

வான்முகவனப்புக்கொழுந்துவிட்டாங்குமணிச்சிரங்
துண்டங்கள்வாய்ப்பத்
தாணுவுக்கொருசொற்சாற்றுசெயிதழ்மாதுளையிதழ்
தனித்தனிதயங்கப்

பூணிள்முலைத்தாய்புகட்டுபாறேக்கிப்பொசிந்தன
புன்னகைபொடிப்பத்
தோன்மிசைசெவிதாழ்சுருட்குழைதுயலச்சூழ்முக
மாறுமேதோன்ற.

இ-ள். ஒளிகொண்ட முகத்தின அழகானது கொழுந்துவிட்டாற்போல, அழகிய தலைகளும் மூக்குகளும் பொருந்தவும், சிவபெருமானுக்குப் பிரணவப்பொருளின் உண்மையை யுபதேசித்த சிவந்த உதடுகள் மாதுளம் பூவினிதழ்கள்போல வேறுவேறு விளங்கவும், ஆபரணங்களை யணிந்த இளமைபொருந்திய முலைகளினின்றுந் தாயாராகிய உமாபிராட்டியார் ஊட்டிய பாலையுண்டு பொசிந்தாற்போன்ற குறுமுறுவல் பூப்பவும், திருப்புயங்களினிடத்துக் காதுகளிற் றூங்குகின்ற சுருளினையுடைய குண்டலங்கள் தூங்கவும், ஒளிசூழ்ந்த ஆறுமுகங்கள் தோன்றவும்.

மாலைவெள்ளருவிநறுமணிகொழித்தமணிமுடி
வடகிரிசிவணப்
பாலொளிநூலுமதாணிமாவணியும்பகட்டெழின்
மார்பமுந்தயங்க
நீலமுங்கடம்புங்குரவமும்வெண்கூதாளமு
நிறைமணமுயிர்ப்பக்
கோலவாள்வயிரக்குலவினந்தோளுங்கோமள
வலயமுங்குலவ.

இ-ள். தூங்குகின்ற வெள்ளிய அருவிகள் கொழித்த நவரத்தினங்களாற் செய்யப்பட்ட அழகிய கிரீடங்கள் மேருமலையை யொத்து விளங்கவும், பால்போன்ற நிறத்தையுடைய பூணூலும் மார்பி னணியாகிய சிறந்த ஆபரணமும், பெரிய அழகையுடைய மார்பும் விளங்கவும், குவளைமாலையும் கடப்பமாலையும் குராமாலையும், வெள்ளிய வில்வமும் நிறைந்த வாசனையை வீசவும், அழகிய ஒளிபொருந்திய வயிரத்தினங்கள் போன்ற சிறந்த இளந்தோள்களும் முத்துமாலைகளும் விளங்கவும்.



மாமுதறடிந்தவேலுமொள்வாளும்பலகையும்
வயிரவாட்படையுங்
காமர்பொற்கதையுமிருதலைச்சூலுங்கதமெரித்
திகிரிவான்படையுந்
தோமில்கார்முகமும்வாளியும்வரதாபயமும்வா
ரணச்சுடர்க்கொடியுந்
தாமரைமுகிழ்ப்பமலர்ந்தபன்னிருகைத்தலங்களு
நலங்கிளர்ந்தோங்க.

இ-ள். மாமரமாகிய சூரபன்மனைக்கொன்ற வேலாயுதமும், ஒளிபொருந்திய வாளாயுதமும், கேடகமும் வைரமுற்ற வாளாயுதமும், அழகிய பொன்மயமான தண்டும், இருதலையையுடைய சூலப்படையும், சினங்கதவும் எரிகாலும் பெரியசக்கராயுதமும், குற்றமில்லாத வில்லும் அம்பும் வரதமும் அபயமும் ஒளிகொண்ட கோழிக்கொடியும் தரித்த தாமரைமலருங் குவியும்படி விரிந்து விளங்கும் பன்னிரண்டுதிருக்கைகளும் நன்மை மிக்கு விளங்கவும். 15

பன்னிறமணியினுதரபந்தனமும்பரவொளிப்
பசும்பொனிற்குயிற்று
மின்னிவர்கலிங்கமருங்கினும்விளங்கவிண்ணவர்
மவ்லியில்வேத்ச்

சென்னியிற்கிடந்தசேவடிப்போதுந்திரண்மணிச்
சில்லரிச்சிலம்பும்
பொன்னிறங்கெழுபூஞ்சதங்கையுந்திகழப்பொலிந்தன
காட்சியிற்சிறந்தே.

இ-ள். பலநிறங்களையுடைய இரத்தினங்கள் குயிற்றிய ஒட்டியாணமும், பரந்தகிரணத்தையுடைய பசிய பொன்னாற்செய்யப்பட்ட மின்னல்போன்ற பட்டாடையரையில் துலங்கவும், தேவர்களது முடியினும் வேதசிரசினும் கிடந்த செவ்விய திருவடிமலர்களும், திரண்ட மணிகள் பெய்யப்பட்ட சிறு நுண்கற்களையுடைய சிலம்புகளும், பொன்னினது நிறங்கொண்ட பொலிவாகிய சதங்கைகளும் விளங்கத் தோற்றத்திற் பொலிந்து வீற்றிருந்தனர் குழந்தைவேலாயுதனார். 16

அப்பெருங்காட்சியளிப்பவானோருமருமறைத்
தாபதக்குழுவு
மெய்ப்பொருந்தனமையோருமைம்புலனுமெறிவசு
மந்தனும்போற்றி
மைப்பெருங்கடலின்மாட்டியமதுகைமணிநெடுஞ்
சுடரிலைவேலோன்
மெய்ப்பெருவரங்கணல்கிடவேண்டிமீளவும்
விச்சையினின்றே.

இ-ள். அத்துணைச்சிறப்புடைய காட்சியைச் சிவசுப்பிரமணியப் பெருமான் கொடுத்தருள், தேவர்களும் அரிய வேதங்களையுணர்ந்த முனிவர்கூட்டங்களும், உண்மைப்பொருளை யுணர்ந்தஞானியரும் மெய் வாய் கண்மூக்குச்செவியென்னும் பஞ்சேந்திரியங்களையும் அறவெறிந்த வசுமந்த னென்பானும் துதித்து, கரியபெரியசமுத்திரத்தில் செலுத்திவிட்ட வலியுடைய அழகிய நீண்டவொளிகொண்ட இலைத்தொழில் முற்றிய



வேலாயுதக்கடவுள், உண்மையான பெரிய வரங்கள் அளிக்கப்பெற்று, பின்னரும் விருப்பத்துடனின்று. 17

கண்முகமிருமூன்றினையொருமூன்றுகவினியோ
னருளுருவாய
சண்முகதீர்த்தங்குடைந்துநின்றாடிச்சரவண
பவனெனுமெழுத்தாற்
பண்முகமறையின்பாற்படுநாமம்பாடியு
மாடியும்பணிந்து
மொண்முகமலர்ந்துகைம்மலர்முகிழ்ப்பவுளங்குதிர்
குதிர்ப்பவேநின்றார்.

இ-ள். கண்களும் முகமும் பதினெட்டாகப் படைத்த சுப்பிரமணியப் பெருமானது திருவருள்வடிவான சண்முகதீர்த்தத்திற்றோய்ந்து ஆனந்தக் கூத்தாடிநின்று சரவணபவன் என்னும் சடக்ஷரமந்திரத்துடன் தேவுருவாக வுள்ள வேதங்களினிடத்துள்ள ஆயிர நாமங்களையும் சொல்லித் துதித்தும் பாடியும் வணங்கியும் அழகிய முகமலர்ச்சிகொண்டு கையாகிய புட்பங்கள் தலையிற்குவிய மனம் நெகிழ்ந்த நின்றார். 18

நின்றவர்மீளநெறிதிரைகடல்சூழ்நீணில
முழுதொருங்களிக்கு
மன்றலந்துழாய்மாலாவதுநீயேயெனத்துதி
வழுத்தினர்முன்னா
ரன்றுவெண்சங்கும்பதுமமுங்கதையுமவிர்சுட
ராழியுந்தோன்ற
முன்றிகழ்ந்தனன்யாருணர்வர்வேன்முருகனுடலை
முழுத்தவமுனிவீர்.

இ-ள். நின்றதொண்டர்கள் முதலாயினோர் பின்னர், ஒழுங்காகிய திரைகளையுடைய கடலாற்சூழப்பட்ட நீண்டநில முழுவதையுங்காக்கின்ற வாசனை பொருந்திய துழாய்மாலையைத்தரித்த திருமாலாவதுந் தேவரீரே யென்று தோத்திரத்தைச்சொன்னார், அவர்க்கு முன்னர் அப்போது குமாரக்கடவுளானவர் வெள்ளிய சங்கும் உந்தித்தாமரையும் தண்டாயுதமும் விளங்காநின்ற ஒளியையுடைய சுதரிசன சக்கரமுந்தோன்ற முன் விளங்கினர், மிக்க தவத்தையுடைய முனிவர்களே! கதிரைவேற்பெருமானது திருவிளையாடலை யாவருணர வல்லவர். 19

கலி விருத்தம்.

பண்டையினாறுமுகந்தோன்றப்பன்னிரு
திண்டிறற்புயனருடிளைத்துச்சூகர
விண்டுவைநோக்கினனுய்யமேதினி
யொண்டிரைநதிகளாறுதித்தெழுந்தவே.

இ-ள். பழமையாகிய ஆறு திருமுகங்கள் தோன்றவும், மிக்க வலிமையையுடைய பன்னிருதிருப்புயங்களையும் அருளிற்கொண்டு, வராக மலையைத் திருநோக்கஞ்செய்தார், உலகமெலாம் உய்யும்படி அழகிய திரைகளையுடைய ஆறுநதிகள் தோன்றியெழுந்தன. 20

உதித்தவந்நதியுமுந்தியொன்றெனக்
கதித்தெழுசண்முகதீர்த்தங்கைக்கொளீ
விதித்தபாலோடையின்மேவியாம்பிர
வுதிப்புனலடைந்துகாவிரிபரீஇயதே.

இ-ள். தோன்றிய அந்நதிகள் ஆறும் ஒரு நதி யென்றுசொல்லும்படி மேற்பட்டெழுந்து சண்முக தீர்த்தத்தைக் கைக்கொண்டு, தோயும்படி விதிக்கப்பட்ட தேனு தீர்த்தத்திற்சென்று, சூததீர்த்தத்தை யடைந்து காவியாற்றைக் கலந்தது. 21



பொருவின்மாதவர்வசுமந்தன்போற்றநன்
கருளியாறுறுவந்தடிபணிந்திடப்
பெருவரநல்கிவெண்பிறைமுடிப்பிரான்
குருபரனாவினன்குடியிலெய்தினான்.

இ-ள். ஒப்பில்லாத முனிவர்களும் வசுமந்தன் என்னும் வேளாள முனிவனும் துதிக்க அவர்க்கு நன்மையுடன் அருள்செய்து, ஆறுநதிகளும்வந்து பாதங்களைப்பணிய, பெருத்த வரங்களைக்கொடுத்து, வெள்ளிய பிறைச்சந்திரனைத்தரித்த முடியையுடைய சிவபெருமானுக் குருவாய விளங்கும் அறுமுகப் பெருமான் திருவாவினன்குடியை யடைந்தனர். 22

வேலுடைக்கடவுடன்காட்சிமிக்கமுக்
காலமுமுணர்வசுமந்தன்காசுதீர்
நூலுணர்முனிவரைநோக்கிமுன்பியான்
வாலியகாசிபமரபிலாயவன்.

இ-ள். வேலாயுதத்தைத்தரித்த கந்தக்கடவுளின் திருக்கோலத்தைத் தரிசித்தலில், மிக்க திரிகால சம்பவங்களையுமுணர்ந்த வசுமந்தன் என்பான், குற்றநீங்கிய வேதசிவாகமங்களாகிய உண்மைநூல்களையுணர்ந்த இருடிகளைப்பார்த்து (அறவீர்எனது முன்வரலாற்றைக் கூறுவன் கேட்பீராக) நான் முன்னர்ப் பரிசுத்தமுடைய காசிபகோத்திரத்திற் பிறந்தேன். 23

அறுதொழிலாற்றுவேனன்றிமற்றொரு
சிறுதொழிலாற்றிடேன்றிமையார்க்கதி
பெறுதொழினீத்தொருகன்னல்பின்னவ
ருறுதொழில்கோட்டினனுற்றனுற்றனன்.

இ-ள். ஓதல் ஓதுவித்தல் வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறுதொழில்களையுஞ் செய்வேனன்றி, வேறொரு சிறுமை

கொண்ட தொழில்களைச் செய்யேன், முன்னர்ச்செய்த தீவினையினாலே முத்தியையடைதற் கேதுவாய அத்தொழில்களைவிடுத்து, பின்பு ஒருகடிகைப்பொழுது நான்காங் குலத்தாராய வேளாளர்க்குரிய தொழில்களைக் கொண்டு நான்செய்தேன். 24

இக்குலமாய்தவினெய்தினனென்றவ
மக்குலமிழைத்தவினடைந்துநும்மையைங்
கைக்குலக்களிற்றினுக்கிளையகாளையை
மைக்குலவினைதபவழுத்திவாழ்ந்தனன்.

இ-ள். அப்பிறவிமுடிய இவ் வேளாளகுலத்தில் வந்து பிறந்தேன் என்னுடையதவத்தை, அந்தக்குலத்தவர் செய்தலால் மீண்டும்பெற்று நுங்களையும், ஐந்துதிருக்கரங்களையுடைய சிறந்தயானையாகிய விநாயகக் கடவுளுக்கு இளைய களிறுபோன்ற விசாகமூர்த்தியையும், இருள்போலச் செறிந்த வினைகளெல்லாம் ஒழியத்துதித்துவாழ்ந்தேன். 25

கதியுமெய்துவனினிக்காண்பினென்றுவண்
பதியினில்யோகமோர்பருவமுற்றிவே
ளதிர்கழலடிமலரடைந்தனன்மறைத்
துதிமுனிவீரெனச்சூதன்சொல்லினன்.

இ-ள். இனிமேல் முத்தியையும் அடைவேன், அதனைக்காண் பீராகவென்று, வளப்பமுடைய அத்தலத்திலே ஒருவருடம் சிவயோகத் தைச்செய்து கந்தக்கடவுளின் ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த திருவடிகளை யடைந்தனன், வேதங்களாகிய தோத்திரங்களைச் சொல்லுகின்ற முனி வர்களே இதனை யறிவீராகவென்று சூதமுனிவர்கூறினர். 26

வசுமந்தச் சருக்கம் முற்றிற்று.

ஆகச்செய்யுள்—65

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

பதினெட்டாவது,

# சண்முகநதிச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

புண்ணியசாந்தமேனிச்சூதனைமுனிவர்போற்றி
யண்ணரும்பிறவித்தீயையறிவெனும்புனலுய்த்தாற்றுந்
தண்ணளியுடையையன்றோசண்முகநதியினாற்ற
லுண்மையைவிரிவினெங்கட்குரையெனவறையலுற்றான்.

இ-ள். தருமவடிவினதாய திருநீற்றினொளிகொண்ட மேனியை யுடைய சூதமுனிவரை நைமிசாரணிய விருடிகள் துதித்து, அடைதற் கரிய பிறவியாகியநெருப்பை அறிவென்கின்ற நீரைச்செலுத்தித் தணிக் கும் கிருபையை யுடையீரன்றோ, சண்முகதீர்த்தத்தின் பெருமையி னுண்மையை விரிவுடன் அடியேங்கட்கு எடுத்துவகுக்கவேண்டுமென்று பிரார்த்திக்கச் சூதமுனிவருஞ்சொல்வாராயினர். 1

சுழித்தசண்முகதீர்த்தத்தின்கரையில்வேற்சுதனிஞ்ஞாலஞ்
செழித்திடமேவிச்சூகராசலச்சிகரிநோக்கு
முழுத்தவெண்டிங்களன்னமூவிருமுகங்கடோறுங்
கொழுத்தபேரருளாறாயநதியெனக்குலவிற்றன்றே.

இ-ள். சுழித்தலையுடைய சண்முகதீர்த்தத்தின் கரையிலேவேலாயு தப்பெருமான் இப்பூமியுய்யும்படி வீற்றிருந்து, வராகமலையின் கொடு முடியைப் பார்த்தருளிய பூரணசந்திரனைப்போன்ற ஆறுதிருமுகங்க

டோறும் பெரிய திருவருள்மிக்க ஆறுநதிகள்தோன்றி நதியாக விளங்கிற்று. 2

சத்தியோசாதமாதிமுகங்களிற்கொன்றைசாமஞ்
சுத்தமாயார்த்தஞானநதியிவைதோன்றிமூல
வத்திரந்தனிற்பைந்தோகைமாநதிதோன்றிக்கங்கை
யொத்தசண்முகதீர்த்தத்திற்கூடியொன்றாயதன்றே.

இ-ள். சத்தியோ சாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசானம் என்னும் ஐந்துமுகங்களி னின்றும் முறையேகொன்றைநதி, சாமதீர்த்தம், சுத்தநதி, மாயார்த்தம், ஞானநதிஎன்னும் ஐந்து நதிகளும் தோன்றியும், மூலமுகத்தி னின்றும்பசிய மயூரநதி யுற்பவித்தும் கங்கா நதியை யொத்த சண்முகதீர்த்தத்திற்சேர்ந்து ஒன்றாய்க்கலந்தது. 3

நாடிவந்திறைஞ்சும்யாற்றைநகுமணிவேற்செய்நோக்கி
நீடுலகீரேழுள்ளுநிகழறுபான்மீதாறுங்
கோடிமேலுளதீர்த்தங்களுருவுகொண்டும்பர்கூடி
யாடுமென்றியும்யாரேனுமாடினோர்வீடுசேர்வார்.

இ-ள். தேடிவந்து வணங்கிய சண்முகதீர்த்தத்தைக் கதிர்வேற் பெருமான் பார்த்து, நீண்டபதினன்கு உலகத்தி னுள்ளுமிருக்கின்ற அறுபத்தாறுகோடியென்னும் எண்ணுக்கு மேலாகவுள்ள தீர்த்தங்களின் வடிவுகொண்டு மேலேசேர்ந்து விளங்கும், அல்லாமலும் யாவராயினும் அந்நதியினிடத்துத் தோய்ந்தோர் முத்தியையடைவார். 4

அருளினிவ்வாறுவேண்டும்வரங்களுமளித்துச்சென்றான்
முருகனதருளினாற்சண்முகநதியாகிக்கோங்கந்
தருவனஞ்செறிபாலோடைசார்ந்துசங்கரன்றாள்போற்றிப்
பெருகுபாலாறாய்ச்சூதநதியினிற்பேர்க்கலந்தே



இ-ள். கிருபையுடன் இவ்வாறு வேண்டிய வரங்களை யெல்லாங் கொடுத்துச் சென்றனர். சண்முகக் கடவுளின் றிருவருளினாலே அவை சண்முக நதியெனப் பேர்பெற்று, தருக்கள் பொருந்திய கோங்க வனத்தின்கணுள்ள தேனு தீர்த்தத்தை யடைந்து, ஆங்கு வீற்றிருந்தருளும் சிவபெருமானது திருவடிகளைத் துதித்து, பெருகுதலையுடைய பாலாறு ஆகிச் சூதநதியிற் பெயர்ந்தோடிற்று. 5

மனமொழிமெய்களானுமன்றியும்புரிந்தபாவந்
தினையளவேனுநில்லாவேகினுந்தினமொன்றாடிற்
புனலிடைதோய்ந்தக்கால்யாண்டுத்திசைபோயிற்றுங்க
ணனிசராசரமுமுத்திவீட்டினைநணுகுந்திண்ணம்.

இ-ள். ஒருநாள் அதிற்றோய்ந்தால் மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலுஞ் செய்தபாவங்கள் தினையளவு தானும் நிற்கமாட்டா, அகலும் இந்த வழியாகச்சென்ற அந்நதியினிடத்தே மிக்க சராசரங்கள் ஓர்வருடம் தோயின் முத்திவீட்டை யடைதல் சத்தியம். 6

ஆதலினாண்டுவைகியந்நதிகுடைந்துமாந்திற்
றூதலர்நீபன்றாட்டாமரைதொழுந்தக்கோர்பெற்றி
யோதுதலரிதுசத்திவடிவமாகநன்னீர்
சீதநுண்மணலினீட்டந்திகழ்சிவலிங்கமாமே.

இ-ள். ஆதலால் அவ்விடத்திருந்து அந்தத் தீர்த்தத்திற் குளித்தும் பருகியும், மகரந்தம் பொருந்திய கடப்பமலர்மாலையை யுடைய கந்தசுவாமியின் தாமரை மலர்போன்ற திருவடிகளை வணங்குகின்ற அடியாரது பெருமைகளை எடுத்துச் சொல்லுதல் மிக அரியதாகும், நல்ல நீரானது சிவசத்தி வடிவமாக விளங்க அதன்கணுள்ள குளிர்ந்த நுண்ணிய மணல்களின் தொகுதி விளங்காநின்ற சிவலிங்கமாகும். 7

முரிதிரைமுழக்கருச்சண்முகநதிக்கரையின்மொய்த்த
வரிமலர்ப்பொதும்பரும்பர்முனிவர்பைங்கொடிகள்வர்ணத்
தரிவையர்கிளியும்புள்ளுமறைவனமறைகளென்றாள்
விரிவினன்னதியினாற்றல்யாவர்வாய்விள்ளுகிற்பார்.

இ-ள். மடங்குந் திரைகளின் ஒலி நீங்கப்பெறாத சண்முக தீர்த்தத்தின் கரையினிடத்தே சூழ்ந்திருக்கின்ற தேன் பொருந்திய புட்பங்களையுடைய சோலைத்தருக்கள் எல்லாம் தேவர் முனிவர் ஆகும், பசியகொடிகள் தேவப் பெண்களாகும், கிளிகளும் நாகணவாய் முதலிய பறவைகளும் கூறுவன வேதங்களாகும், என்றால் அந்நதியின் பெருமையை யாவர் வாயார் சொல்லவல்லவர். 8

அன்னலம்பதிகடம்மிலாவினன்குடியுமாடுந்
தன்னமர்நதிகடம்மிற்சண்முகநதியும்போற்று
மெண்ணருந்தேவர்தம்மின்முருகனுமேற்றமென்று
கண்ணினின்றாடியுள்ளேநவின்றருச்சிப்போர்முத்தர்.

இ-ள். பெருமையிற் சிறந்த குகதலங்களுள் திருவாவினன் குடியென்னும் பழநிப்பதியும், ஆடுகின்ற குளிர்ச்சி பொருந்திய ஆறுகளுள் சண்முக தீர்த்தமும், துதிக்கப்படுகின்ற தேவர்களுள் முருகவேளும் உயர்வுடையன வாகுமென்று, அத்தலத்தை யடைந்து தீர்த்தத்திலாடி மனத்திற் றியானித்து அருச்சனை செய்பவர் சீவன்முத்தராவர். 9

தென்பரங்குன்றந்துன்றுச்சீரலைவாய்தென்னாவி
னன்குடியேரகஞ்சூழ்குன்றுதொறாடனாறு
மென்பழமுதிர்தண்சோலைமலையிவையாறுமேனாட்
டன்பழம்பதிகளாக்கவைகினன்றனிவேற்செம்மல்.

இ-ள். அழகிய திருப்பரங்குன்றம், அழியாத் திருச்சீரலை வாய் (திருச்செந்தூர்) தென்றிசைக்கணுள்ள திருவாவினன்குடி, திருவேர



கம் குன்றுதொறாடல், நாடோறும் மிருதுவான பழமுதிர் சோலைமலை என்னும் இவ்வாறு தலங்களுமே தமதுபழமையான திருத்தலங்களாகக் கொண்டு, முன்னர்க்காலத்தில் ஒப்பற்ற வேலாயுதத்தையுடைய குமாரக் கடவுள் எழுந்தருளியிருந்தனர்,

இவ்வாறு தலங்களுந் திருப்படைவீட்டுத் தலங்கள் எனப்படும் இவற்றை முறையே ஆதாரதலங்கள் எனவும் கூறுப. எங்ஙனமெனில்,

1 - திருப்பரங் குன்றம் - மூலாதாரத்தலம் எனவும்,
2 - திருச்செந்தூர் - சுவாதிட்டானத்தலம் எனவும்,
3 - திருவாவினன்குடி - மணிபூரகத்தலம் எனவும்,
4 - திருவேரகம் - அநாகதத்தலம் எனவும்,
5 - பழமுதிர்சோலை - விசுத்தித்தலம் எனவும்,
6 - குன்றுதொறாடல் - ஆக்கினைத்தலம் எனவுங் கூறுப.

இவ்வாதாரங்கட்கு மேலான துவாதசாந்தத்தலம் யாதெனில், இலங்கையிலே இந்துசமுத்திரம் என்னும் மகேந்திரக்கடலுக்கு வடக்கேஇருக்கும் கதிர்காமம் என்னுந் தலமேயாகும். இது சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் முதலிய அசுரரைக் கொல்வதற்குக் குகப்பெருமானார் பாடிவீடாகக் கொண்டதலம் என்பது கந்த புராணத்தின் கருத்து ஏம கூடத்தலம் என்று சிவரகசியங் கூறுநிற்கும் அக் கதிர்காமத்தின் பெருமைகளையெல்லாம் விரித்துரைத்திக் கதிர்காம மான்மியம் ஒன்று செய்துள்ளாம். அதிற் றெற்றெனக் காண்க. 10

திலநெய்போலுயிர்கடோறுஞ்செறிகதிர்வடிவேற்செம்மன்
மலர்தலையுலகின்மேயதலந்தொறும்வைகுவேனுந்
தலனிவையாறுநீங்கானலத்துளாவினன்குடிப்பாற்
பலர்புகழ்சிவாசலத்திற்பரஞ்சுடர்வடிவிலோங்கும்,

இ-ள். எள்ளினுள் எண்ணெய்போல ஆன்மாக்க டோறும் வியாபித்திருக்கின்ற ஒளிபுள்ள கூரிய வேலாயுதத்தைத் தரித்த குகப் பெரு

மான், பரந்த இடத்தையுடைய நிலவுலகத்தின்கணுள்ள தலங்கடோறும வீற்றிருப்பர் ஆயினும், இத் திருப்படை வீட்டுத்தலம் ஆறனையும் நீங்கி யுறையார், அவ்வாறு தலத்துள்ளும் இத்திருவாவினன் குடியென்னும் பழநிப்பதிக்கண் உள்ள, பலரும் புகழுகின்ற சிவகிரியின்கண் மேலான சோதிவடிவாய் ஒரு கணமேனும் நீங்காது எழுந்தருளியிருப்பர்.

குகப் பெருமான் ஆன்மாக்களின், புண்டரீகவீடு, தகராலயம் உள்ளக் குகை என்னும் பெயர்கொண்ட இருதய கமலத்தில் வீற்றிருந்தருளலாற் குகன் எனப்பட்டார் அதனியல்பெல்லாம் தகராலய ரகசிய விருத்தியுரையின் உரைத்தாம்.

எங்ஙனம் உயிர்கடோறும் வியாபித் திருப்பாரெனில் எள்ளினுள் எண்ணெய் இருப்பது போல வென்க.

சாமவேதம்-வாசுதேவ உபநிடதம்.

தைலந் திலேஷு காஷ்டேஷு வஹ்நி: க்ஷீரே க்ருதம் ததா!
கந்த புஷ்பேஷு பூதேஷு ததாத்மா வஸ்திதோக்யகம்!
ப்ரஹ்ம ரந்திரே ப்ருவோர் மத்யே ஹிருதயே சித்ரவிம் ஹரிம்.!

யசுர்வேதம் - சுவேதாச்சுவத ரோபநிடதம்.

திலேஷு தைலம் ததி நீவ சர்ப்பிரா பச்சோத ஸ்வரணீஷு சாக்நி!
வ மீத் மாத் மநிஜாயதே ஸௌஸத் யேநை நம்தபஸா யோநுபச்யதி!

மாதவப்பெருந்தகைச் சிவஞான யோகிகள் திருவாக்கு.

பண்ணிசைவெம் பரிதிமதி நிலதயிலந் தீயிரும்பு பாணியுப்பு,விண்ணனில முடலுயிர்நீர் நிழலுச்சிப் பளிங்குபகல் விளக்குப்பானீர், கண்ணிரவி யுணர்வொளிபோற் பிரிவரிய வத்துவிதக் கலவிகாட்டித், தண்ணளிவைத் தெனையாண்ட துறைசை நமச்சிவாயகுரு சரணம்போற்றி.

உயிர்—(உடற்கு) உய்தலைக் கொடுப்பது, சீவிப்பது, உயிர்ப்பது எனவும் பொருள் கூறுப. தொறும் - இடப் பன்மைப் பொருளில்



வந்தது. செம்மல்—பெருமையிற் சிறந்தவன். தலம் - தலன் எனப் போலி. சிவாசலம் - வடநூன் முடிபு. 11

நிலையுருத்தரித்தநீத்தநீணிலமுதன்மற்றெல்லாந்
தலையுருத்தரிப்பவேண்டிச்சத்தியுஞ்சிவமுமாகி
மலையுருத்தரித்தவந்தத்தலமையார்வகுப்பதென்னக்
கலையுருத்தரித்தசூதமுனிவரன்கழறலுற்றான்.

இ-ள். நிலைமையான வடிவத்தைக் கொண்டுள்ள சண்முக தீர்த்தமானது, நீண்ட பூமிமுதலாகிய உலகத்துள்ளவர்கள் யாவரும், முதன்மைபெற்ற திருவருள் வடிவாகவேண்டு மென்று விரும்பிச் சத்தியாகியுஞ் சிவமாகியும் மலைவடிவத்தைக் கொண்ட அந்தப் பழநித் தலத்தின் பெருமையை யார்கூறுவர் என்று, கலையினியல்களைக் கொண்ட சூதமுனிவர் சொல்வாராயினர். 12

சண்முகநதிச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள்—662.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

பத்தொன்பதாவது,

# சிவகிரிசத்திகிரிச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

தவமலைப்பெருஞ்சூதனைநோக்கிமாதவத்தோர்
பவமலைப்பெருங்குவடுபட்டுருவவேல்விடுத்தா
னவமலைப்பெருங்கிரிகளினலங்கெழுசத்தி
சிவமலைப்பெருங்காதைசெப்பெனத்தெரித்திடுவான்.

இ-ள். நைமிசாரணியத்து வசித்த முனிவர்கள், தவக்குன்றாகிய பெருமையையுடைய சூதமுனிவரைப்பார்த்து, பாவமென்கின்ற வருத்தஞ்செய்யும் பெரிய கிரவுஞ்சமலையுருவும்படி வேலாயுதத்தை விடுத்தருளிய குகக்கடவுளது, ஒன்பது பெருமலைகளுள், சத்திகிரி சிவகிரி என்னும் இருமலைகளின் சரித்திரத்தையுங் கூறியருள வேண்டுமென்று பிரார்த்திக்கச் சூதமுனிவர் சொல்வாராயினர். 1

நவிலின்மாதவிர்நலங்கெழுபுராணமுன்னவில்கா
லவிர்சடைப்பிராணரும்பிளநகையவளுருவங்
கவினியோங்கிடும்வைகதைநீபிறர்க்கோத
றவிர்திகுய்யமாகுய்யமென்றனன்பராசரன்சேய்.

இ-ள். பெரிய தவத்தையுடைய முனிவர்களே! பராசர முனிவரது புத்திரராகிய வியாசமுனிவர் முன்னர்க்காலத்து நன்மைமிக்க பதினெண் புராணங்களையும் எனக்கு உபதேசித்த காலத்தில், விளங்கா



நின்ற சடையையுடைய சிவபெருமானதும், அரும்பிய குறுமுறுவலையுடைய சிவசத்தியினதும் வடிவத்தைப்பெற்று அழகுற்று விளங்கும் இம்மலைகளின் மான்மியத்தைநீ பிறர்க்குச் சொல்லுதலை யொழிப்பாயாக, அது மிகவும் இரகசியம் இரகசியம் ஆகும் என்று கூறினர். 2

உய்த்துநீபிறர்க்குரைத்திடேலென்றதையெண்ணி
யத்திரிக்குவடுகடொழச்சேணெறியணுகு
முத்திநல்குமென்றிடினவைமான்மியமுற்றும்
வைத்தகேள்வியர்பயனையார்வரையறுத்திசைப்பார்.

இ-ள். தேவரீர் உபதேசித்து, இதனைநீ பிறர்க்குச் சொல்லாதேயென்றதை நினைத்து, அந்த மலைகளை வணங்க, வான்வழிச் செல்லும் பேரின்ப முத்தி கைகூடுமென்று கூறினால், அம்மலைகளின் மான்மிய முழுவதும் தங்காதினிறைத்த கேள்வியை யுடையவரது பெரும்பயனை யாவர் வரையறுத்துக்கூற வல்லவர். 3

உரைத்தமாதல்னவிரண்டோங்கலுஞ்சேணிற்
கருத்துறாதுகாண்பினும்வலஞ்சூழினுங்காதை
யருத்தமோதிடாதிசைப்பினுங்கேட்பினுமவையி
லிருப்பினுங்கதியடைவிக்குமிஃதுண்மையுண்மை.

இ-ள். சொல்லப்பட்ட பழநிப் பதியிலே விளங்குகின்ற சிவகிரி சத்திகிரி என்னும் இருமலைகளையும் தூரத்திலிருந்து கருத்தின்றிக்கண்டாலும் பிரதக்ஷிணம் செய்தாலும், அவற்றின் சரித்திரத்தைப் பொருள் விரிக்காது சொன்னாலும், அவற்றைக் கேட்டாலும், அம்மலைகளில் வசித்தாலும், முத்தியிற் சேர்க்கும், இது சத்தியம். சத்தியம். 4

உனக்குணர்த்தினமெனப்பெருங்குரவனன்றுரைப்ப
மனத்துணர்ந்துமீளவுஞ்செழுமலர்ப்பதம்வழுத்திக்

கனத்தபேரருட்கடவுளின் றிருவுளக்கிடையை
யினைத்தெனச்சிறியேன் றெரிதற்கெளிதன்றே

இ-ள். சூதமுனியே! உனக்கேயிதனைக் கூறினேம், என்று போராசிரியாகிய வியாசமுனிவர் கூற, யான் அதனை மனத்திற் றெளிந்து பின்னரும் அவரது செழுமையாகிய தாமரை மலர்போன்ற திருவடிகளைத் துதித்து, மிக்க பெரிய திருவருளையுடைய தெய்வத்தின் உட்கருத்தை இத்தன்மைத் தென்று சிறியவனாகிய யான் அறிதற்கு எளிதன்று. 5

என்பதையுன்னிக்கருத்தெதன்புகலென்னவிக்காதை
மன்பதைக்குளோர்கீடம்யானுய்ந்திடவகுத்தா
யன்புருத்தரித்தோய்பிறர்க்கரைந்திடேனென்றேன்
பின்புதண்ணருள்புரிந்தொன் றுபேசலுற்றனனால்.

இ-ள். என்ற விதனைநினைத்துத் தேவரீரது கருத்தென்னை, சொல்வீராக வென்று வியாசமுனிவரை யான்கேட்ப, இந்தச் சரித்திரத்தை மக்கட் கூட்டத்துள் ஒரு புழுப்போன்றவனைப் யான் உய்யும்படி சொற்றனர், அன்பே வடிவமாகக் கொண்டவரே இக்கதையைப் பிறர்க்குச் சொல்லமாட்டேன் என்று உரைத்தேன், அதன் பின்னர்த் தண்ணிய அருள் கொண்டு ஒன்று சொல்லத்தொடங்கினேன். 6

நோற்றுயர்ந்தநோன்மையர்க்கிது நுவலுகின்றனனாற்
சீற்றவைம்புலச்செந்நெறிச்செம்பொருளுணர்ந்தா
வூற்றறுண்ணறிவுடையநும்பாலறைகுதலே
யேற்றமென்றுளத்தெழுதியவாறிசைக்கின்றேன்.

இ-ள். தவஞ்செய்து உயர்வுற்ற முனிவர்க்கு இது சொல்லுவேனென்று கூறினேன், வியாசமுனிவர் அறக்கிசைக் தன்மையால், ஐம்புலங்களையும் வெறுத்துச் செவ்விய ஞான வழியின்கணின்று உண்



மைப்பொருளையறிந்த, மிக்க நுட்பமான அறிவையுடைய நும்மிடத்துச் சொல்வதே உயர்வாகுமென்று, மனத்தி னினைத்தவாறுகூறுகின்றேன்

வெய்யசூர்ப்பகைவிளிவுறக்கடவுளர்விசும்பி
னுய்யவெம்பிரானுதற்கணணினுதித்தறுகூறுய்ச்
செய்யகாலனருங்கினர்புகுத்திடத்திருநீர்த்
தையனுய்த்திடச்சரவணப்பூந்தடஞ்சார்ந்து.

இ-ள். கொடிய சூரபன்மனாகிய பகைவன் அழியவும், தேவலோகத்தி லிருக்கின்ற விண்ணவர் உய்யவும், எமதுகடவுளாகிய சிவபெருமானது நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றி, ஆறுகூறாகி, வாம்பெற்றவாயுதேவனும் அக்கினிதேவனும் தாங்கிச்சென்று கங்கையில்விட, அழகிய கங்கையானவள் பொலிவாகிய சரவண வாயில்விட ஆங்குச் சேர்ந்து.

சிவபெருமானை நீக்கி, விட்டுணுவையே முதல்வராக் வைத்துத் தக்கன் என்பான்செய்த யாகத்திற்குச் சென்று அவனுடன் கூடி விலாப்புடைக்க அவிப்பாகமுண்ட மகாபாதகத்தினாலே விட்டுணு முதலிய தேவர்களும் முனிவர்களும் அசுராற்றுன்பப்பட நேர்ந்தது. அஃதுணர்ந்து அசுரகுரு, அசுரேந்திரனென்பானது புத்திரியாகிய சுரசையென்னும் இயற்பெயரையுடைய மாயையென்பாளைக் காசிபமுனியிடம் அனுப்ப, இருடியனார் மயங்கி அவளுடன்சேர்ந்து சூரபன்மன், சிங்கமுகன், தாரகன், அசமுகி முதலிய எண்ணிலாரைப் பலவடிவுற்றுப் பயந்தனர். அவர்கள் மாயையென்பாள் போதனையின் மயங்கிச், சிவபெருமானை நோக்கிப் பலகாலம் வீரமகம்புரிந்து ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டுயுகம் அரசாண்டார். விட்டுணு பிரமன் இந்திரன், தேவர்கள்முதலாய யாவரும் சூரபன்மனேவிய சிறுதொழில்களை யெல்லாஞ் செய்து வருவாராயினர். இந்திராணியின் மோகங்கொண்ட சூரபன்மன்

வானுலகுசென்று அவட்கொடு வருகென்றான். அதுகேட்ட இந்திரனும் மனைவியும் வேற்றுருக்கொண்டு சண்பையிற் சார்ந்துபூசிக்க. தேவர்கள் துன்பத்திற் காற்றாது இந்திரனிடம்வந்து முறையிட்டார். இந்திரன் வருந்தித் தன் றுணையாட்கு அரிகா புத்திரனென்பாரைக் காவல்வைத்துக் கயிலை செல்லாநின்றான்.

அதுகாலை யசமுகி யென்பாள், துன்முகியென்னுந் தோழியுடன் காடுசென்றாள். அயிராணியைக் கண்டதிசயித்து அண்ணனார்க்கிம் மங்கையன்றோ ஈடாவுள்ளாள் என்று கரதலம்பற்றியீர்க்க இந்திராணியோலமிட்டாள். வீரமாகாளர் ஓடிவந்து அசமுகி கையைத் துணித்துப் பின்னஞ்செய்ய, சூரபன்மன் தேவரையெல்லாம் பற்றுவித்துப் பலபல தண்டஞ் செய்வித்தும் அமிர்தமுண்டாராகலின் அவருயி ரகலாமைகண்டு சிறைசெய்வித்தான். அதனை மீட்டற்காகவே சிவபெருமானது ஆறுதிருமுகங்களி னின்றும் ஆறுபொறிகளாகத் தோன்றி யுலகத்துப் பரவ, அவற்றை வாயுதேவனும் அக்கினிதேவனும் வரபலத்தினாலே சுமந்து கங்கையுட் புகுத்த, அவளுந் தாங்கமுடியாது சாவண வாவியுட் புகுத்தினள். ஆங்கு ஆறுதிருப்பொறிகளும் ஆறுகுழந்தை வடிவாகத்தோன்றின.

கந்தபுராணம் - திருவவதாரப்படலம்.

அருவமு முருவு மாகி யநாதி யாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
யொருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலக முய்ய.

சூர்ப்பகை - சூராகிய பகை எவ் விரிதலின் இருபெய ரொட்டுப் பண்புத்தொகை கடவுளர் - மனத்துங் கடந்தவர் இது உபசார மென்க. ஆறுகண்களி னின்றும் ஆறுதிருப் பொறிகளாகத் தோன்றின வாகலின் "அதுகூறாய்" எனறார். "அறுவேறு வகையினஞ்சுவா மண்டி" எனத் திருமுருகாற்றுப் படையும் உரைத்தது. இங்ஙனமே, "பாயிரும் பணிக்கடல்" என்னும் பரிபாடல் ஐந்தாவது செய்யுளுங் கூறுமாறுணர்க. "தூய்யகங்கை வெண்டிகையிற்றாங்கியத் தூநீர்" எனவும் பாடம். சரவணம்—சரம் - நாணற் புல், வனம் - நீர். நாணற்புற்செறிந்த நீரையுடையது. இத்தடாகம் இமயமலையின் அருகி லுள்ளதென்றறிக.



வான்றயங்க றுமீன்முலைப்பா லுண்டுவளர்ந்து
தேன்றளிர்க்கையாற்றிரிபுரை திரட்டவோர்வடிவாய்
மூன்றிரண்டுமுகநான்குமாமுகமொய்ம்பும்வயங்கத்
தோன்றினன்கயிலையிற்சிவன்சிவைதந்தவோர்தொல்லோன்.

இ-ள். ஆகாயத்தில் விளங்காநின்ற கார்த்திகைப் பெண்கள் அறுவாதும் முலைப்பாலுண்டு வளர்ந்து, இனிமையாகிய தளிர் போன்ற திருக்கரங்களால் உமையம்மையார் திரட்டியொன்றாக்க ஒருருவுற்று, ஆறு திருமுகங்களும் பன்னிரு திருப்புயங்களும் விளங்கத் தோன்றினர், யாவரெனில், கயிலை மலையின்கண் உள்ள சிவபெருமானும் உமா தேவியாரும் பெற்ற பழமையினராகிய அறுமுகக் கடவுள்.

சரவணவாவியில் அறுகுழந்தைகளாக இறைவனிருந்துழித் திருமால் முதலிய தேவர்கள் கார்த்திகைப்பெண்கள் அறுவரைப் போற்றும்படி யனுப்பினர். அவர் ஒவ்வோர் குழந்தைகளை யெடுக்க, இறைவன் அழுவார்போல் அழுது, பாலை யுண்பார்போலுண்டு திருவிளையாடல் செய்திருந்தனன். இறைவியாகிய சங்கரி சிவபெருமானுடன் சென்று ஆறு குழவிகளையுந் தன்காத்தாற் சேர்த்தணைக்க ஆறும் ஒரு வடிவாயின. அவ்வாறு சேர்க்கப்பட்டமையாற் கந்தன் எனப் பெயர்பெற்றான். ஸ்கந்தம் - கலத்தல், சேர்தல்.

கந்தபுராணம் - சரவணப் படலம்.

எந்தை சத்திக ளுயிரெலா மொடுங்குறு மேல்வை
மூந்து போல வொன் றாகியே கூடிய முறைபோ

வந்த யில்ல தோர் மூவிரு வடிவு மொன் றாகிக்
கந்த னென்றுபேர் பெற்றனன் கவுரிதன் புதல்வன்.

கார்த்திகைப்பெண்களாற் போற்றப்பட்டமையாற் கார்த்திகேயன் எனவும், கங்கையால் விடப்பட்டமையாற் காங்கேயன் எனவும், சரவணவாவியி லுதித்தமையாற் சரவணோற்பவன், சரவணபவன், எனவும் பெயர் பெற்றார்.

சிவபெருமானிடஞ் சென்று போற்றியதிருமால் முதலினோர் நின்னைப்போல நின்வயின் ஓர் குமாரனைத் தந்தருள்க வென்று வேண்டினார் எனவும், அங்ஙனே யிறைவன் ஐந்து முகத்தோடு அதோ முகமுஞ் சேர்த்து ஆறுதிருமுகங் கொண்டு ஆறுதிருப்பொறிகளை வெளிப் படுத்தினார் எனவும், அதனால் இறைவியார் சினந்து நம்வயினுதிக்காது தடுத்தமையால் எம்மைப்போலவே தேவர் மாதரும் கருப்பெறாராகவெனச் சபித்தாளெனவும் கந்தபுராணம், சங்கர சங்கிதை, சிவரகசியங் கூறுமாக. இந்நூலார் "சிவன் சிலை தந்தவோர் தொல்லோன்" என்றதென்னையெனின், சிவபெருமான் சதாசிவ வடிவங் கொள்ளுதற்குக் காரணஞ் சத்தியாகலின் அவ்வாறு உரைத்தா ரென்பாரும், இஃது உபசாரமா மென்பாரு முளர்.

மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர், பத்துப்பாட்டின் உரைக்கண்.

"இறைவன் உமையை வதுவைசெய்து கொண்டநாளிலே இந்திரன் சென்று, நீ * தவிரவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, அவனும் அதற்குடம்பட்டுத் தப்புணர்ச்சி தவிர்ந்து, கருப்பத்தை இந்திரன்கையிற் கொடுப்ப, அதனை யிருடிகளுணர்ந்து அவன் பக்கனின்றும் வாங்கித் தமக்குத் தரித்த லரிதாகையினாலே. இறைவன் கூறாகிய முத்தீக்கட் பெய்து அதனைத் தம்மனைவியர் கையிற்கொடுப்ப அருந்ததி யொழிந்த அறுவரும் வாங்கிக்கொண்டு விழுங்கிச் சூன் முதிர்ந்து, சரவணப் பொய்கையிற் பதுமப்பாயலிலே பயந்தாராக, ஆறுகூறாகி வளர்கின்ற காலத்து, இந்திரன் றானிருடிகளுக்குக் கொடுத்த நிலையைமறந்து, ஆண்டுவந்து வச்சிரத்தா னெறிய, அவ்வாறுவடிவு மொன்றாய், அவனுடனே பொருது, அவனைக் கெடுத்துப்பின் சூரபன்மாவைக் கொல்லுதற்கு அவ்வடிவமொன்றாகிய வேறுபட்ட கூற்றாலே மண்டிச் சென்றதென்று புராணங் கூறிற்று" என்று உரைத்தபடி இந்நூலாசிரியருங் கூறினாரெனலுமாம்.



அந்தமில்பல்விளையாட்டயர்ந்தறுமுகக்கடவுள்
சிந்தைதேர்கயிலைக்கிரிபாங்கரிற்சிவன்சீர்
தந்தசத்திபுத்தேளிர்தம்பலபெயர்தங்கி
வந்தபன்முடிக்கந்தமால்வரையில்வைகினான்.

இ-ள். அளவில்லாத பலதிருவிளையாடல்களைச் செய்து, சண்முகக் கடவுளானவர், மனத்தினாலாயப்பட்ட கயிலைமலையின் பக்கத்திற் சிவனதும் சிறப்புடைய சத்திகள் தேவர்களதும் பல பெயர்களைக் கொண்டு விளங்கும் பல சிகரங்களையுடைய பெரிய கந்த மலையின்கண் வீற்றிருந்தருளினார். 10

இமைமறந்தகண்ணிமையவர்நினைவுளந்திரியா
தமைவில்வந்தனைபுரிந்தனைவருந்தொழுங்காலஞ்
சிமையமால்வரைச்சினகரமொருவிவெள்விடையோ
னுமைவிளங்குபூங்கயிலையின்சிகரியினுயர்ந்தான்.

இ-ள். இமைத்தலில்லாத கண்களையுடைய தேவர்கள், நினைத்தலையுடைய மனம்வேறுபடாது, அமைவோடுகூடிய வணக்கத்தை யாவருஞ் செய்யுங்காலத்தில், கொடுமுடிகளையுடைய பெரியகந்த மலைக்கணுள்ள கோயிலினின்றும் நீங்கி, வெள்ளியவிடப வாகனத்தையுடைய சிவபெருமானும் உமாதேவியாரும் வீற்றிருக்கின்ற பொலிவாகிய கயிலைமலையினுச்சியில் உயர்வுடனிருந்தனர். 11

உறைந்துநாரதன்றற்றமொள்ளெரிப்பிறந்தடற்று
மறந்தருந்தகரிவர்ந்துவானவர்க்கருள்சுரந்து
சிறந்ததாதைபொற்சினகரச்செழுமணிவாயி
லறந்தவாதபேராலயத்தரசுவீற்றிருந்தான்.

இ-ள். அங்ஙனமிருந்து நாரதமுனிவர்செய்த ஒளிபொருந்திய அக்கினியினின்றுந் தோன்றி, உயிர்களைவருத்திய கொலைத் தொழிலைக் கொண்ட ஆட்டு வாகனத்தின்கணேறி, தேவர்க்குக் கிருபைபுரிந்து சிறப்புடைய தந்தையார் வீற்றிருக்கின்ற அழகிய கோயிலின்முன் வாயிலில் தருமம்விட்டு நீங்காத பெரிய ஆலயத்தின்கண் வீற்றிருந்தனர். 12

ஒருபகற்பரம்பரமனையும்பரும்பிறரு
முருகுயிர்த்தசெந்தாமரைக்கிழவனுமுயன்று
மருவிமாமலர்த்தாடொழவிடைகொண்டுமலர்ந்து
பொருவிலோகைநெஞ்சுடையராய்வருகின்றபோழ்தில்.

இ-ள். ஒருநாள் சிவபெருமானைத் தேவர்களும் பிறரும், வாசனை வீசுகின்ற சிவந்த தாமரைமலராசன ராகிய பிரமதேவரும், முயற்சி கொண்டு அடைந்து பெருமையமைந்த மலர்போலுந் திருவடிகளை வணங்குதற்காக நந்திதேவரிட முத்தரவுபெற்று முகமலர்ச்சியுடையராய் ஒப்பில்லாத மனவுவகையுற்று வருகின்றகாலத்தில். 13

வானவர்க்கொருமுதல்வனுமன்னுயிர்த்தொகைக
ளானவைக்கொருதந்தையுமாரணமனைத்தும்
யானெனும்பெருஞ்செருக்குமுற்றிதயத்துவைத்த
நான்முகன்றனையறுமுகனகைபுரிந்தழைத்தான்.

இ-ள். தேவர்களுக்கு ஒருதலைவரும், நிலைபெற்ற உயிர்க் கூட்டங்களுக்கு ஒருபிதாவும், வேதங்கள் முழுவதினும் சொல்லப்பட்ட பாம்பொருள் யானே யென்னும் அகங்காரமுழுதையுந் தன்மனத்தில் வைத்



தவருமாகிய பிரமதேவரைக் கந்தக் கடவுள் முறுவல் பூத்து அழைத்தனர். 14

கூம்புகைக்கமலங்களைக்குளத்திடைகாட்டி
மேம்படத்திருமுன்புகும்வேதவேதியனைக்
காம்படுஞ்சிறுதோளிசேய்கடைக்கணுவிருத்தித்
தேம்பொதிந்தசெம்பவளவாய்திறந்தொன்றுகேட்டான்.

இ-ள். குவிந்த கைகளாகிய தாமரை மலர்களை நெற்றியிலே காண்பித்து, மேம்பாட்டுடன் தமது திருமுன்னர்த்தோன்றிய பிரமனை, மூங்கிலையும் வென்ற சிறியதோள்களையுடைய உமாபுத்திரர் கடைக்கண்ணுறுவிருக்கச்செய்து, தேன்பொதிந்த சிவந்த பவளம்போன்ற வாயைத்திறந்து ஒன்று கேட்பாராயினர். 15

நீயிழைப்பதியாதெனநிருமலனருளான்
மாயிரும்புவிமுழுவதும்வகுக்குவதென்று
ளையெவ்வுழித்தடலினின்றுற்றவையென்றுஞ்
சேயுரைப்பவேதாமறைச்செந்நெறித்தென்றான்.

இ-ள். பிரமனே நீசெய்யுந்தொழில் யாதென்று பகவன் கேட்க மலரகிதராகிய சிவபெருமானது திருவருளினாலே கரிய பெரியபூமி முழுவதையும் படைப்பதாகும் என்று கூறினன், அவ்வாறாய் நீ எவ்விடத்திலிருந்து எந்தப்பலத்தினாற் படைப்புத் தொழிலைச் செய்வாயென்று குமாரக்கடவுள் கேட்ப, பிரமன் வேதத்தின் செவ்வியவழியினாலாகுமென்று கூறினன். 16

நல்லதாய்மறைவல்லையேனவிற்றெனவகத்தி
னெல்லெனத்தெரிந்தோமெனமுதலெடுத்துரைப்ப
நில்லிதன்பொருணிகழ்த்திடமற்றனநிகழ்த்தென்றான்
புல்லெனக்கவலித்தயன்றளங்கிவாய்புலர்ந்தான்.

இ-ள். நல்லது, ஆராயும்வேதத்தில் வல்லவனாயின் அதனைச்சொல்க என்று சண்முகப்பெருமான் திருவாய் மலர்ந்தருள, பிரமன் றன்மனத்தின்கண் விரைவாகத் தெரிந்து கொண்டு 'ஓம்'' என்று முதல்வாக்கியத்தையெடுத்துச்சொல்ல, பிரமனே நிற்கக் கடவாய், இந்தப் பிரணவத்தின் பொருளை முதற்கூறி, அப்பால் மற்றவற்றைச் சொல்வாயாக என்றனர், திடீரென்று கவலைகொண்டு பிரமன் நடுக்கமுற்று வாயுலரப் பெற்றான். 17

மூலநானெனுமான்மகன்மொழியுமாறெளிதோ
மூலகாரணனுதல்விழிமூவிருசுடராய்
மூலமாய்வருமூவிருமுகனன்றியந்த
மூலமாமனுப்பொருளையார்முழுதொருங்குணர்ந்தார்.

இ-ள். பரம்பொருள் நானேயென்று அகங்கரித்த திருமாலின் புத்திரன் சொல்வது எளிதோ? மூலகாரணராகிய சிவபெருமானது நெற்றிக்கண்ணினின்றும் ஆறு திருப்பொறிகளாகி, அநாதி மூலப் பொருளாய்வந்த அறுமுகக்கடவுளல்லாது அந்தப் பிரணவத்தி னுண்மைப் பொருளை முழுதாக அறிந்தவர் வேறுயாருளர். 18

பெற்றிவெண்குடிலைப்பொருளென்னெனப்பிறிதொன்று
சொற்றிலாதிருந்திலன்பொருட்சோர்வுகொண்டிசைத்துக்
கற்றிலேனெனக்கற்றுணராமையிற்கற்றோர்க்
குற்றதோதிடாதில்பொருளுரைத்தவனொத்தான்.

இ-ள். பரவெளியாகிய பிரணவப் பொருள் யாதென்று கேட்க வேறொன்றுஞ் சொல்லாதிருந்தா னல்லன், பொருளைத்தவறுகச்சொல்லி, யானறிந்தே னல்லேனென்று, படித்து உணராமையினால் படித்தோர்க்கு உண்மையான பொருளைச் சொல்லாமல், இல்லாதபொருளைச் சொன்ன மூடனைப் போன்றான். 19



பிரணவங்கடைப்பிடித்திலையுணர்ந்திலையந்தக்
கரணசித்திகைவரத்தவமுயன்றிலைகடல்சூழ்
தரணியாதியதந்ததெவ்வாறுசாற்றிடினேர்
திரணநீசிவன்றொண்டருக்கென்றுசெவ்வேற்சேய்.

இ-ள். பிரணவப் பொருளை யுறுதியாகக் கொண்டாயல்லை, அறிந்தாயல்லை, மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரணங்க ணான்குஞ் சித்திவரும்படியாகத் தவஞ்செய்தாயல்லை, சமுத்திரத்தாற் சூழப்பட்ட பூமி முதலாயவற்றைச் சிருட்டித்ததெப்படி, சொல்லுமிடத்துச் சிவனடியாருக்கு நீ ஒரு துரும்புபோல்வாய் என்று சிவந்தவேலாயுதத்தையுடைய கந்தக் கடவுள் கூறிச்சினந்து. 20

பொன்னினான்முடிகுருதிகொப்பளிக்கவேபுடைத்துத்
தன்னிருஞ்சிலம்படியினால்வீழ்வுறத்தள்ளிக்
கன்னிவந்ததோட்கணங்களைநோக்கலிற்கடிதிற்
றன்னியன்னவரயன்றனைச்சூழ்ந்துகைப்பற்றி.

இ-ள். பிரமனது நான்கு தலைகளும் இரத்தங் கொப்பளிக்கும்படி குட்டித் தமது பெரிய சிலம்புகள்தரித்த பாதத்தினால் விழும்படிதள்ளி, கல்லினுமுயர்ந்த தோள்களையுடைய கணங்களைப்பார்த்ததனால், விரைவாக அவர்போய் பிரமனைச் சுற்றிக்கையாற்பிடித்து. 21

செல்லிவர்ந்தகந்தாசலச்சிவசிருங்கத்தில்
வல்லியிற்பிணித்திட்டபினந்தமால்வரைசென்
றெல்லிருஞ்சுடர்வேலினோனினிதுவீற்றிருந்து
பல்லுயிர்த்தொகைக்கின்னபங்கயன்வெள்க.

இ-ள். மேகங்கள் தவழுகின்ற கந்த மலையின்கணுள்ள சிவசிருங்கத்திலே, விலங்கிற்பூட்டிய பின்னர், அந்தப் பெரியமலைசென்று, ஒளிகொண்ட பெரிய வேலாயுதத்தையுடைய குமாரக்கடவுள் இனிமையுடன்

வீற்றிருந்து, பிரமனும் வெட்கமுறும்படி பலவுயிர்க்கூட்டங்களையெல்லாம் படைத்தனர். 2

காலமுஞ்சிலகழிந்தரக்கார்முகில்வண்ணன்
மேலைவானவர்சூழ் இயினர்வெள்ளியஞ்சிலம்பிற்
சூலபாணியைத்தொழுதயன் றுயருழந்ததுவு
ஞாலநாரிசேய்பயந்ததுநடந்ததுநவின்றார்.

இ-ள். சிலகாலஞ்செல்ல, கரிய மேகம்போன்ற திருமால் முதலிய தேவர்கள்கூடி, திருக்கயிலை மலையிற்சென்று சிவபெருமானைவணங்கி, பிரமன் துன்பத்தை யநுபவிக்கின்றதையும் பூமிமுதலாயவற்றை உமாபுத்திரர் சிருட்டிக்கின்றதையும் இன்னும் நடந்தகாரியங்களையுங் கூறினர்.

ஆதிநந்தியைநோக்கியந்தணன்சிறைவிடப்போ
யோதிவாவெனச்சென்றுரைத்தனன்வெருண்டுமைசேய்
போதினேனுடனிருத்தியோபோதியோகயிலைக்
கேதியம்பெனவெருக்கொடுமீண்டிறைக்கிசைத்தான்.

இ-ள். அவற்றைக்கேட்ட சிவபெருமான் முதன்மையான திருநந்தி தேவரைப்பார்த்து, பிரமனது சிறையை விடும்படி சொல்லி வருவாயாகவென்று திருவாய்மலர்ந்தருளினர். அதனைநந்திதேவர், போய்க்கூறினர், சரவணபவ மூர்த்தி கோபித்து, பிரமனுடன்கூடச் சிறையிருக்கின்றாயோ, அல்லது கயிலைமலைக்குப்போகின்றாயோ? உன்னெண்ணம்யாது சொல்வாயாகவென்று கேட்ப, பயமுற்று அங்குநின்று மீண்டு கயிலைக்குவந்து சிவபெருமானுக்குத்தெரிவித்தனர். 24

நன்றெனச்சிறுமுறுவலித்திகல்விடைநடாத்திச்
சென்றிழிந்துகந்தாசலச்சினகரம்புகச்சே



யன்றிறைஞ்சிநின்றரியணையிருத்தியர்ச்சனைகூர்ந்
தின்றெழுந்தருளற்கெவனிமித்தமென்றிசைத்தான்.

இ-ள். நல்ல தென்று சிறுமுறுவல் கொண்டு வலிய இடபத்தைச் செலுத்திச், சென்று இறங்கி, கந்தமலையின்கணுள்ள கோயிலின்கண் செல்ல, குமாரக்கடவுள் அப்போது வணங்கி நின்று சிங்காசனத்தி லிருக்கச்செய்து, அருச்சனைசெய்து, இப்போது இவ்விடத்திற்கு எழுந்தருளுதற்குக்காரணம் யாதென்று கூறினர். 24

அயன்றனைச்சிறைவிடுகெனவையநீயிவனை
வியந்துகொண்டதெனகந்தையென்குடிலைமென்பொருட்கு
மயங்கிநின்றமற்றொன்றினைவழங்கினேன்ஞாலம்
பயந்ததெந்தவாறவனகம்பறிப்பதேயறனும்.

இ-ள். குமாரனே! பிரமனைச்சிறை விடுவாயாக வென்று கூற, ஐயனே! நீஇப்பிரமனை வியந்து கொள்வதென்னை? அவனது அகங்காரமென்ன? பிரணவத்தினது உண்மைப்பொருட்கு மயக்கங்கொண்டுநின்று வேறோர் பொருளைச் சொன்ன தெப்படியாகும்? அவனது அகங்காரத்தைப் பிடுங்குவதே தருமமாகும். 25

சிறைவிடேனெனத்திருகுவெஞ்சினங்கொளீஇகழ்த்த
நறைவிடாமலர்க்கொன்றையோனவிற்றுநம்மாற்ற
முறைவிடாதொழுகென்றனன்முருகவேளுணர்ந்து
மறைவிடாமலரயன்சிறைமாற்றிமுன்னுய்த்தான்.

இ-ள். சிறையை விடமாட்டேனென்றுமாறுபட்ட கொடியகோபங்கொண்டுசொல்ல, தேனொழியாத கொன்றைமாலையைத் தரித்த சிவபெருமான் கூறுவார், நம்முடைய சொல்லின் முறைதவறாது நடக்கக்கடவாய் என்றுகூறினர், முருகக்கடவுளறிந்து, வேதவொழுக்கம் நீங்காத

தாமரை மலரின் மேலிருக்கும் பிரமனது சிறையை விடுத்து முன்னர்க் கொண்டு வருவித்தார். 26

வந்துதாழ்ந்தெமையாளுடைவள்ளலேதண்டங்
கந்தவேளெனைப்புரிந்திடறகந்தையுங்களைந்தா
னுய்ந்தனன்னெனுச்சதுமுகனுரைத்தலுமொருவன்
முந்தைநின்றொழிலாற்றெனமொழிந்தருள்புரிந்தான.

இ-ள். பிரமனவன் வந்து வணங்கி, எம்மை யடிமையாகவுடைய வள்ளலே! கந்தக் கடவுளானவர் தண்டனையை எனக்குச்செய்து, முற்றிய அகங்காரத்தையும் நீக்கினர், பிழைத்தனனென்று பிரமன் கூறுதலும், ஒப்பற்றவராகிய சிவபெருமான் நின்னுடைய தொழிலைச் செய்கவென்று திருவாய் மலர்ந்தருளினர். 27

அருகுநின்றபேரொளிதிரண்டருளுருவாய
முருகன்வாண்முகநோக்கினன்முறுவலித்திறைவ
னிருகையாலெடுத்தணைத்துமார்பிறுகிடப்புல்லி
யொருகவான்மிசையிருத்தினனுச்சிமோந்துயிர்த்தான்.

இ-ள். பெருஞ் சோதிவடிவானது திரண்டு ஒரு அருள் வடிவுற்ற முருகக்கடவுளது ஒளி பொருந்திய முகத்தைப்பார்த்து. சிவபெருமானனவர் நன்மையான திருமுறுவல்பூத்து இருதிருக்கரங்களாலு மெடுத்துச் சேர்த்து மார்பு இறுகும்படி தழுவி, ஒப்பற்ற தமது தொடையின் மீது இருத்தி உச்சிமோந்தார். 29

ஐயநீகுடிலைப்பொருள்வினவியந்தணனைப்
பொய்யெனச்சிறைமடுத்தனையுனக்குவருமேற்
செய்யவாய்திறந்துறையெனச்சபையிடைச்செப்பக்
குய்யமோவெளிப்படைகொலோகூறெனத்தொழுதான்.



இ-ள். ஐயனே நீ பிரணவப்பொருளைப் பிரமனிடங்கேட்டு அவன் சொன்னபொருள் பொய்யென்று சிறைச்சாலையில் வைத்தாய், உனக்கு அப்பொருள் வருமாயின் சிவந்த வாயைத்திறந்து கூறுதியென்று சிவபெருமான் திருவாய் மலர்ந்தருள, குமாரக்கடவுள், தந்தையே! அது இரகசியமோ வெளிப்படையோசொல்வீராக வென்று வணங்கினர். 30

எனத்திருச்செவிதாழ்த்தினன்றாதைசேயிசைத்தா
னுனக்குநித்தவாறுணரவெனவுலகெலாமீன்ற
வனைக்குணர்த்துஞான்றடியனுமுணர்ந்தனனென்றான்
மனத்துணர்ந்தனன்மறுத்தெதிர்மொழிந்திலன்வள்ளல்.

இ-ள். என்றிவ்வாறுகூறச் சிவபெருமான், அழகிய தமதுதிருச் செவியைத் தாழ்த்திநின்றார், குமாரக்கடவுளும் அப்பொருளையுரைத்தார், குமாரனே உனக்கு இதுவந்தவழியைத் தெரிவிப்பாயாகவென்று சிவபெருமான்கூற, உலகமெல்லாவற்றையும்பெற்ற தாயாராகிய பிராட்டியார்க்கு உபதேசித்த காலத்தில் அடியேனு முணர்ந்தேனென்று கூறினர், அருள் வள்ளலாகிய சிவபெருமான் அதனை மனத்து அறிந்து மறுத்து எதிர்மொழியொன்றுங் கூறாராயினர். 31

எவர்க்குமோர்முதலெவனவனீயெனவியம்பித்
துவர்ச்சடாடவித்தொன்மையோன்சுரரயன்றுளவோன்
றவத்தர்சூழ்தரக்கயிலையந்தடங்கிரிசார்ந்தான்
கவர்த்தபன்முடிச்சிலம்புசெய்காணிகொண்டிருந்தான்;

இ-ள். பவளம்போன்ற சடைக்காட்டினையுடைய பழம்பொருளாகிய சிவபெருமான், எவர்களுக்கும் ஒப்பற்ற முதற்பொருள் எந்தப்பொருளோ அந்தப்பொருள் நீயாகுமென்றுகூறி, தேவர்களும் பிரமனும் விட்டுணுவும் முனிவர்களும் தம்மைச் சூழ்ந்துவர, பெருமைபொருந்திய திருக்கைலாய மலையை யடைந்தார், கிளைகொண்ட பலசிகரங்களையுடைய கந்தமலையைக் குமாரக்கடவுள் காணியாகக்கொண்டு வீற்றிருந்தனர். 32

கும்பமாமுனிவிழைந்தமாமனுக்களுங்குடிலைச்
செம்பொருட்டுணிபுந்திசைமுகன்சிறையிருந்த
பைம்பொனீள்சிவசிருங்கத்தின்பான்மையும்பாங்க
ரம்பைபேர்பெறுசிருங்கத்திறற்றனுமருளி.

இ-ள். அகத்தியமுனிவர் விரும்பிய மகா மந்திரங்களையும் பிரண வத்தின் உண்மைப்பொருட் டுணிவையும் பிரமதேவன் சிறையிலிருந்த பசிய பொன்மயமான நீண்டசிவமலையின் பெருமையையும் பக்கத்தில் உள்ள அம்மையாரின் திருநாமத்தைக்கொண்ட சத்திகிரியின் வலிமை யையும் உபதேசித்து. 33

இமயமால்வரைச்சிகரியிலருந்தவமிழைக்கு
மமுதவல்லிசுந்தரிக்கருள்வழங்கிமீண்டடைந்து
மெய்வெள்ளியஞ்சிலம்பிடைச்சிவன்சிவைநாப்பண்
குமரவேளமுதாசனர்குழாந்தொழவைகி.

இ-ள். வெள்ளிய இமயமலையிலுச்சியில் அரிய தவத்தைச்செய்த அமுதவல்லி சுந்தரவல்லி என்னும் இருவருக்குங் கிருபைபுரிந்துமீண்டு வந்து சிகரங்களையுடைய கைலாயமலையினிடத்திற் சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் நடுவே தேவகூட்டங்கள் வணங்கும்படி குமாரக் கடவுள் வீற்றிருந்து. 34

தந்தையீன்றவள்பணித்திடத்தாரகற்பாய்ந்து
புந்திமாலுறமயக்குறும்புள்வரைபொடித்துச்
செந்தில்வைகிநீர்க்கடலொரீஇமகேந்திரஞ்செறுத்து
வெந்திறற்றைத்தியர்தமைவேரொடுங்களைந்து.

இ-ள். பிதாவாகிய சிவபெருமானும் உமாதேவியாரும் ஆஞ்ஞாபிக் கத் தாரகாசுரனைக் கொன்று, மனம் மயங்கும்படியாக மாயையினைச்செய்



கின்ற கிரவுஞ்சமலையைப் பொடிபடுத்தி திருச்செந்தூரின்கண் எழுந் தருளி நீர் பொருந்திய சமுத்திரத்தைக்கடந்து மகேந்திரபுரியையடுத்து, மிக்கபலத்தையுடைய அசுரர்களை வேரோடும் அழித்து. 35

மடங்கன்மாமுகத்தவுணனைவாட்டிவண்டிரைநீர்க்
கிடங்குவீழருட்சூரிருண்மாவுருக்கீண்டு
குடங்கையிற்பொறிவாரணக்கொடியென்றுதாங்கி
யிடங்கொளுஞ்சிறைக்கார்மயிலூர்தியென்றேறி.

இ-ள். சிங்கமுகாசுரனை வதைத்து வளப்பம் பொருந்திய திரைகளை யுடையசமுத்திரத்தில் விழுந்த வரபலத்தை யுடைய சூரபன்மனாகிய இருளைச் செய்த மாமர வடிவத்தைக் கிழித்து உள்ளங்கையினிடத்திலே புள்ளிகளையுடைய கோழிக்கொடியைத்தரித்துப் பரந்த சிறகுகளையுடைய கரிய மயிலை வாகனமாகவேறிச் செலுத்தி. 36

தேவர்வெஞ்சிறைதீர்த்தொரீஇத்தென்பரங்குன்றின்
மேவுதெய்வவாரணந்தனைமிளிர்மணம்புரிந்து
யாவரும்புகழ்வலாரியைவிண்குடியேற்றிப்
பாவைபங்கர்பாற்கயிலையிற்பண்டுபோலிருந்தான்.

இ-ள். தேவர்களுடைய கொடிய சிறையை நீக்கி, திருப்பரங்குன் றினிடத்திற் பொருந்திய தெய்வயானை யம்மையாரைத் திருமணஞ் செய்து எவர்களாலும் புகழப்படுகின்ற இந்திரனைச் சுவர்க்கலோகத்திற் குடியாகவைத்துச் சிவபெருமானிடத்திலே கைலாயமலையின்கண் பழமை போல வீற்றிருந்தார். 37

திகழ்பலகாலந்தன்னிலொருபகனிலவுவேணிப்
பகவனையிறைஞ்சவெள்ளிச்சிலம்புறைபவர்கடம்பிற்
புகல்குறுமுனியையங்கிராமுனிபுரிதருக்கத்
திகழ்வனநிகழ்ந்துஞ்சாலக்குறியைநீயென்றுஞ்சொன்னான்.

இ-ள். இவ்வாறு காலங்கள் செல்ல ஒருநாள், சந்திரன்பொருந்திய சடாமுடியை யுடைய சிவபெருமானை வணங்கும்படி கைலாய மலையின் கண் இருக்கின்றவர்களுக்குள் அங்கிரா முனிவர்சொல்லப்பட்ட அகத்திய முனிவரோடு செய்த வாதத்தில் அவரைப் பலவாறிகழ்ந்தும் நீமிகவும் குள்ளனென்றுஞ் சொன்னார். 38

அறிவின்மாகுறியையென் றுவங்கிராமுனியைச்சீறி
யுறுவர்தந்தொழிலினீத்தோருழிவைகியொருவற்சுட்டிக்
குறுமுனிநோக்கும்போழ்திற்குழகன்மாவிடையிற்றோன்றிப்
பெறுவதியாதுநீமுன்னோதெனவுண்டேயென்றான்.

இ-ள். அதுகேட்ட அகத்திய முனிவர், அறிவிலே நீமிகவும் குறியவன் என்று அங்கிரா முனிவரைக் கோபித்து முனிவர்களுடைய தொழில்தனை செய்யாது விட்டு நீங்கி, ஓரிடத்திலிருந்து ஒப்பற்ற சிவபெருமானை நினைத்துத் தவஞ் செய்யும்போதில், மணக்கோலத்தை யுடையராகிய அவர் வெள்ளிய இடபத்தின்மீதேறி நீ பெறவேண்டியது யாது அதனை முன்னர்ச்சொல்லக்கடவாய் என்று திருவாய்மலர்ந்தருள, பெறுவது உண்டென்று அகத்தியர் கூறுவார். 39

எம்பெருமானேநீயுமெம்பெருமாட்டிதானு
மும்பராலிறைஞ்சிரண்டுகிரியெனவொருங்குநிற்ற
னம்பயாண்டுளவோநாயேன்வழுத்திடநவிற்றுகென்றான்
கும்பமாமுனிவோன்கூப்பக்குளிர்மதிமிலைந்தோன்கூறும்

இ-ள். எமது அடிகளே தேவரீரும் எமது தாயாராகிய உமாபிராட்டியாரும் தேவர்களால் வணங்கப்படுகின்ற இரண்டு மலையாக ஒன்றுசேர்ந்து நிற்றல், நம்பனே எவ்விடத்துள்ளதோ அதனைத் திருவாய் மலர்ந்தருள வேண்டும். புழுத்த நாயினுங் கடையேனாகிய யான் பூசித்தற்கு அனுமதி செய்யவும் வேண்டுமென்று கும்பத்திற்பிறந்த அகத்திய முனி



வர் கைகூப்பி கேட்கக்குளிர்ந்த சந்திரனைத்தரித்த சிவபெருமான் கூறுவார். 40

எரிவிழித்தோற்றுஞ்செய்விற்றிருப்பதோர்கந்தவெற்பிற்செஞ்
றெறிகொடுமுடிகடம்மிற்சிவஞ்சத்தியெனும்பேர்பெற்ற
விரியுகன்முடியிரண்டாயமர்துவமுமையும்யாமும்.
புரிதிவந்தனையெஞ்ஞான்றும்புரிவர்வான்முதலோர்பூசை.

இ-ள். முனிவனே நமது அக்கினிக்கண்ணினின்றும் தோன்றிய குமாரன் வீற்றிருப்பதாகிய கந்தமலையினிடத்தில் காணப்படுகின்ற கொடுமுடிகளுள் சிவம், சத்தி என்னும் பெயரைப் பெற்ற அருமையான நல்ல சிகரங்கள் இரண்டாக யாமும் உமையும் இருப்போம். அவ்விரண்டனையும் தேவர் முதலாயினோர் வழிபாடும் வணக்கமும் எந்தக்காலத்துஞ்செய்வார்கள். 41

குடிலைமுன் புனக்குச்செவ்வேள்கூறினன்யாமின்றோது
முடிகளின்பெருமைசொற்றுமெனவருள்வழங்கிமுன்னோன்
வடுவிழிமயிலினோடுமறைந்தனன்போற்றியந்தப்
படிமுடியிரண்டுங்கண்டான்பாய்திரைப்பரவையுண்டான்.

இ-ள். நமதுகுமாரன் முன்னர்க் காலத்தில் உனக்குப் பிரணவப் பொருளை உபதேசித்தான் யாம் இப்போது சொல்லப்பட்ட சிவகிரி, சத்திகிரி என்னும் இருமலைகளின் பெருமைகளையுங் கூறினோமென்று, மாவடுவையொத்த கண்களையுடைய உமாபிராட்டியாரோடும் முன்னோராகிய சிவபெருமான் மறைந்தருளினர். தாவுகின்ற திரைகளை யுடைய சமுத்திரத்தை யுண்டவராகிய அகத்தியமுனிவர் அவ்விருவரையுந் துதித்துச் சிவபெருமான் கூறியபடி அந்தக் கொடிமுடிகள் இரண்டனையும் பார்த்தார். 42

போற்றினன்றாழ்ந்தெழுந்துசூழ்ந்தனன்பூந்தண்மாரி
தூற்றினன்குடந்தம்பட்டுத்துதித்தனன்றகுமெழுத்துச்

சாற்றினனருவிபாயுற்றுழ்வதுகடுப்பக்கண்ணீ
ரூற்றினன்சியமுஞசததியுருவமுமுருவங்கண்டான்.

இ-ள். அகத்தியமுனிவர் (அக்கொடி முடிகள் இரண்டனையும்) கண்டுதுதித்தார் விழுந்துவணங்கி எழுந்து வலம்வந்தார். குளிர்ந்த புட்ப மாலையைப் பொழிந்தனர். கைகூப்பித் துதித்தனர். தக்க பஞ்சாக்கரத்தை உச்சரித்தார். மலையருவியானது பூமியின்கண் விழுவதுபோல, கண்ணினின்றும் ஆனந்தபாஷ்பத்தைச் சொரிந்தார். சிவ ரூபத்தையும் சத்திவடிவையுங் கண்டார்.

"போற்குனன்" முதலியவற்றை எச்சமாக்கிப் பொருள் கோடலுமாம். குடந்தம் என்பது வழிபடுதல் வணக்கம் பண்ணுதல் என்னும் பொருட்டு குட என்பது தயவென்பதுபோல வளைவையுணர்த்துவதோர் உரிச்சொல்லாதலின் அதனடியாகப் பிறந்த பெயருமாம் என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைகூறினர் அதனை:—

சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பு
மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினு
மாண்டலைக் கொடியொடு மண்ணி யமைவர
நெய்யோ டையவி யப்பியை துரைத்துச்
குடந்தம் பட்டுக் கொழு மலர் சிதறி.

என்னும் பந்துப்பாட்டுச் செய்யுளிற் காண்க.

இங்ஙனமன்றி, குடந்தமாவது—"கால் விரன் முடக்கிப் பெருவிரனிறுத்தி - நெஞ்சிடை வைப்பது குடந்தமாகும்" என்றலு மொன்று. கூர்மபுராணத்தார் இம்மொழியைப் பன்முறையெடுத்து ஆங்காங்குரைத்துளார்.

வடமொழி அமர நிகண்டுகள் அந்நூலார் "குடம்" என்னும் மொழியை அம்மொழியாகக்கொண்டு உரைத்தலின் வடவியற் சொல்லுமாம். ஆயினும் அஃதாண்டுத் தமிழ் மொழிக்கட்போலப் பெருவாவின்



தாக வழங்கப்படாது அருகி வழங்குவாறு காண்டு மாகலானும், கடம் படம், கடாகாயம் என்றித் தொடக்கத்தனவா வழங்குவதன்றிக் குடம் படம் குடாகாயம் என வழங்கலின்மையானும் அதனை வடசொல்லென வைத்து முடிபு கூறுது, தமிழ்ச் சொல்லெனக் கொண்டு அவ்வாறுரைப்பார் ஆசிரியர் பலருமென்க குடம் பொது வெழுத்தாலாய சொல்லாகலின், இருமொழிக்கண்ணும் அங்ஙனம் வெவ்வேறு பொருள்குறிக்கு மொழியாகுமென வைத்துக்கொள்க. உலகம், காலம். என்னுஞ் சொற்கள்போல.

குடம் என்னு மொழியை, ஆசிரியர், சிவஞான யோகிகள், தாம் அருளிச்செய்த திராவிடமா பாடியத்திலே,

அரவுதன் றோலுரிவு மக்கனவும் வேறு
பரகாயம் போய்வருமப் பண்பும்—பரவிற்
குடாகாய வாகாயக் கூத்தாட்டா மென்ப
தடாதுள்ளம் போமா றது.

என்னுஞ் சிவஞானபோத வெண்பா வுரைக்கண், இங்ஙனங் கிளந்தன்றி, "குடாகாயம்" வட நூன் முடி பெனக் கோடலு மொன்று. எனவும் உரைத்தமை தெற்றெனக் காண்க.

முடிதொறுங்கவினுந்தெய்வத்தாமரைமுகமுமூரல்
விடுசிறுநிலவுங்கண்ணுங்கருணையங்கடலுமெண்சீ
ரடிமலர்ச்சதங்கையுந்தாரகலமுநூலுந்தேசனும்
வடிசுடர்வேலுங்கொண்டோர்மதலைநின்றுலவக்கண்டான். 43

இ-ள். முடிகளினிடந்தோறும் அழகைச்செய்கின்ற தெய்வத்தன்மையை யுடைய தாமரை மலர்போன்ற திருமுகங்களும், பற்கள் காலுகின்ற இளநிலவும், விழிகளும், அவற்றி னின்றும் பொழிகின்ற அருள் வெள்ளமும் எண்ணத்தகுந்த சிறப்பினையுடைய பாதங்களாகிய தாமரை மலர்களிற் றரித்துள்ள சதங்கைகளும், மாலை தரித்த மார்பும், உபவீத

மும் புயங்களும் கூர்மைபொருந்திய கதிர்வேலுங்கொண்டு ஒரு பிள்ளை யுலாவுவதைப் பார்த்தார். 44

சித்தருமியக்கரும்பூதேசருந்தேவரும்யாழ்
வித்தியாதரரும்வேதபோதரும்வேள்வியோரு
முத்தரும்யோகர்தாமுமுனிவரும்பிறருங்கூடித்
தத்தமினெருங்கியாற்றுந்தவங்களுமருங்கிற்கண்டான்.

இ-ள். நவசித்தர்களும் இயக்கரும் பூதத் தலைவர்களும், தேவர்களும் வீணையில்வல்ல வித்தியாதரர்களும், வேதத்தை யெடுத்துப் போதிப்பவரும், யாகத்தைச் செய்வோரும், சீவன் முத்தர்களும், சிவயோகிகளும், இருடிகளும் பிறருஞ்சேர்ந்து தங்கடங்களுள் நெருங்கி யிருந்து செய்யுந் தவங்களையும் பக்கத்திற் கண்டார் அகத்திய முனிவர். 45

காண்டொறுங் காண்டொறும்வே றதிசயங் களிப்பிற்
கண்டான், பூண்டபே ரன்புபொங்கிப் புறம்பொசிந்தொழு
கப்பூசை, வேண்டியவேணவாவோ டிழைத்தலும், விடையின்
மேலோன், சேண்டிக ழிமயவல்லி சேயெதிர் திகழக்கண்
டான்.

இ-ள். காணுந் தோறும் காணுந் தோறும் வேறுவேறாவுள்ள அதிசயங்களைக் களிப்போடும் பார்த்தனர், கொண்டபெரிய அன்பானது சுரந்து புறத்திற்றதும்பி யொழுக, பூசையைமிக்க அன்புடன் செய்தலும், சிவபெருமான் இடபவாகனத்தின்மீது உமாதேவியாரும் கந்தசுவாமியியெதிரே தோன்றக் கண்டனர். 46

ஆடினன்மலர்க்கைகொட்டியருமறைச்சாமகானம்
பாடினன்பழிச்சியோர்பாற்பான்மொழிப்பாவைதோன்ற
நீடினனீலநாப்பணிலவெனேர்ந்தெனவெள்ளேற்றி
னேடிலகிதழித்தாயா னிழைத்ததொன்றுண்டேயென்றான்.



இ-ள். கூத்தாடினார், பூப்போலுங் கையையடித்து அரிய வேதங்களிலுள்ள சாமகீதத்தைப் பாடினார், அவ்வாறு செய்து துதித்து, ஒருபக்கத்திற் பால்போலும் இனிய சொற்களையுடைய உமாதேவியார் விளங்க, வேளாகிய சூரியன் நடுவே தோன்ற வெள்ளிய இடபவாகனத்தின் மேல் எழுந்தருளிவருதற்கு, இதழ்களையுடைய கொன்றைப் பூமாலையையுடைய கடவுளே யான்செய்த தவமு முண்டோவென்றார். 47

உருகியின்னனநின்றேத்துமுனிவனையொருவனோக்கி
யரியநீபுரியும்பூசைக்ககமலர்ந்தனம்வரங்க
டுருத்துமறைதியென்னத்தருகவிக்குவடிரண்டும்
பொருவிறென்றிசையினித்துப்பூசனைபுரிகவென்றான்.

இ-ள். மனமுருகி இவ்வாறாய புகழைச் சொல்லித், துதித்து நிற்கும் அகத்தியமுனிவரை, ஒப்பற்ற சிவபெருமான்பார்த்து, அருமையானவனே நீசெய்தபூசைக்கு மனமகிழ்ச்சி கொண்டேம். வரங்கள் கொடுப்பேம் சொல்லக்கடவாயென்று கூற, ஐயனே ! இச்சிகரங்கள் இரண்டும் ஒப்பில்லாத தென்றிசையிற் சேர்த்துப் பூசைசெய்யும் வரத்தைத்தருள்க வென்று கூறினர். 48

தந்தனங்கோடியென்றுமறைந்தனன்றலைவனெங்கள்
கந்தவேளுணர்த்துமுண்மையுணர்ந்ததாபதன்விண்காறு
முந்துறவளர்நீட்டுங்கரங்களின்முடியிரண்டும்
வந்தனவென்றாலாற்றுந்தவங்களில்வலியதுண்டோ.

இ-ள். முனிவனே அவ்வாறே வரத்தைக் கொடுத்தேம் என்று தலைவராகிய சிவபெருமான் மறைந்தனர், எமதுகடவுளாகிய குமாரக்கடவுள் போதித்த உண்மைப்பொருளை நன்கறிந்த அகத்தியமுனிவர் ஆகாயமளவாக வளர்நீட்டிய கைகளினிடத்து அச்சிகரங்கள் இரண்டும் வந்து

சேர்ந்தனவென்றால் தவத்தைப் பார்க்கினும் வலியதொன்று இருக்கின்றதோ. 49

தாங்கியசெங்கைக்குத் தண்ணந்தாமரைப்போதும்பானற்
றேங்கமழ்போதும்போன்றவன்றிச்சீர்சிறந்தசெங்கே
ழோங்குமாமணியினீலவொளிமணியினிற்குயிற்றி
யாங்கமைத்தாடுவானேந்தம்மனைத்துணைகள்போன்ற.

இ-ள். அங்ஙனம் சிகரங்கள் இரண்டும் தரித்த சிவந்த கைகளுக்கு குளிர்ந்த அழகியதாமரைப்புட்பமும், வாசனை கமழுகின்ற குவளைமலரும் போன்றன, அன்றியும் விளையாடுகின்ற குமாரக்கடவுள் சிறப்பின்மிக்க சிவந்த நிறத்தையுடைய மாணிக்கரத்தினத்தினாலும், இந்திரநீலரத்தினத்தினாலும் செய்து, கரத்திற்பொருத்திவைத்து ஆடுதற்காக ஏந்திய இரண்டு அம்மனைகள் போன்றன. 50

சால்புறுசத்தியீது தலைமைசார்சிவமீதார்வ
மேலுறுபோகமீது விழைத்திடுபுத்தியாமீ
தேல்புறத்தொழுமினுய்ம்மினென்றறிவிப்பான்போற்சீர்
கோலியகுவடிரண்டுங்குடங்கையிற்கொண்டான்கும்பன்.

இ-ள். மேன்மைமிக்க சத்தியிதுவாகும், முதன்மைவாய்ந்த சிவம் இதுவாகும், அன்புமிகுந்த போகத்தானமிதுவாகும், அதனையுண்டாக்கும் புத்தியிதுவாகும், அவற்றைப் பொருந்தும்படி இதனை வணங்குங்கள், வணங்கியுய்யுங்கள் என்று அறிவிப்பவரைப்போலச் சிறப்புமிக்க இருமலைகளையும் அகத்தியமுனிவர் தமது உள்ளங்கையிற் கொண்டனர்.

வாரியுண்டுமிழ்ந்துவிந்தமடக்கிவில்வலன்வாதாபி
யாருயிர்வாட்டிஞாலஞ்சமன்செய்ததன்றியம்பை



ணிமிடற்றோனும்வரைகளுங்கையுளேந்திப்
விசும்பினினின்றான்யார்குறுமுனிபான்மைசொல்வார்.

இ-ள். கடலைப்பருகி யுமிழ்ந்தும், பெரிய விந்தமலையையடக்கியும் வில்வலன் வாதாவி என்னு மவரது அரிய உயிரைவாட்டியும் பூமியைச் சமப்படுத்தியும் செய்ததல்லாமல், சிவசத்தியினையும் சிவபெருமானையும் பெயர்களையுடைய மலைகளையுங் கையினிடத்துத் தரித்து, பூமியிலும் ஆகாயத்திலும் நின்றவர்யாவர். ஆகலால் அகத்தியமுனிவரின் றன்மையைச் சொல்லவல்லவர் எவர். 52

மாதவர்வழுத்தக்கந்தவரையினின்றருவிதாழுஞ்
சீதமூர்கேதாரச்செந்நெறியினிடப்படர்ந்துவேதத்
தேவதேவன்கூர்பூர்ச்சவனங்கெழீஇயீசானத்திற்
பூதரந்திறுவியன்னோன்பூசனைபுரிந்தானன்றே.

இ-ள். பெரிய தவத்தையுடைய முனிவர்கள் துதிக்கக் கந்தமலையினின்று அருவிதாங்குகின்ற குளிர்மைமிக்க திருக்கேதாரத்தலத்தின்செவ்விய வழியாகச் சென்று வேதத்திற் கூறப்பட்ட தேவதேவாகிய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கின்ற பூர்ச்சவனத்தில் அடைந்து வடகிழக்குத்திசையில் மலையைநிறுவி அகத்தியமுனிவர் பூசைசெய்தார். 51

ஆரணநெறிகொலோமேல்வருவதையபதனுளாய்ந்தோர்
தெரிவருந்தவனிரண்டுசிருங்கமுமிருப்பநீங்கி
வருதிரிபதகைவைதம்வாரணாசியைவணங்கி
விரவினன்பொதியம்புக்கான்வீரவையமடுத்தமேலோன்

இ-ள். சிவபெருமான் அருளிச்செய்த நல்வழியோ, மேலை நின்றதை ஆராய்ந்தோ, அறிதற்கரிய பெருமையினையுடைய முனி இரண்டுசிகரமும் அப்பூர்ச்சவனத்தி லிருக்குமாறு வைத்து அவ்

தை விட்டுநீங்கி, பாய்கின்ற கங்கையாறு பொருந்திய காசித் தலத்தை வழிபட்டு, கடலையுண்ட முனிவர் பொதியமலையை யடைந்தார். 54

கண்ணுதல்கவுரிநாமங்கவினியசிகரமேனு
மண்ணிடைப்போந்துசத்திமலைசிவமலையெனும்பேர்
நண்ணினவவ்வகளாவினன்குடியடைந்தவாறு
புண்ணியமுனிவர்கேண்மோவென்றனன்பொருவில்சூதன்.

இ-ள். சிவபெருமான் உமாதேவியார் என்னு மிருவரது பெயரைக் கொண்ட சிகரங்களா யிருந்தாலும், பூமியினிடத்தே வந்து சத்திமலை சிவமலை யென்னும் பெயரை யடைந்த வவைகள் இரண்டும் திருவாவினன் குடியடைந்த சரித்திரத்தைப் புண்ணியத்தை யுடைய முனிவர்களே கேட்பீராகவென்றார் ஒப்பில்லாத சூதமுனிவர். 55

சிவகிரிசத்திகிரிச் சருக்கம் முற்றிற்று.

அகச்செய்யள்—717.

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

இருபதாவது,

# மலைகள் பழநியடைந்த சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நெடும்பெருங்கடலினுப்பணிநகர்புரிந்துவைகுங்
கொடுந்தொழிற்சூரனாதிகொலைகணியவுணர்க்கென்று
மடும்படைத்தொழில்பயிற்றுமடற்பெருங்குரவர்கோமா
னிடும்பனென்பவன்கொலைசெயத்தெறும்வலிதடந்தோள்வீரன்

இ-ள். நெடிய பெரிய சமுத்திரத்தி னடுவிலே பெரிய நகரஞ் செய்து இருந்த கொடுந் தொழிலையுடைய சூரபன்மன் முதலிய மறத் தொழிலை விரும்பிய அசுரர்களுக்கு எப்போதும் ஆயுதவித்தையைப் பழக்குகின்ற வலிய பெருமைகொண்ட குருவாயுள்ளவனாகிய இடும்ப னென்பவன், கொல்லுகின்ற சிங்கத்தின் மிக்க வலிமையையுடைய வீர னானேன். 1

தயித்தியனென்னுநீதிதிறம்பிடான்சரவணச்சே
யயிற்படைக்கடல்வெஞ்சூரனுயிர்விருந்தாக்குநாளி
லுயிர்த்துளங்கவன்றுமாழ்கியொருவித்தன்மனைவியோடும்
பயிற்சியிலுருமற்றென்றுபயின்றுகாண்படர்வதானான்.

இ-ள். அசுர நீதிகளிற் சிறிதுங் குறைவுபடாதவன், குமாரக்கடவுள், தமது வேலாயுதத்திற்கு வலிமையுடைய கொடியசூரனுயிரை விருந்தாகக் கொடுத்தநாளிலே, பெருமூச்சு விட்டு மனம் வருந்தி அவ்விடத்தை

விட்டு நீங்கித் தன்மனைவியோடும் பழக்கத்தினால் வேறோர் உருவத்தைக் கொண்டு காட்டிற்செல்வானாயினன். 2

அடவிகடொறுந் தண்சோலைசலங்கடொறுங்கார்வேலைப்
புடவிகடொறுந் திரிந்துபுல்லெனநிழலினீங்கா
மடவியோடருந்தவங்களாற்றியுமலயவெற்பி
னிடவியசாரலின்கணிருநதவருடனிருந்தான்.

இ-ள். காடுகள் தோறும் சோலைகள் தோறும் மலைகள்தோறும் கரிய சமுத்திரத்தாற் சூழப்பட்ட பூமியினிடங்கடோறும் திரிந்து, நிழலைப்போல நீங்காது வருகின்ற தன் மனைவியோடு அரியதவங்களைச் செய்தும், பொதிய மலையின்கண் பரந்தசாரலின்கண் பெரியதவத்தையுடைய முனிவர்களோடும் இருந்தன. 3

காலையின்முனிவர்மொய்ப்பக்கலசமாமுனிவன்பண்டை
வாலியகிரியிரண்டுங்கொணர்துமென்றெழுந்துவானங்
கோலியகுறும்பலாவாய்க்குழகன்வாழ்குற்றாலத்தோர்
பாலணைந்திடலுங்கண்டான்பணிந்தனனிடும்பனென்போன்.

இ-ள். அது சமையத்தில், முனிவர்கூட்டங்கள்சூழ, அகத்திய முனிவர் பழமையாகிய பரிசுத்தமான மலைகள் இரண்டையும் கொண்டு வருவே மென்று எழுந்து, ஆகாயமளாவிய குறும்பலா வுருவத்தைக் கொண்டு சிவபெருமான் எழுந்தருளி யிருக்கின்ற திருக்குற்றாலத் தலத்தினோரிடத்தை யடைதலும் இடும்பாசுரனென்பான் கண்டு வணங்கினன்.

தனதுதொல்வடிவந்தோன்றத் தாழ்ந்தவன்றனைநோக்காக்
கனல்விழிநிருதிநீபாரடைந்ததென்கழறுகென்னப்
பனவவெஞ்சூரனாதிபடிறுடைத்தகுவர்க்கெல்லாந்
தினமடுபடையபிற்றுந்தீமையேனிடும்பனென்பேர்.



இ-ள். தன்னுடைய பழையவுருத்தோன்றும்படி வணங்கியஅவனை நோக்கி, அக்கினிபோன்ற சிவந்தகண்களையுடைய நிருதியே நீஇப்பூமியினிடத்தே வந்ததற்குக் காரணம்யாது கூறுவாயாகவென்ன, முனிவரே! கொடிய சூரபன்மன்முதலிய அசுரர்கள்யாவருக்கும் நாடோறும் கொலைத் தொழில்கொண்ட அத்திரசத்திரவித்தைகளைப் பழக்குவேன், எனது பெயர் இடும்பன் ஆகும். 5

இயன்முனிவரனேசூரன்சேயிரணியன்போரேற்று
வயமிகுமொய்ம்புக்காற்றாதுடைந்துதற்பயந்தமற்றோர்க்
குயர்கடன்புரிவானுள்ளத்துணர்ந்துகார்க்கடலுட்புக்கான்
செயலொழிந்தகன்றியாமுஞ்செறியிருட்கானம்புக்கேம்.

இ-ள். இலக்கணத்தைச் செய்தருளிய முனிசிரேட்டரே! சூரபன்மனதுபுத்திரனாகிய இரணியனென்பவன், போர்செய்து, வீரவாகுதேவருக்கு முன்னிற்க முடியாமல் தோற்று தன்னைப்பெற்றவர்களுக்கு உயர்ந்த பிதிரர்கடன்களைச் செய்யநினைத்துக்கரிய கடலுட் புகுந்து ஒளித்தான், செய்யுந்தொழில்யாது மன்றியாங்களும் இருள்நெருங்கிய காட்டினுட்சென்றேம். 6

தேனலர்கடம்பன்செங்கைப்படைகளாற்செருவில்வீந்து
வானகம்புக்கார்யானையரிமுகன்முதலமற்றோ
ரானவெஞ்சூரனூர்திகொடியெனவடையவுற்றா
னவிவ்வினையேன்வாழவிருந்தனனிறந்திலேனால்.

இ-ள். தேன்பரந்த கடப்ப மலர் மாலையையுடைய குமாரசுவாமியின் சிவந்த திருக்கரத்துள்ள ஆயுதங்களினால் தாரகன், சிங்கமுகன் முதலிய அசுரர்கள்யாவரும் மேலுலகத்தை யடைந்தனர், தலைவனான சூரபன்மன் கோழிக் கொடியாகவும் மயில்வாகனமாகவும் சேர்ந்தான், மிக்க தீவினையை யுடையே னாகியயான், இறக்காமல் வாழற்கு இருந்தனன். 7

காக்குநாயகனென்னா றுன்பாலடைந்தனன் கருணையங்க
ணோக்கினாற்பணித்தியாவுஞ் செயிற்றுவனுவலிரென்ற
வாக்கினானுளமுந்தூயனென்பதைமுனிமனத்தாற்
றாக்கினானினதுவெய்யதுயரெலாந்துடைத்துமென்றே.

இ-ள். அடியேனைக் காக்கின்ற தலைவர் தேவரீரே யென்று அடைக்கலம் புகுந்தனன், தேவரீர் திருவருட்கண் பார்வையால் ஏவிய யாவற்றையும் செய்வேன், சொல்வீராக என்ற இடும்பாசுரன்மனமும் பரிசுத்தமுடைய னென்பதை அகத்தியமுனிவர் தமதுமனத்தில் ஆராய்ந்து, உன்னுடைய கொடியதுன்பமெல்லா வற்றையும் போக்குவேமென்று. 8

உத்தரதிசையிற்பூர்ச்சவனமடைந்தும்பர்போற்றுஞ்
சத்தியுஞ்சிவமுமுற்றதடவரைக்குவடிரண்டு
மித்தலைக்கொணர்ந்துவல்லைவருதியேலிருமைகூற
வைத்தனபோகமுத்திவருமெனமுன்மலயமேலோன்.

இ-ள். வடதிசையிலுள்ள பூர்ச்சவனத்தையடைந்து, தேவர்கள் துதிக்கின்ற சத்தியுஞ்சிவமும் பொருந்திய பெரிய மலைச்சிகரங்கள்இரண்டையும் இவ்விடத்துக் கொண்டு வருதியேல், இம்மை மறுமையிற்சொல்லப்பட்ட போகம் முத்தி யென்பனவருமென்று சொன்னார் அகத்தியமுனிவர். 9

உரைத்ததுகேளாவோகையுளங்கொளாவிடும்பன்றாழ்ந்து
திரைக்கடல்குடித்தவண்மைச்செழுந்தவக்குருவேசத்தி
வரைப்பெருமையுஞ்சிவாசலத்தின்மாண்பியமுநன்காய்
விரித்தறியாறுநாயேற்கருள்கெனவினவலோடும்

இ-ள். அகத்தியமுனிவர் சொன்னதைக்கேட்டு மனமகிழ்ச்சிகொண்டு, இடும்பாசுரனவன் வணங்கி, திரைபொருந்திய சமுத்திரத்



தைக் குடித்த வளப்பத்தையுடைய செழிய தவத்தைக்கொண்டகுருவே, சத்திமலையின் பெருமையும் சிவகிரியின் மாண்மியங்களையும் நன்றாக விரித்து அடியேன் அறியும்படி நாய்போன்றவனாகிய எளியேனுக்கு அருள்புரிய வேண்டுமென்று வினவுதலும். 10

உம்பிழ்மணிவிதாழுமுயர்பெருங்கந்தரத்தெற்புச்
சிமயவொண்சிகரஞ்சத்திகிரிசிவகிரியெனச்சே
யமுதுறுவாக்காற்சொற்றவாறுமன்றியுமவேதண்டங்
கமழ்பொழிற்சாரல்வைகுங்காய்புலமாவர்தம்மில்.

இ-ள். ஒளியைக் காலுகின்ற இரத்தினங்களைக் கொழித்தோடும் அருவிபாய்கின்ற உயர்ச்சியுள்ள கந்தமலையி னுச்சிக்கணுள்ள இருகுவடுகள் சத்திகிரியும் சிவகிரியு மாகுமென்று கந்தசுவாமியானவர் தமது அமுதம்போன்ற திருவாக்கினாற் சொன்னவற்றையும், மணங்கமழும் வெள்ளிமலைச் சாரலின்கணிருந்தமுனிவர் கூட்டங்களுள். 11

இருக்குமங்கிராமுனிக்குந்தனக்குநானிமித்தமென்ற
தருக்கமுநிகழ்ந்தவாறுந்தணந்துநோன்பிழைத்தவாறு
முறுக்கிதழ்ப்பவளச்செவ்வாய்முருந்துவெண்முறுவலொண்கண்
மருக்கமழோதிவாமன்மகிழ்ந்தருள்புரிந்தவாறும்.

இ-ள். இருந்த அங்கிரா முனிவர்க்கும் தமக்கும் சாத்திரவாராய்ச்சிகாரணமாக நடந்த தருக்கத்தையும், அதிற் சொன்னவற்றையும், தாம் அவ்விடத்தினின்றும் நீங்கித் தவஞ்செய்தவாலாற்றையும், முருக்க மலர் போன்ற சிவந்த வாயினையும் இறகினடி முட்போலும் வெள்ளிய பற்களையும், அழகிய விழிகளையும் வாசனைவீசுகின்ற கூந்தலையும் உடைய உமாதேவியாரின் நாயகர் உவகைகொண்டு அருள்புரிந்த வரலாற்றையும்.

அருண்மொழிவழங்குகந்தகிரியடைந்தம்மையண்ண
லுருகெழுகுவடிரண்டுகாண்டொறுமிறும்பூதுள்ளம்

பெருகியவாறும்பூசைபெட்புறவிழைத்தவாறுங்
கருமணிமிடற்றோன்வேற்சேய்கவுரியோடெதிர்ந்தவாறும்.

இ-ள். அருள்செறிந்த பிரணவப்பொருளை யுபதேசித்த இடமாகிய கந்தமலையைச் சேர்ந்து, சத்தி, சிவம் என்னும் பெயரையும்உருவத்தையு முடைய சிகரங்கள் இரண்டனையும் காணுந்தோறும் மனத்தின்கண் வியப்புத்தோன்றிய தன்மையினையும், பூசையைத் தாம்விரும்பிச்செய்த தையும், நீலகண்டராகிய பரசிவப்பெருமான் குமாரக்கடவுள் உமையம் மையார் என்னு மிவருடன் தோன்றியவரலாற்றையும். 13

அக்குவடிரண்டுங்கேட்பவண்ணலன்றளித்தவாறு
மக்குவடிரண்டுந்தாங்கியாயிடையகன்றவாறு
மக்குவடிரண்டும்பூர்ச்சவனத்துழியமைத்தவாறு
மக்குவடிரண்டுநீங்கிமலயத்தினடைந்தவாறும்.

இ-ள். அந்தச் சிகரங்கள் இரண்டனையுந் தாங்கேட்ப, சிவபெருமானருள்செய்த வரலாற்றையும், அச்சிகரங்கள் இரண்டனையுங் கையிற் றூக்கிக்கொண்டு அவ்விடத்தி னின்றுந் தாம் நீங்கிய வரலாற்றையும், அவைகள் இரண்டையும் பூர்ச்சவனத்தில் வைத்ததையும், அவற்றை விட்டு நீங்கிப் பொதியமலைக்கு வந்தவரலாற்றையும். 14

போரிடையிகல்வெங்கோபப்பொருங்களிறிரியவென்ற
வீர்கழலிடும்பனென்னும்வாளுழைமடங்கல்கேட்பக்
காருவராழியுள்ளங்கையிலொருங்கமிழ்ந்து
நீரெனவடக்கியுண்ணுங்குறுமுனிநனிநிகழ்த்தி.

இ-ள். போர்க்களத்தினிடத்து வெவ்விய கோபத்தையுடைய பகைவர்களாகிய யானைகள் பயந்தோடும்படி, வெற்றிகொண்ட, நீண்டவீரக் கழலையுடைய இடும்ப னென்னும் சிங்கமானது கேட்கும்படி, கரிய



உவாபயனை யுடைய சமுத்திரத்தை யுள்ளங்கையில் ஒரு உழுந்தளவாக்கி யடக்கி யுண்ட அகத்திய முனிவர் மிகவும் விரித்துக்கூறி (இனி, பூர்ச்ச வனத்திலுள்ள அம்மலைகளிரண்டனையும் கொண்டு வருதற்கு அகத்திய முனிவர் போகுமார்க்கங்களையுங் கூறுகின்றார். 15

அத்தலைபருவிக்குன்றின்வடாதுபாலருவிதீந்தேன்
கொத்தலைத்தெறியுஞ்சந்தக்குறடுகொல்யானைக்கோடும்
பைத்தலைமணியும்வாரிப்பாய்புனல்யாறுட்பாய்ந்து
தத்தலைபெறிதண்சாரற்சதுமுகவரையுட்சார்ந்து.

இ-ள். அவ்விடத்தை விட்டு நீங்கிப்பொதியமலையின் வடக்குப் பக்கத்திலுள்ள, அருவியானது இனிய தேனையும் கிளைகள்செறிந்த சந்தனக் கட்டைகளையும், கொல்லுந் தொழிலையுடைய யானைக்கொம்பு களையும், பசியதலைகளையுடைய நாகரத்தினங்களையும், அள்ளிக்கொண்டு பாய்கின்ற நீரையுடைய நதியுள்ளே கலக்கும் தாவுகின்ற திரைகளைக் கொண்ட தண்ணிய சாரலையுடைய பிரமமலையை யடைந்து. 16

சிலம்பதன்சாரற்சித்தநதியின்பாற்செறுநர்த்தேய்த்த
வலம்படுதடக்கைவைவேல்கவிரலர்மலர்ந்தசென்னித்
தலங்கெழுகுருதிச்சூட்டுவாரணமுயர்த்தோன்றண்டைப்
பொலன்புனைகழற்காப்புதுமலர்தூவிப்போற்றி.

இ-ள். அம்மலையின் சாரலில் சித்தநதியின்பக்கத்தில், பகைவரை யழித்த வெற்றி பொருந்திய வேலாயுதத்தையும் முருக்கமலர்போலுஞ் சூட்டைக்கொண்ட சேவற் கொடியையு முடைய குமாரக் கடவுளினது, பொன்னாலாய தண்டைகளையும் வீரக்கழலையு மணிந்த திருவடிகளைக் காவிலுள்ள அன்றலர்ந்த புட்பங்களைச் சொரிந்து துதித்து. 17

ஒருவியவ்வழிவழிக்கொண்டுலவையந்திசையிலுள்ளம்
வெருவியபசவிலின்னலதனுயிர்வாங்கவெங்கை

சருவியவைரஞ்சாபந்தணித்துவின்னளிக்குமேரு
பொருவியபசுமலைக்கண்ணடைந்திறும்பூதும்பார்த்து.

இ-ள். அவ்விடத்தை விட்டு நீங்கி வழிநடந்து, வாயு திசையாகிய வடமேற்குத் திசையில், மனம் பயமுற்ற பசுவினது உயிரை வாங்கும்படி புலியானது தாக்கிய கோபததையும் சாபத்தையு நீக்கிச் சுவர்க்கத்தைக்கொடுத்த, மேருமலையை யொத்த பசுமலையை யடைந்து அங்குள்ள அதிசயங்களையும் பார்த்து. 18

நீங்கிவெள்ளருவிவள் வாய்முழவமாஞ்சிமிறினீட்டடங்
தூங்குதெள்ளிசைமிழற்றநந்தோகைகூத்தயருந்தொல்சீர்
தாங்குவல்லுளிவரைத்தென்றலையதாச்சார்ந்துதீந்தேன்
றேங்குதண்மலர்ப்பைங்கானந்திகழ்குடநாடுஞ்சேர்ந்து.

இ-ள். அப்பசு மலையைவிட்டு நீங்கி, வெள்ளிய அருவியானது வாரால் கட்டப்பட்ட முரசவாத்தியமாக, கரியவண்டுக்கூட்டங்கள் நீண்ட தெளிவாகிய இசையை யொலிக்க, மயில்கள் நடனத்தைச் செய்கின்ற பழமையாகிய சிறப்புக்களை யுடைய வராக மலையின் அழகிய இடத்தை யடைந்து, இனிய தேன்நிறைந்த குளிர்ந்த பூவையுடைய பசிய சோலைகள் சூழ்ந்த குடகநாட்டை யடைந்து. 19

பனிநெடுங்கிரியினுப்பண்மணமுள்ளிப்படர்ந்தஞான்றிற்
றனிமுதல்பணிப்பத்தென்பால்சமன்செய்யச்சாருநந்தம்
புனிதநீர்க்கரகஞ்சாயத்தீம்புனலொழுகருவிக்குன்றி
னணிவளங்கெழுதண்சாரற்குறியின்கணடந்துசென்று.

இ-ள். நீண்ட இமய மலையின் நடுவே உமையைமணஞ்செய்யும்படி இறைவன் சென்ற நாளிலே, வடபுலந்தாழ்ந்து தென்புலமுயர அதனைச் சமஞ் செய்யும்படி எம்மை யேவ, யாம் வரும்போது கொங்கு மலையிற் றங்கினேமாக, ஆங்கு விநாயகக்கடவுள் இந்திரனுக்காக வுருவெ



டுத்து வந்து நமது கமண்டல நீரைக் கவிழ்ப்ப அதுபாய்ந்த குடகமலையின் மிக்க வளப்பம்பொருந்திய சாரல்வழியாக நடந்துசென்று. 20

பொய்ப்பொருடிளைப்போரின்னற் புணர்த்துவெந்நிரயத்துள்
மெய்ப்பொருடிளைப்போரோகைவியப்புறுசுவர்க்கத்துள்ளுஞ்
செய்ப்பனபோகமொப்புநிறுத்தருளுதிக்குமின்பந்
துய்ப்பவரிருக்குமூதூர்ச்சுப்பிரமணியமெய்தி.

இ-ள். பொய்ப்பொருளில் முழுகினவரைத் துன்பத்துட் சேர்க்கின்ற கொடிய நகரத்தினுள்ளும், மெய்ப்பொருளில் நிற்பவரை மகிழ்ச்சிகொண்டு வியப்பைத்தருகின்ற சுவர்க்கலோகத்தினுள்ளும் செலுத்துகின்ற தீவினை நல்வினை யென்னும் இருவினைகளுஞ் சமப்பட்டு, தோன்றுகின்ற பேரின்பத்தை யநுபவிக்கும் சிவஞானியர்கள் வாழுஞ் சுப்பிரமணியம் என்னுந் தலத்தை (இடும்பனே நீ) அடைந்து. 21

கடிநறுங்கமலம்பூத்துக்கருநெய்தலமர்ந்தவள்ளிக்
கொடிபடர்தருவையோர்பாற்குஞ்சரந்தழுவுமாறு
முடியுடைவைரக்குன்றைமுடிவிலாமுக்கட்கன்னல்
வடிவுறவுயிர்த்தமுத்தைமனங்குவித்திறைஞ்சிவாழ்த்தி.

இ-ள். (இடும்பனே நீ) வாசனை பொருந்திய நல்லதாமரை மலர்ந்து கருங்குவளை இருந்த வள்ளிக்கொடியானது படர்கின்றகற்பகதருவும், ஒருபக்கத்தில் தேவயானை தழுவும் ஆறு சிகரங்களையுடைய வைர மலையும், அழிவில்லாத மூன்று கண்களையுடைய வைரமலையும், அழிவில்லாத மூன்று கண்களையுடைய கரும்புபோன்ற சிவபெருமான் அழகுபொருந்தப் பெற்ற முத்தும் ஆகிய சுப்பிரமணியப் பெருமானை மனத்தை யொருமைப்படுத்திக் கைகூப்பி வணங்கித் துதித்து. 23

அங்கதுவகன்றாவிண்டேங்கடலெயின்மூன்றும்வேவப்
பொங்கழனுமிழ்புன்மூரற்புயங்கனும்புயங்கநல்கும்
பங்குபெற்றுயர்ந்தபீதாம்பரனுமோர்வடிவுதாங்கித்
தங்குசங்கரநாராயணர்தனைத்தொழுதுநீங்கி.

இ-ள். அந்தச் சுப்பிரமணிய தலத்தை விட்டு நீங்கி, ஆகாயத்திற் சஞ்சரித்த திரிபுரங்களும் வெந்தழியும்படி மிக்க அக்கினியைக் கான்ற குறுமுறுவலை யுடைய சங்கரனும், சர்ப்பசயனத்தையுடைய திருமாலும் ஒருவடிவுகொண்டு வீற்றிருக்கின்ற சங்கரநாராயணர் கோயிலைச் சார்ந்து வணங்கி, அவ்விடத்தினின்றும் நீங்கி! 23

வெள்ளைவெண்கமலப்போதில்வீற்றிருப்பவளைச்செங்கேழ்
வள்ளவாய்ப்பொகுட்டினும்பர்வாழ்ந்திருப்பவளையோங்க
லொள்ளிமயமகளையொண்கண்மகேசையையுதவினாளைப்
புள்ளலர்புரிந்துகொல்லாபுரியினைப்பொருவிப்போகி.

இ-ள். வெண்டாமரையில் வீற்றிருக்கின்ற சரசுவதியையும், கிண்ணம் போன்ற செந்தாமரைப் பூவில் இருக்கும் இலக்குமி தேவியையும் மலையரசன் மகளாகிய பார்வதி தேவியாரையும், அழகிய கண்களையுடைய மகேசுவரியையும் பெற்ற பராசத்தியை விரிந்த பூக்களைத்தூவி வழிபட்டுக் கொல்லாபுரி யென்னும் அத்தலத்தைவிட்டு நீங்கி. 24

வருடைசென்றுழக்குகோற்றேனுடைந்துவார்ந்தொழுகு
தீந்தேன், பெருகுதண்கிரியுந்திங்கண்மருப்பையொண் பிணை
யென்றுன்னித், திருகுகோட்டிரலைபாயும்பிறங்கலுஞ் சீயஞ்செ
ல்வி, னுருகெழுகரிவெண்கோட்டின்குருத்துடைத்துண்ணும்
வெற்பும்.

இ-ள். (இடும்பனே நீ) ஆடுகள் சென்று உழக்கியதனாற் கொம்பிலுள்ள தேன்கூடானது உடைந்து ஒழுகுகின்ற இனிய தேனானது பெருகுகின்ற குளிர்ந்த மலையையும், பிறையின் சிருங்கத்தை அழகியபெண்மானென்று நினைத்து முறுகிய கொம்புகளை யுடைய கலைமான் பாய்கின்ற மலையையும், சிங்கங்கள் மேகத்தின் வடிவைக் கொண்டயானைகளினது வெள்ளிய தந்தங்கள்பொருந்திய அடியைத் தகர்த்துத்தின்னும் மலையையும். 25



நஞ்சுமுற்றெயிற்றுப்பாந்தள்வழங்குகல்லளையுஞ்ஞாங்கர் [ந்து
வெஞ்சினப்பேழ்வாய்வேங்கை மிடைபெறும் பொறையும்வீழ்
குஞ்சரம்பிடியோடாடுங்குறுஞ்சுனைவரையுந்தீம்பர்
நெஞ்சினுட்கிடந்தவன்பாற்பதுக்கைநீணெறியுநீந்தி.

இ-ள். (இடும்பனே நீ) விஷமிக்க பற்களையுடைய பாம்புகள் சஞ்சரிக்கும் கல்லளைகளும், பக்கத்திலே மிக்க கோபத்தை யுடைய பெருத்த வாயைக்கொண்ட புலிகள் நெருங்கியிருக்கும் சிறுமலைகளும், ஆண்யானைகள் பெண்யானைகளோடு விளையாடுகின்ற சிறிய சுனைகள் பொருந்திய மலைகளும், கொடியவர்களுடைய மனத்தைப்போலப் பருக்கைக் கற்கணிறைந்த வலியபாலை நிலமும் கடந்து. 26

சிதடியினொலிவழங்குமடவியும்பகர்ந்தசென்ன
விதநெறிதவழ்ந்துதூமமுயிர்ப்பவெம்புலிங்கஞ்சிந்துங்
கதமெரிவனமுமக்களுயிர்ப்பலிகவர்வெஞ்சூலி
சுதரிசனங்கைக்கொண்டான்றன் சூழலும்யாறுமுழ்கி.

இ-ள். சிச்சிலி ஒலிசெய்யும் வனங்களையும் சொல்லப்பட்டபலவகை வழிகளையும் தாண்டிச்சென்று, புகைகள்மேலெழ வெவ்விய அக்கினிப் பொறிகள் சிந்துகின்ற நெருங்கிய நெருப்புக் காடுகளும், நரபலியை யுண்ணுகின்ற வெவ்விய சூலாயுதத்தைத் தரித்த காளிதேவியும் சக்கராயுதத்தைத் தரித்த விட்டுணுவும் வீற்றிருக்கின்ற இடங்களையுந் தாண்டிச் சென்று நதியினிடத்துந் தோய்ந்து. 27

காரகிற்குலமுஞ்சந்தக்குறடுங்காய்கனற்கண்வேழக்
கூர்மருப்பினமுந்தேறற்கொழுங்கழைத்துணியும்வேர
லேர்மணிக்குவையும்பொன்னுமவரன்றியெம்மருங்குஞ்சிந்தி
வார்சிலைக்கணையின்செல்லுமுன்செல்லுமணிநீர்யாறும்.

இ-ள். கரிய அகிற்றொகுதியையும், சந்தனக்கட்டையையும், வருத்துகின்ற கோபத்தையுடைய கண்களைக் கொண்ட கூரிய கொம்பினவாகிய யானைக் கூட்டங்களையும், தேன் பொருந்திய கொழுமையான மூங்கிலரிசியையும், அம்மூங்கிலின் அழகிய முத்துக் கூட்டங்களையும் பொன்னையும் கொழித்து எப்பக்கத்துஞ் சிதறி, நீண்ட வில்லினின்றும் விடப்படும் அம்புகள் பின்செல்லத், தாம் அவற்றிற்கு முற்பட்டுச் செல்லும் மணிமுத்தாநதியும். 28

மடுக்களுமடுவிற்றண்டாமரைகளும்வன்சப்போதி
னடுத்திகழ்பொகுட்டுமன்னநாடுமந்நாட்டினிஞ்சி
யுடுத்தவணபதிகளந்தப்பதிச்சினகரமுமோங்கு
மடுத்துநீர்படிந்தடைந்துவணங்கியவ்விடங்கணீங்கி.

இ-ள். தடாகங்களும் தடாகங்களிற் பொருந்திய குளிர்ந்த தாமரை மலர்களும், அத்தாமரை மலர்களி னுள்ளினுள்ள பூங்கொட்டையும் போன்ற அந்நாட்டையும், அதன்கண் மதிலாற் சூழப்பட்ட நகரங்களையும், அந்நகரங்களிலுள்ள கோயில்களையும் உயர்ந்த நதியினது பரிசுத்தமான நீரையும் அடுத்து வணங்கியும் தோய்ந்தும் அவ்விடங்களை யெல்லாம் விட்டு நீங்கி. 29

அடைந்தவர்கதியைச்சார்வதலதுசாராதராதுநாளுந்
தடைந்தமெத்தலக்காசியெய்திச்சதமகன்முதலோர்வேலை
கடைந்தெடுத்தெள்ளமுதங்கைப்படச்சுவைதருகங்கைநன்னீர்
குடைந்தகிலேசர்தாள்கைகுவித்தறுதிங்களவைகி.



இ-ள். (இம்பனே நீ) தன்னைச் சார்ந்தவர்கள் முத்தியை யடைவதல்லாமல் அடையாதவர் அம்முத்தியைச் சாராது தடைப்பட்டு நிற்றற்கேதுவாய் பெருமையை யுடைய காசிப்பதியை யடைந்து, இந்திரன்முதலாயினோர் பாற்கடலைக் கடைந்தெடுத்த தெளிந்த அமிர்தமுங் கைக்கும்படி அத்துணையினிமைப் பண்பையளிக்கின்ற கங்கையினது சிறந்தநீரிற் றோய்ந்து, விசுவநாதப் பெருமானது திருவடிகளைக் கைகூப்பி வணங்கி ஆறுமாதம் அத்தலத்தின்கண் வசித்து. 30

விழுந்தகுகடவுட்காசிவியனகர்துறந்துமேலை
முழுத்தவரிருக்கைமிக்கமுரண்வரைக்குலமும்வென்றி
பழுத்தவில்மிலேச்சர்வாழ்க்கைப்பதிகளுமளறுபாய்ந்து
சுழித்தலைபெறியுங்கண்டல்சூல்பம்பியகான்யாறும்.

இ-ள். சிறந்த தகுதியான தெய்வத்தன்மையையுடைய காசியென்னும் பெரிய நகரத்தைவிட்டு நீங்கி, மேன்மையான தவமார்க்கத்தொழுகும் முனிவர்களுடைய ஆச்சிரமங்கள் மிகுந்துள்ள வலிய மலைக்கூட்டங்களையும், வெற்றிமிக்க வில்லினைத் தரித்த மிலேச்சர்கள் இருக்கின்ற நகரங்களையும், சேறுகொண்டு சுழித்துத் திரைகள் எறிகின்ற தாழைகளும் பிரம்புகளும் பரந்துள்ள கான்யாறுகளையும். 31

தெற்றியபிறழ்பற்பேழ்வாயலகையுஞ்செறிபுன்குஞ்சி
வற்றியநரம்பின்யாக்கைமண்ணையுங்குழிகட்பேயுஞ்
சுற்றியகுடர்செந்நீர்வெண்ணிணந்தசைவழும்புதோண்மேற்
பற்றியகடியுந்துய்த்தபழுவமுங்கழியச்சென்று.

இ-ள். தெறித்த மாறுபட்ட வக்கிரதந்தப் பற்களையும் திறந்த வாயினையும் உடைய அலகைக் கூட்டங்களும், நெருங்கிய குறுத்த மயிரினையும், உலர்ந்த நரம்போடுகூடிய உடம்பினையு முடைய பிரேதங்களும், ஆழ்ந்த கண்களையுடைய பேய்களும் ஒன்றோடொன்று சுற்றியகுடர் இரத்தம் வெள்ளிய நிணம் தசை வழும்பு என்னுமிவைகள் கைகளிற் படிந்

துள்ள வேதாளங்களும் (அல்லது பிணந்தின்னும் பேய்களும்) நெருங் கியுள்ள வனங்களுங் கழியுமாறு சென்று. 32

முடங்குளையரிமானே றமுடைப்புலிபுழைக்கையாளி
கடங்கவிழ்கவுண்மால்யானைகரியகோட்டிரலைநவ்வி
தடங்கெழுகேழற்பன்றிசல்லியங்கடமாட்பல்ல
மடங்கலில்விலங்குநீங்காவடவியங்கடறுநீங்கி.

இ-ள். மடங்கிய பிடர்மயிரினையுடைய சிங்கேறுகளும் புலால்நாற்ற முடைய புலிகளும் உட்டுளைபொருந்திய கைகளையுடைய யாளிகளும், மதம்பாய்கின்ற கதுப்பினையுடைய மதமயக்கங்கொண்ட யானைகளும், பெரியகொம்புகளையுடைய ஆண்மான்களும் பெண்மான்களும், பெருமை மிக்க பன்றிகளும், கரடிகளும் கடமைகளும் முட்பன்றிகளும் அடங்குத லில்லாத இன்னன மிருகங்களும் பிரியாது உறையும் காட்டு வழிகளையுங் கடந்து சென்று. 33

பேர்தலின்றிப்பெய்யும்பெரும்பனிக்குடைந்துசார
லார்தருவிலங்கும்புள்ளும்பிறவுமாங்கணைந்துகாயக்
கூர்தருபுயங்கமீன்றகொழுமணிசுடர்த்தீயென்று
சார்தரும்பொழிற்கேதாரத்தடங்கிரியடைந்துதாழ்ந்து.

இ-ள். நீங்குதலின்றி (இடைவிடாது) பெய்யும் பெரிய பனிக்கு வருந்தி, மலைச்சாரலின்கணுள்ள மிருகங்களும் பறவைகளும் ஏனையவும் அவ்விடத்தடைந்து, குளிர்காயும்படி, மிகவும் நிறைந்த பாம்புகள் கக்கிய அழகியஇரத்தினங்களை ஒளிகொண்ட நெருப்பென்று வருகின்ற பெரிய திருக்கேதார மலையைச் சார்ந்து வணங்கி. 34

தணந்ததன்வடகீழ்ப்பாலிற்றயங்கியவொருகான்மாக்கட்
கணந்திகழ்புலமுமேனைக்கல்கெழுகடறுந்தள்ளி



மணந்திசைதிகழும்பூர்ச்சவனங்கெழுமிலிங்கம்வந்தித்
துணர்ந்துதொல்கிரியிரண்டுங்கொணர்ந்திவணுறுத்தியென்றே

இ-ள். (இடும்பனே நீ) கடந்து செல்லும் அவ்விடத்திற்கு வடகிழக் குத் திசையில் ஒற்றைக்காலையுடைய மனிதகூட்டங்கள் இருக்கின்ற இடத்தையும் மற்றைய மலைகள் செறிந்த வனங்களையும் விட்டு நீங்கி, வாசனை வீசி இசை விளங்காநிற்கும் பூர்ச்சவனத்திலுள்ள இலிங்கத்தை வணங்கி, அம்மலைகள் இரண்டும் இருக்குமிடத்தை யறிந்து, அப்பழைய மலைகள் இரண்டனையும் கொண்டுவந்து இவ்விடத்தி லிருத்தக் கடவாய் என்று. 35

சென்னெறியுணர்த்திமற்றுமற்றுளசிலநவிற்றிப்
புன்னெறிமாற்றமூலமனுநெறிபுகுத்திக்காதி
லிந்நெறிவழாமனிற்றியெனச்சொலிவிடுத்தானன்று
நன்னெறியினரைச்சேர்ந்தார்தமக்கொருநவையுமுண்டோ.

இ-ள். போகும் மார்க்கங்கள் பலவற்றையும் அறிவித்து, இன்னும் என்னென்ன அறிவிக்கவேண்டுமோ அவற்றையு மறிவித்து, பாவவழி களை நீக்குகின்ற பிரணவமந்திரத்தை அவனது செவியில் உபதேசித்து இந்நன்னிலைதவறாது இருப்பாயாக வென்றுசொல்லி அகத்திய முனிவர் இடும்பனை யனுப்பினர், எக்காலத்துஞ் சன்மார்க்கத்தினரைச் சேர்ந்தவர் களுக்கும் ஒருதுன்ப முண்டாகுமோ? 36

கலி விருத்தம்.

சாற்றுமறைகொண்டுசதுமாமுகவனீக்க
ணேற்றமுறுசித்தநதியின்கரையுதக்கின்
றேற்றுக்கனைத்தொழுதுதொல்பசுவரைச்சென்
றூற்றலொடுஞ்சயகிரியொய்யெனவடைந்தே.

இ-ள். இடும்பனென்பவன், அகத்திய முனிவர் கூறிய இரகசியப் பொருளை யெல்லாம் மனத்திற்கொண்டு பிரமகிரிக்கணுள்ள மேன்மை பொருந்திய சித்தாநதியின் கரைக்கு வடக்கின்கண் விளங்காநின்ற சுப்பிரமணியப் பெருமானை வணங்கி, பழமையாகிய பசுமலையையடைந்து வலிமையுடன் சையமலையை விரைவினடைந்து. 37

தண்ணடைகண்மற்றுள தணந்து தனிவேற்கை
யண்ணலுறைசுப்பிரமணியம்பரவியேகிப்
புண்ணியர் தவம்புரிகொல்லாபுரியொரீஇமுக்
கண்ணன்மணிவண்ணனுறைகாமர்பதியேகி.

இ-ள். குளிர்ந்த சோலைகளா யுள்ளனவற்றைக் கடந்து சென்று, ஒப்பில்லாத வேலாயுதத்தைத் தரித்த கைகளையுடைய குகப் பெருமான் வீற்றிருக்கின்ற சுப்பிரமணியம் என்னுந் தலத்தைத் துதித்தகன்று, தருமவழியினிற்பவர் தவத்தைச் செய்கின்ற கொல்லாபுரியையும் விட்டு நீங்கி, உருத்திரமூர்த்தியும் விட்டுணுவும் ஒருவடிவாயிருக்கின்ற சங்கரநாராயணர் கோயில் எனனும் அழகிய தலத்தையுந் துதித்துச்சென்று.

— தண்டை - குளிர்மையாகிய நடைகளையுடையது என விரிதலின் பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. நல்ல ஒளி வடிவாயிருத்தலிற் சுப்பிரமணியம் என்றுபெயராயிற்று. ஒரீஇ - சொல்லிசையளபெடை. சிவபெருமானும் நாராயணமூர்த்தியும் பாதியுருவாயிருத்தலால் சங்கரநாராயணரெனப்பட்டார். இம்மூர்த்தத்தை அரியர்த்தரென்று ஆகமங்கள் கூறுகிற்கும். 38

கல்லருவியங்கிரிகளுங்கரைகொல்யாறுஞ்
செல்வனமும்வேறுபலதேயமுதல்யாவும்
வல்விரைவினெய்திமறைவாணர்புகழ்காசித்
தொல்பதியிலீசர்முடிசூடுநதியாடி.



இ-ள். கல்லென்று ஒலிக்கின்ற அருவிகளையுடைய அழகிய மலைகளும், கரையை மோதுகின்ற நதிகளும் செல்லுதற் குரியகாடுகளும் வேறு பலதேசங்களும் இவை முதலான இடங்களெல்லாவற்றையும் மிக்க விரைவி னடைந்து, வேதங்களையுணர்ந்த பிராமணர்கள் புகழுகின்ற பழமையாகிய காசிப்பதியை யடைந்து சிவபெருமான் திருமுடியிற் றரித்த கங்கையில்தோய்ந்து. 39

அங்கணாறுதிங்களகிலேசனைவணங்கி
வெங்கடறுமெனவும்விராவிவிரைவிற்போய்த்
தங்குபனிமூழ்கியகேதாரநெறிபோகிப்
புங்கவரினம்பரவுபூர்ச்சவனமேவி.

இ-ள். அவ்விடத்தில் ஆறுமாதம் விசுவநாதப் பெருமானைத் தரிசித்து வழிபட்டு, கொடிய வனங்களெல்லாந் தாண்டி விரைவிற்சென்று, நிலைத்த பனியினால் மூடப்பட்ட திருக்கேதார வழிசென்று, தேவ கூட்டங்கள் துதிக்கின்ற பூர்ச்சவனத்தையடைந்து. 40

கோமுனிமுனோதியதுணர்ந்துதுதிபங்க
மேனமுறவிருந்ததலனெய்தியெதிர்போற்றி
மாமலர்தூவினன்மனம்புனிதனானான்
ருமுனிவர்போற்றுசிவசத்திமலைகண்டான்.

இ-ள். தலைமைபெற்ற அகத்திய முனிவர் முன்னர்ச்சொன்னதனை யறிந்து சிவலிங்கம் இன்பம் பொருந்த இருந்ததலத்தையடைந்து எதிரிற் றுதித்து, அழகியபுட்பங்களைச் சொரிந்து மனம் பரிசுத்தமுடையனானான், முனிவர்கள் துதிக்கும் சிவமலை சத்திமலைகளைக்கண்டான். (இடும்பன்.) 41

தண்டெனவிழுந்தனனெழுந்து தவமிக்கோன்
றொண்டெனவலித்தருள்சுரந்திடுதலாலே

கண்டனமிவ்வாறுபிறர்கண்டிலர்கொல்யாஞ்செய்
பண்டைவினைநல்வினையல்லாதுபயனுமோ.

இ-ள். தண்டத்தைப் போல விழுந்து வணங்கினவனாய் எழுந்து தவத்தின் மிக்க அகத்திய முனிவரது அடிமையாகுமென்று மனம்பிடித் திழுத்துச் செலுத்தியருள் பெருகலாலே இவ்வாறு சிவபெருமானைத் தரிசித்தோம், ஏனையோர் தரிசித்திருக்கமாட்டார், நாம்செய்த பழவினை நல்வினை யல்லாது தீவினை யாகுமோ? (ஆகாதென்றபடி.) 42

என்றனனிடும்பிபணியாவதுமிழைப்ப
மன்றன்மலராய்ந்துமுறைவந்தனைபுரிந்தான்
றென்றல்வரையோன்மொழிவழாதுதெளிவோடா
டொன்றுபதமைந்தையுமுளத்தெழுதிவைத்தே.

இ-ள். என்று இவ்வாறு இடும்பன் என்பான்சொல்லி, தன்மனைவி யாகிய இடும்பியென்பவள் எல்லாப் பணிகளையுஞ்செய்ய, வாசனைபொ ருந்திய புட்பங்களைக்கொய்து முறையே வணக்கஞ்செய்தான் .தென்றற் காற்றானது தோன்றும் பொதியமலையில் வசிக்கும் அகத்தியரது சொற் றவறாது மனத் தெளிவுடனே ஒருவருடம்வரையும் பஞ்சாக்கரத்தைத் தன்னுள்ளத்திற் பதித்துவைத்து. 43

ஆங்கவனருந்தவமுஞற்றிடுமவ்வேலை
யோங்குபுயதண்டமெனவொண்பிரமதண்டுந்
தாங்குதிசைசூழுரகர்தாம்பினமுமாகப்
பாங்கரினடைதருதல்பார்த்ததிசயித்தான்.

இ-ள். அவ்விடும்பன் ஆனவன் அரிய தவத்தைச் செய்யுங்காலத் தில், மிக்க புயதண்டமென்று சொல்லும்படி அழகியபிரமதண்டும், சுமக் கப்படுகின்ற திக்குகடோறுமுள்ள பாம்புகள்கயிற்றாக் கூட்டங்களும் ஆக, பக்கத்தில் வருதலைப்பார்த்து ஆச்சரியமுற்றான்.



பிரமதண்டு புயதண்டமாகவும் அட்ட நாகங்கள் கயிறுகளும் வரு தலைக்கண்டு இடும்பன் ஆச்சரியமுற்றான் என்பதாகருத்து.

புயதண்டாவது சுமைசுமப்போர் தோளில்வைக்கும் தண்டு. அதனைக் காவுதடியென்பர். 44

தொண்டனெனெழுந்தனைகுவித்திருவடிக்கண்
மண்டுபிரகாசியுறுவாய்ப்புறவிசைத்துத்
தண்டொடுபிணித்தெழுதடக்கடலைவாரி
யுண்டவனுரைத்தமனுவுண்டதையுணர்ந்தான்.

இ-ள். மேகத்தைப்போல இடும்பனானவன் எழுந்து கைகளையஞ்ச லித்து, இருமலைகளிலும் நெருங்கிய பாம்புக் கூட்டங்களை முன்போலப் பொருந்தும்படி பிணைத்து, புயதண்டத்துடன் கட்டி, சத்த சமுத்திரங் களையு முண்ணியுண்ட அகத்திய முனிவர் கூறிய மூலமந்திரத்தை மனத் தின்கணுச்சரித்தான். 45

மண்ணினிடைசானுவுறவூன்றி வருதண்டந்
திண்ணியபுயத்துமிசைசேர்த்திமயத்துப்
புண்ணியன்வழங்குபுகழ்திருவுருவெண்ணி
னெண்ணினனெழுந்தனனெழுந்தகிரிரண்டும்.

இ-ள். பூமியினிடத்து முழந்தாள் பொருந்த வூன்றி, வச்சிரம தண்டத்தை வலிய தன்றோளின்மேல்வைத்து அகத்திய முனிவர் உப தேசித்த திருவுருவத்தை மனத்துன்னினைத்து எழுந்தனன், மலைகள் இரண்டும் மேல் எழுந்தன. 46

அன்னதுணைமால்வரைகளுன்பினணிமார்பின்
மன்னிடுமிடும்பன்மணிகேலெமொருதட்டுத்
தன்னிகரில்மாமணியொர்தட்டினிடைநத்த
நன்னெறியினிறக்குமொருநாய்கனைநிகர்த்தான்.

இ-ள். அவ்வாறாயபெரிய இருமலைகளையும் அன்புடன் மிக்க சுமையிற் கொண்ட இடும்பனானவன் இந்திர நீலரத்தினத்தையொரு தட்டிலும் தனக்கு ஒப்பில்லாத மாணிக்கரத்தினத்தையொரு தட்டிலுமாக நிறைத்து, நன்மையுடன் நிறுக்கின்ற வைசியனை யொத்தனன். 47

தேவர்திகழ்தென்றிசைதிளைத்ததவமோசீர்
மேவுமுனிவாய்மைவிளைவோவிறலிடும்ப
னாவலின்முனாற்றுதவனோவணிகொள்காசிக்
காவடியர்போல்விரைவுகொண்டதர்கடந்தான்.

இ-ள். தேவர்கள் விளங்குகின்ற தெற்குத் திசையானது செய்த தவமோ, சிறப்புமிக்க அகத்திய முனிவர்சொன்ன? உண்மையின்பயனோ வீரத்தையுடைய இடும்பனானவன் விருப்புடன் முன்னர்ச்செய்த தவத்தின் பிரயோசனமோ, அழகைக்கொண்ட காசிக்காவடியர்போல விரைவின் அம்மலைகள் இரண்டனையுஞ் சுமந்துகொண்டு வழிகளைத் தாண்டினான். 48

வந்தநெறிகண்டிலன்மயங்கிநெடுவிந்த
மந்தநெறிசென்றுமலிகார்ச்சுனமடைந்து
சிந்தைதெளிதிண்ணர்புரிதென்கயிலைபோகி
யுந்தருவிதாழ்கனலினண்கிரியுறைந்தே.

இ-ள். வந்தவழி தெரியாதவனாய் மயங்கி நீண்டவிந்த மலைவழியாகச்சென்று மல்லிகார்ச்சுனத்தைச் சார்ந்து மனத்தெளிவுற்ற கண்ணப்பநாயனார் வழிபட்ட சீகாளத்திசென்று, மணிமுதலியவற்றை யெறிகின்ற அருவி தூங்குகின்ற திருவண்ணாமலையையடைந்து. 49

முத்தநதிநீடுமுதுகுன்றநெறியேறி
நத்திலகுபொன்னிநதிநன்கரைகடந்து
புத்தமுதபானர்புகழ்புட்பகிரியுற்றான்
மத்தனெனநின்றுளமயங்கிவழிகாணான்.



இ-ள். மணிமுத்த நதிபொருந்திய நீண்ட விருத்தாசலவழிசென்று, சங்குகள் விளங்குகின்ற காவிரி நதியினது நல்ல கரையைக் கடந்து சென்று, புதிய அமிர்தத்தையுண்ட தேவர்களாற் புகழப்படுகின்ற புட்பமலையை யடைந்தான், அங்கு உன்மத்தனைப்போல நின்று மனமயங்கி வழிதெரியாதவனாய். 50

ஆவயினடுக்கலுந்தையன்ளிலைவெள்வேலோன்
காவலனெனக்கிரியகச்சையிடைவீக்கித்
தூவடியின்மீதுதொடுதோல்கழல்புனைந்த
யேவயில்வைவாளிவிலெடுத்தெதிர்புகுந்தான்.

இ-ள். அவ்விடத்தில் உள்ள மலையின்கணெழுந்தருளியிருக்கின்ற கூறிய இலைத்தொழில்முற்றிய வெள்ளிய வேலாயுதத்தையுடைய கந்தக்கடவுள். அரசனென்று சொல்லும்படி கருவிதம்பொருந்திய வாரினையிடையிற்கட்டி, பரிசுத்தமாகிய பாதங்களின்மேல் செருப்பையும் வீரக்கழலையும் தரித்து, செலுத்துகின்றவேல், கூரிய அம்பு வில்லிலென்னுமிவற்றை யெடுத்துக்கொண்டு எதிர்ச்சென்றார். 51

புகுந்தனனெவன்கொலெழில்பூத்தவன்விறற்போர்
மிகுந்தவனிருங்கழன்மிலைந்தவன்வில்வல்லோன்
முகுந்தன்மருகன்பொருவினன்முருகனென்றுண்
ணெகிழ்ந்துகுலம்யாதுதனிநின்றதுரையென்றான்.

இ-ள். இடும்பன்கண்டு, இவ்விடத்து வந்தவன் யாவன், அழகுடையவனாக இருக்கின்றான், வெற்றி பொருந்திய போர்த்தொழிலில் மிகுந்தோன், பெரிய வீரக்கழலை யணிந்தவன், வில்லில் வல்லவனாயிருக்கின்றான், திருமாலின் மருகனாகிய முருகக்கடவுளை நிகர்த்தவனா யிருக்கின்றானென்று மனநெகிழ்ச்சிகொண்டு உன்னுடைய குலம்என்ன? தனியே வந்ததற்குக் காரணம் என்ன சொல்வாயாகவென்றுகேட்டனன்.

யானுலகமாளுமிறைவன்றனயனீண்டைக்
கான்மிருகவேட்டைகருதித்தனிபுகுந்தே
னீநிருதனோவரைகடாவியெதிர்நின்றாய்
மேனதெவனோதெனவினாவினன்வெள்வேலோன்.

இ-ள். நான் இவ்வுலகத்தை யாளுகின்ற அரசனது குமாரனும், இவ்விடத்திற் காட்டிலே மிருகவேட்டை யாடும்படிநினைத்துத் தனியே வந்தனன், நீ இராக்கதனோ மலைகளையெடுத்துக்கொண்டு எதிரில்வந்து நின்றாய். வந்தது யாதுசொல்வாயாகவென்று, வேலாயுதப் பெருமான் வினாவினர். 53

வீரைநுகர்மாமுனிவிடுத்தபணிவெஃகி
வாரையிவைகொண்டுமலயம்புகுதுகின்றேன்
றாரையறியாதுதடுமாறியிவண்வந்தேன்
பாரையினிதாளிறைபயந்தவிறலோயே.

இ-ள். கடலையுண்ட அகத்தியமுனிவர் அனுப்பிய ஏவலைவிரும்பி, மலைகளைக்கொண்டு பொதியமலைக்குச் செல்கின்றேன், வழிதெரியாது தடுமாறி யிவ்விடத்தில் வந்தேன், பூமியை நன்றாக அரசாளுகின்ற அரசனது குமாரனே! (வரை - வாரையெனநீண்டது.) 54

மைவழியுமேனியன்வழங்குமொழிகேளாச்
செவ்வழிபயின்றளிசெறிந்திமிர்கடம்ப
னிவ்வழியினெய்தியெழிலேனவரைவைகி
யவ்வழியணைந்துமலயத்தடைதியென்றான்.

இ-ள். செவ்வழி என்னும் பண்ணைப் பழகி வண்டுகள் பாடலைச் செய்கின்ற கடப்ப மலர்மாலையினராகிய கந்தக் கடவுள், கருமைதேங்கிய சரீரத்தையுடைய இடும்பன் சொன்ன வார்த்தைகளைக்கேட்டு, இவ்வழி



யாகச் சென்று அழகிய வராகமலையை யடைந்திருந்து, அந்த வழியாகப் போய்ப் பொதியமலையை யடைவாயாகவென்றார். 55

ஏவினனிவன்கருணைவள்ளலெனவெண்ணி
மேவினன்விரைந்தனன்விசும்பினுயர்கேழன்
மாவினசலத்துவடபாலருகுமாவோ
டாவினன்வலம்புரியுமந்நகரடைந்தான்.

இ-ள், செல்லுதற்குரிய வழியை யறிவித்தான் ஆதலால் கிருபைக் குணமுடைய வள்ளலாகு மிவன் என்று நினைத்து, அவ்விடத்தைவிட்டு சென்று ஆகாயத்தினுயர்ந்த வராகமலைக்கு வடபக்கத்திலுள்ள, இலக்குமியுடன் காமதேனு, சூரியன் என்னும் இவர்பூசித்த திருவாவினன்குடி யென்னும் நகரத்தை யடைந்தான். 56

தாளுடறளர்ந்துதவனம்பசியுழற்றத்
தோள்வலிதொலைந்தவனையொத்ததுயரெய்தி
நீளிணைவரைச்சுமைநிலத்தினிடைவைத்தா
னாளுடையவேலர்செயலாரறிவரம்மா.

இ-ள். காலுஞ் சரீரமும் தளர்ச்சிகொண்டு, தாகமும்பசியும்வருத்த, புயவலிமைகுறைந்தவன் நிகர்த்த துன்பத்தையடைந்து, நீண்ட இரு மலைகளின்து சுமையை நிலத்தினிடத்து வைத்தனன், எம்மை யடிமை யாக வுடைய வேலாயுதக் கடவுளின் செய்கையை யாவரறிவார். 57

ஆவதுணரானருகடைந்துதவவாம
தேவனுறைகானிடைசெறிந்தவனிருந்தா
னேவலின்றிடும்பிதருமின்கனிகிழங்கு
மேவுமசனம்பிறவும்வேண்டுவதுகர்ந்தான்.

இ-ள். மேல்செய்வதை யறியாதவனாய், பக்கத்திலுள்ள காட்டை யடைந்து, வாமதேவமுனிவர் இருக்கின்ற ஆச்சிரமத்தினிடத்தி லிருந்தனன், குற்றேவலைச் செய்யும் இடும்பியினாற் கொடுக்கப்பட்ட இனிய பழம் கிழங்கும் பொருந்திய உணவாயுள்ளன பிறவும் ஆகிய விரும்பியனவற்றைப் புசித்தான். 58

நித்தனுமைவெற்பிலொருசார்நெடுநிலத்திற்
கைத்துணையினாலுவளகங்கடிதுதொட்டுத்
துய்த்தனனறும்புனலுறுனிக்கடல்வறப்ப
வத்திருவரைத்துணையடுத்தனனெடுத்தான்.

இ-ள். சிவமலை சத்திகிரி என்னும் மலைகளின் பக்கத்திலுள்ள நீண்டநிலத்தில், தனது இருகைகளாலும் பள்ளத்தை விரைவாகத் தோண்டி, ஒலிபொருந்திய சமுத்திரமும் வற்றிப்போக, நல்லநீரை யுண்டனன், அதன்பின் அந்த அழகிய மலைகள் இரண்டையும் அடுத்து மேலெடுத்தான். 59

கலிநிலைத்துறை.

தோண்முரிந்தனநெறிந்தனசுவற்புறஞ்சானு
தாண்முரிந்தனவெரிந்தனதடங்கண்கள்பிதுங்கிப்
பூாண்முரிந்துநம்மடுதிறன்முரிந்ததென்னென்று
நாண்முரிந்திடர்நின்றுளநடுங்கினனிடும்பன்.

இ-ள். புயங்கள் முரிந்தன பிடரின் பக்கம் நெறிந்தன, முழந்தாளும் கால்களும் முறிந்தன, நீண்ட விழிகள் பிதுங்கியெரிந்தன, பெருமைகெட்டு நமது வலிமையுங் கெட்டதுகாரணம் யாதென்று, பலநாள் நீங்கித் துன்பங்கொண்டு மனநடுக்கமுற்றான் இடும்பன். 60

அரிமனைச்சிவனுக்குநீடருந்தவனடிமைக்
குரியனென்றிடுந்தொழிலுமன்றுதவுமந்திரமும்



பிரியநம்முடைவலிகளும்பெயர்தரவீண்டுத்
திரியுமாறெவனெனவுளம்புழுங்கினன்சிறி.

இ-ள். விட்டுணுவை மனைவியாகவுடைய சிவபெருமானுக்கு அடியவரான மிக்க தவத்தையுடைய அகத்திய முனிவரது அடிமைக்கு உரியவனென்னுந் தொழிலும், அற்றைத்தினம் உபதேசித்த மந்திரமும் பிரிந்துபோகவும், நம்முடைய வலிமைகளும் நீங்கவும், இவ்விடத்தில் வேறுபட்ட தெவ்வாறென்று கோபித்து மனம் புழுக்க மடைந்தான்.

"அரியினைச் சிவனுக்கு நீடருந்தவனடிமை" எனவும் பாடம். அதற்கு விட்டுணுவைச் சிவனுக்குச்செய்த மிக்க தவத்தையுடையஅகத்திய முனிவற்கு அடிமை என்க. அதனை மேற்கூறுதும், அரி - பகைவர்களை யழிப்பவன் விட்டுணு, சிவன் - சுகரூப முடையவன், மந்திரம் - மந் - நினைப்பவனை, திர - காப்பது.

திருமால் சிவபெருமானுக்கு மாயா சத்தி யென்னும் ஆண் சத்தியாகலின் மனையாம். என்னை? காளிதேவி கோபச்சத்தியும், துர்க்கை அறிந்தற்சத்தியும், உமாதேவியார் இன்பச் சத்தியும், திருமால் ஆண் சத்தியும் என்று புராணங் கூறலால் "அரிமனைச்சிவன்" என்றார். இதற்கு மேற்கோள் வருமாறு—

கந்தபுராணம் - மாசாத்தாப் படலம்.

நால்வ கைப்பட நண்ணிய சத்தியுண்
மாலுமொன் றுதலின் மற்றது காட்டுவா
னால கண்டத்த னச்சுத னச்சுறங்
கோல மெய்திக் குறுகினு னவ்விடை.

சிவபெருமானுக்குத் திருமால் சத்தியாகலினன்றே, தாருக வனத்திற்குச் சென்ற காலத்து விட்டுணு மோகினி வடிவுற்றுச் சென்றதும், அமுதமளித்த காலத்து மோகினி வடிவாகி நிற்க அரன்சேர்ந்து ஐயனை

னைப் பெற்றதும், ஊழிக்காலத்தில் இறைவன் பேருருக்கொண்டு மாயனைச் சேர்த்து பிரமனை யீன்றதும் என்க, இதுபற்றியே,

திருவரு ணெறித் தமிழ் வேதமும்,

எரியலா லுருவ மில்லை யேறலா லேற வில்லை
கரியலாற் போர்வை யில்லை காண்டகு சோதியார்க்குப்
பிரிவிலா வமரர் கூடிப் பெருந்தகைப் பிரானென் றேத்தும்
அரிலவாற் றேவி யில்லை யையனை யாற னார்க்கே. எனவும்,

கூர்ம புராணமும்,

வள்ளக் கமல வட்டவணைக் கடவுட்டக்கன் முகநோக்கி
யுள்ள வீசன் றனை மறந்து நெடுமாலீச னெனுமவர்க
ளுள்ளி லொருவர் திருநெடுமா லுமைபோ லீச னுயர்சத்தி
வெள்ளை யறிவின் மாயோனை வெகுளி லீசன் வெகுளுமால்,

இரட்டைப் புலவர் பாடலும்,

வருக்கைத் தடம்பொழி லாமாதை யையர்க்கு மாசொன் றில்லா
முருக் கொத்த மேனி யழகிய நாதர்க்கு மூச்சாவத்
திருக்கைக் கமல வாணர்க் கரிதிருத் தேவி யன்றே
லரிக்குப் பொருளுரை யீர்கெடு வீர் நும் மறிவின்மையே.
எனவுங் கூறின. 61

கொடுங்கொ றுத் துளஞ்சிவகிரிக்குவட்டின்மேலேறி
யுறுகணெங்கணும்பரப்ப லுமூங்கொருசாரின்
மறுவறுங்குராவடியினோர்மழலைபுங்கனிவாய்ச்
சிறுகுழந்தைநின் றிடுவதுதெரிதரத்தெரிந்தான்.

இ-ள். மனங் கொறு கொறுத்து, சிவகிரிச் சிகரத்தின் மேலேறி, தனது பெரிய கண்களை யெவ்விடத்துஞ் செலுத்தலும், அவ்விடத்தி னொருபக்கத்தில், குற்ற மற்ற குராமரத்தின் கீழேகுதலைச் சொற்களை



வசனிக்கின்ற கோவைப்பழம்போன்ற வாயினையுடைய சிறிய குழந்தை நிற்பது தெரியக் கண்டான். 62

எற்றன்றனான் றுமில்லாதகின் றிஃகி மைப்பூதொன்
றுற்றதொண்சிறுபிள்ளையன் றியக்கனேவுமபா
மற்றையோர் தமிலொருவனோமந்திரங்குடிலங்
கற்றவன்கொலோவிவன்வலிகாண்டுமென்றடைந்தான்.

இ-ள். எக்காலத்தும் இல்லாத ஒருவியப்பு இற்றைத் தினங்காணப் பட்டது ஆச்சரியம், இவன் சிறுபிள்ளை யன்று, இயக்கர்களுளொருவனோ அல்லது தேவர்களுள் ஒருவனோ? மந்திரம், மாயை என்னு மிவற்றைப் பயின்றவனோ? இவனது வலிமையை அறிவேமென்று போயினன்.

பிடர்பிடந்தபுன் குஞ்சியும்பெருகியகருணைக்
கடலலம்புகண் களுங்கவினொழுகியமுகமும்
வடிவு நூலுமார்புங்கையொண்கோலும்வயங்க
நெடியகோவணவுடையுடனின்றதுகண்டான்.

இ-ள். பிடரிலே தூங்கும் குடுமியும், சுரந்த அருட்கடல் ததும்புகின்ற விழிகளும், அழகு ஒழுகுகின்ற திருமுகங்களும், சிறந்த உபவீதமும், மார்பும், கையினிடத்து அழகிய தண்டாயுதமும் விளங்க, நீண்ட கோவண வுடையுடனும் நின்றதைப் பார்த்தான். 64

உருகினன்பெயர்த்தொன் றும்விண்டுரைத்திலனன்பு
பெருகிநின் றுழிப்பிறைமதிக்கண்ணியோன்றருசேய்
முருகனின் றிவன் றிறலினைமுருக்கியபின்னர்
மருவுநன்கருளுறுத்தமானல்கினன்மாதோ.

இ-ள். பிறைமதியாகிய கொழுந்தைத் தரித்த சிவ பெருமான் பெற்ற குமாரக் கடவுள், மனமுருகி, மீண்டொன்றுஞ் சொல்லாதவ

னாய், அன்புசுரந்து இடும்பனிற்பதைப் பார்த்து இவன் வலிமையைக் கெடுத்தபின்பு நன்மைபொருந்திய தமது அருளைச் செய்வேமென்று மாயையைச் செய்தனர். 65

…னோன்பணித்தகுற்றேவலுக்கிடையூ
றுறுமிடத்திலென் னுயிரினைவிடுத்துமாற்றுதுமென்
றறுதியிட்டிடும்பாசுரன்சேயைநேர்ந்தியார்நீ
நெறிபிழைத்தனையோதனிநின்றதென்னென்றான்.

இ-ள். (இங்ஙனம் குகக்கடவுளின் மாயையிற் சிமிழ்ப்புற்ற) இடும்பாசுரன், அகத்திய முனிவர் கட்டளையிட்ட குற்றேவலுக்கு இடையூறு வருமிடத்தில், எனது உயிரைவிட்டு அப்பாவத்தை நீக்குவேமென்று தீர்மானித்து, குமாரக்கடவுளை யடைந்து, நீயாவன்? வழிதவறி வந்தனையோ? தனியே நிற்பதற்குக் காரணம் யாது என்று கேட்டான். 66

உன்றதற்கெதிரிசைத்திலனகைத்தனனெங்கோன்
வன்றிறற்றயித்தியுன்மனங்கொதித்திளமைந்தா
நின்றுபுன்னகைவிளைப்பதற்கேதுவென்னிகத்தாய்
குன்றுவிட்டுநீபோதியான்கொலைத்தொழிற்றகுவன்.

இ-ள். என்று இவ்வாறு கேட்டதற்கு எமது தலைவராகிய குமாரக் கடவுள் மாறுத்தரங் கூறினாரல்லர், நகைத்து நின்றார், மிக்க வீரத்தை யுடைய இடும்பாசுரன், மனங்கொதித்து, இளஞ்சிறுவனே! இவ்விடத் திற் றனிநின்று புன்முறுவல் செய்வதற்குக் காரணம் யாது சொல்லக் கடவாய்; இம்மலையை விட்டுச் செல்வாய், யான் கொலைத்தொழிலைச் செய்யும் அசுரனென்பதை அறிதியென்றான். 67

தகுவனீகொணர்ந்திட்டவிச்சயிலநம்மிருக்கை
யிகலுனக்குளதேற்கொடுபோமெனவிசைப்ப



நகைபுரிந்தனனன்றிதுநன்றிதுசிறுவ
புகரிலாயொருபொய்மையும்புகன்றிடாப்பெரியை.

இ-ள். அசுரனே! நீ கொண்டுவந்த இம்மலைகள் நம்முடைய இருப் பிடமாகும், வலிமை நினக்கிருந்தாற் கொண்டு செல்லுதி யென்று (குமா ரக்கடவுள்) சொல்ல, இடும்பன் சிரித்து இது நன்று இது நன்று, சிறு வனே நீ குற்றமில்லாதவன், ஒரு பொய்வார்த்தையுஞ் சொல்லாத பெரி யவனாவை. 68

மஞ்சவஞ்சனைவல்லைநீயென்றுளமதித்தே
னஞ்சிடேன்றிருமாயனையரனெனவகுத்த
விஞ்சையன்றனக்கடிமையான்வெய்யவன்முன்ன
ருஞ்சுநிற்றியோவென்றனனுருமெனவுருத்தான்.

இ-ள். மைந்தனே! நீ வஞ்சனையிற் பெரியவன் என்று என்மனத் தில் மதித்தேன், அதனால் யான் பயப்படேன், இலக்குமியை யுடைய விட்டுணுவைச் சிவலிங்கப் பெருமானாகச்செய்த வித்தையில் வல்ல அகத் திய முனிவர்க்கு அடியவன் யானாகும், கொடியவனாகிய என் முன்னர் உய்ந்து நிற்பாயோ வென்று இடியைப்போலக் கோபித்தான்.

மைந்தன் - மஞ்சன் எனவும், உய்ந்து - உஞ்சு எனவும் எதுகை நோக்கிப் போலியாய் நின்றன. வல்லை - வல்லமை யுடையை. அரன்- பாசத்தை யழிப்பவன். அதனை "உயிர்க்குண் மலமொடுக்க' லாலே யுயிர்க்கு - னுயிர்க்கு மரனெனும்பே ருண்டு" என்ற சைவசமயநெறித் திருக்குறளா னுணர்க.

விட்டுணுவைச் சிவலிங்கப்பெருமானாகச் செய்த சரித்திர மாவது- அகத்தியமுனிவர் விந்தமலையின் ஆற்றலை யடக்கும்படி வரும்வழியில் கிரவுஞ்சமலைக்குச் சாபஞ்சொல்லி, வில்வலன் வாதாவி யென்னும் அசு ரரைக்கொன்று, தொண்டநாடு அடைந்து தமது கமண்டலநீரை விநாய கக்கடவுள் கவிழ்க்க, பின்னர் அவரருள் பெற்று அவ்விடத்தி னின்றும் நீங்கித் திருக்குற்றாலஞ் சார்ந்து தார் ஆங்குத் திருச்சந்நிதி முற்றம் என்று

ஒருதல மூனது. பிராமணர்களோ விபூதியை நீக்கிக், கோபிச் சந்தனத்தையே உண்மைக்குறியென நம்பியிட்டு முன்னர்ச்செய்த பவத்தினாலே சிவனையும் அடியாரையும் வெறுத்துத் திருமாலினையே கடவுளாக் கொண்டிருந்தனர். விபூதிருத்திராக்கங்களை யணிந்த சிவனடியாராம் அகத்திய முனிவரைக் கண்டு, பகைவரைப்போல நிந்தித்து முகநோக்காரா யிருந்த தன்மையையறிந்து, முனிவர் மாயவன் உடைய ஆலய வீதிவழியாகச் சென்றார். அங்கேயுள்ள குரூர வைணவர்கள் யார்த்து மிக்க கோபங்கொண்டு முனிவரை மறித்து, நீகோபிச் சந்தனம் துளசிமணியாகிய விட்டுணுவின் முத்திரைகளை விடுத்து, விபூதிருத்திராக்கமாகிய பிச்சனடையாளங்களைத் தரித்துள்ளாய். ஆதலால் இவ்வீதிக்கண் வாராதகலுதி. வருவையே லுயிரைவாங்குவேமென்று இடிபோல ஒன்றுசேர்ந்து கூறினர். அகத்தியமுனிவர் அவ்விடத்தை விட்டு நீங்கி வைணவாது .குறும்பினை நீக்கி 'யுண்மையுணர்த்தத் திருவுளங்கொண்டு * கோபிச் சந்தனம் துளசிமணியிவை தரித்துப்பாகவதவுருவைத் தாங்கி, கோவிந்த! கோவிந்த என்று கூவிச்சென்றார் வைணவர் கேட்டுப் பித்தனடியனைக் கண்ட குற்றம் நீங்க, பெருமாளின் றூசனைத் தரிசிக்கப் பெற்றேமென்று மனம

* முன்னர்க்காலத்து வைணவர்க்குத் திருமண் தாரணம் இல்லை. உடையவர் என்னும் இராமாநுசர் காலத்திற்றான் மண் ஏற்பட்டது என்றறிக. அதன்பின்னர்த்தான் வடகலை நாமம், தென்கலைநாமம். ஸ்ரீ சூர்ணம் என்னுங் குங்குமநாமம், அரித்திராசூர்ணம் என்னும் மஞ்சணாமம் சுவேதமிருத்து என்னும் வெள்ளைநாமம் ஏற்பட்டதென்க. இவைகளுள் ஒன்றாவது வேதத்திற் கூறப்பட்டில். இவை நவீனமென்பதை "சைவ பூஷணசந்திரிகை" என்னும் நூலிற் றெளிவாகக் காட்டியுள்ளாம். ஆங்குக் கண்டுணர்க.



கிழ்ச்சி கொண்டு முன்வந்து உபசரிப்ப, முனிவர் நாரணனைப் பூசிக்க வந்தேமென்ன. வைணவர் பூசைத் திரவியங்கொண்டு வந்தனர். அகத்தியர் பூசைசெய்யச்சென்று.

அறுகு மதி நதி புனையுஞ் செஞ்சடையெம்
பெருமானை யகத்துட் கொண்டு
சிறுகு முரு வுடைய முனி நாரணனார்
திருமுடிமேற் செங்கை யோச்சிக்
குறுகுகுறு கென்விருத்தி யொள்ளாக்கிற்
புனைபாவைக் கோல மீது
மறுக்தழ லூற்றென்னக் குழைவித்தோர்
சிவலிங்க வடிவஞ் செய்தான்.

என்ற கந்தபுராணத் திருவிருத்தப்படி, நாரணன் முடியில் தம் கையை வைத்துக் குறு குறுகு என்று அரக்கிற் செய்யப் பட்ட கோலம் போலச் சிவலிங்கப் பெருமானாகச் செய்தார், அவ்வாறு ஆக்கியது மன்றிச் சிவபெருமானது மந்திரங்களைச் சொல்லியு மருச்சித்தார். வைணவர்கள் இவன் பெரிய மாயஞ்செய்தான். இவனைப்பிடித்து வதையுங்கள் என்று வளைந்தார். முனிவர் கோபத் தீயைவிட அதற்காற்றாது எவ்விடத்துஞ் சிதறியோடினர் இவ்வாறு நாரணனுருவத்தைச் சிவமாக்கிய பெருவன்மை யுடையார் அகத்தியமுனிவர் என்பார் "திருமாயனை யானென வகுத்த விஞ்சையன்" என்றார். 69

பிசைந்தகையினனெயிறுமென் றுறப்புகப்பேழ்வா
யசைந்தசென் னியனனலுமிழ்தீக்கணனடுபோர்க்
கிசைந்தநெஞ்சினன்குமரனென் றறிவ்ரோவெழுந்து
பசைந்தபூங்கூரவடியினின்முடிவுறப்பாய்ந்தான்.

இ-ள். ஒன்றோடொன்று பிசையப்பட்ட கையினை யுடையவனாகியும், கடிக்கும் பற்களை யுடையவனையும் மிகவும் பெருத்த வாயையும்

அசைகின்ற தலையையும் உடையவனும், அக்கினிப் பொறியைச் சிந்துகின்ற கண்களை யுடையவனாகியும், கொல்லுகின்ற போர் செய்தற்குச் சம்மதித்த மனத்தனாகியும் (இடும்பனானவன்) எழுந்து, குமாரக்கடவுளென்று அறிவானோ, பசிய புட்பங்களையுடைய குராமரத்தடியிலே அழியும்படி பாய்ந்தான். 70

நிலமதிர்ந்திடவதிர்ந்தறநெருங்கியகாலை
வலமிகுஞ்சுடர்வேல்கொலோகோல்கொலோமற்றைச்
சிலதடிந்தனவோதெரிந்திலனிறலிடும்ப
னலறிவீழ்ந்தனனசனிபோலிழந்தனனாவி.

இ-ள். பூமியசையும்படி ஆர்ப்பரித்து மிகச்சமீபமாக நெருங்கிய காலத்து வெற்றிமிக்க ஒளிபொருந்திய வேலாயுதமோ, தண்டாயுதமோ? மற்றையன வெவையோ கொன்றதை யறியேம், வலிமையுள்ள இடும்பன் அலறி இடிபோல விழுந்தனன், விழுந்து உயிரை விட்டான். 71

இருந்தநாகமுந்தண்டமுமெழுந்தனவிருநீ
ரருந்துமாமுனிக்குற்றவாறறைந்தனதத்தம்
பொருந்திருக்கையிற்புகுந்தனபொன்றுதானவன்பாற்
றிருந்துவேளருள்புரிந்தவர்செப்புகின்றனமால்.

இ-ள். அவ்விடத்து இருந்த பாம்புகளும் பிரமதண்டமு மெழுந்து சென்று, பெரியநீரையுடைய சமுத்திரத்தைக் குடித்த அகத்திய முனிவர்க்கு நிகழ்ந்தவைகளைச் சொல்லித் தாங்கள் தாங்களிருக்கும் இடங்களுக்குச் சென்றன, இறந்த இடும்பாசுரனிடத்தில் திருத்தமுடைய குமாரக்கடவுள் திருவருள்செய்த வரலாற்றைச் சொல்கின்றேம் என்றார் சூத முனிவர். 72

உலம்பெருந்தடந்தோளிடும்பாசுரனுயிர்பூஞ்
சிலம்பில்வீழொலிவாமதேவனுஞ்செழுந்தவத்தோ



ரிலம்புகுந்தநீள்வனத்திடைநிலைத்தபேரிடும்பி
புலம்புமாறுகேட்டெழுந்தனள்பொருக்கெனப்போந்தாள்.

இ-ள். திரண்ட கல்லினை யொத்த பெரிய புயங்களையுடைய இடும்பாசுரன் தனது உயிரானது நீங்க, பொலிவாகிய மலையின்மேல் விழுந்த ஒலியை, வாமதேவர் என்னு முனிவரது ஆச்சிரமமிருந்த நீண்ட காட்டினிடத்து நிலைபெற்றிருந்த இடும்பி யென்பாள் தன்செவிப்புலத்தாலறிந்து புலம்பும்படியெழுந்து விரைவிற்சென்றாள். 73

ஒலியெழுந்தவந்நெறியிடைப்படர்ந்தனளோடிச்
சலிலவேணிபூதரத்தினோர்தாரையிற்சார்ந்து
வலிதொலைந்துகாதலன்றனிமாய்ந்ததுகாணாப்
பொலிவழிந்துயிர்போயினளெனப்புலர்ந்தனளால்.

இ-ள். ஒலித்த அந்த வழியினிடமாகச்சென்று ஓடி, சிவகிரியி னொருபக்கத்திற்போய், வலிமையழிந்து, தனது நாயகனாகிய இடும்பன் தனியே இறந்திருத்தலைப் பார்த்துப் பொலிவுகெட்டு உயிர்நீங்கப் பெற்றாள்போல வாடினாள். 74

நெடிதுயிர்த்துவேரற்றதோர்நீள்பெருங்கரிய
கொடிசரிந்துகீழ்விழுந்தெனக்குழைந்தனள்கொழுங்கண்
வடிவுமாறநீர்வெள்ளத்துளாழ்ந்தனண்மலர்க்கைத்
தொடிமுரிந்திடப்புடைத்தனடுணைமுலைவருந்த.

இ-ள். பெருமூச்சுவிட்டு, வேரற்ற ஒருபெரிய கொடியானது சரிந்து கீழேவிழுந்தாற்போல விழுந்தாள், கொழுமையாகிய தனது கண்கள் உருவமாற நீர்வெள்ளத்துள் முழுகினள், மலர்போலும் கைகளினால் வளையல்கள் முரியவும், இருதனங்கள் வருந்தவும் (மார்பினிடத்திலே) அடித்தாள். 75

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மாற்றலர்மாக்கரிகள்வென்றவயப்புலியேமலயமா
முனிவழாமை
யேற்றபணிபுரியுமுனக்கித்தனையோபலித்தபய
னிகல்வெங்கானி
லாற்றமருந்தவமுடையையடியேனுக்கொருதுணையா
ரந்தோவந்தோ
கூற்றுவனுமுயிர்பருகக்குறுகினனோநின்வலுவுங்
குறுகிற்றேயோ.

இ-ள். பகைவராகிய பெரிய யானைகளை யெல்லாம் வென்றசிங்கமே, அகத்தியமுனிவரது சொற்றவறாது குற்றேவலைச்செய்த வுனக்கு விளைந்த பிரயோசனமிவ்வளவோ? மாறுபட்டகொடிய காட்டினிடத்திற் செய்த அரியதவத்தை யுடையவனே! அடியவளாகிய எனக்கு இனி, துணையாகவுள்ளவர்யாவர், ஐயோ! ஐயோ! யமனும் உன்னுடைய உயிரை யுண்ணும்படி அடைந்தனனே, உன்னுடைய வலியையும் அழிந்ததே.

யாரிதுசெய்தாரவுணர்குரவனெனவிறைஞ்சிடுவ
ரிகலொன்றாற்றார்
தார்கெழுபன்னிருதோட்சேய்சார்பினின்றாய்தருமத்தின்
றலைமைநீங்காய்
சூர்முதலோர்விளிந்தநாட்பறந்தலையினீயுமுயிர்
துறந்தால்யானுஞ்
சீர்விரவுதகுவியரோடிறந்தவரோடிருந்துனையுஞ்
சேர்ந்திடேனோ.



இ-ள். எவர் இச்செய்கையைச் செய்தார், அசுரர்களோ தம்முடைய குருவென்று நின்னை வணங்குவாரன்றி மாறுபாடொன்றுஞ் செய்யமாட்டார், மாலையைத்தரித்த பன்னிரு திருப்புயங்களையுடைய கந்தக்கடவுளின் அடிமைத்தன்மையி னின்றனையே, அறவழியினின்றுஞ் சிறிது மகலாய், சூரபன்மன் முதலாயினோர் இறந்தகாலத்தில் யுத்தகளத்தில் நீயும் உயிரை விடுவாயாயின், நானுஞ் சிறப்புமிகுந்த பதுமகோமளை முதலிய அசுரப்பெண்களுடன் இறந்து அவருடனிருந்து உன்னையுஞ் சேர்ந்திருப்பேனன்றோ. 77

தானவர்கோன்பயந்தபடைத்தொழிலினுற்றலையாய
துணர்ந்துதூது
வானவர்கோன்பயில்வதற்குவிடுத்தனனோமறுத்துபுகுந்
தனையோவல்லாற்
கோனகரிலவுணர்குடிபுகுந்ததுகண்டடைந்தனையோ
கொடியைபோலும்
யானளியளொருதமியள்பிரிந்திரேனெனவறிந்து
மிதுசெய்தாயே.

இ-ள். அசுரர்தலைவனாகிய சூரபன்மன்பெற்ற ஆயுத வித்தைத் தொழிலினாலே தலைமையாயிருப்பதையறிந்து, இந்திரனானவன் தானும் அவ்வித்தையைப் பழகுவதற்குத் தூதுவிட்டு அழைத்தானோ, அதனை மறுக்கமுடியாமற் சென்றனையோ, அதுவல்லாமல் சுவர்க்கலோகத்தில் அசுரர்கள் குடியேறியதையறிந்து நீயுமங்குச் சென்றனையோ, நீகொடுமையையுடையை போலும், எனெனில், அன்புடையாளாகியயான் ஒரு தனித்தவளாய்ப் பிரிந்திருக்க மாட்டேனென்பதை யறிந்திருந்து மிச் செய்கையைச் செய்தனையே. 78

உன்னினைவெவ்வாறேயோயாம்போதுமுழியிவளு
முழன்றுவாடிப்
பின்னுலையத்தகுமோபெண்பிறப்பன்றோவறிவுபெறும்
பேதைத்தன்றோ
பன்னிடிலென்றகன்றனையேபங்கயத்தோனுலகினிடைப்
படர்ந்தாயேனு
மன்னுயிர்நீயுடல்யானின்பிரிவெங்கேயங்கோடி
வருகின்றேனால்.

இ-ள். உன்னுடைய எண்ணம் எவ்வாறிருந்ததோ யானறிகிலேன், நாம்போவேம், போகும்போது இவளும்வருந்தி வாட்டமுற்றுப் பின்னர் வருந்தத்தகுமோ பெண்பிறப்பல்லவோ, அதனால் அறிவுஞ்சொல்லு மிடத்து வெண்மையான மூடத்தன்மையேயென்றோ என்னை விட்டு நீங்கினாய், நீபிரமனது உலகத்தை யடைந்தாயானாலும், நிலைபெற்ற உயிர் நீ, யான் நினது உடலாகும், ஆதலால் நீபிரிந்து சென்றவிடமெங் கே, அங்கு யானும் ஓடிவருகின்றேன். 79

இவ்வாறுபுலம்புமிவள்செவியில்விசும்பெழுமுழவ
மிரங்கல்கேளா
வவ்வாறுளதிசயமுற்றயலகன்றாளதுபோழ்தி
னமரர்போற்றச்
செவ்வானமேனியும்வேற்செங்கையுந்தோன்றத்தோன்றுஞ்
சேயைக்காணாச்
சைவாகமத்தெளிவேதடுத்தாளவந்தனையோ
வென்றுதாழ்ந்தாள்.

இ-ள். இங்ஙனம் இரங்குகின்ற இடும்பியென்பவள் காதினிடத்தே ஆகாயத்தினின்றுந் தோன்றும் முரசவாத்தியத்தி னொலியைக்கேட்டு,



அதற்குள் மனத்தி லதிசயங்கொண்டு, பக்கத்திற்சென்றாள் அதுகாலத் தில், தேவர்கள் துதிக்க, செக்கர் வானம்போன்ற திருமேனியும், வேலா யுதத்தைத்தரித்த சிவந்தகையும் விளங்க, வெளிப்பட்ட கந்தக்கடவுளைக் கண்டு, சைவாகமங்களின் தெளிவுப்பொருளா யிருப்பவரே, அடியே னைத் தடுத்தடிமைக்கொள்ள எழுந்தருளினையோ என்று வணங்கினாள்.

வைணவ ஆகமம், புத்தாகமம் முதலியனவும் உளவாகலின், அவற் றை விலக்கற்குச் சைவம் என்னும் பிறிதினியையு நீக்கியவிசேடணம் வைத்துக்கூறினர். சைவாகமங்கள் இருபத்தெட்டாகும். அவையாவன—

காமிகம், யோகசம், சிந்தியம், காரணம். அசிதம், தீப்தம், சூக்கு மம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம் புவம், ஆக்கினேயம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞா னம், முகவிம்பம், புரோத்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோ த்தமம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என்பனவாம் இவற்றின்பிரிவு களும், கிரந்தஎண்களும் கேட்டவர் பெயர்களும்.

காமிகாகமம் ! தந்திராவதாரப்படலத்தில்,

காமிகம் ப்ரண வாக்யஸ்ய பரார்த்தக் கிரந்தம் ஸங்கியா!
ப்ரணவாத் திரிகல: ப்ராப்த: த்ரிகலாச்ச ததோ ஹர: !!
திரயச் சைவோப் பேதாஸ்ஸியர் வக்திராரம் பைரவோத்தரம் !
நார சிங் கஞ்ச விப் ரேக்திரா: கத்யதே காமிகத்ரயம் !!

எனவரூஉம் சுலோகங்களால் அறிக. இவ்வாகமங்கள் இருபத்தெட் டும் உபதேசித்த காரணத்தினாற் சிவபேதம் எனவும், உருத்திரபேதம் எனவும் இருவகைப்படும். அன்றியும், இவைசிவபெருமானுக்கு அங்கங்க ளாகக் கூறப் பட்டன. எங்ஙனமெனில்,

| | | | |
|---|---|---|---|
| 1. | காமிகம் | இருதிரு வடிகள் | ஆகவும், |
| 2. | யோகசம் | கணைக் கால்கள் | ,, |
| 3. | சிந்தியம் | திருவடி விரல்கள் | ,, |
| 4. | காரணம் | கெண்டைக்கால்கள் | ,, |
| 5. | அசிதம் | முழங்கால்கள் | ,, |
| 6. | தீப்தம் | தொடைகள் | ,, |
| 7. | சூக்குமம் | குகியத்தானம் | ,, |
| 8. | சகச்சிரம் | திருவரை | ,, |
| 9. | அஞ்சுமான் | திருமுதுகு | ,, |
| 10. | சுப்பிரபேதம் | திருவுந்தி | ,, |
| 11. | விசயம் | வயிறு | ,, |
| 12. | நிச்சுவாசம் | இருதயம் | ,, |
| 13. | சுவாயம்புவம் | இருதனங்கள் | ,, |
| 14. | அனலம் (ஆக்கினேயம்) | திருக்கண்கள் | ,, |
| 15. | வீரம் | திருக்கண்டம் | ,, |
| 16. | இரௌரவம் | செவிகள் | ,, |
| 17. | மகுடம | கிரீடம் | ,, |
| 18. | விமலம் | திருக்கரங்கள் | ,, |
| 19. | சந்திரஞானம் | மார்பு | ,, |
| 20. | விம்பம் | திருமுகம் | ,, |
| 21. | புரோற்கிதம் | திருநா | ,, |
| 22. | இலளிதம் | கபோலங்கள் | ,, |
| 23. | சித்தம் | நெற்றி | ,, |
| 24. | சந்தானம் | குண்டலம் | ,, |



| | | | |
|---|---|---|---|
| 25. | சர்வோத்தம் | உபவீதம் | ஆகவும், |
| 26. | பாரமேசுரம் | ஆரம் | ,, |
| 27. | கிரணம் காலோத்தரம் | இரத்தினாபரணங்கள் | ,, |
| | | இருபத்திரண்டு | ,, |
| | | நாடிகள் | ,, |
| | | பிராணவாயு | ,, |

28. வாதுளம் நைவேத்தியம் ஆகவுஞ் சொல்லப்பட்டன. அதற்கு மேற்கோள் வருமாறு:—

காமிக ஆகமம்-தந்திராவதாரப் படலம்.

காமிகம் பாத யுக்மம் ஸியாத் யோகஜம் குல்ப மேவச !
சிந்தியம் பாதாங் குலி: ப்ரோக்த: காரணம் ஜம்கா பவேத் :!
அஜிதம் ஜாநு தேசம் ஸியாத் தீத்த மூருப்ர தேசகம் !
சூக்ஷமந்து குக்ய மேவம் ஸியாத் சகஸ்ரம் கடிதேசகம் !! 94
அம்சுமாந் ஸியாத் ப்ருஷ்ட தலம் சுப்ரபேதந்து நாபிகம்
விஜயம் குக்ஷிதேசம் ஸியாந் நிச்வாசம் ஹ்ருதம் பவேத் !! 95
ஸ்வாயம்புவஸ் தனௌ த்வௌது அநலம் நேத்ர மேவச !
வீரம் கண்ட பரதேசஸ்து ரௌரவம் ச்ரோத்திர மேவச !! 96
மகுடம் மாகுடம் தத்ர மங்கப் பிரத் யங்க மேவச !
பாகுது விமலம் ப்ரோக்தம் சந்த்ரஜ் ஞான மூரஸ்த தலம் !! 97
பிம்ப தந்திரம் சுவதநம் புரோத்கீதம் ஜிக்வசம்ஜ் ஞிதம் !
லளிதம் ஸியாத் கபோலந்து சித்தந்த்வை லலாடகம் !! 98
எனவரூஉஞ் சுலோகங்களால் அறிக. 80,

விண்ணவர்தஞ்சிறைமீட்கப்போந்தனைபோசூரனுடல்
வீட்டிச்சேவு
றண்ணமயிலெனவுவந்துதம்பிபரைவாட்டிவெள்ளிச்
சயிலநல்கிப்

பண்ணவராகப்பிறரைமுருக்கிமைந்தர்பழுதிழைப்பின்
முனிந்துமீள
மண்ணிலருள்புரிதாதைபோற்கருணைதரவன்றோ
வந்ததெந்தாய்.

இ-ள். தேவர்களுடைய சிறை மீட்கும்படி வந்தனையோ, அன்று பின்னர்வந்த தெற்றுக்கு எனில், சூரபன்மனுடைய சரீரத்தை, அழித்துச் சேவலாகவும்; குளிர்ந்த அழகிய மயிலாகவும் விரும்பிக்கொண்டு, அவனது துணைவர்களாகிய சிங்கமுகன் தாரகன் என்பவரைக்கொண்டு, அவர்க்குக் கயிலைமலையை யாட்சியாகக்கொடுத்து, அவர்களுடைய சேனைகளையும் தேவராகும்படிகொன்று, புத்திரர்கள் குற்றஞ் செய்தாற் கோபித்து, பின்னரும் பூமியின்கண் அருளைச்செய்கின்ற தந்தையைப்போல அருளைக் கொடுத்தற்காக வன்றோ எமது தந்தைபோல்வாய் நீயெழுந்தருளியது. 81

இன்றுதடுத்தாண்டனையென்கொண்கனையென்றாலுமிரு
நிலத்தில்வானி
லுன்றனடிச்சேரியரிற்றமியளுமோர்தொழும்பியன்றோ
வும்பர்கோவே
மின்றவழுமங்கலியப்பிச்சையிடவேண்டுமென
விழிநீர்சிந்தி
முன்றொழுதாடனக்குவிழிக்கடையளித்தான்முடிந்தானு
மெழுந்தான்மன்னோ.

இ-ள். இற்றைத்தினத்தில் தடுத்து எனது நாயகனை அடிமைக்கொண்டாய் என்றாலும், பெரியபூமியிலும் ஆகாயத்திலும் உள்ளதேவரீரது அடிக்குடிலாருள் தனித்தவளாகியயானும் அடியவளன்றோ, தேவநாயகனே! ஒளிவிளங்கிய திருமங்கலியப் பிச்சை கொடுத்தருள வேண்டு



மென்று கண்களினின்றும் நீரைப் பொழிந்து நின்றனள், அவளுக்குக் குமாரப்பெருமான் தமது திருக்கடைக்கண் செய்தருளினர் இறந்த இடும்பனு முயிர்பெற்று எழுந்தான். 82

கண்படைகூர்ந்துணர்ந்தெழுந்தாங்கெழுந்தனனைம்புலர்திநெறி
கடந்ததூய
பண்படையுஞானநெறியடைந்தபரவசனாகிப்
படர்விண்ணோரு
மொண்படையானீன்றமலரோனுமிறைஞ்சிடுங்குரவி
னுவந்துவைகுந்
திண்படைவேற்குழகனெதிர்தேமலர்தூய்த்துதிபலவுஞ்
செப்பலுற்றான்.

இ-ள். நித்திரைசெய் தெழுந்தவனைப் போல,இடும்பனு மெழுந்து, ஐம்புலவழிமுதலாய தீயவைகளை வென்ற பரிசுத்த மாகிய குணத்தையடைந்த ஞானமார்க்கத்தை யடைந்த பரவச முடையனாய், கூடவந்ததேவர்களும், அழகிய ஐந்தாயுதங்களை யுடைய விட்டுணுவும், அவர்பெற்ற பிரமதேவரும் வணங்குகின்ற, குராமரத்து நிழலின்கண் மகிழ்வுகொண்டு எழுந்தருளி யிருக்கும், திண்ணியவேற்படையைத் தரித்த குமாரக்கடவுளின் முன்னர்த் தேன்பொருந்திய புட்பங்களைத் தூவிப் பலதுதிகளையுஞ் சொல்லத்தொடங்கினர். 83

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வானந்துதேவர் தெரிதந்தவேத மறையின்கணீறில்பொ
ருளாய், ஞானத்துயோக ரிதயங்களாய நள்ளினந்தவாதவொளிநீ,
யூனந்தியோனி தொறுநின்றுலாவி யுழல்கின்ற தீயவினை
யே, னீனன்பொலாத கொடியன்கணுடை லெளிதோ நினடவி
றையே.

இ-ள். ஆகாயத்தில் வளர்கின்ற தேவர்கள் அறிந்த வேத உபநிடதங்களின் முடிந்த அழியாத சித்தாந்தப் பொருளாகி, நான் என்னும் அகங்காரங் கெட்ட சிவயோகிகளது மனமென்கின்ற தாமரை மலர்களை விட்டு நீங்காத சோதிவடிவாகிய தேவரீர் ஆகும் தசைவளர்ந்த யோனிகள் தோறும் பொருந்தி வருந்துகின்ற கொடியவினையை யுடையவனும் இழிந்தோனும், பொல்லாத கொடியவனும் ஆகிய யான் தேவரீரது திருவிளையாடலுள் ஓரணுவையாயினும் அறித லெளியதோ? 84

மழையூடுநீடுவரையூடுவேதவழியூடுகானல்வனமூ
டழலூடுகூடுதவவாணர்தேடவறியாதஞானவொளிநீ
பழியூடுகாமவழியூடுபேசுபடிறூடுநீடுநரகூ
டிழிபாவியாவிகழிதீயனுடைவெளிதோநினுடைவிளையே.

இ-ள். மழையினிடத்தும் நீண்ட மலைகளினிடத்தும் வேதமார்க்கத்தினிடத்தும், கழிகரைச் சோலையினிடத்தும், அக்கினி மத்தியினும் சஞ்சரிக்கின்ற தவத்தையுடைய முனிவர்களுந் தேடியும் அறியாதஞானப் பிழம்பாயிருப்பவர் தேவரே யாகும், பழியினிடத்தும் காமவழியினிடத்துத் பேசுகின்ற வஞ்சகத்துடன் மிக்க நரகத்தினிடத்தும், இறங்கிநிற்கும் பாவியும், உயிர்விடுகின்ற கொடியவனும் ஆகிய யான் தேவரீரது திருவிளையாட்டுள் ஓர் இலேசந் தானும் அறிதல் எளியதோ? 85

பூதங்கடந்துகரணங்கடந்துபொறியுங்கடந்துகடவா
நாதங்கடந்தவெளியூடுநின்றுநடனங்கடந்தவொளிநீ
வேதங்கடந்தவிமையோருமாருமிரணங்கிடந்துமெலிய
வேதங்கடந்தகொடியேன்கணுடலெளிதோநினுடைவிளையே.

இ-ள். பூதங்களைக் கடந்தும், அந்தக் கரணங்களைக் கடந்தும் ஐந்து இந்திரியங்களையுந் தாண்டி அப்பாற் சென்றும், முடிவான நாதத்துவத்தையுங் கடந்தும், பரவெளியின்கணின்று திருநடனத்தைச் செய்கின்ற



பரஞ்சோதி தேவரீராகும், வேதத்துதிகளைச் சொல்லித் துதிக்கும் தேவர்களும் மற்றையோரும் புண்பட்டு வருந்த, சிறுமையை யுடைய குற்றங்களைச்செய்த கொடியவனாகிய யான் தேவரீரது திருவிளையாடலுள் ஓர் இலேசந்தானும் கண்டுணர வெளியதோ.

பூதமாவன - பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்.

கரணமாவன - மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன.

இவற்றுள் சித்தத்தைப் புத்தியுள் அடக்கி மூன்றென்று சர்வாத்மசம்புசிவாசாரிய சுவாமிகளும், இவைகளோடு தொழில் வேறுபாடு பற்றி உள்ளம் என்னும் ஒன்றனைச்சேர்த்து ஐந்தென்று திருச்சிற்றம்பல நாடிகள் முதலாயினோருங் கூறுப. அவை யாய்வுழி யொன்றற்கொன்று முரணு மென்க.

பொறி எனப் பொதுவிற் கூறினமையால், ஞானேந்திரியம் கன்மேந்திரியம் என்னும் இரண்டுங்கொள்க.

ஞானேந்திரியமாவன - மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன

இவற்றை முறையே துவக்கு, சிங்குவை, சட்சு, ஆக்கிராணம் சோத்திரம் என்பர் வடநூலார்.

கன்மேந்திரியமாவன - வாக்கு, பாதம், பாணி. பாயுரு, உபத்தம் என்னும் ஐந்துமாம்.

நாதத்துவமாவது முப்பத்தாறுந் தத்துவமாகிய சிவதத்துவத்தை அதனியல்லைச் சிவஞான சித்தியார் முதலிய சித்தாந்த நூல்களிற் காண்க.

"இமையோர்க்கு மிரணங்கிடைத்தல்" எதனால் எனின், தான் குமாரக்கடவுளை யுணராமையால் என்க.

பூதங்க ளல்ல பொறியல்ல வேறு புலனல்ல
வுள்ள மதியின்
பேதங்க ளல்ல விவை யன்றி நின்ற பிறிதல்ல
வென்று பெருநூல்
வேதங் கிடந்து தடுமாறும் வஞ்ச வெளி யென்ப
கூடன் மறுகிற்
பாதங்க ளேவ வளையிந் தனுதி பகர்வாரை
யாயு மவரே.

என்ற திருவிளையாடற் புராணக் கருத்து மிதுவே. 86

ஒன்றன்றிரண்டுபொருளன்றுமூன்றினுருவன்றுநான்குகரண
மன்றைந்துபூதமறையங்கமாறுபொழிலேழெண்யோகமுடனீண்
ழின்றிகழ்ஞானவடிவென்பதன்றுவெளியன்றுமேலையொளியன்
றென்றென்றுநின்றபொருணீகளுடலெளிதோநினுடைவிளையே.

இ-ள். ஒன்றுமல்ல, இரண்டுமல்ல, மூன்றுபொருளு மல்லாமல் நான்கு காரணங்களுமல்ல, ஐந்து பூதங்கள், ஆறு அங்கங்கள், ஏழு உலகங்கள், எண்வகை யோகங்கள் என்னு மிவற்றுடன் நீண்ட ஒளி கொண்ட அறிவுருவுமல்ல, பரவெளியுமன்று, பரவொளியுமன்று, என்று என்று எண்ணக் கிடந்த பரம்பொருள் தேவரீரேயாகும், நுமது திருவிளை யாடலுள் ஓர் சிறிது தானும் யான் கண்டுணர வெளியதோ.

எளிதோ என்றதன்க ணுள்ள ஓகாரம் எதிர்மறைப் பொருட்டு அருமை யென்ற வாறு. இரண்டு பொருள் - சத்தி, சிவம். மூன்றுரு என்றதற்கு—அருவம், அருவுருவம், உருவம் என்னலு மொன்று.

வேதாங்கம் ஆறு : சிக்ஷை, வியாகரணம், கற்பம், நிருத்தம் சோதிடம், சந்தோ விசிதி என்பன.

எழுபொழில் - கீழேழுலகம், மேலேழுலகம், நாவலந் தீவுமுதலிய எழுவகைத் தீவென்று உரைத்தல் அத்துணைச் சிறப்பன்று.



எண்வகையோகம்—இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி யென்பன, இவற்றின் விரிவெல்லாம் சூத சங்கிதையினும், பாதஞ் சலத்தும், சிவாகமங்களினுந் தெற்றெனக் காண்க.

வெளி-சுத்தமாயை ஒளி- மாயாதீதச் சோதி வடிவு. இச் செய்யுட்கண் ஒன்று முதல் எட்டுவரையும் கூறினமையான் மாலையணியும் பூரணணியும் வந்தவாறு கண்டு கொள்க இங்ஙனமே உள்ள வேறோர் பாடலும் தருகின்றாம்.

கூர்மபுராணம் - விசுவரூப அத்தியாயம்.

இதுவன்று நின்ற திதுவன்று நின்ற தென வோத
லன்றி மறையு
மிதுவென் றுரைக்க முடியாது நின்ற வெறிதும்மு
வெய்ய மழுவோய்
பதியாகு நின்னை யடைகின்ற தூய பசுமாயை
தீர வருள்வாய்
முதலீற தின்றி யுறை வோய் நின் மாயை யெவரே கொன்
முற்று மறிவார். 87

அறிவாலறிந்தவறிவுங்கடந்தவறிவாலறிந்தவறிவிற்
பிறியாதிருந்துதுயில்வோர்முகந்துபிரியாதருந்துநறைநீ
பொறிவாயிலைந்துநெறியோடுமன்றுபுலையூனருந்துமவனே
வெறியாதபுன்கணுடையேனாடலெளிதோநினுடைவிளையே.

இ-ள். பசுஞான பாசஞானங்களா லுணர்ந்த தற்போத வறிவையுங் கடந்த பதிஞானமாகிய உண்மையறிவினால் உணர்ந்த அருளுருவினிடத்து நீங்காதிருந்து நிட்டை கூடுகின்ற சிவஞானிகள் கொண்டு இடைவிடாது பருகும் ஆனந்தத் தேனாயிருப்பவர் தேவரீரேயாகும். பொறியின் பாற்படும் ஐந்து இந்திரியங்களின் வழியிற் சென்று வருந்தி, இழிந்த

தசையை யுண்ணுகின்றவனும், துன்பங்களை நீக்காத இழிவை யுடையவனும் ஆகிய யான் தேவரீரது திருவிளையாடலுள் ஓரிறையளவைத்தானும் கண்டுணர்தல் எளிதோ.

இறை—என்றது சிறிது என்னும் பொருளில் வந்தது. "பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க நெறிநின்றார் நீடுவாழ்வார்" என்று திருக்குறள் இருத்தலால், "பொறிவாயிலைந்து நெறியோடுழன்று" என்றார். ஐந்து நெறியாவன - காண்டல், உண்டல், உறுதல், உயிர்த்தல், கேட்டல் என்னும் பஞ்சப்புலன் களுமாம்.

பாச ஞானத்தாலும், பசுஞானத்தாலும் குகப்பெருமானை யறிதல் கூடாதென்பதற்கு மேற்கோள்.

சிவப்பிரகாசம் - பத்தாஞ் சூத்திரம்.

பாசமா ஞானத் தாலும் படர்பசு ஞானத் தாலும்
மீசனை யறிய வொண்ணா திறையருள் ஞான நண்ணித்
தேசுறு மதனான் முன்னைச் சிற்றறி வொழிந்து சேர்ந்து
நேசமோ டியைப ரத்து நிற்பது ஞான நிட்டை.

பாச ஞானம், பசு ஞானம் இத்தகைய வென்பதை, "வேதசாத்திர மிருதி புராண கலைஞானம்," என வரூஉம் சிவஞான சித்தியார்ச் செய்யுளா னறிக. 88

கோச்சகக் கலிப்பா.

ஞானகுண னுடனிவ்வா றேத்திநின் றிடுமெல்லை
யீனவினை தொலைந்தோய்கேள் யாதுமீகுதுமெனச்சேய்
தானவில்யாதுபெறுவதுதமியேன்றணவாதுன்
பானவிரமிசையேவல்பணித்திடலேபணியென்றான்.

இ-ள். ஞானகுணத்துடனே இடும்பன் இவ்வாறு துதிக்குங் காலத்தில், குற்றமுள்ள வினைகளெல்லாங் கழியப்பெற்ற இடும்பனே கேட்பாய்



எது கேட்பினுங் கொடுப்பே மென்று குமாரக் கடவுள் திருவாய் மலர்ந்தருள, சுவாமி! எளியேன் எதனைப்பெறுவது, தனித்தவனாகிய யான் நீங்காது தேவரீரது மலையினிடத்தி லிருந்து குற்றேவல் செய்யுமாறு விதிப்பதே வரமாகுமென்றான். 89

சொற்றவரங்கீயெழுந்தருளினன்சூர்ப்பகைதொலைத்தோன்
மற்றவனப்படிநின்றுமறைமுனிபாற்குறுகுதலும்
பெற்றபெரும்பேறுடையையடைந்தனையோவெனப்பேசிக்
கற்றிகள்கோலாசலமார்க்கண்டசிருங்கத்தணைந்தான்.

இ-ள். சூரபன்மனாகிய பகைவனை யழித்த கடவுள், இடும்பன் சொன்ன வரங்களைக் கொடுத்தருளி மறைந்தருளினர் இடும்பன் அந்தவிடத்தினின்றும் அகத்தியமுனிவரை யடைதலும், பெறுதற்கரிய பெரும்பேற்றைப்பெற்ற இடும்பனே, வந்தனையோ வென்றுசொல்லி, கல்லைப்போல விளங்காநின்ற மார்க்கண்டேயமலையை யடைந்தனர். 90

அங்கண்மலரிருமூன்றிராறுவதனங்களுடை
யெங்கணிருமலனையாயிரநாமத்தருச்சித்துப்
பைங்கனிலவியசத்திசிவகிரியின்பாற்சேர்ந்து
செங்கணவிடையோனைத்தேவியைவிண்மிசைநின்றே.

இ-ள். அழகிய மலர்போன்ற கண்கள் பன்னிரண்டும், திருமுகங்கள் ஆறுங்கொண்டெழுந்தருளிய எமது கடவுளாகிய குகப்பெருமானைச் சகத்திரநாமத்தால் அருச்சனைசெய்து, பசுமையாகிய ஒளி விளங்கின சத்திகிரிசிவகிரி என்னு மலைகளையடைந்து, சிவந்த கண்களையுடைய இடபவாகனராகிய சிவபெருமானையும் உமாதேவியாரையும் ஆகாயத்தின் மீது நின்று 91

சுத்தநதிப்புனல்கொடுதூமலர்கொடுசீருருத்திரங்கொண்
டொத்தகருத்தொடுபூசையியற்றியபின்குறுமுனிவன்

பத்திநிகழ்சுரனைப்பார்த்தயில்வேலோன்பணித்தபணி
யத்திரியிற்புரிமுத்திபடைவையெனவருள்புரிந்தான்.

இ-ள். சுத்தமுடைய யாற்றுநீர் கொண்டும், சிறந்த புட்பங்கள் கொண்டும், சிறப்பாகிய உருத்திரமந்திரங் கொண்டும், ஒருமைப் பட்ட மனத்துடன் அகத்திய முனிவர் பூசையைச் செய்த பின்பு, அன்பு விளங் காநின்ற இடும்பாசுரனைப் பார்த்து, கூரிய வேலாயுதத்தை யுடையகுமா ரக்கடவுள் ஏவிய ஏவலை அம்மலையின்க ணிருந்து செய்வாய், அதனால் முத்தியடைவா யென்று கூறினர். 92

ஆயமொழிபிறழாமையவுணர்கோன்சிவகிரியிற்
சேயருளும்பணிநின்றனனினிவாமதேவனென்னுந்
தூயமுனிவரன்வனத்திற்றுருவாசன்சிறுவரைமுன்
காயுமுனியடைந்ததுவுநிகழ்ந்ததுவுங்கழறுவாம்.

இ-ள். அவ்வாறான சொற்களி னின்றுந் தவறாது அசுரர்குருவாகிய இடும்பன், சிவமலையினிடத்திலே யிருந்து கந்தசுவாமி யேவிய திருப் பணிகளைச் செய்துநின்றான். இனிமேல், பரிசுத்த முடைய வாமதேவ முனிவரது வனத்திலே துருவாசர், விசுவாமித்திரரது குமாரர்களைக் கொன்ற வசிட்டமுனிவர் வந்ததுவும், அங்குநடந்த சரித்திரத்தையுஞ் சொல்வாம். 93

மலைகள் பழநியடைந்த சருக்கம் முற்றிற்று.

ஆகச்செய்யுள்—810.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

இருபத்தொன்றாவது,

# அகத்தியச் சருக்கம்.

கலி விருத்தம்.

பரிதிவின்றொடுசிவகிரியின்பாங்கரி
னிருதியந்திசையினீடியதுநீற்றொளி
வருதிருமேனியின்வாமதேவனென்
றொருதவமுனிவரனுறையுளாயது.

இ-ள். சூரியன் சஞ்சரித்தற்கிடமாய ஆகாயத்தை யளாவிய சிவகிரி யின் பக்கத்திலே, நிருதி திசையாகிய தென்மேற்குத் திசையிலுள்ளது, திருநீற்றி னொளிவிளங்குகின்ற திருமேனியையுடைய வாமதேவனென் னும் பெயரையுடைய ஒரு முனிவரது இருப்பிடமாக வுள்ளது. 1

மறைபயிலோதையும்வாசநீர்த்தடந்
துறைதொறுமாடுநர்சும்மையுஞ்சிறு
பிறையணிமௌலியெம்பிரான்பெருந்துதி
யறைகுநர்றவுமறாததவவனம்.

இ-ள். வேதங்களை யத்தியயனஞ்செய்யும் ஒலியும், மணங்கமழும் நீரையுடைய விசாலமான துறைகடோறும் நீராடுவாரது சத்தமும், சிறிய பிறைச்சந்திரனையணிந்த திருமுடியையுடைய எமது சிவபெருமானது பெரிய துதிகளைச் சொல்கின்றவாரது ஒலியும் நீங்காதது அந்தவனமாகும்.

தரித்தகுண்டிகையினர்பிடித்ததண்டினர்
விரித்தபுன்சடையினர்முடித்தவேள்விய
ரிரித்தவைம்பொறியினரில்லறத்தினைத்
திரித்தவாருமறைதெளிந்தசிந்தையர்.

இ-ள். கமண்டலத்தைத் தரித்தவர், ஏந்திய யோக தண்டத்தை யுடையவர், பரந்தசடையையுடையவர், நிறைவேற்றிய யாகத்தையுடையவர், ஐந்து இந்திரியங்களையும்வென்றவர், இல்லறத்தைவிட்டு நீங்கியவர், அரியவேதங்களை ஆராய்ந்துதெளிந்த மனத்தையுடையவர். 3

செய்யநற்றூசினர்செறிந்தசீரியர்
துய்யவெண்பல்லினர்முதலதூமறை
யையரும்வியாதனுதியரும்யாவரு
மொய்யறம்புரிந்தருண்முகிழ்ப்பவைகுவார்.

இ-ள். சிவந்த வத்திரத்தை யுடையவர், மிக்க சிறப்பையுடையவர், சுத்தமாகிய வெள்ளைப்பற்களையுடையவர், இவர்முதலாய பரிசுத்தமுள்ள வேதத்தில்வல்ல அந்தணர்களும், வியாசர்முதலாயினோரும் எல்லாரும் மிக்க தருமத்தை நடாத்தி அருள்கூடும்படி இருப்பாராயினர். 4

அப்பெருவனத்திடையறவின்மாணவர்
துப்புரவினர்மீனந்துகளில்கேள்விய
ரொப்பின்மாமுனிவரொருங்குசூழ்வர
முப்பொருளுணர்குறுமுனிவன்மேவினான்.

இ-ள். அந்தப் பெரிய வனத்தினிடத்து மிக்க இனிமையை யுடைய மாணாக்கர்களான, நல்லொழுக்கத்தை யுடையவரும், மனக்களங்க



மில்லாத கேள்வியறிவினை யுடையவரும் ஆன ஒப்பில்லாத இருடியர்கள் சேர்ந்து தம்மைச் சூழ்ந்துவர, பதிபசுபாசம் என்னும் முப்பொருள்களை யும் அறிந்த அகத்திய முனிவர்வந்தனர்.

அகத்தியரது மாணாக்கர் பன்னிருவர் - அவர் பெயர் வருமாறு— செம்பூட் சேஎய், வையாபிகர், அதங்கோட்டாசிரியர், அவிநயனார், காக்கை பாடினியார், தொல்காப்பியனார், துராலிங்கர், வாய்ப்பியர், பனம்பாரனார், கழாரம்பர், நற்றத்தர், வாமனர் இவருட்சிறந்த முதன்மாணாக்கர் திரண தூமாக்கினி முனிவர் என்னும் தொல்காப்பியனாரே. அதுவருஞ் செய்யுள்களா விளிதுவிளங்கும்.

பன்னிரு படலம்.

வீங்குகட லுடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்கு விளக்காகென
வானோ ரேத்தும் வாய்மொழிப் பல்புக
ழானாப் புலமை யகத்திய னென்னு
மருந்தவ முனிவ னாக்கிய முதனூல்
பொருந்தக் கற்றுப் புரைதப வுணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல் காப் பியன்.

புறப்பொருள் வெண்பா மாலை.

மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்
றன்பாற் றென்றமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல் காப்பியன் முதற்
பன்னிரு புலவரும்.

தொல்காப்பியம் - பொருளதிகாரம்.

கூறிய குன்றினு முதனூல் கூட்டித்
தோமின் றுணர்ந்த தொல்காப் பியன்ற
னாணையின் றமிழறிந் தோர்க்குக் கடனே.

மேற் சொல்லிய மாணுக்க ரன்றிச் சிகண்டி யென்னும் ஒருமாணுக் கருளர் என்றும், அவர் சயந்த குமாரன் காரணமாக இசைநுணுக்கம் என்னும் இசை நூலைச் செய்தாரென்றும் அடியார்க்கு நல்லார் உரைத் துளார். அது வருமாறு.

"இனித் தேவவிருடியாகிய குறுமுனிபாற் கேட்டமாணுக்கர், பன் னிருவருட், சிகண்டி யென்னும் அருந்தவமுனி, இடைச்சங்கத்து அநா குல னென்னும் தெய்வப் பாண்டியன் தேரோடு விசும்புசெல்வோன் திலோத்தமை யென்னுந் தெய்வமகளைக்கண்டு, தேரிற்கூடினவிடத்துச் சனித்தானைத்தேவரும் முனிவரும் சரியாகிற்கத் தோன்றினமையிற் சாரகுமாரனென அப்பெயர்பெற்ற குமான் இசையறிதற்குச் செய்த இசைநுணுக்கமும்" என்பதாம்.

"பலகலை யாகம வேதம்யாவையினுங் கருத்துப் பதி பசுபாசம் தெரித்தல்" எனச் சிவப்பிரகாசமும், "சான்றவ ராய்ந்திடத் தக்கவாம் பொருண் மூன்றுள" எனக் கந்தபுராணமும் உரைத்ததனால் முப்பொ ருள் கண்டு கொள்க இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்று கூறுவாரு முளர் அதுபொருந்தாமை யறிக. 5

வருவதையுணர்ந்தெதிர்புகுந்துவாமதே
வொருமுனிபுரிவன வுஞற்றியுள்ளுவந்
தரியதோர் தவிசில்வைத் தருக்கியம்முதற்
பெருநலனல்கியோர்முகமன்பேசினன்.

இ-ள். அகத்தியமுனிவர் வருவதையறிந்து வாமதேவமுனிவர் எதிரேசென்று, செய்ய வேண்டியன வற்றைச்செய்து, மனமகிழ்ச்சி யுற்று அருமையாகிய ஆசனத்தில் இருத்தி, அருக்கியம் முதலாகிய மிக்க உபசாரங்களைச்செய்து, முகமன் வார்த்தைகளையுஞ் சொற்றார். 6

இந்தமாநிலத்திடையிறையு மன்னையும்
வந்துருவாயதோர்வரையிரண்டையுந்



தந்தனைகுகனையும்பணியத்தந்தனை
யுய்ந்தனம்யாருமென் றுரைத்தமேலவே.

இ-ள். இந்தப் பெரிய பூமியினிடத்தில், சிவபெருமானும், உமை யம்மையாரும்வந்து வடிவான மலைகள் இரண்டையும் எங்கட்கு அளித் தருளினீர், சுப்பிரமணியக்கடவுளையும் வணங்கும்படி செய்தருளினீர் யாங்களெல்லவரும் உய்ந்தேமென்று கூறுஞ்சமயத்தில்.

வரன்முறையேழிசைமகதிவீணைமேல்
விரனுளமுனிவரனெழுந்துவேணியந்
திரயிசையிருகரமுகிழ்ப்பச்சேர்த்தியுண்
ணூனுறுமாதவிரொன் றுகேண்மினே. 7

இ-ள். வரலாற்றுமுறைப்படி ஏழு இசைகளையுமுடைய மகதியா ழின்மீது விரல்வைத்துள்ள முனிசிரேட்டராகிய நாரதர் எழுந்து சடை யையுடைய தமது தலையின்மேல் இருகைகளுங் குவியும்படிவைத்து, உண்மையறிவுடைய இருடிகளே (யான்சொல்லும்) ஒரு வார்த்தையைக் கேட்பீராக.

இசை தோன்றுமிடத்து, ச ரி க ம ப த நி எழுத்தொலி தோ ன்றும். இவ்வேழு எழுத்துக்களையும் மாத்திரை படுத்தித் தொழில்செய்ய இவற்றுள்ளே ஏழு இசையும் பிறக்கும். ஏழிசையாவன:—சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம் பஞ்சமம், தைவதம், நிடாதம் என்பன இவற் றுள்ளே பண்கள்பிறக்கும். மேற்கோள்—

இசைநுணுக்கம்.

சரிக மபதநி யென் றேழெழுத்தாற் றானம்
வரிபரந்த கண்ணினாய் வைத்துத்—தெரிவரிய
வேழிசையுந் தோன்று மிவற்றுள்ளே பண்பிறக்குஞ்
சூழ்முதலாஞ் சுத்தத் துளை.

இனி குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், என்றுங்கூறுப. இவைவீணையில் ஏழ்கரம்பெனப்படும். இவற்றிற்கு ஓசையுவமை - மயில், இடபம், ஆடு, கொக்கு, குயில், குதிரை, யானை, சுவை யுவமை—பால், தேன், கிழான், நெய், ஏலம், வாழைக்கனி, மாதுளம்பழம் வாசனையுவமை—மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், பொன்னுவிரை, புன்னை. ஏனையவியல்களையெல்லாம் தமிழ்ப் போகாதிக்க ணுரைத்துள்ளாம். 8

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தெய்வமுனிவீர்நீவிர்நும்மிற்சிறந்தோன்
யாவன்வைதிகமா
சைவநெறியிற்றவமுயன்றோன்யாவன்
வருசத்திநிபாதங்
கைவந்தவன்யாவன்வேதச்சிரமுங்
கடந்துகாண்பரிய
மெய்வந்துடையோன்யாவனருளுருவம்
விளங்கவிளங்கினோன்.

இ-ள். தெய்வத் தன்மையையுடைய முனிவர்கள் நீவிராகும் நுங்களுக்குட் சிறந்தமுனிவன்யாவன்? வைதிக சைவநெறிநின்று தவத்தைச்செய்தவன் எவன்? இருவினை யொப்புவந்தகாலத்தில் சத்திநிபாதங் கைகூடப் பெற்றோன் எவன்? உபநிடதமும் அறிதற்கரிய உண்மைப் பொருளை யடைந்தவன் எவன்? அருள் வடிவம் விளங்க இலங்குகின்றவன் யாவன்?

இருடிகள் தேவவிருடி, பிரமவிருடி, இராசமுனி, வைசியமுனி, சூத்திரவிருடிஎன ஐவகைப்படலான் "தெய்வமுனிவீர்" என்றுவிளித்தார். வைதிகம்—வேத சம்பந்தம். இது வடமொழித்தத்திராந்தப



சைவம் - சிவசம்பந்தம் ஈண்டுச் சித்தாந்தநெறியைக் குறித்தது சத்திநி பாதம் - சத்தி - சிவசத்தி, நிபாதம் - பதிதல். 9

அவனெம்மிறைவன்முழுதுலகுமவனே
யகண்டபூரணமா
யுவமமிலாதாய்விகாரமுரையிறந்தபொருளா
யுறைந்ததொரு
சிவமுமவனேயென்றுதுதியவன்பாற்செல்
கதமியேற்குப்
பவமில்கதிவந்தடைகவெனப்பகர்ந்தான்பசும்
பொன்னுலகடைந்தான்.

இ-ள். அங்ஙனமுள்ளவனே நம்முதல்வனாதும், அவனே கண்டிக் கப்படாத நிறை வுடைத்தாய், ஒப்பிலாததாகி, விகாரம், வாக்கு என்னும் இவை கடந்த உண்மைப் பொருளாகி, விளங்குகின்ற தனிப்பொருளாகிய சிவமும் அவனே யாகும் என்றுகூறி, நான் சொல்லுந் துதிகளும் அவனிடத்தடைக. தனித்தவனாகிய எனக்குப் பிறப்பில்லாத முத்தி வந்துபொருந்துக என்று சுவர்க்கலோகத்தை யடைந்தார். 10

மறைந்தகாலைத்தாபதரும்வாமதேவ
முனிவரனுஞ்
சிறந்துளோன்றென்பொதியவரைச்செல்வனவன்பா
ஞர்தனின்
றறைந்தமாற்றமடையுமெனுமவ்விலகந்தை
யுடன்வேத
நிறைந்தகேள்வியாதமுனிவெருண்டோர்மாற்ற
நிகழ்த்தினால்.

இ-ள். இங்ஙனம் நாரதமுனிவர் மறைந்தசமயத்தில், ஏனையமுனி வர்களும் வாமதேவ முனிவரும், முனிவர் கூட்டங்களுட், சிறப்புடை

யோன் அகத்திய முனிவரே யாகும், அவரிடத்தே நாரதமுனிவர் இப்போது கூறியசொற்கள் சென்றடையும் என்றுசொல்லும்போது, வேதவுணர்ச்சி நிறைந்த வியாச முனிவர்கோபித்து ஒருவார்த்தை சொல்வாராயினர். 11

என்னைநீவிரிதுபுகன்றீர்குருகுலகிற்
குறுமுனிவன்
றன்னிடத்திற்றுதிசார்தலைவன்கொலிஃதோதார்
தடுமாற்றஞ்
சொன்னதலதுமுகமனுரைசொற்றீர்சொல்லிற்
கலைவாணி
யன்னையுழிச்சென்றடைந்திடுமேற்றவளேவீடு
மளித்திடுமால்.

இ-ள். முனிவர்களே நீவிர் யாதுரைத்தீர், பெரிய கடலாற்சூழப்பட்ட நிலவுலகில், அகத்திய முனிவனிடத்து மாத்திரந் துதியடைந்தவெவ்வாறு. இது முறை பிறழ்ந்த உரையன்றி உபசார வார்த்தையுமாகும், சொல்லுமிடத்துக் கலைகளுக்கெல்லாந் தலைவியாகிய சரசுவதியாந் தாயினிடத்தே துதிகள் அடையும், அவளே முத்தியையுங் கொடுப்பாள்.

என்றுவிசைப்பமலயமுனிவெதிர்ந்தவாணி
யிடத்தோதும்
பன்னூன்மறையும்பிறகலையுமுயிரின்பொருட்டுப்
பரமசிவன்
றொன்றுடோர்குத்தவாவலற்றோர்துகளெண்டோகற்
றனைமுனிவா
நன்றுவழுவமனவயிரகவின்றுய்நவிரன்
றேறெனவார்



இ-ள். என்றிவ்வாறு வியாதமுனிவர் உரைக்க, அகத்திய முனிவர் கூறுவார், முனிவனே! நீ கூறிய சரசுவதியி, னிடத்து, சொல்லப்பட்ட நான்குவேதங்களும் பிறசாத்திரங்களும் ஆன்மாக்களாகிய நமதுகாரணமாகப் பரமசிவன், முன்னர்க் காலத்திற் றொகுத்துச்செய்த அந்நூல்களுள் ஓரணுவளவாவது உண்டோ? நீ கற்றுள்ளாயன்றோ? நல்லதாவானது அழுப்பட மனவார்த்தைக் கூறினை, அங்ஙன முரைத்தல் குற்றமன்றோ? 13

நொய்தாலும்யான்கற்றதென்றனுவலும்வடநூன்
மொழியவற்றை
யைதாயுணர்ந்துநீயுமுயர்ந்தனையல்லாலுண்
டோவெனத்தன்
கைதாவெடுத்துவியாதமுனிகழறக்கலச
மாமுனிவன்
வெய்தாய்மோனமடைந்தவையைநீங்கியகன்றான்
வெகுளியினால்.

இ-ள். நான்படித்தது அற்பமாகும், ஆயினும் என்றாற் சொல்லப்பட்ட வடமொழிக்கணுள்ள நூல்களை அழகாக நீயும் அறிந்து உயர்ந்தனையல்லாது வேறுயாதேனுமுண்டோ? என்று தன்னுடைய கையையெடுத்து வியாசமுனிவர் சொல்ல, அகத்தியமுனிவர் விரைவில் மௌனங்கொண்டு அச்சபையைவிட்டு நீங்கிக் கோபத்துடன் சென்றார். 14

வாமதேவன்முதலியமாமுனிவர்மலய
மாமுனிவன்
காமனுயிர்வவ்வியநுதற்கட்கடவுளுருவம்
வியாதமுனி

தோமில்லாசைமணிவண்ணனு நவமென்று
சொல்வதெவன்
யாமெல்லாமேல்வருவதனையறிதுமெனவீற்
றிருந்தனரால்.

இ-ள். வாமதேவர் முதலாய இருடிகள் அகத்தியமுனிவரோ, மன்மத னுயிரைக் கவர்ந்த நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமா னுருவமாகும். வியாசமுனிவரோ, குற்ற மில்லாத காயாம்பூ வண்ணராகிய திருமாலின் வடிவமாகும் என்றால் யாம் சொல்வது என்ன இருக்கின்றது, நாங்கள்யாவரும் இனிமேல் நடப்பதை யறிவோமென்று வாளாயிருந்தனர்.

சந்தவுரைக்கோமுனிவரன் றுய்த்தலைவானரந்தாக்
குபுவுழக்க
வந்தவருக்கையுடைந்துநறுஞ்சுளைத்தேன்பசும்பொன்
றசும்பொழுகிச்
சிந்திமிளிர்ந்துகிடப்பதெனத்திகழுஞ்சிவமா
மலையொருசா
ரிந்துமுடியோன்வரந்தரநோற்றிருந்தானிருந்தா
ரணிவியப்ப.

இ-ள். சந்தனாசல முனிவராகிய அகத்தியர் சிறிய தலையை யுடைய குரங்குகள் பாய்ந்து உழக்குதலினால், பொருந்திய பலாப்பழங்கள் பிளப்புற்று நல்ல சுளைகளின் தேன்பசிய பொற்குடத்தினின்றும் மது ஒழுகிச் சிதறிப் பரந்து கிடப்பதுபோல விளங்காநின்ற சிவகிரியின் ஒருபக்கத்தே சந்திரசேகரக் கடவுள் வரமளிக்குமாறு இந்நிலவுலகம் வியக்கும்படி தவஞ் செய்திருந்தனர். 16



அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கடவருந்தவங்களாற்றிக் கந்தர்தம்மருங்கினோற்கும், குட
முனியெதிர்வெள்ளேற்றிற் குழகன்மாதுடன்சென் றுள்ளத்
தொடர்புசொல்கெனவியாத முனிவரன்சொற்றவாறு, முடனி
கழ்ந்ததுவும்போற்றி யுரைப்பமீண்டிறைவன்சொல்வான்.

இ-ள். செய்தற்கரிய தவத்தைச்செய்து மலையின்பக்கத்தே வசிக்கும் அகத்தியமுனிவர்க்கு முன்னர் வெள்ளிய இடபவாகனத்தின் கண் சிவபெருமான் உமையம்மையாருடன் தோன்றி, முனிவ! நினது மனத்தினுள்ளதைச் சொல்லுவாயாக வென்று திருவாய்மலர்ந்தருள, வியாசமுனிவர் சொல்லிய வரலாற்றையும், உடனே நடந்தவரலாற்றையும், துதித்துச் சொல்ல, பின்னர் இறைவன் கூறும். 17

கோதிலோய்வடாதுபாலன்முக் குரோசமற்றகல்நாற்றண்ணம்
போதினீள்வனமும்பானுதீர்த்தமும்பொலிவினோங்கு
மூதெயிலுடுத்ததுர்க்காபுரியெனுமூதூர்தன்னிற்
போதுகென்றகன்றானண்ணன்முனியுமப்புரியிற்போனான்.

இ-ள். குற்றமில்லாத முனிவனே வடக்குப் பக்கத்தில் மூன்று குரோசதூரஞ் செல்லுங்காலத்தில், குளிர்ச்சி பொருந்திய புட்பவனமும் பானுதீர்த்தமும் பொலிவுடனே விளங்கும், பழமையாகிய மதிலாற்சூழப்பட்ட துர்க்காபுரி யென்னும் பெரிய ஊரிற் போகக்கடவாய் என்று மறைந்தருளினர், அவ்வாறு அகத்திய முனிவரும் அத் தலத்திற்குச் சென்றனர். 18

அணிநகரதனின்மேலவிலிங்கமுள்ளதுமரியோனும்
பணியெனவயனும்போற்றிப்பணிவதெஞ்ஞான்றுமன்றி
மணிமலிவனசமாலை முற்கவன்மனைவிமாசிற்
பிணிமுகமயிலஞ்சாயலிந்திரைபிணைவேற்கண்ணாள்.

இ-ள். அழகியநகரத்தில் மூலலிங்கம் ஒன்றுள்ளது. விட்டுணு வும் பிரமனும் அடியையென்று துதித்து எப்போதும் வணங்கப்பெறுவது அஃதல்லாமல், அழகுநிறைந்த தாமரைமலர்மாலையை யுடைய முத்தவன் என்னும் பிராமணன் உளன், அவனது மனைவிமயில்போன்ற சாயலையும், வேலாயுதம்போன்ற கண்களையுமுடைய இந்திரை யென்பவளாகும். 19

நன்மகவின்றிவேறாநகுலமொன்றினை வளர்த்துப்
பின்மகவுயிர்த்திரண்டும்பிள்ளைகளாகப்போற்றுந்
தன்மகிழ்வினளோர்ஞான்றுதண்புனற்ககன்றகாலை
யின்மனையிடத்துவெய்யநாகமொன்றெய்திற்றன்றே.

இ-ள். நல்ல குழந்தைகளில்லாமையாற் கீரிப் பிள்ளையொன்றைவளர்த்து, பின்பு பிள்ளையொன்றைப் பெற்று, அதனோடு இரண்டையும் பிள்ளைகளாக வளர்க்கின்ற மகிழ்ச்சியையுடையவள், ஒருநாள் குளிர்ந்த நீர்கொள்ளச் சென்ற காலத்தில்இனிய வீட்டினிடத்துக்கொடிய நாகப் பாம்பு ஒன்று வந்தது. 20

வருவதையுயிர்செகுத்துவளர்த்தவளெதிர்செல்கீரிக்
குருதிவாய்காணுமாழ்கிக்கொன்றதுமகவையென்று
மருவிநீர்நிறைந்தபைம்பொற்றசும்பினாலதனைமாய்த்து
வெருவியிற்புக்காளாங்குவிளைந்தனவினையங்கண்டாள்.

இ-ள். வருகின்ற அச்சர்ப்பத்தைக் கொன்று, தன்னை வளர்த்த பார்ப்பினிக்கு எதிரேசென்ற கீரியினது இரத்தமொழுகிய வாயைக்கண்டு எனது குழந்தையைக் கொன்றதென்று நினைத்து, அருவிநீர் நிறைந்த அழகிய குடத்தினால் அதனைக் கொன்று அச்சங்கொண்டு தன் வீட்டிற் குச் சென்றாள் அங்குநடந்த காரியங்களையெல்லாம் பார்த்தான். 21



உளங்கனன்றுயிர்ப்புவீங்கியோவெனவரற்றியுள்ளந்
துளங்கினளோராதாற்றுந்தொலைவில்பாதகந்தீர்மாறென்
றுளங்கெழுகேள்வன்காண்முன்மாள்வதென்றெழுந்துதீய
களங்கவல்விடங்கைக்கொண்டாள்கந்தனைமனத்துட்கொண்டாள்.

இ-ள். மனம் எரிந்து பெருமூச்சு அதிகப்பட்டு, ஓ என்று அழுது மனநடுக்கங்கொண்டவளாய், அறியாதுசெய்த இவ்வழியாத பாதகம் நீங் காதென்று, மனமொருமைப்பட்ட தனது கணவன் பார்த்தற்கு முன்னர் இறப்பதே கடனென்று எழுந்து, கொடிய கரிய நஞ்சைக் கையிற்கொண் டனள், பழநிப் பெருமானாகிய கந்தக்கடவுளை மனத்திற் கொண்டவளா கிய இந்திரை என்னும் பார்ப்பனத்தியானவள். 22

பெரும்பெருமானேவெய்யேன்பெண்ணறிவிருந்தவாற்றால்
வரும்பழியொழித்தியென்னுவல்விடம்வாயிற்பெய்காற்,
கரும்புறழ்மொழியினரோடெதிர்ந்துநங்கந்தவேளு
மரும்பிளநகைமென்சொல்லாயஞ்சலென்றபயநல்கி.

இ-ள். பெரியபெருமானே, கொடியவளாகிய யான் பெண்ணறிவு உடையளாக இருந்தமையால், வந்தபழியை நீக்கி யருளுதியென்றுவலிய நஞ்சை வாயில்விட்டகாலத்து, கரும்புபோன்ற சொற்களையுடைய வள்ளி யம்மையார் தெய்வயானை யம்மையார் என்னும் இருவருடன் எமது கந்தக்கடவுள்தோன்றி, முல்லை யரும்புபோன்ற பற்களையும் மிருதுவாகிய சொற்களையுமுடைய மாதே அஞ்சற்கவென்று அபயங்கொடுத்தருளி,

சிலப்பதிகாரம் பதினைந்தாவது அடைக்கலக் காதையில்,

"பிள்ளை நகுலம் பெரும்பிறி தாக
வெள்ளிய மனையோ ளினைந்து பின்செல
வடதிசைப் பெயரு மாமறை யாளன்"

என்னுஞ் செய்யுளில் ஆசிரியர் அடியார்க்கு நல்லார் வேறு விதமாக உரைத்தனர். இன்னும் இவற்றின் விரிவுகளை யெல்லாம் சுப்பிரமணியபராக்கிரமத்திற் கூறியுள்ளாம். அதிற்கண்டு தெளிக. 23

பைந்தொடிமுற்பவத்திற்பயந்தனன்னைகீரி
வந்தனன்மகளென்றெண்ணுவகைத்தலின்மனந்தெண்ணாது
சிந்தினையுயிரையன்றிமுந்துநீவிடப்பைபந்நாகம்
வெந்திறலிரவிசேனைதனயனைவீரன்வெய்யதோர்மான்.

இ-ள். பசிய வளையலையணிந்த கோதாய், கீரிப்பிள்ளை யுன்னை முற்பிறப்பிற் பெற்றதாயாகும், தனக்குப் பெறுபேறாகத் தோன்றிய புத்திரியென்று எண்ணாது நின்னைக்கொன்றான், அவனையிப்போது கீரியாகினை, ஆதலால் நீயும் மனத்திற் சிறிதும் யோசனையின்றிக் கொன்றனை, அஃதல்லாமல், கொடிய விஷத்தையுடைய சர்ப்பம் மிக்க வீரத்தையுடைய சூரியசேனன் புத்திரனாகும். அவன்பெயர் அநுவீரன் எனப்படுவான். 24

தாதையைக்கொல்வான்சீறித்தனதுயிர்தணத்தலாற்றன்
போதமிழுதமென்னவிழிந்ததிவ்விரண்டும்போந்து
மாதவத்துயிர்துறந்தபெற்றியால்வானஞ்சேர்ந்த
நீதுயர்தவிர்தியென்றுநிகழ்த்தினார்வரங்கணல்கி.

இ-ள். அநுவீரன் என்னும் அவன், தன்றந்தையைக் கொல்லும்படி கோபித்தெழுந்து தன்னுயிரை விடுதலால் தன்னுணர்ச்சியில்லா நாகமெனப்பிறந்தான். கீரி, பாம்பு என்னும் இரண்டும் உன்னிடத்து வந்து பெரியதவத்தினாலே யிறந்தமையாற் சுவர்க்க லோகத்தை யடைந்தன, ஆதலால் நீ துன்பத்தை விடக்கடவாய் என்று வழிபாடுஞ்சொல்லிப் பெரியவரங்களையு முதவி. 25



குறியினுண்மறைந்தானண்ணல்கோதிலிந்திரையுமீன்ற
சிறுவனுநதிவேட்டுன்னுங்கேள்வியிற்றிருவினோங்கி
யுறுவனபோகமுற்றுந்துய்த்துயர்விசும்பினுற்றா
ரன்றநகுலேசநாமமடைந்ததுகுறிக்குமன்றே.

இ-ள் கந்தக்கடவுள் சிவலிங்கத்துள் மறைந்தருளினர், குற்றமில்லாத இந்திரை என்னும் பிராமணத்தியும், அவள்பெற்ற புதல்வனும் சண்முக தீர்த்தத்துள் முழுகிப் பூசித்து, மதிக்கப் படுகின்ற கேள்வியறிவினும் செல்வத்தினும் உயர்ந்து (யாத்திரை சென்று இலங்கையி லுள்ள கதிர்காமத் தலத்தினும் நகுலகிரியினும் பூசித்த கணவனையும் பெற்று) அநுபவிக்க வேண்டிய போகங்களெல்லாவற்றையும் அநுபவித்து, உயர்வான மேலுலகத்தை யடைந்தனர், அவர்கள் பூசித்த இலிங்கத்திற்கும் நகுலேசன் என்னுந் திருநாமம் உண்டாயிற்று. 26

துகளிலிவ்விலிங்கபூசைகாமியினுருவுதாங்கிச்
சகமகள்போற்றிஞாலந்தரித்துயர்ந்தனள்பிலத்தோர்
புகழ்பணிகவுசிகன்சாபந்தபப்போற்றும்பூசை
மகிழ்வினாகேசநாமமகிதலம்விளங்கிற்றன்றே.

இ-ள். குற்றமில்லாத இவ்விலிங்க பூசையைக் காமதேனுவி னுருவத்தைக் கொண்டு பூமிதேவியானவள் செய்து, பூமியைப் பெற்று உயர்வடைந்தாள், பாதலவாசியா யுள்ள புகழப்படுகின்ற ஒரு சர்ப்பமானது விசுவாமித்திரசாபம் நீங்கப்பெற்று, துதித்துப் பூசித்ததனால், நாகேச என்னும் பெயரும் இப்பூமியில் விளங்கிற்று. 27

தொல்பவந்துடைக்குமந்தச்சடாரியிலிங்கந்தன்னை
வில்வலனுயிர்நாய்த்தூயவிரதமாமுனிவனேந்து,
வல்வலந்தணந்தவாறுவழுத்தனும்பிரமமாக
நல்லெழில்விளங்குங்காட்சிநல்கிநாகீசன்மன்னோ.

இ-ள். பழைய பாவங்களை யெல்லாம் அழிக்கின்ற அந்த ஒளியை யுடைய இலிங்கத்தை, வில்வலன் என்பவனது உயிரைக் கொன்ற பரிசுத்தமாகிய தவத்தையுடைய அகத்தியமுனிவர், ஐந்திரவு கழியுங்காறும் பூசித்தலும் நாகேசப்பெருமான் பிரமமாக நல்ல அழகுவிளங்குங் காட்சியைக் கொடுத்தது. 28

தென்றிசைவிளங்குமா றுமுனிவரன்செவியுண்மூல
நின்றதோர்மாயாபீசநிகழ்த்தியின்றமிழீதெல்லா
மொன்றறவேற்சேய்நின்பா லுணர்த்துவன்சிவாசலத்தை
மன்றநீயடைதிபின்னுங்கேட்டியோர்மாற்றமென்று.

இ-ள். தெற்குத்திசையானது நன்மையுற்று விளங்கும்படி, அகத்தியமுனிவரது காதினிடத்து, மூல மந்திரத்தையும் அதற்கு முன்னர் நிற்கின்ற மாயாபீச மந்திரத்தையும் உபதேசித்து, இனிய தமிழ்மொழி யீதுவேயாகும், அதனை யொன்றும் விடாது, நமது குமாரன் உனக்கு உபதேசிப்பான் நீ சிவகிரியை விருப்புடன் அடைதி, பின்னரும் ஒரு மொழி கேட்பாயாக. 29

உதக்கினிலாதிகேசவம்பராசராச்சிராமங்
கதித்துளம்புரிதிபூசையாண்டெனக்கரந்தானண்ணன்
மதித்தமிழ்மனுவழங்குநெறியினான்மழுவல்லோற்கு
நதித்திருமுடிவாகீசனெனும்பெயர்நடந்ததன்றே.

இ-ள். வடக்குத் திசைக்கணுள்ள, ஆதிகேசவம், பராசர ஆச்சிரமம் என்னுமிவைகளை யடைந்து ஒருவருடங்காறும் பூசை செய்க என்று நாகேசப்பெருமான்மறைந்தருளினர், அறிவை விளக்கும் தமிழ் மந்திரத்தைப் பெற்ற பெருமையினால், சிவ பெருமானுக்குக் கங்கையைத்தரித்த திருமுடியையுடைய வாகீசர் என்னும் திருநாமம் விழங்கிற்று. 30



கலிநிலைத்துறை.

ஆதிகேசவத்தணுகியான் பொருநையந்துறைவாய்ப்
போதிநீழலிற்குறிநிறீஇப்பூசனைபுரிகாற்
சோதிவிண்டுபாகத்தருள்சுரந்திடத்தொழுது
நீதின்மாமுனிசென்றனன்பராசராச்சிரமம்.

இ-ள். ஆதிகேசவம் என்னுந் தலத்தை யடைந்த அகத்திய முனிவர் தாமிரவர்ணியாற்றுத் துறையினிடத்து, அரசநிழலில் சிவலிங்கந் தாபித்துப் பூசனைசெய்தபோது, விட்டுணுவை யொருபாகத்திலுடைய ஒளிவடிவாகிய சிவபெருமான் கிருபைசெய்ய வணங்கிக் குற்றமில்லாத அகத்திய முனிவர் பராசர ஆச்சிரமத்தை யடைந்தார். 31

அந்தநீள்வனத்தருட்குறியுருவுகொண்டமலன்
வந்தவாறுசொல்வாங்கங்கைமாநதிக்கரையிற்
பந்தமில்பராசரன்முதல்யுகத்திலெம்பரனைச்
சிந்தைசெய்தனன்பருவமீரிரண்டுசென்றதன்பின்.

இ-ள். அந்த நீண்டபராசர ஆச்சிரமத்தில், திருவருட் சிவலிங்க வடிவுகொண்டு வந்தமர்ந்த வற்றையும் கூறுவாம், பெரிய கங்கையாற்றங் கரையில், பாசபந்தமில்லாத பராசரமுனிவர் முதல்யுகத்தில் எமது கடவுளை மனத்திற் றியானித்தனர், நான்கு வருடஞ் சென்றதின் பின்பு.

அகிலநாயகனிச்சைபெற்றகன்றகோங்கதனின்
மகிழ்வுகொண்டோர்மாலதிதனத்தெய்திமால்விடையோ
னிகரில்பெட்டகங்குண்டிகைதண்டுநின்மலமாந்
தகுதிகொண்டதோர்தானத்தில்வைத்துமாதவத்தோன்.

இ-ள். விசுவநாதப் பெருமானது மகிழ்வை யடைந்து நீங்கிகோங்க வனத்தின்கணுள்ள உவகைபிறத்தற் கேதுவாக வுள்ளமுல்லை வனத்தை

யடைந்து, திருமாலாகிய இடபத்தையுடைய சிவலிங்கம் இருந்த பெட்டகத்தையும் கமண்டலத்தையும் தண்டினையும், பரிசுத்தமாகிய ஓரிடத்தில் வைத்து, அதன் பின்னர்ப் பாராசரமுனிவர். 33

கடன்களாற்றிவந்தனை புரிவான்வருங்காலை
யிடங்கொடான்முன்பமைத்தனவிலிங்கமுங்கிணறும்
படர்ந்துவானுறூஉம்பலாசமுமாயினகாணூத்
தடங்கொடாமரையெனமுகமலர்ந்ததிசயித்தான்.

இ-ள். நித்திய கடன்களைச்செய்து வணக்கஞ் செய்யும்படி வருதற்கு முன்னர், தாம் அவ்விடத்தில் வைத்த பெட்டகம், கமண்டலம், தண்டு என்பன மூன்றும் இலிங்கமும் கிணறும், பரந்து ஆகாயத்தில் வளர்ந்த பலாசமரமும் ஆயின, அவற்றைக்கண்டு தடாகத்தில் உள்ள தாமரை மலரைப்போல முகமலர்ந்து அதிசயங்கொண்டார். 34

மொய்த்தமானவர்தமைமுகநோக்கிமாமுனிவன்
வைத்தநற்குறிமூலமாய்வளர்ந்ததேனையவு
முய்த்ததானத்திலின்னணமுதித்தனவோதி
யித்தலஞ்சிவபுண்ணியத்தலமெனவிசைத்தான்.

இ-ள். வந்துநெருங்கிய மனிதர்களைப் பார்த்துப் பாராசரமுனிவர் கூறுவார், இவ்விடத்தில் வைத்த நல்லபெட்டகம் மூலலிங்கமாகி வளர்ந்தது, மற்றைய தண்டு கமண்டலங்களும் அவற்றை வைத்த இடத்திலேயே பலாசமரமும் கிணறுமாயின என்று நிகழ்ந்தவற்றைச் சொல்லி, இந்தத்தலஞ் சிவபுண்ணியத் தலமென்று கூறினார். 35

மற்றையோர்பராசரனெதிர்வணங்கிமாசில்லா
துற்றகாரணமுயிர்களுய்ந்திடும்பொருட்டன்றோ
முற்றுணர்ந்தமாமுனிவரிற்பெரியைமுன்னேற்றுப்
பெற்றபேறுநின்பெருமையும்யார்பிரித்துரைப்பார்.



இ-ள். அங்குநின்ற மனிதர்கள் பாராசரமுனிவர் முன்விழுந்து வணங்கி, குற்றமில்லாமல் இங்கே யவையுண்டான நல்காரணம் ஆன்மாக்களுய்ந்திடுங் காரணமன்றோ? முழுவதையுமறிந்த முனிவர்களுள் பெரியவர் நீரன்றோ, தேவரீர் முன்னர்த் தவஞ்செய்து அடைந்த பேற்றினையும் பெருமையையும் யாவர் வகுத்துச் சொல்லவல்லவர். 36

என்றமைந்தரோடிருந்தவனிருந்தவமிழைத்துக்
கொன்றைவார்சடைக்குழகனைவந்தனைகுயிற்றி
யொன்றிவைகலாற்பராசராச்சிரமமென்றுலக
மன்றுரைக்கவேவிளங்கியதவ்வனமன்றே.

இ-ள். என்று சொல்லப்பட்ட பராசர முனிவர் தமது புத்திரர்களோடு இருந்து தவத்தைச்செய்து, கொன்றைமாலையைத்தரித்த நீண்ட சடையையுடைய சிவபெருமானை வணக்கஞ்செய்து, ஒருமைப்பாட்டுடன் இருத்தலால் பராசர ஆச்சிரமம் என்று அற்றைநாட்டொடங்கி யுலகஞ் சொல்லும்படி அவ்வனம் விளங்கினது. 37

பொங்குதீம்புனற்கூபத்திற்பொறிப்பிடர்புயங்கந்
திங்களைக்கதிரவனைத்தீண்டிடும்போழ்தில்
வெங்களூனினிற்றிங்களில்வெய்யவன்றினத்தி
லங்கணீர்குடைந்தாடினோர்கயிலையையடைவார்.

இ-ள். மிக்க இனியநீரையுடைய அக்கிணற்றினில், புள்ளிகளைக் கொண்ட பிடரையுடைய இராகுகேதுக்கள், சந்திரனையும் ஒளியையுடைய சூரியனையும் பரிசிக்கின்ற கிரகணகாலத்திலும், மங்கள வாரத்திலும் சோமவாரத்திலும் ஆதி வாரத்தும் முழுகினோர் திருக்கயிலையையடைவார்கள். 38

கோமகன்பழிதுடைப்பவானவர்தொழுங்குரவன்
விமலைகொடர்ச்சனைபுரிந்தனன்றமீன்சேய்

தேமலர்பெய்திக் தருச்சனை திருத்தலாற்கேச
காமமேய துபராசரர்நவி லுநாயகர்க்கே.

இ—ள். இந்திரனது பழியை நீக்குதற்காகத் தேவர்களால் வணங்கபடுகின்ற வியாழப் புத்தேள், புட்பங்களைக்கொண்டு அருச்சனைசெய்தார்; கார்த்திகேயக் கடவுளைத் தேன்பொருந்திய மலர்கள்கொண்டு அருச்சித்தலால், ஆதிகேசம் என்னும் பெயரைக்கொண்டது. அவ்விலிங்கத்திற்கே பராசர லிங்கம் எனவும் சொல்லப்படும். 39

அக்கணிந்தவக்குறியினிலசலமாமுனிவ
னெக்குநெக்குருகியாற்றியபூசனைநிகழ்விற்
செக்கர்மேனியிற்றிழைத்துநீற்றொளிநிலாவிரிக்குந்
தொக்ககாட்சியிற்றுவக்குண்டுதுவள்கின்றகாலே.

இ—ள். உருத்திராக்கத்தை யணிந்த அகத்தியமுனிவர், அந்தச்சிவலிங்கத்தில் மனம்நெகிழ்ந்து நெகிழ்ந்துருகிச்செய்த அப்பூசைக் காலத்தில், செக்கர் வானம்போன்ற திருமேனியிற் பூசப்பட்டு விபூதியின் ஒளிபரந்து காணப்படும் காட்சியிலே கட்டுப்பட்டுத் தியானித்திருக்குங் காலத்தில். 40

தளரிளம்பிறைக்கண்ணியனவிலுமாமுனிவ
தெளிசெழுந்தமிழாற்றிகழ்மந்திரசித்தி
யுளதுநின்றனக்காகுமாவெனக்குறியுற்று
ளிகொடென்மலையரசனன்சிவாசலமடைந்தான்.

இ—ள். குளிர்ந்த இளமையாகிய பிறைக் கொழுந்தைத்தரித்த சிவபெருமான் தோன்றிக் கூறுவார், சிறந்த முனிவனே, தெளிந்த இனிய தமிழினாலே விளங்கும் மந்திரசித்தி யிருக்கின்றது, அது நினக்குக் கைகூடுமாக என்று சிவலிங்கத்தில் மறைந்தருளினர், பெருமையைக் கொண்ட பொதியமலைக்கு முதல்வராகிய அகத்தியர் அதன்பின்னர்ச் சிவகிரியை யடைந்தனர். 41



அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சாரலிற்றிருவாவினன்குடியினிற்
சார்தமிழ்முனிமேவி
யாரவோர்பதுமாதனத்திருந்தெழுத்தா
றையுமனவேட்டிற்
றீரமாமதிநுதியெழுத்தாணிகொண்
டவைதிகழ்வுறத்தீட்டிப்
பாரணங்கொளாவுளங்கொண்டகண்கொண்டு
பார்த்திருந்திடுமெல்லை.

இ—ள். சாரலையுடைய திருவாவினன் குடியின் ஓர்பக்கத்தே தமிழ் முனிவராகிய அகத்தியர் சென்று, பொருந்தும்படி பதுமாசனத்திலிருந்து சடக்கர மந்திரத்தை மனமென்னும் ஏட்டினிடத்து, உறுதி கொண்ட மதியென்னுங் கூறிய எழுத்தாணியால் விளங்கும்படி யெழுதிப் பாரணஞ் செய்ய, மனத்திற் கொண்டனவற்றைக் கண்கொண்டு பார்த்திருக்குங் காலத்தில். 42

தந்தைதாயெனவாருயிர்முழுது
மளித்தவனுதற்கண்ணில்
வந்துதோன்றியமணிநெடுஞ்சுடர்வைவேல்
வானவன்மறைபோற்று
மந்தஞானதேசிகன்வடிவாகிவந்
தருந்தவனெதிர்புக்கா
னெந்தையிங்கெழுந்தருளினனெனத்தெரிந்து
சேவடிதாழ்ந்தான்.

இ—ள். பிதாவும் மாதாவுமென்று சொல்லும்படி அரிய உயிர்வாக்கங்கள் எல்லாவற்றையும் படைத்த சிவபெருமானது நெற்றிக்கண்ணில்

இருந்து அவதரித்த அழகியநீண்ட ஒளியையுடைய வேலாயுதக் கடவுள் வேதங்களால் துதிக்கப் படுகின்ற அந்த ஞானாசாரியனது வடிவத்தைக் கொண்டு அகத்திய முனிவரின் எதிரிற் சென்றார். எமது தந்தையிங்கே யெழுந்தருளினான் என்றறிந்து திருவடிகளை வணங்கினர். 43

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பான்மொழிப்பசும்பாவைசேய்போற்றி
பூஞ்சரவணபவபோற்றி
வான்சுரர்க்கருள்கந்தவேள்போற்றியுள்
வரைபொடித்தவபோற்றி
தேன்மலர்ப்பொழிற்சிவாசலபோற்றி
சேவலங்கொடியோய்போற்றி
நான்மறைப்பொருளையகபோற்றிமெய்ஞ்
ஞானதேசிகாபோற்றி.

இ-ள். பால்போலுமினிய மொழிகளையுடைய பாவையது புதல்வரே வந்தனம், பொலிவாகிய சரவண வாவியிற் றோன்றினவரே வந்தனம், விண்ணுலகத்தைத் தேவர்க்குக் கொடுத்தவரே வந்தனம், கிரவுஞ்சமலையைப் பொடியாகச் செய்தவரே வந்தனம் தேன்பொருந்திய புட்பங்களையுடைய சோலைக ணிறைந்த சிவகிரிக் கடவுளே வந்தனம், கோழிக்கொடியை யுடையவரே வந்தனம், நான்குவேதங்களின் உட்பொருளுக் குரியவரே வந்தனம் மெஞ்ஞானகுரவரே வந்தனம். 44

போற்றிபோற்றியென்றேத்தியமுனிவனைப்
பொருவில்போதகனோக்கிச்
சாற்றும்வேண்டியதருகுதுமெனச்சது
மறையவன்சிறத்தொன்றை,



யேற்றவெம்பிரான்றமியனேற்கருளிய
வின்றமிழதன்கூற்றை
வீற்றுறவிரித்தருளென்றலும்
விளம்பலுற்றனன்மேலோன்.

இ-ள். வந்தனம் வந்தனம் என்று துதித்த அகத்திய முனிவரை ஒப்பற்ற ஞானாசாரியராகிய கந்தவேள் திருநோக்கஞ்செய்து, வேண்டியவற்றைச் சொல்வாய், அவற்றை யீகுதும் என்று திருவாய்மலர்ந்தருள, பிரமனது ஐந்துதலைகளுள் ஒன்றைப் பிடுங்கிக்கொண்ட எமது முதல்வன் தனியேனாகிய எனக்கு அருளிய வினியதமிழின் பாகுபாட்டினை, ஒன்றும் விடாதுவிரித் துபதேசித்தருள்க என்று பிரார்த்தித்தலும், மேலவராகிய குமாரக்கடவுள் சொல்வாராயினர். 45

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நந்துவிந்துவினுயிர்த்தசூக்குமைமுதல்
வாக்குநால்வகைத்தாகி
யுந்துதானனோடுதித்தவனங்களோ
ரொன்றுடனைம்பானில்
வந்தவின்பமேதமிழதுமந்தண
மர்மறைப்பொருளா
வெந்தைநல்கநீபெற்றனையருந்தவ
மெத்துணைமுயன்றோயோ.

இ-ள். வளர்கின்ற விந்துவினின்றுந் தோன்றிய சூக்குமை, பைசந்தி மத்திமை, வைகரி என்னும் வாக்குகள் நால்வகைப்பட்டு, முற்பட்டெழுகின்ற உதானன் என்னுங் காற்றினுடன் பிறந்த எழுத்துக்கள் ஐம்பத்தொன்றினுள், இனிய ஒலியுள்ள எழுத்துக்களா லானது தமிழ்மொழியே, இரகசியமான வேதத்தின் பொருளாக எமதுதந்தை உப

தேசிக்க நீபெற்றாய், அதனைப் பெறற்கு எவ்வளவு அரிய தவத்தை செய்தனையோ. 46

தானவர்த்தெறுநேமியோன்முதலர்பாற்
சங்கரன்களிதூங்கி
யானதோரகராதிபல்லுருவுகொண்
டடங்கிநின்றனன்வானின்
மாநிலத்தவைவருவதுகாரணம்
வழங்கினனின்பாலெங்
கோனதன்றொகைவகைவிரிகூறுதுங்
கோடியென்றருள்செய்வான்.

இ-ள். அசுரர்களைக் கொல்கின்ற சக்காயுதத்தையுடைய விட்டுணு முதலாயினோரிடத்து, சிவபெருமான் களிப்புக்கொண்டு, முதன்மையான அகரமுதலாகப் பலவடிவுகொண்டு அடங்கிநின்றனன், மேலுலகத்தும் பூமியினும் அவ்வெழுத்துக்கள் வருவதன்பொருட்டு நின்னிடத்து உபதேசித்தார் நமது தந்தையார், அவ்வெழுத்துக்களின் தொகை வகை விரிகளைக் கூறுகின்றேம், அவற்றையுங் கொள்ளுதி யென்று திருவாய் மலர்ந்தருளுவா ராயினர். 47

வடமொழிக்கணச்சல்லெனவழங்கியவ்
வகையிரண்டினுட்சிக்கா
விடையினன்கையுமிறுதியிலிரண்டையு
மொழித்துநின்றனபத்தி
னுடன்விளங்கவேயெகரமுமொகரமு
மேழாமுறவேசேர்த்தி
யடைவினுயிரீராறெனவகுத்தன
னதினான்றெமதையன்.

இ-ள். வடமொழி
ழுத்து மெய்யெழுத்து
லன்ன இறு இறு இ
யிலுள்ள அம், அக எ
அ ஆ இ ஈ உ ஊ எ ஐ ஒ
கும்படி, எ ஒ என்னும் எ
ழுத்துப் பன்னிரண்டென்

அல்லிலைவரிவருக்க
மெடுத்தனைத்
சொல்லெழுத்தவையெ
யிறுதிதொக்கனவக்
மெல்லெழுத்துமேலிடையரலவளக்
ளங்கியவட்நாமே
னில்லவாயினறனழவுஞ்சேர்த்திமெய்
யீரொன்பதெனச்செய்தான்.

இ-ள். அல் என்னும் மெய்யெழுத்துக்களுள்
கம். டவ்வர்க்கம், தவ்வர்க்கம். பவ்வர்க்கம் எனஐ
உரப்பியும் களைத்தும் கூட்டியம் கூறுகின்ற எழு
லன்றெழுத்துக்களையும் ஒழித்து, முதலினும்
வந்துதொகுக்கப் பட்டனவும், அம்மெல்லெழு
யெழுத்துக்களான ய ர ல வ ள என்பனவும்
ழியில் இல்லாதனவாகிய ற ன ழ என்
வற்றைக் கூட்டிப் பதினெ

றி

ர்த்திமேவற்.

ரண்டையும், மெய் பதினெட்
ற்றுப் பதினறுவகையாக நடக்கும்,
படும், அத்தன்மையாகப் பிறக்குஞ்
ணரக்கடவாய் என்று அவற்றினது விரிவெல்லா
பெரிய அதிகாரம் குற்றமில்லாத எழுத்து, சொல்,
ணி என்று ஐந்தாகவைத்து அவற்றையும் உபதேசித்
நக்கோயிற்கு எழுந்தருளினர். 50

னிவாமதேவன்றவ
நீள்வனஞ்செல்கா
றைவியா தனுதியரெதிர்
ந்தவிசேற்றி
யைநினக்கிலாதது
லருண்ஞானத்
மணிமேலவான்



இ-ள். அகத்தியமுனிவர் கந்தக்கடவுளை வணங்கி வாமதேவ முனி
வர் தவஞ்செய்திருக்கும் ஆச்சிரமத்திற்குப் போனபோது, நான்குவேதங்
களும் நிறைந்த மனத்தையுடைய வியாசமுனிவர் முதலாயினோர் எதிர்
சென்றுபசரித்து, பொலிவாகிய ஆசனத்தி லிருத்தி, தவத்தைச் செய்
கின்ற கேள்வியறிவை யுடையவரே, நுமக்கில்லாத பொருளு முலகத்தி
லுளதோ? சிவஞானப்பட்டத்தியி னின்றொழுகும் பெரியதவ சிகாமணியே 51
மேலாகப்பெரிய தெய்வமுந் தேவரீரன்றோ?

முன்புநீ புரியாத தொன்றிலைமலை
முனிவவிக் கானமுன்னித்
தென்பெருந் திசைவிளங்கவுத்தரதிசைச்
சிவைசிவகிரி தந்தாய்
பின்புநீந் தமிழ்முதியா வருமுணப்
பெருக்கிநல்கினியாநின்
றன்பெருந் தகையெளியதோவென்றனன்
பராசரன் றருஞ்செம்மல்.

இ-ள். பொதியமலை முனிவரே! முன்பு நீ செய்யாத தொன்று மில்லை, இந்நாளில் இருவனத்துள்ளே, பெரிய தெற்குத் திசையானது விளங்கும்படி, வடதிசைக்கணிருந்த சத்திகிரி சிவகிரியென்னும் இரண்டினையுந் தந்தருளினீர், அதன் பின்னர் இனிய செந்தமிழாகிய அமிர்தத்தை எவர்களும் உண்ணுமாறு வளர்த்துக்கொடுத்தீர் நுமது பெருந்தகைமை எளியதாகுமோ என்றார் பராசரமுனிவர் புத்திராயவேதவியாதர்

எத்திசைத்தவா நினைத்திடும்வியாதனு
மியமரையே தொழுதுபுனைக்
கூத்தனான் புடையுடைதாங்குளையடைகுவார்க்
கொருகுறையுண்டோநீ

ராத்தமிழ்செய்யத்துதித்தவனென்றுரைசெய்யா
வினவக்குடிதொழுதாரவும்
பூத்தசெந்தமிழ்முந்தனாலைக்கடைந்தகாசு
பொதியமால்வரைமீதில்.

இ-ள். துதித்து இவ்வாறு சொன்ன வியாசர் முதலாய முனிவர்களைப் புகழ்ந்து ஞானநாடகஞ் செய்தருளும் சிவபெருமானிடத்து அன்புடைய நுங்களை யடைகின்றவர்களுக்கு யாதும் குறை யுண்டோ? நீவிர்கள் நமக்கு ஆப்தர்களே யாவிர் என்று துதித்து, அவ்விடத்தை விட்டு நீங்கி, பழநிப்பதியாகிய திருவாவினன்குடியை வணங்கி, விருப்பமிக்க செந்தமிழ் முனிவராகிய அகத்தியர் பெரிய பொதியமலையின்கட் சென்றார். 53

தூயமுத்தமிழையுமகத்தியமெனச்
சூத்திரவகையாற்செய்
தாயதொல்வடவேங்கடந்தென்குமரியி
னெல்லைதுதிப்ப
மாயிரும்புவிசிறத்திமாணவரீரு
திருவர்மாமதிநூலின்
மேயினோர்க்கருளினனென்றுசொன்னானவ்
வியாதன்றன்மேலோன்.

இ-ள். சுத்தமாகிய இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ்என்னும் முத்தமிழையும், அகத்தியம் என்னும் பெயர் வைத்துச் சூத்திரவகையால் ஒருநூல்செய்து, பழமையாகிய வடவேங்கடமலை, தெற்கட் குமரி யென்னும் இவ்வெல்லைக்குள் அதுவழங்கும்படி, பெரியபூமியின்கண் அதனை சிறத்தி, பன்னிருமாணவர்களுக்கும் அந்நூலிற் பொருந்தியுள்ள பொருள்களையெல்லாம் கூறினனென்று வியாசமுனிவரின் மாணாக்கராகிய சூதமுனிவர் சொன்னார்.



அகத்தியமே தமிழ்க்கு முதனூலாகும் அது தலைச்சங்கப் புலவர்க்கும் இடைச்சங்கப் புலவர்க்கும் முதனூலாயிற்று. "இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை, பெருங்குருகும் பிறவும், தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதீய முதலாயுள்ள தொன்னூல்களு மிறந்தன். நாடகத் தமிழ் நூலாகிய பாதம் அகத்திய முதலாயுள்ள தொன்னூல்களு மிறந்தன" என்று அடியார்க்கு நல்லார் முதலிய பண்டையாசிரிய ருரைத்தவற்றானே அகத்தியம் அக்காலத்தே மறைந்தன. இக்காலத்துச் சிலர் சிற்றகத்தியம், பேரகத்தியம் என்னுமிரு நூல்களே யதுவெனமயங்குப. அவை யன்றென்க. சிலசூத்திரங்கள் மட்டுமே ஆங்காங்குப் பழையவுரையிற் காணப்படுகின்றன. 54

அகத்தியச் சருக்கம் முற்றிற்று.

ஆகச்செய்யுள்—864.

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

இருபத்திரண்டாவது,

# தீர்த்தச் சருக்கம்.

கொச்சகக் கலிப்பா.

தொடர்ந்தபுலப்பகைகடிந்தோர்சூதனைமீளவுநோக்கித்
தடந்திகழுஞ்சத்திசிவசயிலமான்மியமுணர்ந்தே
மிடைந்துகொளவற்றுளதீர்த்தமான்மியமுமியம்புகென்று
மடங்கலில்கேள்வியுனகனன்பூறினிமகிழ்ந்தாங்கி.

இ-ள். சூழ்ந்துவருகின்ற ஐம்புலன்களாகிய பகையை வென்ற முனிவர்கள் சூதமுனிவரைப் பின்னரும் பார்த்து, சுனைகள் விளங்காநின்ற சத்திகிரி சிவகிரி என்பவற்றின் பெருமையை யறிந்தேம். பெருமை கொண்ட அம்மலைக்கணுள்ள தீர்த்த மகிமைகளையுஞ் சொல்லியருள வேண்டுமென்று கூற, குறைதலில்லாத கேள்வியுடைய சூதமுனிவர். 1

நீவிர்தவக்கடல்குளித்தீர்நிகழ்கேள்வித்துகள்படிந்தீர்
தேவிசிவமலைத்தீர்த்தங்குடையமனந்தினைப்புற்றீ
ராவலித்தீரதன்சரிதைகேட்பதும்மையனையபிறர்
யாவரடைந்தேனுமுய்ககேண்மினெனவிசைக்கலுற்றான்.

இ-ள். முனிவர்களே நீவிர் தவமாகிய சமுத்திரத்தில் முழுகினீர், நிகழ்ந்த கேள்வியறிவாகிய துகளிற்படிந்துள்ளீர், சத்திகிரி, சிவகிரி என்னும் மலைக்கணுள்ள தீர்த்தத்திற் குளிக்கமனங் கொண்டீர், அச்சரித்



திரங்கேட்க விருப்பமுற்றீர், உம்மைப் போன்ற பிறர் எவரேனும் அடைந்து உய்யக்கடவர், கேளுங்கள் என்று சொல்வாராயினர். 2

திங்கண்முடியிலைந்தசிவகிரியிலைந்துதீர்த்தமுள
வங்கவற்றுளாயிரஞ்செங்கதிர்க்கடவுளளித்ததொரு
கொங்கவிழ்பூந்தடஞ்சூழ்சூசிமுகதீர்த்தங்குணவரைப்பாற்
றங்கியதாடுநர்கொடுநோய்தணித்துநலந்தருமால்.

இ-ள். பிறைச்சந்திரனைத் தரித்த முடியையுடைய சிவகிரியில்ஐந்து தீர்த்தங்களுள்ளன. அவைகளுள், சிவந்த ஆயிரங்கிரணங்களை யுடைய சூரியன் உண்டாக்கியது ஒரு தீர்த்தமுளது. ஒப்பற்ற வாசனை பரந்த பொலிவாகிய தடங்களாற் சூழப்பட்ட சூசிமுக தீர்த்தமாகும். கிழக்குத் திசையின்கணிருப்பது, அது தன்னிற்றோய்வார்க்குக் கொடிய நோயை நீக்கி நன்மையானதைக் கொடுக்கும். 3

சிகரியின்றென்பாற்றேவதீர்த்தமமருலகநல்கும்
பகரமுதத்தடமதன்பச்சிமத்ததுநோய்மூப்பொழிக்கு
நிகரறுதென்பால்வரைக்கீழ்நிகழ்ஞானமடுவுளதோன்
றகநெகமூழ்குநர்சீவன்முத்தராகுவர்திண்ணம்.

இ-ள். சிவமலைக்குத் தென்றிசையில் உள்ள தேவதீர்த்தம் விண்ணுலகத்தை யளிக்கும், அதற்கு மேற்றிசையில், சொல்லப்பட்ட அமுத தீர்த்தமுள்ளது, அதுநோயையும் விருத்தாப்பியத்தையும் நீக்கும், ஒப்பற்ற தென்றிசை மலைச்சாரலின் கீழ் விளங்குகின்ற ஞான தீர்த்தமுள்ளது, அதன்கண் மனம் நெகிழத் தோய்கின்றவர் சீவன்முத்தராகுவர். இது உண்மை. 4

அறிஞர்புகழொருதடமுத்தரபாலுண்டதுகுய்யம்
வெறிகமழ்தாமரைக்கிழவன்விண்ணவர்மொய்க்கொளபோந்து

பொறியழலாற்றியகுண்டம்போர்கெழுவேற்கிறைவனருட்
செறியுநறுமலர்ப்பிரமதீர்த்தமெனச்சிறந்துளதால்.

இ-ள். அறிஞர்களாற் புகழப்படுகின்ற ஒருதீர்த்தம் வடக்குத் திசையின்க ணுள்ளது, அதன்பெருமை இரகசியம், வாசனை வீசுகின்ற தாமரை மலரின்மேலிருக்கும் பிரமன், தேவர்கள் தன்னை நெருங்கி வரச்சென்று, பொறிகளை யுடைய அக்கினி கொண்டுசெய்த குண்டமுள்ளது. போர்த்தொழிலை யுடைய வேலாயுதத்திற்குத் தலைவராகிய குமாரக்கடவுளின் அருள் மிகுந்த நல்ல பூக்களையுடைய பிரம தீர்த்தம் எனச் சிறந்துளது. 5

பரியமுறிசினை தழையப்பாடியகின்னரர்சுடரி
னெரிமணிசேர்மவுலிபுனையிமையவர்மென்சருகுநுகர்ந்
தெரிதவரோற்றோரறவோரந்தணரெண்டிசைக்காவற்
புரிதருபுத்தேளிர்புகுந்தாடியபுண்ணியதீர்த்தம்.

இ-ள். மரத்தின் இலைகளும் கொம்பர்களும் தழையும்படி பாடிய கந்தருவர்களும், சூரியனைப்போன்ற பிரகாசிக்கின்ற இரத்தினங்க ளழுத்திய கிரீடத்தைத் தரித்த தேவர்களும், மிருதுவான சருகையுண்டு அக்கினி மத்தியினின்று தவத்தைச் செய்த முனிவர்களும், அந்தணர்களும், அட்டதிக்குப்பாலகரும் புகுந்து குளித்த புண்ணியதீர்த்தமுமுளது. 6

மஞ்சுமணிமுடிதடவுசிவகிரியின்வடதிசைப்பாற்
கஞ்சன்மலருவளகமான்மியங்கழறுமாறெளிதோ
வஞ்சலர்மாமடவார்கண்முகிழ்ப்பவடல்வாள்விதிர்க்கும்
பஞ்சவனீணெறிநடத்தும்பாண்டிவளநன்னாட்டின்.

இ-ள். மேகங்கள் அழகிய சிகரத்தைப் பொருந்திய சிவமலையின் வடக்குத் திக்கினிடத்தே, பிரம தேவரது பார்த்த கோயிலின்



பெருமைகள் சொல்வதற்கு எளிதோ? ஐந்து இலக்குமிகள் கைகூப்பும்படி வலியவாளாயுதத்தை யசைக்கின்ற பாண்டியன் தருமநீதியை நடத்துகின்ற வளப்பம்பொருந்திய நல்லநாட்டிலே. 7

திரைபெறுதாம்பிரவன்னித்தெய்வநதித்தீம்புனல்சூழ்
கரைசெறியில்வாழ்க்கைநலங்கனியநான்மறைக்கிழவன்
விரைசெறிதாமரைத்தாமமிலைந்தபுரிநூன்மார்பன்
புரையெறிபுந்தியன்வேள்விபுரிந்தவன்புண்ணியமூர்த்தி.

இ-ள். அலைகளை வீசுகின்ற தாம்பிர பர்ணியாகிய தெய்வத்தன்மையையுடைய ஆற்றினது நல்ல நீரானது சூழ்ந்த, கரையின் கண்பொருந்திய இல்வாழ்க்கையுடன் நன்மைமிக்க நான்குவேதங்களில் வல்லவன் வாசனைமிக்க தாமரைப் பூமாலையையும் உபவீதத்தையுந் தரித்த மார்பினையுடையவன், குற்றங்களைந்த மனத்தையுடையவன், யாகஞ்செய்தவன், தருமமே வடிவாகவுள்ளவன். 8

தன்றாதையுயிர்துறப்பத்தன்னாற்செய்கடன்யாவு
மன்றாற்றியென்புபகீரதியிழிச்சுவானகன்று
பின்றாழ்செஞ்சடையினிளம்பிறையாடப்பெயர்ந்துவெள்ளி
மன்றாடும்பரன்மதுரைவைகைநதித்துறையடைந்தான்.

இ-ள். தனது தந்தை யிறக்க, தன்னாலே செய்யப்படும் கடன்கள் எல்லாவற்றையும் அற்றைத்தினம் செய்து, எலும்பைக் கங்கையிற் போடும்படி சென்று, பின்னர்த் தாங்குகின்ற சடையின்கண் இளஞ் சந்திரனாடச்சென்று வெள்ளியம்பலத்திற் றிருக்கூத்தாடும் பெருமான் எழுந்தருளி யிருக்கின்ற மதுரையின்க ணுள்ள வைகை யாற்றின் துறையைச் சார்ந்தான். 9

அத்துறையினாற்றுகடன் முடித்தணிகொங் கடைந்து
பொன்னி, தத்துதிரை தவழ்பாண்டிக் கொடுமுடியிற் சார்ந்

தொரில்லங், கைத்தமறை யோர்க்குநன் கடனாற்றிக்கங்கையி
லென், புயத்திடச்செல் வோனைமறுத் தனுமறையோ னென்
றுலிரப்பான்.

இ-ள். அந்த வைகையைத் துறையிற் செய்யவேண்டிய கடன்களைச் செய்து முடித்து, அழகிய சோலைவனத்தைச் சார்ந்து, காவிரியின் தாவு கின்ற திரைகள் தவழும் திருப்பாண்டிக் கொடுமுடியிற் சென்று, இவ் வுடலத்தை விட்டுத் துறவடைந்த ஒரு அந்தணனைக்கொண்டு நல்ல கடன் களைச் செய்து, கங்கையாற்றில் எலும்பையிடுமாறு செல்வோனைத் தடுத் துப் பின்னரு மொருவார்த்தையைப் பிராம்மணன் கூறுவான். 10

கங்கையிலென் பிடின் முத்தியடைதற்கோர்காரணமென்னச்
செங்கழுநீர்மலரெனவத்தீர்த்தத்தினெடுத்தாலோ
வீங்குமெனத்தீதான் றுமேற்பலந்தொலையத்தருங்கதியுண்
டிங்குனதுதாதையிறையடியடைமாறிசைக்குதுங்கேள்.

இ-ள். கங்கையிலே எலும்பிட்டால், முத்தியைச் சேர்தற்கு ஒரு காரணமென்று, செங்கழுநீர்ப் புட்பமென்று அத் தீர்த்தத்தில் எடுத்தால், முன்னர்செய்த பிறவியாகிய சமுத்திரத்தைக் கடத்தற்கு மரக்கலத்தைப் போலக் காணப்படும், அரிய முத்தியையுங் கொடுக்கும், இவ்விடத்தில் உனதுபிதா, சிவபெருமானது திருவடியை யடையும் வழியைச் சொல் லேங் கேட்பாயாக. 11

குதூவியிளம்பிறைக்கோட்டுக்குன்றிமணிவிழுக்கேழ
லொழுகருவிவரைச்சாரலோங்குசிவகிரிக்கோட்டி
னெழில்வரிவிற்கிடைபதினெந்தெனவடபாலெரிகுண்டம்
பழமறைவேதியனும்படைத்துடையதொருதீர்த்தம்.

இ-ள். மிக்க இளம்பிறையானது உரிஞ்சுதலாற் குன்றிமணியானது சொரிய அருவியானது ஒழுகுகின்ற வரைகளையின் பக்கத்தில், உயர்ந்து விளங்காநின்ற சிவகிரிச் சாரலின், அழகிய வரிந்த பதினைந்து விற்கிடை



தூரத்திலுள்ளதென்று சொல்ல, வடபக்கத்தில் அக்கினி குண்டத்தினரு கில், பிரமதீர்த்தமென்று பெயருடையது ஒரு தீர்த்தமுள்ளது. 12

கலி விருத்தம்.

பண்டிரண்டுபேர்படிறர்கன்னெறி
விண்டநெஞ்சினர்வெய்யகூற்றுருக்
கொண்டுவந்தனகொல்சினத்தின
ருண்டடைந்தவாறுரைத்துங்கேட்டியால்.

இ-ள். முன்னர்க் காலத்தில் இருவர் இருந்தனர், அவரோ வஞ்ச வொழுக்கத்தை யுடையவர், தருமமென்பது சிறிதுமில்லாத மனத்தை யுடையவர், கொடியயமனே அந்த வுருவத்தைக் கொண்டுவந்தாற் போன்று வருத்துகின்ற கோபத்தையுடையவர், இத்தீர்த்தத்தைப் பருகிப் பாகதி யைச்சேர்ந்த வரலாற்றையுங் கூறுவேம் கேட்பீராக. 13

ஒருவனுத்தரபுரியினுண்மறை
யிருபிறப்பரிற்பிரியனென்பவ
னருமறைக்குலத்தவதரித்துமால்
பெருகுவெவ்வினைப்பிரியனாயினான்.

இ-ள். அவ்விருவருள் ஒருவன் உத்தரபுரியிலே வேதமோதும் பிரா மணகுலத்திற் பிறந்தும், மயக்கம் மிக்க தீவினை செய்தலில் விருப்ப முடையவனானான். 14

இழிதொழிற்குலத்திழிஞரோடுந்
தொழிலிழைத்துவெஞ்சூனரோடையி
னெழுகியூர்தொறுங்களவுகொண்டுழன்
றழியுநெஞ்சனோனுவுழன்பிலன்.

இ-ள். தாழ்ந்த குலத்திற் பிறந்த சண்டாளருடன் கூடி, கொலைத் தொழிலைச் செய்து வெவ்விய ஊன்விற்பவராது மதுமலை னடந்து ஊர் கடோறுங் களவுசெய்து, சுழன்றுதிரியும் மனத்தனாகி ஓர்ணுவனாயி னும் மனத்தின்கண் அன்பில்லாதவனாயினன். 15

மண்ணடைந்தபின் மரபில்வந்துமுன்
விண்டடைந்துளோர் மீண்டுகும்பியின்
கண்ணடைந்துவெங்கனல்கனற்றவெம்
புண்ணடைந்துவாய்ப்புலம்பலுற்றனர்.

இ-ள். அவன் பூமியிற்பிறந்தபின்பு, அவன் மாபிற்றோன்றி பிற ந்து சுவர்க்கலோகத்தை யடைந்த பிதிரர்கள், அங்குநின்றும் நாகத்தி லடைந்து கொடிய அக்கினியானதுசுட, கொடிய வருத்தத்தையடைந்து வாயலறி யிரங்குவாராயினர். 16

தீயவன்பெயர்செப்பினோர்மனந்
தூயராயினுஞ்சுடுமவெங்கும்பியிற்
காய்வரென்றிடிற்கழறுமாறெவ
னேயில்பலபதியுழன்றுசில்பகல்.

இ-ள். கொடியவனாகிய அப்பிரியன் என்பவனது பெயரைச்சொன்ன வர்களும், மனஞ் சுத்தமுடையவராயிருந்தாலும், சுடுகின்ற கொடிய நரகத்தில் வருந்துவாரென்றால் அவன்றன்மையை நாம் சொல்லும் விதமெப்படி? ஒழிதலின்றிப் பலவூர்களோறுந் திரிந்து சில்நாள். 17

கொங்குநாடதின் குணதிசைக்கணோர்
பொங்குவெஞ்சுரம்புகுந்துநாடோறுந்
தங்கியாறலைத்துண்டுசார்விலா
தங்கிறந்தனனரியநோயினால்.



இ-ள். கொங்கு தேசத்தின்கண் கிழக்குத்திசையிலே யுள்ளமிக்க வெப்பத்தை யுடைய பாலைவனம் ஒன்றிற் புகுந்து தங்கி, தினந்தோறும் வழிப்பறித்து உணவுகொண்டு, யாதோர் துணையுமின்றி, அரிய நோய் கொண்டு அங்கே யிறந்தான். 18

கரியமேதிபூர்காலன்றூதர்
பரிவிலானறலைப்பாசத்தாற்றுறிஇப
புரியுந்தண்டமுள்ளனபுரிந்துதீ
யெரியின்மாட்டிநரகவுரவத்தினில்.

இ-ள். கரிய எருமைக்கடாவை வாகனமாகவுடைய யமனது தூதர் கள், உயிர்களிடத்து அன்பில்லாத பிரியன் என்பவனைக் கயிற்றினாற் கட்டிச்சென்று, செய்யவேண்டிய தண்டனைகளெல்லாவற்றையுஞ் செய்து இரௌரவ நரகத்தில் உள்ள அக்கினியிற் காய்ச்சினர். 19

கிருமிமொய்ம்பிலாங்கிடப்பநாரியுங்
கரியகாரியுங்கழுகுந்தின்றுசூழ்
செருமுங்காற்றசைசெறிபோரெனைமயோ
ரெருவைகொண்டுவானிவர்ந்ததன்றதே.

இ-ள். புழுக்களையுடைய அவனது உடலானது கிடப்ப, நயும் கரு காயும் கழுகுந்தின்று சூழ்ந்து போர்புரியும்போது, தசைசெறிந்த தொ லையை, ஓர் பருந்தானதுகொண்டு ஆகாயத்திற் சென்றது. 20

செல்லுங்காற்சிவகிரியிற்போகினோ
லல்குவாவியினுழவவீழ்ந்திநீர்
மல்குபூவினைக்கவர்ந்துவானிடை
யொல்லையிற்டறந்தொருவிப்போயதே.

இ-ள். இவ்வாறு பருந்து கௌவிச் செல்லும்போது, சிவாசலத் தின்கண் தாமரை மலராசனனாகிய பிரமன் உண்டாக்கிய தீர்த்தத்தில்

கழுவ விழுந்தி அக்கிரிணிடத்து நிறைந்த புட்பத்துள் ஒன்றைக் கவர்ந்து
கொண்டு ஆகாயத்தினிடத்து விரைவிற் பறந்து சென்றது. 21

என்புங்கவிதாழ்ந்திடுநலத்தினின்
முன்புகும்பியின்மூழ்குவேதிய
னின்பவீடுசென்றெய்தினனவன்
றென்புலத்தருந்தேவராயினர்.

இ-ள். எலும்பானது தடாகத்தில் விழுந்த தன்மையினால், முன்னர் காகத்திலே முழுகிய பிராமணன், இன்பத்தை முத்தியிற் சென்று அநுபவித்தான், அவனது பிதிர்களும் தேவராய்ச் சுவர்க்க மடைந்தனர்.

கழுகுமுன்கவர்காலையத்தட
முழுகுநீர்மையாலுயிர்முடிந்துநீ
ளொழுக்குதெய்வகலுருவுகொண்டுவான்
வொழுதுசூழ்வரத்துறக்கமுற்றதே.

இ-ள். கழுகானது முன்னர்க் கவர்ந்து சென்றபோதில் அப்பிரம தீர்த்தத்தில் முழுகிய தன்மையினால், உயிர்விட்டு வேதவொழுக்க முடைய சிறந்த தேவ வடிவத்தைக்கொண்டு, சுவர்க்கத்துள்ளவர் சூழ்ந்து வர இந்திரலோகத்தை யடைந்தது. 23

வேறு.

மற்றொருவனிந்தவும்வனத்திடையிருப்போன்
கற்றதுபொருட்டதரிடர்த்தொழில்கருத்தி
னுற்றதுகொலைத்தொழிலுயிர்ப்பலவழித்தோன்
சொற்றிடினுரப்பொடுசுடச்சுடவுரைப்போன்.

இ-ள். மற்றொருவன் காடோறும் காட்டினிடத்தே யிருப்பவன் அவன்பழகியது வழியில்நின்று பொருளைக்கவர்ந்து துன்பஞ் செய்த



லாம், அதன் மனத்திற் பொருந்தியது கொலைத்தொழிலாகும். அவ்
பல உயிர்களையுங் கொன்றவன், சொல்லுங்காலத்து உரப்புதலோடுசுடச்
சுடப்படி சொல்பவன்.

பெருக்கடன்மடுத்துடல்வளர்த்தவுதரத்த
னிதழ்க்கறியெயிற்றினிரக்கமிலுளத்தன்
கொதித்தவடவைக்கனல்கொடுத்தனவடுத்தோர்
வெதுப்புறவிழிப்பவன்விடக்குணவுதுய்ப்போன்.

இ-ள். கள்ளாகிய சமுத்திரத்தை நிறைத்துத் தன் சரீரத்தை வளர்த்த வயிற்றை யுடையவன், உதடுகளைக் கடித்தபற்களை யுடையவன், இரக்கமில்லாத மனத்தை யுடையவன், கொதித்த வடவாமுகாக்கினியைக் கொடுத்தாற்போலத் தன்னையடைந்தவர் வெதும்படியாகக் கண்களைத் திறப்பவன், இறைச்சியுணவை யுண்பவன். 25

சிவநதலமுதற்பலதிருப்பதிகண்முற்று
மவத்தொழில்விளைத்துளவரும்பணபொருட்பூ
ணுவப்பொடுபகற்பொழுதெடுத்தவணொளிப்போ
னிவற்கிரவிடைக்களவியற்றலருமைத்தே.

இ-ள். சிவபெருமானது திருத்தலமுதலாக பற்பல திருத்தலங்கள் தோறுஞ் சென்று, கோடான தொழில்களைச் செய்து, மனவிருப்பமான பொருள்களையும் ஆபரணங்களையும் பகற்காலத்திலேயே எடுத்து அவ்விடத்தில் ஒளித்து இருப்பவன், இவனுக்கு இரவிலே களவுத்தொழில் செய்தல் அருமையாகும் 26

மறைக்குலமுதற்குலமனைக்கொடியர்கற்போ
டிறப்பொழுதினிற்சிதைவுறப்படிறிழைப்போன்
பொறைக்கொடுமையைப்புவிபொறுக்கரிதெனக்கீ
ழுறைத்திடவிடப்பணிகளித்துடனிருக்கும்.

இ-ள். அந்தண முதலாகிய சாதிகளிற் பிறந்த கற்புடை மகளிர் யாவரும் ஒருநாட் பொழுதினிற் றங்கற்பு அழியும்படி வஞ்சகத்தைச் செய்பவன், இவனது பாவக் கொடுமையைப் பூமியானது பொறுக்க முடியாதென்று கீழிருக்கின்ற ஆதிசேடனுக்குத் தன்னுடலை நெளித்துக் காபிக்கும். 27

[illegible]கத்துறுவினைத்தொடர்புரிந்தவர் தமக்கே
[illegible]குத்தநிரயத்தொகைவிரித்தன விருப்பப்
புகுத்துபவனைப்பொடிபடுத்தநரகெனும்
வகுத்திடவிறற்சமன்மனத்திலுன்மதிக்கும்.

இ-ள். பூமியின்கணுள்ள தீவினைகளைச் செய்தவர்களுக்குத் தண்டனை செய்தற்காக விரித்துள்ள நரகக் கூட்டங்கள் பாங்குள்ளனவாக இருப்பவும், இன்னும் நரகங்களில் வீழ்த்தி அவனைப் பொடியாக்கற்காகப் புதிய நரகங்களை யுண்டாக்கற்கு வலியமன் றன்மனத்துள் மதிப்பான். 28

கலிநிலைத்துறை.

மண்ணவில்பாரவன்கரவினைவகுத்துரைக்கிற்பார்
புண்ணியன்றிருவாவினன்குடியினிற்போந்து
நண்ணிடுஞ்சிவகிரியிறைமலர்நறுங்குரவக
கண்ணியோன்புனைகலன்கவர்ந்தகல்கின்றகாலை.

இ-ள். பூமியினிடத்தில் அவனது களவுத் தொழில்களைச் சொல்ல வல்லவர், யாவர்; தரும சொரூபமாகிய குமாரக்கடவுள் எழுந்தருளியிருக்கின்ற பழநித்தலத்திற் சென்று, பொருந்திய சிவகிரியின்கண் வீற்றிருக்கின்ற நறிய குராமாலையைத் தரித்த வேற் பெருமானது ஆபரணங்களைத் திருடிச் செல்லுங்காலத்து. 29

நெருங்குதொண்டிகரவன்றனைவருமுங்குறப்பிணித்துச்
சிருங்கநீள்சிவகிரித்திகைபுகன்றடந்தாழ்ப்பச்



சுருங்குழச்சொடுகிடப்பவிகுவனெனத்துறந்தார்
மருங்குசார்ந்தனர்விந்திலன்மறுபுலத்திருந்தான்.

இ-ள். அவனை நெருங்கிய, அங்கேயுள்ள திருப்பணி செய்வோர் சரீரத் திறரும்படி கட்டி, சிகரங்கள் நீண்ட சிவமலையின்கணுள்ள பிரம தீர்த்தத்துள் முழுக அமிழ்த்தினர், அவன் குறைந்த சுவாசத்துடனே கிடப்ப, இவன் இனி இறந்துவிடுவானென்று நினைத்து அவ்விடத்தை விட்டு நீங்கினர், அவன் உயிர்பிழைத்து மறுதேசத்திற் சென்று இருந்தான். 30

பண்டுபோற்களவளவிலபுரிந்துபன்னெடுநாண்
மண்டுமாரணியத்திடைவருத்தநோய்மாய்ந்து
விண்டுவேதியன்றொழுதிருக்கயிலையின்மேவி
யண்டர்கோன்சிவகணத்துடனரசுவீற்றிருந்தான்.

இ-ள். பழமையைப் போலக் களவுத்தொழிலை அளவில்லா தனவாகச் செய்து, பலநெடுநாளாக, நெருங்கிய காட்டினிடத்தில் நோயானது வருத்த இறந்து, அப்பிராமணனானவன் மால், பிரமரால் வணங்கப்படுகின்ற திருக் கயிலாய மலையையடைந்து, தேவாதிபராகிய சிவபெருமானது கணங்களுடன் அரசு வீற்றிருந்தான். 31

தீக்குணத்தினர்பெறும்பயனிதுவெனிற்றெளிந்த
வாக்கும்யாக்கையுமனமுமாண்புறப்புலனைந்தின்
போக்கெறிந்தயன்பொய்கையிற்புனிதநீர்படிந்தோர்
பாக்கியத்தையாருணர்த்துவர்வேதபாரகனே.

இ-ள். வேதத்தைப் பாராயணஞ் செய்யும் அந்தணனே! பாவக் குணத்தினை யுடையவர், அடைகின்ற பிரயோசனம் இதுவாயின், தெளிந்த மொழிகளும், உடலும் மனமும் மாட்சிமை பொருந்த ஐம்புல

வழிச்செல்லும் வீடடைய்கலுநீக்கி, பிரமதீர்த்தத்துட் படிந்தவர்களது செல்வத்தை யாவரறிந்து சொல்ல வல்லவர். 32

நீயுமத்தடந்துடைந்துநின்றந்தை தன்னை
யேயவீழ்த்தினுமெடுப்பினுமென்கழுநீரா
மாயகாலைவீடெய்துமெனத்தெறைந்தபற்போற்றிப்
போயினன்சிவகிரியினிற்புனிதநீர்குடைந்தான்.

இ-ள். பிராமணனே நீயும் அப்பிரம தீர்த்தத்துள் முழுகி, நினது பிதாவின் எலும்பைப் பொருந்தும்படி விழுத்தினாலும், தோய்த்து எடுத்தாலும் அது உடனே மிருதுவாய் செங்கழுநீர்ப் புட்பமான காலத்தில் முத்தியை யடைவான் என்று கூற, அவனைத் துதித்துச்சென்று சிவகிரியின்க ணுள்ள பிரமதீர்த்தத்தில் முழுகினான். 33

தாதையென்பைமாமறையவன்சாற்றியவாக்காற்
சீதவாவியிற்றுழ்த்தினன்செங்கழுநீர்ப்போ
தாதல்காண்டலுமதிசயித்தாண்டருந்தவங்கூர்ந்
தோதுதற்பயந்தோன்பெறும்வீடடைந்துய்ந்தான்.

இ-ள். தன்பிதாவினது எலும்பைப் பெரிய பிராமணன் கூறிய வாக்கின்படி, குளிர்ச்சி பொருந்திய பிரம தீர்த்தத்தில் அமிழ்த்தினன், செங்கழுநீர்ப் பூவாதலும் அதனைக் கண்டதிசயித்து, அவ்விடத்தில் அரிய தவத்தைச்செய்து, சொல்லப்பட்ட தன்னைப் பெற்ற பிதாவடைந்தமுத்தியைத்தானும் அடைந்து உய்ந்தனன். 34

நீறில்சத்திமால்வரையிலீரிரண்டுளவவற்றுட்
கூறுசித்ததீர்த்தங்குணபாற்குகைவைகும்
பேறுசித்தருக்களிப்பதுபிறரவ்தாடா
மாறுசித்தியின்மயக்கினர்மற்றையோரன்றே.



இ-ள். அழிவில்லாத சத்திகிரியின்கண் நான்குதீர்த்தங்கள் உள்ளன அவைகளுள், சொல்லப்பட்ட சித்த தீர்த்தமானது கிழக்குத் திசைக்கணுள்ள குகையினிடத்து இருக்கும், சித்தர்களுக்குச் செல்வத்தைக்கொடுப்பது, பிறர் அதில் முழுகாதபடி தம்முடைய சித்தியினால் மற்றையோர் மயக்கினர். 35

வேய்த்தவுச்சியிற்றருமதீர்த்தம்விரைந்தாடில்
வாய்த்தனன்மகவுதித்திடும்வடாதுபான்மாயா
தீர்த்தநல்குமல்கியதிருதிசைபதன்கீழ்பா
லார்த்தவித்தியாதீர்த்தநற்கலைமுதலளிக்கும்.

இ-ள். மூங்கில்களையுடைய மலையினுச்சியில் உள்ள தரும தீர்த்தத்தில் விரைந்து முழுகினால், அறிவுடைய புத்திரப் பேறுண்டாகும், வடக்குப்பக்கத்தில் மாயாதீர்த்தமானது செல்வங்களைக்கொடுக்கும், அத்தீர்த்தத்திற்குக் கிழக்குப்பக்கத்திலே ஒலிக்கின்ற வித்தியா தீர்த்தமானது கல்வி முதலாயவற்றைக் கொடுக்கும். 36

இன்னமோர்பெருந்தீர்த்தமுண்டிருஞ்சத்திவரையின்
றென்னரிற்கருங்கேழலஞ்சிலம்பிடைச்சிறந்து
மன்னுகன்னமாபுரியினோர்வடாதுபால்வைகு
மின்னிலங்குதத்தாத்திரிவிளங்குமாச்சிரமம்.

இ-ள். இன்னும் ஒருபெரிய தீர்த்தம் இருக்கின்றது, பெரியசத்திமலையில், தென்றிசைக்கணுள்ள பெரிய வராகமலையினிடத்துச் சிறப்புற்றிருக்கும் கன்னமாபுரியின் கண் வடக்குத் திசையினிடத்து இருக்கும், ஒளிவிளங்காநின்ற தத்தாத்திரி முனிவர் வசிக்கும் ஆச்சிரமம் உண்டு. 37

ஆங்கணுயவெள்ளந்தொழுவாசுவீற்றிருக்குங்
கோங்கரும்பிளமுலைப்பசுங்கொடிபுரைநுசுப்புற்

தேங்கமழ்ந்தபூங்குழலுமைதிருகுகோட்டிரலை
தாங்குமூர்திபாற்கண்டக்கணேக்களித்தொன்றுசாற்றும்.

இ-ள். அவ்விடத்திலிருக்கும் சேனைவெள்ளங்கள் வணங்க அரசு வீற்றிருந்த, கோங்கு அரும்புபோன்ற இளமை பொருந்திய முலைகளையும், பசிய கொடிபோன்ற இடையையும், வாசனை வீசுகின்ற பூக்களைத் தரித்த கூந்தலையுமுடைய உமாதேவியார், முறுகிய கொம்பரைக்கொண்ட மான்வாகனத்தை யுடைய வாயுதேவனிடத்திற் கடைக்கண் நோக்குஞ் செய்து ஒருவார்த்தை கூறுவார். 38

இரசதக்குவடுளதொருகுறியிறையொன்றிற்
றரவெனக்கொணர்ந்தளித்தலுந்தாங்கினடாபித்
தரியமாதவந்தினைத்தறம்புரிதல்கண்டமலன்
மரைமலர்க்கண்மால்வரையுருக்கொண்டுகைதாங்க.

இ-ள். வெள்ளி மலையின்கண் ஒரு சிவலிங்கம் உளது, இறைப்பொழுதினுள் தருவாயாகவென்று ஆஞ்ஞாபிக்க, வாயுதேவன் கொண்டு வந்து கொடுத்தலும், அதைவாங்கித் தாபித்து, அரிய பெரிய தவத்தைச்செய்து, தருமத்தைச் செய்தல் கண்டு, நிருமலராகிய சிவபெருமானது தாமரைக் கண்ணாகிய மலரையுடைய திருமால், மலை வடிவத்தைக் கொண்டு கையாற் றாங்கி நிற்க. 39

ஊன்றுதண்டினன்முற்றநரைத்துடல்கூனிக்
கான்றபல்லினனடுக்குறுசென்னியன்கண்க
ளான்றிருண்டவன்றளர்நடைத்தூசினனாகத்
தோன்றிவந்தனனெம்மையாளுடையான்மலைக்கிழவன்.

இ-ள். ஊன்றிய தண்டினையுடையவராய், முழுதாக நரைத்து, உடம்புவளைந்து, விழப்பட்ட பற்களையுடையவராய், நடுக்கமுள்ள தலையையுடையவராய், கண் கண் அகன்று இருண்ட நிறத்தை யுடையவராய்



தளர்ந்த நடையை யுடைய வத்திரமு முடையவர் ஆகி, தோன்றிவந்தனர் எம்மையடிமையாகவுடைய பெரிய மலைத் தலைவராகிய சிவபெருமான். 40

ஒருவிருந்தெதிர்கொண்டடிவணங்கினள்வள்ளல்
பெருவிருந்தினனென்றலுந்தலைவிகைப்பிடித்துத்
திருவிருந்தினைத்துய்த்திடத்துய்த்துடத்தேவி
யொருவிருந்துதகல்கிய துபோலண்டமுமுண்ட.

இ-ள். வந்தவிருந்தை யெதிர்கொண்டு திருவடிகளை உமை யம்மையார் வணங்கினர், வள்ளலாகிய சிவபெருமான் பெரிய விருந்தாக வந்தேமென்று சொல்லுதலும், தலைவியாராகிய உமாதேவியார் கையைப்பிடித்து அழகிய விருந்தாகவந்த சிவபெருமான், உண்ணும்படி யுண்ணும்படி, உமாதேவியார் ஒப்பற்ற விருந்தைக் கொடுத்தது பெரிய அண்டங்களையாவு முண்டன போன்றன. 41

அன்னநல்கிவெள்ளிலைதுவர்க்காயுடனந்தச்
சென்னியன்செழும்பொன்னெனச்செய்தக்கிணையு
மென்னையாளுடையாடரவெம்பிரானென்றுன்
முன்னைநல்லெழில்காட்டினன்முராரிகைம்முகிழ்ப்ப.

இ-ள். சோற்றையுங் கொடுத்து, வெற்றிலை பாக்குடனே அந்தச் சோழராசனது அழகிய பொன்னைப்போலச் சிறந்த தக்கிணையையும், என்னையடிமையாக வுடைய பிராட்டியார்கொடுக்க, எமது பெரிய கடவுளாகிய சிவபெருமான் முன்னருள்ள தமதுதிருவுருவத்தை விட்டுணுவுங் கைகூப்பி வணங்கக் காட்சி கொடுத்தார். 42

காமர்பூங்கழற்சேவடிகைதொழப்பணியுந்
தூமலார்குழற்கன்னியைத்துணைக்கையாற்புல்லி

வாமனல்கின்னரர்மலர்மாரிபெய்தார்த்தார்
சாமகானங்கடுமித்தன துந்துபிதழங்க.

இ-ள். அழகிய பொலிவுள்ள திருவடிகளைக் கைகூப்பி வணங்க அவ்வாறு வணங்கிய புகைபோன்ற நீண்ட கூந்தலையுடைய கன்னிப் பருவத்தினராகிய உமையம்மையாரை, இருள்களானுந்தழுவி, தமது இடப் பாகத்தைக் கொடுத்தருளினர், தேவர்கள் புட்பமாரியைப் பொழிந்து ஆரவாரித்தார், தேவதுந்துபிகள் ஒலிக்க, சாமகீதங்கள் பொழிந்தன. 43

தேவிகேண்மதிவரமெனத்தினஞ்செழுமறையோர்க்
கோவினல்விருந்தளித்திடவுங்கருளென்னக்
கோவிமாமணிமிடற்றிறைகடைக்கணைக்கருளி
மேவிவேறொராடலையுளங்குறித்திடும்வேலை.

இ-ள். தேவியே, வார்த்தைக்கேள் என்ன, நாடோறுஞ் செழுமையாகிய பிராமணர்க்கு ஒழிதலில்லாத விருந்து கொடுக்கும்படி, இவ்விடத்தில் அருள்வீராக வென்று சொல்ல, நீலோற்பலம் போன்ற கரிய கண்டத்தையுடைய சிவபெருமான், கடைக்கணோக்குஞ்செய்து, வேறொரு திருவிளையாடலை மனத்தின்கண் நினைத்தருளுங் காலத்தில். 44

நெறித்தபுன்சடைப்பரப்பின்னிலாமதிக்கற்றை
யெறித்தநீற்றொளியேனியனெடுத்தகட்டங்கன்
குறித்தசித்தரிற்கோரக்கனெனப்பெயருடையோன்
மறிக்கணாளையெண்டோளனைவலங்கொடுபணிந்தான்.

இ-ள். நிமிர்ந்த புல்லிய சடைப்பரப்பை யுடையவனும், நிலவினையுடைய சந்திரனது கிரணக் கூட்டங்கள் வீசிய திருநீற்றின் ஒளி விளங்கும் திருமேனியை யுடையவனும், தாங்கிய வாளை யுடையவனும், உள்ள சொல்லப்பட்ட சித்தர்களுக்குள் கோரக்கன் என்னும் பெயருடை



யவன், மான்போன்ற கண்களையுடைய உமா தேவியாரையும் எட்டுப் புயங்களையுடைய சிவபெருமானை வலம்வந்து வணங்கினான். 45

திளைத்துளஞ்சிலவிநோதங்கள்செய்பவனுதரத்
துளைத்தவெம்பசிபுரிந்திறையுமைமுகநோக்கி
யிளைத்தவர்க்கமுதளித்திடலறனென விசைப்ப
விளைத்துநின்றமற்றளித்தனள்வேண்டுமோதனங்கள்.

இ-ள். மனம்விரும்பிச் சிலவிநோதங்களைச் செய்கின்ற அவனது வயிற்றின்கண் எழுந்த கொடிய பசியை யறிந்து, சிவபெருமான் உமாதேவியாரது முகத்தைப் பார்த்து, பசித்தவர்களுக்குச் சோறு கொடுத்தல் தருமமென்றுசொல்ல, சமைத்து, நின்று வேண்டும் அன்னங்களைக்கொடுத்தனர் (உமையம்மையார்.) 46

ஐயனேவலிற்சிலபகலருத்துவாளொருநாட்
டுய்யசித்தனன்றெய்துமுன்கூடகக்கையா
னெய்யினூறுசுவையனபாகத்தினிறைத்துப்
பெய்துலைத்தனடுப்பனபெருமலைசசொன்றி.

இ-ள். சிவபெருமானது கட்டளையின்படி சிலதினங்களாக உண்ணக்கொடுத்த பெருமாட்டியார் ஒருநாள், சுத்தமாகிய சித்தர் அன்றைத் தினம் வருதற்குமுன்னர், வளையலைத்தரித்த கையினால், நெய்கொண்டு மிக்க சுவையுடையனவற்றை அப்பாகத்தில் நிறைத்துச் சமைத்து வைத்தனர். உண்ணத்தக்க பெரிய மலைகள்போன்ற சோற்றையும் சமைத்து வைத்தனர்.

ஐயன் - ஆர்ய வென்னும் வடமொழி ஐயன் எனத்திரிந்து நின்றது. வணங்கப் படத்தக்கவன் என்பது பொருள். சித்தன் - கோரக்க சித்தர். இவர் நவசித்தர்களுள் ஒருவர். உறு - உரிச்சொல். 47

ஐயபோதுதத்தாத்திரியடைந்திடுமால்
வேயனிச்சையின்மேன்பலநெய்தினன்யோகி

காயமுற்பொறிகட்கடைதெறிப்பனகண்டு
வேயமாமுனித்தலைவனும்வெகுளியின்மிக்கான்

இ-ள். அவ்வாறாய சமையத்தில், தத்தாத் திரேய முனிவர், அடைந்து இடப்பட்டசோற்றில் இச்சை கொண்டவராய் விரும்பிய மேலான பலனையடைந்தனர், யோகியாகிய கோரக்க சித்தர்க்குச் சுடுகின்ற அக்கினிப்பொறிகள் கடைக்கண்ணினின்றும் வீசுவதைப்பார்த்து அங்கிருந்த பெரிய முனித்தலைவருங் கோபத்தின் மேற்பட்டார். 48

வெகுளிமிக்கவர் தம்முனிநாரதன்மேவித்
தகுபெருஞ்சித்தியுடையரேற்றடங்கிரிதோறுந்
தொகுவினோதங்கள்புரிகுதிரெனச்சொற்றவாற்றாற்
றிகழகந்தையிற்சுழலுநர்தமிற்சித்தனோர்நாள்.

இ-ள். கோபம் மிக்கவர் இடத்தில் நாரதமுனிவர் வந்து, தகுந்த பெரிய சித்தியுடையவர்களாயின், பெரிய மலைகள் தோறும் பலபலவியப்பைத்தரும் விளையாட்டைச் செய்திரென்று சொன்னபடியால், விளங்குகின்ற அகங்காரத்துட் சுழலுகின்றவர்களுக்குள் கோரக்க சித்தர் ஒருதினம். 49

சுத்தமாநதிமூலத்திற்றொல்பெருந்தடத்தின்
மொய்த்தநீரினோர்சேலெனமூழ்குதெறிந்து
மெய்த்தவத்துமாமுனிவரன்மீனெறிபறவை
யத்திறத்ததோருருக்கொடுகொத்தினனன்றே.

இ-ள். சுத்தமுடைய பெரிய யாற்றிற்கு மூதலாயுள்ள பழைய பெரிய தடாகத்தில், மிகுந்த நீரின்கண் ஓர் சேல் மீன்போல முழுகுதலை, உண்மையான தவத்தையுடைய, சிறந்த தத்தாத்திரி முனிவரும் மீன்கொத்திப் பறவை யென்னும் அத்தன்மையை யுடைய ஓர் வடிவத்தைக்கொண்டு கொத்தினர். 50



இனையரத்தலம்படிதலினிகலொரீஇமுன்னை
வினையின்கொட்பினாலகந்தைமீக்கொண்டனமென்று
நினையுமார்வத்தினருந்தவநினைப்பநேர்ந்தமல
னனையருக்கருள்வழங்கிநல்வரங்களுமளித்தான்.

இ-ள். இவர்கள் அந்தத் தலத்தினிடத்திலே பகையைநீக்கி, முன்னர்ச் செய்த தீவினையின் வலியினாலே அகங்காரத்தை மிகுதியாகக் கொண்டோ மென்று, நினைத்த அன்பினாலே அரிய தவத்தைச்செய்ய, பரமசிவன் வந்தருளி, அவ்விருவருக்கும் தமது கிருபையைக் கொடுத்து வரங்களையும் அளித்தருளினர். 51

அன்றருந்தவமுனியொடுமாறுகொண்டடைந்து
வென்றயோகியும்வினோதங்கள்புரிந்திடுகாலைச்
சென்றுமீனெனப்படிதலிற்றிகழ்மற்சதீர்த்த
மென்றுசொற்றிடப்பெற்றதுபெயர்சித்தனென்றும்.

இ-ள். அக்காலத்தில் அரிய தவத்தையுடைய தத்தாத்திரி முனிவருடன் பகைகொண்டு, வெற்றிகொண்ட சித்தனும் அதிசய விளையாட்டைச் செய்யுங் காலத்தில், தடாகத்துட்போய் மீனைப் பொருந்துதலால், விளங்குகின்ற மற்சதீர்த்தமென்னும் பெயரையும் சித்ததீர்த்த மென்னும் பெயரையும் பெற்றது. 52

யாவராயினுந்தினந்தினம்படிந்துளோரிழிந்த
பாவகாரியராயினும்படர்மருப்புவாவை
யூர்வர்தென்புலநகருறுவார்களோவுறார்மெய்த்
தேவதேவனற்சிவகதிசேருதறிண்ணம்.

இ-ள். எவர்களாயிருந்தாலும் நாடோறும் நாடோறும் மூழ்கினவர், இழிந்த பாவச் செய்கையை யுடையவராயினும், பரந்த கொம்புகளை யுடைய அயிராவத யானையை வாகனமாகச்செலுத்தும் இந்திரப் பட்டத்

தைப் பெறுவார்கள், மயன்து நகரத்தை யடைவார்களோ, அடையமாட்டார், உண்மைப் பொருளான தேவர்களுக்கு அதிபனான சிவனது கதியையுடைவது சத்தியம். 53

ஆரநீரொலித்தீர்த்தங்கள்பெருமைகளரைந்தாங்
கூரயிற்படைக்குமரவேளருணெறிகுறித்துச்
சேரர்கோன்பணிபுரிந்தவாசெப்புதுங்கேண்மி
னோருந்தவத்தீரெனவிசைத்தனன்சூதன்.

இ-ள். முத்துக்கள் பொருந்திய நீரையுடைய தீர்த்தங்களையும் அவற்றின் பெருமைகளையுங் கூறினும், கூரிய வேலாயுதத்தையுடைய கந்தக் கடவுளின் திருவருண் மார்க்கத்தை நினைத்து, சேராசன் திருப்பணியைச் செய்தவரலாற்றையுங் கூறுவோம். அழகிய அரியதவத்தையுடைய முனிவர்களே கேட்பீராகவென்று சூதமுனிவர் கூறினர்.

அறைந்தும் - தனித் தன்மைப் பன்மை வினைமுற்று. படை—படுத்ததற்குக் கருவியாயுள்ளது படுத்தல் ஈண்டு அழித்தல் குமரன்—மன்மதனது அழகையும் வென்றவன், பூமியில் மன்மதனைப்போல விளங்குவோன், அஞ்ஞானவிருளை யழிப்பவன் வேள—யாவராலும் விரும்பப்படுபவன். புரிந்தவாறு என்பது புரிந்தவாணைக் கடைக்குறைந்து நின்றது. கோன் ஈ இதன் கண், ன் - சாரியை. 54

தீர்த்தச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள்—918.

---

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

இருபத்துமூன்றாவது,

# சேரர்கோன் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

துடிக்கும்வரிச்சேலடையின்கட்டொகுவெம்
புலியாகுலிபடியப்
படிக்குண்மிடையுங்கலியிருளைப்பருகிப்
புகழ்வெண்ணிலவுதட்பக்
கடிக்கொன்றையுக்கூன்பிறைக்கொழுந்துமுடித்தோன்
கடிமுப்மதில்பொருநாட்
பிடித்தசிலையிற்சிலையெழுதும்பெருமான்
சேரர்பெருமானே.

இ-ள். துடிக்கின்ற வரிகளையுடைய மீனக்கொடியும், காட்டின்கண் இருக்கும் கொடிய புலிக்கொடியும் துன்பத்திற் பொருந்தவும், பூமிக்குள்ளே நெருங்கிய துன்பமென்னும் இருளையுண்டு கீர்த்தியாகிய வெள்ளிய நிலாவானது குளிரைச் செய்யவும், வாசனைபொருந்திய கொன்றைமாலையினையும் வளைந்த பிறைக்கண்ணியையும் தரித்தவராகிய சிவபெருமான், துன்பத்தைச் செய்த திரிபுரங்களையும் எரித்த காலத்திற் பிடித்த வில்லாகிய மேருமலையின்கண் விற்கொடியை யெழுதிய பெருமான்யாரெனில் சேராசனேயாம்.

பாண்டியனது கொடியாகியமீனக்கொடியும், சோழராசனது கொடியாகிய புலிக்கொடியும் வருந்தும்படி விற்கொடியை மேருமலையிலெழுதிய சேரன் என்பது கருத்து. 1

கற்றைச்சடையோன்கழற்காலலது
புனியாக்கதிர்முடியோன்
சொற்றக்கடனூற்கடலமுதமலது
சுவையாத்துணைச்செவியோன்
மற்றையோன்பொற்பொதுவினடமலது
காணாமலர்விழியோன்
முற்றுமவனதருச்சனையேயலது
முயலாமனமுடையோன்.

இ-ள். தொகுதியாகிய சடையையுடைய சிவபெருமானது ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடிகளையல்லாமல் வேறொன்றனையும் வணங்காத ஒளிகொண்ட கிரீடத்தையுடையவன், கேள்விச்சமுத்திரம், கல்விச்சமுத்திரம் என்னும் கடல்களிற்றோன்றிய அமுதமல்லாது வேறொன்றனையுஞ் சுவைத்தறியாத இருசெவிகளை யுடையவன், அச்சிவபெருமான் கனக சபையின்கண் செய்தருளுந் திருக்கூத்தையன்றி வேறொன்றனையுங் காணாததாமரை மலர்போன்ற கண்களை யுடையவன், முழுவது மப்பெருமானது பூசையன்றி வேறொன்றற்கும் முயற்சிசெய்யாத மனத்தையுடையவன். 2

ஆரமணியுமருளுவக்குமணிய
நீறுமணிமார்பன்
பாரினடுவுபயின்றாலும்பரமோ
ரைந்தும்பயினுனவன்



காரிநிதிபெய்யினுங்கடவுடாளிற்
கடிவீபொழிகையன்
போரில்வலியனாயினும்பல்லுயிர்கட்
கிரக்கம்புரியிதயன்.

இ-ள். மாலைகளையணிந்த சிவபெருமான் விரும்பிய உருத்திராக்கத்தையும் விபூதியையுந் தரித்த அழகிய மார்பினையுடையவன், பூமியின்கண் நடுவிடத்தைப் பொருந்தினாலும் பஞ்சாக்கரத்தைச் செபிக்கும் நாவினையுடையவன், காரி என்னும் வள்ளலது திரவியத்தைக் கொடுத்தாலும் சிவ்பெருமானது திருவடிகளில் மணமுள்ள பூக்களைத் தூவுகின்ற கையையுடையவன், போர்த்தொழிலில் வல்லவனாயிருந்தாலும் பல உயிர்களுக்கும் இரக்கத்தைக் காட்டுகின்ற மனத்தை யுடையவன். 3

உற்றவிடத்தாருயிரொடும்பற்றின்றி
முனையும்படைக்குழுவும்
பெற்றகூறைந்தினிற்பிரித்துண்குடியும்
பிரியாப்பசுங்குழுவும்
பற்றுமறிவுதொடரமைச்சுமுயிர்போற்
பரிவும்புரிநண்பு
மற்றும்பிறபல்லுறுப்பரனுமுடையோன்
மலைநாட்டுடையோனே.

இ-ள். துன்பம் வந்தவிடத்தில் அரிய உயிரோடும் பற்றில்லாது, பகைவருடன் போர்புரியும் சேனைக் கூட்டங்களும், தாம் அடைந்த பொருள்களை யைந்தாகப் பகுத்துண்கின்ற குடிகளும், தன்னைவிட்டு நீங்காத படைக்கூட்டங்களும், அன்பும் அறிவும் வைத்துள்ள மந்திரிமார்களும், தன்னுயிர்போலப் பிறவுயிர்களிடத்து அன்புடையாரையும்,

விரும்புகின்ற கட்டும், ஏனையபிறபலவகை யுறுப்புக்களும் ஆறுமுடைய வன் மலைநாட்டையுடைய சேரராசனுக்கும்

அரசனது செல்வங்கள் எல்லாவற்றுள்ளுந் தலையாய செல்வம் சேனையாகலின் அதனை முதற்கண் விதந்து கூறினர். அது "உறுப்பமைந்தூறஞ்சா வெல்படைவேந்தன்-வெறுக்கையு ளெல்லாந்தலை" என்ற திருக்குறளா னுணர்க.

அப்படைதான் மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படையென அறுவகைத்து. அவற்றுள் மூலப்படையே எல்லாப் படைகளுள்ளுஞ் சிறந்தது, அதற்கு அரசன் வேண்டியன கொடுத்துவைத்தல் வேண்டும். 2

வெண்பாமாலை-தும்பைப் படலம்.

வெல்பொறியுநாடும் விழுபொருளுந்தண்ணடையுங்
கொல்களிறுமாவுங் கொடுத்தளித்தான் - பல்புரவி
நன்மணித்திண்டேர் நயவார்தலைபனிப்பப்
பன்மணிப் பூணான் படைக்கு.

படைகள் யானையாலும், இரதத்தாலும், குதிரைகளாலும், காலாட்களாலும் நிறைந்தனவாகும்.

பிதிரர், தேவர், அதிதிகள், சுற்றத்தார், தான் என்னும் ஐவர்க்கும் வரும்பொருளை யைந்துகூறாக்க விதித்தலின் "பெற்ற கூறைந்தினிற் பிரித்தூண் குடியும்" என்றார். அதனைத் "தென்புலத்தார்". என்னுந் திருக்குறளானுணர்க.

"பிரியாப் பசுங்குழு" என்றது ஐம்பெருங் குழுவையும், எண் வகைப் போராயங்களையுமாம். அவை யாசற் கின்றியமையா தென்பதற்கு மேற்கோள்.

சிலப்பதிகாரம் ஐந்தாவது காதை.

ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமு
மரசகுமாரரும் பரத குமாரரும்



கவர்பரிப் புரவியர் களிற்றின் றொகுதிய
ரிவர்பரித் தேரின ரியைந்தொருங் கீண்டி.

ஐம்பெருங்குழுவாவன:—

அமைச்சர் புரோகிதர் சேனா பதியர்
தவாத்தொழிற் றூதுவர் சாரண ரென்றிவர்
பார்த்திபர்க் கைம்பெருங் குழுவெனப் படுமே.

(திவாகரம் - 163)

எண்பேராயமாவன:—

கரணத் தியலவர் கரும விதிகள்
கனகச் சுற்றங் கடைகாப் பாளர்
நகர மாந்தர் நளிபடைத் தலைவர்
யானை வீர ரிவுளி மறவர்
இனையவ ரெண்பே ராய மென்ப.

(திவாகரம் - 164)

தச்சன், கொல்லன், அரசன் என்பனவிகுதிகெட்டு, தச்சு, கொல், அரசு எனநின்றாற்போல அமைச்சன் என்பதும் அமைச்சு என நின்றது. அரணாவன—மலையரண், காட்டரண், நீரரண், நிலவரண் என்பன. - 4

உள்ளத்திறைவனடம்புரிவானுவகைப்
புணரிபடிந்தனிக
வெள்ளக்கடலுமிகுநெடுந்தேர்மினிர்பொற்
கிரியுங்கிலாழியுமிழ்
கிள்ளைக்கிளையும்பிறையெனக்கிகழ்கிளர்கிம்
புரிவெண்கோட்டொருத்தற்
காளைக்குவடும்புடை நெருங்கக்குணபா
லடைந்தரின்குடவட்ன்.

இ-ள். இருதய கமலத்தினிடத்திலே சிவபெருமான் திருக்கூத் தாடுதலாலே சேர அரசன் மகிழ்ச்சியாகிய சமுத்திரத்தினிடத்திலே படிந்து, சேனுவெள்ளச் சமுத்திரங்களும், மிக்கநீண்ட இரதங்களாகிய பொன்மலைகளும், வாய்மதத்தைப் பொழிகின்ற குதிரைக்கூட்டங்களும், பிறைச் சந்திரனைப்போல நிறம் விளங்குகின்ற இப்புரிப்பூ னணிந்த வெள்ளிய கொம்புகளையுடைய யானைகளாகிய மலைக்கூட்டங்களும் பக் கத்தில் நெருங்கிவரக் கிழக்குத்திசையை யடைந்தான். 5

ஏரிமணிமாமுழவதிரமுரிவெண்
டிரைத்திப்புனனாட்டி
லாரிளாறுந்தாரபயனெதிர
னவளாயோர்புடைபோத
வேரிமலர்த்தண்பொழிற்றில்லைமிளிர்மா
மணிப்பொற்பொதுவினருள்
வாரிபுரிநாடகவமுதைக்கண்ணான்
மூகேந்துமகிழ்ந்துண்டான்.

இ-ள். எருத்தின் றோலாற் கட்டப்பட்ட அழகிய மயிர்க்கண் முரசா ஒலிக்க, மடங்குகின்ற வெள்ளிய திரைகளையுடைய இனிசோழ நாட்டிலே, ஆத்திமாலையைத் தரித்த சோழராசன் எதிர்வந்து அளவளாவி யோர்பக்கத்தில் வர, தேன்கொண்ட புட்பங்களையுடைய குளிர்ந்த சோலைகளாற் சூழப்பட்ட சிதம்பரத்தின்கண் விளங்கும் அழகிய கனகசபையின் கண் அருட்கடலாகிய சிவபெருமான் செய்தருளுந் திருக்கூத்தாகிய அமிர்தத்தைக் கண்களினாற் பருகியுண்டு மகிழ்ந்தான்.

மயிர்க்கண் முரசம் போரசர்க்குரியது அதுபற்றியே "உயிர்ப்பலி யுண்ணு முருமுக்குரன் முழக்கத்து மயிர்க்கண் முரசொடுவான் பலி யூட்டி" என்றார்பிறவும். அஃதாவது புலியுடன் போர்புரிந்து அதனைக்



கொன்று தின்று சிலைத்துக் கொம்பினிடத் தேமண்கொண்ட எருது இறந்தகாலத்தில், அதன்றோலினை மயிர் சீவாமற் போர்த்த முரசாம். அதனை.

சீவகசிந்தாமணி - முத்தியிலம்பகத்தில்,

புனைமருப் பழுந்தக் குத்திப்புலியொடு
பொருது வென்ற
கனைகுர லுருமுச் சீற்றக் கதழ்விடை
யுரிவை போர்த்த
துனைகுரன் முரசத் தானைத் தோன்றலைத்
தம்பியென்றான். என்றதனாற் காண்க.

அபயன்—பயமில்லாதவன். அளவளாவுதல்—கலத்தல் அது "அட் டாலும் பால்சுவையிற் குன்றாதளவளாய்" எனவருதலா லறிக. தில்லை- ஓர்மரம் அது தானியாகு பெயராய் அதனையுடைய தலத்திற் காயிற்று இது உருவகஅலங்காரம். 6

அந்நாட்டுளதொல்பதிமுழுதும்வழுத்தி
யாய்மைந்தமிழ்வழங்குந்
தென்னாட்டடைவாய்வேம்பினறுங்கண்ணி
யோன்சென்றெதிர்கொளப்போய்க்
கொன்னார்கணிச்சிப்படையோன்பொற்கோயி
லுட்கைகூப்பிமணிப்
பொன்னார்மவுலியரசரொடும்புக்கான்
றிருவாலவாய்க்குடியில்.

இ-ள். அந்தச் சோழநாட்டின்கணுள்ள புராதன தலங்கள் எல்லா வற்றையும் வணங்கி, செந்தமிழ்வழங்கும் பாண்டிநாட்டைச் சேர்ந்த போது, கறிய வேப்பம்பூ மாலையைத்தரித்த பாண்டியன் எதிர்கொண்டு உபசரிக்கச்சென்று, பெருமை நிறைந்த மழுவாயுதத்தையுடைய பரம

சிவனது அழகிய கோயிலுட்சென்று கைகுவித்து வணங்கி, இரத்தினங்கள் பதித்த பொன்னாற் செய்யப்பட்ட கிரீடத்தையுடைய அரசர்களோடும் சென்று பழநித்தலத்தை யடைந்தான். 7

கலிநிலைத்துறை.

மறைபயிலங்கிராவுமாசிலத்திரியுஞானத்
துறைபயில்வாமதேவமுனியுந்தோடுயர்பூம்போந்தி
னறைபயிலிறைவனாதிநிருபர்பாலணுகிவ்வே
லிறைபயில்பழநிமுதூர்ச்சரிதையாவையுமிசைத்தார்.

இ-ள். வேதத்தை யறிந்த அங்கிராமுனிவரும், குற்றமில்லாத அத்திரிமுனிவரும், ஞானமார்க்கத்தி லொழுகும் வாமதேவமுனிவரும், இதழ்களாலுயர்ந்த பனம்பூமாலையைத் தரித்த சேரராசன் முதலாகிய அரசரிடத்தை யடைந்து, கூரிய வேலாயுதத்திற்குத் தலைவராகிய குமாரக்கடவுள் எழுந்தருளி யிருக்கின்ற கோயிலையுடைய பழைய பழநித் தலத்தின் சரித்திரங்களெல்லாவற்றையுஞ் சொற்றனர்.

தொன்மைசால்கதைகேட்டசுடர்மணிமவுலிவேந்தர்
பொன்மலர்மகளுந்தேனும்புலியின்பைம்புரவியோனு
நன்மைசால்பதியும்வில்வவனமுநாண்மலர்ப்பூங்கோங்கின்
றன்மைகூர்வனமும்பூசித்துறைந்தனர்தவத்தின்மிக்கார்.

இ-ள். பழமைமிக்க சரித்திரத்தைக் கேட்ட ஒளியுடைய இரத்தின கிரீடத்தை யணிந்த அரசர்கள், தாமரை மலராசனியாகிய இலக்குமியும் காமதேனுவும் சூரியனும் பூசித்த சிவகிரியையும், வில்வாரணியத்தையும், அன்றலர்ந்த புட்பங்களையுடைய கோங்கவனத்தையும் வழிபட்டுத் தவத்தின் மேம்பட்டவரா யிருந்தனர். 9

காவலர்தமிலார்த்தார்ப்பூங்கண்ணியோன்கன்னிகார
மேவுதொல்வனத்தடத்தோருருத்திரதிசையின்மேலோ



ரோவறவுவகைமீக்கொளொருகுறிநிறுவியோர்ந்து
பூவலர்பொழிந்துபுந்திமுகிழ்ப்பவர்ச்சனைபுரிந்தான்.

இ-ள். அரசர்களுக்குள் ஆத்திமாலையைத் தரித்த சோழராசன் கன்னிகார வனத்திலேயுள்ள தடாகத்திற்கு வடகீழ்த்திசையில் தேவர்களெல்லாம் ஒழிதலில்லாத மகிழ்வைக் கொள்ளுதற்குரிய ஒரு சிவலிங்கத்தைத் தாபித்து, சிவாகமவிதியை யறிந்து புட்பங்களைத்தூவி மனங்குவியும்படி அருச்சனை செய்தனன். 10

மைம்மணிக்கண்டன்வைகும்வளம்பதிபிறவும்போற்றிக்
கைம்மணிநெடுவேலண்ணல்கடிநகர்தனின்மீளப்
பைம்மணிச்சேடனுச்சிபரித்தபார்முழுதுந்தாங்கு
மொய்ம்மணிமவுலிமன்னர்மூவருமேவலுற்றார்.

இ-ள். இந்திரநீல ரத்தினம்போன்ற திருக்கண்டத்தை யுடைய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கின்ற தலங்களெல்லாவற்றையும் துதித்து, கையிடத்துள்ள அழகிய வேலாயுதத்தையுடைய குமாரக்கடவுள் எழுந்தருளி யிருக்கின்ற பழநித்தலத்தின்கண் மீளவும்வந்து, படத்தில் நிறைந்த இரத்தினங்களையுடைய ஆதிசேடனது தலையிற்றாங்கிய உலகத்தை யாளும் நெருங்கிய இரத்தினங்களையுடைய கிரீடத்தை யணிந்த தமிழ்நாட்டு மூவேந்தரும் அவ்விடத்தில் வசித்தனர். 11

மதிதவழ்கந்தநீங்கிமணிமுடியிரண்டும்பாரிற்
பொதியமாமுனிவன்றந்தவாறும்பொற்பொடுமிடும்பன்
பதியிடைக்கொணர்ந்தவாறும்பாண்டியன்பசுந்தார்க்கிள்ளி
யதிர்கழலுதியன்கேட்பவங்கிராமுனிவன்சொற்றான்.

இ-ள். சந்திரன் தவழுகின்ற கந்தமலையை விட்டுநீங்கி, அழகிய சிகரங்கள் இரண்டும் பூமியின்கண் அகத்திய முனிவர்கொண்டு வந்த

வரலாற்றையும், அழகுடனே இடும்பாசுரன் அத்தலத்தினிடத்திலே கொண்டுவந்த வரலாற்றையும் பாண்டியன், பசிய மாலையையணிந்த சோழன், ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்த சேரன் என்னும் வேந்தர்கள் கேட்கும்படி அங்கிராமுனிவர் கூறினர். 12

விளம்பியமாற்றங்கேளாவேந்தரிற்போந்தின்றாரோன்
வளம்பெறுவரையினாற்றல்வகுத்தெமக்கருணீயென்ன
வளம்புரிவெய்தியோதற்கெளியதோபரையுருபந்
தளம்பொலிகமலப்புத்தேள்சாற்றருஞ்சத்திவெற்பு.

இ-ள். அங்கிராமுனிவர் கூறிய சொற்களைக்கேட்டு, பனம்பூமாலையையுடைய சேரவாசன், வளப்பத்தைக்கொண்ட மலைகளின் பெருமையை விரித்து எமக்கு அருளிச்செய்வீராக வென்றுகூற, மனவன்புற்று, அவற்றின் மகிமைகளை யெல்லாஞ் சொல்லுதற் கெளியதாகுமோ? இதழ்கள் பொலிந்த தாமரை மலரின்மேல் வசிக்கும் சத்திமலையானது பராசத்தி வடிவமாகும். 13

வேதன்மாலரனேயீசன்சதாசிவனொடுநாத
மோதருஞ்சத்திரூபஞ்சிவரூபமொடுங்குந்தானம்
பேதமினிலயஞ்சோதிபிறங்குதொல்குருவின்ரூப
மாகவிப்பன்னிரண்டாயமாசிவகிரியின்ரூபம்.

இ-ள். பிரமன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னும் பஞ்சமூர்த்திகளுடன், நாதமும், சொல்லுதற்கரிய சத்திவடிவமும், சிவவடிவமும், இலயிக்கின்ற இடமும், வேறுபாடில்லாத மந்திர வடிவும்; ஒளிவடிவமும்; குருவுருவமும் ஆகிய பன்னிரண்டாக விளங்குஞ் சிவகிரியின் வடிவமாகும். 14

செழுமலர்ப்போந்தைமொய்ம்பசிவசிருங்கத்தினாற்றல்
கெழுமியவரலாறெம்மாற்கிளர்த்துதற்கெளிதோகேள்வி



யெழுதிடாமறைகளின்னமிசைக்கரிதெனவிண்வாக்கான்
மொழிதருகுருவுருபமுடியின்மேன்முருகன்வைகும்.

இ-ள். செழிய பனம்பூ மாலையைத்தரித்த தோளையுடைய சேர மன்னனே! சிவமலையின் பெருமையைக் கொண்ட வரலாறுகளை, எம் மாலே சொல்லுதற் கெளிதாகுமோ? கேள்வியி லறியப்படும் எழுதப் படாத வேதங்களும் இன்னமும் சொல்லுதற்கரிது, அசரீரிவாக்கினாலே சொல்லப்பட்ட குருவடிவாகிய அதன் முடியின்மீது முருகக்கடவுள் எழுந்தருளியிருப்பார். 15

ஏலவின்னணமொன்றோதுமெழின்முனிவனிச்சைபெற்றுத்
தாலமாலிகைதாழ்மார்பன் சிவகிரிச்சாரல்சார்ந்து
மூலமுமுடிவுமுற்றுமொழிதருதானந்தோறு
மேலவருவகைபொங்கவந்தனைபுரியும்வேலை.

இ-ள். பொருந்தும்படி யிவ்வாறு அங்கிராமுனிவர் மகிமையைச் சொல்லுங்காலத்தில், அம்முனிவரது விருப்பத்தைப் பெற்றுக்கொண்டு, பனம்பூமாலை தூங்குகின்ற மார்பினையுடைய சேரன், சிவகிரிச்சாரலையடைந்து, முதலும்முடிவும் ஆகிய எல்லாவிடமுமாகச் சொல்லப்பட்ட இடங்கள்தோறும் தேவர்களு மகிழ்ச்சி [illegible] வணக்கத்தைச் செய்த காலத்தில். 16

அறுசீரடி[illegible]விருத்தம்.

மூசவண்டிமிர்ந்துதேனி[illegible]ன்மூழ்குபொய்ப்பொழில்
வீசுதென்றலஞ்சிவாசலச்சி[illegible]கம்மிசைத்
தேசிலங்குசெய்யவேள்சிறந்[illegible]சிமதத்தின்
மாசில்காட்சிசேரர்கோன்மகிழ்ந்[illegible]

சென்னை - 600 003

இ-ள், மொய்க்கின்ற வண்டுகள் ஒலித்துத் தேன்கூடுகளில் மூழ்கின்ற நெருங்கிய சோலைகளையும், வீசுகின்ற தென்றற்காற்றையும் உடைய

சிவகிரியினிடத்து, ஒளி விளங்குகின்ற அழகிய கந்தக்கடவுள் சிறந்த மேற்குத் திசையின்கண் குற்றமில்லாத காட்சியைச் சேரராசன் மகிழ்ந்து துதிக்க லுழங்கினர். 17

போற்றியைங்கைதந்தகந்தபோற்றிகார்த்திகேயனே
போற்றிகங்கைமைந்தபைந்தளிர்க்கைகௌரிபுதல்வனே
போற்றிபூதரம்பொடித்தபூமணிச்செவ்வேலனே
போற்றிதென்சிவாசலேசபுனிதபோற்றிபோற்றியே.

இ-ள். எமது பிதாவாகிய சிவபெருமான் பெற்ற கந்தக்கடவுளே வந்தனம், கார்த்திகையின் புத்திரரே வந்தனம், கங்கையின் புத்திரரே வந்தனம், பசுமையாகிய தளிர்போன்ற கையையுடைய உமாகுமாரரே வந்தனம், மலைகளைப் பொடியாகச்செய்த அழகிய சிவந்த வேலாயுதத்தை யுடையவரே வந்தனம், தென்றிசைக்கணுள்ள சிவகிரிக்கண் எழுந்தருளி யிருக்கின்றவரே வந்தனம், பரிசுத்தமுடையவரே வந்தனம். 18

என்றுகண்கணீர்சொரிந்திறைஞ்சிவீழ்ந்தெழுந்துமு
னின்றுவையமுய்யவையநீள்சிவச்சிருங்கமேன்
மின்றயங்குசேதிமம்விரைந்திழைப்பவருளென
வன்றுசேரனுக்கருட்கணருளிவிண்மறைந்தனன்.

இ-ள். என்று கண்களினின்றும் ஆனந்தக்கண்ணீர் பொழிந்து வீழ்ந்து வணங்கியெழுந்து, அவர்முன் நின்று, ஐயனே! உலகத்தவர் உய்யும்படி நீண்ட சிவகிரியின்மீது, ஒளிவிளங்கும் கோயில் விரைவற் றுச் செய்தற்குக் கிருபைபுரிதல் வேண்டுமென்று பிரார்த்திக்க, அப் போது சேரராசனுக்குத் திருவருணோக்கஞ் செய்து ஆகாயத்தின் மறைந் தருளினர். 19

என்னையாளுமெம்பிரானெனக்குநன்களித்திடு
மந்நிலைக்கணாலயங்குயிற்றுவோமென்றன்புகூர்



தன்னுளங்களிப்புமிக்கிருந்ததாலமாலிகை
மன்னவன்றெரிக்குமெல்லைமயனும்வந்துதோன்றினன்.

இ-ள். என்னை யடிமையாகவுடைய கந்தவேள், எளியனேனுக்குக் காட்சியளித்த அந்த இடத்தின்கண் ஆலயத்தைச் செய்வோமென்று அன்புமிக்க தனதுமனம் களிப்பானது மலிருந்த பனம்பூமாலையைத் தரித்த அரசன் தெரிக்குஞ் சமயத்தில் மயன் என்பானும் வந்தனன். 20

வானகந்தணந்தடைந்தமயனைவாணவன்றழீஇ
நானருந்தவம்புரிந்தநன்னர்நீபுகுந்தனை
தேனலர்ந்தசோலைசூழ்சிவாசலத்தின்மேற்செவ்வேற்
கோனவற்குமந்திரங்குயிற்றுகென்றுகூறினான்.

இ-ள். ஆகாயத்தினின்றும் வந்துசேர்ந்த தேவத் தச்சனை, சேர ராசன்தழுவி, நான் அரியதவத்தைச் செய்த நன்மையினாலே நீவந்து சேர்ந்தனை, தேன்பாய்ந்த சோலைகளாற் சூழப்பட்ட சிவகிரியின்மீது, சிவந்த வேலாயுதத்தையுடைய குமாரக் கடவுளுக்கு ஆலயத்தைச் செய்க வென்று சொன்னான். 21

உதியர்கோனுரைத்தவாறுமொள்ளிலைச்செவ்வேலினோன்
முதிர்பசும்பொன்மேனிகாட்டிமுன்மறைந்துநின்றது
மதியினாலுதித்துணர்ந்துவாயில்பச்சிமத்ததாய்
விதியினால்விழைத்தனன்விமானமொன்றுமேலையோன்.

இ-ள். சேரராசன் சொல்லியவற்றையும், ஒளி பொருந்திய இலைத் தொழின்முற்றிய சிவந்த வேலாயுதத்தையுடைய குமாரக்கடவுள் மாற் றுயர்ந்த பசிய பொன்போலும் தமது வடிவத்தைக் காட்டிமுன் மறைந்து நின்றதையும், தன்னறிவினால் ஆராய்ந்து, தேவத்தச்சன் ஆனவன் மேற்கு வாயிலுடையதாக, சிற்பவிதிப்படி ஒருவிமான மொன்றைச் செய்தனன். 22

சோர்கோனியற்றுமா தவச்செழுந்திரட்சியோ
வாரணத்தினந்தமோவெம்மண்ணலன்பர்சிந்தையோ
தாரகத்தினுட்பொருட்டயங்கியோங்குகுடிலையின்
பூரணத்தகோமயன்புனைந்ததந்தகோயிலே.

இ-ள். சோராசன்செய்த பெரியதவத்தினது செழியகூட்டமோ? வேதத்தின் முடிபோ? எமதுபெருமையிற் சிறந்த குமாரக்கடவுளின் அன்பர்களது உள்ளமோ? பிரணவத்தினது உண்மைப்பொருள் விளங்கப் பெற்றோங்கிய சுத்தமாயையின் நிறைவோ? தேவத்தச்சன் செய்த அந்தக்கோயிலானது. 23

கண்டகண்களோடுளங்களுங்கவர்ந்துகொண்டுமூ
தண்டரண்டகூடமும்பரந்துபாரடங்கலுங்
கொண்டிலங்குசோதிவீசுகோயிலுட்செவ்வேற்செவேள்
பண்டைமாமறைக்குணின்றபரிசுகாட்டிநின்றனன்.

இ-ள். பார்த்த விழிகளுடன் மனமும் ஆகிய இவற்றைக்கொள்ளை கொண்டு, பழைய அண்டங்களினும் வெளியண்டங்களினும் பரவி, பூமி முழுவதையும் உள்ளடக்கிப் பிரகாசிக்கின்ற ஒளியானது வீசுகின்ற கோயிலினுள்ளே சிவந்த வேலாயுதத்தையுடைய குமாரக்கடவுள், பழமையாகிய வேதத்திற்குள்ளே நின்ற கோலத்தைக்காட்டி நின்றனர். 24

பஞ்சதுந்துபிக்குழாமதிர்ந்தபைந்தருக்களு
மஞ்சிறைச்சுரும்புறுவிண்ணவர்கண்மாரிசிந்தினர்,
விஞ்சுமஞ்சொலித்தெனத்தொல்வேதவோதைவிம்மின
வஞ்சகங்கடிந்துளோர்கைவனசமுச்சிகூம்பின.

இ-ள். ஐந்து தேவதுந்துபிகளுமொலித்தன, பசியதருக்கள் யாவும் அசைந்தன, அழகிய சிறகுகளையுடைய வண்டுகள் வீழாத அத்தருக்களினிழலிலே வசிக்குந் தேவர்கள் கண்மழை பொழிந்தனர், மிக்க ஐந்து



வாத்தியங்களும் ஒன்றுசேர்ந்து முழங்கினாற்போல, வேதவொலி மிக்கன, வஞ்சகத்தைநீக்கிய அடியவருடைய கரங்கள் ஆகிய தாமரைமலர்கள் உச்சியிற் கூம்பின. 25

மீனுருக்குறுங்கழுத்தகூர்மநாரசிங்கமைக்
கோலமோடுவாமனங்குலாவிராமர்மூவர்நீர்
நீலமாலெனத்திகழ்ந்துநின்றுகற்கிவடிவுதான்
மேலுநிக்குமாயனேத்தெடுத்தொர்சார்விளங்கவே.

இ-ள், மீன் உருக்கிச் செய்யப்பட்ட கழுத்தையுடைய ஆமை, நரசிங்கம், கரிய பன்றியுடன், வாமனம், விளங்காநின்ற தசரதராமன் மற்றைய பலராமன் பரசுராமன் நீலநிறத்தையுடைய கண்ணன் என்னும் ஒன்பதுவடிவங்களையுங் கொண்டு நின்று, இனிமேல் குதிரை வடிவத்தைக் கொள்ளும் காரணமூர்த்தி துதிகூறி யொருபக்கத்தில் விளங்கவும்.

தோடவிழ்ந்ததாமரைச்சுரும்பினஞ்சுலாயதோ
டாடகப்பொகுட்டுவட்டவணையில்வைகுமந்தணன்
மாடணைந்துமாமணிப்பொன்மவுலிதாழ்த்தியேபராய்
நாடருந்தொல்வேதநான்குநன்னரின்னவிற்றவே.

இ-ள். இதழ்கள்விரிந்த தாமரை மலரின்கண், வண்டுக் கூட்டங்கள் சுற்றியுள்ள பொன்மயமான கொட்டையாகிய வட்டமுள்ள ஆசனத்தின்மீது வீற்றிருக்கின்ற பிரமன், பக்கத்திற் சேர்ந்து சிறந்த பொன்னுற் செய்யப்பட்ட கிரீடத்தைத் தாழ்த்தித் துதித்து, அறிதற்கரிய பழமையாகிய நான்குவேதங்களையும் நன்மையுடன் அத்தியயனஞ் செய்யவும். 27

மருவுநான்மருப்பும்மதத்தவெண்பகட்டினோன்
கரியமேனிமுற்றுறக்கவின்படைத்தகண்களாற்,

றெரியநேர்க்கிறுபுரத்தசெய்யசிரடிக்கணல்
வரிகொள்பாரிசாதமூரமலர்க்குழாநிறைக்கவே.

இ-ள். பொருந்திய நான்கு கொம்புகளையும் மூன்று மதங்களையும் உடைய வெள்ளையானை வாகனத்தனாகிய இந்திரன், கருநிறமுண்டாய மேனியின்கணுள்ள அழகுபெற்ற கண்களினாலே, அறியும்படி பார்த்து சிலம்புகளையணிந்த சிவந்ததிருவடிகளிலே, சிறந்தவரிகளையுடைய பாரிசாத புட்பத்தொகுதிகளை நிறைக்கவும். 28

ஏனையோர்கடத்தமேவலிற்றிளைப்பவெம்பிரான்
றானைவாணர்மகுடகோடிதாணிதாழவேழிசைத்
தேனைவீணைவாணர்செஞ்செவிககருத்தவானெரீ
மானைமீனையோட்டும்வேல்வடிக்கணார்நடிக்கவே.

இ-ள். மற்றையோர்கள் தங்கள் தங்களுடைய பணிவிடைகளில் இருப்பவும், எமதுகடவுளாகிய குகனது சேனைவீரர்களது கிரீடபந்திகள் பூமியின்கண் வணங்கவும், எழிசையாகிய தேனை வீணையில்வல்ல கந்தருவர்கள் செவ்வியகாதிற்கு ஊட்டவும், மானையும் மீனையும் ஓட்டவல்ல, வேலாயுதம்போன்ற அழகியகண்களையுடைய தேவப்பெண்கள் ஆகாயத்தைவிட்டு இறங்கிவந்து நடனஞ்செய்யவும். 29

விண்ணுளாரினெண்டிசைக்கண்மேயினாரின்மேதினிக்
கண்ணுளாரின்மாசுணக்கணங்களிற்கணக்கிலா
வெண்ணுளாரின்வீரவாகுவின்கையிற்பிரம்படிப்
புண்ணுளார்களாய்மிடைந்துவந்துவந்துபோற்றவே.

இ-ள். மேலுலகத்துள்ளவர்களுள்ளும், எட்டுத் திக்குகளினும் பொருந்திய இந்திரன் முதலாயினோருள்ளும், பூமியின்கண் வசிப்பவர்களுள்ளும், நாகர்கூட்டத் தலைவர்களுள்ளும், மதிக்கப்படாத அளவில்



லாத கணத்தவர்களுள்ளும், அளவிலார் வீரவாகு தேவரது கையிற்றரித்த பிரம்புகொண்டு அடிபட்டவர்களாய் நெருங்கிவந்து வந்து துதிக்கவும். 30

போற்றினோர்க்கும்பூசைதான்புரிந்துளோர்க்கும்பொங்குசீர்
சாற்றினோர்க்குமாறெழுத்தகந்தரித்துளோர்க்கும்வெண்
ணீற்றினோர்க்குநெஞ்சுளேநினைந்துளோர்க்குநீபனோன்
பாற்றினோர்க்குநோக்கருள்சுரந்தளிக்குமேலவையில்

இ-ள். துதித்தவர்களுக்கும், பூசையைச் செய்தவர்க்கும், மிக்கசிறப்புகளை யெடுத்துச் சொன்னவர்க்கும், சடக்கமந்திரத்தை மனத்தின்கண் நிறுத்தித் தியானித்தவர்களுக்கும், வெள்ளிய திருநீற்றைத் தரித்தவர்களுக்கும், கடப்பமாலையையணிந்த கந்தக்கடவுளானவர் அவத்தைச் செய்தவர்க்குந் திருநோக்கஞ் செய்து கிருபைசுரந்து வழங்குங்காலத்தில். 31

கலிநிலைத்துறை.

தாதைவெண்ணிலாத்திங்கட்சூடினோனெனத்தாறு
மர்தவஞ்செறிசேயொளிப்பரிதிகளனந்த
மீதொறுங்குரவணிந்தனவெயில்விரிசெழும்பொற்
சீதமாமணிநிழலுமிழ்மவுலிமேற்றிகழ.

இ-ள். தந்தையாராகிய பரமசிவன் வெள்ளிய சந்திரிகையை யுடைய பிறையைத் தாமுந்தரித்தவரைப்போலவும், பெரிய தவம் மிகுந்த சிவந்த ஒளியையுடைய அளவில்லாத சூரியர்கள் தம் உடம்புகடோறும் குராமாலையைத் தரித்தாற் போலவும், ஒளிவிரிந்த பொன்னாலாகிய, குளிர்ந்த, அழகிய இரத்தினங்கள் கிரணத்தைக் கான்றும் கிரீடங்கள் சிரமீது விளங்கவும்.

பெற்றதந்தைபோற்பிறங்கழல்விழியுமைந்நீல
மூற்றகண்டமுமிவர்க்குமுண்டோவெனக்கோதி

னுற்றநெற்றியிற்சுடர்மணிச்சுட்டியுங்கழுத்தின்
மற்றிழைத்தகோமளக்கட்டுவடமுமேவாய்ப்ப.

இ-ள். தம்மையீன்ற பிதாவைப்போல, விளங்குகின்ற அக்கினிக் கண்ணும், மேகத்தின் கரியநிறமுள்ள திருக்கண்டமும், இவர்க்கு முன்னேதோவென்றுசொல்ல, குற்றமில்லாத நல்லிலக்கணம் பொருந்திய நெற்றியினிடத்து, ஒளிகொண்ட இரத்தினச் சுட்டியும், திருக்கண்டத்தில், இரத்தினமிழைத்துச் செய்யப்பட்ட நீலரத்தினவடமும் பொருந்தி யழகு செய்யவும். 33

பார்த்தகண்களும்பரசினோரிதயமும்பார்க்குங்
கூர்த்தகட்பெருங்கடலருட்டரங்கநீர்கொழிப்பச்
சீர்த்தவாண்முகக்கதிர்நிலாமுழுத்தவெண்டிங்கள்
வார்த்தைமாமறைவாய்ச்சிறுநகையமுதொழுக.

இ-ள். தரிசித்த விழிகளும், துதித்தவர்களுடைய மனமும், காண்கின்ற ஒளிமிக்கதிருக்கண்களினின்றும் பெருமைகொண்ட அருட்சமுத்திரத்தே திரைகளாகிய நீர் ஊறவும், சிறப்புடைய ஒளிபொருந்திய முகமாகிய சந்திரிகைபொருந்திய பூரணசந்திர னிடத்துள்ள, பெரிய வேத வசனங்களை வசனிக்கின்ற திருவாயினின்றும் குறுமுறுவலாய அமிர்தம் ஒழுகவும், 34

முதுமறைக்கடலமுதினைமுகந்துண்டுதேக்கி
யெதிரெடுத்தனமான்மதந்தவழிணைச்செவியிற்
பதுமராகமும்விசும்புற்பசும்பொனும்பழுத்துக்
கதிரமிடைந்தபூங்கொடுங்குழைகளினெடுங்கிடப்ப.

இ-ள். பழமையாகிய வேதமென்னுஞ் சமுத்திரத்திற் றோன்றிய அமிர்தத்தை மொண்டுபருகி நிறைத்துத்தேக்கெடுத்தாற்போல, கத்தூரி பொருந்திய இருகாதுகளினும் பதுமராகமும், மாற்றுயர்ந்த பசியபொன்



னும் முதிர்ந்து ஒளிமிக்க பொலிவாகிய வளைந்த குண்டலங்கள் அழகுடனே கிடப்பவும். 35

பச்சுருப்பரையருத்துபால்பவளவாய்சிந்தி
வச்சிரத்திருமார்பிடைப்பரந்தனமணித்தார்
முச்சகந்திகழ்முத்தவாணிலவுமிழ்குழித்தண்
செச்சையுங்கமழ்செச்சையுஞ்சிறுவெயில்விரிப்ப.

இ-ள். பசுமையாகிய உருவத்தையுடைய உமாதேவியார் ஊட்டிய பாலானது, பவளம்போன்ற திருவாயினின்றுஞ்சிந்தி, வைரமுள்ள அழகிய மார்பினிடத்தே பரந்தாற்போல, மூன்று உலகத்தும் பிரகாசிக்கின்ற அழகிய முத்துமாலையினது ஒளியுங் காலுகின்ற குளிர்ந்த வெட்சிமாலையுங் குராமாலையும் சிறிய ஒளியை எறிப்பவும். 36

புயங்களிற்செழுந்தாமரைபூத்தெனவலயம்
வயங்கமுன்கையிலங்கையந்தாமரைமலர்க்குப்
பயங்கொள்பாசடைபோலொளிபழுத்தபொற்கடகந்
தயங்குகோமளப்பசுங்கதிர்தழைத்துவில்வீசப்ப.

இ-ள். திருத்தோள்களினிடத்தே அழகிய தாமரை மலர் பூத்தாற்போல, வாகுவலயங்கள் விளங்கவும், முன்கையில், கையாகிய, தாமரை மலருக்கு நீரினிடத்துள்ள பசிய இலைபோல ஒளிவிளங்கிய பொற்கங்கணங்கள் பிரகாசிக்கின்ற மரகத ரத்தினத்தின் பசிய ஒளிபோல மிகுந்து ஒளியைச் செய்யவும். 37

மணிவிளிம்பெறிகோசிகம்விளங்கவான்மருங்கி
லணிதிகழ்ந்தொளிர்திருவரைஞாணழகெறிப்பத்
தணிவின்மாமறையொலிச்சிறுதண்டைநூபுரங்கிண்
கிணிசரோருகங்கவற்றுசேவடிமிசைக்கெழும்.

இ-ள். இரத்தின விளிம்புசெய்த பட்டாடை இடையினிடத்தே விளங்கவும், அழகுமிகுந்து விளங்கும் திருவரையின்கண் நாண் அழகை வீசவும், ஓய்தலில்லாத சிறந்த வேதவொலியும், சிறிய தண்டைகளும், சிலம்புகளும், கிண்கிணியும், தாமரைமலர்களையும் வருத்துகின்ற சிவந்த திருவடிகளினிடத்தே பொருந்தவும். 38

நிலைத்தகோலமும்பேரொளிவடிவமுநிறைந்தே
நிலைத்ததாமமுங்காமர்பேரணியுநீண்முடிமே
னிலைத்தவாசியுஞ்செய்திருவருணேர்தோன்ற
நிலைத்தசேரர்கோனெடுங்கணீர்நிலைப்பிலனானான்.

இ-ள். நிலைபெற்றுள்ள அழகும் பெரிய ஒளியையுடைய திருவுருவமும், நிறைவுற்று நிலைத்த மாலைகளும், அழகியசிறந்த ஆபரணங்களும், நீண்ட திருமுடிகளினிடத்து நிலைபெற்றுள்ள மாலையும், செய்கின்ற திருவருளும் நேரிற் காணுமாறு குகனார் தோன்றச் சேரராசன் நீண்ட கண்களினின்றும் நீரை யிடையறாதுபொழிந்தான். 39

குவித்தகைகளுங்கொலைமுதற்றரும்புலனைந்து
மவித்தநெஞ்சமும்வஞ்சம்வேரறுத்தவாறெழுத்துஞ்
செபித்தசிந்தையுஞ்சிற்றுயிர்த்தன்மைபோய்த்தெளிந்தூற்
பவித்தஞானமுந்தலைப்படப்பரவசனானான்.

இ-ள். அஞ்சலிபண்ணிய திருக்கரங்களும், கொலைமுதலிய பாவத்தைத் தருகின்ற ஐம்புலன்களையும் போக்கிய மனமும், வஞ்சகத்தின் வேரறக்களைந்த சடக்கர மந்திரத்தைச் செபித்த மனமும், சிறியபசுத்துவம் நீங்கித் தெளிவுற்றுத் தோன்றிய சிவஞானமும் தோன்றப் பரவசமடைந்தான் (சேரராசன்.)

"கொலைமுதல்" என்றதனாற் பாதகங்க ளெல்லாங் குறிக்கப்படும். புலனைந்தாவன—சத்தம், பரிசம், உருவம், இரசதம், கந்தம் ஆறெழுத்



தின் விவரங்கள் யாவுஞ் சிவராத்திரிப் புராணப் பாயிரவுரைக்கண் இனிதுவிளக்கியுள்ளாம். "ஞானமென்ப தவனருண் ஞானம்" என ஞானேந்திரர் கூறுமாகலின், ஈண்டு "ஞானம்" என்பதற்குச் சிவஞானமென வுரைத்தாம் அருண்ஞானம், பரஞானம், தத்துவஞானம், மெய்யுணர்வு, பரோக்க ஞானம், திருவடி ஞானம், அத்துவித ஞானம், பதிஞானம் என்பவுமதுவே. 40

ஐயன்வாண்முகநகைமதியமுதுண்டுதேக்கி
யெய்துகாமரில்வைத்தகணிமைப்பிலனாகிச்
செய்யபானுவிற்பிறங்கித்தோன்றவுஞ்சேரன்
மையிறேவரிலொருவனென்றுரைப்பமன்னினனால்.

இ-ள். குமாரக்கடவுளது ஒளிபொருந்திய முகத்தினின்றுந் தோன்றும் புன்முறுவலாகிய அமிர்தத்தைப் பருகி நிறைத்து, இயற்கையாகப் பொருந்திய அழகினிடத்திலே வைத்த கண்கள் இமைத்த லில்லாதவனாகி, சிவந்த சூரியன் போல விளங்கித் தோன்றவும், சேரன் குற்றமில்லாத தேவருள் ஒருவனென்று கண்டோர் கூறநின்றான். 41

### கோச்சகக் கலிப்பா.

மாமணிச்செவ்வேற்சேய்நின்வாச்சரோருகச்செந்
தேமலர்ப்பொற்றாள்வணங்காச்சென்னியுஞ்சென்னியோ
தூமறைத்தொல்லோனுதற்கட் டோன்றுமுந்தன்சோதியு
காமரெழில்காணாப்புன்கண்களுங்கண்களோ.

இ-ள். அழகிய இரத்தினம்போன்ற சிவந்த வேலாயுதத்தை யுடைய கடவுளே, தேவரீரது வாசனையையுடைய தாமரை மலரைப்போன்ற அழகிய திருவடிகளைப் பணியாத தலையுந் தலையாகுமோ? சுத்தமாகிய வேதங்களாற் கூறப்பட்ட பழம்பொருளாகிய சிவபெருமானது நெற்றிக்கண்ணி

னின்றுந் தோன்றிய தேவரீரது, ஒளிவடிவின் எழிலைக்காணாத இரு கண்களும் ஒருகண்க ளெனப்படுமோ?

மணி—அலங்காரத்தை யுடையதுமண்—அலங்காரம். வேதூய கழுவப்படுவது எனலுமாம். வேல்—பகைவரை வெல்வதற்குக் கருவிய யுள்ளது. சேய்—செந்நிறமுடையவன், சிவகுமாரன் சென்னியே கண்களோ என்றவற்றின்கணுள்ள ஓகாரங்கள் எதிர்மறைப் பொருளில் கண் வந்தன.

> கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
> றாளை வணங்காத் தலை.

என்று திருக்குறள் அறுதற்கேற்ப, "சென்னியுஞ் சென்னியோ என்றார். கண்களுங் கண்களோ" என்றார், மண்ணினும் மரத்தினு கல்லினுங் கண்கள் இருப்பனவன்றிப் பீலிக்கண்ணு முண்டாகலின் எனவே குமாரக்கடவுளின் ஒளிவடிவின் அழகைக்காணுங் கண்களே கண்களெனப்படு மென்றாயிற்று இங்ஙனமே யுள்ள செய்யுள் ஒன் தருதும்.

சூதசங்கிதை - முத்திகாண்டம்.

> அரியானை யாவருக்கு மன்பருள மேய,
> பெரியானைப் பிஞ்ஞகனைப் பேணுநெடு வேதப்
> பரியானைப் பண்ணவர்கள் பண்ணவனைக் கண்டங்
> கரியானைக் காணாத கண்ணென்ன கண்ணே
> கால்கா லனைக்காணாக் கண்ணென்ன கண்ணே.

> வேள்விதருதகரூர்வேலோய்நின்றனெழுத்தின்
> கேள்விநறவருந்தாக்கேள்வியுங்கேள்விம்யா
> மூளுநிருதர்முரண்டக்கிநீன்றோய்நினரு
> ளுளம்புயமுகவாகாசியுநசியோர்.

இ-ள். யாகத்தி னின்றும் உண்டான ஆட்டுவாகனத்தை யுடை தும் வேலாயுதக்கடவுளே! தேவரீரது, சடக்கர மந்திரத்தின் கேள்வி யாகியதேனையுண்ணாத செவியும் ஒரு செவியாகுமோ? பகை மூண்ட



அசுரர்களது வலியை யடக்கிநின்ற கடவுளே! தேவரீரது அன்றலர்ந்த தாமரைமலர்போன்ற திருவடிகளை முகவாத மூக்கும் மூக்காகுமோ?

ஆட்டுக்கடா வாகனத்தில் ஏறியருளிய சரித்திரத்தைக் கந்தபுராணத் தும், எம்மாற் செய்யப்பட்ட குமாரதரிசனம், சுப்பிரமணிய பராக்கிர மும் என்னு நூல்களினும் பராக்கிரமாக மற்றையவற்றிற் 5 உரைத் தாங்கு உரைக்க இங்ஙனமே "கொங்கையோர் வண்டினந் தேன் கூட்டுணவும் பூங்கூந்தன் - மங்கையோர் பங்குடையோன் மாண்புலித் தோலுடையோன் - கங்கையோ டரவணியுங் கவின்சடையோன் கனலார் - செங்கையோன் சீர்கேளாச் செவியென்ன செவியே - சிவபிரான் சீர் கேளாச் செவியென்ன செவியே" என்று சூதசங்கிதையுங் கூறிற்று. 43

> அண்டர்சேனாதிபநின்சீர்பாடியாரணமுந்
> தண்டமிழு நுவலாததாலுவுந்தாலுவோ
> பண்டைமறைதொடராப்பண்ணவநின்பாதமலர்
> கண்டுசிரமுகிழாதகைகளுங்கைகளோ.

இ-ள். தேவசேனாபதியே! தேவரீரது சிறப்பைப் பாடி, வேதங் களையும் இனிய தமிழையும் கூறாதநாவும் நாவெனப்படுமோ? பழமை யாகிய வேதங்களும் கண்டறியாத கடவுளே! தேவரீரது தாமரை மலர் போன்ற பாதங்களைத் தரிசித்துத் தலைக்கட் குவிவுறாத கைகளும் கைக ளெனப்படுமோ.

தேவசேனாபதி மூர்த்தம் சோடசமூர்த்தத்துள் மூன்றாவது மூர்த் தம் அதனியல்களை, "ஞானசக்தி தாஸ்கந்தோ தேவசேனாபதிஸ்மிதா? எனவரூஉம் குமாரதந்திர சுலோகத்திற் காண்க.

ஆரணம் - ஆரண்யகத்தை யுடையது, அருணசம்பந்தமான கீதங் களை யுடையது. வேதம் பண்டைமறைகளாவன - தைத்திரியம், பௌடி கம், தலவகாரம், சாமம் என்பன இவ்வாறு தொல்காப்பியப் பாயிரவுரைக் கண், ஆசிரியர் நச்சினார்க் கினியர் உரைத்துளார் நாலுவுந்தாலுவோ"

என்றூர், மரம், மண், கல் என்னும் இவற்றின் வாக்களுடன் சிற்கைகா, கல வைகா என்பவுமுள வாகலின் என்க. இவ்வாறேயுள்ள மேற்கோ ளொன்று தருதும்.

### சுப்பிரமணிய பராக்கிரமம்.

நான்கடியின் மிக்குவந்த கலித்தாழிசை.

அவஞான மதுசேர்ந்திங் கலையாமற் சைவ
சிவஞான மெய்ம்மையெனத் தெள்ளியுய நம்மூர்
நவமான சந்நிதியி னண்ணியெமையீ யாளுந்
தவமான சிருரையாத் தாலெல்ன தாலே
சரவணன் சிருரையாத் தாலெல்ன தாலே. 44

பன்னிருதோட்சேவற்பதாகையெஃகுவேற்செவ்வே
ளின்னிருபூந்தாட்கிரங்காநெஞ்சமுநெஞ்சமோ
பொன்னிவர்பூங்கோயிற்புறஞ்சூழறங்காவற்
கன்னிமதில்சூழாதகால்களுங்கால்களோ.

இ-ள். பன்னிரு திருப்புயங்களையுடைய சேவற்கொடியையும் கூரிய வேலாயுதத்தையுமுடைய கடவுளே! தேவரீரது பொலிவாகிய இரு திருவடிகளுக்கும் இரங்காத உள்ளமும் உள்ளமெனப்படுமோ? அழகு மிக்க பொலிவாகிய கோயிலின் பக்கத்திற்சூழ்ந்த தருமக்காவலையுடைய புதியமதிலைச் சூழாத கால்களுங் கால்களோ? 45

பைங்கண்மயிலோய்நிற்பரசநாவாய்குவிப்ப
வங்கையெழில்காணக்கணாயிரமாயிரமா
யுங்குவைபெற்றோரிருப்பவோர்வாயுமிவ்விரண்டு
செங்கையுங்கணும்படைத்தோர்செல்வமுஞ்செல்வமோ.

இ-ள். பசிய கண்களையுடைய மயில்வாகனத்தையுடைய கடவுளே! தேவரீரைத் துதித்தற்கு நாவுடைய வாய்களையும் கூப்புதற்கு அங்கை



யையும், அழகைத் தரிசித்தற்குக் கண்களையும் ஆயிரம் ஆயிரமெனக் கூட்டமாகப்பெற்ற அடியவர்கள் இருப்பவும், ஒருவாயும் இரண்டு இரண் டாகிய சிவந்த கைகளும் கண்களும் பெற்றவாது செல்வமும் ஒருசெல்வ மெனப்படுமோ? 46

தோளாமணிநிற்றொருபெருந்தனான்றாமுற்றுந்
தாளாளர்தேவர்முடிதாழ்த்தத்தலைசிறந்தாய்
கோளார்வன்னெஞ்சங்குழையாதிந்நாள்காறும்
வாழாதிருந்தவென்வாழ்க்கையும்வாழ்க்கையோ.

இ-ள். துளைசெய்யப்படாத இரத்தினமே! தேவரீரது பணித் தொழிலை எந்நாளுஞ் செய்யும் அடியவர்களைத் தேவர் தலைதாழ்த்தி வணங்க அவரிடத்துச் சிறந்து நின்றீர், வலிய மனமான்து துன்பங்களைக் கொள்ளாதிற்கவும், அது இளகாதாக இத்தினம் வரையும் என்னிடத்துக் குடிகொள்ளா திருந்தவரே அடியேனுடைய வாழ்க்கையும் வாழ்வாகுமோ?

பாயொளியொண்கோனல்கிப்பச்சிமத்துவாரமணிக்
கோயிலிடங்கொண்டெனையுங் குடிகொண்டுளம்புக்காய
சேயொளிவேற்சேய்நின்செயலினுவென்றாலீனப்புன்
ஞயுமரியணையினண்ணியுலகாளாவோ.

இ-ள். பரந்த ஒளியையுடைய அழகிய தலைவரே! காட்சிகொடுத்த இந்த மேலைவாயிலையுடைய கோயிலைவீற்றிருக்கு மிடமாகக்கொண்டு, என்னையும் அடிமையாக ஆண்டு, மனத்தை கோயிலாகக்கொண்டு உறைந் தருளினீர், சிவந்த நிறத்தையுடைய வேலாயுதத்தைத் தரித்த கடவுளே! தேவரீரதுசெய்கை யிதுவேயாயின், மிகவும் இழிந்த நாய்களும் சிங்கா சனத்தை யடைந்து வீற்றிருந்து உலகத்தை யாளமாட்டாவோ. 48

கலி விருத்தம்.

இனையனதுதிபுரிந்திறைவனெஞ்சினு
ளினையவனவரம்பெ[illegible]ங்கிவின்மலன்
றனையனதனுமதிதலை[illegible]மத்திவான்
புனைதருமலர்பெய்பூம்புரையிற்போயினான்.

இ-ள். இவ்வாறு துதிகளைச்செய்து சேரராசன் தன்மனத்துள் நினைத்த வரங்கள் பலவற்றையும் பெற்று, சிவகுமாரரது திருவுருவுணர்வைத் தன்சிரத்திற் றரித்துக்கொண்டு, தேவலோகத்துள்ள புட்பங்களைத் தேவர்கள் பெய்கின்ற பூம்புரை என்னுந் தலத்துட் போயினன். 49

சென்றதிசயம்பலதெரிசித்தைம்புலன்
வென்றவர்தொழுஞ்சிவகிரியின்மீக்குக
னன்றருளுருவரிப்பக்கண்டுகண்
டுன்றறல்சொரிதரத்துதிபிரப்பினான்.

இ-ள். பூம்புரை என்னுந் தலத்திற்போய் அதிசயம் பலவற்றையுந் தரிசித்து, ஐம்புலன்களையும் வெற்றிகொண்ட முனிவர்கள் வணங்குஞ் சிவமலையின்மேல், குகக்கடவுள் அற்றைத்தினம் வழங்கிய திருவருள் வடிவத்தைக் காட்டியருளத் தரிசித்து, கண்ணினின்று மிகுந்த நீர்பொழியத் துதிகளைக் கூறினான். 50

மயில்வலோனருணெறிவழாதுபூழியன்
பயில்வொடுமுணர்ந்தமாமயன்படைத்ததோர்
செயிரறுகோயில்சேர்ந்தருளினன்சிவ
சயிலவாலயநடுத்தயங்குமேலையோன்.

இ-ள். மயில்வாகனத்தில் வல்ல குமாரக்கடவுள் திருவருள் நெறி வழுவாமல், சோழராசன் பழக்கத்துடன் அறிவிக்க, பெரிய தேவத்தச்



சன் செய்ததாய், குற்றமற்ற கோயிலை யடைந்தருளினார், சிவகிரியின் ஆலயநடுவிலே விளங்கும் மேலவராகிய கந்தப்பெருமான். 51

புரந்தரன்முதலியோர்போற்றும்பூம்புரை
நிரந்தரம்வைகும்வேற்கிறைவ[illegible]ருள்
வரந்தரவாங்குபோய்மன்னர்மூவரு
மிரந்தரனெனப்பணிந்தெழுந்திமீளவும்.

இ-ள். இந்திரன் முதலினோர் துதிக்கும் பூம்புரை என்னுங்கோயிலின்கண் வீற்றிருக்கும் வேலாயுதக்கடவுள் மிக்க அருளையும் வரத்தையும் கொடுக்கும்படி, அவ்விடத்தில் மூவேந்தரும் சென்று, குறையிரந்து சிவபெருமானைப் பாவித்துப் பெற்றுப்பின்னரும். 52

நீங்கருமேவலினினைத்தமிச்சையிற்
றேங்கமழ்பூம்புனற்றிகழுமேனையா
லோங்கலின்வளம்பலவுமற்றினோர்சொல
வாங்கவர்காண்டொறுமவாமிக்காயினார்.

இ-ள். பிரித்தற்கு அரிய பணிவிடைசெய்ய நினைத்து, தம் இச்சையுடன் வாசனை வீசுகின்ற பொலிவாகிய திளைப்புனங்கள் விளங்குகின்ற, பெரிய வராகமலையினது வளப்பங்களையெல்லாம் அங்குள்ள முனிவர்கள்சொல்ல, அவர்கள் காணுந்தோறும் ஆசை மிக்கவரானார். 53

தமிழ்பயில்பூம்புரைதனிற்றருந்தரு
மமுதருவியிற்படிந்தமலன்றாயபா
லமிழ்மலைகேழலம்பறழுக்கூட்டிய
கமழ்மலர்ச்சிகரமுங்கண்டுபோற்றியே.

இ-ள். தமிழ்பொருந்திய பூம்புரையிடத்தில் மாமானது கொடுத்த அமுதம்போன்ற அருவிச்சுனையின் கண்மூழ்கி, நிருமலராகிய சிவபெருமான், சுத்தமாகிய பாலினை வருத்தமுற்ற பன்றிக் குட்டிகளுக்கு ஊட்டிய பூமணங்கமழும் வராகமலையையுங் கண்டு துதித்து. 54

அந்தநாள்வழுதியர்ச்சித்தலிங்கமும்
வந்தனைபுரிந்துதொல்வராகமாமுனி
முந்தொருபகற்சிவயோகமுற்றுறத்
தந்தநற்குறியையுந்தாழ்ந்துபோற்றியே.

இ-ள். அந்தக் காலத்திலே பாண்டியராசன் அருச்சனை செய்த இலிங்கத்தையும் வணக்கஞ்செய்து, பெரிய வராகமுனிவர் முன்னர் ஒரு நாள் சிவயோகங் கைகூடும்படி தாபித்துப் பூசித்த நல்ல சிவலிங்கத்தையும் வணங்கித் துதித்து. 55

முடிபுனைமன்னவர்முன்புறையக்கரங்
கொருமுடிவளனுமுட்கொண்டுபார்த்தனுங்
கடவுளும்பொருந்துமார்க்கண்டயத்தனின்
மடலவிழ்தடவநீள்வனமும்போற்றியே.

இ-ள். கிரீடத்தைத் தரித்த அரசர்கள், முன்னைக் காலத்திற் சிவன் வீற்றிருந்த அழகிய ஒருசிகரத்தின் வளப்பத்தையும் மனத்தினுணர்ந்து, அருச்சுனனும் குமாரக் கடவுளும் இருந்த மார்க்கண்டயம் என்னும் மலையில் உள்ள இதழ்கள் விரிந்த பெருமையையுடைய நீண்ட முல்லைவனத்தையுந் துதித்து. 56

மேதகுபூதமோரைந்துமேலைநாட்
போதுதூவிலிங்கமோரைந்தும்போற்றிவண்
சீதவாவியும்படிந்தமலைதேனுவாய்
மாதவம்புரிபசுமலையும்போற்றியே.

இ-ள். மேன்மையான தகுந்த பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களும் முன்னர்ப் புட்பங்களைத்தூவி யருச்சித்த இலிங்கங்களைந்தையும் துதித்து, அவ்விடத்திலுள்ள குளிர்ந்த தடாகத்திலும் தோய்ந்து, திருமலையர்கிய உமாபிராட்டியார் பசுவாகிப் பெரிய தவத்தைச் செய்த பசுமலையையுந் துதித்து. 57



மிக்கிருவகைத்திரிவேணிசங்கமந்
தொக்கதீர்த்தமுமரன்சடையிற்றோன்றிய
தெக்கணமேவுகேதாரதீர்த்தமு
மொக்கமூழ்கிப்பிரணவவொண்பாறையும்.

இ-ள். மேற்பட்ட இருவகைத்தாய, திரிவேணிசங்கமம் என்னுந் தீர்த்தத்திலும், சிவபெருமானது சடையினின்றுந் தோன்றிய தெற்குத் திசையின்கணுள்ள கேதார தீர்த்தத்திலும் ஒருசேரமுழுகி, அழகிய பிரணவப் பாறையினையும். 58

வணங்கிமங்கலசிருங்கத்தின்வள்ளிதோள்
புணர்ந்தசேய்புனைமணக்கோலம்போற்றியே
ரிணங்கியசித்தவெற்பிறைஞ்சிவேளனை
யணங்குறுபுண்ணியப்புனலுமாடியே.

இ-ள். பணிந்து மங்கல சிருங்கத்தின்கண் எழுந்தருளி யிருந்தும், வள்ளியம்மையாரது தோள்களைச்சேர்ந்த குமாரக்கடவுள் தரித்த திருமணக் கோலத்தைத் துதித்து, அழகு பொருந்திய சித்தமலையை வணங்கி குமாரக் கடவுளையும் அம்மையாரையும் தெய்வத்தன்மை பொருந்திய புண்ணிய தீர்த்தங்களினும் முழுகி.

குகப்பிரான் மங்கலக் (கல்யாண) கோலத்தைக்கொண்டு வீற்றிருந்தலின் அம்மலை மங்கலசிருங்கம் எனப்பெயர் பெற்றது. வள்ளி-வள்ளிக் கிழங்கெடுத்த குழியினிற் பிறந்தமையால் வள்ளியெனப் பெயர் பெற்றார். "பாத்திபடுவள்ளிப் படுகுழியில் வந்திடலால்-வாய்த்த சிலரு மவ் வள்ளியெனக் கூறினரே" என்றது கந்தபுராணம். வள்ளியம்மையாரை இலவலி நாயகி யென்ப வடநூலார். 59

சந்திரகிரிச்சதிதீர்த்தமும்பிற
வந்ததீர்த்தங்களுமலரயன்கிரிக்

கொந்தவிழ்தடங்களுங்குடைந்துமால்கிரி
யுந்துதொல்வளங்களுமுவந்துபோற்றியே.

இ-ள். சந்திரகிரியின்கணுள்ள சசிதீர்த்தத்திலும், ஏனைய தங்களிலும், தாமரை மலரின்மேலிருக்கின்ற பிரமமலையின்கணுள்ள பூங்கொத்துகள் மலர்ந்த தீர்த்தங்களிலும் முழுகி, நாராயண கிரியின்கணுள்ள மேற்பட்ட பழையவளங்களையும் மனமகிழ்வுற்றுத் துதித்து.

சந்திரன்—உலகங்களை மகிழ்விக்கப் பிரகாசிப்பவன். சசி—சசத்தையுடையது. சசம்—முயற் களங்கம். சந்திரனு லுண்டாக்கப்பட்டதாகலின் அப்பெயர் பெற்றது. அயன்—பிறந்தலில்லாதவன். இது அமரர், இமையவர், வெள்ளாடு, பசி என்பனபோன்ற உபசார மொழியாம். மால்—பெருமையை யுடையவன். 60

திரிபுரைவரையினுஞ்சிவாசலத்திலும்
வருவனதீர்த்தமுமற்சதீர்த்தமு
மருமறையுறைதிருவாவினன்குடி
தருசரவணமெனத்தயங்குதீர்த்தமும்.

இ-ள். சத்திகிரியினும் சிவகிரியினும் உள்ள தீர்த்தங்களையும் மற்ற தீர்த்தத்தையும், அரிய வேதங்களைப் பாராயணஞ் செய்தற்கிடமாய் திருவாவினன்குடி என்னுந்தலத்தில் உள்ள சரவணம் என்னும் பெயருடன் விளங்கிய தீர்த்தத்தையும்,

திரிபுரை—திரி-மூன்று, புரை-புரத்தையுடையவள். புரம் என்பது ஈண்டு வடிவத்தை யுணர்த்திற்று. மூன்று வடிவமாவன-அருவம், அருவுருவம், உருவம் என்பன. வரை என்னுங்கிற்றின் பெயர், உவமையாகு பெயராய்க் கனுவிற்காகி, அது சினையாகு பெயராய் விளைதற்கிடமாகிய மலையை யுணர்த்தலின் மும்மடியாகுபெயர். சிவாசலம் வடநூன் முடிபு. தீர்த்தம்—திருத்தத்தைச் செய்வது. 61



சிறந்தவில்வடவித்தேனுதீர்த்தமு
முறைந்தசண்முகநதியொலிகொடீர்த்தமு
திறங்கொள்பாலோடையுநேர்ந்துசென்றுசென்
றறந்தவாதாடிவந்தனைகளாற்றி.

இ-ள். சிறப்புற்ற வில்வாரணியத்தின்கணுள்ள தேனு தீர்த்தத்தும் நன்மையுற்ற சண்முகநதி என்னும் ஒலிகொண்ட தீர்த்தத்தும், திறத்தையுடைய பாலாவியினும் மனமொருமைப் பட்டுப் போய்ப்போய், அறநெறி தவறாது முழுகி வணக்கங்களைச் செய்து.

வில்வ—அடவி, வில்வாடவி என்த் தீர்க்க சந்தியாய்ப் புணர்ந்தது. சண்முகம் என்பதற்கு முன்னர் உரைத்தாம். நதியாவது—மேற்கினின்று கிழக்குமுகமாக ஓடிவருவது ஓடை—ஓடிநிறைந்தது சென்று சென்று என்னும் அடுக்குத் தொழிற் பன்மைப்பொருளில் வந்தது. 62

முன்புபோலாவினன்குடியின் மூவரு
மன்புமீதூரவந்தடைந்துவைகுநாட்
கொன்கொள்வேற்கிள்ளியுங்குமரிச்சேர்ப்பனு
மின்கொடங்நாட்டிடைவிடைகொண்டெய்தினர்.

இ-ள். முன்னர்ப் போலத் திருவாவினன் குடியென்னும் பழநித்தலத்தில், சேரன் சோழன் பாண்டியன் என்று மூன்றரசர்களும் அன்பானது அதிகரிக்கவந்து சேர்ந்து இருக்குங் காலத்தில், பெருமையைக் கொண்ட வேலாயுதத்தைத் தரித்த சோழனும், குமரித்துறையை யுடைய பாண்டியனும், ஒளிமிக்க தமது நாட்டினிடத்து உத்தரவு பெற்றுச் சென்றார்.

முன் என்னும் இடைச் சொல், பு - என்னுஞ் சாரியை பெற்று முன்பு என்றாயிற்று. இது காலப்பொருட்டு. மூவர் - தொகைக்குறிப்பு. மீதூரல் - மிகுதியாதல், 63

அரசர்கணட்பகலா தகன்றபின்
புரசைமால்யானையம்பூழியர்க்கிறை
விரைசெய்பூம்பொழிற்குடநாடுமேவியேழ்
கரையுமோர்குடைநிழலிற்றங்கியே

இ-ள். சோழ பாண்டிய அரசர்களின் சிநேகம் நீங்காது இருந்து, அவர் தம்மூர்க்குச் சென்றபின்பு, கழுத்திடுகயிற்றைக் கொண்ட பெரிய யானைச்சேனையையுடைய சேனையையுடைய சேராசன், வாசனை வீசுகின்ற பொலிவாகிய சோலைகளையுடைய குடகநாட்டை யடைந்து எழு தீவுகளையும் ஒரு வெண்கொற்றக் குடையின் கீழலில் வீற்றிருந்து அரசு செய்து.

அரசர்—குடிகளை ஆளுதலாற் பிரீதிப்படுத்துவோர். மதந்தாற்கதஞ் சிறந்து தானும் போர்செய்தற்குரிய யானை, சேனைகளுட் சிறந்தனன், "புரசை மால்யானையம் பூழியர்க்கிறை" என்றார். இங்ஙனமே ஆசிரியர் தொல்காப்பியனாரும். தும்பைத் திணைகூறவந்தார் "தானை யானை குதிரை யென்ற - நோனாருட்கு மூவகைநிலையும். என்று சூத்திரித்தார். யானையுடைய படை காண்டல் முன்னினிதே" என்றார் இனியநாற்பதுநூலாரும் எழ்தரை - சாவலந்தீவு, குசத்தீவு, நான்மலித் தீவு, முதலிய எழ்நிலங்களாம். எழ் - என்றதை மெய்யீற்றெண்ணுப் பெயரென்பர் தொல்காப்பியனார் நன்னூலார் உகரவீற்று எண்ணுப் பெயரென்ப. 64

அருந்தவராசிகளறையவானவர்
விருந்தெதிர்கொளமுழவதிரவண்மிசைக்
கருந்தடங்கண்ணிசேயொடுந்தங்கணூத
லிருந்தவொள்ளிக்கயிலையங்கிரியிலெய்தினான்.

இ-ள். அரிய தவத்தை யுடைய முனிவர்கள் வாழ்த்துக்களைச் சொல்ல, தேவர்கள் விருந்தாகவந்து எதிர்கொண்டுவர, முழவுகளொலிக்க, ஆகாயத்தினிடத்துக் கரியநீண்டகண்களையுடைய உமையம்மை



யாருடனும் குமாரக் கடவுளோடும் சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற அழகிய கயிலைமலையை யடைந்து இன்புற்றான்.

தவர் - என்னுந் தாதுவின் அடியாகப் பிறந்தவடமொழிப் பன்மைப் பெயர். தவம் என்றது, ஈண்டுச் சரியை கிரியை, யோகம், ஞானம் என்பவற்றை அது,

ஐம்புல வேடரினயர்ந்தனை வளர்ந்தனை
தம்முதல் குருவு மாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டந்நிய மின்மையி னரன்கழல் செலுமே.

என்ற் சிவஞான போத சூத்திர உரையானுணர்க. விருந்து-புதுமை அஃதாகுபெயர் முழவு எனினும் தண்ணுமை எனினும் ஒக்கும் முழவு எனவே பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை காடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை தடாரி, அந்தரி, முரசு, சந்திரவளையம், மொந்தை, புதலை, கண்விடுதூம்பு நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு பாகம் உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறை முதலிய தோற்கருவி யெல்லாம் பெறப்படும். அது "பேரிகை படகமிடக்கை யுடுக்கை எனவரூஉஞ் சுத்தானந்தப் பிரகாச பாதநாற் சூத்திரத்தா னுணரப்படும். கண்ணுதல் - இரண்டாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. 65

கலி நிலைத்துறை.

சேய்பழநிப்புராணமோதுவோர்செவிதாழ்த்துன்னை
யாய்பவரிம்பரும்பரளப்பிலபோகமார்ந்து
தூய்மறைவன்பால்வைகுந்சூழலிற்றிருவந்துய்த்து
வேய்புரைதோளிபங்கன்வீட்டின்பங்கவர்தாமே.

இ-ள். குமாரக் கடவுளினது பழநித் தலபுராணத்தை யோதுகின்றவரும், செவிகளைத் தாழ்த்தி மனத்தின்கண் ஆராய்ந்தறிவோரும், இவ்

வுலகத்தும் மறுமையிலும் அளவில்லாத போகங்களை யநுபவித்து, சுத்தமாகிய வேதத்தில் வல்ல பிரமதேவர் வாழுஞ் சத்தியலோகத்தி னிடத்திருந்து செல்வங்களை யநுபவித்து, மூங்கிலை யொத்த தோளையுடைய உமாபாகராகிய சிவபெருமானோடு இரண்டறக் கலக்கும் அத்துவித முத்தி யின்பத்தைப் பெறுவார்கள்.

புராணம்—பழமை. அஃதாகு பெயராய்ப் பழைய வரலாற்றையுடைய நூலிற்கு ஆயிற்று. இம்பர் என்றதனால் அரசபோகம் முதலியனவும், ஆதி யரிவஞ்சம், நல்லரிவஞ்சம், ஏமத வஞ்சம், உத்தர குருவம், தேவ குருவம் என்னும் அறுவகைப்போக பூமியின்பங்களும், உம்பர்என்றதனால் நாகலோகம், விஞ்சையருலகு, இந்திரபோகம் என்பவும்பெறப்படும். வேய்புரை தோளிபங்கன் எனக்கிளந்தது, அது மங்கலச் சொல்லாதலின் கோளுறாதற் கென்ப அவ்வாறே "வேயுறு தோளிபங்கன்" எனத் திருவருணெறித் தமிழ்வேதத்தும் அருளப் பட்டமை யறிக. வீடு முதனிலை திரிந்த தொழிற்பெயர் விடுதல் என்பது பொருள் விடுதலாவது அநாதியே பந்தித்த மலத்தினின்றும் விடப்படுதல். 66

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

செங்கைவேற்படையுஞ்செவ்வித்திருமுகமலரும்வாழி
கொங்கவிழ்கதம்பத்தாருங்குலவுதோள்வரையும்வாழி
சங்கான்சேய்நூன்மார்புஞ்சதங்கையுந்தாளும்வாழி
பைங்கண்மாமயிலுஞ்சேவற்பதாகையும்வாழிவாழி.

இ-ள். சிவகுமாரராகிய குழந்தைவேற் பெருமானது, சிவந்ததிருக்கரத்திற் றரித்துள்ள வேலாயுதமும், அழகுடைய ஆறு திருமுகங்களாகிய தாமரைமலரும் வாழ்க, வாசனைபரந்த கடப்பமலர் மாலையும், அது விளங்கப்பெறும் திருப்புயங்களாகிய மலைகளும் வாழ்க, உபவீதமுடைய



நமார்பும் சதங்கைகளும் அவற்றைத் தரித்த திருவடிகளும், பசியகண்ணையுடைய சிறந்த மயில்வாகனமும், கோழிக்கொடியும் வாழ்க வாழ்க.

படைகளுக்குட் சிறந்ததாகலானும், ஞானசத்தி யெனப்படலானும் வற்படையை முதலில் விதந்தார், முகமலர், தோள்வரை, உருவகம். ங்கரன்—சுகத்தைச் செய்பவன். முருகக்கடவுள் உபவீதம் தரித்தமை. வதாந்தத்தால்வரும் சிவஞானப் பொருளாயிருப்பவரும், அதனையளிப்வரும் தாமேயென்பதனை யுணர்த்தற்கென்க. என்னை?

நாலுஞ்சிகையு நவலிற்பிரமமோ
நூலதுகார்ப்பாச நுண்சிகைகேசமா
நூலதுவேதாந்த நுண்சிகைஞானமா
நூலுடையந்தணர் காணு நவிலிலே.

என்று திருமந்திரங் கூறிற்றாகலின். 67

ண்முகில்பொழிகவேதம்விளங்குகமறையோர்வாழ்க
ண்முடிவரசர்நீதிவளர்கவானினங்கணல்க
ண்முதனால்வர்பாடல்பதிதொறுநிறைகபார்மேற்
ண்முகரருளுஞ்சைவசமயமுந்தழைகமன்னோ.

இ-ள். ஆகாயத்திற் சஞ்சரிக்கும் மேகங்கள் மழையைப் பொழிக, ான்குவேதங்களும் பொலிக, அந்தணர்கள் வாழ்க, நிலவுலகத்திலுள்ள ரசர்களுடைய செங்கோல் வளருக, பசுக்கூட்டங்கள் விருத்தியாகுக ண்களைக்கொண்ட முதன்மையையுடைய சமயாசாரியர் நால்வருடைய ிருப்பாடல்கள் நகரங்கடோறும் பொருந்துக, பூமியின்மேல் ஆறுமுகக் டவுளது திருவருளும், சைவசித்தாந்த சமயமுந் தழைத்தோங்குக.

முகில்—நீர்முகத்தலையுடையது. வேதம் - வித் என்னுந் தாதுவினயாகப் பிறந்தபெயர். அறிதற்குக் கருவியாயுள்ளது என்பது பொருள். லகியலற்கு முதற்கருவி மழையாகலின்மழையை முற்கூறினர். "மழை

வின்றி மாலத்தார்க்கில்லை" என்றார் நான்மணிக் கடிகையினும். அமழையும்வேத மந்திரபலத்தால் இடையறாது பொழிதலின் "வேத விளங்குக" என்றும், அம்மந்திரத்தையோதி யாகம் வளர்ப்பவர் அந்தணராகலின் "மறையவர் வாழ்க" என்றும், அவர் இடையறாது தொழிற்கு அரசர் செங்கோல் காரணமாதலின் "மன்முக வாச நீதிவளர்க" என்றும், இவை நடத்தற்கும் பசுக்களின் பஞ்சகௌவியம் இன்றியமையாததாகலின் "ஆனினங்கணல்க" என்றும். இவைகளெல்லாம் விருத்தியாவதற்குத் தேவாரதிருவாசகங்களே காரணமாகலின், "பண்முறை நால்வர் பாடல்" என்றும், அவைநான்குஞ் சைவ சித்தாந்தப்பொருளை அருள்வழிநின்று விளக்கலின் "சைவசமயமுந் தழைக" என்றுங்கூறினார். இச்செய்யுள் காரணமாலையணி.

நால்வர் ஆவார் - திருஞானசம்பந்த மூர்த்திநாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசக சுவாமிகள். அவர்பாடிய பாடல்கள் இவ்வளவின வென்பது திருமுறைகண்ட புராணத்தானும் திருப்பெருந்துறைப் புராணத்தானும் உணர்க. பாடல்கள் - தேவார திருவாசகங்கள். இவை இருக்கு யசுர் சாம அதர்வணங்கள்போல, தமிழ்வேதம் எனப்படும். இவற்றின் அருமைகளெல்லாம் திருவருணைக்கலம்பகவிருத்தியின் உரைத்துள்ளாம். சைவம் என்பது ஈண்டுச் சைவ சித்தாந்தத்தையாகும்.

நல்லனபுரிவைகாவூர்நாடுசேர்நாளும்வாழ்க
செல்விமாதவங்கூர்கன்னிகாரமுந்திருந்திவாழ்க
பல்கலைதெரியுந்தானம்பயிலுமூதறிஞர்வாழ்க
மல்லலும்பழநிமூதூர்வாழ்கபல்வளஞ்சிறந்தே.

இ-ள். நல்லனவற்றைச் செய்கின்ற திருவைகாவூர் என்னும் நாட்டின் சிறப்பு எந்நாளும்வாழ்க, பரமேசுவரி பெரியதவத்தைச் செய்த கன்னிகாரவனமுஞ் சிறப்புற்றுவாழ்க, பல சாத்திரங்களையும் ஆராய்



அத்தலத்தின்கண் வசிக்கும் பேரறிவுடையார் வாழ்க, வளம்பொருந்திய அழகிய பெரிய பழநித் தலம் ஆனது பலவளங்களாலுஞ் சிறந்து வாழ்க.

இந்நூலாசிரியர் தாம்பிறந்த இடம் சோழநாட்டிலுள்ள திருவைகாவூர் ஆகலின் "நல்லனபுரி வைகாவூர்" என்று விதந்தார் என்ப. வைகாவூர் என்பது வில்வாரணியத்தையாம். ஈண்டு எழுந்தருளி யிருக்குங் கடவுள் வில்வ வனேச்சுரர் அம்மையார் வளைக்கை நாயகி, பூவைவல்லி. எம தீர்த்தம், கூற்றுவதீர்த்தம், வில்வதீர்த்தம். திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரால் தேவாரம் பெற்றுள்ளது இது சோழநாட்டிலே திருக்கும்பகோணத்துக்கு வடமேற்கே ஒருமைல் தூரத்துள்ளது. நாடு—யாவராலும் நாடப்படுவது. அன்றியும் அத்தலக்கண் இருப்பவர் வேறொருவூரை விரும்பாமல் தன்னிடத்தே எல்லா வளங்களும் இருத்தலின் "நாடு" எனப்பட்டது. கூர் என்னும் உரிச்சொல் உள்ளது சிறத்தற் பொருளில் "கூர்ப்புங்கழிவு முள்ளது சிறக்கும்" என்றது தொல்காப்



சேரர்கோன் சருக்கம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் — 987

பழநித் தலபுராணம் ... சென்னை-600 009

கதிரை நாயகன் திருவருள் வாழ்க.